UNIVERSAL LIBRARY
OU_208114
UNIVERSAL LIBRARY

OUP—552—7-7-66—10,000

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 294.55 Accession No. Tm 258

Author V 81 S

Title

This book should be returned on or before the date last marked below.

முகவுரை

உலக முழுதும் திக்விஜயம் செய்து தாய்நாடு திரும்பிய ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளுக்கு இந்தியாவின் பூர்வீகப் பெருமையும் தற்காலச் சிறுமையும் தெற்றெனமனக்கண் முன் தோன்றலாயின. சிறுமையை அகற்றிப் பெருமைப் படுத்துவதற்கான வழி வகைகளை வகுத்து அவற்றை நிறைவேற்றுவான் வேண்டிக் கங்கைக் கரையோரம் பேலூர்த் திருமடாலயம் ஸ்தாபித்து அங்குத் தங்குவாராயினர்.

அதுகாலை சுவாமிகள்பால் பல மெய்யன்பர்கள் போந்து நமது தூய தாய்நாட்டைப் பிணைத்துக் கொண்டிருக்கும் சிக்கலும், ஐயப்பாடும், குழப்பமும் நிறைந்த பல நுண்ணிய பிரச்னைகளை எழுப்பினர். சுவாமிகள் அவர்கள் ஐயப்பாடுகளைத் தமது ஞானவொளி வீசும் செஞ்சொற்களால் பதிலிறுத்துத் தெளிவிக்க, ஆறுதலடைந்து ஆனந்தமுற்றனர். அவ்வன்பர்கள் பலருள் ஸ்ரீ சரத்சந்திர சக்கரவர்த்தி, ஸ்ரீ சுரேந்திரநாத்சேன், ஸ்ரீ சுரேந்திரநாத்தாஸ்குப்தா, என்ற மூவர் சுவாமிகளுடன் நடத்திய சம்பாஷணைகளைக் குறித்து வைத்திருந்து உத்போதன் என்னும் வங்கப் பத்திரிகையில் வெளியிட்டனர். அந்நூலின் மொழிபெயர்ப்பே இந்நூல். இம்மொழிபெயர்ப்பு பல வருடங்கட்கு முன் ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்தில் 'குரு சிஷ்ய சம்வாதம்' என்ற தலைப்பின்கீழ் தொடர்ந்து வெளிவந்ததாகும்.

பிரசங்க வாயிலாகவும் கட்டுரைகள் வாயிலாகவும் எல்லாப் பிரச்னைகளுக்கும் உரிய விடையைப் பெறுவதென்பது இயலாத காரியம். ஆனால் ஐயப்பாடுடையார், பெரியாருடனிருந்து வினவி விடைபெற முயலும்போது அவ்

வையப்பாடனைத்தும் அகன்று அவர்களது அகமும் முகமும் மலர்ந்து ஆறுதலடைவதைக் காண்கிறோம். இவ்வுண்மை இந்நூலில் தெற்றென விளங்கும்.

நமது நாட்டின் சமயம், சமூகம், பொருளாதாரம், தேசியம், நாகரிகம் முதலிய சகல துறைகளிலும் உள்ள எண்ணிறந்த சிக்கல்களைச் சுவாமிகள் தெளிவாக எடுத்துக்காட்டி அவற்றை அறவே அகற்றி, மருட்சியற்ற தூய மார்க்கத்தை உள்ளத்தில் பதித்து, அனுபவத்தில் பின்பற்றத் தக்க முறையில் வெகு அழகாக விளக்கிக் கூறுகின்றார்கள்.

சுவாமிகள் கூறிய உறுதுணையக்கும் உறுதிமொழிகளை மக்கள் படித்துப் பெரிதும் பயனடைவார்களாக.

பதிப்பாளர்

பொருளடக்கம்

பக்கம்

1. சுவாமிஜி சிஷ்யனை முதன் முதலில் சந்தித்தல்- மிரரின் (Mirror) ஆசிரியரான ஸ்ரீ நரேந்திர நாத் ஸேனுடன் நடந்த சம்பாஷணை - இந்தியாவையும் அமெரிக்காவையும் ஒப்பு நோக்குதல் - அந்நிய நாடுகளில் தர்மப் பிரசாரம் செய்வதனால் எதிர்காலத்து விளையும் பயன் - தருமம் ராஜநீதி என்னும் இவ்விரண்டின் பலாபலன்கள் - கோரக்ஷக சபை பிரசாரகருடன் நடந்த சம்பாஷணை மனிதனை ரக்ஷிப்பது முதற் கடன் ... 1

2. சேதனத்தின் அறிகுறி பிரகிருதியுடன் போராடலே - நாடுகளுக்கும் இவ்வுண்மை பொதுவானது - இந்தியா இழிவடைந்ததின் காரணம் - தன்னம்பிக்கையின் அவசியம்-மக்களா பணமா? - ஆத்ம ஞானம் அடையும் வகை - குருக்ஷேத்திர கிருஷ்ணன் - ராஜச குண விருத்தியின் அவசியம் ... 12

3. பண்டிதர்களுடன் சமஸ்கிருதத்தில் உரையாடல்- நாகரிகம் என்பது என்ன ?-இந்திய நாகரிகத்தின் சிறப்பியல் - சமாதி - உண்மைக் குரவர் யார்? - குலகுருமார் - ஸ்ரீ ராமகிருஷ்ணர் ... 24

4. தட்சிணேஸ்வரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜன்மோற்சவம் - உற்சவாதிகளின் அவசியம் - கட்சிவாதத்தினை சுவாமி விவேகானந்தர் பிரசாரஞ் செய்யவில்லை ... 30

5. சிஷ்யருக்குத் தீக்ஷை கொடுத்தல் - பூணூலின் தொடக்கம் - அறம் மறங்களின் விளக்கம் - எப்பொழுது ஆன்ம தரிசனம் பெறலாம் ... 38

பக்கம்

6. ராமகிருஷ்ண சங்கத்தை ஸ்தாபித்தல் - ஸ்ரீ ராம கிருஷ்ணருடன் சுவாமி விவேகானந்தர் வேறு பட்டதுண்டா? - ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிச் சுவாமி விவேகானந்தரின் கருத்து - கிருபையின் நியதி - கிரீஷ் சந்திர கோஷ் ... 45
7. சூரிய கிரகணம - தியானத்தின் இயல்பு - தியான முறையின் கிரியாம்சங்கள் - தியாகத்தின் அவ சியம் ... 56
8. பெண்பாலர் கல்வி முறை - மஹா காளி பாட சாலை - இந்தியப் பெண்மணிகளும் மேலைத் தேசப் பெண்மணிகளும் - பால்ய விவாகம - பெண்பாலர் கல்வி முறையின் சீரிய நெறி - கல்வி யபிவிருத்தி 61
9. இருக்கு வேதம - மாக்ஸ்முலலர் - சிருஷ்டியின் விளக்கம - சுவாமி விவேகானந்தருடைய அகன்ற மனம் - சாஸ்திர ஆராய்ச்சியின் அவசியம் - ஜீவ சேவை ... 70
10. சந்நியாசத்தின் குறிக்கோள் - புத்த பகவானும சந்நியாச ஆசிரமமும் - சந்நியாசத்தைக் கண்டிப்ப தற்குக கண்டனம - உண்மைச் சந்நியாசி யார் ? 80
11. ஸ்ரீ ராமகிருஷ்ண தேவாலயப் பிரதிஷ்டை ... 93
12. குருகோவிந்த சிங்கா - மானதக் காட்சி ... 95
13. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திதி பூஜை - பிராமமண ரல்லாதார் சிலருக்குப பூணூல் சடங்கு - கிரீஷ் சந்திரகோசர் - கர்ம யோகம் அல்லது தன்னலப் பற்றில்லாத் தொண்டு - அதன் இலக்கும் பயனும் ... 103
14. பேலூர திருமடத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப பிரதிஷ்டை செய்தல - சங்கராசாரியார்-புத்தர் - புத்தமத வீழ்சசியின் காரணம - க்ஷேத்திர யாத் திரையின் மகத்துவம - பல்வேறு உபாசன முறை கள் ... 111

பக்கம்

15. பூர்வீக ஞாபகங்கள் - அவருடைய சித்திகள். அமெரிக்க ஆடவரும பெண்டிரும - மதவெறி பிடித்த கிறிஸ்தவரின் எதிர்ப்பாட்டம் - சாணு கதியும் தாமத குணமும் - நாகமஹாஷயா ... 122

16. அமர நாத்திலும் க்ஷீர்பவானியிலும் சுவாமி விவேகானந்தரின் அநுபவங்கள் - தேவவாணியைக் கேட்டல் - பேய் பிசாசுகளைப்பற்றி-சுவாமி விவேகானந்தர் அசரீரியான ஆவியைக் கண்ட அநுபவம் ... 131

17. சமஸ்கிருதப்பா இயற்றல் — வங்காள மொழியும் அதன் வசன நடையும் — 'அஞ்சற்க' - சாஸ்திர ஆராய்ச்சியின் அவசியம் - ஆன்ம தரிசனத்தின் பலன் ... 137

18. சுவாமி விவேகானந்தர் நிர்விகல்ப சமாதி அடைந்ததன் அநுபவம் - அவதார புருஷர்களின் அபார சக்தி ... 146

19. தன்னம்பிக்கையின் அவசியம் - சேவையும கடமையும் - கல்வி கற்றவர் எனப்படுவோர் - பாமர ஜனங்கள் - அவர்களின் எதிர்காலம் ... 153

20. அலிப்பூரிலுள்ள மிருகக் காட்சிச் சாலையில் - டார்வின் அவாது உலகத் தோற்ற விளக்கமும் பதஞ்சலியும் - உடல் உறுதியின் அவசியமும். ... 163

21. பேலூர் திருமடத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சுவாமி விவேகானந்தர் - கருமமும் தியானமும்- அவித்தை - பிரம்மமும் ஜட உலகமும் ... 172

22. வங்காள மாதாந்தரப் பத்திரிகை 'உத்போதன்'- அதன் எதிர்கால நோக்கம். ... 187

23. பிரசாரமல்ல, சேவையே இந்தியா வேண்டிநிற்பது - வறுமையே இந்தியாவின் தற்போதைய பிரச்னை - வாலிப சந்நியாசிகளை உலக விஷயத்தி

பக்கம்

னும் சமய சாதனையிலும் பயிற்றிய பாமர ஜனங்களுக்குச் சேவை செய்ய வைத்தல் - பிறருக்காக உழைக்க வேண்டுமென வாலிபருக்கு உபதேசம் 194

24. ஞானம் பக்தி இரண்டின் சமரசம் - சச்சிதானந்தம் - காட்சிகள் தோன்றுவது எப்படி என்பது - சிரத்தையை வளர்த்து தேவியையும் அவதாரங்களையும் உபாசித்தல் - நாம் இன்று வேண்டுவது மதுரபாவமல்ல, வீரமே - ஸ்ரீ ராமகிருஷ்ணர் - அவதாரங்கள் ... 201

25. பிரம்மமும் பேதமும் - ஏகத்துவானுபவம் - பரமானந்தமே எல்லோருக்கும் முடிபான இடம் - நான் பிரம்மம் என்று சதா நினைத்தல் - விவேகமும் தியாகமுமே கருவிகள் - அந்தரங்க ... 209

26. காமினி காஞ்சனத் தியாகம் - முமுட்சுவுக்குக் கடவுளின் கிருபையுண்டு - கட்டுப்பாடில்லாக் கிருபையும் பிரம்மமும் ஒன்று. ... 216

27. அஹிம்சாக் கொள்கையும் மாமிச உணவும் - மனிதனுக்குள்ள சத்துவ ராஜச தாமச குணங்கள் - ஆகார விஷயத்தில் கட்டுப்பாடும் ஆத்ம ஞானமும் - ஆஹார' ஆகாரத்தில் மூன்று குற்றங்கள் - தீண்டாமையும் வருண விபரீதங்களும் - பூர்வீக சதுர்வருண தருமங்களைக் கொண்டு வருவதற்கான முறையும் ரிஷிகளின் விதிகளும் ... 221

28. இந்தியாவின் இழிமைக்குக் காரணம் - பூர்விக வைதிக ஆசாரங்களைத் தற்கால சமூகத்திற்கு ஏற்பத் திருத்தி அமைத்தல் - புதிய ஸ்மிருதியைத் தொகுத்தல் ... 228

29. காலம் இடங்களின் திவ்விய மகத்துவம் - கருமமும் ஆத்ம ஞானமும் - கரும யோகம் - இந்தியா வேண்டுவது ரஜோகுணத்தின் விழிப்பே - நாட்டிற்கு எதிர்காலத்தில் சிறப்புண்டு ... 236

பக்கம்

30. பிரம்மசரிய விதிகள் - புதிய சந்நியாச ஸ்தாபனம்- கீதையில் கண்ட கர்மயோகம் வேண்டும் ... 245

31. நாகமஹாஷயரைச் சந்தித்தல் ... 249

32 பிரம்மம், ஈஸ்வரன், ஜீவன், அவித்தை - தியாகமும் ஆத்மானுபூதியும் - மனத்தை எப்படி அடக்குவது - தியானத்துக்கு ஆத்மாவே குறி - ஞானம்-பக்தி - கர்மம் - யோகம் - கடவுள் - அவதாரங்களின் கொள்கை - ஆத்ம ஞானம் அடைய ஊக்கப்படுத்தல் - ஞானியின் கர்மம் ... 255

33. கலையைப்பற்றி - இந்தியக் கலைகளும் மேலைத் தேசக் கலைகளும், அவற்றின் வேறுபாடுகளும் - ராமகிருஷ்ண சங்கத்து முத்திரையும் அதன் உட்கருத்தும் - ராமகிருஷ்ண தேவாலயத்தின் அமைப்புத் திட்டம் ... 271

34 சுவாமி விவேகானந்தர் மூலமாக ஒரு சக்தி இயங்குகின்றது - கிழக்கத்திய வங்காள விஜயத்தின் ஞாபக உணர்வுகளும் நாகமஹாஷயர் வீட்டிற்கு விஜயம் செய்ததும். தியாகமேயன்றிப் புறக் கிரியைகளை அநுஷ்டித்தல் ஆத்மஞான முதிர்ச்சியின் பரீட்சை அன்று - ஆன்மாவை அடைய தீவிர உறுதிப்பாடு ... 279

35 பெண்பாலருக்காக ஓர் மடத்தினை ஸ்தாபிப்பதற்கான முறை - ஆன்மாவுக்குப் பால் வேற்றுமை இல்லை - பிரம்மத்தை அறியப் பெண்பாலருக்கும் சம உரிமையுண்டு - நற்கருமத்தின் தெளிவு - கருமமும் ஞானமும் ... 289

36. சுவாமி விவேகானந்தரின் அற்புத ஞாபக சக்தி- பரத சந்திரரைப் பற்றியும் மைக்கேல் மதுசூதன தத்தரைப் பற்றியும் அவருக்குள்ள எண்ணங்கள் ... 302

37. அண்மையுடையதாயினும் ஆன்மாவைத் தரிசிக்கவியலாமலிருப்பது எக்காரணத்தால் - எல்லா வினைகளும் ஆன்ம ஞானப் பேற்றில் ஒடுங்கிவிடும் - காளிதேவி ... 308

பக்கம்

38. பிறருக்காக யாவற்றையும் தியாகம் செய்யும் மனவலி படைத்த மாசிலா வாலிபர் சந்நியாசிக் கூட்டம் - மனுஷத் தன்மையே குறிக்கோளாக வேண்டும் - கீழ்நோக்கிச் செல்லும எண்ணங்களுக்கும மனவலியின்மைக்கும் மருந்து - தன்னலப் பற்றற்ற தொண்டு - சர்வ முகதியின்றி எவரொருவருக்கும முக்தியில்லை - சிந்தனையின் ஆற்றல் ... 313

39. பேலூர் திருமடத்தில் துர்க்கா பூஜையை நடத்துவதற்கு சுவாமி விவேகானந்தர் அமைத்த விதிமுறை - காளி கட்டத்து ஆலய தரிசனம் ... 324

40. சுவாமி விவேகானந்தர் கடைசியாகப் பார்த்த ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜன்மோற்சவம்-ஜன்மோற்சவம் எப்படி நடக்கவேண்டுமென சுவாமி விவேனந்தரின் கருத்து - குரு எவ்வளவு தூரம் துணைபுரியக்கூடும் - கிருபையின் உட்பொருள் - சுவாமி விவேகானந்தர் பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தரிசனம் ... 326

41. வறியோர்பால் சுவாமி விவேகானந்தருக்கிருந்த அன்பும் ஆதரவும் - தீண்டாமை - ஜீவசேவையே சிவ சேவை ... 333

42. பேலூர் திருமடத்து ஆரம்ப நாட்களில் வாழ்ந்த வாழ்க்கை - பாரநாகூர் மடத்தைப்பற்றிய ஞாபகங்கள் - துறவறநெறி விரதத்தின் கட்டுப்பாடுகள் 338

43. தியானத்தைப்பற்றி - குண்டலினியை விழித்தெழச் செய்தல் - ஏகாக்கிர சிந்தை எப்படி உண்டாகும் - ஆத்ம சாதனையை நடாத்தல் பற்றி ... 345

44. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யர்களைப்பற்றி ... 350

45. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்களைப் பற்றிய வேறு வேறு கருத்துக்கள் - ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசத்தின் எதிர்கால நோக்கம் ... 355



சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள்

[இடம். கல்கத்தாவிலே, பாக்பஜாரிலே, காலஞ்சென்ற பாபு பிரியநாத் முகோபாத்தியாயருடைய வீடு. காலம். 1897-ம் ஆண்டு]

சுவாமிஜி மேலைநாட்டில் இருந்து திரும்பி வந்து கல்கத்தாவிலே தமது திருவடிகளை வைத்து மூன்று நான்கு நாட்களாகின்றன. நீண்ட காலத்துக்குப் பின்னர் அவருடைய திருமுன்னிலையிலே இருக்கப்பெற்ற பேற்றினாலே, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்கள் அளவிறந்த ஆனந்த முற்றிருந்தார்கள். அவர்களுக்குள்ளே பொருள் படைத்தவர்கள் சுவாமிஜியைத் தங்களுடைய வீடுகளுக்கு அழைத்து விருந்து அருந்துவிக்கும் பாக்கியத்தைப்பெற நினைத்தார்கள். பாகபஜாரிலே ராஜபல்லப் பாரா என்னும் இடத்திலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பக்தராகிய ஸ்ரீயுத பிரிய நாதமுகோபாத்தியாயருடைய வீட்டுக்கு இன்று பின்னேரம் சுவாமிஜி விருந்ினராக அழைக்கப்பட்டிருந்தார். இந்தச் செய்தி கேட்டு அநேக பக்தர்கள் இன்று அந்த வீட்டுக்கு வந்திருந்தார்கள். சிஷ்யரும் ஒரு வழியாக அதனை அறிந்து பிற்பகல் இரண்டரை மணியளவில் ஸ்ரீயுத முகர்ஜியினுடைய வீட்டை அடைந்தார். அவர் இதற்கு முன்பு சுவாமிஜியைக் கண்டறிந்ததில்லை. ஆதலினால் இதுவே அவர் சுவாமிஜியை முதல் முதல் சந்தித்த தருணமாகும்.

சிஷ்யர் வந்ததும் சுவாமி துரியானந்தர் அவரை அழைத்துச் சென்று சுவாமிஜியோடு அறிமுகம் செய்து வைத்தார். சிஷ்யர் ஸ்ரீ ராமகிருஷ்ண ஸ்தோத்திரமாக

எழுதிய ஒரு பாடலை சுவாமிஜீ கண்டிருந்தபடியால் முன்னமே பேலூர்த் திருமடத்திலே அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். மேலும் சிஷ்யர் ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய பேரன்பராகிய *நாகமஹாசயருக்கு அறிமுகமானவர் என்பதையும் சுவாமிஜீ அறிந்திருந் தார்

சிஷ்யர் சுவாமிஜீயினுடைய திருமுன்னிலையிலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஆசனமமர்ந்தபின், சுவாமிஜீ சமஸ்கிருத பாஷையிலே அவரோடு உரையாடி நாகமஹாசயருடைய சுகத்தைப்பற்றி விசாரித்தார் மஹாசயருடைய அரும்பெருந் துறவையும் ஆண்டவனிடத்துள்ள அளவிறந்த பக்தியையும் பணிவையும் குறித்துப் பேசும்பொழுது,

> †**வயம் தத்வான்வேஷாத் ஹதா :**
> **மதுகர த்வம் கலு க்ருதீ**

"வண்டே, நாங்கள் உண்மைப் பொருளைத் தேடி வீண் போயினோம். நீயோ சித்தி எய்தும் பாக்கியத்தைப் பெற்றாய்" என்று கூறி, இந்த வாக்கியத்தை எழுதி நாகமஹாசயருக்கு அனுப்பும்படி பணித்தனர். பின்பு பெரும் ஜனக்கூட்டத்திலே சிஷ்யரோடு சம்பாஷிப்பது வசதியில்லாதிருப்பதைக் கண்டு அவரையும் துரியானந் தரையும் மேற்குப் பக்கத்திலிருக்கின்ற ஓரறைக்கு அழைத்துச் சென்று சிஷ்யரை நோக்கி விவேக சூடா

---

* துர்க்காசரண நாகமஹாசயர் என்னும் பெரியார் இல் வாழ்க்கையில் வாழ்ந்து தமது ஜீவியத்திலே குருநாதராகிய ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய மகத்துவத்தைப் பல வழிகளிலே மிக அற்புதமாக விளக்கிக் காட்டினார்.

†சகுந்தலையினுடைய முகத்திலே அமர வந்த வண்டினை நோக்கி துஷ்யந்த மகராஜன் கூறுவதாகக் காளிதாசருடைய சாகுந்தலத்தில் கூறப்படுகிறது.

மணியிலிருந்து பின்வரும் சுலோகத்தை எடுத்துச் சொல்லினார் —

மா பைஷ்ட வித்வம்ஸ் தவ நாஸ்த்யபாய:
சம்சார ஸிந்தோஸ்தரணே அஸ்த்யுபாய:
யேனைவ யாதா யதயோஸ்ய பாரம்
தமேவ மார்க்கம் தவநிர்திசாமி

“அறிஞனே பயப்படாதே; நீ அழிய வேண்டியதில்லை; பிறப்பிறப்பு வடிவமாகிய கடலைக் கடப்பதற்கு வழிகளிருக்கின்றன. தியாகிகளாகிய பெரியோர் இந்தச் சமுத்திரத்தைத் தாண்டிய மார்க்கத்தை நான் உனக்குக் காட்டுவேன்.” ஆசாரிய சங்கரர் இயற்றிய விவேக சூடாமணி என்னும் நூலைப் படிக்கும்படி சுவாமிஜி சிஷ்யருக்குக் கூறினார்.

இந்த வார்த்தைகள் செவியிற்படுதலும் முறைப்படி தீக்ஷை பெற்றுக்கொள்வது நலம் என்பதைப்பற்றி சுவாமிஜி குறிப்பாகச் சொல்லுகிறாரோ, எனச் சிஷ்யர் தம்முள்ளே ஆலோசித்தார் சிஷ்யர் வாழ்க்கையிலே வைதிக ஒழுக்கம் வாய்ந்தவர். வேதாந்த சாஸ்திரம் வாசித்தவர், வருணாசிரம தர்மத்தில் மிகுதியும் பற்றுள்ளவர், ஒரு குருவை வரித்துக் கொள்வதைப்பற்றித் தம்முடைய மனத்திலே இன்னும் ஒரு தீர்மானம் எய்தப்பெறாதவர்

வேறு வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது தரிசனி என்னும் பத்திரிகையின் ஆசிரியராகிய நரேந்திரநாதசேனர் என்பவர் சுவாமிஜியைக் காணவந்திருப்பதாக ஒரு மனிதன் தெரிவித்தான். சுவாமிஜி அந்தச் சிறிய அறையினுள்ளே அழைத்துவரும்படியாகக் கட்டளையிட்டார். நரேந்திர பாபு உள்ளே புகுந்து ஆசனத்தமர்ந்து இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் பற்றிப் பலவேறு விஷயங்களைக் குறித்து விசாரித்தார். அவருடைய வினக்களுக்கு விடையாக சுவாமிஜி பின்வருமாறு சொல்லுவாராயினார்:—

"அமெரிக்கரைப் போன்ற அகன்ற சிந்தையும், விருந்தினரை உபசரிக்கும் குணமும், புதிய எண்ணங்களை ஏற்றுக்கொள்ளும் உண்மை ஆவலும் உடைய மற்றொரு ஜாதியாரை உலகத்தில் எவ்விடத்தும் காண முடியாது. எங்கெங்கு அமெரிக்காவிலே நான் வேலைகள் செய்தேனோ அவை எல்லாம் என்னுடைய ஆற்றலினால் நிறைவேறினவல்ல. அமெரிக்கா தேசத்து மக்கள் நல்ல சிந்தனையை உடையவர்கள். ஆதலினால் அவர்கள் வேதாந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்கள். ஆங்கிலேயரைப்போல நிலைப்போக்கான ஜாதியார் உலகத்திற் பிறர் எவருமில்லை. ஒரு புதுக் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் இலகுவிலே பிரியப் படுவதில்லை. ஆனால் இடைவிடாது முயற்சித்து ஒரு புதுக்கருத்தை அவர்களுடைய உள்ளத்திலே புகுத்து விட்டால் அவர்கள் எவ்வழியாகவும் அதனை விட்டுவிட மாட்டார்கள். அத்தகைய நிலையான கடைப்பிடியை மற்றொரு ஜாதி யாரிடத்துக் காணமுடியாது. ஆனபடியினாலன்றோ வல்லமையிலும் நாகரிகத்திலும் அவர்கள் இவ்வுலகத்திலே அதியுயர்ந்த பதவியை அடைந்திருக்கின்றார்கள்.

பயிற்றப்பட்ட போதகாசிரியர்கள் கிடைப்பாராயின் அமெரிக்காவிலும் பார்க்க இங்கிலாந்திலே வேதாந்தத்தை நிலைபேறாக வைப்பது வாய்ப்புடையதாகாதோ என வினவ, அதற்கு மறுமொழியாக "நான் வேலைக்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறேன். எதிர்காலத்திலே போதகாசிரியர்கள் நான் சென்ற வழியாகச் சென்றால் காலகதியிலே எவ்வளவோ வேலை முற்றுப்பெறும்" என்று சுவாமிஜி சொன்னார்.

இவ்வகையாகச் சமய போதனை செய்வதனால் நமக்கு எதிர்காலத்தில் விளையக்கூடிய நன்மை எது என நரேந்திரபாபு வினவுதலும், அதற்கு மறுமொழியாக சுவாமிஜி பின்வருமாறு சொல்லுவாராயினார்: "நமது நாட்டிலோ வேதாந்த மார்க்கம் ஆகிய பெரும் பொருள்

ஒன்று மாத்திரமே இருக்கின்றது. மேலைத்தேச நாகரிகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நம்மிடத்தில் வேறொன்றும் இல்லை என்றே சொல்லலாம் ஆனால் சமரச தர்மமாக விளங்குவதும் எல்லாவகைக் கொள்கைகளையும் சமய சாதனைகளையும் பின்பற்றி நடக்கின்ற மக்களுக்கெல்லாம் சமத்துவ உரிமையை அளிப்பதுமாகிய இந்த வேதாந்த சாஸ்திரத்தை நாம் போதிப்போமானால், நாகரிகம் படைத்த மேலை நாடானது இந்தியாவிலேயே முன்னாளிலும் இந்நாளிலும் உள்ள அற்புதமாகிய ஆத்மீக வாழ்க்கையைப் பற்றி அறியும் இந்தச் சமயத்தை ஆராய்ந்து படிப்பதனால் மேலை நாட்டினருக்கு நம்மீதுள்ள மதிப்பும் அநுதாபமும் அதிகரிக்கும் — இப்பொழுதே ஓரளவுக்கு இது நிகழ்ந்திருக்கின்றது இவ்வழியாக நாம் அவர்களது மதிப்பையும் அநுதாபத்தையும் பெறுவோமாயின், அவர்களிடமிருந்து உலக வாழ்க்கைக்கு உபயோகமாகிய கலைகள் பலவற்றைப் பயின்று கொள்ளலாம். அதனால் வாழ்க்கைப் போராட்டத்துக்கு நம்மை மிகுதியும் தகுதியுள்ளவர்கள் ஆக்கிக்கொள்ளலாம். அவர்கள் நம்மிடம் இருந்து வேதாந்தத்தைப் பயின்று கொள்வதனால் தங்களது ஆத்மீக நன்மையை அடையக்கூடியவர்கள் ஆவார்கள்."

இத்தகைய கொடுக்கல் வாங்கல்களினால் அரசியல் முன்னேற்றம் அடைவதற்கு ஏதாவது நம்பிக்கை உண்டா என நரேந்திரபாபு கேட்டார். அதற்குச் சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினார்: "மேல் நாட்டார் *விரோசனன் என்னும் பெரிய வீரவா

*விரோசனன் என்பவன் அசுரருடைய முதல் வேந்தன் என்பதும் உயர்ந்த வல்லமைகளை உடையவனாயிருந்தான் என்பதும் பழைய இந்திய கர்ண பரம்பரை. ஆசுரிய தேசத்துப் புராணக் கதைகளை சமீபத்திலே ஆராய்ச்சி செய்தோர் ஆசுரிய சரித்திரத்திலே பழைய வம்சாவளிகளிலே விரோசுஸ் என்னும் ஒரு மன்னன் பெயர் குறிப்பிடப்பட்டதாகக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

னுடைய மக்கள். அவர்களுடைய வலிமையினாலே பஞ்சபூதங்களையும் பாவை போலக் கையில் வைத்து ஆட்டுகின்றனர். அன்னாரோடு எதிர்த்துப் போராடும் பொழுது அத்தகைய பூத சக்திகளைக் கொண்டு நீங்கள் வெல்ல நினைப்பீர்களாயின், அவ்வெண்ணம் பெரும் பிழையாகும். ஒரு சிறு சிலை உருவம் ஹிமாலயத்தின் முன்னர் வைக்கப்படின் எவ்வாறு தோற்றுமோ அவ்வாறு பூதசக்திகளை உபயோகப்படுத்துகின்ற நமது ஆற்றல் அவர்கள் முன்னிலையில் மிகச் சிறிதாகத் தோற்றும். என்னுடைய கருத்து என்னவென்று எண்ணுகிறீர்களோ? வேதாந்தத்திலுள்ள ஆழ்ந்த இரகசியங்களை மேலை நாட்டுக்குக் கற்பிப்பதினால் நாம் வலிமை பொருந்திய அந்த ஜாதியாருடைய மதிப்பையும் அநுதாபத்தையும் பெறுவோம். ஆத்மீக சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் நாம் அவர்களுக்கு ஆசிரியர்களாக இருப்போம். சடப்பொருள் சம்பந்தமான விஷயங்களில் அவர்கள் நமக்கு ஆசிரியர்களாக இருப்பார்கள். இஃதன்றி நமது ஜனங்கள் தங்களுடைய ஆத்மீக வாழ்க்கையை அவர்கள் கையில் கொடுத்து மேனாட்டாருடைய பாதத்தண்டை இருந்து சமய சாஸ்திரம் பயில நினைப்பாராயின் தோல்வியுற்றிருக்கின்ற நமது நாட்டு மக்கள் முற்றிலும் தோற்று உயிர் துறந்தவராவார்கள். இரவுபகலாக 'இதனைத் தா அதனைத் தா' என்று அழுது பிரலாபிப்பதில் ஒரு பயனும் இல்லை. இரண்டு ஜாதியாருக்கும் இடையே இத்தகைய கொடுக்கல் வாங்கலினால் மதிப்பு அநுதாபம் என்னும் தொடர்பு வளர்ச்சி எய்துமாயின் அழுது பிரலாபிக்க வேண்டியிராது. எல்லாம் தாமாகவே நடைபெறும். இவ்வண்ணம் சமயத்தை வளர்ப்பதனாலும் வேதாந்தத்தை அகலப் பரப்புவதனாலும் இந்த நாடும் மேலை நாடும் மிகவும் நன்மையை அடைவன என்பது எனது நம்பிக்கை. இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அரசியல் வாதம் அப்பிரதானமானது என்று எனக்குப் புலப்படுகின்றது. இந்த

நம்பிக்கையைத் தோற்றுவிப்பதற்கு என் வாழ் நாளைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இந்தியாவி னுடைய நலத்தைப் பெறுவதற்கு வேறேதாவது வழி இருக்கிறதென நீ நினைத்தால் உன் இஷ்டப்படி செய்யா லாம்?"

நரேந்திரபாபு சுவாமிஜியினுடைய கருத்துகள் முழுவதையும் தாமும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லிப் போய்விட்டார். சுவாமிஜியினுடைய வாக்கிலிருந்து வந்த மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த சிஷ்யர் ஆச் சரிய வயத்தராய், நோக்கிய கண் இமையாமல் சுவாமிஜி யினுடைய தேஜஸ் விளங்குகின்ற திருமேனியைப் பார்த்தவண்ணமாக இருந்தார்.

நரேந்திரபாபு போயின பின்னர், பசுக்களைப் பரிபா லிக்கிற சபை ஒன்றினுக்குரிய ஊக்கமுள்ள பிரசாரகர் ஒருவர் சுவாமிஜியைக் காணும்பொருட்டாக வந்தார். அவர் தலையிலே காஷாயத் தலைப்பாகை அணிந்திருந் தார். தோற்றத்தில் வட நாட்டினரைப்போலக் காணப் பட்டார். அவரது உடை ஏறக்குறைய சந்நியாசிக ளுடைய உடை போன்றிருந்தது. இந்தப் பசு பரிபாலன பிரசாரகர் வந்தார் என்று கேள்விப்படலும் சுவாமிஜி சாலை அறைக்கு வந்தார். பிரசாரகர் சுவாமி ஜியை நமஸ்கரித்துப் பசுத்தாயினுடைய படம் ஒன் றினை சுவாமிஜிக்குக் கொடுத்தார். சுவாமிஜி படத் தைப் பெற்று அருகில் நின்ற ஒருவர் கையில் கொடுத்த பின்னர் பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது.

சுவா: உங்களுடைய சங்கத்தின் நோக்கம் என்ன?

பிரசாரகர். நமது நாட்டிலுள்ள பசுத்தாய்களைக் கசாப்புக்காரருடைய கைகளில் நின்று நாங்கள் பாது காக்கிறோம். நோயுற்ற பசுக்களும் வலியிழந்தனவும் கசாப்புக்காரர்களிடமிருந்து வாங்கப்பட்டனவும் பரிபா லிக்கப்படுவதற்காகப் பசு வைத்தியசாலைகளை ஏற் படுத்தி இருக்கிறோம்.

சுவா : அது மிக நல்லது. உங்கள் வருவாய்க்கு வழி என்ன?

பிர ; தங்களைப் போன்ற பெரிய மனிதர் அன்போடு கொடுக்கின்ற கொடைகளைக் கொண்டே சபையின் வேலை நடந்து வருகின்றது.

சுவா : இப்பொழுது எவ்வளவு பணம் மிகுந்து வைத்திருக்கிறீர்கள்?

பிர : இந்த முயற்சிக்கு மார்வாடி வணிகர் கூட்டம் சிறந்த உதவிபுரிகின்றது. இந்த நன்முயற்சிக்காக அவர்கள் பெருந்தொகை கொடுத்திருக்கின்றார்கள்.

சுவா : மத்திய இந்தியாவிலே ஒரு கொடிய பஞ்சம் நடக்கின்றது. ஒன்பது லக்ஷம் ஜனங்கள் பட்டினியால் இறந்தார்கள் என்று இந்திய இராஜாங்கத்தார் வெளிப்படுத்தி இருக்கின்றனர். இதற்கு உதவி புரிவதற்கு உங்களுடைய சபை ஏதாவது செய்திருக்கின்றதா?

பிர : பஞ்சம் முதலிய துன்பம் வரும்பொழுது நாங்கள் உதவிபுரிவதில்லை. எங்கள் சபை பசுத்தாய்களைப் பரிபாலிக்கும் பொருட்டே ஏற்படுத்தப்பட்டது.

சுவா . உங்களுடைய சொந்தச் சகோதரர் சகோதரிகளாகிய லக்ஷக்கணக்கான ஜனங்கள் பஞ்சத்தினால் துன்பம் அடைந்து மரணத்தின் வாயில் விழும்பொழுது அவர்களுக்கு எவ்வழியாகவாவது உணவளித்துக் காப்பாற்ற வேண்டுமென்பது உங்கள் கடமை என நீங்கள் நினைக்கவில்லையா?

பிர : இல்லை. இந்தப் பஞ்சம் மக்களுடைய பாவ கர்மத்தினாலே ஏற்பட்டது. கருமம் எப்படியோ - பலனும் அப்படி.

பிரசாரகர் இந்த வார்த்தைகளைக் கூற அதனைக் கேட்டு சுவாமிஜியினுடைய கண்களிலிருந்து நெருப்புப்

பொறி பறப்பது போன்றிருந்தது : முகம் சிவந்தது. அவர் தம் வெகுளியை அடக்கிக்கொண்டு பின் வருமாறு சொல்லுவாராயினர் : "தம்முடைய சொந்தச் சகோதரர் பட்டினியினால் இறக்க அவர்களுடைய சீவனைக் காப்பாற்றும் பொருட்டு ஒரு பிடி அரிசி கொடுக்காமல், மனிதர்மேல் அநுதாபமின்றிப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் குவியல் குவியலாக உணவைக் கொடுக்கின்ற இத்தகைய சபைகளில் நான் புகுவதில்லை. ஜன சங்கம் இவற்றினால் நன்மை அடைகிறதென நான் எண்ணவில்லை. மனிதர் தம் கருமத்தினால் இறக்கின்றனரென்று நீர் வாதிப்பீராயின் இவ்வுலகத்திலே எதைக் கருதியும் முயற்சிக்க வேண்டியதில்லை என்பது தீர்மானமாகின்றது. விலங்குகளைப் பரிபாலிப்பதற்காக நீர் செய்கிற வேலையும் இவ்விதிக்குப் புறம்பாகாது. பசுத் தாய்களும் தம்முடைய கருமத்தினால் கசாப்புக்காரருடைய கையிலகப்பட்டு இறக்கின்றனவென்று சொல்லிவிட்டுச் சும்மா இருக்கலாமே?"

பிரசாரகர் சிறிது நாணி, "ஆம், நீங்கள் சொல்வது உண்மை ஆனால் பசு நமது அன்னை என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவே" என்றார்.

சுவாமிஜி நகைத்துக்கொண்டு, "ஆம், பசு நமது அன்னை என்பதை நான் அறிந்துகொண்டேன் ; இத்தகைய புத்திசாலிகளான பிள்ளைகளை வேறு யார்தான் பெறுதல்கூடும்?" என்றார்.

வடநாட்டுப் பிரசாரகர் அந்த விஷயத்தைப்பற்றிப் பின்பு ஒன்றும் பேசவில்லை. சுவாமிஜி கேலிபண்ணிய கருத்தை அவர் அறிந்துகொள்ளவில்லை போலும்! தமது சபைக்காக ஏதாவது உதவ வேண்டுமென்று அவர் சுவாமிஜியைக் கேட்டார்.

சுவா : நான் ஒரு சந்நியாசி, பக்கிரி. உமக்கு உதவி செய்ய எங்குப் பணம் பெறுவேன்? பணம் பெற்றாலும் முதலிலே மனிதருடைய சேவைக்காகச் செலவழிப்

பேன். முதலிலே மனிதனுக்கு உணவு, கல்வி, ஆத்மீக வாழ்க்கை என இவற்றைத்தந்து காப்பாற்றவேண்டும். அதற்குப் பின்பு ஏதாவது மிகுந்திருந்தால் உம்முடைய சபைக்குக் கொடுக்கலாம்

இந்த வார்த்தைகளைக்கேட்டு பிரசாரகர் சுவாமி ஜியை நமஸ்கரித்துவிட்டுப் போய்விட்டார். பின்பு சுவாமிஜி எங்களை நோக்கிச் சொல்லுகிறார்: "அந்த மனிதனுடைய சொற்களைப் பாருங்கள் மனிதர் தமது கருமத்தினுல் இறக்கிறார்கள் என்று சொல்லுகிறான். அவர்களுக்கு உதவுவதனுல் என்ன பயன் என்கிறான் தேசம் நாசமாய்ப் போய்விட்டதென்பதற்கு இது ஒரு தீர்ப்பான சான்று. இந்துக்களுடைய கர்ம விசாரணை எவ்வளவு பழுதடைந்து விட்டதென்று பாருங்கள். மனிதருக்கு இரங்காத இருதயமுள்ள மனிதர் இவர்கள்; இத்தகையோரை மனிதர் என்று எண்ணலாமா"'

இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது சுவாமி ஜியினுடைய உடலம் துன்பத்தினுலே நடுங்கியது.

பின்பு புகை பிடித்துக்கொண் டிருக்கும்பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "நல்லது, நீ என்னை மறுபடி பார்" என்றுர்.

சிஷ்: ஐய! தேவரீர் எங்கே உறைவீர்? ஒரு வேளை யாராவது பணக்காரருடைய வீட்டிலே உறையலாம் என்னை அங்கே உட்புக விடுவார்களா?

சுவா: இப்பொழுது ஆலம்பஜார் மடத்திலாவது, காசிப்பூரிலே கோபால லால்சிங் உடைய பூஞ்சோலை வீட்டிலாவது நான் இருப்பேன். இரண்டிடத்துக்கும் நீ வரலாம்.

சிஷ்: ஐய! தேவரீரோடு தனித்துப் பேசப் பெரிதும் விரும்புகிறேன்.

சுவா: நல்லது, ஓர் இரவு வா, நிறைய வேதாந்தம் பேசுவோம்.

சிஷ் : ஐய ! சில ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் தேவரீரோடு வந்திருப்பதாக அறிந்தேன். என்னுடைய பேச்சையும் உடையையும் பார்த்து அவர்கள் வெறுப்படைய மாட்டார்களா ?

சுவா : ஏன், அவர்களும் மனிதர்கள் தான் ; வேதாந்த சாஸ்திரத்திலே மிகுந்த பற்றுள்ளவர்கள். உன்னோடு வார்த்தையாடப் பிரியப்படுவார்கள்.

சிஷ் : ஐயா, வேதாந்த சாஸ்திரத்திலே அதனைக் கற்பதற்குரிய அதிகாரிகளது இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறதே ; இவை தேவரீருடைய மேலைத்தேசத்து மாணவரிடத்து எப்படிக் காணப்படக் கூடும்? வேத வேதாந்தங்களைக் கற்றவனும், பாவங்களிலிருந்து நீங்கியவனும், சாஸ்திரங்களிலே சொல்லப்பட்ட நித்திய நைமித்திய கருமங்களைச் செய்பவனும், ஒழுக்கத்திலும் உணவிலும் தன்னடக்கமுடையவனும், சாதன சதுஷ்டயங்கள் நிறையெய்தியவனும் உள்ளவன் மாத்திரமே வேதாந்த சாஸ்திரங்களை அப்பியசிக்க உரிமை உடையவன் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவே. தேவரீருடைய மேலைத்தேச மாணவர்கள் முதலிலே பிராம்மணரல்லர். உணவு உடை விஷயத்திலே கட்டுப்பாடு இல்லாதவர் ; அவர்கள் வேதாந்தத்தை எப்படி அறிந்துகொள்ள முடியும் ?

சுவா : நீ அவர்களோடு உரையாடும்பொழுது அவர்கள் வேதாந்தத்தை அறிந்திருக்கிறார்களா இல்லையா வென்பதை உடனே அறிந்துகொள்ளலாம்.

சிஷ்யர் வைதிக மார்க்கத்தின் புற ஒழுக்கங்களை மாறுபாடின்றிக் கடைப்பிடித்து ஒழுகுபவர் என்பதை சுவாமிஜி ஒருவேளை இதுவரையில் அறிந்திருக்கலாம். அதன்பின் சுவாமிஜி ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்த குழாம் தம்மைப் புடைசூழ்ந்துவர பாக்பஜாரிலே ஸ்ரீமத் பலராம் வசுவினுடைய மனைக்குப் போனார். சிஷ்யர் பத்தலம் என்னும் இடத்திலே விவேக சூடாமணி என்

னும் புத்தகம் ஒன்றினை வாங்கிக்கொண்டு தார்ஜிபராவி லிருக்கும் தமது வீட்டை நோக்கி நடந்தார்.

(2)

[இடம். கல்கத்தாவிலிருந்து காசிப்பூருக்குப் போகும் வழியிலும் காலஞ்சென்ற கோபாலலால சீலருடைய பூஞ்சோலையிலும். காலம்: 1897 ம் ஆண்டு.]

இன்று உச்சிக் காலத்திலே சுவாமிஜி ஸ்ரீயுத *கிரீஷ சந்திரகோஷருடைய வீட்டிலே இளைப்பாறிக் கொண் டிருக்கிறார். சிஷ்யர் வந்து அவரை நமஸ்கரித்தபொழுது, சுவாமிஜி கோபாலலால சீலருடைய பூஞ்சோலை வீட்டிற் குப் போக ஆயத்தப்படுவதைக் கண்டார். வெளியே ஒரு வண்டி காத்துக்கொண்டு நின்றது. அவர் சிஷ்யனை நோக்கி, "நல்லது, என்னோடு வருகிறாயோ?" என்றார். சிஷ்யர் சம்மதித்து சுவாமிஜியோடு வண்டியிலேற, வண்டி புறப்பட்டது. அது சித்பூர் வழியாகப் போகும் பொழுது சுவாமிஜி உள் நோக்கிய சிந்தையராய் கங்கா நதியைப் பார்த்து,

† கங்காதரங்க ரமணீய ஜடாகலாபம்

எனத் தொடங்குகிற கீதத்தைப் பாடினார். சிஷ்யர் இசையினாலே ஆச்சர்யமுற்று மௌனமாகச் செவி சாய்த்துக்கொண்டிருந்தனர். சிறிதுநேரம்கழித்துசித்பூர் பாலத்தை நோக்கிச் செல்லுகிற ஒரு புகை ரத எந்திரத் தைப் பார்த்து, "பாராய், சிங்கம்போல எவ்வளவு மேன்மையாக அது போகின்றது" என்றார். சிஷ்யர் மறுமொழியாக "அது சடப்பொருள். அதற்குப் பின் னாக மனிதனுடைய புத்தியிருந்து இயக்குகிறபடியால்

---

* ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பெரிய பக்தரும் வங்காள நாட்டிலே கீர்த்தி வாய்ந்த நாடக ஆசிரியரும் ஆனவர்.

† "கங்கை நீர்த்தரங்கம் விளையாடுகின்ற அழகிய சடாபாரத்தை உடையவர்" என விஸ்வநாதரைக் குறித்து வியாசர் பாடிய கீதம்.

அஃது இயங்குகின்றது; அப்படி இயங்குவதனால் அதற்கு ஏற்பட்ட பெருமை என்ன?" என்றார்.

சுவா: நல்லது. அப்படியானால், அறிவுக்கு அடையாளமென்ன?

சிஷ்: ஏன், ஐயா, எது புத்தியினால் தொழில் செய்கின்றதோ அது அறிவுள்ளது.

சுவா: எது இயற்கையை எதிர்த்துப் போராடுகின்றதோ அது அறிவுள்ளது அங்கே அறிவுக் குணம் தோற்றமாகிறது ஒரு சிற்றெறும்பைக் கொல்ல முயல்வாயாகின் அது தானும் தனது உயிரைக் காப்பாற்ற வேண்டி உடனே எதிர்த்து நிற்பதைக் காண்பாய். எங்குப் போராட்டமுண்டோ, எவ்விடத்தில் எதிர்ப்பு இருக்கிறதோ அங்கு உயிரின் அடையாளமுண்டு. அங்கு அறிவுத்தன்மை வெளிப்பட்டுத் தோன்றுகின்றது.

சிஷ்: ஐய, மனிதர் மக்கள் ஜாதியார் என்றின்னோர்பாலும் இந்த சோதனை ஏற்புடையதாகுமோ?

சுவா: அது பொருந்துமோ பொருந்தாதோ வென்பதை அறியவேண்டுமாயின் உலக சரித்திரத்தைப் படித்துப் பார் உங்கள் ஜாதியாரைவிட மற்றெல்லோருக்கும் அது பொருத்தமாக இருப்பதை நீ காண்பாய். நீங்கள் மாத்திரம் தான் இவ்வுலகத்திலே சடப்பொருளைப் போலக் குப்புற விழுந்து கிடக்கின்றீர்கள். நீங்கள் மயக்க நித்திரையிலிருக்கிறீர்கள். பழைய காலந் தொட்டுப் பிறர் உங்களை நோக்கி 'நீங்கள் பலவீனர்கள், உங்களுக்கு ஆற்றலில்லை' என்று கூறினார்கள். நீங்களோ, அதனை ஏற்றுக்கொண்டு சென்ற ஆயிர வருட காலமாக, "நாங்கள் வறியோர், ஒன்றுக்கும் பற்றாதவர்கள்' என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். (தம்முடைய சரீரத்தைச் சுட்டிக்காட்டி.) இந்த உடலமும் உங்களுடைய நாட்டு மண்ணிலிருந்து தான் பிறந்தது! ஆனால் நான் ஒரு பொழுதும் அத்

தகைய எண்ணங்களைக் கொள்ளவில்லை. ஆதலினாலே ஆண்டவனுடைய அநுக்கிரகத்தினால் உங்களைக் கீழானவர், வலியற்றவர் என்று சொல்லுகின்ற மாந்தர் தாமும் என்னைத் தெய்வம்போல மதித்துப் போற்றினார்கள்; இன்னும் போற்றுகின்றார்கள். எல்லையற்ற வலிமையும், எல்லையற்ற ஞானமும், வெல்ல முடியாத ஆற்றலும் உன்னுள்ளே இருப்பதாக நீ நினைப்பாயாயின், அந்த வலிமையை நீயும் வெளிப்படுத்தலாம். நீயும் என்னைப்போல வரலாம்

சிஷ்: ஐய, அவ்வண்ணமாக நினைப்பதற்கு எங்களால் முடியுமா? குழந்தைப்பருவ முதலாக எங்களுக்கு அவ்வண்ணம் கூறி நாங்கள் தெரிந்துகொள்ளும் படிச் செய்யும் ஆசிரியன் எங்கே? நாங்கள் இதுவரையிற் கேட்டதும், கற்றதும் கல்வி பயிலுவதற்கு நோக்கமாகக் கொண்டதும் ஏதாவது நல்ல உத்தியோகத்தைப் பெறுகின்ற எண்ணந்தான்.

சுவா: ஆதலினாலேதான் மற்றொரு போதனையோடும் முன்மாதிரியோடும் நாங்கள் முற்பட்டு வந்திருக்கிறோம். ஆதலினாலே உண்மையை எங்களிடமிருந்து கேட்டுச் சிந்தித்துத் தெளிவாயாக. பின்பு அவ்வுண்மையை நகரங்களிலும், கிராமங்களிலும், எவ்விடத்திலும் பரப்புவாயாக. "எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள். இனிமேல் நித்திரை செய்யாதீர்கள்; உங்களுடைய வறுமைகளையும் துன்பங்களையும் நீக்குதற்குரிய மஹாசக்தி உங்கள் உள்ளே இருக்கிறது; இதை நம்புங்கள். அப்பொழுது அந்த மஹாசக்தி உங்களிடத்தில் வெளிப்பட்டுத் தோன்றும்" என்னும் இந்த உண்மையை எவ்விடத்துக்கும் போய் எல்லோருக்கும் போதிப்பாயாக. இதனைப் போதிப்பதோடு இலகுவான பாஷையிலே பொது ஜனங்களுக்கு விஞ்ஞான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், இதிகாசம் என்னும் இவற்றிலுள்ள நடுவாகிய உண்மைகளைப் பரப்புவாயாக. விவாகமாகாத வாலி

பர்களைக் கூட்டி இதற்கென ஒரு நிலையத்தை ஏற்படுத்தலாம் என்று நான் எண்ணி இருக்கிறேன். முதலிலே நான் அவர்களுக்குக் கற்பிப்பேன். பின்பு அவர்கள் மூலமாக இந்த வேலை நடக்கும்.

சிஷ் : இதற்குப் பெருந்தொகையான பணம் வேண்டுமே. பணம் எங்கிருந்து கிடைக்கும்?

சுவா : என்ன பேசுகிறாய்? மனிதன் பணத்தை உண்டுபண்ணுகிறான் பணம் மனிதனை உண்டுபண்ணியதென்று எங்கேயாவது கேள்விப்பட்டாயா? உன்னுடைய எண்ணங்களையும் சொற்களையும் பூரணமாக ஒன்றுபடுத்துவாயாயின், அவ்வெண்ணமே சொல்லையும் செயலையும் ஒன்றுபடுத்துவாயாயின், பணம் சோனாமாரியாக உன் காலண்டை வந்து விழும்.

சிஷ் : நல்லது ஐயா, பணம் வருகிறதென்று வைத்துக்கொள்வோம் தேவரீர், அந்த நன்முயற்சியைத் தொடங்கிவிட்டீர். ஆனால் அதனால் ஆவது என்ன? இதற்கு முன்பு எத்தனையோ பெரிய மனிதர் எவ்வளவோ நன்முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இப்பொழுது எங்கே? தேவரீர் தொடங்கப் போகின்ற வேலைக்கும் நிச்சயமாக அந்த முடிவுதான் வரும் ஆனபடியால் அத்தகைய முயற்சியினால் வருகின்ற நன்மை என்ன?

சுவா : எதிர்காலத்தில் என்ன வருமென்று கணக்கிட்டுக்கொண்டிருப்பவன் ஒன்றையும் செய்து முடிக்கமாட்டான். எது உண்மையானது, எது நல்லது எனத் தெளிந்துகொண்டாயோ அதனை உடனே செய். எதிர் காலத்திலே எது வரும் எது வராது என்று கணக்கிட்டுக் கொண்டிருப்பதனால் வருகிற நன்மை என்ன? வாழ்க்கையோ மிகச் சுருங்கியது. பலனைப்பற்றிக் கணக்கிட்டு, சோதிடம் பார்த்துக்கொண்டிருந்தால் ஏதாவது செய்து நிறைவேற்றக்கூடுமா? ஆண்டவன் ஒருவனே பலனை அளிப்பவன். அதை அவன் கையில் விட்டுவிடு. உனக்

கும் அதற்கும் என்ன ? அந்தப் பக்கமே பார்க்கவேண்டாம். செய்யவேண்டியதைச் செய்துகொண்டுபோ.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது வண்டி பூஞ்சோலை வீட்டிற்கு வந்துவிட்டது. கல்கத்தாவிலிருந்து அநேக ஜனங்கள் சுவாமிஜியைப் பார்க்கும் நோக்கமாகச் சோலைக்கு வந்திருந்தார்கள். சுவாமிஜி வண்டியிலிருந்து இறங்கி வீட்டினுள்ளே ஆசனத்திலமர்ந்து எல்லோரோடும் சம்பாஷிக்கத் தொடங்கினர். சுவாமிஜியினுடைய மேல்நாட்டுச் சிஷ்யராகிய குட்வின் அண்டைவர, இருவரும் சுவாமிஜியைப்பற்றிப் பலதிறப்பட்ட சம்பாஷணைகளை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

மாலையிலே சுவாமிஜி சிஷ்யரை அழைத்து "கடோபநிஷத்தை மனப்பாடம் பண்ணியிருக்கிறாயா ?" என்றார்.

சிஷ் : இல்லை ஐயா, அதனைச் சங்கரபாஷியத்தோடு வாசித்து மாத்திரம் இருக்கிறேன்.

சுவா : உபநிடதங்களுக்குள்ளே இதைவிட அழகான புத்தகத்தைக் காணமுடியாது. நீங்கள் எல்லோரும் அதனை மனனம் பண்ணவேண்டுமென்று நான் விரும்புகிறேன். வெறுமனே வாசிப்பதனால் ஆவது என்ன? உங்களுடைய வாழ்க்கையிலே நசிகேதனுடைய சிரத்தை, தைரியம், விவேகம், துறவு என்னும் இவற்றைக் கொண்டுவர வேண்டும்

சிஷ் : இவற்றை யான் பெறும் பொருட்டுத் தேவரீர் என்னை ஆசீர்வதிப்பீராக.

சுவா : "கருணையின் காற்று வீசுகின்றது. நீங்கள் உங்கள் கப்பலின் பாயைத் தூக்கவேண்டியதுதான்" என ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லியதை நீ கேள்விப்பட்டதில்லையா ? இளைஞனே, உண்மை அநுபவத்தை ஒருவர் மற்றொருவர் இடத்துப் புகுத்துதல் கூடுமா ? அவனவன் விதி அவனவன் கையிலே இருக்கின்றது. விதையின் வலிமையினால் மரம் வளருகிறது. காற்றும் தண்ணீரும் உதவி மாத்திரமாயிருக்கின்றன.

சிஷ் : ஆனால் ஐய, வெளியிலுள்ள உதவியும் தேவைப்படுகின்றதே.

சுவா : ஆம், தேவைப்படுகின்றது. ஆனால் உள்ளே சரக்கு இல்லாவிட்டால் புறத்துணை எவ்வளவு இருப்பினும் ஒரு பயனும் எய்தாது என்பதை அறிந்துகொள்வாயாக. ஒவ்வொருவருக்கும் ஆத்ம ஞானத்தை அடைவதற்குரிய காலம் வருகிறது. ஏனெனில் ஒவ்வொருவரும் பிரம்மமா யிருக்கிறார்கள். அந்த பிரம்மம் வெளிப்பட்டுத் தோன்றுகிற அளவைக் குறித்தே ஏற்றத் தாழ்ச்சி ஆகிய வேறுபாடு ஏற்படுகின்றது. காலகதியிலே ஒவ்வொருவரும் பூரணத்தை அடைவார்கள். ஆதலினாலன்றோ சாஸ்திரங்கள் "**காலேனாத்மனி விந்ததி**" "கால கதியிலே, அது ஒருவனிடத்தே அடையப்படுகின்றது" எனக் கூறுகின்றன.

சிஷ் ; ஆனால் ஐயா, அது எப்பொழுது சம்பவிக்கப்போகின்றது? எத்தனையோ பிறவிகளை அஞ்ஞானத்திற்கழித்தோம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே?

சுவா : அச்சம் எதற்கு? இம்முறை நீ இங்கு வந்திருக்கின்றாய். ஆதலினால் எய்தவேண்டிய பெரும்பேற்றினை இந்த வாழ்க்கையிலேயே அடைவாய். மோக்ஷம் அல்லது சமாதி பிரம்மத்தை வெளிப்படுத்துதற்கு ஏற்பட்ட தடைகளை நீக்கிவிடுவதிலே தங்கி இருக்கின்றது. ஆத்மன் சூரியனைப்போல என்றும் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. அஞ்ஞானம் என்னும் திரை அதனை மறைத்திருக்கிறது. **பித்யதே ஹ்ருதய க்ரந்தி**—இருதயத்தின் முடிச்சுகள் கிழிந்து போகின்றன என்பது முதலாகச் சொல்லப்படும் நிலை வந்து எய்துகின்றது. நீ காணுகின்ற பல வேறு மார்க்கங்கள் எல்லாம் வழியிலுள்ள தடைகளை நீக்கி விடும்படிச் சொல்லுகின்றன. ஒருவன் தான் ஆத்ம ஞானத்தை அடைந்த மார்க்கத்தினை அனைவருக்கும் போதிக்கின்றான். ஆனால் எல்லோரும் அடைய விரும்புகின்ற இலக்கு ஆத்மஞானமே. எல்லா மனி

தரும், எல்லாப் பிராணிகளும் அதற்குச் சம உரிமையுடையனவாக இருக்கின்றன. இந்தக் கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவது.

சிஷ்: ஐய, இந்த வார்த்தைகளைக் கேட்கும் பொழுதும், சாஸ்திரங்களிலே வாசிக்கும் பொழுதும், ஆத்ம ஞானத்தை நாம் அடைந்திலமே என்னும் எண்ணமானது மனத்துக்குத் துயரத்தைத் தருகின்றது.

சுவா: இதனைத் தான் முத்தியை விரும்பும் இச்சை என்று சொல்லுவது. இது எவ்வளவுக்கு வளருகின்றதோ அவ்வளவுக்குத் தடைகள் நீங்குகின்றன. நம்பிக்கை உறுதியாக நிலைக்கின்றது. படிப்படியாக ஆத்ம ஞானம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல எய்தப்படுகின்றது. இத்தகைய ஞானமே சமய அநுஷ்டானத்துக்கு உயிர் போன்றது. வெளி அநுஷ்டானங்களை யாருங் கடைப்பிடித்து ஒழுகலாம். விதி விலக்குகளை எல்லோரும் நிறைவேற்றலாம். ஆனல் முத்தி அடையவேண்டும் என்னும் இச்சை எத்தனை பேருக்கு உண்டு. ஆத்ம ஞானத்தை அடைவதற்கும், ஆண்டவனுடைய அடியிணைகளைப் பெறுவதற்கும் விரும்பி உன்மத்தராகும் ஆழ்ந்த இச்சையே உண்மையான ஆத்மீக வாழ்க்கையாகும். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடத்து கோபிகள் வைத்திருந்த அளவிறந்த உன்மத்தம்போன்ற ஆசையைப்பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா? ஆத்ம ஞானத்தை அடைவதற்கும் அத்தகைய ஆழ்ந்த இச்சை வேண்டும். கோபிகளுடைய உள்ளத்திலும் ஆண் பெண் என்னும் வேறுபாடு தோற்றியது. உண்மை ஆத்ம ஞானத்தில் பால் வேறுபாடு ஒன்றுமில்லை.

இப்படிப் பேசும்பொழுது சுவாமிஜி "கீதா கோவிந்தம்" என்னும் விஷயத்தை ஆரம்பித்துச் சொல்லுவாராயினர்.

ஜயதேவர் சம்ஸ்கிருத கவிவாணர்களுக்குள்ளே காலத்தினல் மிகப் பிற்பட்டவர். சுவையின் ஆழத்தை

யும் பார்க்கச் சொல்லோசைகளை மிகுதியும் கவனித்தார் எனினும்,அவர் உண்மைக் கவிஞர். *பததி பதத்ரே எனத் தொடங்குகிற சுலோகத்திலே வரவு காத்திருக்கும் ஆர்வந்தையும், அன்பின்நிறைவையும், கவிஞர் எவ்வளவு அழகாகச் சொல்லுகிறார் என்று பார். உண்மையை உணர்வதற்கு அவ்வளவு அன்பு வேண்டி இருக்கின்றது. மனத்திலே நீடு நினைந்து இரங்குகிற ஆற்றுமை ஏற்படவேண்டும். பிருந்தாவனத்திலே ஆடல் புரிந்த கண்ணனைப் பார்த்துவிட்டுக் குரு க்ஷேத்திரத்திலே நிற்கின்ற கண்ணனைப் பார். அதுவும் உள்ளத்திற்கு எவ்வளவு வியப்பைத் தருகின்றது! போர்க்களத்திலே நிகழுகின்ற பேரொலிகளுக்கிடையே கண்ணன் சாந்தத்தோடும் பொறுமையோடும் அசைவற்றிருக்கின்றான்.

போர்க்களத்திலே கண்ணன் அர்ஜுனனுக்கு க்ஷத்திரிய தர்மமாகிய கீதையை உபதேசித்துப் போர் செய்யும்படி செய்கின்றான். இந்தக் கொடிய யுத்தத்திற்குத் தான் காரணனாகவிருந்தும் கண்ணன் கருமச்சார்பு இன்றிச் சும்மாவிருக்கின்றான். கண்ணன் ஆயுதமெடுக்கவில்லை. நீ எந்த வழியாக நோக்கினாலும் கண்ணனுடைய பூரணத்துவத்தைக் காண்பாய். ஞானம், கர்மம், பக்தியோகம் என்னுமிவை எல்லாம் ஓர் உருவெடுத்தாற்போன்று கண்ணன் விளங்குகின்றான். ஸ்ரீ கிருஷ்ணனுடைய இத்தன்மையை இக்காலத்திலே சிறப்புறக் கற்க வேண்டும். பிருந்தாவனத்திலே குழலூதிக்கொண்டிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணனை இப்பொழுது தியானிக்க வேண்டியதில்லை. அதனால் மனிதருக்கு விடுதலை எய்தப் போவதில்லை. சிங்க கர்ச்சனையோடு கீதையை உபதேசிக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணன், வில்லும் அம்பும்

---

*பததி பதத்ரே விசலதி பத்ரே சங்கித பவதுபயானம்
ரசயதி சயனம் ஸசகித நயனம் பச்யதி தவபந்தானம்

பறவை பறக்கும்பொழுதும் இலை அசையும்பொழுதும் நீ வருகிறாய் என நினைக்கின்றாள்; நீ வரும் வழியைப் பார்த்த வண்ணமாக உனது சயனத்தைச் சீர்படுத்தி வைக்கின்றாள்.

ஏந்திய ராமச்சந்திரன், மஹாவீரர், காளித்தாய் இவர்களை இப்பொழுது வழிபடவேண்டும். அப்பொழுது தான் ஜனங்கள் ஊக்கத்தோடும், திடபுத்தியோடும், தொழில் செய்து வலிமை அடைவார்கள். இந்த நாட்களில் இந்த நாட்டிலே சமயத்தைப் போதிப்பவர்களுள்ளும் பேசிக்கொள்பவருள்ளும் பெரும்பாலோர் மயக்கம் நிறைந்தவர்களாய் மூளை கலங்கிய பித்துப் பிடித்தவர்களாய்க் காணப்படுகிறார்கள். இந்த விஷயத்தைப் பெருக ஆராய்ந்து இந்த முடிவுக்கு வந்தேன். ராஜச குணம் நிறைய விருத்தியடைய வேண்டும். இல்லாவிடின் உங்களுக்கு இம்மை மறுமைப் பயன் கிடைக்கப் போவதில்லை. தேசமுற்றும் தாமஸத்தினால் மூடுண்டு கிடக்கின்றது. இம்மையில் அடிமையும் மறுமையில் நரகமும் இயற்கையாக இதனால் ஏற்படும் பலன்கள்.

சிஷ். மேலை நாட்டவரிடையே ரஜோகுணம் நிறைந்திருப்பதனால் அவர்கள் படிப்படியாக சத்துவ குணத்தை அடைவார்கள் என்று தேவரீர் எதிர்பார்க்கின்றீரா?

சுவா; ஆம், நிச்சயமாக. ரஜோகுணம் மிகுந்திருப்பதனாலே அவர்கள் போக அநுபவங்களிலே மிகுந்த உச்ச நிலையை அடைந்துவிட்டார்கள். வயிற்றுப் பசியாற்றுவதற்காக அங்கு மிங்கும் அலைந்து திரிகின்ற நீங்கள், போகத்தை அடையப் போகின்றீர்களா? அல்லது அவர்கள் போகத்தை அடையப் போகின்றார்களா? உள்ளபடி நினைத்துப் பார்.

அவர்களது நாகரீக மிகுந்த சுகாநுபவங்களை நினைக்கும்பொழுது மேக தூதத்திலே, **வித்யுத் வந்தம் லலித வஸனா:** என்று தொடங்குகிற வருணனை என் மனத்துக்கு வருகிறது. உங்களுடைய மோகமோ என்றால், அழுக்கடைந்த ஓர் அறையிலே கிழிந்த பாயிலே படுத்துக் கிடப்பதும், வருஷா வருஷம் பன்றியைப்போலச் சந்ததியைப் பெருக்குவதும் தான். உணவின்றித் தவிக்கின்ற ஒரு கூட்டப் பிச்சைக்காரரையும் அடிமை

களையும் இவ்வுலகத்தில் தோற்றுவிக்கின்றீர்கள். ஆதலினாலே ரஜோகுணத்தை விருத்திசெய்து ஜனங்களை ஊக்கத்தோடு தொழில் புரியும் தன்மை யாக்குதல் வேண்டும். தொழில் செய், தொழில் செய், தொழில் செய். **நான்ய: பந்தா வித்யதே அயனாய**—மோக்ஷத்தை அடைவதற்கு, இதைவிட வேறு வழி இல்லை.

வித்யுத்வந்தம் லளிதவனிதா: ஸேந்த்ரசாபம் ஸசித்ரா:
ஸங்கீதாய ப்ரஹதமுரஜா: ஸ்நிக்த கம்பீரகோஷம்:
அந்தஸ்தோயம் மணிமய புவஸ்துங்கமப்ரம் லிஹாக்ரா:
ப்ராஸாதாஸ்த்வாம் துலயிதுமலம் யத்ரதைஸ்தைர்
விசேஷை:

"ஓ மேகமே, இந்த நகரத்தின் மாளிகைகள் உனக்கு ஒப்பிடத் தக்கன. இலக்ஷணங்களில் ஒற்றுமை இருக்கின்றது. மின்னற்கொடி உன்னிடையே தோன்றுகிறதென்றால் அழகிய ஆபரணம் அணிந்த கன்னியர்கள் அவற்றினிடையே உலவுகின்றார்கள். உன்னிடத்தே இந்திர தநு உண்டு; எழுதப்பட்ட சித்திரங்கள் அவற்றிடையே உண்டு. அதிருகின்ற இடி முழக்கம் உன்னிடத்தே உண்டு; ஒலிக்கின்ற முரசங்கள் அவற்றிடையே உண்டு. தெளிந்த நீர் உன்னிடத்தே உண்டு; தெளிந்த இரத்தினங்களினால் அவற்றின் உட்புறம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. நீ உயர இயங்குகின்றாய்; அவற்றின் மாடங்களும் ஆகாயத்தை அளாவுகின்றன." காளிதாசன் அளகாபுரியின் சுகானுபவங்களைப்பற்றி இவ்வண்ணம் வருணிக்கத் தொடங்குகிறான். முழு வருணனையும் இங்கு ஏற்புடைத்தாதலால், இதன்மேல் வருகின்ற சுலோகங்களையும் இக் குறிப்பு சாரும்.

சிஷ்: ஐய, நமது முன்னோர்கள் இப்படிப்பட்ட ரஜோகுணத்தை உடையவர்களாய் இருந்தார்களா?

சுவா: ஏன், இல்லை? அவர்கள் எத்தனையோ பல நாடுகளிலே குடியேறினார்கள் எனவும், திபேத்து, சீனா,

சுமத்திரா, தூரத்திலுள்ள ஜப்பான் முதலிய இடங்களுக்குச் சமய போதனை செய்யும் ஆசிரியர்களை அனுப்பினார்கள் எனவும் சரித்திரம் கூறுகின்றதே. ரஜோ குணத்தின் மூலமாக அன்றி முன்னேற்றத்தை அடைவதற்கு வேறு வழி உண்டென்று எண்ணுகிறாயா?

இங்ஙனம் சம்பாஷணை நடந்து கொண்டிருந்த பொழுது மாலைக் காலம் அணுகியது. அப்பொழுது மிஸ் முல்லர் என்னும் ஆங்கிலேய மாது அவ்விடத்துக்கு வந்தாள். இந்த அம்மை சுவாமிஜியைப் பெரிதும் மதிப்பவள். சுவாமிஜி சிஷ்யரை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைக்கச் சிறிது சம்பாஷித்த பின்பு மிஸ் முல்லர் மேன்மாடிக்குப் போய்விட்டாள்.

சுவா: இந்த அம்மை எவ்வளவு வீரம் பொருந்திய ஜாதியிலிருந்து வருகின்றாள் பார்த்தாயா? அவளுடைய இல்லம் எவ்வளவோ தூரத்திலிருக்கிறது. அவள் ஒரு பணக்காரனுடைய புதல்வி. அப்படி இருந்தும் ஆத்ம ஞானத்தை அடைய வேண்டும் என்ற ஒரு விருப்பத்தோடு எவ்வளவு தூரம் வந்திருக்கிறாள் பார்த்தாயா?

சிஷ்: ஆம், ஐயா, ஆனாலும் தேவரீர் செய்கின்ற முயற்சிகள் இதை விடவும் மிகச் சிறந்தன. எத்தனை மேல்நாட்டு துரைமக்களும் துரைப் பெண்களும் தேவரீருக்குத் தொண்டு புரியும் விருப்பத்தோடு வந்து நிற்கின்றார்கள். இந்தக் காலத்துக்கு இது மிகவும் அதிசயமே.

சுவா: (தம்முடலைச் சுட்டிக்காட்டி) இந்த உடலம் நீடித்திருக்குமாயின் இன்னும் எத்தனையோ பல விஷயங்களைக் காண்பாய். நன் மனமும் ஊக்கமும் உடைய இளைஞர்கள் சிலர் அகப்படுவார்களாயின் தேச முற்றையும் புரட்டி விடுவேன். அத்தகைய இளைஞர் சிலர் சென்னையிலிருக்கிறார்கள் என்றால் எனக்கு வங்காளத்தில் கூடிய நம்பிக்கை யுண்டு. இத்தகைய தெளிந்த புத்தியுடையவர்கள் மற்ற நாடுகளில்

கிடைப்பதருமை. என்றாலும் தசைக் கட்டுகளிலே அவர்களுக்குப் பலமில்லை. மூளையும் தசைக் கட்டும் ஒன்றாக விருத்தி அடைய வேண்டும். இரும்பு போன்ற நரம்புகளும் கூரிய மூளையும் இருக்குமாயின் உலகம் முற்றும் உன்னடி பணிந்து நிற்கும்.

இராப்போசனம் ஆயத்தமாகி விட்டது என்னும் செய்தி சுவாமிஜிக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் சிஷ்யரை நோக்கி, "எனது உணவை வந்து பார்" என்றார். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது சிஷ்யரை நோக்கி "எண்ணெய் கொழுப்புப் பதார்த்தங்களை அதிகமாக உண்ணுவது நல்லதல்ல, ரொட்டி, லூச்சி யிலும் பார்க்க நல்லது. லூச்சி நோயாளருடைய உணவு. மீன் இறைச்சி, நல்ல தாவர வஸ்துக்கள் என்னும் இவற்றை உண்ணலாம். இனிப்புப் பண் டங்களைக் குறைவாகவே உண்ண வேண்டும்" என்றார். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர் சிஷ் யனை நோக்கி "நான் எத்தனை ரொட்டி சாப்பிட்டேன்? இன்னும் சாப்பிட வேண்டுமா?" என வினவினார். எத் தனை சாப்பிட்டதென்ற ஞாபகம் அவருக்கு இல்லை. பசி தாகம் இருப்பதாகவும் தோற்றவில்லை. பேசிக் கொண்டிருக்கும் பொழுது தேக புத்தி குறைந்து போயிற்று.

இன்னும் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு உணவை முடித்தார். சிஷ்யரும் விடை பெற்றுக்கொண்டு கல்கத்தாவுக்குத் திரும்பினார். வாடகைக்கு வண்டி கிடையாதபடியால் அவர் நடக்கவேண்டி யிருந்தது. நடந்து கொண்டு போகும் பொழுது மற்றை நாள் எவ் வளவு விரைவாக சுவாமிஜியை வந்து பார்க்கலாம் என் னும் எண்ணமே சிஷ்யருடைய சிந்தனையில் பதிந்து கிடந்தது.

(3)

[இடம்: காசிப்பூரில் காலஞ் சென்ற கோபால லால சீலரின் பூஞ் சோலை வீடு. காலம்: 1897 ஆண்டு.]

முதல் முதல் மேல் நாட்டிலிருந்து திரும்பிய பின்பு சுவாமிஜி சில காலம் காசிப்பூரிலே காலம் சென்று போன கோபால லால சீலருடைய வீட்டிலே வசித்தார். கல்கத்தாவில் வடபஜாரில் வசிக்கும் பண்டிதர்கள் சிலர் சுவாமிஜியோடு வாதம் புரியும் கருத்துடையவர்களாய் ஒரு நாள் சோலைக்கு வந்தார்கள். அத்தருணத்தில் சிஷ்யரும் சமுகமாயிருந்தார்.

பண்டிதர்கள் எல்லோரும் நன்றாகச் சம்ஸ்கிருதம் பேசக்கூடியவர்களாயிருந்தார்கள். தரிசனைக்கு வந்தோர் பலர் சூழவிருக்கும் சுவாமிஜியைக் கண்டு வந்தனை கூறியபின் பண்டிதர்கள் சம்ஸ்கிருதத்திலே பேச ஆரம்பித்தார்கள். சுவாமிஜியும் இனிமையான சம்ஸ்கிருதத்திலே மறுமொழி கூறினார். பண்டிதர்கள் அன்று பேசிய விஷயம் இன்னது என சிஷ்யருக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை. பண்டிதர்கள் அனைவரும் ஒரே ஓசையாக, தத்துவ சாஸ்திரங்களிலே மிக நுணுகிய வினாக்களைச் சுவாமிஜியிடத்தில் சம்ஸ்கிருதத்திலே வினாவியதும், அவர் இவ்வினாக்களைப்பற்றி நன்கு ஆராய்ந்த முடிவுகளை உறுதியோடும் அமைதியாகவும் சொல்லிக் கொண்டிருந்ததும் சிஷ்யருடைய ஞாபகத்துக்கு வருகின்றன.

இந்த வாதத்திலே சுவாமிஜி முடிபுகளை நிலை நிறுத்துவதாகிய சித்தாந்த பக்ஷத்தையும், பண்டிதர்கள் வினாக்களை வினவுவதாகிய பூர்வ பக்ஷத்தையும் சார்ந்தவர்களாயிருந்தார்கள். வாதம் நடந்து கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜி ஓரிடத்தில் 'சுவஸ்தி' என்பதற்குப் பதிலாக 'அஸ்தி' என்னும் சொல்லை உபயோகித்தார். இதைக்

கேட்ட பண்டிதர்கள் நகைத்தார்கள். சுவாமிஜி பணிவோடு **பண்டிதானும் தாஸோஹம் க்ஷந்தவ்ய மேதத்ஸ்கலனம்**—நான் பண்டிதர்களுக்குத் தாசன், இந்தப் பிழையைத் தயவு செய்து பொறுக்க வேண்டும் என்ருர். சுவாமிஜியினுடைய பணிவினைக் கண்டு பண்டிதர்கள் உவகையோடு வியப்புற்ருர்கள். நெடு நேரம் வாதித்த பின்பு பண்டிதர்கள், சித்தாந்த பக்ஷத்துக்குக் காட்டிய முடிபுகள் பொருத்தமுடையன எனக்கூறி சுவாமிஜியை நமஸ்கரித்து வெளிச்சென்ருர்கள்.

பண்டிதர்கள் போயின பின்னர் பூர்வ பக்ஷத்தைச் சாதித்தவர்களாகிய அவர்கள் பூர்வ மீமாம்சா சாஸ்திரங்களிலே நன்கு கற்றுத் தேறியவர்கள் என்பதை சிஷ்யர் சுவாமிஜியினிடமிருந்து அறிந்து கொண்டார். சுவாமிஜி வேதாந்தமாகிய உத்தர மீமாம்சா சாஸ்திரத்தின் முடிபுகளைப் பேசி ஞான மார்க்கமே சிறந்தது என அத்தாக்ஷிப்படுத்திஞர். பண்டிதர்கள் அவர் காட்டிய முடிபுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

பண்டிதர்கள் ஓர் இலக்கணப் பிழையைப் பிடித்து நகைத்ததைக் குறித்துச் சொல்லும் பொழுது அது தாம் பல வருஷமாக சம்ஸ்கிருத பாஷையைப் பேசாத காரணத்திஞல் ஆகியது எனச் சுவாமிஜி கூறிஞர். இதற்காக அவர் பண்டிதர்களை ஒரு சிறிதேனும் குறை கூறவில்லை. ஆயினும் எதிர்க் கக்ஷியார், வாதிக்கின்ற விஷயத்திலிருந்து விலகிப் பாஷையளவிலே ஒரு குற்றத்தைக் காட்ட முயல்வதை, மேல் நாட்டில் உள்ளவர்கள் பெரிய ஒழுக்கக் குறைவாகக் கொள்ளுவார்கள் என்பதை எடுத்துக் காட்டிஞர். "நாகரிகம் படைத்த சபையிலே கருத்தை நோக்குவார்களே யன்றிப் பாஷையழுவை நோக்க மாட்டார்கள். உங்களுடைய தேசத்திலே, உள்ளேயிருக்கும் நென் மணியைக் கருதாது உமியைக் குறித்துச் சண்டை போடுவது வழக்கம்" என்று சொல்லி சுவாமிஜி சிஷ்யரோடு சம்ஸ்கிருதத்திலே பேச ஆரம்பித்தார். சிஷ்யரும் ஓரளவான சம்ஸ்கிருதத்திலே

மறுமொழி கூறினார். ஆயினும் அவரைப் புகழ்ந்து கூறினார். அன்று முதல் சுவாமிஜியினுடைய கேள்விப் படி சிஷ்யர் சுவாமிஜியோடு இடையிடையே சம்ஸ்கிருதத்தில் பேசுவார்.

நாகரீகமென்றால் என்ன, என்னும் வினாவுக்கு மறுமொழியாக அன்றைய தினம் சுவாமிஜி பின்வருமாறு கூறினார்: "ஆத்மிக ஞானத்திலே ஒரு மக்கட் கூட்டத்தினர் அல்லது ஒரு தேசத்தார் எவ்வளவு முற்பட்டிருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் நாகரீகம் உள்ளவர்களாகக் கருதப்படுவார். பலதிறப்பட்ட இயந்திரங்களையும் அவை போன்ற பிறவற்றையும் ஆக்கி, அதனால் லௌகீக வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைப் பெருக்கிக்கொண்ட காரணத்தினாலே எந்தத் தேசத்தாரையும் நாகரீகம் படைத்தவர்கள் என்று சொல்லக்கூடாது. தற்காலத்து மேலைத் தேசத்து நாகரீகமானது மக்களுடைய துன்பங்களையும் குறைவுகளையும் நாளுக்கு நாள் பெருக்கிக் கொண்டு போகிறது. பழைய இந்திய நாகரீகமோ வென்றால் மக்களுக்கு ஆத்மீக முன்னேற்றத்திற்கு உரிய வழிகளைக் காட்டி, அவர்களுக்கு ஏற்பட்ட லௌகீகக் குறைவுகளைச் சிறுகச் செய்தோ, முற்றிலும் நீக்கியோ, அவர்களது வாழ்க்கையைச் செம்மைப் படுத்தியது. இக்காலத்திலே இவ்விருவகை நாகரீகத்தையும் ஒன்று படுத்துவதற்காகவே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவவதாரஞ் செய்தார். இக்காலத்திலே ஜனங்கள் கருமஞ் செய்வதில் மிகுதியும் வல்லவர்களாக இருப்பதோடு, ஆழ்ந்த ஆத்மீக ஞானத்தையும் அடைய வேண்டியவர்கள். இந்திய நாகரீகமானது மேலைத்தேச நாகரீகத்தோடு பொருந்துவதனாலே உலகத்திலே ஒரு புது யுகம் தோற்றுமென்பதை சுவாமிஜி எங்களுக்குத் தெளிவுபெற விளக்கினார். அந்த விஷயத்தைப் பற்றிப் பேசும்பொழுது ஓரிடத்திலே பின்வருமாறு கூறுவாராயினர்: "நல்லது, மற்றொரு விஷயம். ஒரு மனிதன் சமய வாழ்க்கையிலே உயர்

வடையும் பொழுது அவனுடைய புற ஒழுக்கங்கள் மிகுதியும் அடங்கியிருக்க வேண்டுமென்றும், பிற விஷயங்களைப்பற்றி அவனுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வருதல் கூடாதென்றும், மேலைத்தேசத்த மக்கள் நினைக்கிறார்கள். மேலைத் தேசத்திலுள்ள குருக்கள்மார் என்னுடைய சமயப் பிரசங்கங்களிலே தாங்கள் கண்ட அகன்ற கருத்துக்களை நோக்கி, ஆச்சரியப் படுவார்கள். பிரசங்க முடிவிலே நண்பர்களோடு நகை பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு மலைவுறுவார்கள். சிலவேளை என்னை நேராக நோக்கி, 'சுவாமி, நீர் ஒரு குரு ; சாதாரண மனிதரைப்போலப் பரிகாச வார்த்தையாடுவதும் சிரிப்பதும் சரியல்ல. இத்தகைய விளையாட்டு உம்மிடத்திலே பொருத்தமாகக் காணப்படவில்லை' எனக் கூறுவார்கள். அதற்கு நான் மறுமொழியாக 'நாங்கள் ஆனந்தத்தின் புதல்வர், எதற்காக நகையில்லாத சோர்ந்த முகத்தோடு இருக்கவேண்டும்?' என்பேன். எனது வார்த்தைகளின் பொருளை அவர்கள் சரியாக உணர்ந்து கொண்டார்களோ என ஐயுறுகின்றேன்.''

அன்று சுவாமிஜி பாவ சமாதியைப் பற்றியும் நிர்விகல்ப சமாதியைப் பற்றியும் எத்தனையோ விஷயங்களைப் பேசினார். இயன்றவரை அவற்றை இதன்கீழ் தருகின்றேன் :—

ஒரு மனிதன் ஹநுமானைப்போன்ற கடவுட் பக்தியை விருத்தி செய்கிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். சாதகனுடைய மனநிலை சாதனையிலே அதிகரித்துக் கொண்டு வரும்பொழுது, அவனுடைய இருக்கையும் நடவடிக்கையும், சரீர உருவந்தானும் தியானிக்கப்படும் பொருளின் உருவாக மாறும். வேறு வேறு இனங்கள் பரிணமப்படுகின்ற முறையும் இதுவே ஆகும். சாதகன் எடுத்துக்கொண்ட உள்ளத் துணர்ச்சிக்கு ஏற்ப அவனது இஷ்டத்தின் வடிவமாக அவன் படிப்படியாக உருவமாறுகின்றான். அத்தகைய அன்பின் முடிவான

நிலையையே பாவ சமாதி என்று சொல்வது. ஞான மார்க்கத்தில் நிற்கும் சாதகன், "நேதி, நேதி" என்னும் முறையினாலே, "நான் இந்த சரீரமல்ல, மனமல்ல, புத்தியல்ல" என்று இவ்வாறு அப்யசித்து நிர்விகல்ப சமாதியை அடைகின்றான். அப்பொழுது அவனது அறிவு பூரணத்திலே நிலைபெறுகிறது. பக்தியோடு கூடிய இந்த மார்க்கங்களில் யாதாயினும் ஒன்றில் முற்றான நிறைவை அடைவதற்கு எத்தனையோ பிறவி எடுத்து முயல வேண்டும். ஞான பூமிக்கு அரசராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரோ வென்றால் பதினெட்டு வகையாகிய பக்தி முறைகளிலே பூரணத்துவத்தை அடைந்திருந்தார். சமய சாதனையாகிய தெய்வ லீலையிலே காலங்கழிக்காது இருந்தால் தம்முடைய சரீரம் நிலை பெற்றிருந்திராது, என அவர் சொல்வது வழக்கம்.

அன்று சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, "ஐயா, மேல் நாட்டிலிருக்கும்பொழுது எவ்வகையாகிய உணவு உட்கொண்டீர்கள்?" என்றார்.

சுவா: அங்குள்ளோர் உண்ணுகிற மாதிரி உணவு தான். சந்நியாசிகளாகிய எங்களுக்கு ஒரு வகையிலும் ஜாதி அழிந்துபோக மாட்டாது.

இந்த நாட்டிலே மேல் வருங்காலத்திலே என்ன வகையாகச் சுவாமிஜியினுடைய வேலை நடைபெறப் போகிறது, என்னும் வினாவுக்கு மறுமொழியாகச் சுவாமிஜி பின்வருமாறு கூறுவாராயினார்: "சென்னையிலும் கல்கத்தாவிலும் இரண்டு நிலையங்களை ஆரம்பிப்போம். எல்லாத் துறைகளிலும் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு புது மாதிரியாகிய சந்நியாசிகளை விருத்தியாக்குவோம். உள்ளதை அழிகின்ற முறையினாலே மக்களோ தேசமோ முன்னேற்றம் அடைவதில்லை. எப்பொழுதும் ஒன்று சேர்த்துக் கட்டுகின்ற முறையிலே தான் முன்னேற்றம் உண்டாகின்றது. பழைய வழக்கங்களுக்கு ஒரு புத்துரு

வங் கொடுக்கவேண்டும். பண்டைக் காலத்திலே இந்தியாவில் உற்பவித்த சமயப் பிரசாரகர் எல்லோரும் அம்முறையாகவே முயன்றார்கள். பகவான் புத்தருடைய சமயம் மாத்திரம் அழித்தல் முறையைக் கைக்கொண்டது. ஆதலினாலே தான் அந்தச் சமயம் இந்தியாவிலிருந்து வெளியே அகற்றப்பட்டது."

இங்ஙனம் பேசிக்கொண்டிருந்தபொழுது சுவாமிஜீ பின் வருவனவற்றையும் குறிப்பிட்டுக் கூறியதாகச் சிஷ்யருக்கு நினைவிருக்கிறது :—" பிரம்மம் ஒரு மனிதனிடத்திலே விளக்க முறுமாயின் அந்த ஒளியினாலே வழியைக் கண்டறிந்து ஆயிரம் மனிதர் முன்னேற்றம் அடைவார்கள். பிரம்ம ஞானம் அடைந்தவர்களே மக்களுக்கு ஞானாசிரியராகும் தகைமை வாய்ந்தவர்கள். மக்களுடைய அறிவும் சாஸ்திரங்களும் இதற்குச் சான்று பகருகின்றன. தமது சொந்த நலத்தைக் கருதிய பிராம்மணர்கள் இந்த நாட்டிலே குலகுரு முறையை ஏற்படுத்தினார்கள் ; இது வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் விரோதமானது. ஆனபடியாற்றான் மனிதர் சமய சாதனை செய்தும் பிரம்ம ஞானத்தை அடைந்து தம்மைப் பூரணப்படுத்திக் கொள்ளுவதற்கு இயலாதவர்களா யிருக்கிறார்கள். சமயத்திலே ஏற்பட்ட இந்தக் குறைவுகளை நீக்கும் பொருட்டாகவே இக்காலத்திலே, பூவுலகத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணராக பகவான் திருவவதாரம் செய்தருளினார். அவர் போதித்த சமரசக் கொள்கைகள் உலக முற்றும் பரவுமாயின் அதனால் மக்கட் கூட்டத்தினருக்குப் பெரும்பயன் உண்டாகும். இவ்வளவு அற்புதமாக சமய சமரசத்தை நிலைநாட்டிய ஞானாசிரியரை இந்தியா தேசமானது கடந்த பல நூற்றாண்டுகளுக்குத் தரவில்லை."

சுவாமிஜீயினுடைய சகோதர சந்நியாசி ஒருவர் அவரை நோக்கி, " மேல் நாட்டிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரை அவதார புருஷரெனப் பிரசித்தமாகப் பிரசாரம் செய்யாதது ஏன் ?" என வினவினார்.

சுவா : அங்குள்ளார் தங்களது விஞ்ஞான சாஸ்திரத்தைப் பற்றியும் தத்துவ சாஸ்திரத்தைப் பற்றியும், பெருகக்கூறிப் பறையடிக்கின்றார்கள். நியாயத்தினாலும் சாஸ்திரீகமான தர்க்கத்தினாலும், தத்துவ ஆராய்ச்சியினாலும், அவர்களது அறிவுப் பெருமையை முதலிலே தகர்த்து எறிந்தாலன்றி, அங்கு ஒன்றினையும் கட்ட முடியாது. லௌகிக அறிவினைக் கொண்டு கூடியவரை ஆராய்ந்தும் தமக்கொரு நிலைக்களம் காணாதவராய் உண்மை உணரவேண்டுமென்றும் ஆவலோடு என்னிடம் தனித்து வருவோருக்கு மாத்திரம் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி நான் சொல்லுவேன். அஃதன்றித் தெய்வ அவதாரங்களைப் பற்றி நான் உடனே பேசத்தொடங்கினால் "நீர் சொல்வதில் ஒன்றும் புதியது இல்லை ; எங்களுடைய இயேசு கிறிஸ்துவும் அப்படிப்பட்டவர் தான்" என்று விடுவார்கள்.

இவ்வண்ணம் மிகுந்த உவகையோடு மூன்று நான்கு மணிநேரம் கழிந்த பிறகு சிஷ்யரும் மற்றவர்களும் விடை பெற்றுக்கொண்டு கல்கத்தாவுக்குத் திரும்பினார்கள்.

(4)

[இடம் : தக்ஷிணேஸ்வரத்திலுள்ள காளி கோயிலும், ஆலம் பஜார் மடமும். காலம்: 1897-ம் ஆண்டு, மார்ச்சு மாதம்.]

சுவாமிஜி முதல் முறை இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்த பொழுது இராமகிருஷ்ண மடம் ஆலம்பஜாரில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இவ்வருடம் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிறந்த தினக் கொண்டாட்டம் தக்ஷிணேஸ்வரத்திலே ராணீ ராஷ்மணி அமைத்த காளி கோயிலிலே நடைபெற்றது. சுவாமிஜியும் சில சகோதர சந்நியாசிகளும் ஆலம்பஜார் மடத்திலிருந்து புறப்பட்டு அங்கு காலை 9, 10 மணியளவில் வந்து சேர்ந்தார்கள். சுவாமிஜி பாதரக்ஷை அணியவில்லை ; தலையிலே மஞ்சள்

தலைப்பாகை அணிந்திருந்தார். அவரைத் தரிசிக்கவும் அவர் மொழிகளைக் கேட்கவும் கூட்டமான ஜனங்கள் காத்திருந்தனர். காளித் தாயினுடைய கோயிலின் முன்பு போய் சுவாமிஜி உலகமாதாவின் சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். அவர் வழியாக ஆயிரக்கணக்கான மக்கள் தாழ்ந்து வழி பட்டார்கள். ராதாகாந்தருடைய சந்நிதியிலும் நமஸ்காரம் செய்தபின்பு சுவாமிஜி ஸ்ரீ ராமகிருஷ்ணர் வசித்த அறைக்கு வந்தார். அந்த அறையிலே மூச்சுவிட இடமில்லாதபடி ஜனங்கள் நெருங்கியிருந்தார்கள். சுவாமிஜியோடு இந்தியாவுக்கு வந்த இரண்டு ஐரோப்பிய பெண்களும் விழாக் கொண்டாட்டத்துக்கு வந்திருந்தார்கள். சுவாமிஜி அவர்களை அழைத்துக்கொண்டு பரிசுத்தம் பொருந்திய பஞ்சவடியையும், வில்வ விருட்சத்தையும் காட்டுவதற்குச் சென்றார். சிஷ்யர் சுவாமிஜியோடு நெருங்கிய அறிமுகம் இல்லாதவராயிருந்தும், அவர்பின் சென்று விழாக் கொண்டாட்டத்தைப்பற்றிச் சம்ஸ்கிருதத்திலே தாமெழுதிய ஒரு கவிதையைக் கரத்திற் கொடுத்தார் பஞ்ச வடிக்குப் போகும் வழியில் சுவாமிஜி அதைப் படித்தார். பின்பு வழியிலே ஒரு முறை திரும்பிச் சிஷ்யரைப் பார்த்து, "ஆம்; அது நன்றாக இருக்கிறது; அதைப் போன்று இன்னும் சிலவற்றை எழுதுவாயாக" என்றார்.

பஞ்சவடியில் ஒரு பக்கத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கிருகஸ்த சிஷ்யர்கள் சிலர் குழுமியிருந்தார்கள். அவர்களுக்குள்ளே பாபு கிரீஷ் சந்திரகோஷரும் இருந்தார். ஒரு கூட்டத்தினர் பின்னாக வர, முன்வந்த சுவாமிஜீ, கிரீஷ் பாபுவைக் கண்டு, "ஓகோ! ஸ்ரீமான் கோஷர் இருக்கின்றார்" எனச் சொல்லி வந்தனை கூறினார். கிரீஷ் பாபுவும் கைகளைக் கூப்பி நமஸ்கரித்தார். சுவாமிஜி, கிரீஷ் பாபுவுக்குப் பழைய நாட்களை நினைப்பூட்டி, "கிரீஷரே! அந்த நாட்களுக்கும் இந்நாட்களுக்கும் எவ்வளவு வேறுபாடு; நினைத்துப் பாரும்" என்

ஞர். கிரீஷ் பாபுவும், "ஆம், உண்மையே! ஆயினும் இன்னும் அதிகம் காணவேண்டுமென்று மனம் விரும்புகின்றது" என்ருர்.

சிறிது நேரம் சம்பாஷித்த பின்பு, பஞ்சவடிக்குப் பக்கத்தில் இருக்கும் வில்வமரத்தண்டை சுவாமிஜி நடந்தார். அங்குக் கூடியிருந்த பெருந்திரளான ஜனங்கள் சுவாமிஜியினுடைய திருவாயிலிருந்து ஒரு பிரசங்கத்தைக் கேட்க ஆவல் கொண்டு நின்றனர். ஜனங்களினுடைய சத்தம் அதிகமாக இருந்தபடியால்,சுவாமிஜி பிரசங்கம் பண்ண உத்தேசித்ததை நிறுத்திவிட்டு, இரண்டு ஐரோப்பியப் பெண்களையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சமயசாதனைகளோடு தொடர்புள்ள இடங்களைக் காட்டினூர். பகவானுடைய பக்தர்கள் சிலரை அவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

மூன்று மணிக்குப் பின்பு சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "இப்பொழுது மடத்துக்குப் போகவேண்டும்; தயை செய்து ஒரு வண்டி கொண்டுவா" என்ருர். சிஷ்யரும் அப்படியே செய்தார். சுவாமிஜி ஒரு புறத்தில் இருந்துகொண்டு, சிஷ்யரையும் சுவாமி நிரஞ்சனானந்தரையும் மறுபுறத்திலே இருக்கச் செய்ய, வண்டியும் ஆலம் பஜார் மடத்தை நோக்கிச் சென்றது. வழியிலே சுவாமிஜி சிஷ்யரை நோக்கிப் பின்வருமாறு கூறுவாராயினர்: "வெறுமனே எண்ணங்களை மாத்திரம் வாயாற் பேசிக்கொண்டு உயிர்வாழ்தல் கூடாது. இந்த விழாக் கொண்டாட்டமும் இவை போன்றனவும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன; அப்பொழுது தான் இந்த எண்ணங்கள் பொதுஜனங்களிடையே சிறிது சிறிதாகப் பரவுதல் கூடும். இவற்றிலே குறையும் உண்டு. ஜனங்கள் இவற்றின் உட்கருத்தை மறந்து புறக்கிரியைகளிலே அதிகமாக ஈடுபட்டு விழாக் கொண்டாட்டம் முடிந்ததும் தங்களுடைய பழைய வாழ்க்கையில் அமிழ்ந்துவிடுகிருர்கள். ஆதலினுல்

இவை யெல்லாம் உண்மையான ஆத்மீக வாழ்க்கையை யும், ஆத்மஞானத்தையும் மறைக்கின்ற ஒருவகையான திரைகள் என்று சொல்லுவது உண்மைதான்.

"ஆனால், 'சமயம்', 'ஆத்மா' என்னும் இவற்றை ஆராய்ந்து அறியமாட்டாதவர்கள் இத்தகைய திரு விழாக்களினாலும், கிரியைகளினாலும், படிப்படியாகச் சமய உண்மைகளை உணர முயலுகின்றார்கள். இன்று நடந்த விழாக் கொண்டாட்டத்தை எடுத்துக் கொள் வோம். சமூகமாயிருந்தோர் எல்லோரும் ஒரு முறை யாவது ஸ்ரீ ராமகிருஷ்ணரை நினைத்திருப்பார்கள். இத்தகைய பெருங்கூட்டம் எவருடைய பெயரினால் கூட்டப்பட்ட தென்பதும், அவருடைய பெயரைக் குறித்து இத்தனை ஜனங்கள் ஏன் கூடினார்களென்பதும் போன்ற எண்ணங்கள் அவர்களுடைய மனத்திலே எழுவன. அப்படித் தானும் நினையாதவர்களும் வரு டம் ஒருமுறை வந்து பக்தி நிறைந்த ஆடல்பாடல்களைப் பார்த்துப் பிரசாதம் உட்கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய தொண்டர்களையும் காணுவார்கள். இதனால் அவர்களுக்கு நன்மை விளையுமேயன்றித் தீமை விளையாது."

சிஷ்: ஆனால் ஐய! இந்த விழாக்களையும் கொண் டாட்டங்களையும் மாத்திரமே இன்றியமையாததெனை நினைப்பவர்கள் முன்னேற்றம் அடைதல் கூடுமா? நமது நாட்டில் நடந்து வருகின்ற சஷ்டி மங்கள சண்டி முதலிய வழிபாட்டு முறைகளை மாத்திரமே மக்கள் பின் பற்றுவார்கள். ஜீவியகாலம் வரையும் இத்தகைய கருமங்களையே செய்துகொண்டு வருகிற மக்கள் பலரைக் காண்கிறோம். அவர்களுள் ஒருவரேனும் இத்தகைய கிரியைகளின் வழியாகப் பிரம்மஞானத்தை அடைந்த தைக் கானோம்?

சுவா: ஏன் அப்படிச் சொல்லுகின்றாய்? இந்த இந்தியா தேசத்திலே ஞான தீரர்கள் எத்தனையோ பேர் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் உயர்வை அடைவதற்கு

இவை கருவியாக இருக்கவில்லையா? இந்த ஆசார அனுஷ்டானங்களை அப்பியாசித்து ஆத்ம ஞானத்தை அடைந்த பின்னர் இவற்றை அவர்கள் அவ்வளவு பொருட்படுத்தவில்லை. என்றாலும் ஜன சங்கத்தின் நன்மைக்காக அவதார புருஷர் போன்ற பெரியோர்களும் இந்தக் கருமங்களைக் கைக்கொண்டு நடக்கிறார்கள்.

சிஷ்: ஆம், அவர்கள் இக்கிரியைகளைத் தோற்ற மாத்திரையிலே செய்தல் கூடும். ஆத்ம ஞானத்தை அடைந்தவனுக்கு இந்த உலகந்தானே இந்திர ஜாலத்தைப்போலப் பொய்யாகி விடுமாயின், இந்த வெளிக் கிரியைகளை உண்மை என்று அவன் கொள்ளுவது எங்ஙனமாகும்?

சுவா: ஏன் அப்படி இருக்கக் கூடாது? உண்மையைப்பற்றிய எண்ணமும் காலதேச வர்த்தமானங்களால் வேறுபட்டதல்லவா? எல்லாக் கிரியைகளும் பயனைத் தருவன. ஆயினும் அவற்றால் எய்துகின்ற பயன் மனிதனுடைய தன்மைக்கேற்ப வேறுபடும். ஒரு தாயானவள் பொலாவோ கலியா ஆகிய உணவுகளை ஒரு குழந்தைக்கும், ஆயத்தப்படுத்தி வைக்கிறாள் என ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.

சிஷ்யர் தெளிவாக அறிந்துகொண்ட படியினால் மௌனமாயிருந்தார். வண்டியும் ஆலம்பஜார் மடத்தை வந்து அடைந்தது. சுவாமிஜியும் சிஷ்யரும் திருமடத்துக்குட் புகுந்தார்கள். தாகமா யிருந்தபடியால் சுவாமிஜி சிறிது தண்ணீர் குடித்தார். மேலங்கியைக் கழற்றி விட்டு நிலத்திலே விரித்திருந்த ஒரு கம்பளத்தின்மேலே சாய்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். அவரது பக்கத்தில் அமர்ந்திருந்த சுவாமி நிரஞ்சனானந்தர், "முந்திய விழாக் கொண்டாட்டங்கள் ஒன்றிலும் இவ்வளவு பெரிய ஜனக்கூட்டம் வந்ததில்லை. கல்கத்தா முழுவதும் திரண்டு வந்ததுபோன்று இருந்தது" என்றார்.

சுவா : ஆம், அது இயல்புதான். எதிர்காலத்தில் இன்னும் நூதனமான விஷயங்கள் சம்பவிக்கும்.

சிஷ் : ஐய, எல்லாச் சமய வகுப்பாருள்ளும் ஏதாவது விழாக் கொண்டாட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த விஷயத்தில் ஒரு வகுப்புக்கும் மற்றொன்றினுக்கும் இடையில் சமாதானம் இருப்பதில்லை. எவ்வளவோ அகன்ற கொள்கைகளையுடைய முகம்மதியர்களிடையேயும் வேறுபாடு நிகழ்வதை நான் டாக்காவிலே கண்டேன். ஷியா, சுன்னி என்னும் இரு வகுப்பினரும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டனர்.

சுவா : வகுப்பு வேறுபாடு எங்கும் உண்டு. அங்கெல்லாம் இத்தகைய நிகழ்ச்சிகள் இயல்பாக நடக்கின்றன. நமக்குள்ளே பெரிதாகக் கைக்கொள்ளப் படுகிற கொள்கை எதுவென்று அறிவாயா? வகுப்புத் துவேஷமின்மையே அது. நமது பகவான் அதற்காகவே திருவவதாரஞ் செய்தார். எல்லா வடிவங்களையும் ஏற்றுக் கொண்டாராயினும் பிரம்மஞான நிலையிலே இருந்து பார்க்கும்பொழுது அவை எல்லாம் மாய வடிவங்களே என அவர் கூறுவார்.

சிஷ் . ஐய, தாங்கள் சொல்லுவது எனக்குத் தெளிவுபடவில்லை இத்தகைய விழாக்களைக் கொண்டாடுவதனுல், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருநாமத்தைச் சார்ந்த மற்றும் ஒரு சமயத்தை யாம் ஆரம்பிப்பதுபோல எனக்குச் சிலவேளை தோன்றுகிறது. ஆனுல், ஸ்ரீ ராமகிருஷ்ணர் வகுப்பு வேறுபாடு இல்லாது இருந்தார் என நாகமஹாசயருடைய வாக்கிலிருந்து நான் கேள்விப் பட்டதுண்டு. சாக்தம், வைஷ்ணவம், பிரம்மசமாஜம், முகம்மதியமதம், கிறிஸ்துமதம் ஆகிய அனைத்தினையும் அவர் மிகவும் மதித்து நடந்தார்.

சுவா : இந்தச் சமயபேதங்களை எல்லாம் நாங்கள் மதித்து நடக்கவில்லை என்று நீ எப்படி அறிந்துகொண்டாய்?

இங்ஙனம் கூறி சுவாமிஜி நகையோடு சுவாமி நிரஞ்சனானந்தரை நோக்கி, "கேட்டாயா இந்த *வங்காளி சொல்லுவதை" என்றார்.

சிஷ்: ஐய, தேவரீருடைய கருத்தை எனக்குத் தெரியச் செய்யவேண்டும்.

சுவா: நீ என்னுடைய பிரசங்கங்களை வாசித்திருக்கிறாய் என்றெண்ணுகிறேன். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருநாமத்தை அடிப்படையாகக் கொண்டு நான் என்ன பேசியிருக்கிறேன்? உபநிடதங்களிலுள்ள சுத்தமான சமய உண்மைகளையே நான் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பிரசங்கித்தேன்.

சிஷ்: அது உண்மையே. ஆனால் தேவரீரோடு நெருங்கிப் பழகியதனால் தேவரீர் உடல் உயிர் அனைத்தினையும் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டதாகக் கண்டுகொண்டேன். ஆண்டவனே ஸ்ரீ ராமகிருஷ்ணராக வந்தாரென்பதைத் தேவரீர் தெளிவாக அறிந்திருந்தால் அதனை ஜனங்களுக்கு ஏன் தெரியப்படுத்தக் கூடாது?

சுவா: நல்லது, நான் அறிந்ததை நான் பிரசங்கிக்கிறேன். வேதாந்தத்திலுள்ள அத்வைத உண்மைகள் மேலானவை என்பதாக அறிந்திருந்தால் நீ ஏன் அவற்றை எல்லா மனிதருக்கும் பிரசங்கம் செய்யாமல் இருக்கிறாய்?

சிஷ்: நான் மற்றவர்களுக்குப் பிரசங்கம் செய்யுமுன் என்னுடைய அனுபவத்திலே உண்மையைச் சாக்ஷாத்காரமாக உணரவேண்டும். நான் படித்த அத்வைதம் புத்தகங்கள் மட்டில் உள்ளதுதான்.

சுவா: நல்லது; முதலிலே சாக்ஷாத்காரமாக அறிந்து, பின்பு பிரசங்கம் செய் மற்ற மனிதர் தமது வாழ்க்கைக்கு ஆதாரமாக எதன்மேல் நம்பிக்கை வைத்

* கிழக்கு வங்காளத்திலிருப்போரைப் பரிகாசமாக இப்படி அழைப்பது வழக்கம். இந்தச் சிஷ்யரைச் சார்ந்தவரையில் இம்மொழி இயல்பாகவே அன்புமொழியாக வழங்கப்பட்டது

திருக்கிறார்களோ அதற்கு எதிராக யாதும் சொல்லுவதற்கு உனக்கு உரிமையில்லை. அத்தகைய நம்பிக்கைகள் சிலவற்றைக் கடைப்பிடித்துத்தான் நீயும் வாழுகின்றாய்.

சிஷ்: உண்மையே, நானும் சிலவற்றை நம்பித்தான் வாழுகின்றேன். ஆனால் எனக்குச் சாஸ்திரங்கள் பிரமாணமாயிருக்கின்றன. சாஸ்திரங்களுக்கு மாறானவற்றிலே நான் நம்பிக்கை வைப்பதில்லை

சுவா: சாஸ்திரங்கள் என்றால் என்னவென்று எண்ணுகிறாய்? உபநிடதங்கள் பிரமாண நூல்களாயிருந்தால் விவிலிய நூலும் சென்ட் அவெஸ்தா என்னும் நூலும் (கிறிஸ்தவ பார்சிய மத சாஸ்திரங்கள்) ஏன் பிரமாண நூலாக இருக்கக்கூடாது?

சிஷ்: இந்தச் சாஸ்திரங்களையும் பிரமாண நூலென்று கொண்டாலும் அவை வேதத்தைப் போலப் பழைமை வாய்ந்தவையல்ல. மேலும் வேதத்தைப்போல ஆத்மனைப் பற்றிய முடிபுகள் வேறெங்கும் அவ்வளவு ஸ்திரமாக நிலைநாட்டப்படவில்லை.

சுவா: உனது நியாயத்தை ஏற்றுக்கொண்டாலும் வேதமல்லாத மற்றைய சாஸ்திரங்களிலே உண்மையைக் காணமுடியாது என்று நீ எங்ஙனம் சாதிக்கக் கூடும்?

சிஷ்: வேதமல்லாத சாஸ்திரங்களிலும் உண்மையிருக்கலாம். அதற்கு மாறாக நான் ஒன்றும் சொல்லவில்லை. உபநிடதங்களிலே சொல்லியிருக்கிற போதனைகளைப் பின்பற்றி நடக்க நான் விரும்புகிறேன். ஏனெனில் அவற்றில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

சுவா: நல்லது, நீ அங்ஙனம் செய்யலாம். ஆனால் வேறு சிலர், வேறாகிய கொள்கைகளிலே மிகப் பெரிய நம்பிக்கைவைத்திருந்தால், அவர்கள் தங்களது கொள்கைகளைப் பின்பற்றி நிற்கும்படி அவர்களை விட்டுவிடுவாய் என்று நான் நினைக்கின்றேன். நீயும் அவர்களும் எய்துகின்ற முடிபு ஒன்று என்பதைக் காலகதியிலே

உணர்ந்துகொள்வாய். மஹிம்ந ஸ்தவத்திலே **த்வமஸி பயஸாமர்ணவ இவ**........"ஆறுகள் எல்லாம் ஒன்றுகூடி விழுகின்ற சமுத்திரம் நீ" எனக் கூறியிருப்பதை நீ வாசித்ததில்லையா ?

(5)

[இடம் : ஆலம்பஜார் மடம். காலம் 1897-ம் ஆண்டு மே மாதம்.]

இன்று வங்காள சக வருஷம் 1303-ம் ஆண்டு வைசாக மாதம் 19-ம் தேதி சுவாமிஜீ சிஷ்யருக்குத் தீக்ஷை செய்யச் சம்மதித்திருக்கிறார். ஆனபடியால் அவர் அதி காலையில் ஆலம்பஜார் மடத்தை அடைந்தார். சுவாமிஜீ சிஷ்யரை நோக்கிப் பரிகாசமாக " இன்று நீ பலி செலுத்தப்படப்போகின்றாய் அல்லவா ?" என்றார்.

இந்தக் குறிப்புக்குப் பின்பு சுவாமிஜீ புன்னகையோடு அமெரிக்கா நாட்டைக் குறித்த விஷயங்களைப் பற்றிப் பிறரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அந்தச் சம்பாஷணையிலே ஆத்மீகவாழ்க்கையை வளர்ப்பதற்கு விரும்பிய ஒருவன் பக்தியோடும் முழுமனதோடும் இருக்கவேண்டும் என்பதும், குருபக்தியானது எவ்வளவு உறுதிபெற்றிருக்கவேண்டும் என்பதும், குருவினுடைய வார்த்தையிலே ஆழ்ந்த நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதும், குருவுக்காக வேண்டுமாயின் உயிரையும் தியாகம் செய்யவேண்டும் என்பதும் பேசப்பட்டன. சிஷ்யருடைய மனத்தைப் பரிசோதிக்கும் பொருட்டு சுவாமிஜீ சில வினாக்களை வினவினார்: 'என்ன சம்பவித்தாலும் எதுவாயிருந்தாலும் என்னுடைய கட்டளையை உன்னால் இயன்றவரை கைக்கொண்டு ஒழுக ஆயத்தமாயிருக்கிறாயா ? உன்னுடைய நலத்தைக் கருதி உன்னை கங்கையுள்ளே குதிக்கச் சொன்னாலும், வீட்டுக் கூரையிலிருந்து கீழே விழச் சொன்னாலும் தடையின்றி அவற்றைச் செய்வாயா ? இவற்றை எல்லாம் இப்பொழுது சிந்தித்துப்பார். இந்தக் கணத்தில் உன்

னுடைய உள்ளத்தில் ஏற்பட்ட ஓர் எண்ணத்தினுலே என்னைக் குருவாகக் கொள்ளவேண்டும் என்று அவசரப்படாதே." இந்த விளுக்களுக் கெல்லாம் சிஷ்யர் "ஆம்" என்று தலையசைத்தார்.

சுவாமிஜீ மேலும் சொல்லுவார் : "முடிவில்லாத பிறப்பிறப்பாகிய மாயையைக் கடக்கும் பொருட்டு ஜீவனுடைய சோகங்களையும் துன்பங்களையும் கருணையினுல் அழித்து விடுகின்றவரே உண்மை குரு. பழைய காலத்திலே சிஷ்யனுனவன் கையில் சமித்துகளை எடுத்துக்கொண்டு குருவினுடைய பர்ணசாலைக்குப் போவான். குருவும் அவனுடைய தகுதியை அறிந்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினையும் அவன் அடக்கி வைத்திருப்பதற்கு அடையாளமாக முப்புரியாகிய 'முஞ்சா' என்னும் புல்லினை அவனுடைய இடுப்பிலே கட்டி அவனுக்குத் தீக்ஷை செய்து வேதங்களைப் போதிப்பார் அரையிலே கட்டிய முப்புரியாகிய இப்புல்லிலே சிஷ்யன் கௌபீனத்தைக் கட்டிக்கொள்ளுவான். முஞ்சா என்னும் இப்புல்லினுல் ஆக்கப்பட்ட கவசத்திற்குப் பதிலாக முப்புரி நூலை அணிந்து கொள்ளும் வழக்கம் பின்னுளில் ஏற்பட்டது."

சிஷ் : ஐயா, அப்படியானுல் முப்புரி நூலை அணியும் வழக்கம் வைதிக வழக்கமல்ல என்று சொல்லுவீரா ?

சுவா : வேதங்களிலே நூலைப்பற்றிய குறிப்பு ஓரிடத்திலும் இல்லை. இக்காலத்து ஸ்மிருதி ஆசாரியராகிய ரகுநந்தன பட்டாச்சாரியரும், இந்த நிலையிலே "எக்ஞோபவீதத்தை* அணிய வேண்டும்" என்கிருர். கோபிலருடைய கிரிஹ்யா சூத்திரங்களிலும் உபவீதமானது நூலினுற் செய்யப்பட்டது என்னும் குறிப்பு காணப்படவில்லை முதல் வைதிக சம்ஸ்காரமாகிய

* பிராம்மணனுடைய தீக்ஷையிலே செய்கின்ற வைதீகக் கிரியைகளில் ஒரு படியைக் குறிப்பது,

இது, குருவின் முன்னிலையிலே செய்யப்படும் உபநயனம் என்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது; நமது நாடு இப்பொழுது அடைந்திருக்கின்ற பரிதாபநிலையைப் பார். சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற உண்மை மார்க்கம் அகன்று போய்விட, தேசாசாரங்களும், பொருந்தனை வழக்கங்களும், பெண்கள் நியமித்த கொள்கைகளும் தேசத்தில் நிறைந்திருக்கின்றன. ஆனபடியினாலே தான் பழைய காலங்களிற்போல சாஸ்திரங்கள் விதிக்கின்ற மார்க்கத்திலே நிற்பாயாக என்று நான் உனக்குச் சொல்லுகின்றேன். நீ நம்பிக்கையோடு அவற்றை மீட்டும் இந்த நாட்டிலே வழங்கச் செய். நசிகேதனைப்போன்ற சிரத்தை உன் உள்ளத்திலே இருப்பதாக, வேண்டுமானால் அவனைப்போல எமலோகத்துக்கும் போ. ஆத்மனுடைய ரகசியங்களை அறிந்து விடுதலைபெற்று, பிறப்பிறப்பின் மர்மத்தை அறிய வேண்டுமானால் அச்சம் இல்லாத சிந்தையோடு மரணத்தின் வாயிலும் புகவேண்டும். அச்சமே மரணம் நீ அச்சத்திற்கப்பால் போகவேண்டும். இன்று முதல் அச்சமற்றிரு. நீ மோக்ஷம் அடையும்பொருட்டும், பிறருடைய நலத்துக்காகவும் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிரு. எலும்பும் இறைச்சியும் பொருந்திய இந்தப் பாரத்தைச் சுமந்துகொண்டு திரிவதனால் என்ன பயன்? ஆண்டவனுக்காக அனைத்தினையும் தியாகம் செய்கின்ற மந்திரத்தைப் பெற்றுத் ததீசி முனியைப்போல் பிறர் பொருட்டு எலும்பு இறைச்சியாலாகிய இந்த உடலைக் கொடுத்துவிடு "வேத வேதாந்தங்களை அறிந்தவர்களாய், பிரம்ம ஞானத்தை உடையவர்களாய், அச்சமின்மைக்கு அப்பால் மற்றவர்களை வழிநடத்தக் கூடியவர்களே குரு எனப்படுவார்கள்" என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அத்தகையோர் சமீபத்தில் இருக்கும்பொழுது வீண் யோசனையை ஒழித்துவிட்டுத் தீக்ஷை பெற்றுக்கொள். இக்காலத்தில் இக்கொள்கையானது சிலரிடத்து, "குருடரைக் குருடர் வழி நடத்துவது" ஆகிவிட்டது என நீ அறிவாய்.

பூஜை அறையிலே தீக்ஷைக் கிரியை நடைபெற்றது. அதன்பின் சுவாமிஜீ சிஷ்யரை நோக்கி "எனக்குக் குரு தக்ஷிணை கொடு" என்றார். அதற்குச் சிஷ்யர் 'எதனைக் கொடுப்பேன்?' எனலும், சுவாமிஜீ பண்டகசாலையி லிருந்து சில பழங்களைக் கொண்டு வரலாம் எனக் குறிப் பிட்டார். சிஷ்யர் களஞ்சியத்துக்கு ஓடிப்போய் பத்துப் பன்னிரண்டு 'லிச்சி'ப் பழங்களை கொண்டுவந்தார். சுவாமிஜீ அவற்றைக் கரத்தினில் வாங்கி ஒவ்வொன்றாக உண்டுவிட்டு "இப்பொழுது குருதக்ஷிணை நிறைவேறி விட்டது" என்றார்.

இத்தருணத்தில் அந்நாளில் பிரம்மச்சாரியாயிருந்த சுவாமி சுத்தாநந்தரும் சுவாமிஜீயினிடம் தீக்ஷை பெற் றார்.

சுவாமிஜீ போசனம் அருந்திச் சிறிது இளைப்பாறச் சென்றார்.

இளைப்பாறிய பின் மேன்மாடியிலிருந்த மண்டபத் திற்கு வந்தார். சிஷ்யர் அத்தருணத்திலே "ஐயா, நல் லொழுக்கம் தீய ஒழுக்கம் என்னும் எண்ணங்கள் எப்படி உண்டாயின?" என்று கேட்டார்.

சுவா: "பல" என்னும் எண்ணத்திலிருந்தே இவை உண்டாயின. ஒன்றாந் தன்மையில் ஒருவன் எவ்வளவுக்கு முன்னேறிச் செல்லுகின்றானோ அவ்வள வுக்கு விரோதித்த கூட்டங்களாகிய நன்மை தீமை என்பவற்றுக்குத் தாயகமாகிய, "நான்" "நீ" வேறு பாட்டெண்ணங்கள் அடங்கிவிடுகின்றன. இவர் என் னில் இருந்தும் வேறுபட்டவர் என்னும் எண்ணம் உண்டாகும் பொழுது, மற்றைய வேறுபாட்டு எண் ணங்களும் தோற்றுகின்றன. ஒன்றாந் தன்மையை முற்றிலும் உணர்ந்த உடனே மனிதனுக்குச் சோகம், மயக்கம் என்பன இருக்கமாட்டா. **தத்ர கோ மோஹ: க: சோக ஏகத்வ மனுபஸ்யத:** "ஏகத்துவத்தைக் காணுகின்றவனுக்குச் சோகம் எங்கே, மயக்கம் எங்கே?" எல்லாவகைப் பலவீனங்களிலிருந்தும் பாவ உணர்ச்சி

உண்டாகின்றது. பலவீனத்திலிருந்து எரிச்சல் பொறாமை முதலியன உண்டாகின்றன. பலவீனமே பாவம். உள்ளே இருக்கும் ஆத்மன் சுயம் பிரகாசமாக எப்பொழுதும் ஒளி வீசுகின்றது. அதனைப் புறக் கணித்துவிட்டு எலும்பு இறைச்சியினாலாகிய இந்தப் புன்புலால் குரம்பையையே பொருட்படுத்தி மனிதர் 'நான்' 'நான்' 'நான்' என்கின்றனர். எல்லாப் பலவீனத்துக்கும் இதுவே வேர். வாழ்க்கையிலுள்ள பேத உணர்ச்சி எல்லாம் இந்தப் பழக்கத்திலிருந்தே தோன்றின. பூரண உண்மை இத்தகைய இருமைக்கு மப்பாலானது.

சிஷ்: நல்லது அப்படியானால் பேத அநுபவங்கள் எல்லாம் உண்மை அல்லவா?

சுவா: 'நான்' என்னும் எண்ணம் இருக்கும் வரையும் உண்மைதான். ஆத்மனே நான் எனப்படுவது என்னும் மெய்யுணர்வு எய்திய உடனே, பேத அநுபவங்களுக்கு உரிய உலகம் பொய்ப்பொருள் ஆகின்றது. மக்கள் பாவம் என்று சொல்லுவது பலவீனத்தின் பயனாக எய்தியது—"தேகம் நான்" என்னும் அகங்கார எண்ணத்தின் மற்றொரு வடிவமாகியது. "ஆத்மா நான்" என்னும் உண்மையிலே மனம் நிலை பெற்றிருக்கும் பொழுது புண்ணியம், பாவம், நன்மை, தீமை என்னும் இவற்றிற்கு அப்பால் நீ செல்லுவாய் "'நான்' செத்தால் எல்லாத் தொல்லையும் முடிந்து போம்" என ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.

சிஷ்: ஐய, இந்த 'நான்' என்பதற்கு மிகவும் விடாப்பிடியான உயிர் இருக்கிறது. அதைக் கொல்வது மிக அரிது.

சுவா: ஆம், ஒருவகையாகப் பார்த்தால் அது மிக அரிதுதான். ஆனால் மற்றொரு வகையாகப் பார்த்தால் அது மிக எளிது. இந்த 'நான்' என்பது எங்கே இருக்கிறதென்று சொல்லுவாயா? ஒரு பொழுதும் இல்லாதிருந்த தொன்றினைக் கொல்லுவதைப்பற்றி நீ பேசுதல்

எங்ஙனம் ஆகும். நான் என்னும் பொய்யெண்ணத்தி ணுலே மனிதன் மயக்குண்டு கிடக்கின்றான். இந்தப்பேய் நம்மை விட்டு அகன்றால் எல்லாக் கனவுகளும் அகன்று விடுகின்றன. அதி உயர்ந்த ஜீவன் முதல் புல் ஈருக உயிர் வாழுகின்ற அனைத்திலும் ஒரே ஆத்மனே நிறைந் திருப்பதாக அப்பொழுது காணுதல் கூடும். இதனை அறிந்து தெளிய வேண்டும். அப்பியாசங்களும் வழி பாடுகளும் திரையை நீக்குவது போன்றன. இவை போனபின் பூரண ஞானமாகிய சூரியன் சுயம்பிரகாசத் தோடு ஒளி வீசக் காண்பாய். ஆத்மன் மாத்திரமே சுயம்பிரகாசமுடையது; அதனை அதனாலே அறிய வேண்டும் தன்னாலே தன்னை அறிதற்குரிய பொரு ளினை மற்றப் பொருள்களினது உதவி கொண்டு காணு வது எப்படி? **விஞ்ஞாதாரமரே கேனவிஜானீயாத்** "காண் பானை எந்தக் கருவியினால் காண்பது?" என்று சுருதி கூறவில்லையா? நீ அறிந்தன வெல்லாம் மனமாகிய கருவியினால் அறியப்பட்டனவே. மனமோ ஒரு வகை யிற் சடப்பொருள். சுத்தனாகிய ஆத்மா பின்னின்று தொழில் புரிவதனால் மனம் தொழில் செய்கின்றது. ஆதலினால் அத்தகைய ஆத்மாவை உன்னுடைய மனத் தின் மூலமாக அறிவது எப்படி? மனமாவது, புத்தியா வது ஆத்மாவை அடையமாட்டா என்பதை நாம் அறி கின்றோம். நமது வியவகார புத்தி இவ்வளவோடு நின்று விடுகின்றது. மனம் தொழிலற்றிருக்கும் பொழுது, மனம் மறைந்து ஆத்மா வெளிப்படுகிறது. இந்த நிலையை பாஷியகாரராகிய சங்கரர் 'அபரோக்ஷாநு பூதி' (புலன்களைக் கடந்த காட்சி) என்பர்.

சிஷ்: ஆனால், ஐய, 'நான்' எனப்படுவது மனந் தானே. மனம் போய்விட்டால் 'நான்' என்பதும் நிலைத்திருக்காது.

சுவா: ஆம், அந்த நிலை வரும்பொழுது உண்மை யில் 'நான்' என்பது எதுவெனப் புலப்படும். அப் பொழுது மிஞ்சியிருக்கின்ற 'நான்' என்பது எங்கும்

நிறைந்து எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்ற ஆத்மாவாகும். கடாகாசமானது குடம் உடைந்தவுடன் மகாகாசம் ஆகின்றது. குடம் உடையும் பொழுது அதனுள்ளே நிறைந்திருந்த ஆகாசம் உடைந்து போவதில்லை. உடலினுள்ளே எல்லைப்படுத்தப்பட்டதென நீ நினைத்திருந்த சிறிய 'நான்' எவ்விடத்தும் பரந்து எங்கும் வியாபித்திருக்கின்ற 'நான்' அல்லது ஆத்மாவின் வடிவமாகக் காணப்படுகின்றது. ஆதலினாலே உண்மை 'நான்' ஆகிய ஆத்மாவுக்கு மனம் இருந்தாலும் அழிந்தாலும் எய்துவதொன்றில்லை. நான் சொல்லுவதைக் காலகதியிலே உணர்ந்து கொள்ளுவாய். '**காலே ஸ்வாத்மனி விந்ததி**' "காலகதியிலே அது உள்ளத்திலே உணரப்படுகின்றது." சிரவண மனனங்களைச் செய்து கொண்டு போம்பொழுது, உரிய காலத்திலே நீ இவற்றைத் தெளிவாக உணர்ந்து மனதுக்கு அப்பால் போவாய். அப்பொழுது இத்தகைய கேள்விகளுக்கு இடம் இருக்க மாட்டாது.

இவற்றை எல்லாம் கேட்டுச் சிஷ்யர் தம்முடைய ஆசனத்திலே மௌனமாயிருந்தார். சுவாமிஜீ மெல்லென்று புகை இழுத்துக் கொண்டு மேலும் சொல்லுவாராயினர்: "இந்த இலகுவான காரியத்தைத் தெளிவு படுத்துவதற்காக எத்தனை சாஸ்திரங்கள் எழுதப்பட்டன! அப்படி இருந்தும் மனிதர் அதை அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்களே! சில வெள்ளி நாணயங்களையும், கழிந்து போகிற பெண்களின் அழகையும், இன்னும் பல சிற்றின்பங்களையும் பொருளாகக் கொண்டு அருமை பொருந்திய மானிட வாழ்க்கையை வீணாக்குகின்றார்களே. மஹா மாயையினுடைய ஆற்றல் மிகவும் அற்புதமானது! அம்மா! ஓ அம்மா!"

(6)

[இடம் கல்கத்தாவிலுள்ள பாக்பஜார் காலம் : 1897-ம் ஆண்டு.]

சில நாட்களாகச் சுவாமிஜீ, காலஞ்சென்றுபோன பலராம் பாபுவினுடைய வீட்டிலே இருக்கின்றார். சுவாமிஜீயினுடைய விருப்பப்படி இன்று மாலை மூன்று மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்கள் பலர் அந்த வீட்டிலே கூடியிருக்கிறார்கள். சுவாமி யோகாநந்தரும் சமூகமாயிருக்கிறார். ஒரு சங்கத்தை ஏற்படுத்துவது சுவாமிஜீயினுடைய கருத்து. சமூகமாயிருந்தோர் அனைவரும் ஆசனத் தமர்ந்தபின் சுவாமிஜி பின்வருமாறு பேசத் தொடங்கினார் :

"பல தேசங்களிலும் யாத்திரை செய்தேன். அதன் பயனாக எனது மனத்திலே உண்டாகிய துணிபு ஒன்று உண்டு. பெரிய காரியம் ஒன்றைச் செய்யப்புகின் ஒரு சங்கமாகக் கூடி முயன்றாலன்றி அது அநுகூலப்படுவதில்லை என்பது எனது துணிபு. பொது வாக்குரிமையோடு பொது மக்கள் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சங்கத்தை உடனே ஆரம்பித்து விடுவது, நமது நாடு இருக்கின்ற நிலையிலே அவ்வளவு பொருத்தமாகவில்லை. இந்த விஷயத்திலே மேனாட்டார் நம்மினும் பார்க்கப் பயிற்சி உடையவர்கள். நம்மினும் பார்க்க அவர்களுள்ளே பொறாமை குறைவு; தகுதியை மதிப்பிடுவதற்கு அவர்கள் பயின்றிருக்கிறார்கள். உதாரணமாக நான் அங்கு சென்றபொழுதும் சாதாரண மனிதனாகிய என்னை எவ்வளவு பேரன்போடு வரவேற்று உபசரித்தார்கள். நமது நாட்டிலே கல்வி பரந்து பொது ஜனங்களினுடைய சிந்தை அகன்று, அவர்களுடைய எண்ணமானது சாதிமத பேதம் என்னும் எல்லையைக் கடந்த அநுதாபத்தோடு கூடியிருக்கும் பொழுது, பொது மக்கள் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சங்கத்தின் மூலமாக முயற்சி செய்தல்கூடும்.

இப்பொழுது இந்த சங்கத்துக்குப் பூரண அதிகார முள்ள தலைவர் ஒருவர் இருக்கவேண்டியது இன்றியமை யாததாகின்றது. எல்லோரும் அவர் கட்டளைக்கு அமைந்து நடக்கவேண்டும் காலகதியிலே பொதுஜன வாக்குரிமையை ஆதாரமாகக் கொண்டு காரியங்களை நடத்தலாம்

"யாருடைய திருநாமத்தினால் நாங்கள் சந்நியாச வாழ்க்கையைக் கைக்கொண்டிருக்கிறோமோ, யாரை இஷ்டதேவதையாகக் கொண்டு நீங்கள் குடும்ப வாழ்க் கையிலிருந்து கருமங்களிலே முயற்சித்து வருகிறீர் களோ, யாருடைய பரிசுத்த நாமமும் அதி உன்னத வாழ்க்கையும், அவ்வாழ்க்கை கழிந்து இருபது வருடத் துக்குள்ளே கீழ்நாட்டிலும் மேல் நாட்டிலும் அதி அற்புதமாகப் பரவி இருக்கின்றதோ அவருடைய திரு நாமத்தினால் இந்தச் சங்கம் நிலைபெறுவதாக. நாங்கள் பகவானுடைய தொண்டர். நீங்கள் அனைவரும் இந்த நன் முயற்சிக்கு உதவியாளர்களாக இருப்பீர்களாக."

சபையிற் சமூகமாக விருந்த ஸ்ரீயுத கிரீஷ் சந்திர கோஷரும் ஏனைய கிரகஸ்த சிஷ்யர்களும் இதனை ஏற் றுக்கொள்ளச் சங்கத்தின் எதிர்கால முயற்சியைப் பற்றிய கருமங்கள் ஆராயப்பட்டன சங்கத்துக்கு "ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம்" என்னும் பெயர் இடப் பட்டது.

சுவாமிஜி சங்கத்தின் பொது அக்கிராசனுதிபதி ஆயினர். ஏனைய காரியகர்த்தர்களும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு மணிக்குப் பலராம் பாபுவினுடைய வீட்டிலே சங்கத்தின் கூட்டங்கள் நடப்பதெனவும் விதி ஏற்படுத் தப்பட்டது. வசதி உள்ளபோது எல்லாம், சுவாமிஜி கூட்டத்தில் சமூகமாயிருந்தார் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

கூட்டம் கலைந்து அங்கத்தவர்கள் போயின பின்பு சுவாமிஜி சுவாமி யோகாநந்தரை நோக்கி, "வேலை இவ்

வண்ணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய திருவருளினாலே எவ்வளவுக்கு அநு கூலப்படுகிறது பார்ப்போம்" என்றார்.

சுவாமி யோகாநந்தர் :- இந்த விஷயங்களை நீர் மேலைத் தேசமுறைகளைப் பின்பற்றிச் செய்கின்றீர்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் இத்தகைய கற்பனைகளைச் சொல்லி வைத்ததுண்டா?

சுவா : இவையெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கருத்துக்கு இயைந்தனவல்லவென நீர் எங்ஙனம் அறி வீர். அவர் எல்லையற்ற சிந்தையை உடையவர். வாழ்க் கையைப்பற்றி நீர் கொண்டிருக்கிற எல்லையுட்பட்ட எண்ணங்களின் உள்ளே அவரைச் சிறைப்படுத்துதல் கூடுமா? நான் இந்த எல்லைகளை எல்லாம் உடைத் தெறிந்து அவரது அளவுகடந்த அன்பின் பெருக்கத்தை உலக முற்றிலும் பரப்புவேன். அவருக்கு ஏதாவது வழிபாட்டுக் கிரியைகளைச் செய்யும்படி அவர் எனக்கு ஒருபோதும் உரைத்ததில்லை சமய சாதனைகளைப்பற்றி யும், பக்தியைப்பற்றியும், யோகத்தைப்பற்றியும், தியா னத்தைப்பற்றியும், இவை போன்ற உயர்ந்த எண்ணங் களையும் உண்மைகளையும்பற்றியும், அவர் நமக்குத் தந்த போதனைகளை வாழ்க்கையிலே கண்டறிந்து, அவற்றை எல்லா மக்களிடையும் பரப்புதல் வேண்டும். சமய பேதங்கள் எல்லாம் உண்மையை அடையும் பல வாகிய மார்க்கங்களே. சமயங்களினால் மறைந்து கிடக் கின்ற இவ்வுலகத்திலே மற்றுமொரு சமயத்தை ஏற் படுத்துவதற்காக நான் பிறக்கவில்லை. பகவானுடைய திருவடிகளிலே சரணாகதி அடையும் பாக்கியத்தை நாம் பெற்றோம். அவருடைய திருமொழியை மூவுலகவாசி களுக்கும் பரப்புவதற்காக நாம் பிறந்திருக்கிறோம்.

சுவாமி யோகாநந்தர் மறுத்து ஒன்றும் கூறவில்லை. சுவாமிஜி மேலும் சொல்லுவார்: "இந்த வாழ்க்கை யிலே பலமுறை அவருடைய கருணையை நான் பெற் றிருக்கிறேன். அவர் பின்னின்று இந்த வேலைகளை

எல்லாம் என்னைக் கொண்டு செய்விக்கின்றார். பட்டினியினாலே வருந்தி ஒரு மரத்தடியிலே உதவுவாரற்றுக் கிடக்கும்பொழுதும், கௌபீனத்துக்கு ஒரு துண்டு துணி நான் இல்லாது இருந்தபொழுதும், கையில் காசில்லாமல் உலகத்தைச் சுற்றி யாத்திரை செய்யத் தீர்மானித்தபொழுதும், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவருளினாலே பல வழிகளிலுமிருந்து உதவி கிடைத்தது. அதன் பின்பு சிக்காகோ தெருவிலே, இந்த விவேகானந்தனைக் காணும்பொருட்டு ஜனங்கள் ஒருவரை ஒருவர் நெருக்கிக்கொண்டு வந்தபொழுதும், எனக்கு ஏற்பட்ட கௌரவம் அனைத்தினையும், அவருடைய கருணையினாலே ஒருபுறம் தள்ளிவைக்கக் கூடியவனாயிருந்தேன். சாதாரண மனிதர் இந்தக் கௌரவத்தில் நூற்றில் ஒரு பாகத்தைப் பெற்றாலும் நிலை குலைந்து உன்மத்தராய் விடுவார்கள். அவருடைய கருணையினாலே நான் சென்ற விடமெங்கும் எனக்கு வெற்றி கிடைத்தது. இந்நாட்டிலே சில முயற்சிகளைச் செய்து நான் என் வாழ்க்கையை முடிக்கவேண்டும். ஆதலால் சந்தேகங்களை விட்டுவிட்டு எனக்கு உதவு புரிவீர்களாக; அவருடைய திருவருளினாலே எல்லாம் நிறைவுபெறக் காண்பீர்கள்."

சுவாமி யோகானந்தர்: ஆம், தாங்கள் விரும்புகிறபடியே அனைத்தும் நிறைவுபெறுவதாக! நாங்கள் அனைவரும் உம்முடைய கட்டளைக்குப் பணிந்து நடக்கின்றோம் அல்லவா? இந்தக் கருமங்களை எல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உமது மூலமாகச் செய்கின்றனர் என்பதை நான் இடையிடையே தெளிவாகக் காணுகின்றேன். ஆயினும் உண்மையைச் சொல்லுமிடத்துச் சிற்சில காலங்களிலே எனக்குச் சந்தேகம் நிகழுகின்றது. அவர் எவ்வண்ணமாகச் செய்தாரோ அதனினின்று வேறுபட்டு நாம் நடப்பதுபோலக் காணப்படும்பொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய போதனையினின்று நாம் விலகாமல் ஒழுகுகின்றோம் என்பது நிச்சயமா, என்னும் வினா என்னுள்ளத்தில் எழுகின்றது—அப்பொழுது எதிர்ப்

பதுபோல் நின்று தங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன்.

சுவா : உண்மையிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரது சாதாரண பக்தர்கள் அவரை எவ்வாறாக எண்ணினார்களோ அவ்வாறான அவ்வெண்ணத்தினுள்ளே அவர் எல்லைப் பட்டு நிற்பவரல்லர். எல்லையற்ற குணங்கள் அவரிடத்தில் அமைந்திருந்தன. பிரம்ம ஞானத்தின் எல்லையை ஒருவாறு அளவிடலாம். ஆனால் அவருடைய மனத்தின் ஆழத்தை அளவிடுதல் முடியாத காரியம். அவருடைய கடைக்கண்ணோக்கத்தினால் ஆயிரம் விவேகாநந்தர்கள் உற்பவிக்கக்கூடும். அப்படிச் செய்யாமல் இம்முறை என்னையே தனித்த கருவியாகக் கொண்டார். இந்த விஷயத்தில் நான் என்ன செய்யலாம்? நினைத்துப்பாரும்.

இதனைச் சொல்லிவிட்டு சுவாமிஜி வேறொரு காரியத்தின் பொருட்டு வெளியே போனார். சுவாமி யோகாநந்தர் சுவாமிஜியினுடைய பல்வேறு வகைப்பட்ட ஆற்றல்களைக் குறித்துப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

சுவாமிஜி திரும்பிவந்து சிஷ்யரை நோக்கி "உங்கள் பக்கங்களிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்து ஜனங்கள் அதிகம் அறிவார்களா?" என்றார்.

சிஷ் : எங்கள் பக்கத்திலிருந்து நாகமஹாஷயர் மாத்திரமே ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தார் ; அவரிடமிருந்து அநேகர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி அறிந்தனர். இன்னும் அறிய ஆவல் கொண்டனர் ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆண்டவனுடைய அவதாரம் என்பதை அங்குள்ள ஜனங்கள் அறிந்து கொள்ளவில்லை ; என்ன சொன்னாலும் நம்பமாட்டார்கள்.

சுவா : அங்ஙனம் நம்புவது எளிதான காரியம் என்று எண்ணுகிறாயா? எல்லா விஷயங்களிலும் அவரோடு உடனிருந்து முயற்சித்தவர்களும், இந்த உண்மையை அவருடைய திருவாயினின்று பலமுறை கேள்விப்பட்டவர்களும், நாளின் இருபத்துநான்கு மணி நேர

மும் அவரோடு உடன் உறைந்தவர்களும், ஆகிய நாங் களே இடையிடையே சந்தேகப்படும்பொழுது, மற்ற வர்களைப்பற்றிப் பேசுவானேன்?

சிஷ் : ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் பரிபூரண பிரம்ம மெனவும், கடவுளெனவும் தாமாகவே எப்பொழுதா வது சொன்னதுண்டா?

சுவா : ஆம், பலமுறை சொல்லி இருக்கின்றார். எங்கள் எல்லோருக்கும் சொல்லி இருக்கின்றார். ஒருநாள் காசிப்பூர் சோலையிலே அவரிருக்கும்பொழுது அவரு டைய திருமேனி கழிந்துபோகின்ற நிலையிலிருந்தது. அவருடைய சயனத்துக்குச் சமீபத்திலிருந்த நான் எனது மனத்திலே "இப்பொழுது இவர் தாம் கடவுள் என்பதை வெளியிட்டுச் சொல்வாராயின், இவர் கடவு ளென்பதை உண்மையில் நான் நம்புவேன்" என்று எண்ணினேன். இது அவர் இவ்வுலக வாழ்வை நீக்கி யதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. அவர் உடனே என்னை நிமிர்ந்து பார்த்து, "எவன் ராமனாயிருந்தானோ எவன் கிருஷ்ணனாயிருந்தானோ, உண்மையில் அவனே இவ்வுடலில் இராமகிருஷ்ணனாக இருக்கின்றான்; இது வெறுமையாக உனது *வேதாந் தக் கருத்தை நோக்கிச் சொல்லியதல்ல" என்றார். நான் பேச்சற்று மௌனமாயினேன். பகவானுடைய திருவாயிலிருந்து இந்த உண்மையைப் பலமுறை கேள்வியுற்றும் எங்களுக்கு இன்னும் முற்றான நம் பிக்கை வரவில்லை. ஐயத்தினாலும் அல்லலினாலும் எங் கள் நெஞ்சம் கலங்குகின்றது. ஏனைய ஜனங்கள் விரைந்து நம்பவில்லை என்பதைப்பற்றி நாங்கள் என்ன சொல்லலாம்? நம்மைப் போன்று உடலோடுகூடி இருக்கின்ற ஒருவரைக் கடவுளென்று சொல்லுவதும்

*பிரம்மத்தை உணர்ந்த பெரியோர் மநுமுதலாக எவரோடும் தம்மை ஒன்றுபடுத்திக் கூறலாம் என வேதாந்த சூத்திரத்தில் (1.1.30-இல்) கூறப்பட்டிருக்கிறது.

நம்புவதும் கஷ்டந்தான். ‘ பரிபூரண நிலையை அடைந் தவர் ’ ‘ பிரம்மஞானி ’ என்றவரையில் நாம் சொல்ல லாம். அவரைக் குறித்துப் ‘பிரம்மஞானி ’ என்ருவது பெரியோரென்ருவது மற்றெவ்வகையாகவாவது நீ நினைக்கலாம். அதிலொன்றுமில்லை. ஆனால் ஸ்ரீ ராம கிருஷ்ணரைப்போல எல்லா நிறைவுகளையும் உடைய மனிதர் இப்பூவுலகத்தில் வந்ததில்லை என்பதை நீ என் னிடமிருந்து அறிந்துகொள்வாயாக. இக்காலத்திலே இப்பூவுலகத்தின்கண் பெரிய அந்தகாரத்திலே இந்தப் பெரியார் பேரொளிச்சுடர் விளக்கமாகக் காணப்படு கிருர். இந்த வெளிச்சத்தினைப்பற்றியே மனிதர் சம் சாரமாகிய சாகரத்தினைக் கடக்கவேண்டியவர்களா யிருக்கின்ருர்கள்.

சிஷ் : ஐயா, கண்டும், கேட்டும் அறிந்தாற்ருன் உண்மையான நம்பிக்கைவரும் என எனக்குப் புலப்படு கின்றது. மதுர பாபு ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி எத் தனையோ விஷயங்களை நேரிலே கண்டார் எனக் கேள் விப்பட்டேன். அதனுல் அவருக்கு அதிக அற்புதமான நம்பிக்கை இருந்தது.

சுவா : நம்பமாட்டாதவன் கண்டபின்பும் நம்ப மாட்டான். தான் கண்டது கனவோ மயக்கமோ என்று எண்ணிவிடுவான். கிருஷ்ணருடைய விஸ்வரூப தரிசனத்தைத் துரியோதனனும் அர்ஜுனனும் கண் டார்கள். அர்ஜுனன் நம்பினுன். துரியோதனன் மந்திர வித்தை என்றெண்ணினுன். ஆண்டவன் நமக்கு உணர்த்தினுலன்றி நாம் ஒன்றையும் உணரமாட்டோம். காணுமலும் கேளாமலும் சிலர் பூரண நம்பிக்கையை அடைகின்றனர். வேறு சிலர் பன்னிரண்டு ஆண்டு களுக்கு அவருடைய எல்லையற்ற ஆற்றல்களைக் கண்ணி ஞற் கண்டும் ஐயத்தில் அமிழ்ந்து இருக்கின்றனர். அவ ருடைய அருளே இதன் மர்மம். அந்த அருளைப் பெறும்பொருட்டு ஒருவன் இடைவிடாமல் முயற்சிக்க வேண்டும்.

சிஷ் : ஐய, அருளைக் குறித்து ஏதாவது விதி உண்டா ?

சுவா : ஆம் என்றும் சொல்லலாம். இல்லை என்றும் சொல்லலாம்.

சிஷ் : அஃது எப்படி ?

சுவா : மனம் வாக்குக் காயங்களிலே எப்பொழுதும் பரிசுத்தம் உடையவர்களாய் நிறைந்த பக்தி உடையவர்களாய், நித்தியா நித்திய வஸ்து விவேகமுடைவர்களாய், தியானத்திலும், சமாதியிலும், இடைவிடாமல் முயன்றுகொண்டிருப்பவர்கள்மீது, ஆண்டவனுடைய கருணை நிறைகின்றது. ஆண்டவன் இயற்கையின் விதிகளுக்கு அப்பாலாகி நிற்கின்றான். ஒருவகைச் சட்டங்களுக்கும் அவன் அமைய வேண்டியதில்லை—ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுவதுபோலச் சிறு குழந்தையினது தன்மை ஆண்டவனுக்கு உண்டு,— பல்லாயிரம் பிறப்புகளிலே ஆண்டவனை நோக்கி அழைத்தோர் பலருக்கு அவன் தோற்றுதிருப்பதையும் நம்பிக்கையற்ற பாவி என்று நாம் நினைக்கக்கூடிய ஒருவனுக்குக் கணப்பொழுதிலே ஞானம் வந்து எய்துவதையும் காணுகின்றோம். பின்னர்க் கூறப்பட்டவர்களுக்கு ஆண்டவனுடைய கருணை கேளாமலே வந்து எய்துகின்றது. அத்தகைய மனிதன் பூர்வ ஜன்மங்களிலே புண்ணியங்களைச் சேர்த்துவைத்தான் என்று நீ சொல்வாயெனினும், இந்த இரகசியத்தை உணர்ந்து கொள்வது உண்மையில் அரிதுதான். "ஆண்டவனிடத்தில் நம்பிக்கை வை, காற்றிலகப்பட்ட சருகைப் போல அவனுடைய கருணையின் முன்னே நீ இருப்பாயாக" எனவும் "அவனுடைய கருணையாகிய காற்றானது எப்பொழுதும் வீசுகின்றது ; நீ உனது பாய்களை விரித்துக்கொள்வாயாக" எனவும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.

சிஷ் : ஐய, இது மிகவும் அபாயமான கூற்றாக இருக்கின்றது. இங்கே நியாயத்துக்கு இடமில்லை என நான் காண்கின்றேன்.

சுவா : நியாயித்திலும் வாதித்தலும், காலம், தேசம் நியதி இன்னும் இவற்றினுட்பட்டனவாய், மாயா ராஜ்யத்தின் எல்லையினுள்ளே இருக்கின்றன. ஆண்டவன் இவற்றுக்கு அப்பாலாகி நிற்கின்றான்: அவனுடைய விதி என்று நாம் பேசுகின்றோமாயினும், அவன் எல்லா விதிகளையும் கடந்து நிற்கின்றான். இயற்கையின் விதிகளென நாம் கூறுவன அனைத்தினையும் அவன் படைத்துத் தானே அவையாகி நிற்கின்றான். ஆனால் அவன், அவை தமக்கு எல்லாம் அப்பாலாகி நிற்கின்றான் யார்மீது அவனுடைய கருணை தங்குகிறதோ அவர்கள் ஒரு கணத்திலே எல்லா விதிகளுக்கும் அப்பாலாகி விடுகின்றார்கள். ஆதலினாலே அருளுக்கு ஒரு நியதியில்லை. அது அவனுடைய லீலை, விளையாட்டு. படைக்கப்பட்ட இப்பிரபஞ்சம் அனைத்தும் இவனுடைய லீலையே. **லோகவத்து லீலா கைவல்யம்** "மக்களுள் இருப்பதுபோல, அது சுத்த உவகையோடு கூடிய விளையாட்டு". விளையாட்டாக இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து அழிக்கின்றவன், மஹாபாவிக்குத் தானும் தனது கருணையினாலே மோக்ஷத்தைக் கொடுக்க மாட்டாதவனா? ஒரு சிலரைச் சமயசாதனை மூலமாகவும் ஒரு சிலரை அஃது இன்றியும், மோக்ஷம் அடையப்பண்ணுதல் அவனுடைய திருவுள்ளத்துக்கு இசைந்தவாறு நடக்கின்றது ; அது அவனது லீலை.

சிஷ் : ஐய, இது எனக்குத் தெளிவுபடவில்லை.

சுவா : நீ அறிந்துகொள்ள வேண்டியதுமில்லை. உன்னுடைய மனமானது இயன்றவரை அவனைப்பற்றி நிற்பதாக. அப்பொழுதுதான் உலகமாகிய இந்தப் பெரிய மாயா வித்தை தானே பிரிந்து போய்விடும். ஆனால், நீ கடைப்பிடியோடு இருக்கவேண்டும். மனத்தில் நின்று பொன்னாசை பெண்ணாசைகளை அகற்றிவிட

வேண்டும். விவேகத்தினாலே நித்தியப் பொருளையும் அநித்தியப் பொருளையும் வேறுபடுத்தி நோக்கவேண்டும்—நீ இந்தத் தேகமல்ல என்னும் எண்ணத்திலே சிந்தனை செய்து நிலைபெற்றிருக்க வேண்டும். எங்கும் பரந்திருக்கின்ற ஆத்மன் நீ என்னும் எண்ணம் எப்பொழுதும் மனத்திலே மாறாதிருக்க வேண்டும். இங்ஙனம் கடைப்பிடியாக அப்பியசித்து வரவேண்டும். இதனைப் புருஷாகாரம் என்பர். தன் முயற்சியினால் ஆகின்ற இது அவனுடைய அருளின் வேறுபட்டது. இத்தகைய தன் முயற்சியினால் அவனிடத்து உண்மையான நம்பிக்கை உண்டாகும் இதுவே மனித முயற்சியினால் அடையக்கூடிய உயர்ந்த லக்ஷியம்.

சிறிது நேரம் தாமதித்து சுவாமிஜி மீட்டும் சொல்லுவார். "நீ ஆண்டவனுடைய அநுக்கிரகத்தைப் பெற்றிராவிட்டால் இவ்விடத்துக்கு எப்படி வந்திருத்தல் கூடும்? ஆண்டவனுடைய அருளைப் பெற்றவர்கள் இங்கு வராமலிருக்க முடியாது" எனவும், அவர்கள் யாராயிருந்தாலும் என்ன செய்துகொண்டிருந்தாலும் இங்கிருந்து *வெளிப்பட்ட எண்ணங்களினாலும், மொழிகளினாலும் நிச்சயமாகவே கவரப்படுவார்கள் எனவும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. உன்னுடைய சொந்த உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஆண்டவனுடைய அநுக்கிரகமில்லாமல் நாகமஹாஷயருடைய சகவாசமாகிய பெரும் பாக்கியத்தை நீ அடைந்திருத்தல் கூடுமா? நாகமஹாஷயர் ஆண்டவனுடைய அருள் வலியினாலே ஆத்மீக வாழ்க்கை நிறைவை அடைந்தவர்; **அநேக ஜன்ம ஸம்ஸித்தஸ்ததோ யாதி பராங்கதிம்.** "அநேக ஜன்மங்களிலே செய்த சாதனைகளின் நிறைவினாலே ஒருவன் அதி உயர்ந்தபடியை அடைகின்றான்" எனக் கீதையில் சொல்லியபடி அடைந்

---

* உலக மாதாவினுடைய எண்ணத்திலே முற்றிலும் அமிழ்ந்திருந்த பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'இங்கே' என்று கூறியது, தேறி வெளிப்பட்டுத் தோன்றிய இந்த நிலையத்தில் என்னும் கருத்தினது.

தவர். ஆண்டவனுடைய அநுக்கிரகம் இதுவென்று முற்றாக அறிந்தவர். எத்தனையோ பிறவிகளிற் செய்த பெரும் புண்ணியத்தினலே இவர் போன்ற பெரியாரைக் காணும் பாக்கியம் கிடைக்கின்றது. பக்தியிலே மிக உயர்ந்தபடிக்குச் சாஸ்திரங்கள் கூறுகிற இலக்ஷணங்களெல்லாம் நாகமஹாஷயரிடத்திலே வெளிப்பட்டுத் தோன்றின. த்ருணுதபி ஸுநீசேன† எனப் பலமுறை நாம் எடுத்துக் கூறுகிற வாக்கியமானது அவரிடத்திலே நிறைவுபெற்றுக் காணப்பட்டது. நாகமஹாசயருடைய திருவடி படிந்த காரணத்தினலே உங்களுடைய கிழக்கு வங்காளம் உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிச் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுது மஹா கவியாகிய பாபுகிரீஷ் சந்திரகோஷரைப் போய்ப் பார்க்கும்படியாக சுவாமிஜி எழுந்தார். கிரீஷ் பாபுவினுடைய வீட்டினை அடைந்து சுவாமிஜி ஆசனத்தில் அமர்ந்து சொல்லுவாராயினர்: "கிரீஷ்சந்திரரே! எனது உள்ளத்திலே இந்நாட்களில் இதனைச் செய்ய வேண்டுமென்றும், அதனைச் செய்யவேண்டுமென்றும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் உரைத்த போதனையை உலகிற் பரப்ப வேண்டுமென்றும், இவ்வாறாகிய எண்ணங்கள் உள்ளத்தில் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றினலே இந்தியாவிலே இன்னுமொரு சமய பேதத்தை உண்டாக்கி விடுவதாகுமோ என்பதையும் சிந்திக்கவேண்டியிருக்கிறது. ஆதலினலே மிகுந்த ஆராய்ச்சியோடு கருமஞ் செய்யவேண்டியவனு யிருக்கிறேன். சில வேளை சமயபேதம் ஒன்று உண்டுபண்ணப்பட்டாலும் என்ன, என எண்ணுகிறேன். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருவருடைய ஆத்மீக வாழ்க்கையையும் நிலைகுலைக்கவில்லை என்னும் எண்ணம் என்னுடைய உள்ளத்தில் எழுகின்றது; அவர் உள்ளே இருக்கின்ற ஒற்றுமையை நோக்கினர். இந்த எண்ணத்தினலே நான் கட்டுண்டு நிற்கின்றேன். இதற்கெல்லாம் நீர் என்ன சொல்லுகிறீர்?"

† "புல்லினுங் கடைப்பட்ட"

கிரீஷ் பாபு : இதற்கு நான் என்ன சொல்லலாம்? நீர் அவர் கையிலுள்ள கருவி. அவர் உம்மை எது செய்யும்படி ஏவுகிறாரோ அதனை நீர் செய்யவேண்டும். இந்த விஷயங்களைப்பற்றி நான் சிந்திப்பதில்லை. பகவானுடைய வலிமையானது உம்மைக்கொண்டு தொழில் புரிவிக்கிறது என்பதை நான் தெளிவாகக் காணுகிறேன். அது எனக்குப் பட்டப்பகல் போலத் தெளிவாக விருக்கிறது.

சுவா : நாங்கள் எங்கள் சித்தப்படிக் காரியங்களைச் செய்கின்றோம். ஆனால், துன்பம், கவலை, மிடி, வறுமை, என்னுமிவை எய்தும்பொழுது அவன் தன்னை வெளியிட்டுக் காட்டி நம்மை உண்மையாகிய மார்க்கத்திலே வழி நடத்துகிறான். இதனை நான் உணர்ந்து கொண்டேன். அப்படி இருந்தும் அவருடைய மகத்துவத்தை நான் அறிந்துகொள்ளாமல் இருக்கின்றேன்.

கி. பா : ஆம், அவருடைய திருவாக்கின்படி "நீர் அதனை முற்றும் அறிவீராயின் அனைத்தும் மறைந்து விடும் ; பின்பு யார் வேலை செய்வார், யார் செய்விப்பார்?"

இதன் பின்பு சம்பாஷணை அமெரிக்காவைப்பற்றி நிகழ்ந்தது. சுவாமிஜி மிகுந்த ஆர்வத்தோடு அந்த நாட்டின் அற்புதமான ஐஸ்வரியத்தைப்பற்றியும் அங்குள்ள ஆடவர் பெண்டிரின் நன்மை தீமைகளைப்பற்றியும், அவர்களது செல்வ வாழ்க்கைகளைப்பற்றியும் பேசினார்.

(7)

[இடம் : கல்கத்தா ; காலம் : 1897-ம் ஆண்டு.]

சில நாட்களாகச் சுவாமிஜி பாக்பஜாரிலே பலராம் வசுவினுடைய வீட்டிலே இருக்கிறார். இன்று ஒரு பூரண சூரிய கிரகணம் சம்பவிக்கப்போகின்றது. இன்று காலை சிஷ்யர் சுவாமிஜிக்குச் சமையல் செய்ய வேண்டிய

வர். அதற்காக வந்தபொழுது சுவாமிஜி அவரை நோக்கி, "நல்லது, சமையல் கிழக்கு வங்காள முறையாக இருக்கட்டும். கிரகணம் வருவதற்கு முன்னர் நாமெல்லோரும் போஜனத்தை முடித்துவிட வேண்டும்" என்றார்.

வீட்டில் உட்பக்கத்து அறைகள் குடிவாழ்வோரின்றி இருந்தன. சிஷ்யர் அடுக்களைக்குப் போய்ச் சமையல் செய்யத் தொடங்கினார். சுவாமிஜி இடையிடையே நோக்கி உற்சாகமான வார்த்தைகளைக் கூறி, "சாறு கிழக்கு வங்காள முறையா யிருக்கட்டும்" என்று கூறிப் பரிகசித்தார்.

சமையல் ஏறக்குறைய முடிந்துவிட்டது. சுவாமிஜி நீராடிய பிறகு திருவமுது செய்யவந்தார். தமது ஆசனத்தையும், வட்டிலையும், எடுத்து வைத்துக்கொண்டு, "ஏதாவது முடிந்ததைக் கொண்டு வா, பசி பொறுக்கவில்லை, தாமதிக்கக்கூடாது" என்றார். உண்ணும் சுவாமிஜி கசப்பு உள்ள கறியைப் பெரிதும் விரும்பி, "இதைப்போல் நேர்த்தியான பதார்த்தத்தை நான் முன்பு உண்டதில்லை. ஆனால் உறைப்பளவில் உன்னுடைய சாற்றுக்கு நிகராகவேறொன்றும் இல்லை" என்றார். புளிக்கறியை உண்ணும்பொழுது இது பர்த்துவான் நாட்டு முறையாக இருக்கிறது என்றார். உண்டு கையலம்பிய பின்னர் அறையினுள்ளே கட்டிலின்மீது உட்கார்ந்திருந்தார். உணவுக்குப் பின்னர்ப் புகை குடித்துக் கொண்டிருக்கும்பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "நன்றாய்ச் சமைக்க முடியாதவன் நல்ல சாதுவாதல் கூடாது; மனம் பரிசுத்தமாயிருந்தாலன்றி இனிய சுவையுள்ள உணவை அமைத்தல் கூடாது" என்றார்.

இதன் பின்பு எத்திசையிலுமிருந்து மணியோசையும் சங்கநாதமும் எழுந்தன. சுவாமிஜி சிஷ்யனை நோக்கி, "இப்பொழுது கிரகணம் ஆரம்பித்துவிட்டது; நான் சிறிது நேரம் நித்திரை செய்கிறேன்; நீ என் கால்களை வருடுவாயாக" என்றார். சிறிது சிறிதாகச் சூரியபிம்பம்

முழுவதும் கிரகணத்தினுல் மறைக்கப்பட்டது. எப் பக்கத்திலும் மாலைக்காலம் போன்ற இருள் நிறைந்தது.

கிரகணம் கழிவதற்கு இன்னும் பதினைந்து இருபது நிமிஷம் இருக்கும்பொழுது, சுவாமிஜி சயனத்தினின் றெழுந்து கைகால்களைக் கழுவிக்கொண்டு புகை குடிக் கும்பொழுது, சிஷ்யரை நோக்கி நகைமொழியாகப் பின் வருமாறு சொல்லுவாராயினுர்: கிரகணகாலத்திலே ஒரு வன் எதனைச் செய்கின்றுனே அவன் அதனை மேல்வருங் காலத்தில் ஒன்று கோடியாகப் பெறுவான் என்று சொல்லுகிருர்கள்; இந்த உடலம் நல்ல நித்திரை பெறும் படி உலகமாதாவாகிய மஹாமாயை கற்பிக்கவில்லை, கிரகண காலத்திலே சிறிது துயின்றுல் எதிர்காலத்தில் அதிகமாகத் துயிலைப் பெறலாம் என்று நினைத்தேன். ஆனுல் காரியம் கைகூடவில்லை; பதினைந்து நிமிஷம் மாத்திரந்தான் நித்திரை கொண்டேன்.

இதன் பின்பு சுவாமிஜியினுடைய கட்டளைப்படி சில சுருக்கமான பிரசங்கங்கள் நடந்தன. மாலைக்காலத் துக்கு இன்னும் ஒருமணி நேரம் இருந்தது. எல்லோரும் மண்டபத்திலே கூடி இருந்தார்கள். சுவாமிஜி அவர்களை நோக்கி விரும்பிய வினவைக் கேட்கலாம் என்று சொன் ஞர்.

அப்பொழுது சுவாமி சுத்தாநந்தர் எழுந்து, " ஐய, தியானத்தின் உண்மைத் தன்மை என்ன ?" என்று வினவினுர்.

சுவா : தியானம் என்பது ஏதாவது ஒரு பொருளைக் குறித்து மனத்தை ஒரு வழிப்படுத்தி நிறுத்துவது. எப் பொருளாயினும் ஒரு பொருளின்மீது மனம் ஒரு வழிப் பட்டு நிற்குமாயின் மற்றெப் பொருளின்மீதும் அதனை ஒரு வழிப்படுத்துவது இயல்வதாகும்.

சிஷ் : சாஸ்திரங்களிலே, பொருளைக் குறித்த தியா னம், ஒரு பொருளையும் குறியாத தியானம் என இருவகை யாகக் கூறப்பட்டிருக்கின்றனவே. இவற்றின் கருத் தென்ன, இவற்றினுள் மிக்கது எது?

சுவா : முதலிலே மனத்தின் முன்னிலையில் யாதாயினும் ஒரு பொருளை வைத்துத் தியானத்தை அப்பியசிக்க வேண்டும். ஒரு காலத்திலே நான் ஒரு கரிய புள்ளியை மனத்தின் முன்னே வைத்துத் தியானிப்பதுண்டு. அந்நாட்களின் இறுதியில் முன்னிருந்த புள்ளி தோற்றமல் போய்விட்டது. மனமானது காற்றுச் சிறிதுமில்லாத கடலைப்போல அலையின்றி விருத்திகளிலிருந்து ஒழிந்தது ; மனமே இல்லாது போய்விட்டது அந்த நிலையில் உணர உணர்வு கடந்த உண்மையை நான் சிறிது அநுபவிப்பது உண்டு. எந்த அற்ப வஸ்துவைப் பற்றியாயினும் மனத்தை ஒரு வழிப்படுத்தப் பழகுவது ஏகாக்கிர சித்தத்துக்கு வழியாகுமென நான் எண்ணுகிறேன். ஒருவனுடைய மனம் இலகுவாக எதனைப் பற்றக்கூடுமோ அதனைப்பற்றித் தியானித்துப் பழகுதலினல் மனமானது எளிதில் அமைதி நிலையை அடைகின்றதென்பது உண்மையே. இந்த நாட்டிலே தேவர் தேவிகளுடைய உருவங்களை வைத்து வழிபடுவது இந்த நியாயத்தினுலேதான். அத்தகைய வழிபாட்டிலிருந்து அற்புதமான ஓவியக்கலை விருத்தி அடைந்தது. அவை எல்லாம் இப்பொழுது இல்லை. தியானிப்புக்கு உரிய பொருள் எல்லா மனிதருக்கும் ஒன்றுகவிருத்தல் கூடாது. தாங்கள் எந்தப் புறப்பொருளைத் தியானித்துப் பூரண நிலையை அடைந்தார்களோ, அதனையே உலகுக்கு வெளிப்படுத்திப் போதித்தார்கள். பூரணமாகிய மனச் சாந்தத்தை அடைவதற்கு இந்தத் தியான உருவங்கள் உதவி மாத்திரையாக இருப்பன என்னும் உண்மையை மறந்து, மனிதர் அவற்றை அளவுகடந்து போற்றினுர்கள். முழுக்கருத்தையும் கருவிகளிலே செலுத்தினுர்களன்றி அவற்றுல் எய்தும் பயனை முற்றிலும் மறந்திருந்து விட்டார்கள். மனத்தைத் தொழிலின்றி அசைவற்றிருக்கச் செய்வதே உண்மையான நோக்கம் ; யாதாயினும் ஒரு பொருளிலே முற்றிலும் அமிழ்ந்து இருந்தாலன்றி இதனைப் பெறுவது அரிதாகும்.

சிஷ் : மனமானது யாதாயினும் ஒரு பொருளோடு சம்பந்தப்பட்டு முற்றிலும் அமிழ்ந்து இருக்குமாயின் அது எங்களுக்குப் பிரம்ம ஞானத்தைத் தருதல் எவ்வாறாகும் ?

சுவா : மனமானது முதலிலே தியானிக்கின்ற பொருளின் வடிவத்தைக் கொள்ளுகின்றதெனினும், பின்பு அதனைப்பற்றிய எண்ணமே அகன்று விடுகின்றது. சுத்தமாகிய 'உள்ளது' என்னும் அநுபவமே மிஞ்சியிருக்கின்றது.

சிஷ் : ஐய, மனம் தியானத்தில் நிலைபெற்ற பின்பும் இச்சைகள் எழுகின்றனவே?

சுவா : இவை பூர்வ சமஸ்காரங்களிலிருந்து தோன்றுகின்றன. புத்ததேவர் சமாதியிலே அமிழ்ந்து போகின்ற சமயத்தில் மாரன் வெளிப்பட்டான். மனத்துக்குப் புறம்பே உண்மையில் மாரன் இல்லை. மனத்தினுடைய பூர்வ சம்ஸ்காரங்களே அவ்வண்ணம் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன.

சிஷ் : பூரண நிலையை அடைவதற்கு முன்பு பயங்கரமான அநுபவங்கள் பல உண்டாகின்றனவெனக் கேள்விப் படுகின்றோமே, அவை எல்லாம் மனத் தோற்றங்கள்தாமா ?

சுவா: வேறு என்ன? சாதகன் அக்காலத்தில் அவற்றைத் தம்மனத்தின் புறத்தோற்றங்களென அறிந்து கொள்வதில்லை. ஆயினும் மனத்துக்கு வெளியே வேறொன்றும் இல்லை. நீ உலகம் எனக் காணுகின்ற இதுவும் மனத்துக்கு வெளியே இல்லை. யாவும் மனத்தின் புறத்தோற்றமே. மனம் செயலற்று இருக்கும் பொழுது, பிரம்மஞானம் தோன்றுகின்றது. அப்பொழுது எல்லா லோகங்களையும் காணுகின்ற அநுபவம் கிடைக்கலாம். **யம் யம் லோகம் மனஸா ஸம்விபாதி** "எந்த எந்த உலகத்தை ஒருவன் மனத்திலே விரும்பி அழைப்பினும்" என்றபடி எது நிச்சயிக்கப்படுகிறதோ

அது உடனே கைகூடும். இத்தகைய பொய்யற்ற சுயேச்சை நிலையை அடைந்த பின்பும், ஒருவன் விழிப் போடு இச்சையறுத்து இருப்பானாயின், அவன் உண்மை யாகவே பிரம்ம ஞானத்தை அடைவான். இந்த நிலையை அடைந்த பின்பு கடைப்பிடியில் நின்று தவறியவன், அநேக சித்திகளைப் பெறுவான். ஆனால் அடைதற்கரிய பேரின்ப வீட்டை அடையமாட்டான்.

சுவாமிஜி, 'சிவ', 'சிவ', என்று உச்சரித்து மேலும் சொல்லுவாராயினர். " வாழ்க்கையின் பரம ரகசி யத்தை அறிவதற்குத் தியாகத்தைவிட வேறு வழி யில்லை. தியாகம், தியாகம், தியாகம். இது உங்கள் வாழ்க் கையின் நோக்கமாயிருப்பதாக. **ஸர்வம் வஸ்து பயான்விதம் புவி நிருணும் வைராக்ய மேவாபயம்** "உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் மனிதருக்கு அச்சத்தை விளைக்கின்றன ; வைராக்கியம் மாத்திரமே அச்சமின்மையோடு கூடி இருக்கின்றது."

(8)

[இடம் : கல்கத்தா. காலம் : 1897-ம் ஆண்டு மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதம்-]

சிஷ்யர் இன்று சுவாமிஜியைச் சந்திக்கும் நோக்கமாக பாக்பஜாருக்கு வந்தபோது சுவாமிஜி வெளியே போக ஆயத்தமா யிருக்கக்கண்டார். மேன்மாடியிலிருந்து கீழே இறங்கிவந்த சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, 'என்னோடு உடன் வருவாய்' என்றார். சிஷ்யரும் பின் தொடர்ந் தார். இருவரும் வாடகை வண்டி ஒன்றில் ஏறித தெற்குநோக்கிச் சென்றனா.

சிஷ் : ஐய, தேவரீர் எங்குச் செல்லுகின்றீர், தயை செய்து சொல்லவேண்டும் ?

சுவா : நல்லது, என்னோடு உடன்வா, தெரிந்து கொள்ளலாம்.

போகுமிடத்தைச் சிஷ்யருக்குத் தெரிவிக்காமல் செல்ல, வண்டியும் பீடன் தெருவை அடைந்தது. சுவாமிஜி பின்வருமாறு சொல்லுவாராயினர்: "உங்களுடைய நாட்டிலே பெண்களுக்குக் கல்வி பயிற்றுவதைக் குறித்து உண்மையான முயற்சி செய்பவரை யான் காணவில்லை. ஆடவர்களாகிய நீங்கள் உங்களது ஆண்மையை விருத்திசெய்யக் கற்றுக்கொள்ளுகிறீர்கள். உங்களுடைய நன்மையிலும் தீமையிலும் பாகம் பெற்று உங்கள் வீட்டிலே உங்களுக்குத் தொண்டு செய்வதற்காகத் தமது உயிரைக் கொடுக்கின்ற பெண்களுடைய கல்விக்காக நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?"

சிஷ்: ஏன் ஐயா, இந்த நாட்களில் பெண்களுக்கென எத்தனை வித்தியாசாலைகளும், கலாசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களில் எத்தனைபேர் பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றிருக்கிறார்கள்!

சுவா: ஆனால், அவை எல்லாம் மேல்நாட்டு முறையிலிருக்கின்றன. உங்களுடைய சமய சாஸ்திரங்களுக்கு இணங்கத் தேசிய முறையிலே எத்தனை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. உங்களுடைய நாட்டிலே பெண்களைப்பற்றிப் பேசுவானேன். ஆண்களுக்குத் தானும் தேசிய முறைக் கல்வி கிடைப்பதில்லை. அரசியல் அறிக்கைப் பத்திரங்களின்படி இந்தியா நாட்டிலே நூற்றுக்கு மூன்று வீதமோ நான்கு வீதமோ ஆனவர்கள்தான் கல்வி பெறுகிறார்கள். அதிலும் பெண்கள் நூற்றில் ஒருவர்தான்.

அப்படி இல்லாதிருப்பின் நாடு இவ்வளவு கீழான நிலைமை அடைந்ததெப்படி? அறிவு உதித்துக் கல்வி பரவாவிடில் நாட்டிலே எப்படி முன்னேற்றம் உண்டாகும்? எதிர்காலத்துக்கு நலம் புரிபவர்களாகிக் கல்வி என்னும் பாக்கியத்தை இந்த நாட்டிற் பெற்ற ஒரு சிலருள்ளும் இக்கருமத்திலேயே உண்மையாகிய முயற்சி உடையவர்களைக் காண்பது அரிது. பெண்களுள்ளும்

பொது ஜனங்களுள்ளும் கல்வி பரப்பினாலன்றி இப்பொழுது இருக்கின்ற நிலையைச் சீர்திருத்துவது முடியாதென்பதை நிச்சயமாக அறிந்து கொள்ளுவாயாக! சில பிரம்மசாரிகளையும், பிரம்மசாரிணிகளையும் பயிற்ற வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு உண்டு. பிரம்மசாரிகள் காலகதியிலே சந்நியாசம் பெற்றுக்கொண்டு கிராமம் கிராமமாக நாடெங்கும் சென்று பொது ஜனங்களிடையே கல்வி ஒளியைப் பரப்புவதற்கு முயலுவார்கள். பிரம்மசாரிணிகளும் பெண்களினிடையே அவ்வண்ணம் செய்வார்கள். முழுவேலையும் நமது நாட்டு முறையாகச் செய்யப்படல் வேண்டும். ஆண் பிள்ளைகளைப் பயிற்றுவதற்கு நிலையங்கள் தொடங்குவதுபோல் பெண் பிள்ளைகளைப் பயிற்றுவதற்கும் தொடங்குதல் வேண்டும் நல்லொழுக்கமும் கல்வியுமுள்ள பிரம்மசாரிணிகள் இந்த நிலையங்களிலே கல்வி பயிற்றுந் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும். இதிகாச புராணங்களும், கலை நூல்களும், வீட்டுக் கடமைகளும், நல்லொழுக்கத்துக்குரிய முறைகளும் கற்பிக்கப்படல் வேண்டும். இவையெல்லாம் தற்கால விஞ்ஞான சாஸ்திரத்தை உதவியாகக் கொண்டு கற்பிக்கப்படல் வேண்டும். நல்லொழுக்கத்திலும், ஆத்மீக வாழ்க்கையிலும் பெண் பிள்ளைகளைப் பயிற்றுதல் வேண்டும். காலகதியிலே நல்ல வீட்டுத் தாய்மார்களாக வளரச் செய்யவேண்டும். அத்தகைய தாய்மார்களுடைய பிள்ளைகள் சிறப்பினைத் தருகின்ற நல்லொழுக்கத்திலே மேன்மேலும் முன்னேற்றம் அடைவார்கள். கடவுட் பக்தியும் கல்வியுமுள்ள தாய்மார் வாழுகின்ற மனைகளிலே பெரிய மனிதர் பிறக்கின்றனர். நீங்களோ பெண்களைக் குழந்தை உண்டாக்கும் இயந்திரமாக்கி விட்டீர்கள்; ஐயோ, இதுதானா உங்கள் கல்வியின் பெறு பேறு? பெண்களின் உயர்வு, பொது ஜனங்கள் விழித்தெழுதல் ஆகிய இவை முன்வரல் வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவான நமது நாட்டுக்கு உண்மையான நன்மை வரும்.

சோரபாகன் என்னும் இடத்துக்குச் சமீபமாகப் போகும்பொழுது சுவாமிஜி, தம்மை மஹாகாளி பாடசாலையை நிறுவிய தபஸ்வினி மாதாஜி பாடசாலையைப் பார்வையிடும்படி அழைத்திருப்பதாகத் தெரிவித்தார். வண்டி பாடசாலையை அடைந்ததும், மூன்று நான்கு பெருமக்கள் சுவாமிஜிக்கு வந்தனை செய்து மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே தபஸ்வினி மாதா எழுந்து நின்று சுவாமிஜியை வரவேற்று ஒரு வகுப்புக்கு அழைத்துச் சென்றார். அங்கே நின்ற கன்னியர்கள் சுவாமிஜிக்கு வந்தனை செய்து மாதாஜியினுடைய கட்டளைப்படி சிவநாம சங்கீர்த்தனமாகிய ஒரு சம்ஸ்கிருத ஸ்தோத்திரத்தைப் பொருத்தமான இராகத்தோடு பாடினார்கள். அதன் பின் தங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்த பூஜைக் கருமங்களைக் காட்டினார்கள். அதிக சந்தோஷத்தோடும் ஆர்வத்தோடும் சுவாமிஜி இவற்றை யெல்லாம் பார்த்துவிட்டு மற்ற வகுப்புகளைப் பார்வையிட்டார். அதன் பின் மாதாஜி ஒரு சிறுமியை அழைத்துக் காளிதாசர் ரகுவம்சத்திலே மூன்றாம் காண்டத்து முதல் சுலோகத்தைத் தெளிவுபடுத்தும்படி கட்டளையிட்டார். சிறுமியும் அவ்வண்ணம் செய்தாள். மாதாஜி கடைப்பிடியோடும் ஊக்கத்தோடும் பெண்களுக்குள்ளே கல்வி பரப்புகின்ற காரியத்தில் ஓரளவுக்கு அநுகூல முற்றிருப்பதைச் சுவாமிஜி சந்தோஷத்தோடு தெரிவித்தார். மாதாஜியும் பணிவினோடு "இந்த சிறுமிகளுக்குச் சேவை செய்வதை உலக மாதாவுக்குச் சேவை செய்வதாகக் கருதுகின்றேன். கீர்த்தியையோ, பிறிதொன்றையோ விரும்பி நான் இப்பாடசாலையை ஆரம்பிக்கவில்லை" என்றார்.

மாதாஜியினுடைய கேள்விப்படி சுவாமிஜி பாடசாலையைப் பற்றிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதும் பொழுது, "இந்த இயக்கம் சரியான வழியிலே நடக்கின்றது" என்று எழுதினார்.

மாதாஜிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு சுவாமிஜி வண்டியிலேறி பாக்பஜாருக்கு வரும்பொழுது, சுவாமி

ஜிக்கும் சிஷ்யருக்கும் இடையில் பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது

சுவா : இந்த மகத்துவம் பொருந்திய அம்மையாரின் பிறப்பிடம் எவ்வளவு தூரத்திலுள்ளது! லௌகிக வொழுக்கையிலுள்ள அனைத்தினையும் தியாகம் செய்து விட்டார். ஆயினும், மக்களுக்குச் சேவை செய்யும் விஷயத்தில் எவ்வளவு ஊக்கமாயிருக்கிறார்! அவர் பெண் பிள்ளையாயிராவிட்டால், பெண்களுக்குக் கல்வி பயிற்றுகின்ற வகையில் இவ்வளவு முயற்சித்தல் கூடுமா? இங்குநான் கண்ட அனைத்தும்செவ்வையாயிருக்கின்றன. கிருகஸ்தராகிய ஆண்பிள்ளைகள் சிலரை ஆசிரியர்களாக வைத்திருப்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. கல்வி கற்ற விதவைகளும், பிரம்மசாரிணிகளுமே இங்கு உபாத்தியாயர்களாய் இருக்கவேண்டும். இந்த நாட்டிலே பெண்பாடசாலைகளிலே ஆண் பிள்ளைகளுக்குத் தொடர்பு இருப்பது கூடாது.

சிஷ் : ஐய, இந்த நாட்டிலே கார்கி, கனா, லீலாவதி இன்னும் இவர்களைப் போன்ற கல்வி கற்ற ஒழுக்கம் வாய்ந்த பெண்களைப் பெறுவது எப்படி?

சுவா : இத்தகைய பெண்கள் இந்த நாட்டிலே இப்பொழுது இல்லையென்று எண்ணுகிறாயா? சீதையும், சாவித்திரியும் வாழ்ந்த இந்த நாட்டிலே, பரதகண்டமாகிய பரிசுத்த பூமியிலே ஒழுக்கம், தொண்டு, அன்பு, கருணை, மலர்ச்சி, வணக்கம் என்னும் இவற்றிலே சிறந்த பெணகளைக் காணலாம். இப்படி உலகத்தின் மற்றப் பாகங்களில் காணுவதற்கில்லை. மேல் நாட்டிலுள்ள பெண்கள் பெண்களைப்போல் காணப்படுவதில்லை. ஆடவர்களைப் போன்று வண்டியோட்டுவதும் கரும ஸ்தலங்களில் வேலை செய்வதும், பாடசாலைக்குப் போவதும், ஆசிரியர் கடமை செய்வதுமாய் இருக்கின்றார்கள். கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தருவதாகிய பெண் தன்மைக்குரிய நாணம் மடம் என்பனவற்றை இந்தியாவிலே தான் காணலாம். இத்தகைய சிறந்த

குணங்கள் வாய்ந்தவர்களை உயர்வடையச் செய்வதற்கு நீங்கள் முயற்சிக்கவில்லை. கல்வி அறிவை அவர்களுக்கு ஊட்ட நினைக்கவில்லை. சரியான கல்வி அறிவு பெற்றால் உலகத்திலே மிகச் சிறந்த பெண்களாக இவர்கள் விளங்குவார்கள்.

சிஷ் : மாதாஜி கல்விச்சாலை நடத்திக்கொண்டு வருகிற முறையில் இங்குள்ள சிறுமிகளும் வளர்ந்து, விவாக முடித்து மற்றைய பெண்களைப்போல ஆகிவிடுவார்கள். இந்தச் சிறுமிகள் பிரம்மச்சரிய விரதத்தைக் கைக்கொள்ளுவார்களாயின் தங்களுடைய தேச முன்னேற்றத்துக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்து நமது சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கிற அதியுயர்ந்த நிலையை அடைவார்கள்.

சுவா : ஆம், எல்லாம் காலகதியிலே கைகூடும். ஜனசங்கத்தினுடைய வார்த்தைக்குச் செவி சாயாது பெண்களுடைய விவாகத்தை நிறுத்திவைக்கக்கூடிய கல்வி நிறைந்த மனிதர் இந்நாட்டில் இன்னும் பிறக்கவில்லை. தம்மோடு ஒத்த குலத்தவர்கள் குறை கூறுவதற்கு அஞ்சிப் பெண் பிள்ளைகளுக்குப் பன்னிரண்டு பதின்மூன்று வயது நிரம்புவதற்கு முன்னர் மணம் முடித்துக் கொடுப்பது இந்த நாட்டு வழக்கம். சம்மத வயதைப்பற்றிய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த பொழுது, ஜன சங்கத்தலைவர் பலர் பத்து லக்ஷம் ஜனங்களை ஒன்றுகூட்டி இச் சட்டம் வேண்டாம் என ஆரவாரம் செய்வித்தனர். மற்ற நாடுகளிலோவென்றால், சட்டத்திற்கு எதிராகக் கூட்டம் கூடாதிருப்பது மாத்திரமல்ல, அத்தகைய இழிவு ஜன சங்கத்தில் இருக்கின்றதே என்பதை நினைத்து மக்கள் வெட்கத்தினால் தலை குனிந்து விடுவார்கள்.

சிஷ் : ஆனால், ஐய, பழைய ஸ்மிருதிக்காரர்கள் வாலிப விவாகமாகிய கொள்கையை நியாயமில்லாமல் ஆதரித்திருப்பார்களா ? அவர்களுடைய செய்கையிலே ஏதாவது ஓர் உட்கருத்திருக்கலாம்.

சுவா : என்ன உட்கருத்து? தயை செய்து சொல்வாயாக?

சிஷ் : உதாரணமாக முதலிலே பெண்கள் இளம் வயதில் மணம் முடித்துத் தமது நாயகருடைய வீட்டுக்கு வந்தால் அந்த வீட்டாருடைய பழக்க வழக்கங்களைச் சிறு வயதிலே பயின்று கொள்ளுவார்கள். மாமன் மாமியினுடைய ஆதரவினாலே வீட்டுக்கடமைகளைச்செய்கின்ற விஷயத்தில் அவர்கள் சாதுர்யமடைவார்கள். பெற்றோருடைய மனையிலே வளர்ந்த பெண்கள் ஒழுக்கம் தவறிப் போகுதலும் கூடும். பாலியத்திலே விவாகம் செய்துவிட்டால் அவர்கள் ஒழுக்கந் தவற நேராது. மடம், நாணம், தைரியம், ஊக்கம் என்றித் தகைய நற்குணங்கள் அவர்களிடம் விருத்தியாகும்.

சுவா: மற்றப் பக்கம் பார்க்கும் பொழுது இளம் வயதிலே விவாகம் செய்வதனால் இளம் வயதிலே குழந்தைகளைப் பெற நேரிடுகிறது. இதனால் நமது பெண்கள் சிலர் சிறு வயதில் இறந்து விடுகிறார்கள்; அவர்களுடைய குழந்தைகளும் வலிமையற்று, ஊரிலுள்ள பிச்சைக்காரர்கள் தொகையை அதிகப்படுத்துகிறார்கள். பெற்றோருடைய உடலம், சுகமும் பலமும் இல்லாததாயிருக்குமாயின், அவர்கள் வலிமையும் சுகமுமுள்ள பிள்ளைகளைப் பெறுவது எப்படி? கல்வி நயத்தோடு வளர்ந்து, சிறிது பிந்தி விவாகம் செய்து கொள்ளுவார்களாயின், நமது அன்னைமார் நாட்டுக்குப் பெருநலத்தைத் தரத்தக்க நல்ல பிள்ளைகளைப் பெறுவார்கள். இந்தப் பாலிய விவாகப் பழக்கத்தினாலேதான் ஒவ்வொரு வீட்டிலும் எத்தனையோ விதவைகள் இருக்கிறார்கள். பாலிய விவாகம் குறைந்தால் விதவைகளின் தொகையும் குறையும்.

சிஷ் : ஆனால், ஐயா, பெண்கள் வயதேறியபின் கல்யாணம் முடிப்பதாயின் அவர்கள் தங்கள் வீட்டுக் கருமங்களைச் செய்யாது இருந்துவிடுதல் கூடும். கல்கத்தாவிலே மாமிமார் சமையல் முதலிய எல்லா வேலைகளை

யும் செய்ய, கல்வி கற்ற மருமக்கள் பாதங்களிலே சிவப்பு மை பூசிக்கொண்டு சோம்பேறித்தனமாயிருந்து விடுகிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். கிழக்கு வங்காளத்திலே இப்படி ஒருபொழுதும் நடவாது.

சுவா : உலகத்திலே எல்லாப் பாகங்களிலும் நன்மையும் தீமையும் கலந்திருக்கக் காணலாம். ஒவ்வொரு நாட்டிலும் ஜன சங்கமானது தனது சொந்த முயற்சியினாலே தன்னை உருப்படுத்திக் கொள்ளுகிறது என்பது எனது கருத்து. ஆதலினாலே பாலியவிவாகத்தை நீக்குதல் விதவா விவாகம் செய்வித்தல் முதலிய சமூகச் சீர்திருத்தங்களைப்பற்றி நாம் இப்பொழுது கவலைப்பட வேண்டியதில்லை. ஜன சங்கத்திலே எல்லா ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் உண்மைக் கல்வியை உணர்த்தி வைப்பது நமது கடமை. அந்தக் கல்வியின் பயனாகத் தமக்கு நல்லது எது, தீயது எது என்பதைத் தாமாகவே உணர்ந்து தீயதைவிலக்கி விடுவார்கள். அப்பொழுது ஜன சங்கத்திலே எதையாவது வலிந்து நிறுவவோ அழித்து விடவோ வேண்டியதில்லை.

சிஷ் : நமது பெண்களுக்குப் பொருத்தமான கல்வி எதுவென்று நினைக்கிறீர்கள் ?

சுவா : சமயம், கலை, விஞ்ஞானம், வீட்டுப் பணி, சமையல், தையல், சுகாதாரம் என்றின்னவற்றுள்ளே இலகுவான இன்றியமையாத விஷயங்களைப் பெண்களுக்குக் கற்பிக்கவேண்டும். பொய்க் கதை, நவீனகம் என்னும் இவற்றை அவர்கள் தொடுதல் கூடாது. மஹாகாளி பாடசாலை பெரிதும் சரியான வழியிலேயே நடக்கின்றது. ஆனால் பூஜைக் கருமங்களை மாத்திரம் படிப்பிப்பது காணாது. கல்வி எல்லா விஷயத்திலும் கண் திறப்பதாய் இருக்கவேண்டும். தன்னலமற்ற உயர்ந்த கொள்கைகளை அவர்கள் கடைப்பிடித்து நடக்கும்படி பெரியோர்களுடைய சரித்திரங்களைப் போதிக்க வேண்டும். சீதா, சாவித்திரி, தமயந்தி, லீலாவதி, கானா, மீரா முதலியோருடைய உயர்ந்த முன் மாதிரியைக் காட்டிச் சிறுமிகள் இன்னோரைப் பின்பற்றித் தங்க

ளது வாழ்க்கையை உருப்படுத்தும்படி செய்ய வேண்டும்.

வண்டி பாக்பஜாரிலே பாபு பலராம்வசுவினுடைய வீட்டை அடைந்தது. சுவாமிஜி கீழே இறங்கி மேல் மாடிக்குச் சென்றார். அங்குக் கூடியிருந்தோர்க்கு மஹா காளி பாடசாலையிலே தாம் கண்ட அநுபவங்களை எடுத்துச் சொல்லினார்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ராமகிருஷ்ண சங்கத்து அங்கத்தவர்கள் செய்யவேண்டிய வேலையைக் குறித்துப் பேசும்பொழுது, சுவாமிஜி பல நியாயங்களைக் காட்டி வித்தியாதானம், ஞானதானம் என்னும் இவற்றி னுடைய சிறப்பை வலியுறுத்தினார். சிஷ்யரை நோக்கிக் " கல்வி கற்பி " "கல்வி கற்பி " **நான்ய : பந்தா வித்யதே அயனாய**. " இதனினும் பார்க்கச் சிறந்த வழி இல்லை " என்றார். கல்வியைப் பரப்ப வேண்டும் என்பதற்குத் தடை கூறுகின்ற பகுதியாரைக் குறிப்பிட்டு, ' பிரக லாதர் பக்கம் போகவேண்டாம் !" என்றார். (அதன் கருத்தை விசாரித்த பொழுது சுவாமிஜி பின்வருமாறு சொல்லுவாராயினர் :) " ஓ ! நீங்கள் கேள்விப்பட்ட தில்லையா ? பிரகலாதன் அரிவரி படிக்கத் தொடங்கிய பொழுது ' க ' என்னும் எழுத்தைக் கண்டதும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய நினைவு வந்து உள்ளம் குழைத்துக் கண்ணீர் பெருக்கினன். அதன்மேல் படிப்பு நடக்க வில்லை. பிரகலாதனுடைய கண்களிலுள்ள கண்ணீர் அன்புக் கண்ணீர். இக்காலத்து மூடர்களின் கண்ணீர் அச்சக் கண்ணீர். அநேக பக்தர்களும் அப்படித்தான்." சமூகமாயிருந்த அனைவோரும் இதனைக்கேட்டு நகைத் தார்கள். சுவாமி யோகானந்தர் சுவாமிஜியை நோக்கி " தேவரீருடைய உள்ளத்தில் எதனையாவது செய்ய வேண்டுமென்னும் உற்சாகம் ஏற்பட்டால், அதனை முற்றிலும் செய்து முடித்த பின்பன்றி ஆறியிருக்க மாட்டீர். இப்பொழுது எதனைச் செய்ய விரும்பு கிறீரோ அது சந்தேகமின்றி நிறைவேறும் " என்றார்.

(9)

[இடம் : கல்கத்தா. காலம் : 1897-ம் ஆண்டு.]

சுவாமிஜி பாக்பஜாரிலே காலஞ்சென்றுபோன பாபு பலராம் வசுவினுடைய வீட்டிலே இருக்கிறார். சென்ற பத்து தினங்களாக சிஷ்யர் சுவாமிஜியோடு ரிக்வேத சாயன பாஷ்யத்தை ஆராய்ந்து வருகிறார். செல்வவந்த ராகிய ஒரு நண்பரின் புத்தகத்தின் களஞ்சியத்திலிருந்து மாக்ஸ்முல்லர் பதிப்பித்த ரிக்வேதம் கொண்டுவரப்பட்டது. சிஷ்யர் வாசித்துச் சொல்லும்பொழுது அவரது உச்சரிப்பிலும் வாக்கியஅமைப்புகளிலும் வருகிற தவறுதல்களைச் சுவாமிஜி திருத்திக் கொடுத்தார். வேதங்களின் நித்தியத்துவத்தை நிலைநிறுத்தும் பொருட்டுச் சாயனர் காட்டிய நியாயங்களைச் சுவாமிஜி தெளிவுபடுத்தும் பொழுது பாஷ்யகாரருடைய அற்புதமான மதிநுட்பத்தைப் பெரிதும் புகழ்ந்தார்; மேலும் கொள்கைகளின் ஆழ்ந்த கருத்தை நுணுக விசாரிக்கும் போது சிற்சில அபிப்பிராய பேதங்களைச் சொல்லி சாயனர்மீது தீங்கற்ற நகைமொழிகளைக் கூறுவார்

ஆராய்ச்சி இப்படி நடந்துகொண்டிருக்கும் பொழுது, சுவாமிஜி மாக்ஸ்முல்லரைப்பற்றிப் பின்வருமாறு சொல்லுவாராயினர்: சாயனர் தாமே தமது வேதபாஷியத்தைப் புத்துயிர் தந்து, உலகிற் பரப்பும் பொருட்டு மாக்ஸ்முல்லராகப் பிறந்தார் என்னும் எண்ணம் எனக்கு உண்டு. நீண்டநாளாக இவ்வெண்ணம் இருந்தது. மாக்ஸ்முல்லரைப் பார்த்தபின்பு அவ்வெண்ணம் என்னுள்ளத்தில் உறுதிப்பட்டு விட்டது. வேத வேதாந்தங்களில் ஆழ்ந்த கல்வியும், இடையிடில்லாத முயற்சியுமுடைய ஒரு மறொ பண்டிதரை இந்த நாட்டிலே தானும் காண்பது அரிது. இதற்கு மேலாக அவரிடத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்து அளவு கடந்த அன்பும் மதிப்பும் இருக்கக் கண்டேன். இராம கிருஷ்ணர் தெய்வ அவதாரம் என அவர் நம்புகிறார்.

நான் விருந்தினராக இருந்தபொழுது என் மாட்டு அவர் அன்பாக விருந்தார். கிழவரையும் அவர் மனைவியாரையும் பார்த்தபொழுது, அவர்கள் மற்றுமொரு வசிஷ்டரையும் அருந்ததியையும் போலக் குடித்தன வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் என எனக்குப் பட்டது. நான் பிரியும் சமயத்தில் கிழவருடைய கண்களிலே கண்ணீர் வந்தது.

சிஷ்ய : ஆனால் ஐய, சாயனர் தாமே மாக்ஸ்முல்லராகப் பிறந்திருந்தால் பரிசுத்தம் பொருந்திய இந்தப் பாரதநாட்டிலே பிறவாமல் மிலேச்ச நாட்டிலே ஏன் பிறந்தார்?

ஸ்வா : நான் ஆரியன்; மற்றையோர் மிலேச்சர் என்று இவ்வாறு எண்ணுகிற எண்ணம் அஞ்ஞானத்திலிருந்து உற்பவித்தது. அறிவு விளக்கத்தின் வடிவமாக வேதத்துக்குப் பாஷ்யகாரராக விளங்குகின்றவரிடத்து வருணாச்சிரம ஜாதிப் பிரிவுகள் இருத்தல் கூடுமா? அவை எல்லாம் அவருக்குக் கருததுடைய பொருள்களாகத் தோற்றமாட்டா. மக்களுக்கு நன்மை பயக்கும்பொருட்டு அவர் விரும்பியஇடத்திலே மனிதப் பிறவி எடுக்கலாம். கல்வியும் செல்வமும் நிறைந்த நாட்டிலே அவர் பிறந்திராவிட்டால் அத்துணைப் பெரிய புத்தகங்களை வெளியிடுவதற்கு வேண்டிய செலவினை யாவர் கொடுப்பார்? ரிக்வேதத்தை வெளியிடும் பொருட்டுக் கிழக்கிந்திய கம்பெனியார் ஒன்பது லக்ஷம் ரூபாய் கொடுத்தார்கள் என்பதை நீ கேள்விப்படவில்லையா? இந்தப் பணமும் போதியதாயிருக்கவில்லை. இந்த நாட்டிலே வேதம்அறிந்த பண்டிதர்கள் நூற்றுக் கணக்கானவரை மாதச் சம்பளங் கொடுத்து வைக்க வேண்டியிருந்தது. இந்த நாட்டிலே இக்காலத்திலே அறிவை விரும்பிய மக்களாய், வித்தையின் பொருட்டு இத்தகைய பெரும்பணத்தைச் செலவழிக்கக் கூடியவர்களை யாராவது கண்டதுண்டா? நூல் முகவுரையிலே கையெழுத்துப்பிரதிகளை ஆயத்தப்

படுத்துவதற்கு இருபத்தைந்து ஆண்டுகள் சென்றது என மாக்ஸ்முல்லரே கூறுகிறார். அச்சிடுவதற்குப் பின்னும் இருபது வருஷம் சென்றது. ஒரு நூலை வெளியிடுவதில் தன் வாழ்நாளில் நாற்பத்தைந்து ஆண்டு இடைவிடாது முயலுவது சாதாரண மனுஷன் செய்யக் கூடிய செயலா? நினைத்துப் பார். அவர் சாயனர் தாமே என நான் கூறுவது வீண் மனோபாவனையா?

இவ்வண்ணம் மாக்ஸ்முல்லரைப்பற்றிப் பேசி முடிந்த பிறகு பின்பும் வேத வாசிப்பு ஆரம்பிக்கப் பட்டது. வேதங்களிலிருந்தே சிருஷ்டிக்கப்பட்ட பொருளனைத்தும் வெளிவந்தன எனும் சாயனர் கொள்கையை சுவாமிஜி பலவாறாக ஆதரித்துப் பேசினார். வேதமென்பது நித்தியமாகிய உண்மைகளின் தொகுதி; வேதரிஷிகள் இந்த உண்மைகளை அநுபவத்தில் கண்டறிந்தார்கள். அவற்றைப் புலன்களுக்கு அப்பாலாகிய காட்சியை உடைய ரிஷிகள் காணலாமே யன்றி, நம்மையொத்த சாதாரண மனிதர்கள் காண முடியாது. வேதங்களிலே ரிஷி என்பதற்கு மந்திர திருஷ்டர் எனப் பொருள் காணப்பட்டது. அம்மொழி கழுத்திலே எக்ஞோபவீதத்தைத் தாங்கிய பிராமணர்களைவரையும் குறிப்பதில்லை. வருணப் பிரிவு பின்பு ஏற்பட்டது. வேதம் சப்தத்தின் இயற்கையை உடையது. அது எல்லாச் சப்தங்களது தொகுதியாக இருக்கின்றது. நுணுகிய கருத்து மாத்திரையாயிருந்து, பின்பு பருப்பொருட்டன்மையிலே வெளிப்படுவது சப்தம் என வேதங்களினால் அறிகின்றோம். படைக்கப்பட்ட பொருள்கள் அழிந்து போகும்போது மேல்வரும் படைப்புக்கு வேண்டிய நுண்மையான பீஜ ரூபங்கள் வேதத்திலே சேர்ந்துவிடுகின்றன. ஆதலினாலே புராணங்களிலே முதல் அவதாரமாகிய மீனவதார காலத்திலே வேதங்கள் வெளிப்பட்டன எனக் கூறப்பட்டது. இந்த அவதாரத்திலே வேதம் வெளிப்பட்டபடியினால் ஏனைய சிருஷ்டி பேதங்கள் அதன் பின்பு

வெளிப்பட்டன. மற்றொரு வகையாகச் சொல்லு மிடத்து வேத சப்தங்களிலிருந்தே படைக்கப்பட்ட பொருள் அனைத்தும் பருப்பொருட் டன்மையாக உதித்தன என அறியலாம். பருப்பொருள்களுடைய நுண்ணிய உருவம் சப்தத்திலே தங்கியிருக்கிறது. முந்திய கற்பங்களிலும் சிருஷ்டி இவ்வண்ணமே உண்டாகியது. வேதங்களிலுள்ள சந்தியா மந்திரத்திலே **சூர்ய சந்த்ர மஸௌதாதா யதாபூர்வ மகல்பயத் ப்ரிதிவீம் திவம் சாந்தரீக்ஷ மயோ : ஸ்வ.** "சூரியன், சந்திரன், பூமி, வாயு, வானுலகு, மேலுலகு என்னும் இவையனைத்தையும் சிருஷ்டி கர்த்தர் முந்திய கற்பங்களிலே சிருஷ்டித்த முறையாக வெளிப்படுத்தினார்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது தெரிந்து கொண்டாயா?

சிஷ் : ஆனால், ஐய! உண்மையான பருப்பொருள இல்லாவிட்டால் சப்தம் எதனைக் குறிக்கும்? பெயர்களை இடுவது எப்படி!

சுவாமி : ஆம், முதலில் நினைக்கும் பொழுது அத்தகைய இடர்ப்பாடு தோன்றும் ஆனால் இதனை நினைத்துப் பார் கடம் சிறு துண்டுகளாக உடைந்து போய் விட்டால், கடம் என்ற சப்தம் இல்லாது போய்விடுகின்றதா? இல்லை. ஏனெனில், கடம் காரியப்பட்ட பருப்பொருள்; கடம் என்னும் சப்தமோ அதனது நுண்ணிய நிலை. இம்மாதிரியே ஒவ்வொரு பொருளும் நுண்ணிய நிலையில் சப்தமாக் நிரையாயிருக்கின்றன. நாம் கண்டு, கேட்டு, பரிசித்து அறிகின்ற பொருள் அனைத்தும் அந்தச் சப்தநிலை காரியப்பட்டுத் தோன்றுகிற பருப் பொருள் வடிவங்களே. இவற்றிடையே காரண காரிய சம்பந்தம் இருக்கிறது. தோற்றப் பிரபஞ்சம் அனைத்தும் அழிந்த பின்பும், தோற்றப் பொருள்களின் நுண்ணிய உண்மையாகிய சப்த வடிவம் காரண ரூபமாகப் பிரம்மத்தினிடத்தே நிலைபெற்று இருக்கிறது. சிருஷ்டி காலத்திலே காரண வடிவங்கள் தொழிற்பட்டு இயங்குகின்றன. நித்தியமான நாதவடிவாகிய பிரணவம் வெளிப்படுகின்றது. காரண வடிவங்களின் தொகுதி

லிருந்து ஒவ்வொரு பொருளின் சப்த வடிவமும் தோன்றிப் பருப்பொருளாகக் காரியப்படுகிறது. பிரபஞ்சத்தின் உணர்வாகிய காரண சப்தம் பிரம்மமாயிருக்கிறது; அதுவே வேதம். இது சாயனருடைய கருத்து. இப்பொழுது அறிந்து கொண்டாயா?

சிஷ்: இல்லை, ஐய! நான் தெளிவாக அறிந்து கொள்ளவில்லை.

சுவா: நல்லது, பிரபஞ்சத்திலுள்ள கடங்களெல்லாம் அழிந்து போனாலும் 'கடம்' என்னும் சப்தம் அழியாதிருக்கும். அவ்வண்ணமே பிரபஞ்சத்திலுள்ள பொருள் அனைத்தும் அணுவாகச் சிதைந்து போனாலும் அவற்றைக் குறிக்கிற சப்தங்கள் அறிவு மாத்திரையாக ஏன் இருத்தல் கூடாது? அவற்றில் இருந்து காலகதியிலே மற்றொரு சிருஷ்டி வருமென்று ஏன் என்னுதல் கூடாது?

சிஷ். ஆனால், ஐய! ஒருவன் "கடம்", "கடம்" என்று ஓலமிட்டாலும் கடம் உண்டாகுமா?

சுவா: நீயாவது, நானாவது அவ்வண்ணம் ஓலமிட்டால் ஒன்றும் உண்டாக மாட்டாது. ஆனால், சிருஷ்டி நிச்சயத்திலே பூரணமாகிய பிரமத்தினிடத்திலிருந்து இந்தச் சப்தம் எழுந்தால் கடம் வெளிப்பட்டே தீர வேண்டும். உறுதிபெற்ற சாதகர்கள் தம்முடைய சித்த சக்தியினாலே நிகழ முடியாதனவற்றை நிகழ்த்துகிறார்கள் என்றால் பூரண சிருஷ்டி சக்திவாய்ந்த பிரம்மத்தைப்பற்றிச் சொல்லுவானேன்? சிருஷ்டி காலத்திலே பிரம்மம் சப்தமாத்திரையாய்த் தோன்றி, அதன் பின் ஓங்காரமாகிய நாத வடிவத்தைக் கொள்ளுகிறது அடுத்த படியிலே பூர்வ கர்ப்பங்களிலே இருந்த பூ:, புவ:, ஸ்வ:, பசு, மனிதன் முதலிய சப்தவடிவங்கள் பிரணவத்திலிருந்து வெளிப்படுகின்றன. பூரண சித்த சக்தியையுடைய பிரம்மத்திலிருந்து இந்த எண்ணங்கள் வெளிப்பட அவற்றோடு பொருந்திய பருப்பொருள்களுந் தோன்றிப் பல்வேறு வகைப்பட்ட பிரபஞ்சமாக

உருப்படுகின்றன. சப்தமே சிருஷ்டிக்கு உற்பத்தி என்பதை இப்பொழுது அறிந்து கொண்டாயா?

சிஷ்: ஆம், ஐயா, ஒருவகையாக அறிந்துகொண்டேன். மனத்திலே தெளிந்துகொள்ளவில்லை.

சுவா: உண்மை அனுபவத்தினாலே அடைதற்குரிய தெளிந்த விளக்கத்தை அறிந்துகொள்ளுவது எளிதல்ல. மனமானது பிரமத்தினிடையே அமிழ்ந்து செல்லும்போது இந்தப்படிகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் கடந்து இறுதியிலே நிர்விகல்ப சமாதியை அடைதல் வேண்டும். சமாதியுட் புகும்பொழுது பிரபஞ்சம் அனைத்தும் ஒன்றுகூடிய சப்த வடிவங்களாகக் காணப்படும் அதன்பின் அனைத்தும் ஆழ்ந்த ஓங்காரத்திலே மறைந்துவிடும் அப்பால் உள் பொருளுக்கும் இல் பொருளுக்கும் இடை நீர்மையாக அது காணப்படும் அதுவே நித்யநாத அநுபவமாகும். அதன்பின் மனமானது பிரம்மமாகிய உண்மையிலே அமிழ்ந்து அழிந்துபோம். அனைத்தும் சாந்தியாகும்

சிஷ்யர் மௌனமாக இருந்தார். சுவாமிஜி தெளிவுபடுத்திய வண்ணமாக எடுத்துச் சொல்லுவது அனைத்தினையும் அநுபவத்திற் கண்டவர்களுக்கன்றி, பிறருக்கு முடியாத காரியம் என்பதை அவர் அறிந்தார்.

சுவாமிஜி மேலும் சொல்லுவாராயினர்: அவதார புருஷரைப்போன்ற பெரியோர் சமாதி நிலையிலிருந்து "நான்", "எனது" எனப்படும் எல்லையினுள்ளே வரும்பொழுது முதலிலே தோற்றமில்லாத நாதத்தை அநுபவிக்கிறார்கள். அது படிப்படியாகத் தெளிவுபட்டு ஓங்கார ரூபமாகின்றது அதன்பின் பிரபஞ்சத்தின் சப்த ரூபமாகிய எண்ணங்கள் அநுபவத்துக்கு வருகின்றன. கடைசியிலே அப்பொருளாகிய பிரபஞ்சம் காணப்படுகின்றது. சாதாரண சாதகர்களோவென்றால் மிகவும் முயன்று நாதத்துக்கு அப்பால் செல்லுகின்றார்கள். பிரம்ம தரிசனத்தை அடைந்த பின்பு சடப்பொருள் காட்சியாகிய கீழ்நிலைக்குவர அவர்க

ளால் முடியாது. ஸ்ரீ நிரவத். "பாலில் நீர்போலப் பிரமத்தினிடையே ஒன்றுபட்டுப் போகின்றார்கள்."

சிருஷ்டியைப் பற்றிய இந்த சம்பாஷணை நடந்து கொண்டிருக்கும்பொழுது பெரிய நாடக ஆசிரியராகிய பாபு கிரீஷ் சந்திரகோஷர் அவ்விடம் வந்தார். சுவாமிஜி அவருக்கு அன்பினோடு வந்தனை கூறிவிட்டுச் சிஷ்யருடைய பாடத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தார்.

சப்தங்களும் இருவகைப்படும்: வைதிக சப்தம், சாதாரண மானிட சப்தம் என. சப்த சக்திப்பிரகாசிகை என்னும் நியாய நூலிலே இதனை நான் கண்டேன். அங்குள்ள நியாயங்கள் மிகுந்த மனோசக்தியைக் காட்டுகின்றன. நூலின் பரிபாஷையோ என்றால் மூளைக்கு அலுப்பைக் கொடுக்கின்றது.

அப்பொழுது சுவாமிஜி கிரீஷ் பாபுவைப் பார்த்து, "கிரீஷரே, நீர் இந்தத் தெய்வத்தையும் அந்தத் தெய்வத்தையும் வழிபட்டுக்கொண்டு நாட்களைக் கழிக்கின்றீரே, இவற்றையெல்லாம் படிக்க நினைக்கவில்லையா?" என்றார்.

கிரீஷ் பாபு: என்னருமைச் சகோதரரே, நான் எதனைப் படிப்பேன்? இவற்றையெல்லாம் ஆராய்கின்ற மனத்தெளிவும் நேரமும் எனக்கு இல்லை. ஆனாலும் இம்முறை ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவருளினாலே உங்களுடைய வேத வேதாந்தங்களுக்கு வந்தனை கூறிவிட்டுக் கடந்து சென்று ஒரே பாய்ச்சலாக அப்பாலுக்கப்பாலாகிய பொருளை அடைவேன். உம்மால் எத்தனையோ காரியங்கள் நடக்கவேண்டி இருப்பதால் அவர் இந்தக் கல்விகளையெல்லாம் உமக்குக் கொடுத்திருக்கிறார். எங்களுக்கு இவற்றைப் பற்றிய அவசரமில்லை.

இவற்றைக் கூறிக் கிரீஷ் பாபு பெரிய ரிக்வேத புத்தகங்களையெல்லாம் பலமுறையும் தம்முடைய சிரத்தினாலே தொட்டு "வேதவடிவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு வெற்றி உண்டாகுக" என்றார்.

ஆலோசனையிலே ஆழ்ந்திருந்த சுவாமிஜியைக் கிரீஷ் பாபு சடுதியாக அழைத்து, "நான் சொல்வதை இன்னும் கேளும், எவ்வளவோ வேத வேதாந்தங்களை யெல்லாம் படித்திருக்கின்றீர். அவற்றிலே இந்த நாட்டிலுள்ள ஆழ்ந்த துன்பங்களுக்கும், பிரலாபங்களுக்கும், பட்டினிக்கும், விபசார முதலிய கொடிய பாபங்களுக்கும் தப்பி நாங்கள் வெளியேறுவதற்கு ஒரு மார்க்கம் எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா?" எனக்கூறி ஜனசங்கத்திலே இருக்கின்ற கொடிய துன்பங்களைப் பலமுறையும் வருணித்துக் கூறினார். மக்களுடைய துன்பத்தையும் கவலையையும் நினைத்த மாத்திரத்தே கண்களினின்று நீர் சொரியச் சுவாமிஜி பேச்சற்று மௌனமாயிருந்து தம்முடைய உள்ளக் குறிப்பை எங்களுக்கு மறைப்பவர்போல எழுந்து அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

அப்பொழுது கிரீஷ் பாபு சிஷ்யரை நோக்கிப் "பார்த்தாயா 'வங்காளி'? என்ன அன்பு நிறைந்த சிந்தை! உன்னுடைய சுவாமிஜி வேதங்களிலே வல்ல பண்டிதர் என்பதைக் குறித்து நான் அவரை மரியாதை பண்ணவில்லை; மக்களுடைய துயரத்தைக் கேட்டு அழுதுகொண்டு போனாரே, அந்தப் பெருமனதுக்காக நான் அவரை மதிக்கின்றேன்" என்றார். அதன்பின் சிஷ்யரும் கிரீஷ் பாபுவும் ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். கிரீஷ் பாபு அறிவும் அன்பும் ஒன்றேயாமெனை அத்தாக்ஷிப்படுத்தினார்.

அப்பொழுது சுவாமிஜி திரும்பி வந்து சிஷ்யரை நோக்கி "நீங்கள் பேசிக்கொண்டிருந்தது என்ன?" என்றார். அதற்கு சிஷ்யர் "ஐய, நாங்கள் வேதங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நம்முடைய கிரீஷ் பாபு இந்தப் புத்தகங்களைப் படிக்கவில்லை. ஆனால் அவற்றினது முடிந்த முடிவாகிய உண்மைகளைக் கூர்மையாக அறிந்திருக்கிறார்" என்றனர்.

சுவா: உள்ளபடி குருபக்தி உள்ளவனுக்கு எல்லா உண்மைகளும் தாமாகவே வெளிப்படுகின்றன; அவ

னுக்குப் படிப்பு வேண்டியதில்லை. ஆனால் இவ்வுலகிலே அத்தகைய பக்தி சிரத்தையைக் காணுவது மிகவும் அரிது. இங்குள்ள நமது நண்பரைப்போல அவற்றை உடையவர் சாஸ்திரங்களைப் படிக்க வேண்டியதில்லை என்றாலும் அவர் செய்கின்ற மாதிரிச் செய்ய வேண்டுமென்று விரைந்து முற்படுகிறவர்கள் தங்களுடைய அறிவையே தேடுகிறார்கள். அவருடைய புத்திமதிகளைக் கேட்டு நட. ஆனால் அவர் ஒழுகிவருகின்ற ஒழுக்கத்தைப் பார்த்து நடக்க முயலாதே.

சிஷ் : ஆம், ஐய.

சுவா : வெறுமனே ஆம் என்பதில் ஒன்றுமில்லை, நான் சொல்லும் வார்த்தைகளைத் தெளிவாகப் பற்றிக் கொள்வாயாக. சொல்வன எல்லாவற்றுக்கும் மூடனைப் போல ஆம் என்று தலையசைத்து விடாதே. நான் ஒன்றைச் சொல்லுகிறேனென்று அதனிடத்து மூட நம்பிக்கை வையாதே. முதலில் விசாரித்துத் தெளிவாகப் பற்றிக் கொள்; பின்பு ஏற்றுக்கொள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றினையும் தெளிவாக அறிந்துகொண்ட பின்பன்றி அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லையென எப்போதும் சொல்லுவார். எல்லோரும் உண்மையென்று சொல்லுகிற சாஸ்திரங்களையும், தெளிந்த விசாரிப்பையும், நிலைபேறான கொள்கைகளையும் கொண்டு நீ எந்தப் பாதையைக் கொண்டாயோ அதன் வழிநட. இடைவிடாத ஆராய்ச்சியினால் புத்தி தெளிவடைகின்றது. அப்பொழுதுதான் பிரம்மம் தோன்றும். தெளிந்து கொண்டாயா ?

சிஷ் : ஆம், ஐயா! வேறுவேறு வகைப்பட்டவர்கள் சொல்லுகின்ற பல்வேறு வகைப்பட்ட அபிப்பிராய பேதங்களினாலே மூளை அலைவுறுகின்றது. இந்தக் கணத்திற்றானே கிரீஷ் பாபு என்னை நோக்கி, "இந்தக் கல்வியினால் செய்யக்கூடியது என்ன?" என்றார். தேவரீர் வந்து, "கேட்பவற்றையும் படிப்பவற்றையும்

சிந்திப்பாயாக!'' என்கின்றீர். நான் செய்யவேண்டியது என்ன?

சுவா: அவர் சொன்னதும் நான் சொன்னதும் சரிதான். இரண்டு புத்திமதிகளும் வெவ்வேறு நிலைகளிலிருந்து கொடுக்கப்பட்டன. இந்து ஒன்றே வேறு பாடு. மூகாஸ்வாதனவத் "ஊமையன் உண்ட இனிய தின் பண்டம்போல" எல்லா நியாயங்களும் பேச்சற்று அடங்கிப் போகிற ஒருபடி ஆத்மீக வாழ்க்கையில் உண்டு. சாஸ்திரங்களைக் கற்பதனாலும், ஆராய்வத னாலும் பாடஞ் சொல்லுவதனாலும் ஆத்மீக வாழ்க்கை அடைவதற்கு மற்றொரு வழி யுண்டு கல்வி, ஆராய்ச்சி என்னும் இவற்றின் வழியாக நீ செல்லவேண்டும். நீ முத்தி அடைவதற்குரிய வழி அதுவே. அறிந்து கொண்டாயா?

சுவாமிஜியினிடத்திலிருந்து இந்தக் கட்டளையைப் பெற்றதும், சிஷ்யர் இது கிரீஷ் பாபுவினுடைய வார்த் தைக்கு மறுமாற்றமாகும் என்று மூடத்தனமாக நினைத்து "பார்த்தீரா, ஐயா! வேத வேதாந்தங்களைக் கற்று ஆராய்ச்சி செய்யும்படி சுவாமிஜி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்; அறிந்துகொண்டீரா?'' என் றார்.

கிரீஷ் பாபு: நல்லது, நீர் அப்படிச் செய்யலாம்; சுவாமிஜியினுடைய ஆசீர்வாதத்தினாலே அந்த வழியில் நீர் சித்தியடையலாம்

இந்தத் தருணத்தில் சுவாமி சதாநந்தர் அங்கு வந் தார். சுவாமிஜி அவரை நோக்கி, "கிரீஷர் நமது நாட்டி னுடைய துன்பங்களை விரித்துச் சொல்ல நான் கேட் டேன். அதனால் என் ஹிருதயம் மிகவும் கவலையுறு கின்றது. நமது நாட்டுக்காக நீ ஏதாவது செய்யக் கூடுமா?''

சதாநந்தர்: தேவரீருடைய கட்டளை பிறக்கட்டும்; அடிமை எப்பொழுதும் ஆயத்தமா யிருக்கிறேன்.

சுவா: முதலிலே சிறிய அளவிலே ஏழைகளுக்கும், துன்புற்றோருக்கும் ஆறுதல் அளிப்பதற்கும், நோயுற்றோரைக் குணப்படுத்துவதற்கும் ஒரு நிலையத்தை ஆரம்பிப்போம். தம்மைப் பார்த்துப் பராமரிப்பதற்கு யாருமில்லாத மக்கள், சாதி, சமய வேறுபாடில்லாமல் இவ்விடத்தில் வைத்துப் பார்க்கப்படுவார்கள்.

சதாநந்தர்: தேவரீருடைய கட்டளைப்படியே ஆகுக.

சுவா: உயிர்களுக்குச் சேவை புரிவதிலும் பார்க்கப் பெரிய தருமம் வேறு இல்லை. இந்தத் தருமத்தை அப்பியசித்தால் ஒருவனுக்கு **முக்திகரபலாயதே** "உள்ளங்கை நெல்லிக்கனிபோல் முக்தி வந்தெய்தும்."

பின்பு சுவாமிஜி கிரீஷ் பாபுவை நோக்கி, "பார்த்தீரா, கிரீஷ்ரே! உலகத்தின் துன்பங்களை நீக்கும் பொருட்டு ஆயிரம் பிறவி எடுக்கவேண்டியிருப்பினும் எடுப்பேன் என்னும் எண்ணம் என் மனதில் உண்டாகிறது. நான் அங்ஙனம் செய்வதனால் ஓர் ஆத்மாதானும் சோகத்திலிருந்து சிறிதாவது நிவர்த்தியடையுமாயின் நான் நிச்சயமாக அப்படிச் செய்வேன். தனித்து முக்தியடைவதால் பயனென்ன? அவ்வழி அனைவரையும் கொண்டு செல்லவேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் எனது மனத்திலேற்பட்டு நிற்பது ஏனென்று சொல்வீரா?"

கிரீஷ் பாபு: இல்லாவிட்டால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மற்றெவரினும் பார்க்க உம்மைச் சிறந்தவரென்று சொல்வானேன்?

இதனைச் சொல்லிவிட்டு கிரீஷ் பாபு வேறு காரியார்த்தமாக விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

(10)

[இடம்: ஆலம்பஜார் மடம். காலம்: 1897-ம் ஆண்டு]

சுவாமிஜி மேனாட்டிலிருந்து கல்கத்தாவுக்கு முதல் முறை வந்தபோது, தம்மைப் பணிந்த சிரத்தையுள்ள வாலிபர்களுக்கு மிகவும் உயர்வுடைய துறவொழுக்கக்

கொள்கைகளை எந்நேரமும் எடுத்துக் காட்டுவார். சந்நியாசம் பெற விரும்பினோரை அன்போடு மிகவும் ஊக்கப்படுத்துவார். அவருடைய ஆர்வத்தினாலே மன வெழுச்சி அடைந்த பேரதிருஷ்டசாலிகளாகிய சில வாலிபர்கள் லௌகீக வாழ்க்கையை ஒழித்துச் சுவாமிஜியினுடைய கையினாலே சந்நியாச தீக்ஷை பெற் றுக்கொண்டார்கள். இவருள் முதல் நால்வர் சுவாமிஜியினிடத்திலிருந்து சந்நியாசம் பெற்ற தினத் தில் சிஷ்யரும் ஆலம்பஜார் திருமடத்திலே சமூகமா யிருந்தார்.

சந்நியாசம் விரும்பி வந்த ஒருவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டாமெனச் சுவாமிஜியினுடைய சந்நி யாச சகோதரர்கள் பலமுறையும் கேட்டு நின்றதாகவும் அதற்குச் சுவாமிஜி மறுமொழியாகப் "பாவிகளையும் துயரம் சுமந்து தாழ்வடைந்தவர்களையும், உயிரிலே துன்புற்றவர்களையும், முத்தியங்கரைக்குக் கொண்டு செல்வதற்கு யாம் அஞ்சுவோமெனில், வேறு யார்தான் அவர்களைக் கருதப் போகின்றார்கள்? ஆதலினால் இந்த விஷயத்தில் எனக்கு எதிரிடையாக நில்லாதீர்கள்" எனக் கூறிவிட்டதாகவும், மடத்துச் சந்நியாசிகளிடம் இருந்து சிஷ்யர் பலமுறையும் கேள்வியுற்றார். திக்கற்ற வர்களுக்குப் புகலிடமாகிய சுவாமிஜியினுடைய கருத்தே ஈற்றில் வெற்றி பெற்றது. தம்முடைய பேரன்பினாலே மேற்குறித்த மனிதனுக்குச் சந்நியாசங் கொடுக்கச் சுவாமிஜி தீர்மானித்தார்.

சிஷ்யர் கடந்த இரண்டு நாட்களாகத் திருமடத் திலே இருந்து வருகிறார். சுவாமிஜி அவரை அழைத்து, " நீ புரோகித வகுப்பைச் சேர்ந்திருக்கிறாய்; ஆதலினால் நாளை இவர்களுடைய சிரார்த்தக் கிரியைகளைச் செய்து வைப்பாய். அடுத்த நாள் நான் அவர்களுக்குச் சந்நி யாசங் கொடுப்பேன். கிரியைகளைக் கூறும் நூல்களை இன்றைப் பொழுதே ஆராய்ந்து ஆயத்தமாயிரு" என்றார். சிஷ்யரும் சுவாமிஜியுடைய கட்டளைக்குத்

தலை வணங்கினார். குறித்த கிரியையும் முறைப்படிச் செய்யப்பட்டது.

சந்நியாசத்தினுடைய கடுமையாகிய விதிகளை எண்ணிச் சிஷ்யர் மனத்திலே மிகவும் கவலையுற்றார். சுவாமிஜி அவருடைய மன நிலையை அறிந்து, "இந்த அநுபவத்தினாலே உன்னுடைய மனத்தில் ஒரு வகை அச்சமுண்டாகிறதல்லவா?" என்றார். சிஷ்யர் ஆம் என்று சொன்னவுடனே சுவாமிஜி அவரை நோக்கி, "இன்று முதல் இவர்கள் நால்வரும் உலகுக்கு இறந்தவ ராயினார். நாளைமுதற்கொண்டு இவர்கள் புது உடலத்தையும், புதிய எண்ணங்களையும் புதிய உடைகளையும் கொள்ளுவார்கள். பிரம்ம ஞானத்தின் பிரகாசத்தினாலே சுவலிக்கின்ற அக்கினியைப்போல வாழுவார்கள்!

நகர்மணா நப்ரஜயா தனேன

த்யாகே கைகே அமிர்தத்வ மானசு :

"கருமத்தினாலல்ல, புத்திரராலல்ல, செல்வத்தினாலல்ல, தியாகத்தினால் மாத்திரமே சிலர் சாகா வாழ்க்கையை அடைந்தார்கள்."

கிரியைகள் முடிந்தபிறகு, நான்கு பிரம்மசாரிகளும் சுவாமிஜியினுடைய திருவடிகளிலே பணிந்து நின்றார்கள். அவர் அவர்களை ஆசீர்வதித்து, "மனித வாழ்க்கையில் மிக வுயர்ந்த விரதத்தைக் கைக்கொள்ளுவதற்கு ஆர்வமுற்று முன் வந்திருக்கிறீர்கள். உங்கள் பிறவி ஆசீர்வதிக்கப்பட்டது, உங்களுடைய குலம் சிறப்படைந்தது, உங்களைக் கருவிலே தாங்கிப் பெற்ற அன்னைமார் பாக்கியசாலிகளாயினார்கள்! **குலம் பவித்ரம் ஜனனி கிருதார்த்தா** "குல முழுவதும் பரிசுத்தமடைகின்றது, பெற்ற தாயார் அதியுயர்ந்த நிலையை அடைகின்றார்!"

அன்று பகற் போசனத்தின் பின் சுவாமிஜி சந்நியாசத்தைப்பற்றி மாத்திரமே பேசிக்கொண்டிருந்தார். சந்நியாசத்தைப் பெற விரும்பினோர்களை நோக்கி, "சந்நியாசத்தினுடைய உண்மை நோக்கம் ஆத்மா மோக்ஷ

மடைதலும், உலகிற்கு நன்மை புரிதலும் ஆகும். **ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாயச** என்றார். சந்நியாசம் பெறாமல் ஒருவரும் பிரம்மஞ்ஞானி ஆதல் கூடாது—வேத வேதாந்தங்கள் இதனையே வெளியிட்டுக் கூறுகின்றன. "லௌகிக வாழ்க்கையும் வாழ்வோம், பிரம்மஞானிகளும் ஆவோம்" எனக் கூறுகிற மக்களுடைய வார்த்தைக்குச் செவி சாய்க்காதீர்கள். மறைந்து இன்பத்தைத் தேடுகிறவர்கள் தம்மைத் தாமே ஆறுதல் படுத்திக்கொள்ளச் சொல்லுகிற இச்சக வார்த்தை அது. உலக இன்பங்களுக்கு எள்ளளவேனும் இச்சையுடையவன், நீங்கள் செல்லப் போகின்ற மார்க்கத்தில் அச்சமடைவான். தன் மனதுக்கு ஒருவகை ஆறுதலளிக்கும் பொருட்டுப் போகத்தையும் தியாகத்தையும் சமரசப்படுத்திக் கூறுகிற ஒரு முடியாத கொள்கையைப் போதிப்பான். இவையனைத்தும் பைத்தியக்காரருடைய பிதற்றல் மொழி. உன்மத்தருடைய பசப்பு வார்த்தை. சாஸ்திரங்களுக்கு விரோதமாகிய சோம்பற் கொள்கை. வேதப் பிரமாணம் இல்லாதன. தியாகமின்றி விடுதலை இல்லை. தியாகமில்லாமல் கடவுளிடத்துள்ள பரா பக்தியை அடைதல் கூடாது. தியாகமே மந்திரம். **நான்யப் பந்தா வித்யதே அயனாய**-'இதைவிட வேறு வழியில்லை.' 'இச்சையை முடிபாக உடைய கருமங்கள் அனைத்தினையும் விட்டுவிடுவது சந்நியாசம்; **காம்யானும் கர்மணும் ந்யாசம் ஸந்யாஸம் கவயோவிது:** எனக் கீதா சாஸ்திரம் கூறுகின்றது.

"லௌகிகக் கவலைகளாகிய பந்தங்களை அகற்றி விட்ட பின்பன்றி ஒருவரும் முத்தியை அடைவதில்லை. ஒருவன் உலக வாழ்க்கையில் வாழ்ந்திருப்பதுவே அவன் யாதாயினும் ஓர் இச்சைக்கு அடிமையாகக் கட்டுண்டிருக்கிறான் என்பதற்கு அத்தாக்ஷியாகிறது. இல்லாவிட்டால் அவன் அந்த வாழ்க்கையைப் பற்றிக்கொண்டிருப்பானேன்? காமத்துக்கோ, காஞ்சனத்துக்கோ

உத்தியோகத்துக்கோ, கீர்த்திக்கோ, வித்தைக்கோ, பாண்டித்தியத்துக்கோ அவன் அடிமையாயிருக்க வேண்டும். இவற்றில் நின்று தன்னை விடுவித்துக்கொண்ட பின்பே மோக்ஷ மார்க்கத்திலே அவன் செல்லுதல் கூடும். ஜனங்கள் பிரியப்படி வாதிக்கட்டும். ஆனால் பந்தத்தை விட்டுத் துறவி வாழ்க்கையைக் கைப்பற்றி னலன்றி பிரம்மஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை அடைதல் கூடாது" என்னும் துணிபு எனக்கு உண்டு.

சிஷ் : ஐய, வெறுமனே சந்நியாசத்தைப் பெற்றுக் கொள்வது கதியை அடைவதற்கு வழியாகும் என்பது தங்களது திருவுள்ளக் கருத்தா ?

சுவா : கதியை அடைந்தாலும் சரி, அடையா விட்டாலும் சரி, அது நம்மால் இப்பொழுது ஆராயப் படுவதன்று. இச்சையின் அடிமைத் தனத்தை நீக்கிச் சம்சார சக்கரத்தினின்று விடுபட்டாலன்றி, நீ பக்தியையோ, முத்தியையோ அடைதல் கூடாது. பிரம்ம ஞானிக்குச் செல்வமும் சித்திகளும் வெறும் அற்பப் பொருள்களே.

சிஷ் : ஐய, சந்நியாசத்துக்கு விதிக்கப்பட்ட காலமுண்டா? சந்நியாசத்தில் எத்தனை வகை உள ?

சுவா : சந்நியாசத்துக்குக் குறிக்கப்பட்ட காலமில்லை. **யதஹரேவ விரஜேத் ததஹரிவ ப்ரவ்ரஜேத்**—"தியாக சிந்தை வந்தவுடனே சந்நியாசத்தைத் தழுவ வேண்டும்" எனச் சுருதி கூறுகின்றது.

யுவைவ தர்மசீல : ஸ்யாத் அனித்யம் கலு ஜீவிதம்
கோஹி ஜானதி கஸ்யாத்ய ம்ருத்யுகாலோ பவிஷ்யதி.

"வாழ்க்கை நிச்சயமற்றதாகவும் அழிந்து போவதாகவும் இருத்தலினாலே, வாலிபப் பிராயத்திலும் தருமத்திலே பற்றுடையவனாக இருக்கவேண்டும் ; உடல் எப்பொழுது விழுந்து போமென யாவர் அறிவார்" என்று யோக வாஸிஷ்டம் கூறுகிறது.

சாஸ்திரங்களிலே நான்கு வகைச் சந்நியாசங்கள் கூறப் பட்டிருக்கின்றன. அவையாவன : (1) வித்வத் (2) விவிதிஷ (3) மர்க்கட (4) ஆதுர சந்நியாசம் என்பன முந்திய பிறவியிலே வளர்ச்சி எய்திய பல முள்ள சம்ஸ்காரங்கள் இருந்தாலன்றி, உண்மைத் தியாகத்தினுடைய எழுச்சியும், அதன் மூலமாக உடனே உலக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசம் பெறுதலும் ஏற்படுவதில்லை. இதுவே வித்வச் சந்நி யாசம் எனப்படுவது. ஆத்மஞானத்தை அடையப் பேரவா உடையவன் சாஸ்திரங்களைச் சிரவணம் செய்ய வும் அப்பியசிக்கவும் கருதி உண்மையை உணர்ந்த ஞானியிடம் சென்று சந்நியாசம் பெற்றுக்கொள் வது விவிதிஷ சந்நியாசம் எனப்படும். உற்றார் சுற்றத்தாருடைய மரணம் என்றித்தகைய கவலை யினாலே உந்தப்பட்டுச் சந்நியாசம் எடுத்துக்கொள்வது மர்க்கட சந்நியாசம் எனப்படும். இது நீண்டு நிலை பெறுவதில்லை. 'இத்தகைய தியாகத்தோடு ஒருவன் அயல் நாட்டுக்குச் சென்று நல்ல தொழில் கிடைத்து விட்டால் தன் மனைவியைத் தன்னிடம் வரச் சொல் வான். அல்லது புதிதாக ஒரு மனைவியைத் தேடிக் கொள்வான்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வ துண்டு. உயிர் வாழ்க்கையில் நம்பிக்கையற்று மரணப் படுக்கையிலே கிடக்கின்ற மனிதனுக்குச் சாஸ்திரங் களிலே விதிக்கப்பட்டிருக்கிற சந்நியாசம் ஆதுர சந்நியாசம் எனப்படும். அவன் இறந்தால் மஹா பரி சுத்தமான விரதத்தோடு இறக்கிறான். அதனாலாகிய நற்பலன் மற்றப் பிறவிலேயே வந்து எய்தும். இற வாது பிழைத்துக்கொள்ளுமாயின் தன்னுடைய பழைய வாழ்க்கையை நாடாது பிரம்ம ஞானத்தை அடையும் உயர்ந்த முயற்சியிலே தனது எஞ்சிய வாழ் நாளைக் கழிப்பான். சுவாமி சிவானந்தர் உனது மாமனு ருக்கு இவ்வகைச் சந்நியாசத்தையே கொடுத்தார். அந்த ஏழை மனிதர் இறந்து விட்டார். ஆயினும் இந்த தீக்ஷையின் மகத்துவத்தினாலே உயர்ந்த புதிய

பிறவியை அடைவார். சந்நியாசத்தைத் தவிர ஆத்ம ஞானத்துக்கு வேறு வழி கிடையாது.

சிஷ்: ஐய, அப்படியாயின் இல்வாழ்வாருடைய கதி என்ன?

சுவா: நற்கருமத்தின் பலனாக மேல்வரும் பிறவியிலே அவர்கள் சந்நியாசத்தை அடைவார்கள். இந்தச் சந்நியாசம் வந்தவுடனே எல்லாக் கவலைகளும் நீங்கிவிடுகின்றன. தாமதமின்றி ஒருவன் பிறப்பு இறப்பு ஆகிய இரகசியத்துக்கு அப்பால் செல்லுகிறான். எல்லா விதிகளுக்கும் புறநடை உண்டு கிரகஸ்த தருமத்திலிருந்து அதனை உண்மையாக நிறைவேற்றி அதியுயர்ந்த மோக்ஷத்தை அடைந்தவர்கள் ஒருவர் இருவரைக் காணலாம். நாகமஹாசயர் இதற்கு ஓர் உதாரணம்.

சிஷ்: ஐய, உபநிடதங்கள் தாமும் துறவு வாழ்க்கையையும் சந்நியாசத்தையும்பற்றித் தெளிவாகச் சொல்லவில்லையே!

சுவா: என்ன பைத்தியக்காரனைப்போலப் பேசுகிறாய்! துறவு வாழ்க்கையே உபநிடதங்களில் உயிர்நிலை. விவேகத்தோடு கூடிய ஆராய்ச்சியினாலே அறிவு விளக்கத்தைப் பெறுவது உபநிடத ஞானத்தின் முடிந்த இலக்கு ஆகும். புத்தருடைய காலந்தொட்டு புலனுகர்ச்சிகளை விடுவது சமய வாழ்க்கையின் அதியுயர்ந்த நோக்கம் என்னும் எண்ணமானது பரவத் தொடங்கி இந்தியா தேச முற்றிலும் சந்நியாச விரதம் போதிக்கப்பட்டது. புத்தருடைய துறவுக்கொள்கையை இந்து சமயம் கவர்ந்து கொண்டது. புத்தரைப் போன்ற துறவு வாழ்க்கையுடைய வேறொரு மனிதன் இவ்வுலகத்திலே பிறக்கவில்லை.

சிஷ்: ஐய, அப்படியாயின், புத்தருடைய வருகைக்கு முன்னர் நாட்டிலே தியாக புத்தி அருகியிருந்ததென்றும், சந்நியாசிகள் இருக்கவில்லை என்றும் கருதுகிறீர்களா?

சுவா: யார் அப்படிச் சொன்னார்கள்? சந்நியாச ஆசிரமம் முன்னமே இருந்தது. பொது ஜனங்கள் அதனை வாழ்க்கையின் நோக்கமாக அறிந்துகொள்ளவில்லை. அதனைப் பெறுவதற்கு உறுதியான ஊக்கமிருக்கவில்லை. ஆத்மீக விவேகம் வேரூன்றி இருக்கவில்லை. புத்தர் பல யோகிகளிடத்தும் சாதுக்களிடத்தும் சென்ற பொழுதும், தாம் விரும்பிய சாந்தியைப் பெறவில்லை. அதுபற்றியே மிக மேலான நிலையை அடைவதற்கு அவர் தமது சொந்த முயற்சியையே பற்றுக்கோடாகக் கொண்டார்.

"என்னுடைய உடலமானது இந்த ஆசனத்திலே இருந்து உலர்ந்து போயினும் போகுக" என்ற வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு ஆசனத்திலிருந்தார். அறிவு விளக்கமுற்ற புத்தராகிய பின்பே ஆசனத்திலிருந்து எழுந்தார். இந்தியாவிலே சந்நியாசிகள் வசிக்கின்ற எத்தனையோ பல மடங்கள் ஒரு காலத்தில் புத்த சமயத்தவர்களது ஆட்சியில் இருந்தன. இந்துக்கள் அவற்றைத் தமது முறைப்படி திருத்தி அமைத்துத் தமதாக்கிக்கொண்டனர். உண்மையிற் சொல்லுமிடத்து புத்தரோடு தான் சந்நியாச ஆசிரமம் உற்பத்தியானது. அழிந்து போய்க் கிடந்த இதன் எலும்பினுள்ளே உயிர் புகுத்தியவர் அவர்தான்.

சுவாமிஜியினுடைய சந்நியாச சகோதரராகிய சுவாமி ராமகிருஷ்ணாநந்தர் இடை வந்து சுவாமிஜியை நோக்கி, "பழைய ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் புத்தர் பிறப்பதற்கு முன்னமே இந்தியாவில் நான்கு ஆசிரமங்களும் இருந்தன என்பதற்கு நல்ல பிரமாணம் இருக்கின்றதே" என்றார். அதற்குச் சுவாமிஜி, புராணங்களிற் பலவும் மநுதர்ம சாஸ்திரம் போன்றனவும், மகாபாரதத்தில் பெரும்பாகமும் பிற்காலத்தெழுந்தன. பகவான் புத்தர் அவற்றுக்கு முற்பட்டவர்" என்றார். அப்படியாயின், புத்த சமயத்தைப்பற்றிய வாதமானது வேதம், உபநிடதம், ஸ்மிருதி, புராணம் முதலியவற்றிற்

காணப்படவேண்டுமே; இந்தப் பழைய நூல்களில் அத்தகைய வாதங்கள் காணப்படாமையால், புத்தர் அவை தமக்கு முன்னிருந்தார் எனச் சொல்லுவது எங்ஙனமாகும்? சில பழைய புராணங்களிலே புத்த கொள்கைகளை ஓரளவாகக் காணலாம். ஆனால், இவற்றிலிருந்து ஸ்மிருதி புராண முதலிய இந்துக்களின் சமய சாஸ்திரங்கள் சமீப காலத்தில் எழுந்தனவென்று சொல்லுதல் கூடாது.

சுவா: தயை செய்து *சரித்திர வரன்முறை நூல்களை வாசிப்பாயாக; அப்படிச் செய்வாயாயின் புத்த சமயக் கொள்கைகளைத் தன்னகத்து ஒன்றுபடுத்திய காரணத்தினாலே இந்து சமயம் பெரிதாயிற்று என்பதை அறிவாய்.

சுவாமி ராமகிருஷ்ணானந்தர்: துறவு, பற்றறுத்தல் முதலாகிய சிறந்த கொள்கைகளைத் தமது வாழ்க்கையிலே செவ்வையாகக் காட்டி இந்து சமயத்தின் உயர்ந்த கொள்கைகளுக்குப் புத்துயிர் அளித்தது மாத்திரமே புத்ததேவருடைய செயல் என எனக்குத் தோன்றுகிறது.

சுவா: இந்து முடிபினை அத்தாக்ஷிப் படுத்துதல் கூடாது. புத்ததேவர் பிறப்பதற்கு முன்னுள்ள சரித்திரம் நமக்கு அகப்படுவதில்லை. சரித்திரத்தை மாத்திரமே பிரமாணமாகக் கொள்வோமெனின், பழைய காலத்திலுள்ள அந்தகாரத்தின் மத்தியிலே அறிவுச் சுடரோடு விளங்குகிறவர் புத்ததேவர் மாத்திரமே என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும்.

---

*இந்த வாதத்திலே சுவாமிஜி தற்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு ஆதாரமாகவும் அவர் தம் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டும் இவ்வகையாகச் சொல்லுகின்றார். ஆனால் பின்பு சுவாமி சொரூபானந்தருக்கு எழுதிய ஒரு கடிதத்திலே தற்கால பண்டிதர்களுடைய முறையிலிருந்து வேறுபட்டு இப்பொழுதுள்ள இந்து சமயக் கொள்கைகள் புத்தருக்கு முன்பு ஆயின என்பதைக் காட்டியிருக்கின்றார். இக்கொள்கைகளைப் பண்டிதர்கள் 'புத்த சமயத்துக்குச் சார்பாகப் பேச விரும்புவார்கள்.

இதன்மேல் சந்நியாசத்தைப் பற்றிய சம்பாஷணை மீண்டும் தொடங்கப்பட்டது. சுவாமிஜி பின்வருமாறு சொல்லுவாராயினர்: "சந்நியாசத்தினுடைய உற்பத்தி எங்கிருந்தாலுஞ் சரியே. இந்தத் தியாக விரதத்தைக் கைக்கொண்டு பிரம்மஞானியாவதே மனித வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம். சந்நியாச வாழ்க்கையைத் தழுவுவதே சீவியத்தின் மேலான முடிபு. தியாக சிந்தையினாலே லௌகிக வாழ்க்கையை விட்டெறிந்தவர்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள்."

சிஷ்: ஐய, நாட்டிலே அலைந்து திரிகிற சந்நியாசிகளின் தொகை கூடுவதினாலே நாட்டின் செல்வ நிலைக்குப் பெருந்தடை ஏற்பட்டது என இந்நாட்களில் பலர் கருதுகின்றார்கள். இந்தச் சந்நியாசிகள் தமது சீவனத்துக்கு இலவாழ்வார்களை ஆதாரமாகக்கொண்டு ஒன்றும் செய்யாது சோம்பலாக அலைந்து திரிகிறார்கள் என்றும், ஜனசங்க தேசீய வாழ்க்கைக்கு இவர்களால் எய்திய பயன் யாதொன்றும் இல்லை என்றும் பலர் கருதுவதுண்டு.

சுவா: லௌகிக முன்னேற்றம் என்பதனால் கருதுவது என்ன என்று முதலிலே எனக்குத் தெளிவுபடுத்துவாயா?

சிஷ்: ஆம், மேனாட்டு மக்கள் செய்வதுபோலக் கல்விப் பயிற்சியினாலே வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைத் தேடிக்கொள்வதும், விஞ்ஞான நூலின் வழியாக வர்த்தகம், கைத்தொழில், பிரயாண வசதி என்றித்தகைய வாழ்க்கைக்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளுவதுமாம்.

சுவா: உண்மையாகிய இராஜஸ குணம் எழுப்பப் பட்டாலன்றி இவை எல்லாம் கைகூடுமா? இந்தியா முழுவதும் யாத்திரை பண்ணினேன், இராஜஸ குணம் வெளிப்பட்டுத் தோன்றுவதை ஓரிடத்திலும் காணவில்லை. எங்கும் தாமஸ மயமாயிருக்கின்றது. பொது ஜனங்கள் தாமஸத்திலே மூழ்கிக் கிடக்கின்றார்

கள். சந்நியாசிகளிடையே மாத்திரந்தான் இராஜஸ சத்துவ குணங்களைக் கண்டேன். இவர்கள் இந்நாட்டின் முதுகெலும்புபோன்றவர்கள். உண்மை சந்நியாசி இல்வாழ்வார்களுக்கு ஆசிரியன். சந்நியாசிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிவு விளக்கத்தின் உதவியினலேதான் முன்னுளிலிருந்த இல்வாழ்வார் பலர் வாழ்க்கைப் போராட்டத்திலே பலமுறை வெற்றி பெற்றிருக்கின்றனர் இல்வாழ்வார் சாதுக்களிடமிருந்து விலை மதிப்பதற்கரிய போதனைகளைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக உணவும் உடையும் கொடுக்கின்றார்கள். இந்தியாவிலே இத்தகைய கொடுக்கல் வாங்கல் இல்லாதிருந்தால், இந்த நாட்டு மக்களும் அமெரிக்க இந்தியர்களைப்போல இதுவரையில் அழிந்து போயிருப்பார்கள். இல்வாழ்வார் சாதுக்களுக்கு இப்பொழுதும் சில கவளம் அன்னம் கொடுத்து வருகின்ற படியினுற்றான், நற்கதியுடன் மார்க்கத்திலே முன்னேறிச் செல்பவர்களாயிருக்கின்றார்கள். சந்நியாசிகள் சோம்பலாயிருப்பதில்லை. அவர்களே எல்லாத் தொழிலின் முயற்சிகளுக்கும் ஊற்று. உயர்ந்த கொள்கைகள் சாதுக்களுடைய சீவியத்திலே அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படுவதை இல்வாழ்வார் காணுகின்றனர். ஆதலினலே அத்தகைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுகின்றனர். இங்ஙனம் நிகழுகின்றபடியாலன்றோ இந்நாள்வரையும் கரும மார்க்கத்திலே வாழ்க்கைப் போராட்டத்தைச் செவ்வனே நடத்துவதற்கு அவர்களால் முடிந்தது? பரிசுத்தமாகிய சாதுக்களின் முன்மாதிரியினலே சீவியத்தில் பரிசுத்தமாகிய கொள்கைகளைத் தொழிற்படுத்தவும், தொழில் செய்வதற்கு உண்மை வலிமையைப் பெற்றுக்கொள்ளவும் கூடியதாயிருந்தது. அனைத்தினையும் கடவுளுக்காகவும் உலகத்தின் நன்மைக்காகவும் துறந்து தமது வாழ்க்கையிலே அதியுயர்ந்தகொள்கைகளை அமைத்து ஒழுகுகின்ற சந்நியாசிகள் எல்லா நற்கருமங்களிலும் இல்வாழ்வாருக்கு ஊக்கங் கொடுப்பவர்களாயிருக்கின்றார்கள். இதற்குப்

பிரதி உபகாரமாக இல்வாழ்வார் சாதுக்களுக்குச் சில கவளம் அன்னம் கொடுக்கின்றனர். யாவற்றையும் துறந்த சந்நியாசிகளினுடைய ஆசீர்வாதத்தினாலும், நல்லெண்ணங்களினாலும் ஜனங்களுக்கு எல்லா வகையாகிய வலிமைகளும் உண்டாகின்றன. உணவுப் பொருளைச் செய்கை பண்ணுகிற ஆற்றல் தானும் சாதுக்களினுடைய ஆசீர்வாதத்தினால் வந்தது. இந்த ஆழ்ந்த கருத்துக்களை அறிந்துகொள்ளாத காரணத்தினால் மக்கள் துறவு வாழ்க்கையைக் குறை கூறுகின்றனர். மற்ற நாடுகளின் நடவடிக்கை எப்படியாயினும் ஆகுக. இந்த நாட்டிலே சந்நியாசிகள் சுக்கானிலிருந்து வழிநடத்துகிற காரணத்தினால்தான் இல்வாழ்வார் ஏறிச் செல்லும் வாழ்க்கை என்னும் கப்பல் நீரில் அமிழ்ந்துபோகாமல் துறைநோக்கிச் செல்லுகின்றது.

சிஷ் : ஆனால், ஐய, மக்களுடைய நலத்துக்காக வாழுகின்ற சந்நியாசிகள் எத்தனை பேருளர் ?

சுவா : ஆயிர வருஷத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் போன்ற பெரிய சந்நியாசி ஒருவர் உதித்தாலும் போதுமானதுவே. அவர் வந்து ஆயிரம் வருஷம் கழியும் வரையும், ஜனங்கள் அவருடைய கொள்கைகளையும் கருத்துக்களையும் பின்பற்றி நடக்கலாம். துறவு ஆசிரமம் இந்த நாட்டில் இருக்கின்ற காரணத்தினாற்றான் இத்தகைய பெரிய மனிதர் இங்குப் பிறக்கின்றனர். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஏற்றத் தாழ்ச்சியாகிய குறைகளுண்டு. எத்தனையோ பிழைகளிருந்தும் இந்த மேன்மை பொருந்திய ஆசிரமம் மற்றெல்லா ஆசிரமங்களிலும் பார்க்க உயர்வுடைத்தாக இருக்கின்ற காரணமென்ன ? உண்மைச் சந்நியாசிகள் உலகத்துக்கு நன்மை செய்வதற்காகத் தங்களுடைய சொந்த ஈடேற்றத்தையும் இழந்துவிடத் தயாராயிருக்கின்றார்கள். இத்தகைய மேன்மைபொருந்திய ஆச்சிரமத்தின்மீது நீ நன்றி பாராட்டாதிருந்தால் உனது நிலை மிக இழிந்ததாகும்.

இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது சுவாமிஜியினுடைய திருமுகமண்டலமானது பிரகாசத்தினால் விளங்கியது. சிஷ்யருடைய கண்களின்முன்னே அவர் சந்நியாசமே உருவெடுத்தாலன்ன விளக்கத்தோடு தோற்றினார்.

தம்முடைய திருவுள்ளத்தில் இந்த ஆசிரமத்தின் பெருமையை உணருகின்ற தன்மையாலே உண்ணேக்கி நின்று சுவாமிஜி இனிய குரலிலே பாடுவாராயினர்.

வேதாந்த வாக்யேஷு ஸதா ரமந்தோ
பிக்ஷான்ன மாத்ரேண ச துஷ்டி மந்த :
அசோக மந்த . கரணே சரந்த :
கௌபீனவந்த : கலுபாக்யவந்த :

" வேதாந்த வாக்கியங்களிலே எப்பொழுதும் மனமானது உவகையோடு நிலைபெற்றிருக்க, பிக்ஷையினாலே கிடைக்கின்ற உணவினை மனத் திருப்தியோடு உண்டு, அந்தக்கரணங்களிலே சோகமின்றி, கௌபீனமாகிய உடையினைத் தரித்திருக்கும் சந்நியாசிகள் பெரிய பாக்கிய வந்தர்கள். "

மீட்டும் சம்பாஷணையைத் தொடங்கிப் பின்வருமாறு சொல்லுவாராயினர் : " பலருடைய நன்மைக்காகவும், பலருடைய சுகத்துக்காகவும், சந்நியாசி இவ்வுலகத்திலே பிறக்கிறான். சந்நியாசம் பெற்றுக்கொண்டும் இந்த உயர்ந்த கொள்கையை மறந்து போகின்ற துறவியினுடைய வாழ்க்கை பயனற்றதாகின்றது. பிறர் வாழும் பொருட்டுத் தனது உயிரைக் கொடுக்கவும், மக்களுடைய அழுகையை நிறுத்தவும், விதவையினுடைய கண்ணீரைத் துடைக்கவும், குழந்தையை இழந்த தாயினுடைய மனத்துக்கு ஆறுதலளிக்கவும், அறிவில்லாத பொது ஜனங்களுக்கு அறிவினை அளித்து நல்வாழ்க்கை நடத்தச் செய்யவும், சமய போதனையினாலே எல்லோருக்கும் லௌகிக ஆத்மீக நன்மையை அளிக்கவும், அறிவுச் சுடரினைக்காட்டித் துயில்புரிகின்ற பிரம்மமாகிய சிங்கத்தை எழுப்பவும் சந்நியாசி இவ்வுலகத்திலே பிறக்கின்றான்." பின்பு சுவாமிஜி தமது

சந்நியாச சகோதரர்களை நோக்கி, “ நமது வாழ்க்கை **ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத்ஹிதாயச,** ஆத்மாவுக்கு மோக்ஷமளிப்பதற்கும் உலகத்திற்கு இதத்தினை அளிப்பதற்கும் அமைந்துள்ளது. எதற்காகச் சோம்பிக் கொண்டிருக்கிறீர்கள் ? எழுந்திருங்கள், விழித்திருங்கள் ; நீங்களும் விழித்து மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள். இவ்வுலக வாழ்க்கை கழிவதற்கு முன் அதனால் எய்துவதற்கு உரிய பெரிய நன்மையை அடையுங்கள். எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், கருதிய கருமம் கைகூடும்வரை தரித்திராது முன் செல்லுங்கள்.”

(11)

[இடம் : ஹௌராவிலே, இராமகிருஷ்ண புரத்திலே காலஞ்சென்று போன நவகோபாலகோஷ் பாபுவினுடைய வீடு. காலம் : 1898 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ம் தேதி.]

ஹௌராவிலே இராமகிருஷ்ண புரத்திலே பாபு நவகோபாலகோஷருடைய வீட்டிலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்கின்ற விழா இன்று நடைபெறுகின்றது. திருமடத்துச் சந்நியாசிகளும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கிரகஸ்த பக்தர்களும் இவ்விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்,

சுவாமிஜியின் பரிசனர்களும் இராமகிருஷ்ண புரத்திலே உள்ள ஸ்நான கட்டிடத்தை அடைந்தனர். அவர் காஷாய உடை தரித்துத் தலையிலே தலைப்பாகை அணிந்திருந்தார். கால்களில் பாதரக்ஷை இல்லை வீதியின் இரண்டு பக்கங்களிலும் அவரைப் பார்க்கும் பொருட்டுப் பெருந்தொகையான ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். சுவாமிஜி ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவவதாரத்தைச் சிறப்பித்துக் கூறும், “ ஏழைப்பிராம்மணியின் மடியிற் கிடக்கும் இவ ராரோ ” என்று தொடங்குகிற பேர்போன கீதத்தைப் பாடிக்கொண்டு தாமே மத்தளத்தை அடித்துக் கொண்டு திருக்கூட்டத்தின் முன்னாக நடந்துசென்றார்.

குழுமியிருந்த பக்தர்களெல்லாம் அவரோடு உடன் சேர்ந்து கீதத்தின் பல்லவியைப் பாடினார்கள்.

திருக்கூட்டமானது குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடனே சுவாமிஜி கோயிலின் அமைப்பைப் பார்ப்பதற்காக மேன்மாடிக்குச் சென்றார். கோயிலின் தளமானது சலவைக் கற்களால் பதிக்கப்பட்டிருந்தது. மத்தியிலே ஒரு சிங்காசனத்தின்மீது ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய திருவுருவம் வைக்கப்பட்டிருந்தது. பொருள்க ளெல்லாம் சேகரித்து வைக்கப்பட்டிருந்த ஒழுங்கு பூரணமாக இருந்தது. சுவாமிஜி அதனைக்கண்டு சந் தோஷமுற்றார்.

நவகோபால் பாபுவினுடைய மனைவியார் வீட்டி லிருந்த ஏனைய பெண்களோடு சுவாமிஜியை நமஸ் கரித்துக் கையிலே விசிறியை எடுத்து வீசத் தொடங் கினார். சுவாமிஜி எல்லா ஏற்பாடுகளையும்பற்றி நயந்து பேச, அந்த அம்மையார் சுவாமிஜியை நோக்கி, "இந்த வறிய இல்லத்திலே பகவானை வைத்துப் பூசனை புரிவ தற்கு எங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது? தேவரீ ருடைய பெருங்கருணையினால் இங்கு பகவானைப் பிர திஷ்டை செய்து எங்களை ஆசீர்வதித்தருளவேண்டும்" என்றார்.

சுவாமிஜி, நகைமொழியாக, "உங்களுடைய பக வானுக்கு இத்தன்மையாகிய சலவைக்கல் பதித்த வீடு பதினென்கு சந்ததியிலும் கிடைத்ததில்லை; கிராமத் திலேயுள்ள ஒரு கூரை வீட்டில் பிறந்து ஒரு வகை யாகக் காலங் கழித்தார்; இவ்வளவு கருத்தாக நீங்கள் சேவை செய்யும்பொழுது அவர் இங்கு வசிக்காமல் வேறு எங்கு வசிப்பது?" என்றார். இதனைக் கேட்ட அனைவரும் நகைத்தனர்.

பிறகு சுவாமிஜி திருமேனி எங்கும் திருவெண்ணீறு தரித்துக்கொண்டு ஆசனத்தமர்ந்து சுவாமி பிரகாசாநந்த ருடைய உதவியோடு பூஜையை முடித்தனர். பூஜை முடிந்த பின்னர், பூஜை அறையிலிருக்கும் பொழுதே

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருமுன்னிலையில் சாஷ்டாங்கமாக நமஸ்கரிப்பதற்கு உரிய பின்வரும் மந்திரத்தை அத்தருணத்திலே இயற்றித் திருவாய் மலர்ந்தருளினார்.

ஸ்தாபகாயச தர்மஸ்ய சர்வதர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய ராமகிருஷ்ணாய தேநம :

"எல்லாத் தருமங்களும் ஒருருவெடுத்ததென்ன தெய்வீக அவதாரங்களனைத்திலும் சிறந்த அவதாரமாக உலகிலே தோன்றி, சமயத்தை நிலைநிறுத்திய ஸ்ரீ ராமகிருஷ்ணரை நமஸ்கரிக்கின்றேன்."

இந்த மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அனைவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய முன்னிலையில் நமஸ்கரித்து எழுந்தார்கள்.

அன்று சாயங்காலம் சுவாமிஜி பாக்பஜாருக்குத் திரும்பிச் சென்றார்.

(12)

[இடம் : கல்கத்தா, பலராம் பாபு வீடு. காலம் : 1898-ம் ஆண்டு]

கடந்த இரண்டு நாட்களாக சுவாமிஜி பாக்பஜாரிலே பலராம் பாபுவினுடைய வீட்டிலே வசித்து வருகின்றார். வீட்டின் மேன்மாடியிலே அவர் உலாவிக்கொண்டிருக்கும்பொழுது சிஷ்யரும் இன்னும் நாலைந்துபேரும் அவருக்குப் பின்னாகச் சென்றனர். உலாவிக் கொண்டிருக்கும்பொழுது சுவாமிஜி குரு கோவிந்த சிங்கினுடைய சரித்திரத்தை ஆரம்பித்து அந்தச் சீவியத்திலுள்ள வேறு வேறாகிய விஷயங்கள் பலவற்றை மிகுந்த ஆர்வத்தோடு எடுத்துரைத்தார். அளவுகடந்த தியாகத்தினாலும், தவத்தினாலும், தைரியத்தினாலும், முயற்சியினாலும் சீக்கிய மதத்துக்கு அவர் புத்துயிர் அளித்தமையும் முகம்மதிய சமயத்தில் புகுந்திருந்தவர்களை மீட்டும் இந்துக்களாக்கிச் சீக்கிய வகுப்பினுள்ளே சேர்த்துக் கொண்டமையும், ஈற்றிலே நர்மதை நதியின் கரையிலே

அவருடைய அற்புதமான வாழ்க்கை முடிவெய்தியதும், என்று இவற்றை எல்லாம் குறித்துச் சுவாமிஜி பேசினார் குரு கோவிந்தரிடத்தில் தீக்ஷை பெற்றுக்கொண்டவர்கள் மிகுந்த வலிமை படைத்திருந்த விஷயத்தைக் குறித்துச் சொல்லும்பொழுது சுவாமிஜி பின்வரும் சீக்கிய பாடலை எடுத்துரைத்தார்.

ஸவா லாக பர ஏக சடாம்உ

ஜப குரு கோவிந்த நாம ஸுனாம்உ

குரு கோவிந்தசிங் தீக்ஷை செய்தால், ஒரு மனிதன் ஒன்றேகால்லக்ஷம் பகைவரை வெல்ல வல்லமையுள்ளவனாவான் என்பது இப்பாடலின் கருத்து. குருவினுடைய சக்தியினாலே சிஷ்யர் ஒவ்வொருவரும் உள்ளத்திலே அற்புதமான தைரியம் பொருந்திய எண்ணங்களினால் நிறைக்கப்படுவார் இங்ஙனம் சமய வாழ்க்கையின் மகத்துவத்தை எடுத்துச் சொல்லும்பொழுது சுவாமிஜியினுடைய விழிகள் அகன்று பிரகாசத்தோடு விளங்கின இந்த அதிசயக் காட்சியைக் கண்டவர்கள் பேச்சற்று மௌனமாகி அவருடைய திருமுக மண்டலத்தைப் பார்த்த வண்ணமாக இருந்தார்கள்.

சிறிது நேரம் கழித்து சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, "ஐய, குரு கோவிந்தர் இந்துக்களையும் முஸ்லிம்களையும் தம்முடைய சமயத்தினுள்ளே ஒன்று கூட்டி ஒரு வழிப்படுத்திச் சென்றது மிகவும் அற்புதமாகும்; இந்தியச் சரித்திரத்திலே இதைப்போன்ற உதாரணம் வேறு இல்லை" என்றார்.

சுவா: அனைவருக்கும் பொதுவாகிய யாதாயினும் ஒரு தொடர்பு இருந்தாலன்றி மனிதர் ஒன்று கூடுவதில்லை. கூட்டங் கூட்டியும், சங்கம் நிறுவியும், பிரசங்கம் செய்தும் பலபட முயன்றாலும் ஒரே கருத்தில்லாத மக்களை ஒன்று கூட்டுதல் இயலாத காரியம். குரு கோவிந்தர் தமது காலத்திலே வாழ்ந்த மக்கள் இந்துக்களாயினுஞ்சரி, முஸ்லீம்களாயினுஞ்சரி, அனைவரும் அநீதியும் நெருக்கடியும் உள்ள அரசியலின் கீழே

வாழ்ந்து வருவதை எடுத்துக் காட்டினார். அதை வருக்கும் பொதுவாகிய ஓர் உணர்ச்சியை அவர் தாமாக உண்டுபடுத்தவில்லை. இருந்ததனைப் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டினார். அதனால் இந்துக்களும், முஸ்லீம்களும் அவரைப் பின்பற்றி நடந்தார்கள். அவர் பெரிய சத்தி வழிபாட்டுக்காரர். இந்திய சரித்திரத்திலே இவர் போன்றவர் மிக அரியர் என்பது உண்மையே.

மாலைக் காலம் அணுகி வருதலும் சுவாமிஜியும் மற்றவர்களும் மேன்மாடியிலுள்ள மண்டபத்துக்கு வந்தார்கள். அப்பொழுது சித்திகளைப்பற்றிய பின் வரும் சம்பாஷணை நிகழ்ந்தது.

"மனத்தை ஒருவழிப்படுத்தி ஓரளவுக்குப் பயிற்சி செய்வதினாலே சில சித்திகளைப் பெறுதல் கூடும்" எனச் சுவாமிஜி சொல்லி அருகில் நின்ற சிஷ்யரை நோக்கி, "பிறருடைய உள்ளத்தில் உற்றதனை உணருகின்ற முறைகளைக் கற்றுக்கொள்ள விரும்புகிறாயா? நான் அதனை உனக்கு நான்கு ஐந்து தினங்களில் சொல்லி வைக்கிறேன்" என்றார்.

சிஷ் : ஐய, அதனால் எனக்கு எய்தக்கூடிய பயன் என்ன?

சுவா : பிறருடைய உள்ளத்தில் நிகழ்வனவற்றை அறிந்து கொள்ளுவாய்.

சிஷ் : அதனால் பிரம்ம ஞானத்தை அடைவதற்கு உதவி ஏற்படுமா?

சுவா : சிறிதேனும் இல்லை.

சிஷ் : அப்படியாயின் அந்த சாஸ்திரத்தை நான் படிக்க வேண்டியதில்லை. ஆயினும், ஐய, சித்து வலிமைகளைப்பற்றித் தேவரீர் நேரிலே கண்டறிந்த விஷயங்களைக் குறித்துத் தேவரீருடைய திருவாக்கினின்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

சுவா : ஹிமாலயச் சாரலிலே நான் யாத்திரை செய்து வருகின்ற காலத்தில் ஒருநாளிரவு மலைச்

சாரலிலே குறவர்கள் கிராமம் ஒன்றில் தங்கும்படி நேரிட்டது. மாலைக் காலம் கழித்துச் சிறிதுநேரம் ஆயின பின் கிராமத்திலிருந்து பறையொலி கேட்டது. விசாரித்தபொழுது கிராமத்திலுள்ள மனிதன் ஒருவனை ஒரு தேவதை பற்றி இருப்பதாக எனக்கு உபசாரம் பண்ணிய மனிதன் உரைத்தான். அவன் வருந்திக் கேட்டுக் கொண்டபடியினாலும், விஷயம் என்னவென்று அறியும் விருப்பத்தினாலும் நான் அவ்விடத்துக்குப் போனேன். அங்குப் பெருந்திரளான ஜனங்கள் கூடி இருந்தார்கள். விரிந்த மயிரோடு கூடிய நெட்டையாகிய மனிதன் ஒருவனைக் காட்டி அவனையே தேவதை பற்றியிருப்பதாகச் சொன்னார்கள். சமீபத்திலே நெருப்பின்மீது ஒரு கோடரியானது பழுக்கக் காய்ச்சப்பட்டிருந்தது. அக்கினி மயமாக விருந்த அந்த இருப்புக் கோடரியை எடுத்து அந்த மனிதனுடைய அவயவங்களிலும் மயிரிலும் வைத்தார்கள். பழுக்கக் காய்ச்சிய இரும்பு பட்டும் அவனுடைய உடலோ மயிரோ சிறிதேனும் எரியவில்லை. அவனுடைய முகத்திலே சிறிதேனும் துன்பக் குறி காணப்படவில்லை. இவ்வதிசயத்தைக் கண்டு நான் பேச்சற்று மௌனமாய் நின்றேன். கிராமத்துத் தலையாரி என்னிடம் வந்து, "மஹாராஜ், கருணைகூர்ந்து இந்த மனிதனுடைய தேவதையை அகற்றிவிட வேண்டும்" என்றான். மறுத்துரைக்க முடியாமல் ஏதாவது செய்யவேண்டும் என்றெண்ணி அந்த மனிதனுடைய சமீபத்திற்குச் சென்றேன். காய்ச்சின கோடரியைப் பரீக்ஷை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினால் கரு நிறமாக ஆறிக் கிடந்த அதனை விரலினால் தொட்டேன். அது என் விரலைச் சுட்டுவிட்டது. கையிலே நோவுண்டாக, மாயக் கோடரியைப் பற்றி உள்ளத்திலே எண்ணிய எண்ணங்களெல்லாம் அகன்று போயின. சுடுண்ட விரல் நோவுற்றிருக்க, நான் அந்த மனிதனுடைய சிரத்தின்மேலே கையை வைத்து மந்திரத்தைச் செபித்தேன். பத்துப் பன்னிரண்டு நிமிஷங்களுக்குள் அந்த

மனிதன் ஆச்சர்யமாக குணமடைந்து விட்டான். அப்பொழுது கிராமத்து ஜனங்கள் என்னை மிகவும் அற்புதமான மனிதன் என்று நினைத்து வணக்கம் செலுத்தினார்கள். எனக்கோ இந்த விஷயத்தின் அடி, தலை ஒன்றும் தெரியவில்லை. நான் ஒன்றும் பேசாமல் என்னை இட்டுக்கொண்டு வந்த மனிதனோடு திரும்பிப் போய் அவனுடைய குடிசை அடைந்தேன். அர்த்த ராத்திரி வேளையாயிற்று. நான் சயனிக்கச் சென்றேன். நிகழ்ந்தவற்றைப் பற்றி நினைத்த எண்ணத்தினாலும் கைவிரலிலுள்ள நோவினாலும் தூக்கம் வரவில்லை. பழுக்கக் காய்ச்சிய கோடாரி பட்டும் உடல் சுடுபடாமல் இருந்ததை எண்ணி, 'ஹொரேஷியோவே! உன்னுடைய தத்துவ சாஸ்திரத்தினால் கனவிலும் காணக் கூடாத எத்தனையோ விஷயங்கள் வானகத்திலும் மண்ணகத்திலும் இருக்கின்றன" என்னும் புலவர் வாக்குப் பலமுறை என்னுடைய உள்ளத்தில் உதித்தது.

சிஷ்: ஐய, இந்த இரகசியத்தின் விளக்கத்தைத் தேவரீர் பின்பாவது உணர்ந்து கொள்ளவில்லையா ?

சுவா: இல்லை. இந்த விஷயத்தின் ஞாபகம் இப்பொழுது வந்தமையினால், நான் இதனை உனக்கு எடுத்துரைத்தேன்.

இங்ஙனம் சொல்லிப் பின்னும் கூறுவாராயினார்: "ஸ்ரீ ராமகிருஷ்ணர் இத்தகைய சித்திகளை இழித்துக் கூறுவது வழக்கம்; மனமானது இவற்றின் வழிச் சென்றால் அதியுயர்ந்த உண்மையை அறிதல் கூடாது என்பது அவரது போதனை. மனிதனுடைய சித்தமானது மிகவும் குறைபாடு உடையது. இல்வாழ்வார் மாத்திரமின்றிச் சாதுக்களிலும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்தச் சித்திகளை அவாவி நிற்கின்றார்கள். மேல்நாட்டிலே இத்தகைய அற்புத சக்திகளைக் கண்டால் மனிதர் மிகவும் வியப்படைவார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது பெருங்கருணையினாலே இவை ஆத்மீக வாழ்க்கைக்குத் தடையாயிருக்கின்றன என எடுத்துக்

காட்டிய படியால் நாங்கள் இவற்றை மதியாது விடக் கூடியவர்களாய் இருக்கின்றோம். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் இது காரணத்தால் இத்தகைய அற்புதச் சக்திகளைப் பொருட்படுத்தாதிருப்பதை நீ கண்டிருக்கின்றாய் அல்லவா?

இத்தருணத்தில் சுவாமி யோகாநந்தர் சுவாமிஜியை நோக்கி, "சென்னையிலே தேவரீர் சந்தித்த கீர்த்திவாய்ந்த பேயோட்டியைப் பற்றிய செய்தியை நமது வங்காளிக்குச் (சிஷ்யருக்கு) சொல்லக் கூடாதா?" என்றார்.

சிஷ்யர் பெரிதும் பரிந்து கேட்க, சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினார்:

சென்னையிலே மன்மதநாத பட்டாச்சாரியருடைய வீட்டிலே நான் இருக்கும் பொழுது ஓர் இரவு எனது தாயார் இறந்து போனதாகக் கனவு கண்டேன். எனது மனம் மிகவும் கவலையுற்றது. நான் அந்த நாட்களில் வீட்டிலுள்ளோர்க்குக் கடிதம் எழுதுவதில்லை. மடத்துக்கும் கடிதம் எழுதுவதில்லை. கனவில் நிகழ்ந்தனவற்றை நான் மன்மதருக்குத் தெரிவித்தவுடனே, அவர் விஷயத்தைப்பற்றிய உண்மைகளை விசாரிக்கும் நோக்கமாகக் கல்கத்தாவுக்குத் தந்திச் செய்தி அனுப்பினார். ஒரு புறத்தில் கனவு என்னுள்ளத்தைக் கலக்கியது. மற்றொரு புறத்தில் எனது சென்னை நண்பர்கள் அமெரிக்காவுக்குப் போகவேண்டியதற்கு உரிய ஏற்பாடுகள் பலவற்றையும் செய்து உடனே புறப்படவேண்டும் என்றார்கள். எனது அன்னையைப் பற்றிய செய்தியை அறிந்து கொள்ளும் வரையும் எனக்கு இடம் விட்டுச் செல்லுவது விருப்பமாயிருக்கவில்லை. எனது மனோ நிலையை அறிந்த மன்மதநாதர் முக்கால நிகழ்ச்சிகளையும் அறிந்து சொல்லக் கூடிய ஒரு மனிதன் பட்டணத்திலிருந்து சிறிது தூரத்தில் வசிப்பதாகவும் அவனிடம் போகவேண்டும் என்றும் சொன்னார். மன்மதருடைய வேண்டுகோளுக்கு

இணங்கியும் மனத்திலுள்ள அல்லலை நீக்கும் பொருட்டும் இந்த மனிதனிடம் போவதற்குச் சம்மதித்தேன். ஒரு பாகம் புகை வண்டியிலும், மற்றொரு பாகம் நடந்தும் சென்று நானும் மன்மதரும், அளசிங்கரும் மற்றொருவரும் குறிப்பிட்ட விடத்தை அடைந்தோம். மசானத்துக்குச் சமீபமாகக் கரிய நிறமும் மெலிந்த பேய் போன்ற தோற்றமும் உள்ள ஒரு மனிதன் இருக்கக் கண்டோம். அம்மனிதனோடு உடனின்றோர் பேய்களை அடக்கி ஆளத்தக்க பூரண வலிமை வாய்ந்த மனிதன் அவனே என்று அவர்கள் பேசும் மொழிகளிலே சொன்னார்கள். ஆரம்பத்திலே அந்த மனிதன் எங்களைத் திரும்பியும் பார்க்கவில்லை நாங்கள் வீட்டிற்குத் திரும்ப ஆயத்தப்படும்பொழுது சற்று நிற்கும்படி எங்களை வேண்டினான். அளசிங்கர் அவனுடைய வார்த்தையை எங்களுக்கு விளக்கிச் சொன்னார். அதன் பின் அந்த மனிதன் எழுது கோலினாலே சில உருவங்களைக் கீறி, சிறிது நேரத்துக்குள் தியானத்திலே அசைவற்றிருந்தான். அப்பொழுது அவன் எனது பெயர், குலம் கோத்திரம், முன்னோர் என்னும் இவற்றைப்பற்றிய செய்திகள் பலவற்றைச் சொல்லி நான் செல்லுமிடங்களிலெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்னோடு உடனிருப்பதையும் சொல்லி, எனது தாயார் நல்ல சுகத்தோடு இருப்பதாகவும் சொன்னான். நான் சமய போதனை செய்வதற்காகத் தூரதேசங்களுக்குப் போகப் போகிறேன் என்பதையும் சொன்னான். அன்னையாரைப் பற்றி நல்லசெய்தி அறிந்து கொண்டு பட்டணத்திற்குத் திரும்பி வந்தோம். கல்கத்தாவிலிருந்து அன்னையாரின் சுகத்தைக் குறித்து வந்த தந்திச் செய்தியும் அப்பொழுது கிடைத்தது.

சுவாமி யோகாநந்தரை நோக்கி, " அந்த மனிதன் சொல்லியவை யாவும் சரியாக நடந்தேறின. அதைப் பற்றி நீ எதனைச் சொன்னாலும் சொல்லலாம்" எனச் சுவாமிஜி கூறினார்.

அதற்குச் சுவாமி யோகாநந்தர் "தாங்கள் இவற்றை எல்லாம் முன்னுடியே நம்பாதபடியால் இந்த அநுபவங்களெல்லாம் வேண்டியிருந்தது" என மறுமொழி பகர்ந்தார்.

சுவா: அத்தாக்ஷி யில்லாமல் எதனையும் நம்புவது மூடத்தனமாகும். மஹாமாயையினுடைய இராஜ்யத்திலே பிரபஞ்சமாகிய இந்த இந்திர ஜாலத்தோடு இன்னும் எத்தனை மந்திர ஜாலங்களை நான் கண்டேன். மாயை! அனைத்தும் மாயை! இன்று நெடுநேரம் என்ன வீண் வார்த்தைகளெல்லாம் பேசிக்கொண்டிருந்துவிட்டோம். பேய்களைப்பற்றி நினைத்தால் மனிதர் பேயாய் விடுவார்கள். இரவும் பகலும் அறிந்தோ அறியாமலோ நித்த, சுத்த, முக்த, சுயம் பிரகாசமாகிய ஆதமன் நானே என்று நினைப்பவன் பிரம்மஞானி ஆகிறான்.

இதனைச் சொல்லிச் சுவாமிஜி அன்பினோடு சிஷ்யரை நோக்கி, "இத்தகைய பயனற்ற எண்ணங்கள் உன் மனத்திலிருக்காவண்ணம் அகற்றிவிடு. நித்யாநித்திய வஸ்துக்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டினை விவேகத்தினாலே ஆராய்ந்து பார். ஆத்மனை அடைய வேண்டும் என்று முழு மனதோடு முயல். ஆத்மஞானத்திலும் பார்க்க உயர்ந்தது பிறிதொன்றில்லை. மற்றவை எல்லாம் மாயை; வெறும் ஜாலம். ஆத்மன் மாத்திரமே மாறுபடாத உண்மை. இதனை நான் தெளிந்துகொண்டேன். ஆனபடியால் மற்றவர்களுக்கும் உணர்த்த முயலுகின்றேன். **ஏகமே வாத்வயம் பிரம்ம நேஹ நாநாஸ்தி கிஞ்சன** "பிரமம் ஒன்றே; இரண்டாவது ஒரு பொருளில்லை. இருக்கும் பொருள்கள் பல எனக் கொள்ளப்படமாட்டா."

இரவு பதினொரு மணிவரையும் இந்தச்சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. அதன்பின் போஜனமருந்தி சுவாமிஜி சயனிக்கச் சென்றார். சிஷ்யர் அவருடைய பாதங்களை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொள்ள,

சுவாமிஜி அவரை நோக்கி "நாளை வருகிறாயா?" என்றார்.

சிஷ் : ஆம், ஐயா, நிச்சயமாக வருவேன். பொழுது கழியுமுன்னர்த் தேவரீரை ஒருமுறையாவது பார்க்க என் மனம் விழைகின்றது.

சுவா : நேரமாய்விட்டது, இப்பொழுது போய் வருவாயாக.

(13)

[இடம் பேலூர் மடம். காலம் : 1898ம் ஆண்டு]

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் திதி பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகள் சிறப்புற நிறைவேறியிருந்தன. மங்களகரமாகிய அத்தினத்திலே ஆராதனைக்கு வேண்டிய அமைப்புகளை யெல்லாம் நேரிலே பார்வையிட்ட பின்னர்ச் சுவாமிஜி (சுவாமி விவேகானந்தர்) சிஷ்யனை நோக்கி, பரிசுத்தம் பொருந்திய முப்புரி நூல்கள் பல கொண்டுவந்து வைத்திருக்கிறாயா?" என்றார்.

சிஷ் : ஆம் ஐய, வைத்திருக்கிறேன். தேவரீருடைய திருவுள்ளக் கருத்துப்படி யாவும் ஆயத்தமாயிருக்கின்றன. ஆயினும் ஐயா, இத்தனை முப்புரி நூல் எதற்காக வென்பது ஏழையேனுக்குப் புலப்படவில்லை.

சுவா : துவிஜர் அனைவருக்கும் முப்புரி நூல் தரித்துக்கொள்ளும் உரிமையுண்டு. இவ்விஷயத்துக்கு வேதங்களே பிரமாணமா யிருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜநந தினமாகிய இப்புண்ணிய நாளிலே யார் வருகின்றார்களோ அவர்களுக்கு நான் முப்புரி நூல் கொடுப்பேன். இம்மக்கள் தங்கள் சொந்த நிலைமையிலிருந்து விழுந்து விட்டார்கள் ; தக்க பிராயச்சித்தம் செய்துகொண்ட பின்னர் உபநயன உரிமை இவர்களுக்கு உண்டு என்பது சாஸ்திரங்களின் முடிபு. இப்பெருந் தினம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஜனன தினம். அவருடைய திருநாமத்தை உச்சரிப்பதனால் மனிதர் பரிசுத்தவான்கள் ஆகின்றனர். இங்குக்கூடியிருக்கின்ற

பக்தர்களுக்குப் பரிசுத்தம் பொருந்திய முப்புரி நூல் தரிப்பிப்பது எனது நோக்கம். இப்பொழுது உனக்குத் தெளிவாயிற்று ?

சிஷ் : தேவரீருடைய கட்டளைப்படி அநேக யக்ஞோபவீதங்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். ஆராதனை முடிந்த பின்னர்த் தேவரீருடைய அநுமதியோடு இங்குள்ள பக்தர்களுக்கு இந்த யக்ஞோபவீதங்களைத் தரிப்பிப்பேன்.

சுவா : பிராம்மணரல்லாத பக்தர்களுக்கு இந்தக் காயத்திரி மந்திரத்தை உபதேசிப்பாயாக (இத்தருணத்தில் சுவாமிஜீ ஏற்புடைத்தாகிய ஒரு மந்திரத்தைச் சிஷ்யருக்குத் தெரிவித்தார்.) படிப்படியாக ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தரை மாத்திரமன்றி இந்நாட்டிலுள்ள எல்லா மக்களையுமே பிராம்மணத்துவத்திற்கு உயர்த்தி வைத்தல் வேண்டும். இந்துக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர் என்பதை நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன். "தீண்டாதே, தீண்டாதே" என்னும் ஆர்ப்பரிப்பினால் நாம் அவர்களைக் கீழ்மைப் படுத்திவிட்டோம் நாடு முழுவதும் கயமை, கோழைத் தனம், பேதைமை என்னும் இவற்றில் அமிழ்ந்து கிடக்கின்றது. இந்த மக்களை உயர்த்த வேண்டும் நம் பிக்கையோடும் சிரத்தையோடும் கூடிய வார்த்தைகளை அவர்களுக்கு விரிவுறச் சொல்ல வேண்டும். "நீங்களும் எங்களைப் போன்ற மனிதர், எங்களுக்குள்ள உரிமை உங்களுக்குமுண்டு" என்று நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டும் அறிந்துகொண்டாயா ?

சிஷ் : ஆம் ஐய, அப்படியே ஆகவேண்டும்.

சுவா : பரிசுத்தம் பொருந்திய முப்புரி நூல் தரிக்கப் பெறுவோர் அனைவரையும் கங்கையிலே தீர்த்தமாடி வரும்படி சொல்வாயாக அதன் பின்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய முன்னிலையில் அவர்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வார்களாக. அதன்பின் அவர்களுடைய உபநயனச் சடங்கு நடைபெறும்.

நாற்பது ஐம்பது பக்தர்கள் குறித்த சிஷ்யரிடமிருந்து காயத்ரி மந்திரத்தையும் யக்ஞோபவீதத்தையும் முறைப்படி பெற்றுக்கொண்டார்கள். அத்தருணத்தில் சுவாமிஜியினுடைய திருமுக மண்டலமானது உவகையினால் பொலிவுற்று விளங்கியது.

இதற்குச் சற்று நேரத்தின் பின்னர் கல்கத்தாவிலிருந்து ஸ்ரீ ஐகத் கிரீஷ்சந்திர கோஷர் திருமடத்திற்கு வந்து சேர்ந்தார்.

சுவாமிஜியினுடைய திருவுள்ளப் பாங்கின் வண்ணம் சங்கீதத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றன. திருமடத்துச் சந்நியாசிகள் சுவாமிஜியைச் சிவயோகி வேஷமாக அலங்கரித்தார்கள்.

மெல்லென்ற இனிய குரலிலே தம்புரு வாத்தியத்தோடு "கூஜந்தம் ராம ராமேதி" எனத் தொடங்குகிற பாடலை சுவாமிஜி பாடினார். பாடல் முடிந்ததும் "ராம, ராம, ஸ்ரீ ராம, ராம" என்னும் பரிசுத்த நாமத்தை உளங்கவர் மனப்பிரேமையோடு சொல்லி அருளினார். அவருடைய கண்கள் அரைவாசி மூடப்பட்டிருந்தன. இயல்பாகவே உள்ள முகதேஜஸ் இன்று நூறுமடங்கு அதிகமாகத் தோன்றியது. அரைமணி நேரத்திற்கு அனைவரும் பரவசப்பட்டிருந்தனர்.

ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் முடிந்த பின்னர் நிலை பெற்ற உள்ளக்கிளர்ச்சியோடு ஸ்ரீ ராமச்சந்திர தோத்திரமாக துளசிதாஸர் இயற்றிய ஒரு செய்யுளைச் சுவாமிஜி பாடினார். அதன்மேல் வேறு சங்கீதம் நடைபெற்றது.

இது முடிந்ததும் சுவாமிஜி தமது திருமேனியிலிருந்த மலர்மாலை முதலிய அலங்கார வஸ்துக்களை எடுத்து கிரீஷ் பாபுவை அலங்கரிக்கத் தொடங்கினார். "நமது சகோதரராகிய இவர் பைரவருடைய அவதாரமென்று பரமஹம்ஸ தேவர் சொல்வதுண்டு. இவருக்கும் நமக்கும் ஒருவகை வேறுபாடும் இல்லை" என்று சுவாமிஜி சொன்னார். இதற்கெல்லாம் கிரீஷ் பாபு

பேச்சற்று மௌனமாய் இருந்தார். ஒரு காஷாய வஸ்திரத் துண்டு அவர் மேனியில் அணியப் பெற்றது: அதற்கு அவர் ஒன்றும் மறுத்துரை கூறவில்லை. இன்று அவர் தமது சகோதர சிஷ்யரது வயப்பட்டவராகித் தஞ்செயலற்றிருந்தார். சுவாமிஜி அவரை நோக்கி, "அன்பரே, இன்று நீர் நமது குருநாதரைப்பற்றிச் சொல்லியருளவேண்டும் நாங்களெல்லோரும் அமைதியாக விருந்து கேட்போம்" என்றார். கிரீஷ் பாபு, கற்சிலைபோல் அசைவற்று ஆனந்தத்தில் ஆழ்ந்து பேச்சொழிந்திருந்தார். சற்றிலே அவர் வாயைத் திறந்து, "ஏழையேனாகிய சிறியேன் நமது ஆண்டவனுடைய அளவற்ற பெருங் கருணையை என்னென்று எடுத்துச் சொல்லுவேன்! பாவியாம் முதல பொன்னாசை பெண்ணாசையைத் துறந்து பரிசுத்தவான்களாக விருக்கின்ற சாதுக்களாகிய உங்கள் மத்தியில் கீழ்மை படைத்த சிறியேன் இருந்து கலந்து உறவாடும் இந்த நிலைமை ஒன்றே குருநாதனுடைய பெருங் கருணையைக் காட்டி நிற்கின்றது" இவ்வுரைகளைச் சொல்லும்பொழுது அவர் நாத்தழும்பேறி உரை குளறி மேலொன்றும் பேசவொண்ணாது மௌனமானார்.

இதன் பின்னர்ச் சுவாமிஜி சில ஹிந்திப் பாடல்களைப் பாடினார். பக்தர்கள் பிரசாதம் உட்கொண்டார்கள். அதன் பின்னர்க் கீழ்த் தலத்திலுள்ள சாலையில் ஓர் ஆசனத்திலமர்ந்து சுவாமிகள் எழுந்தருளியிருக்க அன்பர் பலர் அவரைச் சூழ இருந்தனர் அத்தினத்தில் யக்ஞோபவீதம் பெற்றுக் கொண்ட இல்லற நண்பர் ஒருவரைச் சுவாமிஜி நோக்கி, "உண்மையில் நீவிர் எல்லீரும் இரு பிறப்பாளர். நீண்ட நாளாக உமது உரிமையை இழந்திருந்தீர். இந்நாள் முதலாக மீட்டும் இருபிறப்பாளராயினீர். காயத்திரி மந்திரத்தை தினம் ஒன்றுக்கு நூறு முறையாவது உச்சரிப்பீரன்றோ?" என்றார். இதற்கு அந் நண்பர் ஆம் என்றார்.

இத்தருணத்தில் ஸ்ரீஜத் மஹேந்திரநாத குப்தர் வந்தனர். சுவாமிஜி அவரை அன்பினோடு வரவழைத்து

ஆசனத்திருத்தி, "மஹாராஜரே! இன்று ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய ஜனன தினமாகும். அவரைப்பற்றி எங்களுக்கு ஏதாவது சொல்லியருளல் வேண்டும்" என்றார் மஹேந்திரநாதர் புன்னகை புரிந்து தலை வணங்கி இருந்தார்.

அப்பொழுது மூர்ஷிதாபாத்திலிருந்து சுவாமி அகண்டானந்தர் வந்திருப்பதாகவும் ஒன்றரை மணங்கு நிறையுடைய இரண்டு பெரிய *பந்துவாக்களைக் கொண்டு வந்திருப்பதாகவும் செய்தி வந்தது. இந்தப் பெரிய பந்துவாக்களைப் பார்க்கும்படி நாங்களனைவரும் விரைந்து சென்றோம் அவற்றை நைவேத்தியத்தின் பொருட்டு ஆலயத்திற்குக் கொண்டு செல்லும்படி சுவாமிஜி கட்டளையிட்டார்

சுவாமி அகண்டானந்தரைப் பொருளாகக் கொண்டு சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "பார்த்தாயா, தொண்டு செய்வதில் அவர் எத்துணைப் பெரிய வீரராக இருக்கின்றார்! அச்சம், மரணம் என்னும் இவற்றைப்பற்றி இவர் சிறிதேனும் பொருட்படுத்துவதில்லை. எல்லோரும் இன்புற்றிருக்கும் எண்ணம் இடையறாது முயன்று தொழில் புரிகின்றார்."

சிஷ்: ஐயா! இத்தகைய ஆற்றல் அவருக்கு அளவிறந்த தவத்தின் பயனாகக் கிடைத்திருக்க வேண்டும்

சுவா: ஆம், தவத்தின் பயனாகவே வலிமை வந்தெய்துகிறது. பிறருக்காக முயற்சிப்பதும் ஒரு வகைத் தவமே. தொழில் புரிதல் தவத்திற்கு அங்கமென்பது கருமயோகிகளின் முடிபு. தவமுயற்சியானது பக்தனுடைய உள்ளத்தில் பிறர் நலத்திற்காக உழைக்கின்ற நல்ல எண்ணத்தை உண்டு பண்ணிச் சித்தத்தைச் சுத்தி செய்து ஈற்றில் பரம பதத்தையும் அருளுகின்றது.

---

*பந்துவா என்னும் தின்பண்டமானது சாதாரணமாக இரண்டங்குல நீளமுடையது; பாற்கட்டியிற் செய்து நெய்யிற் பொரித்துச் சீனிப்பாகிற் சேமித்து வைக்கப்படுவது.

சிஷ்: ஆனாலும், ஐய, தொடக்கம் முதலாகப் பிறர் பொருட்டு முழுமனதோடும் உழைக்க வல்லுநர் எம்முள் எத்தனை பேர் உளர்? தமது நலத்துக்காக விளைகின்ற விளைவினை அகற்றித் தமது வாழ்நாளைப் பிறருடைய சேவைக்கென அர்ப்பணம் பண்ணும் அகன்ற சிந்தையைப் பெறுவது எவ்வளவு கஷ்டம்!

சுவா: தவத்தின்பாற் செல்லும் சிந்தையையுடையோர் எத்தனை பேர் உளர்? பொன்னாசை பெண்ணாசை ஒரு புறம் பற்றி இழுக்க ஆண்டவனை அடையவேணடும் என்ற எண்ணத்தில் ஈடுபட்டிருப்போர் எத்தனை பேர்! தன்னலம் விழையாத முயற்சி உண்மையில் தவத்தினை நிகர்த்ததே. ஆதலால் பிறர் நலங்கருதி முயற்சிப்போருக்கு மறுதலையாய் இருப்பது தகுதியாகாது. தவத்தின்மேல் உனக்கு இச்சை உண்டாகில் நீ அதனைப் புரிவாயாக. பிறர் நலங்கருதித் தொண்டு புரிவது மற்றொருவனுடைய உள்ளத்திற்கு விருப்பத்தைத் தருவதாயிருக்கலாம், அதற்குத் தடை கூறும் உரிமை உனக்கில்லை தொண்டு தவமாக மாட்டாதென்னும் எண்ணம் உன்னுடைய உள்ளத்தில் நிலை பெற்றிருப்பதாகத் தோன்றுகிறது

சிஷ்: ஆம் ஐய, இதற்கு முன்பு தவத்தைப் பற்றி நான் வேறுபாடான எண்ணமுடையவனாய் இருந்தேன்.

சுவா: சமய சாதனைகளை நீண்ட காலம் அப்பியசிப்பதினால் ஒருவகை நிலைமை படிப்படியாக விருத்தியடைவதுபோல, விருப்பின்றியேனும் தன்னலங் கருதா நன்முயற்சிகளை மீட்டும் மீட்டும் செய்வதனால் சித்தமானது அத்தகைய முயற்சியின்பால் செல்லுகின்றது. மன விருப்பில்லாதிருப்பினும் அத்தகைய முயற்சியைச் சிலநாட் புரிந்து அதன் வழியாகத் தவப்பயன் கிடைக்கின்றதா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்ப்பாயாக பிறர் பொருட்டு உழைப்பதனால் மனிதனுடைய மனத்தின் கோணல்கள் நேர்மையுற்றுப் பிறருக்காக உண்மை

யில் தியாகம் செய்யும் நீர்மையை அவன் அடைகின்றான்.

சிஷ் : ஆயினும், ஐய! பிறருக்கு எதற்காக நன்மை புரியவேண்டும் ?

சுவா : நமது நலத்தின் பொருட்டாகப் பிறர் நலங் கருதி உழைக்க வேண்டும். பிறருடைய சேவைக்காக இவ்வுடல் அர்ப்பணம் பண்ணப்பட்டதென்பதை அறிவோமாகில் உடலோடு பொருந்தவைத்து எண்ணுகிற நான் என்னும் எண்ணம் நம்மைவிட்டு அகன்றுவிடும். காலாந்தரத்திலே விதேக உணர்வு ஏற்படும். பிறர் நலத்தை எவ்வளவாக ஊன்றி நினைக்கின்றாயோ அவ்வளவுக்கு நான் என்னும் எண்ணம் அகன்றுவிடும். இவ்வாறாகச் சித்தம் சுத்தி அடையவும் சர்வ வஸ்துக்களிலும் வியாபித்திருக்கின்ற ஆத்மன் நானே என்னும் எண்ணம் உள்ளத்தில் நிலைபெறும். தன்னைத்தான் உணர்வதற்குப் பிறர் நலங்கருதித் தொண்டு புரிவது ஒரு வழியாகும். இதுவும் முத்தியை அடைவதற்கு வழி யென்பதை உணர்ந்து கொள்வாயாக. கருமத்தின் நோக்கமும் ஆத்ம ஞானமே என்று அறிந்துகொள்ளும். ஞானத்தினாலும் பக்தியினாலும் அடைகின்ற பேறு பிறர் நலங்கருதிய கருமத்தினாலும் வந்தெய்தப்பெறும்.

சிஷ் : ஆனால், ஐய ! இரவு பகலாகப் பிறரைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதாயின் ஆத்மனைப் பற்றித் தியானிப்பது எப்பொழுது எய்தப்பெறும் ? குறித்த பொருள்களைச் சிந்திப்பதே பொருளாகக் கொண்டால் குறியிறந்து ஆத்மனை அடைவது எப்படி?

சுவா : ஆத்ம ஞானத்தைப் பெறுவதே சமய சாதனைகள் அனைத்திற்கும் பெரிய முடிபாக அமைந்தது. பிறருடைய தொண்டில் ஈடுபட்டுச் சித்தசுத்தியெய்தப் பெற்று எல்லா உயிர்களிடத்தும் ஆத்ம தரிசனம் செய்வாயாகில் நீ எய்த வேண்டிய பேறு வேறு யாதுளது ? மரத்தைப் போலவும், சுவரைப் போலவும் சட வஸ்துவாகிக்கிடப்பது ஆத்மஞான மெனப்படுமா ?

சிஷ் : அது கருத்தன்றாயினும் ஆத்மனை அதனது உண்மை நிலையில் நிறுத்துவதெனச் சாத்திரங்களாற் கூறப்படுவது மனத்தினது தொழிலைக் கட்டுப்படுத்திச் செயலற்றிருக்கும் நிலைமையன்றோ ?

சுவா : ஆம், சாஸ்திரங்களிலே கூறப்படுகிற சமாதி நிலை எளிதில் அடையப்படுவதன்று. அது அரிதில் ஒருவரிடத்துத் தோற்றும் பொழுது நெடிது நிலை பெற்றிருக்கும் நீர்மையதன்று. சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட இந்நிலையை அடைந்தபின் தவம் புரிந்த பெரியோன் எல்லா உயிர்களிலும் ஆன்ம விளக்கத்தைத் தரிசிக்கின்றான். இவ்வுணர்ச்சியினால் பிறருடைய தொண்டிலே ஈடுபட்டு எஞ்சியிருக்கின்ற கரும பலனை ஒழிக்கும் பொருட்டு உடலை வருத்தித் தொண்டு புரிகின்றான். இத்தகையவனே சாஸ்திரங்களிலே ஜீவன் முக்தன் எனப்படுவான்.

சிஷ் : அஃது அங்ஙனமாயின் ஜீவன் முக்தி நிலையை அடைந்த பின்பன்றோ உண்மையிலே பிறர் பொருட்டு உழைக்கின்ற முயற்சியில் ஈடுபடுதல் எய்தப்பெறும்.

சுவா : ஆம். சாஸ்திரங்கள் சொல்லுவது அதுவே. ஆயினும் பிறர் பொருட்டு முயற்சிப்பதனால் ஜீவன் முக்தி வந்தெய்தும் எனவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அஃதில்லையாயின் கரும யோகமென்று தனியாகிய ஒரு மார்க்கத்தை எடுத்து உபதேசிப்பது சாஸ்திரங்களின் அங்கமாக அமைந்திருப்பது பொருந்தாது.

சிஷ்யர் : இந்த உண்மையை யுணர்ந்து மௌனமானார் சுவாமிஜி இனிய தெய்விகக் குரலிலே ஸ்ரீ ராம கிருஷ்ணவதாரத்தைச் சிறப்பித்துக் கூறுவதும் பாபு கிரீஷ் சந்திர கோஷரால் இயற்றப்பட்டதுமான "ஏழைப் பிராம்மணியின் மடியிற் கிடக்குமிவர் யாரோ?" என்னும் கீதத்தைப் பாடினார்.

(14)

[இடம் : பேலூர் மடம் காலம் : 1898-ம் ஆண்டு]

புதியதாக அமைக்கப்பட்ட திருமடத்திலே இன்று சுவாமிஜி வேத வேள்வி இயற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பிரதிஷ்டை செய்யப் போகின்றார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. பிரதிஷ்டைக் கிரியைகளைக் காணும் நோக்கமாகச் சிஷ்யர் முதனாளிரவு முதலாகத் திருமடத்திலேயே தங்கியிருக்கின்றார்.

காலையிலே சுவாமிஜி கங்கை நீராடி, பூஜை மண்டபத்தினுள்ளே பிரவேசித்து, ஸ்ரீ ராமகிருஷ்ணரது பரிசுத்த பாதுகைக்கு வழிபாடியற்றித் தியானத்தில் அமருவாராயினார்.

தியானமும் பூஜையும் முடிந்த பின்னர், புதிய மடாலயக் கட்டிடத்தினுள்ளே பிரவேசிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்தேறின. ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரது திருமேனிச் சாம்பர் வைக்கப்பட்டிருந்த செப்புப் பேழை ஒன்றினைத் தோள்மேல் ஏந்திக்கொண்டு சுவாமிஜி முன்னாக நடந்தார். சாதுக்களின் கூட்டத்தோடு உடனாக வந்த சிஷ்யர் பின்னாக நடந்தார். மணியோசையும் சங்கநாதமும் யாங்கணும் ஒலித்தன. வழியிலே சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, " ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், யான் என் தோள்மீது தம்மை யேந்திக் கொண்டு எவ்விடத்துக்குச் செல்கின்றேனோ, அது மரத்தடியாயிருப்பினும், குடிசையாயிருப்பினும் அவ்விடத்தில் எழுந்தருளியிருப்பதாக எனக்குச் சொல்லியிருக்கின்றார். ஆதலினாலன்றோ புதிய மடாலயத்துக்கு அவரை என் தோள்களிலே ஏந்திச் செல்கின்றேன்; பலருடைய நலத்திற்காக மிக நீண்ட காலத்திற்கு அவர் இவ்விடத்தில் எழுந்தருளியிருப்பார் என்பதை நீ நிச்சயமாக நம்புவாயாக " என்றார்.

சிஷ் : குருதேவர் எப்பொழுது இதனைத் தேவரீருக்குத் தெரிவித்தார்.

சுவா : (மடத்துச் சாதுக்களைச் சுட்டிக்காட்டி) நீ இவர்களிடமிருந்து கேள்விப்படவில்லையா ? அது நிகழ்ந்தது காசிப்பூர் நந்தவனத்தில்.

சிஷ் : ஆம், அறிந்துகொண்டேன். ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய சந்நியாச சிஷ்யர்களுக்கும் இல்லற சிஷ்யர்களுக்குமிடையே குருதேவருடைய பூஜா கைங் கரியத்தை யார் செய்வதென்பதைப்பற்றி ஒரு விவாதம் நடந்ததே ; அத்தருணத்திலா ?

சுவா : ஆம், உண்மையில் அது ஒரு விவாதம் இல்லை ; வேறுபட்ட அபிப்பிராயமிருந்தது, அவ்வளவு தான். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தொண்டர்களாய் உண்மையில் அவருடைய அருளைப்பெற்றவர்கள் இல் லறத்தாராயினும் சரி, சாதுக்களா யிருப்பினும் சரி ; அவர்களிடையே பிரிவினை இருக்கமாட்டாது ; வேறு பட்ட அபிப்பிராயம் சிறிது இருந்தது என்றேனே, அது எதனாலாயிற்று என்பதை நீ அறிவாயா ? ஒவ் வொரு தொண்டனும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தன்னு டைய விளக்கத்திற்குப் புலப்பட்ட வண்ணமாகத் தனது நிலையிலே, தன் மனதிற்பட்ட கருத்தின்படி, உருவப்படுத்தி நோக்குகின்றான். அவர் பெரியதொரு சூரியனை ஒத்தவர். நாம் ஒவ்வொருவரும் அவரை வேறு வேறு நிறங்கொண்ட படிகத்தினூடாகப் பார்க் கின்றோம் ஒரே சூரியன் வேறுபட்ட நிறத்தினன் என்னும் எண்ணம் நம் உள்ளத்தில் உண்டாகின்றது. காலாந்தரத்திலே இதன் வழியாக அபிப்பிராயபேதம் உண்டாகலாம். ஆனால் அவதார புருஷரை நேரிலே கண்டறிந்த பாக்கியம் பெற்றவர்களுடைய ஜீவிய காலத்திலே வேறுபாடு நிகழ்வதில்லை. தானான தன்மை யிலே ஆனந்த மேலிட்டிருக்கும் அவதார புருஷர்களின் தெய்வ ஒளியானது மக்களுடைய கண்களைக் கவர, அதன் வழியாக அவர்கள் உள்ளத்திலுள்ள வீண் பெருமை, அகங்காரம், கயமை என்னும் இவை பெருங்

காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சுபோல இருந்தவிடம் தெரியாது நீங்கிப் போகின்றன. மக்கள் ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் வரித்துக்கொண்ட முறைப்படி, உள்ளங் குளிர்ந்த வழிபாடு இயற்றுவதையே பெரிதாகக் கொள்வார்கள்.

சிஷ் : ஐய ! அங்ஙனமாயின், அவதார புருஷர்களுடைய பக்தர்கள் அவரைத் தெய்வமென்று அறிந்திருந்தும் வேறு வேறு தன்மை படைத்தவராகக் காண்கின்றார்களா ? வழி முறையாக அவருக்குப் பின்வரும் தொண்டர்கள் குறுகிய எல்லையுள் நின்று மதபேதங்களை உண்டாக்குகின்றார்களா ?

சுவா : ஆம், அப்படியே. காலகதியிலே மத விகற்பங்கள் உண்டாவது இயல்புதான். சைதன்ய தேவருடைய வழிவந்தோர் இருநூறு முந்நூறு பிரிவுகளாகப் போய்விட்டனரன்றோ ? இயேசு மதத்தோர் ஆயிரம் பிரிவுகளாயினரன்றோ ? அங்ஙனமாயினும் வேறுபட்ட பிரிவினர் யாவரும் மாற்றம் இன்றிச் சைதன்ய தேவரையும் இயேசுவையும் மாத்திரமே வழிப்படுகின்றனர்.

சிஷ் : அங்ஙனமாயின், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வழி நிற்போரும் காலகதியில் பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபடுவாரன்றோ ?

சுவா : ஆம். ஆயினும் நாங்கள் கட்டுகிற இந்தத் திருமடமானது மத விகற்பங்கள் யாவற்றையும் சமரச நோக்கினாலே ஒன்றுபடுத்தும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உயர்ந்த அகன்ற நோக்கங்களை உடையவரா யிருந்தார்; இந்தத் திருமடமும் அத்தகைய நோக்கங்களைப் பரப்புவதற்குரிய நிலையமாகும். இங்கிருந்து எழுகின்ற சமரச ஒளி விளக்கமானது உலகனைத்தினும் பிரவாகிக்கும்.

இஃதெல்லாம் நிகழ்ந்துகொண்டிருக்கத் திருக்கூட்டமானது மடாலயத்தை யடைந்தது. சுவாமிஜி செப்புப் பேழையைத் தோளினின்றும் இறக்கி, நிலத்

தில் விரித்திருந்த கம்பளத்தின்மேல் வைத்து, அதன் முன்னர் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். மற்றவர்களும் அவ்வண்ணமே செய்தனர்.

அதன்பின் சுவாமிஜி பூஜையை முடித்து, ஹோமாக்கினியை வளர்த்து, அதனிடையே ஆகுதி பெய்து, சகோதர சிஷ்யர்களினுடைய உதவியோடு தமது கையினுற் சமைத்த பாயசத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருக்கு நைவேத்தியம் செய்தனர். அத்தினத்திலே அவ்விடத்திலே சில இல்லறத்தாருக்குத் தீக்ஷையும் நடந்திருக்கலாம். இந்தக் கருமங்களெல்லாம் முடிந்ததும் சுவாமிஜி சபையிற் குழுமியிருந்த மகா ஜனங்களை நோக்கி, "அநேகருடைய நன்மைக்காகவும் சுகத்துக்காவும் இந்த யுகத்திலே மகத்துவம் பொருந்திய அவதார புருஷராகத் தோன்றிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்தப் பரிசுத்த ஸ்தலத்திலே இன்று முதல் நீண்ட காலத்திற்கு வீற்றிருந்தருளவும், எல்லா மதஸ்தர்களுக்கும் சமரசத்தை உணர்த்துவதற்கு இது ஒரு சிறந்த நிலையமாக விளங்கவும் கருணைநிதியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரது திருவடிகளை நீங்களெல்லோரும் முழு மனதோடும் வழிபடுவீர்களாக" என்றார். எல்லோரும் கை குவித்துத் தொழுது வழிபட்டனர். சுவாமிஜி சிஷ்யரை விளித்து, "ஸ்ரீ ராமகிருஷ்ணரை நாங்கள் இன்று இவ்விடத்தில் பிரதிஷ்டை செய்துவிட்டோமானதினுல் சந்நியாசிகளாகிய நாங்கள் இந்தத் திருப்பேழையை மறுபடியும் எடுத்துச் செல்வதற்கு உரிமையுடையோம் அல்லேம்; இதனைச் சிரத்திற் றூங்கி (பழைய மடமிருக்கும்) நீலாம்பர பாபுவினுடைய உத்தியானவனத்திற்கு எடுத்துச் செல்வது நின்னுல் ஆகவேண்டியது" என்றார். சிஷ்யர் பேழையைத் தொடுவதற்கு அஞ்சியவராக நிற்பதைக் கண்டு, சுவாமிஜி, "அஞ்சாதே! இது என் கட்டளை, பரிசுத்தம் பொருந்திய இப்பேழையை நீ தொடலாம்" என்றார். சிஷ்யர் சந்தோஷத்தோடு அக்கட்டளைக்கியைந்து பேழையைத் தமது சிரத்திற்றூங்கி

முன்னாக நடந்தார். அதற்குப்பின் சுவாமிஜியும் ஏனை யோரும் தொடர்ந்து வந்தனர். வழியிலே சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "இற்றை நாள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உன்னுடைய சிரத்தின் மேலே வீற்றிருந்தருளி உன்னை ஆசீர்வதிக்கின்றார். இந்நாள் முதலாக, நீ கழிந்து போகிற பொருள்களின் மீது உனது சிந்தையைச் செலவிடாதே" என்றார். ஒரு சிறு பாலத்தைக் கடக்கு முன்பு சுவாமிஜி மீட்டும் சிஷ்யரை நோக்கி, " இப்பொழுது மிகக் கவன மாக நடப்பாயாக" என்றார்.

எல்லோரும் திருமடத்திற்கு வந்து சேர்ந்து உவகை யோடிருந்தனர். சுவாமிஜி சிஷ்யரை நோக்கிப், பின்வரு வனவற்றைச் சொல்லுவாராயினர். "ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய திருவுள்ளப்படியே அவருடைய தரும க்ஷேத்திர மானது இன்று நிறுவப்பட்டிருக்கின்றது. பன்னீராண்டு என்னுடைய உள்ளத்திலிருந்த கவலை, இன்று நீங்கிப் போய்விட்டது இந்தக் கணத்திலே நான் என்ன சிந்திக் கிறேனென்று அறிவாயா? இந்தத் திருமடம் கல்விப் பயிற்சிக்கும் ஆன்ம லாபத்திற்குரிய சாதனைகளுக்கும் உரிய நிலையமாகும். உன்னையொத்த நன் மனமுடைய இல்வாழ்வார் சமீபத்திலிருக்கும் நிலங்களில் வீடுக ளமைத்துக்கொண்டு வாழ்வார்கள். திருமடத்திலே துறவொழுக்கம் பூண்ட சந்நியாசிகள் வசிப்பார்கள். மடத்திற்குத் தெற்கே இருக்கின்ற நிலத்திலே ஆங்கி லேய அமெரிக்க சிஷ்யர்கள் வசித்தற்கு உரிய கட்டிடங் கள் அமைக்கப்படும். இந்தக் கருத்து உனக்கு எப்படித் தோன்றுகிறது?"

சிஷ்: ஐய, இது தேவரீருடைய அற்புதமான மனோரதமே!

சுவா: மனோரதம் என்று சொல்லுகிறாயா? இல்லை. எல்லாம் காலத்திலே நிறைவேறும். நான் செய்யும் முயற்சி அஸ்திவாரம் போன்றது. எதிர்காலத் தில் பல துறைப்பட்ட விருத்திகள் ஏற்படும். என் சீவிய காலத்திலேயே சில பகுதிகள் நிறைவு பெறுதல்

கூடும். உங்களுடைய உள்ளத்தில் உயர்ந்த கருத்துக்கள் பலவற்றைப் பதித்து வைப்பேன். எதிர்காலத்தில் நீங்கள் அவற்றைத் தொழிற் படுத்துவீர்கள். உயர்ந்த கொள்கைகளைக் கேட்பது மாத்திரம் போதாது. இடைவிடாத அப்பியாசத்தினால் அவற்றை வாழ்க்கையிலே அமைத்துக் காட்ட வேண்டும். சாஸ்திரங்களிலே உள்ள உயர்ந்த முடிபுகளை ஓசை நீர்மையாக மனத்தினுள்ளே நிரப்பி வைப்பதனால் உண்டாகின்ற பயன் யாது? சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டவற்றைத் தெளிவு பெற, மனத்திலே வாங்கிக்கொள்ள வேண்டும். பின்னர் அவற்றை வாழ்க்கையிலே தொழிற்படுத்த வேண்டும். இஃது உனக்குப் புலப்படுகின்றதா? இதனையே சமயானுஷ்டான மென்பது.

சம்பாஷணை இவ்வண்ணம் நடந்து கொண்டிருந்து, சிறிது சிறிதாகச் சங்கராசாரியருடைய கொள்கைகளைக் குறித்துச் சென்றது. சிஷ்யர் சங்கரர்மேல் மிகுந்த பற்றுடையவர். சங்கரர் உரைத்த அத்வைத தத்துவ ஞானமே எல்லா ஞானங்களுக்கும் மேலானதென எண்ணுபவர். சங்கரரை யாரும் குறைபெறக் கூறினால் மனம் பொறாதவர். சுவாமிஜி இதனையறிந்து வழக்கம்போலச் சிஷ்யருடைய ஒருபாற்பட்ட சிந்தையைப் பொது நிலைப்படுத்துவதற்குத் திருவுள்ளங் கொண்டார்.

சுவா: சங்கரருடைய புத்தி நாவிதன் கத்தியைப் போல மிகவும் கூர்மையாய் இருந்தது; அதற்கு ஐயப்பாடில்லை என்றாலும் அவரிடத்தில் அகன்ற நோக்கமில்லை: அவருடைய இதயமும் அத்தகைமையதாகவே காணப்பட்டது. மேலும், அவர் தமது பிராம்மணத்துவத்தில் பெருமை பாராட்டுபவர். இக்காலத்துத் தென்னிந்திய பிராம்மணப் புரோகித வகுப்பார்போல, அவர் இயற்றிய வேதாந்த சூத்திர வியாக்கியானத்திற் பிராம்மணர் அல்லாத வகுப்பார் மேலாகிய பிரம்ம ஞானத்தை அடையமாட்டார்களென்று எவ்

வளவாக வாதாடுகிறார்! அவர் காட்டும் நியாயங்களோ என்றால் எவ்வளவு நகைக்கிடமாகின்றன! விதுரன் பிரம்ம ஞானத்தை அடைந்தான்; அது முற்பிறவியிலேயே அவன் பிராம்மணத் திருமேனியோடு பிறந்த காரணத்தினால் என்கின்றார். நல்லது, இந்நாட்களில் சூத்திரன் ஒருவன் பிரம்ம ஞானத்தை யடைந்தால் உங்கள் சங்கரர் சொல்லுவது போலவே, அவன் முற்பிறப்பிலே பிராம்மணனாக விருந்த காரணத்தினால் அத்தகைய ஞானத்தை அடைந்தானென்று சொல்லவேண்டுமா? ஐயோ பாவம்! பிராம்மணத்துவத்தை இவ்வளவாக இழுத்து வாதாடுவதில் என்ன பிரயோஜனம்? உயர்ந்த மூன்று வருணத்தாரும் வேதங்களை ஓதுவதற்கும் பிரம்மத்தை அடைவதற்கும் உரியவரென்று வேதம் கூறவில்லையா? வேதப் பிரமாணத்திற்கு எதிராகச் சங்கரர், இந்த விஷயத்தில் தமது புத்திசாலித்தனத்தைக் காட்டுவது வேண்டப்படாததொன்று. வாதத்திலே தோல்வி யடைந்த எத்தனையோ புத்த சந்நியாசிகளை நெருப்புக்கு இரையாக்கின அவருடைய இருதயத்தை என்னென்று சொல்லுவது! வாதத்திலே தோல்வியுற்றோம் என்று நெருப்பிற் புகச் சித்தமாயிருந்த பௌத்தரும் மூடர். சங்கரர் இந்தச் செய்கையைச் செய்தது மூடப் பிடிவாதமின்றி வேறு எதுவாகும்! புத்த தேவருடைய இருதயத்தை இதனோடு ஒப்பவைத்து நோக்குவாயாக. சிறு ஆட்டுக்குட்டியினுடைய உயிரைக் காப்பாற்றத் தமது உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருந்தார்; **பஹுஜன ஹிதாய பஹுஜன ஸுகாய**: பலருடைய இதத்திற்காகவும் பலருடைய சுகத்திற்காகவும் வாழ்ந்தார். எவ்வளவு அகன்ற சிந்தை, எவ்வளவு இரக்கம்!

சிஷ்: ஐய, புத்ததேவர் இப்படிச் செய்ததையும் மற்றொருவகை மூடப் பிடிவாதமென்று நாம் சொல்லுதல் கூடாதா? கேவலம் ஒரு மிருகத்தின் பொருட்டாகத் தம்முடைய சொந்தச் சரீரத்தைக் கொடுத்துவிட நினைத்தாரே!

சுவா: ஆனால் இந்த "மூடப் பிடிவாதத்தினால்," உலகுக்கு எவ்வளவு நன்மை விளைந்ததென்பதை எண்ணிப் பார். எத்தனை மடங்கள், எத்தனை பாடசாலைகள். கலாசாலைகள், வைத்தியசாலைகள், மிருகங்களுக்குச் சிகிச்சை புரியும் சாலைகள் ஏற்பட்டன என்பதை நினைத்துப்பார். சிற்பம் எவ்வளவாகச் சிறந்து விளங்கியது! புத்த தேவருடைய வருகைக்கு முன் இந்த நாட்டில் என்ன இருந்தது? ஓலைச் சுவடிகளிலே எழுதப்பட்டு ஒரு சிலரால் மாத்திரம் அறியப்பட்டிருந்த சமய உண்மைகள் சில இருந்தன. புத்ததேவர் அவற்றை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து மக்களுடைய வாழ்க்கையிலே அவற்றைப் பயன்படுத்தும் மார்க்கங்களைக் காட்டினார். இங்ஙனம் நோக்கும்போது அவர் உண்மை வேதாந்தம் உருவெடுத்ததுபோல் ஆவார்.

சிஷ்: வருணாசிரம தருமக் கட்டுப்பாட்டுக்கு மாறாக இந்து சமயத்திலே ஒருவகைப் புரட்சியைப் புத்த தேவர் உண்டாக்கினாரென்பதும் அக்காரணத்தினாலே அவர் போதித்த சமயமானது இந்தியாவின் எல்லையினின்றும் வெளியே துரத்தப்பட்டதெனவும் சொல்வதிலே ஓர் அளவுக்கு உண்மை இருப்பதாகத் தெரிகிறது.

சுவா; அவருடைய போதனையினாலே புத்த மதத்துக்கு இழுக்கு ஏற்படவில்லை; அவர் வழியிலே வந்தவர்களாலே குறைவு ஏற்பட்டது. தத்துவ விசாரத்தில் அதிகம் புகுந்த காரணத்தினால் அன்னார் உள்ளம் அகலப் பெறாராயினார். (சமயானுஷ்டானத்தின்பேரிற் கட்டுக் காவலின்றிப் பெண்களோடு கலந்து கொள்ளுகிற) வாமாசாரம் உட்புகுந்து படிப்படியாகப் புத்தமதத்தை அழித்துவிட்டது. அத்தகைய பேய்த்தனமான கிரியைகள் இக்காலத்துத் தந்திர நூல்களிலே காணப்படமாட்டா. பூரி ஜகந்நாதம் புத்தமதத்தின் முக்கிய ஸ்தானங்களில் ஒன்று; அங்குள்ள கோயிற் சுவர்களிலே செதுக்கி இருக்கிற அருவருப்பான உருவங்களைப் பார்ப்

பாயாயின் இவ்வுண்மை புலப்படும். இராமாநுஜர் ஸ்ரீ சைதன்யருடைய காலம் முதலாகப் பூரி வைஷ்ணவருடைய ஆளுகைக்குள் இருக்கிறது. மேற்குறித்த பெரியார்களைப் போன்ற நல்லாரின் தொடர்பினாலே அந்த இடத்தில் முன்னிருந்த நிலைமை முற்றிலும் மாறி விட்டது.

சிஷ்: யாத்திரைக்குரிய இடங்களிலே, பல்வேறு வகைப்பட்ட நன்மைகள் நிலைபெற்றிருப்பதாகச் சாத்திரங்கள் கூறுகின்றனவே. இஃது எவ்வளவுக்கு உண்மையாகும்?

சுவா: உலகமனைத்துமே ஈசுவரனாகிய நித்திய சுத்த ஆத்மாவின் வியாபக வடிவமாக அமைந்திருக்கும் பொழுது சில இடங்களிலே சிறந்த நன்மைத் தொடர்பு உண்டு எனக் கூறுவதில் வியப்பு அடைவது எற்றுக்கு? ஈசுவரன் தனது திருவுள்ளப்படியாவது, பரிசுத்த ஆத்துமாக்களின் சிரத்தை மீதூரப்பட்டாவது தன்னுடைய சொரூபத்தை வெளிப்படுத்திய இடங்களுண்டு. சாதாரண மனுஷன் ஆர்வத்தோடு இவ்விடங்களைத் தரிசிப்பானாயின் கருதிய பயனை எளிதிற் பெறுவான். ஆதலினாலே, பரிசுத்த ஸ்தலங்களைத் தரிசிப்பதினாலே ஆத்மலாபம் உண்டாகும். மனிதனுடைய சரீரத்திலும் பார்க்கச் சிறந்த ஆலயம் வேறு இல்லை என்பதை நிச்சயமாக அறிந்துகொள். இவ்விடத்தில் இருப்பது போல மற்றெவ்விடத்திலும் ஆத்மனுடைய விளக்கம் காணப்படுவதில்லை. ஜகந்நாதனுடைய ரதம் என்று நீ புறத்தே காணுவது இந்த உடலாகிய ரதத்தினுடைய பருப்பொருள் உருவம். **ஆத்மானம் ரதினம் வித்தி** "ஆத்மனை ரதத்தில் ஆரோகணித்திருப்பதாக அறிவாயாக." **மத்யே வாமன மாஸீனம் விஸ்வே தேவா உபாஸதே** "உடல் நடுவிலே இருக்கையிலிருக்கின்ற வாமனரை எல்லாத் தேவர்களும் வழிபடுகின்றார்கள்." ஆத்ம தரிசனந்தான் உண்மையில் ஜகந்நாத தரிசனம். **ரதேச வாமனம் த்ருஷ்ட்வா புனர்ஜன்ம நவித்யதே** "ரதத்திலுள்ள வாமனரைக் கண்

டோர் மீட்டும் பிறப்பதில்லை" யென்பதன் கருத்து என்னவெனின், சடப்பொருளாகிய தேகத்தை நீ என்று எண்ணிக்கொண்டு இருக்கின்ற நீ அதனை மறந்து உன்னுள்ளே இருக்கின்ற ஆத்மனைக் காண்பாயாயின் உனக்கு மறுபிறப்பு இல்லை என்பது. மரத்தினற் செய்த அடுக்கொன்றின் மேலே பகவானுடைய உருவத்தைக் கண்டவர்களுக்கு முத்தி சித்திக்குமாயின் ஆண்டு தோறும் கோடிக்கணக்கான பேர் முத்தி அடைவார்களன்றோ? புகைரதப் போக்கு வரத்து அதிகமாகிய இக்காலத்தில் இது மிக எளிதாகுமன்றோ? ஆனால் பக்தராயினோர் ஸ்ரீ ஜகந்நாதன்பாற் கொண்டிருக்கின்ற கொள்கை தப்பென்றாவது, பயனற்றதென்றாவது, நான் கருதவில்லை அத்திருவுருவத்தின் உதவியினாலே மேலும் மேலும் உயர்ந்த உண்மைகளை அடைகின்ற ஒரு வகுப்பு மக்கள் இருக்கிறார்கள். அந்தத் திருவுருவத்தின் மூலமாகப் பகவானுடைய தோற்றம் சிறப்புற விளங்குகிறதென்பதற்கு ஐயமில்லை.

சிஷ்: ஐய, அப்படியாயின் பண்டிதர்க்கும் பாமரர்க்கும் வேறு வேறு சமயங்கள் உண்டா?

சுவா: ஆம் அப்படியே அங்ஙனம் இல்லாவிடின் ஆகம சாஸ்திரங்கள் அதிகாரியினுடைய இலக்ஷணத்தை விரிவாகச் சொல்லவேண்டிய அவசியம் என்னே? எல்லாம் உண்மையே ஆயினும், அளவினால் வேறுபட்ட படிப்படியாகிய உண்மைகளுண்டு. மனிதன் உண்மை என்று காண்பனவெல்லாம் ஒரே தன்மைய. சில, குறைந்த உண்மைகள்; இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, வேறு சில உயர்ந்த உண்மைகள். ஆண்டவன் ஒருவனே முடிந்த உண்மை. இவ்வாத்மா சடப்பொருளிலே முற்றிலும் மறைந்திருக்கிறது; உயிர்ப்பொருளாகிய மனிதனிடத்தே ஓர் அளவுக்குத் தோற்றுகிறது; ஸ்ரீ கிருஷ்ணர், புத்தர், சங்கரர் முதலிய பெரியாரிடத்து இவ்வாத்மா அறிவுக் கப்பாலாகிய நிலையை அடைந்திருக்கிறது. இதற்கும் அப்பாலாகிய ஒரு நிலை

உண்டு. அது வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதது; **அவாங் மனஸோ கோசரம்** எனப்படுவது.

சிஷ்: ஐய, பக்திமார்க்கத்தில் நிற்போர் கடவுள் பால் ஏதாவது ஒருவகைத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு பக்தி பண்ணவேண்டும் என்கிறார்களே? ஆத்மனுடைய மகத்துவம் என்றின்னவற்றைப் பற்றிப் பொருட்படுத்தாது பக்தியையே என்றும் அப்பியசிக்கும்படி சொல்லுகிறார்களே?

சுவா: அவர்கள் சொல்லுவது அவர்கள் அளவில் உண்மையே. இடைவிடாத அப்பியாசத்தினால் அவர்களும் பிரம்மத்தினுடைய விளக்கத்தைத் தம் முள்ளே கண்டு உணர்வார்கள். சந்நியாசிகளாகிய நாங்கள் செய்வது மற்றொரு வகை அப்பியாசம். நாங்கள் உலகத்தைத் துறந்துவிட்டோம். ஆதலால், தந்தை தாய் மனைவி மைந்தன் என்று இன்னின்ன உலகத் தொடர்புகளாற் கடவுளைக் காண அப்பியசிப்பது எங்களுக்கு எப்படிப் பொருந்தும்? இவையெல்லாம் மிக ஒடுங்கியவை என்று எங்களுக்குக் காணப்படுகின்றன. நியதியற்ற சுத்த உருவத்திலே கடவுளைக் கண்டு வழிபாடு இயற்றத் தகுதி உடையவராதல் மிகக் கடினம். அங்ஙனமாயினும் அமுதம் கிடைக்கவில்லை என்று விஷத்தைத் தேடலாமா? எப்பொழுதும் இந்த ஆத்மனைப் பற்றிப் பேசவேண்டும், கேட்கவேண்டும், ஆராய்ச்சி பண்ணவேண்டும். இவ்வழி தொடர்ந்து அப்பியசிப்பதனாற் காலகதியிலே உன்னிடத்திலும் பிரம்மமாகிய சிங்கம் எழுந்திருக்கக் காண்பாய். மனத்தின் லீலைகளாகிய சம்பந்தங்களுக்கு அப்பாற் செல்வாயாக. கடோபநிஷத்திலே யமன் சொல்லுகிற வார்த்தையைக் கேள்: **உத்திஷ்ட ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத** "எழுந்திரு, விழித்துக்கொள், கருதிய கருமம் கைகூடும்வரை முயன்று நில்."

இவ்வளவோடு விஷயம் முடிந்தது. பிரசாதத்துக்கு மணி அடித்தமையினால் சுவாமிஜி சிஷ்யரையும் உடன் அழைத்துக்கொண்டு சென்றார்.

(15)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1898 மாசி.]

ஆலம்பஸாரிலிருந்த திருமடமானது பேலூரில் நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலைக்கு மாற்றப்பட்டது. இது சுவாமிஜியினுடைய கட்டளையினால் ஆனது. புதிய இடத்திற்கு வந்ததுபற்றிப் பெருமகிழ்வுடையவராய் இருந்த சுவாமிஜி அங்குவந்த சிஷ்யரை நோக்கி "அதோ பார், கங்காநதி பிரவாகித்து ஓடுகின்றது; என்ன அழகான கட்டிடம்; நான் இவ்விடத்தை விரும்புகிறேன்; திருமடத்திற்கு இது தகுதியான இடம்" என்றார். அப்பொழுது சாயங்கால வேளையாய் இருந்தது.

மாலை வந்ததும் சுவாமிஜி மேன் மாடியிலே தனித்திருக்கக் கண்ட சிஷ்யர் அவரோடு பலதிறப்பட்ட விஷயங்களையும் பேசிச் சுவாமிஜியினுடைய பாலப்பருவ நிகழ்ச்சிகளைப்பற்றி வினவுவாராயினார். சுவாமிஜி அவரைப் பார்த்து "நான் சிறுவனாய் இருந்த காலம் முதல் யாதுக்கும் அஞ்சாத முரட்டுச் சுபாவம் உடையவனாய் இருந்தேன். அல்லாவிடின் மடியிலே காற்காசும் இல்லாமல் உலகை வலம்வர நினைத்திருப்பேனா?" என்றார்.

சிறு பிராயத்திலே பாடகர்கள் இராமாயணம் பாடுவதைக் கேட்கச் சுவாமிஜிக்கு அதிக பிரியம். அண்டை அயலிலே இராமாயணப் பிரசங்கம் நடப்பதாய் இருந்தால் விளையாட்டையும் பிறவற்றையும் விட்டெறிந்து விட்டுப் பிரசங்கம் நடக்கும் இடத்துக்குப் போவார். சிலபொழுது தம்மை மறந்து, விட்டெண்ணம் அற்று, விஷயத்திலே ஆழ்ந்து பிரவேசித்து, நேரங்கழிந்ததையும் அறியாது இருந்த தம்முடைய பால வயது நிகழ்ச்சிகளைச் சுவாமிஜி எடுத்துக் கூறினார். ஒருநாள் வானரத் தெய்வம் ஆகிய ஹநுமான் கதலி வனத்திலே இருந்த விஷயம் செவிப்படலும் அன்றிரவு வீட்டுக்குப் போகாது சமீபத்திலிருந்த ஒரு கதலி வனத்திற்குப் போய் இரவில் பல நாழிகை கழியும்வரையும் ஹநுமா

னுடைய தரிசனம் கிடைக்குமே எனத் தாமதித்து நின்ற செய்தியையும் எடுத்து இயம்பினார்.

மாணவராக இருந்த காலத்திற் பகல் முழுவதை யும் மாணவ நண்பரோடு விளையாடுவதிலும் பொழுது போக்குவதிலும் கழித்துவிட்டு இரவில் கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே இருந்து படிப்பார். இவர் எப்பொழுது பாடங்களை ஆயத்தம் செய்தார் என்பது பிறருக்குத் தெரியவராது.

சிஷ் : ஐய ! தேவரீர் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பொழுது ஏதாவது தரிசனம் கண்டதுண்டா ?

சுவா : பள்ளிக் கூடத்திலிருக்கும்பொழுது ஒருநா ளிரவு கதவைத் தாழிட்டுக்கொண்டு தியானத்திலிருந் தேன் ; மனம் ஒருவழிப்பட்டு ஓரளவாகிய ஆழ்ந்த தியான நிலையிலிருந்தது. எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ தெரியவில்லை. தியானம் முடிந்ததும் நான் எனது ஆசனத்தை. விட்டு எழவில்லை. அத்தரு ணத்தில் நானிருந்த அறையின் தெற்குச் சுவரிலிருந்து ஜோதி மயமான ஒரு வடிவம் புறப்பட்டு என் கண் முன் நின்றது. அதனுடைய முகமண்டலத்திலே அற் புதமான ஒரு ஜோதி காணப்பட்டது. அங்ஙனமாயி னும் இச்சையின் வழி யெய்தும் உணர்ச்சி வேறுபாடுக ளொன்றும் காணப்படவில்லை. கையில் தண்டமும் கமண்டலமும் ஏந்தி தலைமுற்றிலும் முண்டிதமாய்ச் சாந்த வதனத்தோடு நின்ற அச்சந்நியாச வடிவம் என் னைக் கூர்ந்து நோக்கி என்னோடு உரையாட வருவது போல் என் முன்னே நின்றது. நான் பேராச்சரியத் துடனே அவ்வுருவத்தை நோக்கினேன். பின்பு உள் ளத்திலே ஒருவகைப் பயம் உண்டாகக் கதவைத் திறந்து கொண்டு ஓடிவிட்டேன். ஓடியது பிழை என்று பின்பு என் மனத்திற்குப் பட்டது. ஒரு வேளை அங்ஙனம் தோற்றியவர் எனக்கு ஏதாவது சொல்லியிருக்கலாம். ஆனால் அவ்வுருவத்தைப் பின்பு நான் ஒருபொழுதும் காணவில்லை. கண்டால் அஞ்சாது நின்று உரையாடு

வேனென்று நான் பலநாள் எண்ணியதுண்டு. ஆனால் அவ்வுருவத்திற் றோன்றியவரை நான் பின் ஒருபொழுதும் காணவில்லை.

சிஷ்: இந்த விஷயத்தைப்பற்றிப் பின்பு நீங்கள் நினைத்ததுண்டா?

சுவா. ஆம். ஆனால் ஒருவகை முடிவும் காண முடியவில்லை. நான் கண்டது புத்த தேவரையாயிருக்கலாம் என்று நான் இப்பொழுது நினைக்கிறேன்.

சிறிதுநேரம் தாமதித்துச் சுவாமிஜி பின்னும் சொல்லுகிறார். மனம் பரிசுத்தமடைந்து காம காஞ்சனங்களினின்று விடுபட்டபின்னர் அதியற்புதமான பல தரிசனங்களைக் காணுகின்றது. ஆனால் சாதனை செய்வோன் அவற்றிடையே தனது சிந்தையைச் செலுத்துதல் கூடாது. செலுத்துவானாயின் உயர் நிலையை அடையமாட்டான். "என் நண்புக்குரிய பகவானுடைய வீட்டின் வெளி வீதிகளிலே எண்ணற்ற இரத்தினக் குவியல்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன" என ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிய வாசகங்களை நீ கேட்டதில்லையா? அற்பப் பொருள்களின்மீது சிந்தை செலுத்துவதினால் ஆகின்ற பிரயோஜனம் என்ன? ஆத்மனை நேருக்கு நேராகத் தரிசிக்க முயலவேண்டும்.

இங்ஙனம் சொல்லிய பின்பு சுவாமிஜி யாதொன்றினையோபற்றி ஆழ்ந்து சிந்திப்பவர்போலத் தம்மை மறந்திருந்தார். அதன் பின்னர் பின்வருமாறு சொல்லுவாராயினார்.

"நான் அமெரிக்காவிலிருந்த காலத்திலே சில அற்புத சக்திகள் என்னிடத்தில் உண்டாயின. ஜனங்களுடைய கண்களை உற்று நோக்கி அவர்களுடைய மனத்திலுள்ள விஷயங்களைக் கணப்பொழுதிலே எடுத்துச் சொல்லிவிடுவேன். மக்களுடைய உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சி, கைத்தலத்து நெல்லிக்கனிபோல எனக்குத் தெளிவாகப் புலப்படும். இவ்விஷயங்களைச் சிலருக்கு எடுத்துச் சொல்லுவேன். அவருட் பலர் எனது சிஷ்யரா

யினர்; பொருத்தமில்லாத நோக்கத்தோடு வந்து கலந்திருந்தவர்கள் இத்தகைய சக்தி என்னிடமிருப்பதைக் கண்ட மாத்திரத்தே என் முன்னிலைக்கு வாராது அகன்று போயினர்.

"சிகாகோ முதலிய நகரங்களிலே நான் பிரசங்கம் பண்ணிய காலத்திற் சிலவேளைகளில் ஒருவாரத்திற்குப் பன்னிரண்டு பதினைந்து பிரசங்கங்கள் செய்ய நேரிடும். இதனால் உடலிலும் மனதிலும் இளைப்பு அதிகமாய் இருக்கும். பேசுகிறதற்குரிய விஷயங்கள் பேசித் தொலைந்தன எனக் கண்டு, அடுத்த தினம் புதியதாக என்ன விஷயத்தைப்பற்றிப் பேசலாம் என்று இவ்வாறு எண்ண வேண்டி இருந்தது. புதுக் கருத்துக்களுக்கு உள்ளமானது பஞ்சப்படுவதாகக் காணப்பட்டது. இப்படி இருக்கின்ற காலத்தில் ஒருநாள் என்ன செய்யலாமென்று எண்ணிக்கொண்டு சயனத்திற் படுத்திருந்தேன். ஒரு வகையாக அயர்ந்து நித்திரை போகிற சமயத்திலே என் பக்கலில் ஒருவர் நிற்பது போலவும் பிரசங்கம் பண்ணுவது போலவும் எனக்குப் புலப்பட்டது. நான் முன்பு கேட்டிராதனவும் கருதியிராதனவுமாகிய பல புதிய எண்ணங்கள் என் செவியிற் பட்டன. விழித்துக் கொண்ட பிறகு அவற்றை நினைவு கூர்ந்து பிரசங்கத்தில் எடுத்துக் கூறினேன். இப்படி எத்தனை முறை நிகழ்ந்ததென்று சொல்லுவதற்கில்லை. சயனத்திற் படுத்திருக்கும்பொழுது பலப்பல நாள் இத்தகைய பிரசங்கங்களைக் கேட்டேன். சில வேளைகளில் இவை உரத்த குரலிலே சொல்லப்பட, அடுத்த அறைகளிலே இருந்தோர் அவ்வொலியைக்கேட்டு "சுவாமிஜி, நேற்றிரவு யாரோடு உரத்துப் பேசிக்கொண்டிருந்தீர்கள்" என வினவுவார்கள். நான் ஒரு வகையாக இந்த வினாக்களுக்குப் பதிலளிக்காமல் விட்டு விடுவேன். நினைக்குமிடத்து நான் கண்ட தோற்றம் பேராச்சரியத்திற் குரியதுவே.

சுவாமிஜியினுடைய வார்த்தைகளைக் கேட்ட சிஷ்யர் மிகவும் அதிசயப்பட்டு ஊன்றி ஆலோசித்து, "ஐய,

தேவரீருடைய சூக்கும சரீரம் இங்ஙனம் பிரசங்கம் பண்ணி இருக்கலாம்; தூல சரீரத்திலே பிரதி ஒலி கேட்டிருக்கலாம்” என்றார்.

சுவாமிஜி இதற்குச் செவிசாய்த்து “ஆம் இருக்கலாம்” என்றார்.

சுவாமிஜியினுடைய அமெரிகக அனுபவங்களைப் பற்றிப் பின்பு சம்பாஷணை நடந்தது.

சுவா: அமெரிக்க தேசத்துப் பெண்கள் ஆடவரினும் பார்க்க நன்றாகக் கல்வி கற்றவர்கள். விஞ்ஞான சாஸ்திரத்திலும் தத்துவ சாஸ்திரத்திலும் நன்றாகப் பயின்றிருக்கிற காரணத்தினால் அவர்கள் என்னை மதித்துக் கௌரவப் படுத்தினார்கள். ஆடவர்கள் பகல் முழுதும் தங்கள் தொழிலே கருத்தாக இருப்பதனாலே அவர்களுக்கு ஓய்வு மிகச் சொற்பம். பெண்களோ என்றால் வித்தியாசாலைகளிலும் கல்லூரிகளிலும் நன்றாகக் கல்வி கற்றும் கற்பித்தும் உயர்ந்த பாண்டித்தியம் அடைந்திருக்கிறார்கள். அமெரிக்காவிலே எப்பக்கத்தைத் திரும்பி நோக்கினாலும் அப்பக்கத்திலெல்லாம் அமெரிக்கப் பெண்களது ஆற்றலையும் செல்வாக்கையும் காணலாகும்.

சிஷ்: ஐய, மதவெறி பிடித்த கிறிஸ்தவர்கள் தங்களுக்கு எதிரிடையாக இருந்ததில்லையா?

சுவா. ஆம், 'இருந்தார்கள். ஜனங்கள் என்னைக் கௌரவப்படுத்தப் பாதிரிகளுடைய பொறாமை என்னைப் பின்தொடர ஆரம்பித்தது. தினசரிப் பத்திரிகைகளிலே என்னைப்பற்றிப் பொய்யாகிய பழிவார்த்தைகளை வெளியிட்டுப் பரப்பினார்கள். அவற்றை மறுத்துரைக்கும்படி பலர் என்னைக் கேட்டார்களாயினும் நான் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. கீழ்மையான குயுக்தியினாலே இவ்வுலகிற் பெரிய கருமம் ஒன்றும் நடந்தேறாதென்னும் நிச்சய புத்தி எனக்கு உண்டு. ஆதலினாலே, கயவர் கூறும் பழிமொழியைப் பொருட்படுத்தாது எனது கருமமே கண்ணாக முயன்றேன்.

இதனால் என்மேற் பழி தூற்றியவர்கள் பின்பு மனந் திரும்பி என் அண்டை வந்து மன்னிப்புக் கேட்டதோடு கூடப் பத்திரிகைகளிலே தாங்கள் முன் எழுதியது பிழையென்று வெளியிட்டார்கள். சில வேளைகளில், யாவர் ஒருவருடைய மனைக்கு யான் விருந்தாக அழைக்கப்பட்டேனோ, அன்னவரைக் கண்டு புறங் கூறுவார்கள். அவர் அதனைக் கேட்டு வாயிற் கதவைப் பூட்டிவிட்டுப் போய்விடுவார். அழைப்புக்கு இணங்கி யான் அங்கு சென்று வீடு மூடப்பட்டிருப்பதையும் யாருமில்லாதிருப்பதையும் கண்டு திரும்புவேன். சிலநாட் கழித்துத் தாமே உண்மையை உணர்ந்து தாம் முன்பு நடந்து கொண்டதற்காக வருத்தமடைந்து தம்மைச் சிஷ்யராக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டி நிற்பார் ஒரு சிலர்.

"என் மைந்தனே, இவ்வுலக முழுவதுமே உலோகாயதத்தை யடுத்த எளிய எண்ணங்களால் நிறைந்துள்ளது. அங்ஙனமாயினும் உண்மைத் தைரியத்தோடு கூடிய ஒழுக்கமும் விவேகமுமுடையார் இவற்றால் ஒரு பொழுதும் வஞ்சிக்கப்படுவதில்லை. உலகம் தாம் விரும்பியதைச் சொல்லட்டும், நான் செல்லவேண்டிய கட்பாட்டின் வழிச் செல்லுவேன் என்று இருப்பதே வீரவான் ஒழுகவேண்டிய முறை. அங்ஙனமின்றி இரவும் பகலும் இந்த மனிதன் என்ன சொல்லுகிறான், அவன் என்ன எழுதுகிறான் என்ற நினைவோடிருந்தால் பெருங் கருமமும் ஒன்றும் நடந்தேறமாட்டா. 'அறநூல் வல்லோர் தன்னைப் புகழினும் புகழுக, இகழினும் இகழுக; இலக்குமி தேவி வரினும் வருக, விரும்பிய இடத்துச் செல்லினும் சென்றுவிடுக; மரணம் இன்று வரினும் வருக, ஒரு நூற்றாண்டு கழித்து வரினும் வருக; அறிவுடையோன் செல்லுதற்குரிய நேர்வழியினின்று சிறிதும் பிசகமாட்டான்' எனக் கூறுகின்ற சம்ஸ்கிருத சுலோகத்தை அறிவாயா? 'மக்கள் உன்னைப் புகழினும் புகழுக, இகழினும் இகழுக, திருமகள் அருள் புரியினும் புரிக, புரியா தொழியினும் ஒழிக, உடலம் இன்று வீழ்

னும் வீழுக, ஒரு யுகங் கழிந்து வீழினும் வீழுக, உண்மை வழியிலிருந்து அணுவளவேனும் பிசகாதிருப்பாயாக.' சாந்தமாகிய துறையை அடைகிறவரையும் எத்தனை சண்டமாருதங்களையும் அலைகளையும் கடந்து செல்லுதல் வேண்டும். உயர்வடைந்தோன் மிகக் கொடிய இடுக்கண்களினூடாகச் சென்றிருத்தல் வேண்டும். பெரியோருடைய சீவியங்கள் வாழ்க்கை என்னும் உரைகல்லிலே சோதிக்கப்பட்டு நல்லதென்று கண்ட பின்னர்த் தான் உலகம் அவர்களைப் பெரியோர் என மதிக்கின்றது. ஏழ்மை படைத்த கோழை நெஞ்சர்கள் திரை கடலுக் கஞ்சித் தமது கப்பலைக் கரையிற் கவிழ்த்துவிடும் நீர்மையர். வீரவான் இவற்றைக் கண்ணெடுக்குவதில்லை. 'வருவது வருக, நான் கருதிய நோக்கத்தை அடைவேன்' என ஆண்மையோடு முயலுவது புருஷாகாரமாகும். இத்தகைய ஆண்மை உன்னிடம் இல்லாவிடின் உனது சோம்பலை நீக்குவதற்குத் தெய்வத்தினாலும் ஆகாது."

சிஷ்: அப்படியாயின் தெய்வத்தினுடைய உதவியை நாடுதல் ஆற்றல் இன்மைக்கு அடையாளமாகுமோ?

சுவா: ஆத்மார்ப்பணமும் ஆண்டவனிடத்து நம்பிக்கையும் மனிதனால் அடையக்கூடிய மிக உயர்ந்த நிலையெனச் சாஸ்திரங்கள் கூறும். ஆனால் இந்த நாட்டிலே இக்காலத்தில் மக்கள் 'தெய்வம்,' 'தெய்வம்' என்று சொல்வதைப் பார்த்தால் அது பெரிய கோழைத்தனத்தின் வழியாக வந்த மரணக் குறிபோற் காணப்படுகிறது. தங்களுடைய குற்றங் குறைகள் எல்லாவற்றையும் சுமத்துவதற்குப் பெரியதோர் உருவம் ஒன்றினை நியமித்துக் கொள்ளுவதுபோலக் காணப்படுகிறது. 'பசுவைக் கொன்றபாபம்'* என்பதைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன

* ஒரு மனிதன் அழகாக அமைத்திருந்த ஒரு தோட்டத்தினுள்ளே பசுவொன்று புகுந்து மிகக் கெடுதி செய்துவிட்டது. அம்மனிதன் வெகுண்டு பசுவைப் பலவாறாக அடித்துக் கொன்றுவிட்டான். பசுக் கொலையினால் வந்த கொடிய பாபத்தினின்று தன்னை நீக்கிக் கொள்வதற்கு ஒரு சூழ்ச்சி செய்தான். கையைக்

கதையை நீ கேள்விப்பட்டதில்லையா? ஈற்றிலே தோட்டக்காரன் பசுவைக் கொன்ற பாவத்துக்காகத் துன்பப்படவேண்டியவனாயினான். தன்னுடைய நன்மை தீமைகளைக் கடவுள் மேற்போட்டு 'ஆண்டவனுடைய அனுக்கிரகப்படி நான் நடக்கிறேன், என்னாலாவ தொன்றில்லை' யெனக் கூறித் தாமரையிலைத் தண்ணீரெனத் தன்னை நினைப்போன் உள்ளபடி அந்த நிலையிலே நிற்பானாயின் அவன் முக்த புருஷனாகலாம். ஆனால் நடப்பதென்னவெனின், நன்மை எல்லாம் எனக்கு, தீமைக்கு ஆண்டவன் பொறுப்பு என்பது. இத்தகைய தெய்வ நம்பிக்கை இருந்தவாறென்னே! ஞானத்தின் நிறைவு. ஆண்டவன் பால் அன்பு என்ற இவை கைகூடிய பின்பு அன்றிக் கடவுளிடத்துப் பூரண நம்பிக்கை உண்டாக மாட்டாது. மெய்ம்மையிலே கடவுளிடத்து உண்மையான நம்பிக்கை உடையவன் நன்மை தீமை என்னும் எண்ணத்திற்கு அப்பால் ஆகிறான். இக்காலத்திலே நம்மிடையே இத்தகைய நிலைக்குச் சிறந்த உதாரணமானவர் நாகமஹாஷயர்.

அதன் பின்னர் சம்பாஷணை நாகமஹாஷயரைப் பற்றி நடந்தது. 'அவரைப்போன்ற சிறந்த பக்தர் பிறர் ஒருவரில்லை. ஆ! அவரை நான் என்று காண்பேன்!' எனச் சுவாமிஜி கூறினார்.

சிஷ்: தேவரீரைத் தரிசிக்கும் பொருட்டு அவர் விரைவிலே கல்கத்தாவுக்கு வருவாரென அவர் மனைவியாராகிய அம்மையார் எனக்கு எழுதியிருக்கின்றார்.

காப்பாற்றும் தெய்வம் இந்திரன் என அறிந்தமையினாற் குற்றத்தை இந்திரன் மீது போட முயன்றான். இவனுடைய சூழ்ச்சியை அறிந்த இந்திரன் ஒரு கிழப் பிராமண வடிவத்தோடு அவனிடம் வந்து தோட்டத்தில் நடந்திருந்த நற்செய்கைகள் பலவற்றைப் பற்றி விசாரித்தான். ஒவ்வொன்றும் தன் முயற்சியினாலே முடிந்ததெனத் தோட்டக்காரன் கூறினான். "ஆம், இங்குள்ள எல்லாம் உன்னாலாகியது, பசுக் கொலை மாத்திரம் இந்திரனுக் குரியதோ!" எனக் கூறி இந்திரன் மறைந்தனன்.

சுவா : ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை ஜனக மன்னருக்கு ஒப்பாகப் பேசுவதுண்டு. அவரைப் போன்று புலன்களை அடக்கிய மனிதனைக் காண்பது அரிது, கேட்பது தானும் அரிது. நீ இயன்றவரை அவரோடு பழகுதல் வேண்டும். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மிகவும் அண்மையாகிய சிஷ்யர்களில் ஒருவர்.

சிஷ் : எங்கள் ஊரிலே பலர் அவரைப் பைத்தியக்காரனெனச் சொல்வதுண்டு. ஆனால் நான் கண்ட நாள் முதலாக அவர் ஒரு பெரிய மகாத்மா என அறிந்திருக்கிறேன். இவர் என்மேல் மிகுந்த அன்பு பாராட்டுகிறார். அவருடைய நல்லாசீர்வாதம் எனக்குண்டு.

சுவா : அத்தகைய மஹா புருஷருடைய அன்பினை நீ பெற்றிருக்கின்றாய். ஆதலினால் நீ அஞ்ச வேண்டியது எற்றுக்கு? எத்தனையோ பிறவியங்களில் செய்த தவத்தின் பயனாக அத்தகைய பெரியோருடைய நட்பு ஒருவனுக்குக் கிடைக்கின்றது. அவர் வீட்டிலே எவ்வாறு வாழுகின்றார்?

சிஷ் : அவர் தம் வீட்டுக்கு வருகின்ற அதிதிகளுக்கு உபசாரம் செய்வதையே தமக்குரிய தொழிலாகக் கொண்டவர்; வேறு எவ்வகை முயற்சியும் அவருக்கில்லை. பால்பாபு குடும்பத்தார் அவருக்குக் கொடுக்கின்ற சிறு தொகைப்பணம் அன்றி வேறு எவ்வித வரும்படியும் அவருக்கு இல்லை. வீட்டிற் செலவோ என்றால் செல்வக் குடும்பங்களின் செலவை நிகர்த்தது. தம்முடைய சுகாநுபவத்துக்கெனக் காற்காசுக்கூடச் செலவழிக்க மாட்டார். எல்லாச் செலவும் பிறர் பொருட்டே தொண்டு புரிவதையே தமது வாழ்க்கையின் பெருநோக்கமாகக் கொண்டிருக்கிறார். எல்லாப் பிராணிகளிடத்தும் நிலைபெற்றிருக்கும் ஆத்மனை அறிந்துகொண்டமையினால் அனைத்து உலகையும் தானாகவோ தன்னிடத்து உள்ளதாகவோ எண்ணி உயிர்களுக்குத் தொண்டு செய்வதிலே இவர் ஈடுபட்டிருக்கின்றார் என எனக்குப்படுகின்றது. பிறருடைய

தொண்டென்றால் தம்முடைய உடலையும் மறந்து இடையீடின்றி முயலுவார். ஐய, உரை உணர்வு கடந்த நிலையெனத் தேவரீர் பேசிய நிலையில் அவர் என்றும் வாழுகின்றார் என நான் நினைக்கிறேன்.

சுவா: ஏன் அப்படி இருக்கக் கூடாது? அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரால் பெரிதும் நேசிக்கப்பட்டவரன்றோ? ஸ்ரீராமகிருஷ்ணருடைய தெய்விகத் தோழர்களில் ஒருவர் நாகமஹாஷயர் என்னும் பெயரோடு உங்களுடைய கிழக்கு வங்காளத்தில் பிறந்தனர். பிரகாசத்தினால் கிழக்கு வங்காளம் விளக்கமடைந்து விட்டது.

(16)

[இடம். பேலூர் திருமடம். காலம்: 1898-ஆண்டு நவம்பர் மாதம்.]

காஷ்மீரத்திலிருந்து சுவாமிஜி திரும்பி வந்து இரண்டு மூன்று தினங்களாய்விட்டன. அவருடைய தேக ஆரோக்கிய நிலை அவ்வளவு நன்றாயில்லை. சிஷ்யர் திருமடத்திற்கு வந்தவுடன் சுவாமி பிரம்மாநந்தர் அவரை நோக்கி, "காஷ்மீரத்திலிருந்து திரும்பியபிறகு சுவாமிஜி யாருடனும் பேசுவதில்லை. சிந்தனையில் ஆழ்ந்து ஓரிடத்திலே இருந்து கொண்டிருக்கிறார்; அவரைப் போய்க் கண்டு உரையாடி அவருடைய உள்ளத்தை உலகப் பொருள்களின்மீது சிறிது சாரும்படி செய்வாயாக" என்றார்.

சிஷ்யர் சுவாமிஜியினுடைய அறைக்கு வந்து மேல் மாடியிலே ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் வண்ணமாகத் தோன்றிய சுவாமிஜியைக் கண்டார். அவருடைய முகத்திலே புன்னகை இல்லை. ஒளி பொருந்திய அவருடைய கண்கள் புற நோக்கமில்லாது ஏதோ அகத்திலுள்ள வஸ்துவை நோக்கிக்கொண்டிருக்கும் தன்மையவாகக் காணப்பட்டன. சிஷ்யரைக் கண்டதும்

"மகனே வந்து விட்டாயா, ஆசனத்திலிரு" என்று சொல்லிவிட்டு மீண்டும் மௌனமாயினூர். அவருடைய இடக்கண்ணின் உட்புறம் சிவந்திருப்பதைக் கண்ட சிஷ்யர், "தேவரீருடைய கண்கள் சிவந்திருப்பதேனே" என வினவினூர். "ஒன்றுமில்லை" என்று சொல்லி விட்டு மீண்டும் மௌனமானூர். நெடுநேரம் கழிந்தும் சுவாமிஜி பேசாதிருப்பதைக் கண்ட சிஷ்யர் உள்ளத்தில் கவலையுற்று சுவாமிஜினுடைய திருவடிகளைப் பற்றி, "அமரநாத்திலே தேவரீர் கண்டவற்றை எனக்குச் சொல்லத் திருவுள்ளம் இல்லையோ?" என்ருர். சிஷ்யர் கால்களைத் தொட்ட மாத்திரத்தே தியான நிலையில் நின்று சிறிது விலகி உள்ளத்தை ஒரு சிறிது புறத்தே நோக்கவிட்ட தன்மையினராக, "மகனே அமரநாதைத் தரிசித்த காலம் தொடக்கம் அல்லும் பகலும் இருபத்து நான்கு மணிநேரமும் சிவபெருமான் என்னுடைய சிரத்தின்மீது அமர்ந்திருப்பதுபோல எனக்குக் காணப்படுகிறது" என்ருர். இதனைக் கேட்ட சிஷ்யர் ஆச்சரியத்தினுல் மௌனமானூர்.

சுவா: அமரநாத்திலும் க்ஷீர்பவானியிலும் பல விதமாகிய தவங்களைப் புரிந்தேன். புகையிலை கொஞ்சம் தயார் செய்து கொண்டுவா, நிகழ்ந்தனவெல்லாம் உனக்குத் தெரிவிக்கிறேன்.

சிஷ்யர் சுவாமிஜியினுடைய கட்டளையைச் சிர மேற்கொண்டு அதனை உவகையோடு செய்து முடித்தார். சுவாமிஜி புகையைச் சிறிதாக இழுத்துக்கொண்டு சொல்லுவராயினூர்: "அமரநாதுக்குப் போகும் பாதையிலே மலையில் மிகுதியும் செங்குத்தான ஓரிடத்தில் ஏறிச் சென்றேன். யாத்திரிகர்கள் பொதுவாக அவ்வழிச் செல்வதில்லை. அவ்வழியே செல்லவேண்டுமென்னும் எண்ணம் என்னுள்ளத்தில் உதித்ததால் அங்ஙனம் செய்தேன். செங்குத்தான மலையின்மீது ஏறியது சரீரத்துக்கு இளைப்பினைத் தந்தது. அங்குள்ள குளிர் தாங்கொணுதது; ஊசியினுலே

குத்தினால் எவ்வாருக இருக்குமோ அவ்வித உணர்ச்சியைத் தருவது."

சிஷ் : அமரநாத்திலுள்ள திருவுருவத்தைத் தரிசிக்கும்பொழுது வஸ்திரமின்றி உட்செல்வது வழக்கம் என்கிருர்களே, அஃது அப்படித்தாளு ?

சுவா : ஆம், நான் குகையினுள்ளே போகும் பொழுது கௌபீனத்தோடு மாத்திரம் போனேன். உடல் முற்றிலும் விபூதி அணிந்திருந்தேன். குளிரோ, அனலோ தோற்றவில்லை. வெளியே வந்த பின்னர்க் குளிரினுல் உடல் விறைத்துப் போயிற்று.

சிஷ் : பரிசுத்தமாகிய புருக்களைத் தேவரீர் கண்டதுண்டா ? அந்தக் குளிரிலே மற்றெருரு பிராணியும் உயிர் வாழாதிருக்கச் சில புருக்கள் மாத்திரம் எங்கேயோவிருந்து இடையிடையே அங்கே வருகின்றனவென்று நான் கேள்விப்பட்டேன்.

சுவா : ஆம், நான் மூன்று நான்கு வெள்ளைப் புருக்களைக் கண்டேன். அவை குகையினுள் இருக்கின்றனவா, அன்றேல் அணித்தாகவுள்ள மலையினில் இருக்கின்றனவா என நான் நிச்சயித்துக்கொள்ளவில்லை.

சிஷ் : ஐய, ஆலயத்தினுள் நின்று புறத்தே வரும் பொழுது புருக்களைத் தரிசித்தால், சிவபெருமானுடைய தரிசனத்தைப் பெற்றதற்கு அஃது ஓர் அடையாளமாகும் என ஜனங்கள் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சுவா : புருக்களினுடைய தரிசனத்தினுல் இஷ்டசித்தி உண்டாகுமென நான் கேள்விப்பட்டேன்.

ஸ்ரீநகருக்குத் திரும்பி வரும்பொழுது யாத்திரிகர்கள் வழக்கமாக வருகின்ற பாதையினுல் சுவாமிஜியும் வந்தார். ஸ்ரீநகருக்குத் திரும்பிவந்து சில நாட்களாயினபின் க்ஷீர்பவானிதேவியை தரிசிக்கும் நோக்கமாகச் சென்று ஏழு நாள் தேவியை வழிபட்டு க்ஷீரத்தினுலே ஹோமமும் செய்தார். தினம் ஒரு மணங்கு க்ஷீரத்தை

நைவேத்தியம் செய்வார். ஒருநாள் தேவியை வழிபட்டுக்கொண்டிருக்கும்பொழுது சுவாமிஜியினுடைய உள்ளத்திலே ஓர் எண்ணம் தோன்றியது: "எண்ணற்ற வருடங்களாக அன்னையாகிய பவானி இவ்விடத்திலே தன்னுடைய தெய்வ விளக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றாள். முகம்மதியர் வந்து அன்னையினுடைய ஆலயத்தை அழித்தபொழுது இங்குள்ள ஜனங்கள் அதனைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்திலரே. அந்நாட்களில் நான் இருந்திருந்தால் சும்மா விட்டிருப்பேனோ?" இத்தகைய எண்ணம் உள்ளத்தில் எழுதலும் சிந்தையானது துன்பத்தினால் நைந்து உருகியது. அப்பொழுது அன்னையினுடைய தெய்வ வாக்கு தெளிவாகச் சுவாமிஜியினுடைய செவியிலே இவ்வண்ணம் பட்டது:— "என்னுடைய விருப்பத்தின்படியே முகம்மதியர் இந்த ஆலயத்தை அழித்தார்கள். பாழாகிய கோயிலிலே வாழ வேண்டுமென்பது எனது விருப்பம். இல்லாவிடின் தங்கத்தினாலே ஏழடுக்கு மாளிகையாக, விளங்குகிற ஆலயம் ஒன்றினை அமைத்துக்கொள்ளுதல் எனக்கு இயலாததொன்றா? உன்னால் என்னமுடியும்? நான் உன்னைக் காப்பாற்றுகின்றேனா? நீ என்னைக் காப்பாற்றுகின்றாயா?" சுவாமிஜி மேலும் சொல்வார்: "அந்தத் தெய்வ வாக்கு என் செவியில் பட்ட நாள்முதல் நான் ஏற்பாடுகள் அமைக்கும் எண்ணத்தை விட்டு விட்டேன். மடாலயங்கள் அமைக்கவேண்டும் என்றின்னனவாகிய எண்ணங்கள் என்னுள்ளத்தை விட்டகன்று விட்டன; அன்னைக்கு எது சித்தமோ அதுவே ஆகக்கடவது." இதனைக் கேட்ட சிஷ்யர் ஆச்சரியவயத்தராகிக் காண்பதும் கேட்பதும் உள்ளத்திலுள்ள ஆத்மாவினுடைய எதிரொலியேயன்றிப் புறத்தே யாதுமில்லை எனச் சுவாமிஜி தமக்கு ஒருநாள் சொன்னதை நினைத்து, அச்சமின்றிச் சுவாமிஜியை நோக்கி, "ஐய, தேவரீர் இத்தெய்வ ஒலிகள், உள்ளே இருக்கின்ற எண்ணங்கள், உணர்ச்சிகளின் எதிரொலியே எனக் கூறியதுண்டே" என்றார். சுவாமிஜி அவரை நோக்கி

"உள்ளிருந்தெழினும், புறத்தே தோன்றினும், என் செவியிற்பட்டதுபோல அத்தெய்வ ஒலிகள் செவியிற் படுமாயின் அவற்றைப் பொய்யென மறுத்தல் கூடுமா? நீயும் நானும் உரையாடுவதுபோலத் தெய்வ ஒலிகளும் கேட்கப்படுகின்றன."

மறுத்துரை கூருது சிஷ்யர் சுவாமிஜியினுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டார், சுவாமிஜியினுடைய திருவாக்கு உள்ளத்துக்குத் துணிவைத் தருவதாதலின்.

அதன் பின்பு இறந்துபோன மக்கள் பிசாச வடிவத்தோடு அலைந்து திரிவதைப்பற்றி விசாரித்து, "ஐய, பூதப் பிரேத பிசாச வடிவங்களைப்பற்றிச் சாஸ்திரங்களுங் கூறுகின்றனவே, இது உண்மையா, பொய்யா?" என்றார்.

சுவா: நிச்சயமாகவே உண்மை. நீ காணுத பொருள்களெல்லாம் பொய்யென்று எண்ணுகிருயா? உன்னுடைய காட்சிக்கு அப்பால் மிகுந்த தூரத்திலே கோடிக்கணக்கான அண்டங்கள் சுழலுகின்றன. அவற்றை நீ காண்பதில்லை. ஆதலினுல் அவை இல்லை என்பது முடிபாகுமோ? பூதங்களைப்பற்றியும் பிசாசுகளைப்பற்றியும் சிந்தை செய்யாதே. அவற்றைப்பற்றி உபேக்ஷையாயிருப்பதுவே முறை. இந்த உடலினுள்ளே வதிகின்ற ஆதமனைக் காண்பதுவே உன்னுடைய கடமை. ஆத்ம தரிசனம்பண்ணிய பின்னர் பூதங்களும் பிறவும் உனக்கு அடிமையாக வரக் காண்பாய்.

சிஷ்: ஆனுல் ஐயா இவற்றைக் கண்டால் மேல் வரும் ஜீவியத்தைப்பற்றி நம்பிக்கை உண்டாகும். அதனுல், ஐயங்கள் ஒழிந்துவிடுவன.

சுவா: நீங்கள் வீரர்களாயிருக்கிறீர்கள். மேல் வரும் ஜீவியத்தைப்பற்றிய உண்மைகளை அறிந்து மனம் ஸ்திரப்படுவதற்கு பூதங்களையும் பிசாசுகளையும் பார்க்க வேண்டுமா? எத்தனையோ விஞ்ஞான சாஸ்திரங்களையும் சமய சாஸ்திரங்களையும் விசாரித்து அறிந்திருக்கி

ருய், இடம் பரந்த இப்பிரபஞ்சத்தின் இரகசியங்களை எல்லாம் படித்திருக்கிருய். இந்த அறிவோடு ஆத்ம ஞானம் பெறுவதற்குப் பூதங்களையும் பிசாசுகளையும் காணவேண்டுமென்று சொல்லுவது எவ்வளவு வெட்கம்.

சிஷ்: நல்லது ஐயா, தேவரீர் பூதங்களையும் பிசாசுகளையும் கண்டதுண்டா?

தம்முடைய இறந்துபோன உறவினரொருவர் ஆவி ரூபமாகப் பலமுறை தம்மிடம் வந்த செய்தியை சுவாமிஜி எடுத்துக் கூறினர். சிலவேளை மேல் நடக்கப் போகின்ற விஷயங்களைப்பற்றி அந்த ஆவி உருவம் தெரிவிக்கும். ஆனல் அந்நிகழ்ச்சிகள் ஒரோ வழி தவறிப்போவதுண்டு. சுவாமிஜி யாத்திரை செய்யும் பொழுது ஒரு புண்ணிய ஸ்தலத்திலே இந்த ஆவி உருவத்துக்கு விடுதலை கிடைக்கவேண்டுமென்று பகவானை வேண்டிக்கொண்டார். அதன் பின்பு அவ்வுருவம் அவரிடம் வரவில்லை.

சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, சிரார்த்த முதலிய கிரியைகள் இறந்துபோனவர்களுடைய ஆவிகளுக்கு நலத்தை அளிப்பனவா என வினவினர். அதற்கு சுவாமிஜி அங்ஙனம் ஆதல் கூடும் என்றுர். நம்புதற்கு ஆதாரங்கள் எவை என சிஷ்யர் விசாரித்த பொழுது, "இவ்விஷயத்தைப்பற்றி மற்றொரு தினம் விரிவாகச் சொல்லுகிறேன். சிரார்த்தக் கிரியைகளினல், இறந்துபோனவர்களுடைய உயிருக்கு நன்மையுண்டு என்பதை மறுக்கொணு நியாயங்களினல் ஸ்தாபிக்கலாம். இன்று எனக்குச் சௌக்கியமில்லை, மற்றொரு தினம் சொல்லுகிறேன்" எனச் சுவாமிஜி கூறினர். இந்த விஷயத்தைப்பற்றி சுவாமிஜியிடம் வினவுவதற்கு மற்றொரு தருணம் வாய்க்கவில்லை.

(17)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1898, நவம்பர்.]

திருமடமானது இப்பொழுது பேலூரிலே நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலை வீட்டிலே அமைக்கப்பட்டிருக்கிறது. கார்த்திகை மாதம்; சுவாமிஜி சம்ஸ்கிருத பாஷையிலே சாஸ்திரங்களைக் கற்பதும் விசாரிப்பதும் நிறைந்த தொழிலாகச் செய்துகொண்டிருக்கிறார். இக்காலத்திற்றான் "ஆசண்டாளாப்ரதிஹத ரய:" எனத் தொடங்குகிற பாடலை எழுதினார். இன்று "ஓம் ஹ்ரீம் ரிதம்" என்ற பாட்டை எழுதிக்கொண்டிருக்கிறார். அதனைச் சிஷ்யரிடம் கொடுத்து "இச்செய்யுளில் ஏதாவது யாப்புக் குற்றம் இருக்கிறதா, பார்" என்று கேட்டார். சிஷ்யர் அதன்பொருட்டுக் குறித்த செய்யுளைப் பிரதிபண்ணிக் கொண்டார்.

இத்தினத்திலே கல்வித் தெய்வமாகிய வாணி சுவாமிஜியுடைய நாவிலே பிரசன்னமாகி விளங்குவதுபோன்றிருந்தது. சிஷ்யரோடு இரண்டுமணி நேரம்வரை மிகவும் அழகிய இன்னோசையுடைய சம்ஸ்கிருத மொழியிலே வசனித்தார்.

சிஷ்யர் கீதத்தைப் பிரதிபண்ணிய பின்பு சுவாமிஜி அவரை நோக்கி "பாராய், எனது சிந்தனையானது கருத்திலே ஆழ்ந்திருப்பதால் ஓரோவழி இலக்கணப் பிழைகள் நேரிடக்கூடும், ஆதலால் இவற்றை ஆராய்ந்து பார்க்கும்படி உங்கள் எல்லாரையும் கேட்கிறேன்."

சிஷ்: ஐய, இவை குற்றங்களாகா. விதிகளைக் கடந்து செவ்வியுற உரைக்கும் புதுநெறிகள் என யான் இவற்றைக் கொள்ளுகிறேன்.

சுவா: நீ அப்படிச் சொல்லலாம்; ஆனால் மற்றையோர் அதனை ஏற்றுக்கொள்வாரா? சில தினங்களுக்கு முன்பு இந்து சமயம் என்றால் என்ன என்னும் பொருள் மேல் யான் ஒரு வியாசம் எழுதினேன்; உங்களுட் சிலர்

தாமும் அது மிகவும் நிமிர்ந்த நடையுள்ள வங்காளியிலே எழுதப்பட்டதென முறையிட்டார்கள். காலகதியிலே மற்ற வஸ்துக்களைப்போலப் பாஷையும் எண்ணமும் உயிரற்றுச் சிறப்பியல்பு குன்றிப் போகின்றன. அத்தகைய நிலை இந்நாட்டிலே ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வருகையோடு எண்ணத்திலும் மொழியிலும் புதியதொரு ஆற்றல் உண்டாகி யிருக்கிறது. அனைத்தினையும் புத்துருவங்களிலே இயைத்துப் புதுமுறையிலே பரப்பவேண்டும். பழைய சந்நியாச ஆசிரம முறைகள் சிறிது சிறிதாகக் கழிந்து போகப் புதிய முறைகள் சில நிலைபெறுவதைக் காண்பாயாக. ஜன சங்கமானது, இதற்கு எதிரிடையாக இருக்கின்றது. ஆயினும் பயனில்லை. நாங்கள் அச்சமுறப் போவதில்லை. இக்காலத்துச் சந்நியாசிகள் தூரதேசங்களுக்குப் போய்ப் பிரசங்கம் பண்ணவேண்டியவர்கள். பழைய சாதுக்களைப்போல நீறு பூசிய அரை நிருவாண மேனியோடு போகப் புறப்பட்டால் கப்பலிலே இடங் கிடையாது. அந்நிய நாட்டை அடைந்தவுடன் சிறையிலிருக்கவேண்டி நேரிடும். காலம், இடம், நாகரிக வளர்ச்சி என்பவற்றிற்கேற்ப ஒவ்வொரு கருமத்திலும் சிறிது வேறுபாடு ஏற்படவேண்டியதுதான். வங்காள பாஷையிலே சில வியாசங்கள் எழுதலாம் என்று எண்ணுகிறேன். பண்டிதர்கள் ஒருவேளை அவற்றைப் பார்த்துக் குறை கூறுதல் கூடும். காரியமில்லை. வங்காளி பாஷைக்கு ஒரு புத்துருவங் கொடுக்க முயலுவேன். இந்நாட்களில் வங்காளி பாஷையில் எழுதுவோர் வினைச்சொற்களை மிகுதியும் உபயோகிக்கின்றார்கள். இதனால் பாஷையினுடைய ஆற்றல் குறைகின்றது. வினைமுற்றுச் சொற்களாற் சொல்லப்படும் கருத்தினைப் பெயரெச்சங்களாக அமைத்து நிறுத்தினால் பாஷைக்கு ஆற்றல் கூடும். இனிமேல் அந்த நடையிலே எழுத முயல்வாயாக. "உத்போதன்" பத்திரிகையிலே அந்நடையில் சில வியாஸங்கள் எழுத முயல்வாயாக. பாஷையிலே வினைகளை வழங்குவதின் கருத்து எதுவென்று உனக்குத்

தெரியுமா? முற்றுவினை கருத்தினை நிறுத்துகிறது; வினை முற்றுக்களை அதிகமாக வழங்கினால் அது விரைந்து மூச்சுவிடுவதுபோலப் பலவீனத்துக்கு ஓர் அடையாள மாகி நிற்கும். ஆதலினாலன்றோ வங்காளிப் பாஷையில் நன்றாக உபந்நியாசித்தல் இயலாததாகின்றது. சொல் வன்மையுடையோன் இடையிடையே தடைபடுத்தி மொழிதலை விரும்பான். வெறுஞ்சோறும் பருப்பும் உண்டு உங்கள் உடலம் வலியற்றதுபோல, மொழியும் வலியற்றுப் போய்விட்டது. உணவிலும் வாழ்க்கை முறையிலும் எண்ணத்திலும் மொழியிலும் சக்தி நிரம் பும்படி செய்யவேண்டும். எல்லா விஷயங்களிலும் சக்தி நிரம்பப்பெற்று நாடி நரம்புகளில் இரத்தம் பரவி எல்லாக் கருமங்களிலும் புத்துணர்ச்சியும் புதிய உற்சா கமும் ஏற்படுமாகில் இந்நாட்டு ஜனங்கள் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைக் கஷ்டத்திலே விழுந்து போகாது நிலைபெற்றிருப்பார்கள்; இல்லாவிடின் இந் நாடும் இந்த ஜனங்களும் சமீபத்தில் அழிவெய்தி மறைந்துவிட வேண்டிவரும்.

சிஷ்: ஐயா, இந்நாட்டு மக்களுடைய உடலங்கள் நெடுநாட்களாக ஓர் இயைபைப்பற்றி வளர்ந்து வந்திருக் கின்றன. அத்தகைய இயைபினைச் சொற்ப காலத்துக் குள்ளே மாற்றுதல் கூடுமா?

சுவா: பழைய வழக்கங்கள் பிழை என்று கண் டால் நீ ஏன் அவற்றை மாற்றி நல்வழியிலே வாழ்க்கை நடத்தக் கூடாது? உன்னுடைய முன்மாதிரியைப் பத் துப்பேர் பின்பற்றி நடப்பார்கள். அதைக் கண்டு ஐம்பதுபேர் நல்வழிப்படுவார்கள். இம்மாதிரி நடந்து கொண்டு போனால் காலகதியிலே புதுக்கருத்துக்கள் எல்லா மக்களிடத்திலும் தோற்றிவிடுதல் கூடும். காரி யத்தை அறிந்துகொண்ட பிறகும் அதன்படி நடக்காது விட்டால், நீங்கள் சொல்லளவில் புத்திசாலிகள், காரியத் தளவில் மூடர்கள் என்று நான் அறிந்துகொள்வேன்.

சிஷ் : ஐய, தேவரீருடைய திருமொழிகள் உற்சாகத்தையும், தைரியத்தையும், ஆற்றலையும், மனவலிமையையும் தருகின்றன.

சுவா : படிப்படியாக மனத்தினை வலிமைப்படுத்த வேண்டும். ஆற்றலுள்ள ஓர் ஆடவனை உண்டாக்குதல் நூறாயிரம் பிரசங்கம் செய்தற்குச் சமமாகும். மனமும் வாக்கும் ஒருமித்து நிற்க நல்ல எண்ணங்களை வாழ்க்கையிலே அப்பியசிக்க வேண்டும். "உள்ளமாகிய தனியறையினுள்ளே கள்ளமிருத்தல் கூடாது" என ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னதனுடைய கருத்து இதுவே. எல்லா வகை முயற்சிகளிலும் சாதனமுறை அமைந்திருக்க வேண்டும். தனிப்போதனை முறைகளினாலே நாடு முற்றிலும் நாசமடைந்து போய்விட்டது. சமய உண்மைகளின் சாதனை முறையை வெளிப்படுத்தி, மனிதரோ ஜனசங்கமோ சொல்லுகிற வீண் பசப்பு வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காது, ஒருவழிப்பட்ட சிந்தையோடு யாவன் ஒருவன் நன்முயற்சிகளைச் செய்கின்றானோ அவனே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உண்மை மகன் எனப்படுவான். "யானையானது கடைவீதி வழியே நடந்து செல்லுகிறது. ஆயிரம் நாய்கள் அதனைப் பார்த்துக் குரைக்கின்றன. அதுபோலவே உலகத்து மக்கள் பழி தூற்றுமிடத்தும் சாதுக்கள் அவரைச் சினவாது நடந்துசெல்வார்கள்" எனத் துளசிதாசர் எழுதியதை நீ கேள்விப்படவில்லையா? நீ இம்மாதிரி நடப்பாயாக; ஜனங்களுடைய வார்த்தையைப் பொருட்படுத்தாதே. அவர்களுடைய புகழ்ச்சி மொழிக்கோ, இகழ்ச்சி மொழிக்கோ, செவி சாய்த்தால் வாழ்க்கையிலே பெருங் கருமம் ஒன்றுஞ் செய்து நிறைவேற்ற முடியாது.

நாயமாத்மா பலஹீனேன லப்ய: "இந்த ஆத்மன் வலியற்றவர்களால் அடையப்பட மாட்டாது." முதலிலே நல்ல போஷிக்கத்தக்க உணவினை உட்கொண்டு உடலைச் செவ்விதாக்க வேண்டும். அப்படிச் செய்தாற்

றான் மனம் வலிமையடையும். மனமானது உடலி னுடைய சூக்கம பாகம். மனத்திலே பெருவலி படைத் திருக்க வேண்டும். "நான் கீழ்மைப்பட்டவன்", "நான் கீழ்மைப்பட்டவன்" என்று சொல்லுவதினால் மனிதன் தன்னைத்தானே கீழ்மைப்படுத்திக் கொள்ளு கின்றான். ஆதலினாலன்றோ சாஸ்திரங்களிலே,

முக்தாபிமானீ முக்தோஹி'பத்தோ பத்தாபிமான்யபி
கிம்வதந்தீதி ஸத்யேயம் யாமதி : ஸாகதிர்பவேத்

"தன்னை விடுதலையடைந்தவனாக நினைப்பவன் விடு தலையடைகின்றான், பந்தம் உற்றவனாக நினைப்பவன் பந் தம் உறுகின்றான்; உலக வழக்கிலே அறியப்பட்ட இந்த வாக்கியம் உண்மையானது; ஒருவன் தன்னை எவ்வாறு நினைக்கின்றானோ அந்த நிலையை அடைகின்றான்." எப் பொழுதும் விழிப்புடனே விடுதலையிற் கருத்து வைத் திருப்பவன் விடுதலை அடைகிறான். தான் கட்டுண்டோ னென்று எண்ணுகிறவன் பல சீவியங்களிலே பந்தத்தி னின்று நீங்காது அலையுறுகிறான். இது உண்மை. இவ் வுண்மை ஆத்மீக விஷயங்களைப்போலவே லௌகிக விஷ யங்களிலும் பொருத்தமுடையதாய் இருக்கிறது.

மனவலி யிழந்து ஊக்கமற்றிருப்போர் கருமத் தையும் செய்து முடிப்பதில்லை. அவர்கள் அழுது பிர லாபித்துக் கொண்டு பிறவி தோறும் உழலுகிறார்கள். இவ்வுலகம் வீரவான்களுக்கு இன்ப நிலைக்களம் ஆனது; இது மாறா உண்மை. வீரவானாய் இரு. "அச்சமில்லை" என்று எப்பொழுதும் சொல்லு, "அச்சமில்லை" என்று எல்லோருக்கும் சொல்லு. அச்சமே மரணம், அச்சமே பாவம், அச்சமே நரகம், அச்சமே இழுக்கம், அச்சமே பிழையான வாழ்க்கை. உலகத்திலுள்ள எதிர் மறை எண்ணங்களும் கருத்துக் களும் கேடாகிய அச்சத்திலிருந்தே தோன்றின. சூரியன், காற்று, மரணம் என்னும் இவை எல்லாம் தத்தம் இடத்தில் நின்று தத்தமக்குரிய தொழிலைச் செய்வது

அச்சத்தினாலே ஆகின்றது. அது தனது பந்தத்தினின்றும் யாரையும் விடுவதில்லை. இதனாலன்றோ சுருதியில்,

பயாத் தஸ்யாக்னிஸ் தபதி பயாத்தபதி ஸூர்ய :
பயாதிந்திரஸ்ச வாயுஸ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம :

"இதன் அச்சத்தினால் நெருப்பு எரிகிறது. சூரியன் வெப்பத்தைத் தருகிறான். இந்திரனும் வாயுவும் தத்தம் தொழிலைச் செய்கின்றனர். மரணம் உலகத்திலே உலாவுகின்றது" எனக் கூறப்பட்டிருக்கின்றது. இந்திரனும் சந்திரனும் வாயுவும் வருணனும் அச்சமின்மையை அடையும்பொழுது பிரம்மத்தோடு ஒன்றுவர். அப்பொழுது உலகம் என்னும் இம்மாயாத் தோற்றம் மறைந்து விடும். ஆதலினால் "அச்சமற்றிரு, அச்சமற்றிரு" என்று நான் சொல்லுகிறேன்.

இவ்வார்த்தைகளைச் சொல்லும்போது சுவாமிஜி சிஷ்யருடைய கண்ணுக்கு முன்பாக அச்சமின்மையே ஓருருவெடுத்தாற்போன்று காணப்பட்டார். இங்ஙனம் கண்ட சிஷ்யர் தமக்குள்ளே, "ஏது, இந்தப் பெரியவருடைய முன்னிலையிலே மரண பயந்தானும் அகன்று மறைந்து போகிறதே" என நினைத்தார்.

சுவாமிஜி மேலும் சொல்லுவார்: "உடலெடுத்த இப்பிறவியிலே இன்ப துன்பம் செல்வம் வறுமை என்னும் அலைகளிலே அகப்பட்டு நீ எற்றப்படுகின்றாய்— இவை கணந்தோன்றி கணம் மறைவனவென, அறிந்து கொள்ளுதி ; இவற்றைப் பொருட்படுத்தாதே. 'பிறப்பும் இறப்புமில்லாது விவேக வடிவமாய் இருக்கிற ஆத்மன் நான்' என்னும் எண்ணம் உன்னுடைய மனத்தில் நன்றாகப் பதியப்பட்டிருக்க உன்னுடைய வாழ்நாட்களைக் கழிப்பாயாக. 'எனக்குப் பிறப்பில்லை, இறப்புமில்லை, யாதொன்றிலும் தீண்டப்படாத ஆத்மன் நான்'- இந்த எண்ணத்திலே முற்றிலும் அமிழ்ந்திருப்பா

யாக. இந்த எண்ணத்தோடு ஒரு முறையாவது ஒன்று படுவாயானால் துன்பமும் மிடியும் வந்த காலத்து இவ் வெண்ணம் உன் உள்ளத்தில் எழும், அதனைக்கொண்டு வருதற்கு நீ முயல வேண்டுவதில்லை. வைத்தியநாதத் திலே பாபு பிரியநாதமுகோபாத்தியாயருக்கு நான் விருந்தாக இருந்த ஒரு நாளில் மிகவும் உபத்ரவமான ஈழை வியாதி என்னைப் பிடித்தது. சாவாரைப் போலத் துன்புற்றேன். ஒவ்வொரு மூச்சினோடும் 'ஸோஹம்' 'ஸோஹம்' என்றும் ஆழ்ந்த ஒலியானது எழுந்தது. தலையணையிலே தலையைச் சாய்த்துக் கொண்டு பிராணன் நீங்குவதைக் காத்துக்கொண்டிருப் பார் போல் இருந்தேன். ஆயினும் உள்ளிருந்து எழுந்த 'ஸோஹம்' 'ஸோஹம்,'—'நான் அவனாய் இருக்கி றேன்'—என்னும் ஒலி இடைவிடாது புலப்பட்டது.

ஏகமேவாத்வயம் பிரம்ம நேஹநாநாஸ்தி கிஞ்சன

'ஒன்றாய் இரண்டற்றதாய் இருக்கும் பிரம்மம் மாத்திரமே உண்மைப் பொருள், வேறில்லை' என் னும் ஒலி என் காதில் விழுந்துகொண்டேயிருந்தது."

சிஷ்யர் அதிசயமுற்று "ஐய, தேவரீருடனே வச னித்துத் தேவரீருடைய அநுபவங்களை மனங்கொள் ளின் சாஸ்திரக் கல்வி வேண்டியதில்லையென நான் நினைக்கின்றேன்" என்றார்.

சுவா: அப்படியல்ல. சாஸ்திர ஆராய்ச்சியும் வேண்டியதுதான். ஞானத்தை அடைவதற்குச் சாஸ்தி ரங்களைக் கற்றல் இன்றியமையாதது. அந்நோக்கமாக மடத்திலே சில வகுப்புக்களை ஆரம்பிக்க எண்ணியிருக் கிறேன். வேதங்கள், உபநிடதங்கள், கீதை, பாகவதம் என்ற இவைகள் இவ்வகுப்புகளிலே படிக்கப்படவேண் டும். பாணினி அஷ்டாத்தியாயியை நான் பாடம் சொல்லுவேன்.

சிஷ்: தேவரீர் பாணினி அஷ்டாத்தியாயியை ஆராய்ந்து கற்றதுண்டா?

சுவா : நான் ஜெய்ப்பூரில் இருந்தபொழுது ஒரு பெரிய வியாகரண வித்துவானைக் கண்டு அவரோடு சம்ஸ்கிருத வியாகரணம் ஆராய வேண்டுமென விரும்பினேன். அவர் அத்துறையிற் பெரிய வித்துவானுக இருப்பினும் கற்பிக்கும் ஆற்றல் அவருக்கு இருக்கவில்லை. முதற் சூத்திரத்து வியாக்யானத்தை மூன்று நாள் தொடர்பாகப் பாடஞ் சொன்னூர். எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. நான்காம் நாள் அவர் மிகவும் சிரமப்பட்டவராய் என்னை நோக்கி, "சுவாமிஜி மூன்று நாள் ஆகியும் ஒரு சூத்திரத்தின் அருத்தத்தை நான் தங்களுக்குத் தெளிவுபடுத்தக் கூடாமற் போயிற்று; நான்பாடஞ் சொல்லுவதினுல் நீங்கள் அதிகப்பயனடையப்போவதில்லை என்றஞ்சுகிறேன்" என்முர். இவ்வார்த்தைகள் என் செவியிற் பட்டதும் நான் ஊண் உறக்கங்களை ஒருபால் வைத்துவிட்டுச் சூத்திரப் பொருள் ஆராய்வதையே கருமமாகக் கொண்டேன். மூன்று மணி எல்லையினுள்ளே வியாக்கியானம் முழுவதும் தெளிவுபட்டது. நான் ஆசிரியரிடத்துப் போய் முழு வியாக்கியானத்தின் அருத்தத்தையும் எடுத்து இயம்பினேன். அவர் அதனைக் கேட்டு, "நான் மூன்று நாள் வருந்தியும் தெளிவுபடுத்தக்கூடாத பொருளை மூன்று மணி நேரத்துக்குள்ளே நீங்கள் இவ்வளவு தெளிவாக அறிந்து கொண்டதெப்படி!" எனக் கூறினுர். அதன் பின்பு நாள்தோறும் அதிகாரம் அதிகாரமாக மிகவும் எளிதில் வியாக்கியானம் முற்றையும் வாசித்து முடித்தேன். மனத்தை ஒரு வழிப்படுத்துவதினுல் எதனையும் செய்து முடிக்கலாம். மலைகளைத் தானும் அணுவாக்கிவிடலாம்.

சிஷ் : ஐய, தேவரீருடைய செயல் எல்லாம் அற்புதமாகவே இருக்கின்றன.

சுவா : இப் பிரபஞ்சத்திலே அற்புதம் என்பது ஒன்றில்லை. அஞ்ஞான இருள் மூடி இருப்பதனுலே பொருள்களிடத்தே புலங்கொளற்கரிய தன்மைகள் காணப்படுகின்றன. அறிவு விளக்கம் எய்திய ஞான்று

பொருள்களினின்று புலங்கொளற்கரிய நீர்மை அனைத்தும் அகன்று போவன. ஆகாதவற்றையும் ஆகச் செய்யும் மாயை தானும் அகன்று விடுகின்றது. 'எவனை அறிவதனால் யாவும் அறியப்படுகின்றனவோ அவனை அறிவாயாக; அவனையே தியானிப்பாயாக.' அந்த ஆத்மனை அடைவாய் எனில் எல்லா சாஸ்திரங்களினுடைய கருத்தும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதிற் புலப்படும். பண்டை நாளில் இருந்த ரிஷிகள் இவ்வுயர் நிலையை அடைந்திருந்தார்கள். நாம் அதனை அடையாது விடுவோமா? நாமும் ஆண் மக்களே. ஒரு காலத்தில் ஒருவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்தது தக்க முயற்சியினாலே மற்றொருவருடைய வாழ்க்கையிலே வந்தெய்துதல் வேண்டும். சரித்திர நிகழ்ச்சியில் முன் நடந்தன பின் நடப்பது இயல்பு. எல்லாரிடத்திலும் நிலைபெற்ற ஆத்மன் ஒருவனே. வெளிப்பட்டுத் தோற்றுகிற தன்மை வேறு வேறு மக்களிடையே வேறு வேறாக இருக்கும். இந்த ஆத்மனைப் பிரகாசிக்கச் செய்வாயாக; அப்பொழுது உன்னுடைய புத்தி எல்லாவற்றையும் கூர்ந்து நோக்கும் ஆற்றலுடையதாகும். ஆத்ம தரிசனம் செய்யாதவனுடைய புத்தி ஒரு துறைப்பட்டுச் சிறியதாய் இருக்கும்; ஆத்ம தரிசனம் செய்தவனுடைய புத்தியோ என்றால் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கியதாய் இருக்கும். ஆத்மன் பிரகாசிக்கத் தொடங்க விஞ்ஞான சாஸ்திரம் தத்துவ சாஸ்திரம் என்று இன்னவற்றை எல்லாம் எளிதாக அறிந்துகொள்வாய். சிங்க கர்ச்சனையோடு ஆத்மனுடைய மகிமையை உலகிற்கு வெளிப்படுத்துவாயாக; எல்லாப் பிராணிகளுக்கும் அச்சமின்மையை உண்டாக்கும் பொருட்டு "எழுமின், விழிமின் கருதிய கருமம் கைகூடும்வரை ஓய்வின்றி உழைமின்" எனச் சொல்லுவாயாக.

(18)

[இடம்: பேலூர் திருமடம். காலம் 1898-ம் ஆண்டு]

கடந்த இரண்டு நாட்களாகச் சிஷ்யர் பேலூரிலே நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலை வீட்டிலே சுவாமிஜியோடு உடன் உறைகின்றார்.

இன்று தமது அறையிலே இரவு பொழுதைக் கழிப்பதற்குச் சுவாமிஜி சிஷ்யருக்கு உத்தரவு கொடுத்தார். சிஷ்யர் சுவாமிஜியினுடைய கால்களைப் பிடித்துச் சேவை செய்துகொண்டிருக்கும்போது சுவாமிஜி அவரை நோக்கி "என்ன பேதமை! இத்தகைய இடத்தை விட்டுவிட்டுக் கல்கத்தாவுக்குப் போகப் போகிறாய் என்று சொல்லுகிறாய்; இந்த இடத்தின் பரிசுத்தத்தை உற்று நோக்கிப் பார்—கங்கையிற் படிந்து வரும் சுத்தமான காற்று—சாதுக்களின் கூட்டம்—இத்தகைய இடம் பிறிதொன்றினை நீ காணுதல் கூடுமா?"

சிஷ்: ஐய, கடந்துபோன ஜென்மங்களிலே செய்த பெருந்தவத்தின் பயனாக தேவரீருடைய கூட்டுறவைப் பெற்றேன். நான் அவிவேகத்தினால் மேற்கொள்ளப் படாமலும் மயக்கத்தை அடையாமல் இருக்கவும் என்னை ஆசீர்வதிப்பீராக. என்னுடைய உள்ளம் சாக்ஷாத்காரமாக ஏதாவது உண்மைகளை அறிந்து கொள்ளப் பெரிதும் விரும்புகிறது.

சுவா: நானும் பலமுறை அத்தகைய உணர்ச்சியைப் பெற்றேன். ஒரு நாள் காசிப்பூர் தோட்டத்திலே மிகவும் ஆர்வத்தோடு ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு எனது வேண்டுகோளைத் தெரிவித்தேன். மாலையிலே, தியான வேளையிலே, நான் உடம்பைப்பற்றிய உணர்ச்சியை முற்றிலும் இழந்தேன். அது முற்றிலும் இல்லை என்னும் உணர்வு மேற்பட்டிருந்தது. சூரியன், சந்திரன், வெளியிடம், காலம், ஆகாசம் என்னும் இவையெல்லாம்

வேறுபாடற்ற ஓர் திரளாக அறிவினைக் கடந்த ஒரு நிலையிலே உருகி மறைந்துபோக உடலினைப்பற்றிய எண்ணம் ஏறக்குறைய முற்றிலும் மறைந்து விட்டது. பரமாத்மாவினில் அமிழ்ந்துபோன தன்மையாகவே இருந்தது. ஆனால் நான் என்னும் உணர்வு ஒரு சிறிது இருந்தது. அதனால் அச்சமாதி நிலையிலிருந்து மீட்டும் சாதாரண நிலைக்கு வரக்கூடியதாய் இருந்தது. சமாதி நிலையிலே "நான்" "பிரம்மம்" என்னும் இவற றிடையே உள்ள வேறுபாடு அற்றுப்போகிறது. கரை கடந்த சமுத்திரத்திலே எவ்விடத்திலும் நீரேயன்றிப் பிறிதொன்றும் இல்லை. அதுபோல வாக்குக்கும் மனத்துக்கும் எட்டவொண்ணாதது அந்நிலை. வாக்கு மனம் கடந்த நிலையிலே மெய்யுணர்வு வந்தெய்துகிறது. சாதகன் "நான் பிரம்மம்" என்று எண்ணுகிறவரையில் "நான்" என்றும் "பிரம்மம்" என்றும் இரண்டு வஸ்து ஏற்பட்டு விடுகிறது. நான் மேலே குறித்த அனுபவத்தைப் பெற்ற பின்னர் திரும்பவும் அச்சமாதி நிலையைப் பெறும்படி பலநாள் முயன்றேன். கைகூட வில்லை. இதனைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குச் சொன்னேன். அவர் என்னை நோக்கி "நீ இரவு பக லாக அந்த அனுபவத்திலே மூழ்கிக் கிடப்பாயாயின் அன்னையினுடைய கருமங்களைப் பின் யார் தான் செய்வார்? உன்னுடைய வேலை நிறைவேறியபின் அந்நிலை உன் உள்ளத்துத் தானே வந்து அடையும்" என்றார்.

சிஷ் : அப்பாலுக்கப்பாலாகிய நிர்விகல்ப சமா தியை அடைந்த பின்னர் 'நான்' என்னும் உணர்ச்சி யினாலே மீட்டும் லௌகிக சிந்தனைக்கு வருதல் கூடாதா?

சுவா : உலகத்தின் நன்மைக்காக அவதார புருஷர் கள் மாத்திரம் சமாதி நிலையிலிருந்து சாதாரண நிலைக்கு வருதல் கூடும் என ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லியிருக் கிறார். ஏனைய ஜீவர்கள் அங்ஙனம் வருதல் இல்லை;

அந்நிலையிலே அமிழ்ந்திக் கிடக்கும் நீர்மையராக இரு பத்தொரு தினம் உயிரோடிருந்ததற் பின்னர்ப் பழுத்த இலை விழுவதுபோல சம்சாரமென்னும் விருட்சத்தி லிருந்து அவர்களுடைய உடலம் விழுந்து விடும்.

சிஷ் : சமாதியிலே மனமானது அழுந்தி, உணர்வி லிருந்து எழுகின்ற அலைகள் அற்றுப் போனால் மன முயற்சி எங்கே? நான் என்னும் உணர்வினாலே உலகுக் குத் திரும்பி வருவது யாங்ஙனமாகும்? மனம் நாச மடைந்தபொழுது சமாதி நிலையிலிருந்து லௌகிக சிந்த னைக்கு வருபவர் யாவர்? வருதற்குரிய கருவி யாது?

சுவா : பூரண சமாதியிலே எல்லா விருத்திகளும் அடங்கிப்போக அந்நிலையிலிருந்து மீளுதல் இல்லை என் பது வேதாந்தத்தின் முடிபு. **அனுவ்ருத்தி சப்தாத்** 'ஆக மத்தினின்று, மீளுதலில்லை' என வேதாந்த சூத் திரஞ் சொல்லுகிறது. உலகத்தின் நன்மைக்காக அவ தார புருஷர்கள் உள்ளத்திலே சில விருப்பங்களை வைத் திருப்பார்கள் அவற்றைப்பற்றிச் சமாதி நிலையி னின்று சாதாரண நிலைக்கு வந்துவிடுவார்கள்.

சிஷ் : ஐய, ஓரிரண்டு விருப்பங்கள் உள்ளத் திருக்குமாயின் அந்நிலையை யாவையும் கடந்த சமாதி நிலையென்று எப்படிச் சொல்லலாம்? அந்நிலையிலே மனத்தின் விருத்திகள் எல்லாம் போய்விடுகின்றன வென்றும் எல்லா விருப்பங்களும் அழிந்துவிடுகின்றன வென்றும் சமய சாஸ்திரங்கள் சொல்லவில்லையா?

சுவா : மஹாப் பிரளயத்தின் பின்னர் பிரபஞ்சம் தோற்றுவதெப்படி? மஹாப் பிரளய காலத்தில் யாவும் பிரம்மத்தினிடையே அமிழ்ந்திப் போகின்றனவன்றோ? ஆனால் சிருஷ்டி உண்டென்பதாக சமய சாஸ்திரங்க ளால் அறிகின்றோம்; பிரபஞ்சத்தினுடைய தோற்ற மும் ஒடுக்கமும் அலைகள்போல மாறி மாறி வருகின்றன. புதிய சிருஷ்டியைப் போலவும் மஹாப் பிரளய காலத் திலே பிரபஞ்சம் ஒடுங்கி விடுவதைப் போலவும் அவதார

புருஷருடைய அதீத நிலையும், சாக்கிர நிலையும் அமைந் திருக்கின்றனவென்று கூறுவது பொருத்தமாகும்.

சிஷ்: பிரளய காலத்திலே சிருஷ்டிக்க வேண்டிய வித்துக்கள் முற்றிலும் அழிந்து போகாது பிரம்மத்தி னிடத்தே அமிழ்ந்திருக்கின்றன வென்றும் ஆதலினால் அது முற்றும் நாசமாகிய நிர்விகல்ப சமாதி ஆகாதென் றும் வாதிக்கலாமே.

சுவா: அப்படியானால் ஒருவகை விசேடண மில்லாததும் ஒன்றினாலும் பற்றப்படாததும் ஆகிய பிரம்மத்தினிடத்திலிருந்து பிரபஞ்சத் தோற்றம் எப்படி உண்டாதல் கூடும் என்னும் வினைக்கு விடை யளிக்க வேண்டுமே.

சிஷ்: பாலை நிலத்திலே தோற்றுகின்ற கானல் நீரைப்போலச் சிருஷ்டி என்பது பிரம்மத்தினிடத்திற் காணப்படுகிற தோற்றமேயன்றிப் பிறிதொன்றில்லை என சாஸ்திரங்கள் இவ்வினைவுக்கு விடை தருகின்றன. இத்தோற்றம் மாயையினால் ஆனது: நித்தியப் பொரு ளாகிய பிரம்மத்துக்கு மறுதலை ஆயினமையால் மாயை பொய்ப்பொருள்.

சுவா: சிருஷ்டி பொய்யாயின் ஜீவன் அடை கின்ற நிர்விகல்ப சமாதியையும் அந்நிலையில் இருந்து திரும்புவதையும் தோற்ற மாத்திரையாகக் கருதலாமே. ஜீவன் இயற்கையிலே பிரம்மமாய் இருக்கிறான். அவன் பந்தத்தை அநுபவிப்பது எப்படி? நீ பிரம்மம் என் னும் உண்மையை அடைய விரும்பும் விருப்பமும் மயக்கமேயாம். ஏனெனில் "நீ அதுவாய் இருக்கிறாய்" என சாஸ்திரங்கள் கூறுகின்றன. **அயமேவஹி தேபந்த: சமாதி மனுதிஷ்டஸி**, "நீ சமாதியை யடைய முயலுகின்ற முயற்சியும் பந்தமே."

சிஷ்: இஃது இருவழியிலும் முடிவு காண வொண்ணு விசாரணையாயிருக்கின்றதே. நான் பிரம்ம

மாயிருந்தால் ஏன் எப்பொழுதும் அந்த மெய்யுணர் விலே நிலைத்திருத்தல் கூடாது?

சுவா: மெய்யுணர்வினை அடைவதற்குச் சில கருவிகள் இன்றியமையாதன. மனம் நம்மிடத்துள்ள ஒரு கருவி. ஆனால் அது தானாக அறியும் தரத்ததன்று. ஆத்மனுடைய விளக்கத்தினாலே அறிவுடையதுபோல் தோற்றுவது. பஞ்சதசி என்னும் நூலின் ஆசிரியர் **சிச்சாயா வேசத: சக்திச் சேதனேவ விபாதிஸா,** "ஆத்மனுடைய அறிவுப் பிரகாசத்தின் பிரதி பிம்பத்தினாலே சக்தி அறிவோடுகூடிய தன்மையாகக் காணப்படுகிறது" என்றார். ஆதலினால் மனமும் அறிவோடு கூடிய பொருள் போலத் தோற்றுகிறது. ஆதலால் மனத்தின் மூலமாக அறிவு வடிவாகிய ஆத்மனைக் காணுதல் கூடா தென்பது நிச்சயம். மனத்துக்கு அப்பாற் போதல் வேண்டும். மனத்துக்கு அப்பாலாகிய கருவி பிறிதொன் றில்லை—அங்கு ஆத்மனே உள்ளது—ஆதலினாலே அப்பாலாகிய நிலையில் அறிவுப் பொருளும், அறிவுக் கருவியும் ஒன்றாகின்றன. காண்பானும் காட்சியும் காணும் கருவியும் வேறுபாடற்று ஒன்றாகின்றன. ஆதலினாலன்றோ சுருதியும், **விக்ஞாதாரமரே கேன விஜானீயாத்,** "நித்தியமாக அறிபவனை அறிவது எதனைக் கொண்டு?" என விளம்பிற்று. சாதாரண அறிவுக்கு அப்பாலாகி அறிவோன் அறிவு அறிவுக்கருவி என்னும் இவற்றிடையே வேறுபாடு தோன்றாத நிலைமை ஒன்று உண்டு. மனம் அறிவிலே ஒடுங்குங்கால் அந்த நிலை தோற்றும். "தோற்றும்" என்று ஒருவாறாகச் சொல்ல லாமே யன்றி இதனை எடுத்துரைப்பதற்கு வேறு வழி யில்லை. அதனை மொழியினாற் சொல்லுதல் கூடாது. சங்கராசாரியார் இதனை அபரோக்ஷானுபூதி என்பர் அந்நிலையை அடைந்த பின்னரும் அவதார புருஷர் சாதாரண நிலைக்கு வந்து தம்முடைய அநுபவத்தை ஓரளவாகச் சொல்லுவார்கள். வேதம் முதலாகிய சாஸ் திரங்கள் இத்தகைய அறிஞரிடத்திருந்து உதித்தன

சாதாரண ஜீவர்களோ வென்றால் கடல் ஆழம் பார்க்கப் போன உப்புப் பதுமையைப் போல அந்நிலையினின்று மீளமாட்டார். தொகுத்துச் சொல்லுமிடத்து நித்திய மாகிய பிரம்மம் நீயே என்னும் உண்மையினை நீ அறிந்து கொள்ளுதல் போதுமானது.

நீ அதுவாய் இருக்கிறாய். அறிவற்ற மனமொன்று இடையே நின்று அவ்வறிவினை மறைக்கின்றது. சமய சாஸ்திரங்கள் இதனையே மாயை என்கின்றன. சூக்கும வஸ்துக்களாலான மனமானது ஒடுக்கப்பட்டால் ஆத்மன் தன்னுடைய சொந்தப் பிரகாசத்தினால் விளக்க மடையும். மாயை அல்லது மனம் பொய்ப்பொருள் என்பதற்கு ஒரு சான்று எதுவெனில், மனமானது தன் னளவிலே அறிவற்றிருப்பதும் இருளியல்பாய் இருப்ப தும் ஆத்மனுடைய விளக்கத்தினாலே அறிவுள்ளதாகத் தோன்றுவதுமேயாகும். இதனை நீ தெளியும்பொழுது மனமானது அறிவுக் கடலிலே அமிழ்ந்திவிடும். அப் பொழுது **அயமாத்மா பிரம்ஹ** 'இந்த ஆத்மா பிரம்மம்' என்னும் உண்மையை யுணர்ந்துகொள்வாய்.

அதன் பின்பு சுவாமிஜி சிஷ்யரை நோக்கி "உனக்கு நித்திரை வருகிறதுபோல் இருக்கிறது. நீ சயனிப்பா யாக" என்றார்.

*   *   *   *   *

இரவில் சிஷ்யர் ஓர் அற்புதமான கனவு கண்டார். அதன் பயனாகச் சுவாமிஜிக்குப் பூஜை செய்து வழிபட உத்தரவு தரும்படி சிஷ்யர் சிரத்தையோடு பணிந்து நின்றார். சுவாமிஜி உடன்பட வேண்டியதாயிற்று. பூஜை முடிந்ததும் அவர் சிஷ்யரை நோக்கி, "நல்லது, நீ செய்ய விரும்பிய பூஜையை முடித்துக் கொண்டாய். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆராதனைக்கு உரிய புஷ்பத்தட்டைக் கொண்டு என்னுடைய பாதங்களுக் குப் பூஜை செய்தாய். செய்யத்தகாத இச் செயலைக் கண்டால் பிரேமாநந்தர் மிகவும் கோபிப்பார்" என்றார்.

இம்மொழிகள் சொல்லி முடியுமுன்னர் சுவாமி பிரேமா நந்தர் அவ்விடம் வந்தார். சுவாமிஜி அவரை நோக்கி, "பார்த்தீர்களா இவர் செய்த அபராதச் செயலை; ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பூஜைக்குரிய பாத்திரங்களைக் கொண்டு, இவர் எனக்கு வழிபாடியற்றினார்" என்றார். சுவாமி பிரேமானந்தர் புன்னகை புரிந்து, "அவர் செய்தது நன்று: நீங்களும் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் வேறா?" என்றார். இதனைக் கேட்ட சிஷ்யர் மனத்தில் ஆறுத லடைந்தார்.

சிஷ்யர் வைதீக ஒழுக்கமுள்ளவர். விலக்கப்பட்ட உணவை மாத்திரமல்ல, பிறர் தொட்ட உணவு எதனையுமே உண்ணமாட்டார். ஆதலினால் சுவாமிஜி இவரைச் சில வேளைகளிற் "புரோகிதர்" என்று அழைப்பது வழக்கம். காலைப் போஜனத்தோடு சுவாமிஜி சில பிஸ் கோத்துகளை உண்டு கொண்டிருக்கும்பொழுது சுவாமி சதானந்தரை அழைத்து, "புரோகிதரை இங்கே வரும் படி செய்" என்றார். சிஷ்யர் வந்ததும் சுவாமிஜி தம் முணவில் ஒருபாகத்தை அவரிடம் கொடுத்து உண்ணும் படி சொன்னார். சிஷ்யர் மறு மாற்றமின்றிப் பெற்று உண்டதைக் கண்டு சுவாமிஜி அவரை நோக்கி "நீ இப் பொழுது உண்டது என்னவென்று அறிவாயா? அது கோழி முட்டை சேர்த்துச் செய்யப்பட்டது" என்றார். அதனைக் கேட்ட சிஷ்யர், "அது எதுவாயினும் ஆகுக. நான் அதனை அறியவேண்டுவதில்லை. இந்தப் பிரசா தத்தை உட்கொண்டு நான் அமிர்தமுண்டவனாயினேன்" என்றார். அப்பொழுது சுவாமிஜி அவரை நோக்கி, "இன்று முதலாக என்றும் உன் உள்ளத்திலிருந்து சாதி, வருணம், உயர்குடிப் பிறப்பு, நல்வினை தீவினை என்னும் இவற்றால் ஏற்பட்ட அகந்தை முற்றிலும் அழிந்து போகும்படி நான் உன்னை ஆசீர்வதிக்கின்றேன்" என்றார்.

(19)

[இடம்: பேலூர்த் திருமடம் காலம்: 1898 ம் ஆண்டு]

இன்று காலை சிஷ்யர் மடத்துக்கு வந்தார். சுவாமிஜியினுடைய திருவடிகளை நமஸ்கரித்த பின்னர் சுவாமிஜி அவரை நோக்கி, "நீ பிறருடைய சேவையிலே இருப்பதனால் எய்திய பயனென்? ஏதாவது சொந்த முயற்சி செய்யலாகாதா?" என்றார். அந்நாட்களிலே சிஷ்யர் ஒரு குடும்பத்தில் சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லும் சட்டாம் பிள்ளையாயிருந்தார். கல்வி கற்பிக்கும் தொழிலைப்பற்றி வினவியபோது சுவாமிஜி பின்வருமாறு சொல்வார். "நீண்ட காலத்துக்கு ஒருவன் சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லும் வேலையைச் செய்தால் அவனுடைய புத்தி மழுங்கிப் போகின்றது. இரவு பகலாகச் சிறுவர் கூட்டத்தினுள்ளே ஒருவன் நிற்பானாயின் அவனுடைய புத்தி படிப்படியாக மந்தமாய்ப் போய்விடுகின்றது. ஆதலால் சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லும்தொழிலை விட்டு விடுவாயாக.

சிஷ்: அப்படியானால் நான் என்ன செய்வது?

சுவா: ஏன்? நீ லௌகிக வாழ்க்கையில் வாழ்ந்து பொருள் சேர்த்துவைக்க விரும்பினால் அமெரிக்காவுக்குப் போவாயாக. தொழில் முறை செய்வதற்குரிய வழிகளை நான் காட்டித் தருவேன். ஐந்து வருடங்களிலே பெருந் தொகையான பணத்தைத் திரட்டிக் கொள்ளுவாய்.

சிஷ்: நான் என்ன தொழில் செய்வேன்? பணம் எங்கிருந்து வரும்?

சுவா: என்ன வீண் கதை பேசுகிறாய்? உன்னுள்ளே அபாரமான சக்தியிருக்கிறது. "நான் ஒன்றுமில்லாதவன்", "நான் ஒன்றுமில்லாதவன்" என நினைத்ததனால் நீ வலியிழந்து போய்விட்டாய். ஏன் நீ மாத்திரம்! இந்த ஜாதி முற்றுமே அவ்வண்ணம் ஆகிவிட்

டது. ஒரு முறை உலகத்தைச் சுற்றிப்பார்; மற்ற ஜாதி யாருடைய நாடி நரம்புகளிலே எவ்வளவு இரத்த வுறுதி இருக்கிறதென்பதைக் காண்பாய். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எவ்வளவோ கல்வி கற்றபின்பும் பிறருடைய வாயிலண்டை போய் "எங்களுக்கு வேலை கொடுங்க" ளென்று அழுது பிரலாபிக்கின்றீர்கள். மற்றவர்களுடைய காலினால் மிதிப்புண்டு பிறருக்கு அடிமை பூண்டிருக்கின்றீர்கள். நீங்களும் மனிதரா? ஒரு குண்டூசித் தலையளவு பெறுமதிதானும் உங்களுக்கில்லை. நீர்வளம் நிறைந்த இந்த செழிப்பான நாட்டிலே மற்ற விடங்களிலும் பார்க்க நிலமானது ஆயிர மடங்கு பயனைத் தருகிற இந்த நாட்டிலே, உண்ணுதற்கு உணவும் உடுப்பதற்கு உடையுமின்றி வருந்துகிறீர்கள். இந்நாடு வளமுடையது. இதன் வருவாய் பிற நாடுகளிலே நாகரீகம் பரவுவதற்குக் காரணமாயிருந்தது. இந்த நாட்டிலே உங்களுடைய நிலைமை எவ்வாறாய் இருக்கிறது? உங்கள் வாழ்க்கை நாயினுடைய வாழ்க்கையிலும் இழிவுடையது. வேத வேதாந்தங்கள் உண்டென்று பெருமிதம் பேசிக்கொள்ளுகிறீர்கள். உணவுக்கும் உடைக்கும் ஏற்பாடு செய்துகொள்ள மாட்டாது, பிறருடைய தயவை எதிர்பார்த்து நிற்கும் ஜாதியார் பெருமிதம் பேசுவது எதனைக் குறித்து? உங்களுடைய சமய சாதனைகளை எல்லாம் ஒருபுறம் எறிந்துவிட்டு மனித வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய முயற்சியை முதலிலே செய்வீர்களாக உங்களுடைய தேசத்திலே உண்டாகிற பொருள்களைக் கொண்டு பிற நாட்டார் நிறைந்த பயனைப் பெறுகிறார்கள். நீங்கள் பொதி சுமக்கிற கழுதைகளைப் போல அவருடைய சுமையைத் தாங்கிச் செல்லுகிறீர்கள். இந்தியாவில் இயற்கையாக விளைகின்ற பொருள்களை அந்நிய நாட்டார் ஏற்றுமதி செய்து தங்களுடைய புத்திக் கூர்மையினாலே அவற்றைப் பண்படுத்திப் பெருமையை அடைகின்றார்கள். நீங்களோ வென்றால் உங்களுடைய புத்தியை அறையில் பூட்டிவைத்து விட்டு முன்னோர் வைத்துப் போன

பொருளைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு உணவுக்கு வருந்தி அலைந்துகொண்டு திரிகின்றீர்கள்.

சிஷ்: ஐய, வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்க வழியாது?

சுவா: கருவிகள் உன் கையில் இருக்கின்றன. நீயோ கண்ணைக் கட்டிக்கொண்டு, "நான் குருடன், எனக்கு ஒன்றும் தெரியவில்லை" என்கிறாய். கண்ணைக் கட்டியிருக்கும் துணிகளைக் கிழித்தெறி, உச்சிக்கால சூரியனுடைய கிரணங்கள் உலக முற்றிலும் ஒளி பரப்புவதைக் காண்பாய். பிற நாட்டுக்குப் போவதற்குப் பொருள் கிடையாவிடின் கப்பலிலே கூலிவேலை செய்து கொண்டாயினும் போய்ச்சேர். இந்தியாவில் நெசவு செய்யப்பட்ட துணி, மூங்கிலாற் செய்யப்பட்ட பொருள்கள் என்று இத்தகைய நமது நாட்டுப் பொருள்களைக் கொண்டுசென்று ஐரோப்பிய அமெரிக்க வீதிகளிலே விற்பாயாக. வெளிநாட்டு வர்த்தக நிலையங்களிலே இந்திய தேசத்துப் பொருள்கள் இப்பொழுதும் எவ்வளவு நன்கு மதிக்கப்படுகின்றன என்பதை நீ காண்பாய். அமெரிக்காவிலே நமது ஹுக்ளி நாட்டு முகம்மதியர் சிலர் இவ்வண்ணம் வியாபாரஞ் செய்து பெரும் பணம் தேடியதை நான் கண்டேன். அவர்களினும் பார்க்க நீ புத்தி குறைந்தவனா? இந்தியாவிலே செய்யப்படுவதும் உலகத்தில் மற்றொரு பாகத்தினும் தனக்கு இணையில்லாததுமாகிய காசிப்பட்டுப் புடவை என்னும் அழகிய வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு அமெரிக்காவுக்குப் போ. அந்தத் துணியினாலே அங்கிகளைத் தைப்பித்து விற்றுப்பார். எவ்வளவு லாபம் வருகிறதென்று அப்பொழுது அறிந்துகொள்ளுவாய்.

சிஷ்: ஐய! காசிப் புடவையினாற் செய்யப்பட்ட துணிகளை அங்குள்ளார் அணிவார்களா? பல வர்ணமான துணிகள் அந்த நாட்டுப் பெண்களுடைய மனத்துக்கு இயைந்தனவாகா எனக் கேள்வியுற்றேன்.

சுவா: அவர்கள் அவற்றைக் கொள்ளுவார்களோ மாட்டார்களோ என்பதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ முயன்று அவ்வூருக்குச் செல்வாயாக; எனக்கு அந்த நாட்டில் அநேக நண்பருண்டு. நான் உன்னை அவர்களுக்கு அறிமுகஞ் செய்து வைப்பேன். முதலிலே அந்த வஸ்திரங்களை அவர்களே உபயோகப் படுத்தும் பொருட்டு நான் அவர்களைக் கேட்பேன். அவர்களைப் பின்பற்றி வேறு பலர் நீ விலைப்படுத்தும் துணிகளை வாங்க வருவார்கள். அவர்களுக்குக் கொடுக்கச் சரக்கில்லாத வண்ணமாக உன்னுடைய வியாபாரம் பெருகிவிடும்.

சிஷ்: வியாபாரம் நடத்துவதென்றால் முதல் வேண்டுமே; அதற்கு யான் என்ன செய்வேன்?

சுவா: தொடக்கத்தில் நான் உனக்கு உதவி செய்வேன். பின்பு உன்னுடைய முயற்சியினாலே நீ பார்த்துக்கொள்ள வேண்டும். "தோற்றா யெனிற் சுவர்க்கத்தை யடைவாய், வென்றா யெனின் பூலோக இன்பத்தை அனுபவிப்பாய்" (கீதை). இம்முயற்சியிலே நீ இறந்து போய்விடினும் அதுவும் நலமாகும். உன்னுடைய நன் முன்மாதிரியைப் பின்பற்றி வேறு பலர் இம்முயற்சியைச் செய்வார்கள். நீ அநுகூலமடைந்தால் பெருஞ் செல்வனாக வாழ்வாய்.

சிஷ்: ஆம், ஐய, அஃது உண்மையே; ஆயினும் தைரியத்தோடு முன்வர மாட்டாதவனாயிருக்கிறேன்.

சுவா: என் மகனே, நான் முன்பு குறிப்பிட்டதும் அதுதான்—உங்களுக்குச் சிரத்தையில்லை. சுய நம்பிக்கையில்லை. நீங்கள் எக்காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்? லௌகீக முன்னேற்றமோ, ஆத்மீக முன்னேற்றமோ பெறுதற்கு உங்களுக்குச் சக்தியில்லை. நான் முன்னர்க் கூறியபடி உனது ஆற்றல் முழுவதையும் ஒரு வழிப்படுத்தி வாழ்க்கையை அநுகூலப்படுத்து; அல்லாவிடில் யாவற்றையும் பரித்தியாகஞ் செய்துவிட்டு நாங்கள் நிற்கிற வழி

யில் நில். ஆத்ம லாபத்துக்குரிய போதனைகளைச் செய்வதனாலே அனைத்து நாட்டு மக்களுக்குந் தொண்டு புரி—அப்பொழுதுதான் உனக்கு வேண்டிய ஒரு கவளம் உணவைப் பெறுவாய். கொடுக்கலும் வாங்கலும் இல்லாதிருப்பின் ஒருவர் மற்றொருவரைக் கவனிப்பாரென்று எண்ணுகிறாயா? இல்வாழ்வாருக்கு ஆத்மீக ஞான சம்பந்தமான உண்மைகளை நாங்கள் கொடுக்கிறோம்; அவர்கள் எங்களுக்குச் சிறிது உணவு கொடுக்கிறார்கள். நீ ஒன்றுஞ் செய்யாவிட்டால் அவர்கள் ஏன் உனக்கு உணவு கொடுக்கவேண்டும்? பிறருக்குத் தொண்டு பூண்டு அடிமைத் தொழில் செய்வதிலுள்ள துன்பத்தை நீ அறிந்திருக்கிறாய். ஆயினும் நீ விழித்துக்கொள்ளவில்லை; உன்னுடைய துன்பமும் தீரவில்லை; இது நிச்சயமாக மாயையின் மயக்கமே.

மேலைத் தேசத்திலே இராஜமந்திரி சபைகளிலே பின்னணியிலுள்ள ஆசனங்கள் பிறரிடத்திற் றொழில் செய்பவர்களுக்கும் முன்னணியிலுள்ள ஆசனங்கள் கல்வியினாலும் புத்திக்கூர்மையினாலும் சொந்த முயற்சியினாலும் புகழ் படைத்தவர்களுக்கும் என அமைக்கப் பெற்றிருப்பதை நான் கண்டேன். மேலைத் தேசங்களில் ஜாதிக் கஷ்டமில்லை. யாவர் முயற்சியினாலும் உழைப்பினாலும் திருமகளுடைய அருளினைப் பெறுகின்றார்களோ அவர்களே தேசத் தலைவர்களாகவும் அதன் எதிர்காலத்தை வழி நடத்துபவராகவும் கருதப் படுகின்றனர். உங்கள் தேசத்தில் ஜாதி உயர்வைப் பற்றி வீண் வம்பு வார்த்தை பேசுகிறீர்கள், ஈற்றிலே ஒரு கவளம் உணவுதானும் உங்களுக்குக் கிடைப்பதில்லை'. ஓர் ஊசி செய்யத் தெரியாத நீங்கள் ஆங்கிலேயரை இழித்துக்கூறத் துணிகின்றீர்கள், என்ன மடமை! அவர்களுடைய காலடியிலிருந்து கைத் தொழிலையும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்புரி முறைகளையும் கற்றுக் கொள்வீர்களாக. நீங்கள் தகுதி உடையவர்களானால் பின்னும் ஒரு முறை நன்மதிப்பைப் பெறுவீர்கள். அப்பொழுது உங்கள் வாக்குக்குச்

செவி சாய்ப்பார்கள். வேண்டிய ஆயத்தமின்றிக் காங்கிரஸ் மஹாசபையில் வீண்வார்த்தை பேசுவதனால் எய்தும் பயனென்ன ?

சிஷ் : ஆனால் ஐய, இந்நாட்டிலுள்ள கல்வியாளர்களெல்லாம் அந்தச் சபையில் சேருகிறார்களே ?

ஸ்வா : சில பரீக்ஷைகளிற் சித்தி எய்தி நல்ல பிரசங்கங்கள் பண்ணக்கூடியவர்களைக் கற்று வல்லவர்களென்று நீங்கள் எண்ணுகிறீர்கள். சாதாரண ஜனங்களைத் தங்களது வாழ்க்கைக்குத் தகவுடையவர்கள் ஆக்காத கல்வி, ஒழுக்கத்தின் வலிமையை வழிப்படுத்தாத கல்வி, பிறர்க்கு உதவும் மனத்தினை உண்டாக்காத கல்வி, சிங்கத்தைப் போன்ற மனஉறுதியைத் தராத கல்வி—இதனையும் கல்வி என்று சொல்லலாமா? தன் கருமத்தைப் பார்க்கக்கூடிய ஆற்றலைத் தருதல் உண்மைக் கல்விக்கு இலக்கணம். இக்காலத்துள்ள பள்ளிக்கூடங்களிலும் உயர்தரக் கலைக் கழகங்களிலும் பெறுகின்ற கல்வி உங்கள் அனைவரையும் குன்மவியாதி பிடித்த ஒரு வகுப்பாராக்கி விட்டது. நீங்கள் இயந்திரங்களைப் போலக் கருத்தில்லாமல் இயங்கித் திரிகிறீர்கள். எலும்பில்லா நீர்வாழ் செந்துக்களைப்போல வாழ்கின்றீர்கள். உழவர், சக்கிலியர், புலையர் என்று இவர் போன்ற ஏழை ஜாதிகளுக்குள்ளே தொழில் செய்யும் ஆற்றல் இருக்கிறது. உங்களினும் பார்க்க அவர்களுக்குச் சுயநம்பிக்கை அதிகம் உண்டு. நீண்ட காலமாக ஒரு வார்த்தையும் பேசாது முயன்று தேசத்திலுள்ள செல்வமனைத்தினையும் அவர்கள் திரட்டி வைத்தார்கள். தங்களுடைய குறையைப்பற்றி அவர்கள் முறையிடவில்லை. விரைவிலே அவர்கள் உங்களிலும் பார்க்க உயர்ந்த நிலை அடைவார்கள். படிப்படியாக அவர்கள் கையிலே முதல் கூடிக்கொண்டு போகிறது. உங்களைப்போல் அவர்களுக்கு அதிக செலவில்லை. தற்கால நாகரீகம் உங்களுடைய பழக்க வழக்கங்களை மாற்றிவிட்டது. பொருள் தேடுவதற்கு எத்தனையோ

வழிகள் இன்னும் இருக்கின்றன. புது முறைகளைக் கையாளுபவர்கள் இன்மையால் அவ்வழிகள் திறக்கப் படாது கிடக்கின்றன. பொறுமையோடு சகித்துக் கொண்டிருந்த ஜனங்களை நீண்ட காலமாக நீங்கள் நெருக்கினீர்கள். தங்கள் வலிமையை அவர்கள் காட்டு தற்குரிய காலம் வந்துவிட்டது. பிழைப்புத் தேடுவதே ஜீவியத்தின் முழு நோக்கமாகக் கொண்ட நீங்கள் அழிந்து போவீர்கள்

சிஷ்: ஐய, மற்ற நாட்டவர்களைப்போலப் புது முறைகளைக் கையாளும் ஆற்றல் எங்களுக்கு இல்லா விடினும், இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார் எங் களுடைய புத்திக் கூர்மையினாலே வழி நடத்தப்படு கிறார்கள். வாழ்க்கைப் போராட்டத்திலே உயர்ந்த வகுப் பாரை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய ஆற்றலும் கல்வியறிவும் அவர்களுக்கு எங்கிருந்து வரும்?

சுவா: உங்களைப்போலச் சில நூல்களை அவர்கள் வாசித்தறியவில்லையென்றும் உடையாளவிலுள்ள நாகரி கத்தை விருத்தி பண்ணிக் கொள்ளவில்லையென்றும் நினைத்து விடாதீர்கள். இவற்றாலாகும் பயன் என்? எல்லாத் தேசங்களிலும் மக்கட் கூட்டத்தினருக்கு ஆதாரமாக உள்ளவர்கள் தொழில் செய்யும் மக்களே. தாழ்ந்த வகுப்பாரென்று நீங்கள் கருதுகிற இவர்கள் தொழில் செய்வதை நிறுத்திவிட்டால் உங்களுக்கு உடையும் உணவும் எங்கிருந்து வரும்? கல்கத்தா நகரத்திலுள்ள தோட்டிகள் ஒரு நாளைக்கு வேலை நிறுத்திவிட்டால் எல்லோருக்கும் அச்சமேற்படுகிறது; மூன்று நாட்களுக்கு வேலை நிறுத்திவிட்டாலோ, தொத்து வியாதிகள் தோன்றி நகரமுற்றையும் அழித்துவிடும். தொழில் செய்யும் மக்கள் தொழிலை நிறுத்திவிட்டால் உங்களுக்கு வேண்டிய உணவும் உடையும் ஒழிந்துபோகும். இத்தகையோரைத் தாழ்ந்த வகுப்பார் எனக்கூறி உங்களுடைய நாகரீக உயர்ச்சி யைப் பாராட்டுகிறீர்கள்!

வாழ்க்கைப் போராட்டத்தில் இரவு பகல் ஈடுபட்டிருந்தபடியால் கல்வியறிவை வளர்த்தற்குரிய சௌகரியங்கள் அவர்களுக்கு இல்லாது போயின. மனித புத்தியினால் இயக்கப்படுகிற இயந்திரங்களைப்போல இடையீடின்றி நீண்டகாலம் அவர்கள் வேலை செய்தார்கள். அவர்களுடைய வேலையினால் எய்திய பிரயோசனத்தின் பெரும் பாகத்தைக் கல்வி கற்ற வகுப்பார் அனுபவித்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சி எல்லாத் தேசங்களிலும் உள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பார் இவ்வுண்மையை உணர்ந்து கண்விழித்து எழுகின்றார்கள். அனைவரும் ஒன்றுகூடி இத்தகைய நிலைமையை எதிர்த்துத் தம் உரிமையைப்பெற முயலுகின்றார்கள். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள பொதுமக்களே முதலிற் கண்விழித் தெழுந்து இவ்வெதிர்ப்பைத் தொடங்கினார்கள். இத்தகைய விழிப்பு இந்தியாவிலும் இருக்கிறது என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்நாட்களில் தாழ்ந்த வகுப்பார் வேலை நிறுத்தம் செய்யும் இயக்கம் எவ்விடத்தும் பரவி வருவது இதற்கு ஒரு சாட்சி ஆகும். உயர்ந்த வகுப்பார் எவ்வளவு முயன்று பார்ப்பினும் தாழ்ந்த வகுப்பாரை இனிமேல் அடக்கி வைத்தல் முடியாது. தாழ்ந்த வகுப்பாருக்கு உரிமையாகிய நலங்களை அடையச் செய்வதுவே உயர்ந்த வகுப்பார் தாமும் நன்மை யடைவதற்குத் தகுந்த மார்க்கமாகும்.

ஆதலினாலே, பொது மக்களிடத்துக் கல்வியறிவைப் பரப்புவதற்கு நீங்களெல்லாம் முயல்வீர்களாக. அவர்களை நோக்கி "நீங்கள் எங்களுக்கு உடன்பிறந்தார். எங்கள் உதிரமும் உங்கள் உதிரமும் ஒன்று. நாங்கள் உங்கள் மீது அன்பு பாராட்டுகிறோம். ஒரு பொழுதும் மாறுபட மாட்டோம்" என்று சொல்லுவீர்களாக. இவ்வுண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளும்படி செய்வீர்களாக. இத்தகைய இரக்கத்தை நீங்கள் காட்டுவீர்களாயின், தொழில் செய்வ

தற்கு அவர்கள் உள்ளத்திலே உள்ள ஊக்கம் நூறு மடங்காக அதிகப்படும். பௌதிக சாஸ்திர நூல்களின் உதவியைக் கொண்டு அவர்களுடைய அறிவை வளர்ப்பீர்களாக. உலக சரித்திரம், பூகோள சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம், இலக்கியம் என்னும் இவற்றை அவர்களுக்குக் கற்பிப்பீர்களாக. இவற்றோடுகூட ஆழ்ந்த சமய உண்மைகளையும் அறிவிப்பீர்களாக. இத்தகைய கல்விக்குப் பிரதி உபகாரமுண்டு. இதனால் ஆசிரியருடைய வறுமை அகன்று போகும். இங்ஙனம் கொடுக்கல் வாங்கல் செய்வதனால் இருபாலார்க்கும் நட்புத் தொடர்பு ஏற்படும்.

சிஷ்: ஆனால், ஐய, கல்வியறிவு பரவுவதோடு கால கதியிலே அவர்களும் எங்களைப்போல மூளையுள்ளவர்களாகித் தொழில் செய்யாது சோம்புத்தனம் ஏற்பட்டு, தமக்கு அடுத்தபடியாக இருக்கின்றவர்களுடைய தொழிலினால் எய்தும் பயனைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் ஆவார்களே.

சுவா: ஏன் அப்படியாக வேண்டும்? அறிவு மேம்படினும் குயவன் குயவனாகவும், செம்படவன் செம்படவனாகவும், உழுதுண்போன் உழுதுண்போனாகவும் இருத்தல் கூடுமே. தங்களுடைய குலத்தொழிலை அவர்கள் ஏன் விடவேண்டும்? **ஸஹஜம் கர்மகௌந்தேய ஸதோஷமபி நத்யஜேத்** "நீ எந்தத் தொழிலுக்கு உரியவனகப் பிறந்தாயோ, அந்தத் தொழில் குற்றத்தோடு கூடியிருப்பினும் அதனை விட்டுவிடாதே." இவ்வண்ணம் அவர்களைப் பயிற்றினால் அவர்களேன் தங்களுடைய குலத்தொழிலை விடுகிறார்கள்? தங்கள் குலத்தொழிலைச் செம்மையாகச் செய்வதற்கு அறிவை உபயோகப்படுத்துவார்கள். கால கதியிலே அவர்களுக்குள்ளே ஞான தீரர்கள் பலர் தோற்றுவார்கள். உயர்ந்த வகுப்பாராகிய நீங்கள் அவர்களை உங்களோடு சேர்த்துக் கொள்வீர்கள். வீரம் படைத்த அரசராகிய விசுவாமித்ரரைப் பிராம்மணர் பிரம்மரிஷியாகக் கொண்டார்

கள். இந்தச் செயலுக்காக க்ஷத்திரிய வம்சம் முழுவதும் பிராம்மணரிடத்து எவ்வளவோ நன்றி பாராட்டுகிறது. அத்தகைய இரக்கத்தினாலும் கூட்டுறவினாலும் பறவைகளும் விலங்குகளும் அன்புடையானுக்கு உரிமையாகின்றன — மனிதர்களைப் பற்றிப் பேசுவானேன்?

சிஷ்: ஐய, தேவரீர் சொல்லுவது உண்மையே. அங்ஙனமாயினும் உயர்ந்த வகுப்பாருக்கும் தாழ்ந்த வகுப்பாருக்குமிடையே பெரியதொரு பிளவு இருப்பது போல் தோன்றுகிறது. நமது இந்தியா தேசத்திலே உயர்ந்த வகுப்பாரைத் தாழ்ந்த வகுப்பாரிடத்து இரக்கங் காட்டும்படி செய்வது கஷ்டமான காரியம் போல் காணப்படுகிறது.

சுவா: அங்ஙனம் செய்யாவிடின் உயர்ந்த வகுப்பாராகிய நீங்கள் நலமடைவதற்கு வழியில்லை. இதுகாறும் நடந்து வந்தது போலவே வகுப்புச் சச்சரவுகளினாலும் சண்டைகளினாலும் நாசமடைவீர்கள். பொதுமக்கள் விழித்தெழுந்தவுடன் இதுகாறும் நீங்கள் தங்களை நெருக்கினீர்கள் என்பதை யறிந்து பஞ்சுத் திரளைப் போல உங்களை ஊதி யகற்றிவிடுவார்கள். உங்களுடைய நாகரீகத்தை அமைத்தவர்கள் அவர்கள்; அவர்களே அந்த நாகரீகத்தை இழுத்து ஒருபுறமாக அகற்றிவிடுவார்கள். பழைமையாகிய ரோமாபுரத்து நாகரீகம் கோல் என்னும் ஜாதியாருடைய எதிர்ப்பினாலே தாக்குண்டு துகளாகப் போய்விட்டதை எண்ணிப்பார்! ஆதலினாலே தாழ்ந்த வகுப்பாருக்குக் கல்வியையும் நாகரீகத்தையும் தந்து தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளும்படி செய்வீர்களாக. அவர்கள் விழித்துக்கொள்ளும் நாள் எப்பொழுதாவது அவசியமாக வந்தே தீரும் — அங்ஙனம் விழித்துக் கொள்ளும்போது நீங்கள் செய்த நன்மையை மறந்துபோகாது எப்பொழுதும் உங்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

இங்ஙனம் சம்பாஷித்த பின்னர்ச் சுவாமிஜி சிஷ்யரை நோக்கிப் பின்வருமாறு சொல்வார்: "இவையெல்

லாம் ஒருபாலாகக் கிடக்கட்டும்—வாராய், நீ எவ்வகையான நிர்மானங் கொண்டிருக்கிறாய் என்பதை எனக்குச் சொல் ஏதாவது செய்; அஃது எதுவாயினும் ஆகுக. ஒன்று, ஒரு தொழில் பார். அல்லாவிடில் **ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாயச** என்றபடி உலகத்தின் நலத்துக்காகவும் நீ முக்தியடைவதன் பொருட்டாகவும் உண்மைச் சன்யாச மார்க்கத்திலே எங்களைப்போலப் புகுவாயாக. பின்பு கூறப்பட்ட மார்க்கந்தான் யாவற்றினும் சிறந்தது. பயனற்ற இல்லொழுக்க வாழ்வதனால் வந்த நன்மையென்ன! ஜீவியத்திலே யாவும் கழிந்து போகும் தன்மையன என்பதனை நீ உணர்ந்து கொண்டாய். **நளினீ தளகத ஜலமதிதரளம் தத்வஜ்ஜீவன மதிசய சபலம்** 'வாழ்க்கையோ தாமரையிலையில் தண்ணீர் போல நிலைபேறற்றது.' ஆதலினாலே ஆத்ம ஞானத்தைப் பெற வேண்டுமெனும் ஊக்கம் உனக்கு இருந்தால் தாமதப்படாது உடனே முன் வருவாயாக. **யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்** 'எந்த நாளில் உனக்கு வெறுப்புத் தோன்றுகிறதோ அந்த நாளிலே உலகத்தைத் துறந்து சன்யாசம் பெற்றுக் கொள்வாயாக.'* உன்னுடைய ஜீவியத்தை அர்ப்பணம் செய்து மக்களுடைய நலத்தைக் கருதி ஒவ்வொருவருடைய வீட்டண்டையும் போய் **உத்திஷ்ட ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத** 'எழுந்திருங்கள், விழிப்படையுங்கள், கருதிய கருமம் கைகூடும் வரை ஓயாது உழையுங்கள்' என்னும் அச்சமின்மையோடு கூடிய இந்நற்செய்தியை எவ்விடத்தும் பரப்புவாயாக"

(20)

[இடம்: கல்கத்தா, காலம்: 1898-ஆம் ஆண்டு]

ஒருநாட் பிற்பகல் சகோதரி நிவேதிதாவும் சுவாமி யோகாநந்தரும் தம்மோடு உடன்வரச் சுவாமிஜி அலிப்பூரிலுள்ள விலங்குவாழ் காட்சிப் பூஞ்சோலைக்கு வந்த

*ஜாபாலோபநிஷத்.

னர். பூஞ்சோலை யதிபராகிய ராய்ராம் பிரஹ்மசங்யால் பகதூர் அனைவரையும் அன்பினோடு வரவேற்று, சோலையைச் சுற்றி யழைத்துச் சென்றனர். பல்வேறு வகையனவாகிய மிருகங்களையும் பார்த்துக்கொண்டு செல்லும் பொழுது சுவாமிஜி டார்வின் என்னும் சாஸ்திர பண்டிதர் வகுத்துக் கூறிய பரிணாமவாதக் கொள்கையைப் பற்றிப் பேச நேர்ந்தது. பாம்புகள் உறைந்த சாலைக்குச் சென்றபொழுது அங்கிருந்த பெரியதொரு மலைப்பாம்பைச் சுட்டிக்காட்டி, "உடலிலே கங்கணம் போன்ற புள்ளிகளையுடையசர்ப்பத்திலிருந்து காலகதியிலே ஆமை உண்டானது. இப்பாம்பு அசைவின்றி நீண்ட காலம் ஒரே இடத்தில் இருந்தமையினால் அதனுடைய முதுகிலே தடித்த ஓடு உண்டாகிவிட்டது" என்றார். பின்னும் நகைக் குறிப்போடு சிஷ்யரை நோக்கி, "நீ ஆமை உண்கின்றாய் அல்லவா? டார்வின் பண்டிதருடைய கொள்கைப்படி இந்தப் பாம்பு தானே காலகதியில் உருத்திரிந்து ஆமையாய்விட்டது. ஆதலால் நீ பாம்பு தின்கின்றவன் ஆகின்றாய்" என்றார். சிஷ்யர் மறுமாற்றமாக, "ஐய, ஒரு பிராணி மற்றொன்றாகப் பரிணமித்தால் அது தனது முந்திய உருவத்தையும் பழக்க வழக்கங்களையும் இழந்து போகின்றது. ஆதலால் ஆமை உண்பது பாம்பு உண்பதற்குச் சரியாகும் என்று தேவரீர் சொல்லுவது எங்ஙனம் பொருத்தமாகும்?" என்றார்.

இந்த மறுமாற்றத்தைக் கேட்டோரனைவரும் நகைத்தனர். இன்னும் சில காட்சிகளைப் பார்த்துவிட்டுச் சுவாமிஜி சோலையிலுள்ள ராம் பிரம பாபுவினுடைய இல்லத்துக்குச் சென்று உடன்வந்தாரோடு தேநீர் அருந்தினார். சிஷ்யர் சகோதரி நிவேதிதா தொட்ட சிற்றுண்டி தேநீரை அருந்துவதற்கும் ஒரே பலகையில் அமருவதற்கும் சிறிது கூசி நிற்பதைக்கண்டு சுவாமிஜி பலமுறையும் அங்ஙனம் செய்யுமாறு பணித்து ஒரு பாத்திரத்தில் இருந்த நீரைத் தாம் சிறிது அருந்திவிட்டு எஞ்சியதை அருந்துமாறு சிஷ்யரிடம் கொடுத்தார். அதன்பின் டார்

வின் பண்டிதருடைய பரிணாமவாதக் கொள்கையைப் பற்றிச் சம்பாஷணை நடந்தது.

ராம் பிரம பாபு: டார்வின் பண்டிதருடைய பரிணாம வாதக் கொள்கையைப் பற்றியும் அவர் காட்டுகிற நியாயங்களைப் பற்றியும் தேவரீருடைய அபிப்பிராயம் என்ன?

சுவா: டார்வின் பண்டிதருடைய கொள்கை சரியென வைத்துக்கொண்டாலும் உருத் திரிவதற்கு அவர் காட்டுகிற காரணங்கள் முடிந்த நீர்மையவெனக் கொள்ளுவதற்கில்லை.

ராம் பிரம பாபு: பண்டை நாளிலிருந்த நமது அறிஞர்கள் இந்த விஷயத்தை ஆராய்ந்திருக்கிறார்களா?

சுவா: சாங்கிய தரிசனத்திலே இந்த விஷயம் நன்றாக ஆராயப்பட்டிருக்கிறது. பண்டை நாளிலிருந்த பாரத நாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் பரிணாம வாதத்தைப்பற்றி முடிந்த முடிபாகிய கொள்கைகளை உரைத்திருக்கிறார்கள்.

ராம் பிரம பாபு: சிலவாய சொற்களிலே அம்முடிவு சொல்லப்படுவதாயின் அதனைக் கேட்க நான் பெரிதும் விரும்புகிறேன்.

சுவா: "வாழ்க்கைப் போராட்டம்," "தகுதி மிக்கது தப்பிப் பிழைத்தல்," "இயற்கைத் தெரிவு" என்று இத்தகைய கூறுபாடுகளாக மேலைத்தேச சாஸ்திர பண்டிதர்கள் கீழாகிய ஓரினப் பிராணி மேலாகிய ஓரினத்தை அடைவதைக் குறித்துக் காட்டியிருக்கிற காரணங்களை நீ வாசித்திருக்கிறாய் என்று எண்ணுகிறேன். இவற்றில் எவையேனும் காரணம் எனப் பதஞ்சலியுடைய நூலிலே கூறப்படவில்லை. ஓரினம் மற்றோரினமாக மாறுதலடைவது இயற்கையினது நிரம்புதலினால் **ப்ரக்ருத்யாபூராத்** ஆகிறதெனப் பதஞ்சலி முனிவர் கூறுவர். தடைகளுக்கு எதிராக இடையீடின்றிப் போராடுவதனால் இஃது எய்துவதில்லை. போட்டி

யும் போராட்டமும் ஜீவன் தனக்குரிய பரிபூரண நிலையை அடைவதற்குத் தடையா யிருக்கின்றன என்பது எனது கருத்து. ஒரு பிராணியினுடைய உயர்வு ஆயிரம் பிராணிகளை அழிப்பதனால் உண்டாகுவதெனின் இத்தகைய மாற்றம் உலகத்துக்கு ஒரு சிறிதும் நலம் பயவாததெனக் கொள்ளல்வேண்டும். உடல் நலத்துக்கு அது வாய்ப்புடையது என ஒருவாறு கொண்டாலும் ஆன்ம அபிவிருத்திக்கு அஃது ஒரு பெருந்தடையாம் எனக் கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. நமது நாட்டுத் தத்துவ சாஸ்திரிகளின் கொள்கைப்படி ஒவ்வொரு ஜீவனும் பரிபூரண ஆத்ம சொரூபமாகும். பல்வேறு உருவமாக இயற்கையிற் காணப்படுவது இவ்வாத்ம சொரூபத்தின் விளக்க வேறுபாட்டினால் ஆகின்றது. உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்குத் தடையா யிருப்பனவற்றை நீக்கிய அக்கணத்தே ஆத்ம சொரூபம் பரிபூரணமாக வெளிப்பட்டுத் தோன்றும். இயற்கையினுடைய பரிணமிப்பிலே கீழாகிய படிகளிலே நேரிடுவது எதுவாயினும் ஆகுக. உயர்ந்த படிகளிலே இடையிடின்றிய போராட்டத்தினாலே தடைகளைக் கடத்தல் வேண்டுமென்பது உண்மையாகாது கல்வியினாலும் ஒழுக்கத்தினாலும் மனத்தை ஒருவழிப்படுத்துவதினாலும் தியானத்தினாலும் இவை யாவற்றினும் மேலாகத் தன்னல மறுப்பினாலும் ஆத்ம சொரூபத்தினுடைய விளக்கமானது நிறைவு பெறுகின்றதென்பதும் தடைகள் நீங்கிப் போகின்றன வென்பதும் வெளிப்படை. ஆதலினாலே தடைகளை ஆத்ம விளக்கத்தினது காரியம் என்றாது காரணமெனக் கூறுவதும், இயற்கையினது அற்புத வேறுபாட்டுக்கு அவை உதவியாக இருக்கின்றனவென்பதும் நியாயத்திற்குப் பொருத்தமான முடிபில்லை. தீங்கிழைப்போர் ஆயிரவரைக் கொல்வதனால் உலகிலிருந்து தீங்கை அகற்ற முயலுவது உலகிலுள்ள தீங்கை மிகுதிப்படுத்துவதாகும். நற்போதனையிலே மக்களைத் தீங்கு செய்வதினின்று விலகும்படி செய்தால் உலகி

னின்று நீங்கு அகன்றுவிடும். மேலைத் தேசத்தார் கூறு கிற வாழ்க்கைப் போராட்டக் கொள்கை எவ்வளவு பயங்கரமானதெனக் கண்டு கொண்டீரா ?

சுவாமிஜியினுடைய வாசகங்களைக் கேட்டு அதிசய மடைந்த ராம் பிரம பாபு பின்வருமாறு சொல்லுவார்:— "தேவரீரைப்போல கிழக்குத் தேசத்துக் கலை ஞானங் களிலும் மேற்குத் தேசத்துக் கலைஞானங்களிலும் பாண் டித்திய மடைந்தோர் நமது நாட்டுக்கு இக்காலத்திலே மிகுதியும் வேண்டப்படுகின்றனர். ஒரே பக்கத்தை மாத்திரம் கண்டு சண்டையிடுகின்ற வித்தியார்த்திக ளுடைய பிழையை எடுத்துக்காட்டக் கூடியவர் அத் தகையினரே. பரிணமவாதக் கொள்கையைப்பற்றி தேவரீர் சொல்லிய புதிய விளக்கத்தைக் கேட்டு நான் மிகவும் மனமகிழ்ச்சி யடைகின்றேன்.

சிறிது நேரங்கழித்துச் சுவாமிஜியும் பரிசனர்களும் பாக் பஜாருக்குப் புறப்பட்டு ஏறக்குறைய எட்டு மணி யளவிலே பலராம் வசுவுடைய மாளிகையை யடைந் தார்கள்.

சிறிது நேரம் ஆறியிருந்து சுவாமிஜி இளைப்பாறு மண்டபத்துக்கு வந்தார். குழுமியிருந்த அனைவரும் விலங்கு வாழ் காட்சிப் பூஞ்சோலையிலே நடந்த சம்பா ஷணையைக் கேட்க ஆவலுற்றவர்களா யிருந்தனர். சுவாமிஜி மண்டபத்துக்குள் வந்தவுடனே குழுமியிருந் தவர்களின் சார்பாக சிஷ்யர் இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லும்படி வேண்டினார்.

சிஷ் : ஐய, விலங்கு வாழ் காட்சிப் பூஞ்சோலை யிலே பரிணமவாதக் கொள்கையைப்பற்றித் தேவரீர் சொல்லியவற்றை நான் முற்றிலும் உணர்ந்துகொள்ள வில்லை. தயைசெய்து இலகுவாகிய மொழிகளிலே மறு படியும் சொல்லியருள வேண்டும்.

சுவா : நீ அறிந்துகொள்ள முடியாதிருந்த விஷ யங்கள் யாவை ?

சிஷ்: புறம்பேயுள்ள சக்திகளை எதிர்த்துப் போராட்டமிடுவது உயிர் வாழ்க்கைக்கு அறிகுறியெனவும், உயர்நிலை யடைவதற்கு முதற்படி யெனவும், தேவரீர் எங்களுக்குப் பல முறை சொல்லியதுண்டு. இன்று சொன்ன வாசகம் அதற்கு நேர் விரோதம் போலக் காணப்படுகின்றது.

சுவா: நான் ஏன் வேறுபாடாகப் பேசவேண்டும். நான் பேசியவற்றை நீ அறிந்துகொள்ளவில்லை. விலங்கு வருக்கங்களிடையே "வாழ்க்கைப் போராட்டம்" "தகுதியுள்ளவை தப்பிப் பிழைத்தல்" முதலிய விதிகள் காணப்படுகின்றன. ஆதலினால் டார்வின் பண்டிதருடைய கொள்கை ஓர் அளவுக்குச் சரியான தென்னலாம். பகுத்தறிவு விளங்குகின்ற மனித வர்க்கத்தினிடையே இவற்றுக்கு நேர் விரோதமான விதி நிகழுவதைக் காணலாம். உதாரணமாக உண்மையிற் பெரியாரென நாம் கொள்ளுகிற ஒழுக்க மிக்காரிடத்து வெளிப் போராட்டம் ஒன்றினையும் நாம் காணுவதில்லை. விலங்கு வருக்கத்தினிடையே இயற்கை யறிவு அமைந்திருக்கின்றது; ஒரு மனிதன் எவ்வளவு உயர்வடைகிறானோ அவ்வளவுக்கு அவனிடத்திற் பகுத்தறிவு காணப்படும். ஆதலினாலே பகுத்தறிவுள்ள மனித வருக்கத்தினிடையே பிராணி வருக்கத்தைப் போலப் பிறரை யழித்து விடுவதனால் உயர்வு வந்தெய்தமாட்டாது. தன்னல மறுப்பாகிய தியாகத்தினால் மாத்திரமே மனிதன் மிக உயர்வாகிய நிலையை அடைகின்றான். ஒருவன் பிறர் பொருட்டாக எவ்வளவு தியாகத்தைச் செய்கின்றானோ அவ்வளவுக்கு மக்கட் கூட்டத்தாரால் உயர்வாகக் கருதப்படுவான்; விலங்கினங்களும் மிகக் குறைந்த வருக்கத்தினிடையே எந்த மிருகமானது வேறு பல மிருகங்களை அழித்துவிடும் ஆற்றலுடையதாய் இருக்கின்றதோ அதுவே பலசாலியெனக் கருதப்படும் வாழ்க்கைப் போராட்ட விதியை மனித வருக்கத்திற்கும் விலங்கு வருக்கத்திற்கும் பெரு விதியாகக்

கொள்ளுதல் கூடாது. மனிதனுடைய போராட்டம் மானத பூமியில் நிகழுவது. மனத்தை அடக்கி யாளுகிற அளவே மனிதனுடைய பெருமைக்கு அளவாகும். மனத்தினுடைய வியாபாரங்கள் அனைத்தும் அடங்கி அமைதி நிலையிலிருக்கும்பொழுது ஆத்மன் தனது பிரகாசத்தை வெளிப்படுத்தும். தூல சரீரத்தைக் காப்பாற்றும்பொருட்டு விலங்கு வருக்கங்களிடையே நிகழுகின்ற முயற்சிகளனைத்தும் மனிதனால் தனது மனத்தை யடக்கி யாளுவதற்கும் உபயோகிக்கப்படுகின்றது. உயிருள்ள விருக்ஷத்தையும் தடாகத்திலே காணப்படுகிற அதன் நிழலையும் போல விலங்கு வருக்கத்திலும் மனித வருக்கத்திலும் இரு வேறு போராட்டம் நிகழுகிறது.

சிஷ்: அப்படியாயின் தேகாப்பியாச முதலியவற்றைச் செய்யும்படி தேவரீர் எங்களுக்கு அடிக்கடி சொல்லுவது எதற்காக?

சுவா: நன்று, நன்று. நீங்கள் உங்களை மனிதரென்று கருதுகின்றீர்களா? கொஞ்சம்போல அறிவு உண்டு. அவ்வளவுதான். சரீரம் வலிமையுடையதாய் இருந்தாலன்றி மனத்தோடு எப்படிப் போராடுவீர்கள்? உலகிலே மிக உன்னத நிலைக்குரிய மனிதனென்னும் பேருக்கு நீங்கள் தகுதியுடையவர்களா? உண்பதும் உறங்குவதும் புலனுகர்ச்சியும் அல்லாது உங்களுக்கு வேறு யாது உளது? நீங்கள் விலங்கு நீர்மை அடையாத வரையில் அதிருஷ்டசாலிகள்தான். "தனக்குரிய மதிப்பினை உணர்ந்தவனே மானிடன் எனப்படுவான்" எனப் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுவதுண்டு. மாறி மாறிப் பிறந்திறந்து உழன்று மேற்கதி ஒன்றுக்கும் செல்லாத பிராணிகளெனச் சமய சாத்திரங்கள் சொல்லுகிற ஊர்வன என்னும் சீவ பேதத்துக்கு நீங்கள் எடுத்துக்காட்டாக இருக்கின்றீர்கள். ஒருவர்மீதொருவர் பொறாமைப்பட்டு வாழுகின்றீர்கள். அந்நியர் கண்ணுக்கு அருவருப்பைத் தரும்பொருள்களாயிருக்கின்றீர்

கள். நீங்கள் விலங்குகள்; ஆதலால் போராட்டமிடும்படி நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். வீண் மனோராஜ்யங்களை விட்டுவிட்டு ஆறுதலாக நீங்கள் நாடோறும் செய்கிற செயல்களையும் வாழ்க்கை முறைகளையும் சீர்தூக்கிப் பாருங்கள். விலங்கினத்துக்கும் மனித வகுப்புக்கும் இடைப்பட்டது உங்களுடைய நிலை என்பதை அப்பொழுது காண்பீர்கள். முதலிலே தேகத்தை வலிபடுத்துங்கள். அப்பொழுதுதான் மனததை அடக்க உங்களால் முடியும் **நாயமாத்மா பலஹீனேன லப்ய:** "இந்த ஆத்மன் பலமற்றவனால் அடையப்படுவதில்லை."

சிஷ்: ஆனால் ஐயா! பாஷ்யக்காரராகிய சங்கரர் "பலஹீனன்" என்பதற்குப் "பிரம்மசரியம் இல்லாதவன்" என்று பொருள் கொள்ளுகிறாரே?

சுவா: அவர் எதனையாவது சொல்லட்டும்; உடல் வலியில்லாதவன் ஆத்ம தரிசனத்தை அடையமாட்டான் என்று நான் சொல்கிறேன்.

சிஷ்: ஆனால் மூடர்கள் பலர் வலுவுள்ள சரீரத்தையுடையவர்களாய் இருக்கிறார்களே.

சுவா: நல்ல எண்ணங்களை அவர்களுக்கு ஒரு முறை கொடுத்துவிட்டால் உடல்வலி யற்றவர்களிலும் பார்க்க விரைவாக அவர்கள் அவற்றைக் காரியப்படுத்துவார்கள். வலியற்றவன் காமத்தையும் கோபத்தையும் அடக்க முடியாதிருப்பதை நீ காணவில்லையா? மெலிந்த சரீரமுள்ளவர்கள் விரைவிலே கோபமுறுவதையும் காமத்தின் வசப்படுவதையும் நீ பார்த்திருக்கலாம்.

சிஷ்: ஆனால் இந்த விதிக்கு விலக்காக உள்ளவர்களையும் நாம் காணுகின்றோம்.

சுவா: இல்லையென்று சொன்னவர் யார்? ஒரு மனிதன் மனத்தை யடக்கப் பயின்று கொண்டானானால் அதன்பின் அவனுடைய உடலம் வலியுள்ளதாயிருப்பினும் மெலிந்து போய்விடினும் ஒன்றே. உடலம்

நல்ல நிலையில் இருப்பினன்றி ஆத்ம ஞானத்தை அடைய முயலுதல் கைகூடாத காரியம் என்பதுவே யாம் அறிந்துகொள்ள வேண்டியது. "உடலத்திலே சிறிதேனும் குறைபாடுடையவன் சாக்ஷாத்காரத்தை யடையமாட்டான்" என ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுவதுண்டு.

சுவாமிஜி ஆர்வமற்றிருப்பதைக்கண்டு சிஷ்யர் விஷயத்தைத் தொடர்ந்து பேசாமல் சுவாமிஜியி னுடைய முடிவை முடிபாக ஏற்றுக்கொண்டார். சிறிது நேரம் கழித்துச் சுவாமிஜி சுமுகமாயிருந்தவர்களை நோக்கி, "கேட்டீர்களா, இன்று நமது 'புரோகிதர்' நிவேதிதா தீண்டிய உணவை உண்டு விட்டார், அவள் தீண்டிய தின்பண்டங்களை உண்டது காரியமில்லை" என்று, பின்னர் சிஷ்யரை நோக்கி, "அவள் தீண்டிய தண்ணீரை நீ எப்படிப் பருகினாய்?" என்றார்.

சிஷ் : ஐயா, தேவரீருடைய கட்டளைப்படியே யான் அங்ஙனம் செய்தேன். குருவினுடைய கட்ட ளைக்கமைந்து யான் எதனையும் செய்வேன். முதலிலே நான் நீரைப் பருக விரும்பவில்லை. தேவரீர் பருகிவிட் டுத் தந்தபொழுது பிரசாதமாக நான் உட்கொண்டேன்.

சுவா : நன்று, ஆனால் இன்றோடே உன்னுடைய சாதி போய்விட்டது. இனிமேல் உன்னை ஒருவரும் பிராம்மணனாகக் கருதி மரியாதை செய்யமாட்டார்கள்.

சிஷ் : இல்லாவிட்டாற் போகிறது. தேவரீருடைய கட்டளையாயின் நான் பறையருடைய மனையிலும் அன் னம் உண்பேன்.

சுவாமிஜியினுடைய வார்த்தைகளைக் கேட்டுச் சமு கமா யிருந்தார் அனைவரும் உவகையுற்றுச் சிரித்தார் கள்.

சம்பாஷணை அர்த்த ராத்திரிவரையும் நிகழ்ந்தது. சிஷ்யர் தம்முடைய மனையை யடைந்தபொழுது

கதவு தாழிடப்பட்டிருக்கக் கண்டு புறத்திண்ணையிலே இராப்பொழுதைக் கழித்தார்.

காலசக்கரத்தின் மாறு வியக்கத்திலே தோன்றுவன யாவும் மறைந்து போகின்றன. சுவாமிஜியும் சுவாமி யோகாநந்தரும், சகோதரி நிவேதிதாவும் இவ்வுலக வாழ்வினின்று அகன்றுபோய் விட்டார்கள். அவர்களுடைய தூயஞாபகம் மாத்திரம் நம்மிடையே நிலைபெற்றிருக்கிறது ; அத்தகைய ஞாபகக் குறிகளை இயன்றவரை யெழுதி வைப்பதனைச் சிஷ்யர் தமக்குப் பெரியதொரு ஆசீர்வாதமாகக் கொள்ளுகிறார்.

(21)

[இடம் : பேலூர் திருமடம். காலம் : 1898-ம் ஆண்டு]

சிஷ்யர் இன்று மடத்திற்கு வந்திருந்தார். இப்பொழுது மடம் நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலை வீட்டிலே அமைக்கப்பட்டிருந்தது. இப்பொழுதுள்ள திருமடம் அமைந்திருக்கும் நிலமானது சமீபகாலத்தில் விலைக்கு வாங்கப்பட்டிருந்தது. சுவாமி ஏறக்குறைய நான்கு மணி யளவிலே சிஷ்யரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு திருமடத்துக்குரிய புது நிலத்தைப் பார்வையிடும் நோக்கமாக வெளியே போயிருந்தார். அந்நாட்களில் அந்நிலமானது சிறு காடு அடர்ந்ததாய், வட பக்கத்திலே செங்கல்லினாற் கட்டப்பட்ட ஓரடுக்கு வீடொன்றினை உடையதாய் இருந்தது. சுவாமிஜி நடந்துகொண்டே, எதிர்காலத்தில் வரப்போகிற திருமடத்தினுடைய செய்கை முறைகளைப்பற்றியும் விதி நியமனங்களைப்பற்றியும் உரையாடினார்.

குறித்த வீட்டின் கிழக்குப் பக்கத்து வழித்திண்ணையை அடைந்தவுடனே சுவாமிஜி பின்வருமாறு சொல்லுவாராயினர் : " சாதுக்கள் வாசம் பண்ணுவதற்கு உரிய இடம் இவ்விடமாகும். இந்த மடத்தினை ஆன்மலாப சாதனைகளுக்குரிய சிறந்த நிலையமாகவும் அறிவை

விருத்தி செய்வதற்குரிய கழகமாகவும் செய்தல் வேண்டும் என்பது எனது உள்ளக் கிடக்கை. இங்கிருந்து உற்பத்தியாகின்ற சக்தி வெள்ளமானது உலகனைத்தினும் பிரவாகித்து மக்களுடைய வாழ்க்கையை நல்ல வழிகளிலே செலுத்தும். ஞானம், பக்தி, யோகம், கருமம் என்னும் இவற்றைச் சமரசப்படுத்துகின்ற உயர்ந்த கொள்கைகள் இவ்விடத்திலிருந்து உற்பத்தியாவன; இத்திருமடத்திலுள்ள மக்கள் கருதிய மாத்திரத்தே இங்கிருந்து பூகோளத்தின் மிகச் சேய்மையாகிய பாகங்களுக்கெல்லாம் உயிர்க்கு உறுதி பயக்கும் வலிமையானது பரவிச் செல்லும். காலகதியிலே ஆத்ம சம்பத்தை அடையும் பொருட்டுத் தேடுவார் அனைவரும் இவ்விடத்திற்கு வந்து கூடுவார்கள் — இத்தகைய எண்ணங்கள் ஓராயிரம் என்னுடைய உள்ளத்திலே இப்பொழுது எழுகின்றன.

"மடத்திற்குத் தென்பாலிலே அதோ தோன்றுகின்ற நிலப் பரப்பிருக்கின்றதே, அவ்விடத்தில் இலக்கணம், தத்துவ சாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம், காவியம், அலங்காரம், சுருதி, பக்தி சாஸ்திரம், ஆங்கிலம் என்னுமிவற்றைக் கற்பதற்கு உரிய கல்விக் கழகமானது அமைக்கப்படும்; இத்தகைய வித்தியாலயம் முன்னாளிலிருந்த டோல்களை (சமஸ்கிருத பாடசாலைகளை)ப் போல அமைக்கப்படும். பால்யமிருந்து பிரம்மச்சரியத்தை அனுஷ்டித்த சிறுவர்கள் இங்கு வசித்துச் சமய சாஸ்திரங்களை ஆராய்வார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவும் உடையும் மடத்திலிருந்து கொடுக்கப்படும். ஐந்து வருஷம் பிரம்மச்சரிய வாழ்க்கையிற் பயின்ற பின்னர் அவர்கள் விரும்பினால் தங்களது இல்லத்திற்குச் சென்று இல்வாழ்க்கை நடத்தலாம்; திருமடத்திலுள்ள பெரியோர்களுடைய அநுமதியைப் பெற்றுத் துறவு பூணினும் பூணலாம். ஒழுக்கம் தவறி நடக்கிற பிரம்மச்சாரிகளை உடனே வெளியில் அனுப்பிவிடுவது திருமடத்துக் காரியகர்த்தர்களுடைய கடமையாகும். சாதி சமய

வேறுபாடின்றி இங்கே அனைவருக்கும் கல்வி கற்பிக்கப் படும். இதற்குத் தடை கூறுவோர் உட்புகுவதற்கு அனுமதி பெறார். தங்களுடைய சாதிக்கியைந்த கொள்கைகளைப் பாதுகாத்துக்கொள்ள விரும்பினோர் உணவு முதலியவற்றிற்கு வேறாகிய ஏற்பாட்டைத் தாமாகவே செய்துகொள்ளுதல் வேண்டும். அவர்கள் மற்றவர்களோடு பாடம் கேட்பதற்கு மாத்திரம் உரிமை யுடையவராவர். மடத்துக் காரியகர்த்தர்கள் இவர் களுடைய ஒழுக்கத்தையும் விழிப்பாகப் பார்த்து வரு வார்கள். இங்குப் பயிற்றப்பட்டவர் மாத்திரமே சந்நியாசம் பெறுவதற்கு உரிமையுடையவராவார். படிப் படியாக இத்திருமடமானது இத்தகைய கைங்கரியத் தைச் செய்யுமாயின் அது மிக நன்றாகுமல்லவா ?"

சிஷ் : குருவினுடைய மனையிலே பிரம்மச்சரிய வாழ்க்கை நடத்துகிற பழைய முறையை மீட்டும் இத் தேசத்தில் நிறுவுவது தேவரீருடைய கருத்தா ?

சுவா : ஆம், அப்படியே. தற்காலக் கல்வி முறை யானது பிரம்ம ஞானத்தை அடைவதற்குரிய சௌகரி யங்களைத் தருகின்றதில்லை. முன்னுளிற்போல பிரம்மச் சரிய ஆசிரமங்களை நாம் ஏற்படுத்த வேண்டும். ஆனாலும் அவற்றிற்குச் சற்றே விரிவாக அடிகோலிக் கொள்ளுதல் வேண்டும். அதாவது தற்காலத்திற்கு இயைந்த வண் ணம் பல திறப்பட்ட மாறுதல்களைச் சேர்த்துக்கொள்ளு தல் வேண்டும். இதைப்பற்றிப் பின்னர் பேசுகின்றேன்.

மடத்திற்குத் தெற்கே கிடக்கின்ற காணியை நாம் காலந்தாழ்க்காது விலை கொடுத்து வாங்க வேண்டும். அங்கே ஓர் அன்ன சத்திரத்தை ஆரம்பிப்போம். ஆண்ட வனுக்குச் செய்யும் சேவைபோல மிகுந்த வறுமையி னாலே துன்புறுவோருக்குச் சேவைசெய்ய அவ்விடத்தில் ஏற்பாடு பண்ணுவோம். இவ்வன்ன சத்திரம் ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய திருநாமத்தினாலே வழங்கப்படும். முதலில் அதற்கு வருகின்ற வருவாய்க்குத் தக்கபடி அதனது முயற்சியை அளவுப்படுத்திக்கொள்ளலாம்,

இருவர் மூவரோடு ஆரம்பிக்கலாம். இவ் வன்ன சத்திரத்தை நடத்துவதற்கு நல்ல ஆற்றல் வாய்ந்த பிரம்மச்சாரிகளை நாம் பயிற்றுதல் வேண்டும். அதனை விடாது நடத்துவதற்காக வேண்டியபொருளை அவர்கள் இரந்தாகிலும் சேகரிக்கவேண்டும். இந்த விஷயத்தில் திருமடம் பொருளுதவி செய்யமாட்டாது. வேண்டிய பணத்தைப் பிரம்மச்சாரிகளே சேகரித்துக்கொள்ளுதல் வேண்டும். இத்தகைய சேவாசிரமத்தில் ஐந்து வருஷம் பயிற்சி பெற்ற பின்பே பிரம்மச்சாரிகள் வித்தியாலத்தைச் சேர அநுமதி பெறுவார்கள். சேவாசிரமத்தில் ஐந்தும் வித்தியாலயத்தில் ஐந்தும் ஆகப் பத்து வருடம் கழிந்த பின்னரே திருமடத்துப் பெரியோர்களிடத்தில் தீக்ஷை பெற்றுப் பிரம்மச்சாரிகள் சந்நியாச ஆச்சிரமத்தில் உட்புகுவார்கள். சந்நியாச ஆச்சிரமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் விருப்பமுடையோர்க்கே திருமடத்துப் பெரியோர்கள் தகுதியாராய்ந்து தீக்ஷை செய்து வைப்பார்கள். இவ்விதியைக் கடந்து கால வெல்லை இன்றி மிகத் தகுதியுள்ளவர்களாகக் காணப்படுகின்ற பிரம்மச்சாரிகளுக்குச் சந்நியாசம் கொடுக்கும் உரிமை திருமடத்துத் தலைவருக்கு உண்டு. சாதாரணமாக நான் முன்சொல்லிய முறையில் சந்நியாசம் பெறுவதற்குப் படிப்படியாக யோக்கியதை பெறுவதே வழியாகும். இவ்வெண்ணங்களெல்லாம் என் மனத்திலே இருக்கின்றன.

சிஷ்: ஐய, திருமடத்திலே தாங்கள் கூறியது போல மூன்று வகையாகிய அங்கங்களை ஏற்படுத்துவதன்நோக்க மென்ன?

சுவா: நான் சொன்னது புலப்படவில்லையா? முதலிலே அன்னதானம்; அதற்கடுத்தது வித்தியாதானம் இவை யாவற்றினும் மேம்பட்டது ஞானதானம். இந்த மூன்றினையும் இத்திருமடத்திலே நாம் சமரசப்படுத்த வேண்டும். பிரம்மச்சாரிகள் அன்னதான கைங்கரியத்திலே தொடர்ச்சியாக ஈடுபடுவதினால் அவர்களுடைய

உள்ளத்திலே பிறர் நலத்துக்காக உழைக்க வேண்டு மென்னும் கருத்தும் ஜீவர்களுக்குத் தொண்டுபுரிவது ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்னும் எண்ணமும் உறுதியாக நிலைபெறுவன. இத்தகைய கைங்கரியத்தினால் அவர்களுடைய சித்தம் சுத்தி யடைந்து பரிசுத்தமாகிய சாத்வீக எண்ணங்களை வெளிப்படுத்தும். இதனால் காலகதியிலே பிரம்ம ஞானத்தை அடைவதற்குத் தகுதியுள்ளவராகிய பிரம் மச்சாரிகள் சந்நியாச ஆசிரமத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

சிஷ் : ஐய, தேவரீருடைய வாக்கின்படி ஞான தானமே மிக உயர்ந்ததாயின் அன்னதான வித்தியாதா னத்தை ஆரம்பிக்க வேண்டியது எதற்கு?

சுவா : இதனை இதுவரையும் நீ தெரிந்துகொள்ள வில்லையா? கேட்பாயாக — உணவுக்குப் பஞ்சமாக இருக்கின்ற இந்த நாட்களிலே நீ தன்னலமற்ற தொண்டு செய்யும் வழியிலே நின்று இரந்தோ பிறிது எந்த முறையினாலோ கொஞ்சம் உணவுப் பொருள்களைச் சம்பாதித்து அவற்றை வறுமையினாலே துன்புறுகின்ற வர்களுக்குக் கொடுத்தால் அது உனக்கும் உலகத்துக் கும் நன்மையைச் செய்வது மாத்திரத்தோ டமையாது இந்த நன்முயற்சிக்கு எல்லாருடைய அனுதாபத்தை யும் பெறுகின்ற வழியுமாகும். காமகாஞ்சனத்திலே கட்டுப்பட்டுக் கிடக்கின்ற லௌகீக புத்தியுள்ள மனிதர் இந்தக் காருண்ணியத் தொண்டினுக்காக உன் னிடத்தில் நம்பிக்கை வைத்து உனக்கு உதவி செய்ய முன்வருவார்கள். வித்தியா தானத்தினாலும் ஞான தானத்தினாலும் கவரப்படுகின்ற மனிதரைப் பார்க்கி லும் ஆயிர மடங்கு அதிகமானவர்கள் கேளாமற் செய்கின்ற உதவியாகிய இவ்வன்ன தானத்தினாலே கவரப்படுவார்கள். இதனாற் பெறுகின்ற அனுதாபத் தைப்போல மற்றெவ்வித கைங்கரியத்தினாலும் பெறு தல் இயலாது. உண்மையிலேயே உயர்ந்த நோக்க

முடைய தொண்டினாலே மனிதர் மாத்திரமல்ல, ஆண்டவன் தானும் தொண்டியற்றுபவனுக்கு நண்பாதல் கூடும். இவ்வண்ணம் ஜனங்கள் கவரப்பட்ட பின்னர் வித்தையிலும் ஞானத்திலும் அவர்களுக்கு விருப்பமுண்டாக்குதல் எளிதாகும். ஆதலினால் அன்னதானம் முதலாவதாக வைத்தெண்ணப்படுவ தாகின்றது.

சிஷ்: ஐய, அன்ன சத்திரங்களை ஆரம்பிப்பதற்கு முதலிலே இடம் வேண்டும், பின்பு கட்டிடங்கள் வேண்டும். அதன்மேல் நடத்துவதற்குப் பொருள்வேண்டும். இந்தப் பணமெல்லாம் எங்கிருந்து வரும்?

சுவா: இந்தத் திருமடத்தின் தெற்குப் பாகம் முழுவதையும் உன்னுடைய பொறுப்பிலே உடனே தருகின்றேன். அந்த வில்வ மரத்தின் கீழே, புல்லினால் வேய்ந்த ஒரு குடிசையை நான் அமைத்துக் கொள்ளுகிறேன். இரண்டொரு குருடர் நோயாளிகளை நீ கொண்டு வந்து அவர்களுடைய தொண்டிலே முயன்று நிற்பாயாக. வெளியே போய்ப் பிச்சை எடுத்துவந்து உன்னுடைய கையினாலே உணவைச் சமைத்து அவர்களுக்கு ஊட்டு. இடைவிடாமற் சில நாட்களுக்கு இவ்வண்ணம் செய்வாயானால் எத்தனையோ ஜனங்கள் பெருந்தொகையான பணத்தோடு உனக்கு உதவி செய்ய வருவதைக் காண்பாய். **நஹி கல்யாண க்ருத் கஸ்சித் துர்கதிம் தாத கச்சதி.** "மைந்தனே, நற்கருமங்களைச் செய்பவன் ஒருபொழுதும் துன்பத்தை யடைவதில்லை." (கீதை)

சிஷ்: ஆம், உண்மையே. ஆனால், அத்தகைய இடையீடில்லாத முயற்சி, ஈற்றிலே பந்தத்திற்கு வாயிலாகாதோ?

சுவா: நீ கருமத்தினால் எய்துகின்ற பயனை விரும்பாமல் எல்லாவகையாகிய தன்னல விருப்பத்தையும் கடந்து அப்பாற் செல்லுகின்ற ஊக்கத்தோடு இருப்பாயானால் அந்த நற்கருமங்களனைத்தும் உன்னுடைய பாசத்தளையை ஒடிப்பதற்கு உதவியாகும் என நான் உனக்குச் சொல்லுகிறேன். இத்தகைய நன் முயற்சி பந்

தத்திற்கு ஏதுவாமென ஆராயாது கூறினாய். தன்னலங் கருதிச் செய்கின்ற முயற்சியினாலே ஏற்பட்ட கர்ம பந்தத்தை விடுவிப்பதற்குப் பயன் கருதாத முயற்சி மாத்திரமே வழியாக ஏற்பட்டிருக்கிறது. **நான்யப்பந்தா வித்யதே அயனாய** "வேறு வழியில்லை."

சிஷ் : அன்ன சத்திரத்தைப் பற்றியும் சேவாசிரமத்தைப் பற்றியும் தேவரீர் சொல்லுகிற வார்த்தைகள் அவற்றைப் பற்றிய விபரங்களை அறிவதற்கு என்னுள்ளத்தைத் தூண்டுகின்றன.

சுவா : ஏழைகள் வசிப்பதற்காகச் சிறிய கார்ரேட்டமுள்ள அறைகளை அமைக்கவேண்டும். ஒவ்வோர் அறையிலும் இருவரோ மூவரோ வசித்து வருதல் வேண்டும். நல்ல படுக்கையும் சுத்தமான வஸ்திரங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். ஒரு வாரத்தில் வசதிப்படி ஒருமுறையோ இருமுறையோ அவர்களை வந்து பார்வையிடுவதற்கு ஒரு வைத்தியர் இருக்கவேண்டும். நோயாளிகளைப் பரிபாலிப்பதற்காக உள்ள சேவாசிரமம் அன்ன சத்திரத்தின் சார்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அன்ன சத்திரமானது உணவு கொடுப்போருடைய ஆரவாரமும் உண்போருடைய ஒலியும் ஆகிய இவற்றால் இரவு பகல் முழங்கிக்கொண்டிருக்கவேண்டும். அன்னத்திலிருந்து வடித்த கஞ்சியானது இக்கங்காநதியின் உள்ளே ஓடி அதன் நீரினை வெண்மையாக்கல் வேண்டும். அத்தகைய அன்ன சத்திரம் ஆரம்பித்து நடப்பதைக் காணும்பொழுது தான் என்னுடைய உள்ளத்துக்கு ஆறுதல் உண்டாகும்.

சிஷ் : தேவரீருக்கு இத்தகைய விருப்பமிருப்பதனால் அது காலகதியிலே தொழிற்படுமென்பது நிச்சயம்.

சிஷ்யர் இவ்வாறுரைக்க அதனைக் கேட்டு சுவாமிஜி சிறிது பொழுது கங்கையைப் பார்த்தவண்ணமாக அசைவற்று இருந்தார். பின்பு பொலிவெய்திய திருமுகத்

தோடு சிஷ்யரை நோக்கிப் பின்வருமாறு கூறத் தொடங்கினார்: "உறங்குகின்ற சிங்கம் யாரிடத்தில் விழித்துக் கொள்ளும் என்பதையும் எப்பொழுது விழிக்கும் என்பதையும் யார் அறிவார்? உங்களில் ஒருவரிடத்திலே அன்னை தன் அக்கினிப் பிழம்பாகிய ஆற்றலை வைத்து விடுவாளானால் நூற்றுக்கணக்கான அன்ன சத்திரங்கள் ஏற்படுதல்கூடும். ஞானம், வலிமை, பக்தி என்னும் இவை யெல்லாம் எல்லாப் பிராணிகளிடத்திலும் பூரணமாக அமைந்திருக்கின்றன. தோற்ற வெளிப்பாட்டின் ஏற்றத் தாழ்ச்சியை நாம் கண்டு ஒருவரைப் பெரியவரெனவும் மற்றொருவரைச் சிறியவரெனவும் சொல்லுகிறோம். எல்லாப் பிராணிகளினுடைய உள்ளத்திலும் பரிபூரண நிலையை மறைக்கின்ற ஒரு திரை இருக்கின்றது. அது அகன்ற கணத்திலே யாவும் செவ்விதாகும்; உனக்கு எது வேண்டுமோ, எதனை விரும்புகிறாயோ அது சித்திக்கும்."

மேலும் சுவாமிஜி சொல்லுவார்: "பகவானுக்குச் சித்தமானால் இந்தத் திருமடத்தை நாம் பெரியதொரு சமரச நிலையம் ஆக்குவோம். நமது பகவான் உயர்ந்த கொள்கைகள் எல்லாவற்றையும் ஒன்றுபடுத்திய சமரசமே வடிவெடுத்தாற்போல விளங்கினார். அத்தகைய சமரச நோக்கத்தை நிலைபெறச் செய்வோமாகில் அவருடைய போதனையை உலகத்திலே நிறுவச் செய்தவர்களாவோம். பிராம்மணர் முதல் சண்டாளர் இறுதியாக எல்லா வகுப்பார்களும் எல்லா மதத்தவர்களும் இவ்விடத்திற்கு வந்து தத்தமது உயர்ந்த கொள்கைகள் இவ்விடத்தில் விளங்குவதைக் காணும்படிச் செய்தல் வேண்டும். இந்தத் திருமடத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பிரதிஷ்டை செய்த தினத்திலே அவருடைய போதனைகள் இங்கிருந்து ஆரம்பித்து சேதனாசேதனப் பிரபஞ்சம் அனைத்தினும் பெருக்கெடுத்தோடுவது போல எனக்குப் புலப்பட்டது. நான் என்னால் இயன்றவரை முயலுவேன்; நீவிர் எல்லீரும் முயன்று ஸ்ரீ ராம

கிருஷ்ணருடைய அகன்ற நோக்கங்களை மக்களுக்குத் தெளிவுறுத்துவீர்களாக; வேதாந்தத்தை வெறுமனே வாசிப்பதனால் ஆகின்ற பயனென்ன? சுத்த அத்வைதத்தின் உண்மைகளை வாழ்க்கையிலே அத்தாட்சிப் படுத்திக் காட்டுதல் வேண்டும். சங்கரர் இந்த அத்வைத ஞானத்தை மலையிலும் வனத்திலும் விட்டுச் சென்றார். அவற்றை அவ்விடங்களிலிருந்து கொண்டுவந்து மக்கள் தொழில் செய்து ஜீவிக்கின்ற இடங்களிலும் ஜன சங்கத்திலும் பரப்புவதற்காக நான் வந்தேன். இல்லங்களிலும் உறைவிடங்களிலும் பசும் புற்றரைகளிலும் சோலைகளிலும் மலைகளிலும் சமநிலங்களிலும் அத்வைதத்தின் சிங்கக் கர்ச்சனையானது முழங்குதல் வேண்டும். நீவிர் யாவரும் எனக்கு உதவியாக வந்து இந்த முயற்சியிலே சேர்ந்து உழைப்பீர்களாக."

சிஷ் : ஐய, இந்த நிலையைக் கருமத்திலே தோற்றுவிப்பதினும் பார்க்கத் தியானத்திலே அடைவது நல்லதென என்னுள்ளத்துக்குப் படுகின்றது.

சுவா : லாகிரி வஸ்துக்களை உண்டவர்களைப் போன்ற ஒரு மூட நிலையில் செயலற்றுக் கிடப்பதனால் பயனென்ன? அத்வைத உண்மையைத் தரிசித்த ஆர்வத்தினாலே நீ சிலவேளை குதித்துக் கூத்தாடுதல் வேண்டும். சிலபோது வெளியுணர்ச்சியற்றுச் சும்மா கிடக்கவேண்டும். நல்ல பொருளைக் கண்டவன் அதைத் தனித்துண்பதிற் சந்தோஷப்படுவானா? அதனை மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பான் அன்றோ? அத்வைத தரிசனையினாலே நீ மோக்ஷத்தை அடைந்துவிட்டாயென்று வைத்துக் கொள்வோம். அதனால் உலகத்துக்கு ஆவதென்ன? இந்த உடலை விடுவதற்கு முன்னமே பிரபஞ்சம் அனைத்தினையும் நீ விடுதலைப் படுத்தவேண்டும். அப்படிச் செய்தாற்றான் நீ நித்தியமாகிய உண்மையிலே நிலைபெற்றவனாவாய். என் மைந்தனே! அந்த ஆனந்தத்திற்கு இணையுண்டோ? ஆகாயத்தைப் போன்று அகன்று விரிந்த எல்லையற்ற ஆனந்தத்திலே நீ நிலைபெற்றிருப்பாய். உயிர்ப்பொருள் சடப் பொருள்

ஆகிய அனைத்திலும் எல்லா விடங்களிலும் நீ வியாபித்திருப்பதைக் கண்டு அதிசயத்தினாலே பேச்சொழிந்திருப்பாய். சேதனாசேதனப் பிரபஞ்சம் அனைத்தும் நீயே என்பதை நேரிலே உணர்ந்து கொள்ளுவாய். அப்பொழுது நீ உன்னிடத்தில் காட்டுகின்ற கருணையைப் போலவே யாவற்றையும் கருணையோடு நடத்துவது இன்றியமையாததாகும். இதுவே அநுஷ்டான வேதாந்தம். நான் சொல்வது உனக்குத் தெளிவாகின்றதா? பிரம்மன் ஒன்று, ஆயினும் வியவகார நிலையில் அது நமக்குப் பலவாகத் தோன்றுகின்றது. இது நாம ரூபத்தினால் ஆகின்றது. ஒரு கடத்திலிருந்து அதனுடைய நாமத்தையும் ரூபத்தையும் நீக்கிவிட்டால் என்ன மிஞ்சியிருக்கின்றது? அதன் சத்தாகிய மண் மாத்திரமே. அவ்வண்ணமே மயக்கத்தினாலே கடம் படம் மடம் என்னுமிவற்றைக் காணுவதும் நினைப்பதும் செய்கின்றாய். அறிவினை மறைப்பதும் உண்மை இயல்பு இல்லாததுமாகிய அஞ்ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு பிரபஞ்சத் தோற்றம் வெளிப்படுகின்றது. மனைவி என்றும் மக்களென்றும் உடலென்றும் மனமென்றும் வேறுபட்ட பலவற்றை, அஞ்ஞானத்தினாலே ஆக்கப்பட்ட பிரபஞ்சத்திலே, நாமரூப வேறுபாடு காரணமாக ஒருவன் காணுகின்றான். இந்த அஞ்ஞானம் அகன்ற உடனே நிததியமாக நிலைபெற்றிருக்கின்ற பிரம்மத்தினை சாக்ஷாத்காரமாகக் காணுதல் வந்தெய்துவதாகும்

சிஷ்: இந்த அஞ்ஞானம் எங்கிருந்து வந்தது?

சுவா: அது எங்கிருந்து வந்ததென்பதைப் பின்னர் சொல்லுவேன். பழுதையைப் பாம்பென்று நினைத்து நீ ஓடியபொழுது பழுதை பாம்பாயிற்றா, அன்றேல் உன்னை ஓடப்பண்ணியது உன்னுடைய அஞ்ஞானந்தானா?

சிஷ்: வெறும் அஞ்ஞானத்தினாலே அங்ஙனம் செய்தேன்.

சுவா: நல்லது, ஆராய்ந்து பார். பின்பு நீ கயிற்றைக் கயிருகக் காணும்பொழுது உன்னுடைய முந்திய அஞ்ஞானத்தை நினைத்து நகைப்பாயல்லவா? நாமரூப பேதங்கள் மயக்கமாகுமென நீ காண்பாயல்லவா?

சிஷ்: ஆம், அப்படியே.

சுவா: அஃது அப்படியாயின் நாமரூப பேதங்கள் பொய்யாகின்றன. நித்திய வஸ்துவாகிய பிரம்மம் ஒன்று மாத்திரமே உண்மைப் பொருளாகின்றது. அறியாமையென்னும் மங்கிய ஒளியினூடாக இது உன் மனைவி, இது உன் குழந்தை, இது உனக்குரியது, இது உனக்கில்லாதது என்று இவ்வாறு நினைத்து யாவற்றையும் பிரகாசிக்கச் செய்கின்ற ஆத்மனுடைய உண்மையை அறியாது போகின்முய். குருவினுடைய உபதேசத்தினுலும் உன்னுடைய நிச்சய புத்தியினுலும் இந்த நாமரூபப் பிரபஞ்சத்தைக் கடந்து அதற்கு ஆதாரமாக இருக்கின்ற உண்மைப் பொருளைக் காண்பாயாயின் படைத்தற் கடவுள் முதல் புல்லீருக எல்லாப்பொருள்களிலும் நீ ஒன்ருகி இருக்கின்றதன்மையை உணர்ந்து கொள்ளுவாய். அப்பொழுதே **பித்யதே ஹ்ருதய க்ரந்திஸ் சித்யந்தே ஸர்வ ஸம்சயா**: "இருதயத்திலுள்ள எல்லா முடிச்சுகளும் அறுக்கப்படுகின்றன; ஐயங்களனைத்தும் நீங்கி விடுகின்றன" என்று சொல்லப்பட்டிருக்கிற நிலைமையை நீ அடைவாய்.

சிஷ்: ஐய! இந்த அஞ்ஞானத்தின் உற்பத்தியும் முடிபும் இவையெனை அறிய விரும்புகிறேன்.

சுவா: இருந்ததுபோலக் காணப்பட்டுப் பின்பு இல்லாது ஒழிந்து போகின்ற பொருள் தோற்ற மாத்திரையாக உள்ள பொய்ப் பொருள் என்பதை அறிந்து கொண்டாயென்று எண்ணுகிறேன். உண்மையிலே பிரம்மஞானத்தை அடைந்தவன் அஞ்ஞானம் எங்குள்

ளது என்பான். அவன் பழுதையைப் பழுதையாகக் காண்பானே யன்றி ஒருபொழுதும் பாம்பாகக் காண்பதில்லை. இக்காரணத்தினால் அவித்தையானது பாரமார்த்திக நிலையிலே உண்மைப் பொருளாக மாட்டாது. அவித்தையை உண்மை என்றாவது பொய் யென்றாவது சொல்லமுடியாது. **சன்னாப் யஸன்னாப் யுபயாத்மிகாநோ** "உண்மையுமில்லை, பொய்யுமில்லை, இரண்டினது கலப்புமில்லை." பொய்யென அத்தாக்ஷிப் படுத்தப்பட்ட பொருளைப்பற்றி வினா நிகழாது; விடையும் பயனற்றதாகும். மேலும், அத்தகைய பொருளைப் பற்றிய வினா நியாய விரோதமாகும். எப்படியெனிற் சொல்லுகிறேன் கேட்பாயாக. வினாவும் விடையும் நாம ரூபநிலையில் நின்றும் தேச கால சம்பந்தமாக ஏற்பட்டன அல்லவா? கால தேசத்துக்கு அப்பாலாகிய பிரம்மத்தினை வினா விடைகளினால் விளக்குதல் கூடுமா? ஆதலால் சாஸ்திரங்களும் மந்திரங்களும் இத்தகைய பிறவும் சார்பு நிலையில் உண்மைகளாகின்றனவே யன்றி தனி நிலையிலே உண்மைகளெனக் கருதப்படா. தனக்கென்று சொல்லுதற்குரிய தன்மை யாதும் அவித்தைக்கு இல்லை ஆதலால் அதனை அறிந்துகொள்ளுவது எப்படி? பிரம்மத்தினுடைய விளக்கம் தோற்றும் பொழுது இத்தகைய கேள்விகளுக்கு இடமில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண பகவான் சொல்லிய *சக்கிலியக் கூலிக் காரனுடைய கதையை நீ கேள்விப்பட்டதில்லையா?

---

* ஒரு நாள் ஒரு பிராம்மணன் தன்னுடைய சிஷ்யனுடைய வீட்டுக்குப் போக விரும்பித் தனது சுமையைக் கொண்டுபோக ஒரு கூலிக்காரனைத் தேடினான். நல்ல சாதிக்காரன் அகப்படாத காரணத்தினாலே அத்தொழிலைச் செய்யும்படி ஒரு சக்கிலியனைக் கேட்டான். அந்த மனிதன் தான் தீண்டாச் சாதியென்ற காரணத்தைக் காட்டி முதலிலே மறுத்துவிட்டான். பிராம்மணன் அவனையே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதி 'மௌனமாயிருந்தால் யாரும் அறிந்துகொள்ளப் போவதில்லை' என்று சொன்னான். ஈற்றிலே அந்த மனிதன் உடன்பட, இருவரும் குறித்த இடத்தைப் போய்ச் சேர்ந்தார்கள் அங்குள்ள ஒரு மணி

அவித்தையை அறிந்தவுடனே அது மறைந்துவிடுகிறது.

சிஷ் : ஆனால் ஐய, அவித்தை எங்கிருந்து வந்தது?

சுவா : இல்லாதது எங்கிருந்து வரும்? முதலில் இருந்தாலல்லவோ, வந்த செய்தியைப்பற்றி விசாரிக்கலாம்.

சிஷ் : அப்படியாயின் உயிருள்ள பொருள்களாகவும் சடப்பொருளாகவும் உள்ள இப்பிரபஞ்சம் எங்கிருந்து தோற்றியது?

சுவா : உள்ளது ஒன்றே. அது பிரம்மம். பொய்யாகிய நாமரூபமென்னும் திரையினூடாக அந்த ஒரு பொருளையே வேறு வேறு ரூபங்களோடும் நாமங்களோடும் நீ காண்கின்றாய்.

சிஷ் : அப்படியாயின் பொய்யாகிய நாம ரூபங்கள் ஏன் இருக்கின்றன? அவை எங்கிருந்து வந்தன?

சுவா : அவித்தையென அழுந்திக் கிடக்கின்ற எண்ணமானது ஏறக்குறையச் சங்கிலித் தொடர்போல முடிவற்றதெனச் சாஸ்திரங்கள் பேசுகின்றன. ஆயினும் அதற்கொரு முடிவுண்டு. ஆனால் பிரம்மமோ பாம்பென்னும் மயக்கக் காட்சியைத் தருகிற பழுதையைப்போல ஒரு சிறிதும் வேறுபாடின்றி எப்பொழுதும் தன்னியல்பிலேநிலைபெற்றிருக்கிறது. ஆதலால் ஜாலக்காரனுடைய வித்தையைப் போலப் பிரபஞ்சமனைத்தும் பிரம்மத்தினிடத்திலே வெளித்தோற்றமாகக் காணப்படுகின்றன என்பதுவேதாந்தத்தின்முடிபு. இது பிரம்மத்தினுடைய

தர் அச்சக்கிலிய வேலைக்காரனை நோக்கி ஒரு சோடி செருப்பை எடுத்து வேறோர் இடத்தில் வைக்கும்படிச் சொன்னார். வேலைக்காரன் மௌனமாயிருப்பது முறையென்றெண்ணி கட்டளையைக் கேளாததுபோல் இருந்து விட்டான். அந்த மனிதன் வெகுண்டு "ஏனடா நான் சொல்லுவது கேட்கவில்லையா? நீ யென்ன சக்கிலியனோ?" என்றார். அச்சமுற்ற சக்கிலியன், "எஜமானே என்னைக் கண்டு பிடித்துவிட்டார்கள். நான் இனி இங்கு நிற்றல் கூடாது" என்று சொல்லிக்கொண்டே உடனே ஓட்டம் பிடித்தான்.

சொந்த நீர்மையிலிருந்து அதனைச் சிறிதேனும் அசைத்து விடவில்லை நான் சொல்லுகிறது உனக்குத் தெளிவாகிறதா ?

சிஷ் ; ஒரு காரியம் மாத்திரம் எனக்கு இன்னும் தெளிவுபடவில்லை.

சுவா : அஃதென்ன ?

சிஷ் : படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய இவை எல்லாம் தம்மளவிலே இல்லாதனவாய்ப் பிரம்மத்தினிடத்திலே தோற்ற மாத்திரையாகக் காணப்படுகின்றன என்று தேவரீர் இப்பொழுது சொன்னது ஞாபகமிருக்கிறது. ஆனால் அது எப்படியாகும் ? தான் அனுபவியாத ஒரு பொருளைப் பற்றிய மயக்கத் தோற்றம் ஒருபொழுதும் ஏற்படுவதில்லை பாம்பை ஒரு நாளும் காணாதவன் பழுதையைப் பாம்பென்று நினைப்பது எவ்வாறாகும் ? அதுபோலவே இந்தச் சிருஷ்டியை உணராதவன் பிரம்மத்தைச் சிருஷ்டியாகப் பிழையுற நினைப்பதெப்படி ? ஆதலால் சிருஷ்டி என்னும் மயக்கம் தோற்றுவதற்குச் சிருஷ்டியானது முன்னதாகவே இருந்திருக்க வேண்டும். அன்றேல் இப்பொழுது இருக்க வேண்டும். ஆனால் இது நம்மைத் துவித மதத்துக்கு இழுத்து விடுகிறது.

சுவா : உண்மையை உணர்ந்த மனிதன் உன்னுடைய தடைக்கு விடையாகத் தனது கண் முன்னே படைப்பு முதலாகிய பொருள்களெல்லாம் காணப்படவில்லை என்று கூறுவான். அவன் பிரம்மத்தைக்காணுகிறான், பிரம்மத்தை மாத்திரமே காணுகிறான். அவன் பழுதையைக் காணுகிறான், பாம்பைக் காணவில்லை. உன்னைச் சேர்ந்தமட்டில் இந்தச் சிருஷ்டியை அல்லது பாம்பைக் காணுவதாக நீ வாதிப்பாயானால் அவன் உனது பிழைபொருந்திய காட்சியைக் குணமாக்கும் பொருட்டுப் பழுதையினது உண்மைத் தன்மையைத் தெளிவுபடுத்த முயலுவான். அவனுடைய போதனையினாலும் உனது விசாரணையினாலும் பழுதையைப்பற்

றிய, அன்றேல் பிரம்மத்தைப்பற்றிய, உண்மையை நீ கண்டு கொண்டால் பாம்பைப் பற்றியும் சிருஷ்டியைப் பற்றியும் உள்ள மயக்க உணர்வு உடனே அகன்று விடும். அப்பொழுது படைத்தல் காத்தல் அழித்தல் என நின்ற மயக்க உணர்வுகளையெல்லாம் பிரம்மத்தினிடத்திலே ஆரோபித்திருக்கிறதென்று சொல்வாயேயன்றி வேறெவ்வாறு சொல்லுவாய்? சிருஷ்டி முதலாகிய தோற்றம் ஆதி இன்றித் தொடர்ந்து வந்தது என்னின் அஃது அங்ஙனமாகட்டும்; அந்த வினவுக்கு விசாரித்து முடிவு காண்பதனால் ஒருவகைப் பயனும் எய்தப் போவதில்லை. உள்ளங்கை நெல்லிக்கனி போல பிரம்மத்தைக் காணின் அல்லாது இந்தக் கேள்விக்கு முற்றுன முடிவு செலுத்தல் முடியாது. அதன்பின் கேள்வி எழப் போவதுமில்லை, விடை தேடவேண்டிய அவசியமுமில்லை. பிரம்மத்தை அடைந்து அனுபவிப்போர் இனிய தின்பண்டத்தைச் சுவைக்கின்ற ஊமையனைப் போலத் தம்முடைய அனுபவத்தை வெளியிட்டுரைக்க மாட்டாது மௌனமாயிருப்பர்.

சிஷ்: அப்படியாயின் அதனைப்பற்றி இவ்வளவாக விசாரிப்பதனால் எய்துகின்ற பயன் யாது?

சுவா: விவேகத்தினாலே விஷயத்தை உணர்ந்து கொள்ளுவதற்கு நியாயித்தல் இன்றியமையாதது. ஆனால் உண்மைப் பொருள் நியாயத்தைக் கடந்து நிற்பது. **நைஷா தர்க்கேண மதி ராபநீயா** "இந்த முடிபு நியாயத்தினால் அறியப்படுவதில்லை."

இங்ஙனம் சம்பாஷித்துக் கொண்டுபோய் சுவாமிஜியும் சிஷ்யரும் திருமடத்தை அடைந்தனர். ஆங்குக் குழுமியிருந்த சந்நியாசிகளுக்கும் பிரம்மச்சாரிகளுக்கும் பிரம்மத்தைப்பற்றிய அவ்வாதத்தின் சாரத்தைச் சுவாமிஜி எடுத்து விளக்கினர். மேன்மாடிக்குப் போகும்போது சிஷ்யரை நோக்கி **நாயமாத்மா பலஹீனேன லப்ய:** "இந்த ஆத்மா பலவீனர்களால் அடையப்படுவதில்லை" என்றார்.

(22)

[இடம் : பேலூர்த் திருமடம். காலம் : 1899-ம் ஆண்டு.]

ஸ்ரீ ராமகிருஷ்ணர் போதித்த சமய உண்மைகளைப் பொது ஜனங்களிடையே பரப்பும் நோக்கமாகச் சுவாமிஜியுடைய கட்டளைப்படி சுவாமி திரிகுணாதீதரால் வங்காளி பாஷையிலே இரண்டு வாரத்திற்கு ஒரு முறை வெளியிடப்பட்டு வருகிற 'உத்போதன்' என்னும் பத்திரிகை இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய முதலிதழ் வெளியான பின்னர் ஒருநாள் சிஷ்யர் நீலாம்பர பாபுவினுடைய சோலை வீட்டினுள்ளேயுள்ள திருமடத்திற்கு வந்தார். சுவாமிஜி அவரோடு உத்போதன் பத்திரிகையைப் பற்றிப் பின் வருமாறு கூறுவாராயினார்.

சுவா : (நகைச் சுவையோடு பத்திரிகையினுடைய பேரை வேறுபடுத்திக் கூறி) நீ *உத்பந்தனைக் கண்டதுண்டா?

சிஷ் : ஆம், ஐயா! அது ஒரு நல்ல பத்திரிகை.

சுவா : பொருளையும் பாஷை நடையையும் இந்தப் பத்திரிகைக்குரிய யாவற்றையும் ஒரு புது முறையாக உருப்படுத்த வேண்டும்.

சிஷ் : எப்படி?

சுவா : ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய எண்ணங்களை எல்லா மக்களுக்கும் பரப்புவதோடு வங்காளி பாஷைக்கு ஒரு புதிய வலிமையை உண்டாக்க வேண்டும். உதாரணமாக, வினைச் சொற்களை அடுத்தடுத்துப் பிரயோகிப்பது பாஷையினுடைய வலிமையைக் குறைத்து விடுவதாகும். வினை முற்றுக்களை உபயோகிப்பதைக் குறைத்துப் பெயரெச்சங்களை உபயோகிக்க வேண்டும்.

---

* உத்பந்தன் – தூக்கிட்டுத் தற்கொலை புரிந்துகொள்வது.

அவ்வண்ணம் சில வியாசங்களை எழுதி அவற்றை உத்போதனில் வெளியிடு முன்பு எனக்குக் காட்டுவாயாக.

சிஷ்: ஐய! சுவாமி திரிகுணாதீதர் இந்தப் பத்திரிகைக்காக எடுத்துக்கொள்ளுகிற பிரயாசையைப்போல வேறு யாரும் செய்ய முடியாது.

சுவா: ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சந்நியாச மக்கள் அக்கினியை வளர்த்துக்கொண்டு மரத்தின் கீழே உட்கார்ந்திருப்பதற்குப் பிறந்தவர்களென்று நீ நினைக்கிறாயா? அவர்களில் யாரேனும் ஏதாவது வேலையைச் செய்யத் தொடங்கினால் ஜனங்கள் அவர்களுடைய வலிமையைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். வேலை செய்வதெப்படி என்று அவர்களிடம் கற்றுக்கொள்வாயாக. திரிகுணாதீதர் என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்காகத் தம்முடைய ஜபம் தவம் முதலிய யாவற்றையும் விடுத்துக் கருமமே கண்ணாக இருப்பதனைக் கண்டு கொண்டனையா? இத்தகைய தியாகம் அற்பமாகியதா? அவர் செய்கிற முயற்சியிலே அடிப்படையாக என்மீது இருக்கின்ற அன்பு எவ்வளவு எனக் கண்டு கொண்டனையா? அநுகூலமடையாமல் அவர் தாம் செய்யும் கருமத்தை நிறுத்தப் போவதில்லை. இல்வாழ்வாராகிய உங்களுக்கு இத்தகைய உறுதியுண்டா?

சிஷ்: ஆனால், ஐய! காஷாயந் தரித்த ஒரு சந்நியாசி சுவாமி திரிகுணாதீதரைப் போல வீடு வீடாக அலைவதைப் பார்க்கும்பொழுது எங்கள் கண்ணுக்கு நூதனமாகத் தோன்றுகிறது.

சுவா: ஏன்? பத்திரிகையைப் பரப்புவது இல்வாழ்வாருடைய நன்மையின் பொருட்டே. தேசத்திலே புதுக் கருத்துக்களைப் பரப்புவதினால் ஜனங்கள் பெரிதும் நன்மை அடைவார்கள். இத்தகைய தன்னலமற்ற வேலை பக்தியோடு கூடிய சமய அநுஷ்டானங்களுக்கு எவ்வாற்றாலும் குறைந்ததென்று எண்ணுகிறாயா? மக்களுக்கு நன்மை

செய்வதே எங்களுடைய நோக்கம். இப்பத்திரிகையின் வருவாயினால் பொருள் திரட்ட வேண்டுமென்பது எங்களுடைய கருத்தல்ல. நாங்கள் யாவற்றையும் துறந்து விட்டோம்; மரணத்தின் பின் மனைவி மக்களுக்குப் பொருள்வைத்துச் செல்லவேண்டும் என்னும் அவசியம் எங்களுக்கு இல்லை. பத்திரிகை சித்திபெற நடக்குமாயின், அதனால் வருகின்ற வருவாய் முழுவதும் மக்களுடைய சேவைக்காகச் செலவிடப்படும். அதில் ஏதும் ஆதாயம் இருந்தால் மடாலயங்களும் சேவாச்சிரமங்களும் பலவிடங்களில் ஏற்படுத்துவதற்கும், பொதுஜன நன்மையைத் தருகின்ற பல நன்முயற்சிகளைச் செய்வதற்கும், அஃது உபயோகமாகும். எங்களுடைய மடியிலே பணம் நிறைக்கும் நோக்கமாக இல்வாழ்வார்களைப் போல நாங்கள் முயலவில்லை. எங்களுடைய முயற்சிகளனைத்தும் பிறருடைய நலத்துக்கே என்பதை நிச்சயமாக அறிந்து கொள்வாயாக.

சிஷ் : அப்படியாயினும், எல்லோரும் இந்த நல் நோக்கத்தை அறிந்துகொள்ள மாட்டார்கள்.

சுவா : அறியாவிட்டால் என்ன? அதனால் எங்களுக்கு உள்ளது நிறையப்போவதுமில்லை, குறையப் போவதுமில்லை. பிறர் குற்றங் காண்பார் என்னும் எண்ணத்தோடும் நாங்கள் ஒரு முயற்சியைச் செய்யப் போவதில்லை.

சிஷ் : ஐய! இந்தப் பத்திரிகை இரண்டு வாரத்துக் கொருமுறை வெளிவருகிறது. அது வாரப் பத்திரிகையாக இருக்கவேண்டும் என்று நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்.

சுவா : ஆம், அதற்கு வேண்டிய பொருள் எங்கே? ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அநுக்கிரகத்தினாலே வேண்டிய பொருளைச் சேர்த்தால், எதிர் காலத்திலே அதனைத் தினப் பத்திரிகையாக ஆக்குதலும் கூடும். நாடோறும் ஒரு லக்ஷம் பிரதிகளை அச்சிட்டுக் கல்கத்தா நகரிலுள்ள

ஒவ்வொரு வீதியிலும் தெருவிலும் இனமாகக் கொடுக்கும்படிச் செய்யலாம்.

சிஷ் : தேவரீர் கொண்டுள்ள இவ்வெண்ணம் மிகச் சிறந்தது.

சுவா : முதலிலே பத்திரிகையை நஷ்டமில்லாது நடக்கச் செய்து, அதன் பின்பு உன்னைப் பதிப்பாசிரியராக வைக்கலாம் என்று நான் எண்ணியிருக்கிறேன். எடுத்துக்கொண்ட கருமத்தைப் பிறர் உதவியின்றிச் செவ்விதாக நடக்கச் செய்யும் ஆற்றல் உங்களுக்கு இல்லை. யாவற்றையும் துறந்த சந்நியாசிகளுக்கே அவ்வாற்றல் உண்டு. அவர்கள் உயிர்போம் வரை உழைப்பார்கள் ; ஆனால் மனம் தளர மாட்டார்கள். உங்களுக்கோ வென்றால் ஒரு சிறிய தடை, அல்லது பிறர் கூறும் குறை மொழி உள்ளத்தை நிலை குலைத்துவிடும்.

சிஷ் : ஐய! அற்றைத் தினத்தில் சுவாமி நிரிகுணாநந்தர் அச்சியந்திரசாலையிலே காரியத்தை ஆரம்பிக்கு முன்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவுருவத்தை வழிபட்டுக் காரிய சித்திக்காக தேவரீருடைய ஆசீர்வாதத்தையும் கேட்டு நின்றதை நான் கண்டேன்.

சுவா : நல்லது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் எங்களுக்கு நடு நாயகமானவர். நாங்கள் ஒவ்வொருவரும் அவரிடத்திலிருந்து புறப்படுகிற ஒளிக்கிரணம். காரியத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர்த் திரிகுணாதீதர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை வழிப்பட்டாரா? அது மிக நல்லது. எனக்கு அவர் அதைப்பற்றி யாதும் சொல்லவில்லை.

சிஷ் : ஐய, அவர் தேவரீருக்கு மிகவும் அஞ்சுகிறார். நேற்று என்னைக் கண்டு தேவரீரிடம் போய் பத்திரிகையின் முதல் இதழைப்பற்றிய அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு வரும்படியும், அதன் பின்பு தாம் வந்து தேவரீரைக் காணபதாகவும் எனக்குச் சொன்னார்.

சுவா : அவர் செய்த வேலையைக் குறித்து நான் அளவிறந்த மகிழ்ச்சி யடைகின்றேன் என்று அவருக்

குச் சொல்லுவாயாக. எனது அன்பின் ஆசீர்வாதத்தை அவருக்கு அளிப்பாயாக. நீங்கள் எல்லோரும் இயன்ற வரை அவருக்கு உதவி புரியவேண்டும். அங்ஙனம் செய்வதனால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வேலையைச் செய்தவர்களாவீர்கள்.

இம்மொழிகளைச் சொன்ன பின்னர் சுவாமிஜி சுவாமி பிரம்மாநந்தரை அழைத்து உத்போதன் பொருட்டாகப் பணம் தேவைப்படுமாயின் சுவாமி திரிகுணாதீதருக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கு மாறு கட்டளையிட்டார்.

அன்று மாலையில் ஆகாரம் முடிந்த பின்னர் சுவாமிஜி உத்போதனத்தின் சார்பாகப் பின்வருவனவற் றைக் கூறினார்.

"உத்போதன் பத்திரிகை மூலமாக நாம் மக்க ளிடையே உறுதியோடு கூடிய உடன்பாட்டுக் கொள்கை களையே பரப்பவேண்டும். உறுதியற்ற எதிர்மறைக் கொள்கைகள் மனிதரைப் பலவீனராக்குவன. பெற் றோர் தமது மக்களை இடைவிடாது தொல்லைப்படுத்தி அவர்கள் ஒன்றும் படிக்க மாட்டாதவர்கள் என் றும், மட்டிகள் என்றும், சொல்லி வருவதனால் உண்மையிற் பிள்ளைகள் அவ்வண்ணம் ஆகிவிடு வதை நாம் காணுகின்றோம் அல்லவா? சிறுவர் களுக்கு நயமாகிய வார்த்தைகளைப் பேசி உற்சாகப்படுத் தினால், காலகதியிலே அவர்கள் திருத்தம் அடைவார் கள். சிறுவர்களுக்கு எம்முறை நலமாக இருக்கின்றதோ அம்முறையானது உயர் நோக்கங்களிற் சிறுவராயிருக் கின்ற வளர்ந்தவர்களுக்கும் பொருந்துவதாகும். உறுதி யோடு கூடிய உடன்பாட்டு எண்ணங்களைப் போதித் தால் மக்கள் மனித தத்துவத்தோடு வளர்ந்து பிறர் உதவியின்றி நிலையினிற்கப் பயின்று கொள்ளுவார்கள். மொழியிலும், இலக்கியத்திலும், பாடலிலும், ஏனைய கருமங்களிலும் ஜனங்கள் தமது எண்ணத்திலும் செய லிலும் விடுகின்ற பிழைகளை எடுத்துக் காட்டுவது

சரியல்ல ; இவற்றை எல்லாம் படிப்படியாகத் திருத்த முற எவ்வண்ணம் செய்யலாம் என்பதை அறிவுறுத்த வேண்டும் குற்றங்களை எடுத்துக் காட்டுவது ஒரு மனிதனுடைய மனத்திற்கு நோவைத் தருவதாகும் தாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என எண்ணியவர் களைப் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எவ்வண்ணம் தைரியப்படுத்தினர் என்பதையும், அதனுல் அவர்களது வாழ்க்கைப் போக்கே வேறுபட்டு நன்மையுற்றதையும் நாங்கள் நேரிலே கண்டிருக்கிறோம். அவர் போதிக்கும் முறை மிகச் சிறப்பு வாய்ந்தது.''

சுவாமிஜி சற்றுநேரம் தாமதித்துப் பின்னும் சொல்லுவார் : "யாவற்றினும் யாவரிடத்தினும் முகத்தைச் சுளித்துக்கொள்வதே சமய போதனை செய் வது என ஒரு பொழுதும் நினைத்து விடாதே. உடலைப் பற்றிய, மனத்தைப் பற்றிய, ஆத்மாவைப் பற்றிய, எல்லா விஷயங்களிலும் மக்களுக்கு நாங்கள் உறுதியான எண்ணங்களை அளிக்கவேண்டும். ஒரு பொழுதாவது எவர் மேலும் வெறுப்புக் காட்டுவது கூடாது. ஒருவரை ஒருவர் வெறுத்தமையினுற்றான் நீங்கள் இந்தக் கீழான நிலையை அடைந்து விட்டீர்கள். இப்பொழுது உறுதி பயக்கும் உடன்பாட்டெண்ணங்களை எல்லோரிடையி லும் பரப்பி மக்களை நாம் உயர்த்துதல் வேண்டும். முதலிலே இந்து சமயத்தாரனைவரையும் இம்மாதிரியாக உயர்த்துதல வேண்டும். அதன் பின்பு உலகம் முழுவ தையும் உயர்த்துதல் வேண்டும். இதற்காகவே ஸ்ரீ ராம கிருஷ்ணர் திருவவதாரம் செய்தார். அவர் ஒரு மனி தனுடைய இஷ்டத்துக்கு இயைந்த போக்கினை ஒரு பொழுதாவது அழித்ததில்லை. மிகவும் கீழான நிலையி லுள்ள மக்களுக்குத் தானும் உற்சாகத்தையும், நம்பிக் கையையும் தருகின்ற மொழிகளைக் கூறி அவர்களை உயர்வுபடுத்தினர். நாமும் அவர் வழியாக நின்று மக்களை விழிப்புறச் செய்து உயர்த்தவேண்டும். இது உனக்குத் தெளிவாகிறதா ?

"உங்களுடைய இதிகாசம், காவியம், புராணம், மற்றுமுள்ள சாத்திரங்கள் ஆகிய யாவும் மக்களைப் பயமுறுத்தும் தன்மையவே. 'நீங்கள் நரகத்துக்குப் போவீர்கள், உங்களுக்கு உய்வில்லை' என அவைகள் முழங்குகின்றன. இதனால் இந்தியாவில் பிராண சக்தியிலேயே சோம்பல் நுழைந்து விட்டது. ஆதலினால் எளிய மொழிகளிலே வேத வேதாந்தத்தின் உயர்ந்த கருத்துக்களை எல்லாம் நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். நல்லொழுக்க முறைகளைப் போதிப்பதனாலும் நன்னடையினாலும், கல்வியினாலும் சண்டாளனைப் பிராமணனுடைய நிலைக்கு உயர்த்த வேண்டும். வாராய், இந்த விஷயங்களை எல்லாம் உத்போதன் பத்திரிகையிலே எழுதி இளைஞர், முதியோர், ஆண், பெண் ஆகிய அனைவரையும் விழிக்கச் செய்வாய். அப்பொழுதுதான் நீ கற்ற வேதாந்தத்தினால் பயனுண்டென நான் அறிந்து கொள்ளுவேன். என்ன சொல்லுகிறாய்? இது செய்ய உன்னால் முடியுமா?"

சிஷ்: தேவரீருடைய ஆக்ஞையினாலும், ஆசீர்வாதத்தினாலும் நான் எதிலும் அநுகூலம் அடைவேன் என்று எண்ணுகிறேன்.

சுவா: மற்றொன்று; நீ உடலை வலிமைப் படுத்தும் முறைகளைப் பயின்றுகொள்ள வேண்டும். பிறருக்கும் பயிற்றவேண்டும். நான் தினந்தோறும் தேகாப்பியாசம் செய்து வருவதை நீ பார்க்கவில்லையா? காலையிலும் மாலையிலும் நெடுந்தூரம் உலாவு. சரீரத்தினால் நன்றாக உழை. உடலும் மனமும் ஒன்றுக்கொன்று பின்தாழாது வளர்ச்சியடைய வேண்டும். எல்லாக் கருமங்களுக்கும் பிறருடைய உதவியை வேண்டி நிற்பது சரியாகாது தேகத்தை வலுப்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் மக்களுடைய உள்ளத்தில் புகுமாயின் தாமாகவே அந்த விஷயத்தில் அவர்கள் முயலுவார்கள். அவசியம் என்பதை உணர்விக்கும் பொருட்

டாகவே இப்பொழுது நாங்கள் அவர்களுக்குக் கல்வி யறிவுறுத்த வேண்டும்.

(23)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: சுவாமி, தாங்கள் இந்த நாட்டில் உபந்நியாசஞ் செய்யாதிருப்பதேனோ? ஐரோப்பாவும், அமெரிக்காவும் தங்களது உபந்நியாசச் சண்டமாருதத்தால் அசைவுற்றிருக்கின்றனவே; இங்கு வந்து மௌனஞ் சாதித்துக்கொண்டிருக்கக் காரணம் யாதோ?

சுவா. இந்தத் தேசத்தில் முதற்கண் நிலத்தைப் பண்படுத்தல் வேண்டும்; பின்னர் விதையை நட்டால், அது முளைத்து நன்றாக வளரும். ஐரோப்பா அமெரிக்கா ஆகிய மேலை நாடுகளில், நிலம் செழிப்பாகவும் விதை வளரத்தக்க நீர்மையினதாகவும் இருக்கிறது. ஆங்குள்ளார் உலக போகாநுபவங்களில் வேண்டிய மட்டும் திளைத்து அவ்வனுபவங்கள் தம் உள்ளத்துக்கு அமைதியைத் தரா என்னும் உண்மையினை நன்றாக உணர்ந்து, அவற்றை விடுத்துப் பிறிதொன்றை நாடுதல் தகுதி யென்னும் எண்ணம் மேற்கொண்டவர்களாயிருக்கின்றார்கள். இந்த நாட்டிலோவென்றால் போகமுமில்லை, யோகமுமில்லை. போகத்தின்மேற் செல்லாது அடங்கிய மனத்தினை யுடையவனன்றோ யோக நூலைக் கேட்டு உணரத் தகுதியுடையவனாவான். நோய், இன்னல், துன்பம் இவற்றுக்கு உறைவிடமாகிய இந்த நாட்டில் உண்ண உணவின்றி, உடல் மெலிந்து, மன வுறுதி யற்றிருக்கிற மனிதருக்கு உபந்நியாசம் புரிவதால் வரக்கூடிய பிரயோஜனம் என்ன?

சிஷ்: அஃதெப்படியாகும்? நமது நாடு மற்றெப் பொருளினும் பார்க்கச் சமயத்தை மேலாகக் கொள்ளுகிற நாடு அன்றோ? ஏனையோரினும் பார்க்க நம்மவர் சமய உண்மைகளை இலகுவாகக் கிரகித்துக்கொள்ளக் கூடியவர்கள் அல்லவா? ஆதலினால், இத்தேசத்தார்

உள்ளங்கவர்ந்து உயிர்க்குறுதி பயப்பனவாகிய தங்களது மொழிகளைக்கேட்டு அவற்றால் ஆகவேண்டிய பயனை முற்றிலும் அடைவார்களென்பது எனது எண்ணம்.

சுவா : சமயநெறி இன்னதென்று சொல்லுகிறேன் கேட்பாயாக. பசியாகிய பேயை அகற்ற வழியறியாது நமது நாடு தத்தளிக்கின்றது. ஆதலால், முதலிலே, கூர்மாவதாரமாகிய சாமி அதாவது வயிற்றுச் சாமிக்குப் பூஜை போட்டுச் சாந்தப்படுத்த வேண்டும். இது செய்தாலன்றி வெறும் வார்த்தையினாற் பயனுண்டாகாது அந்நியர் இந்நாட்டிலுள்ள செழுமையாகிய பொருட்களை யெல்லாம் கொள்ளைகொண்டு போகிறார்கள்; வரம்பு கடந்து உணவுப் பொருட்கள் முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை யெல்லாவற்றுக்கும் மேலாக, அடிமைகளுக்கு இயல்பாகவுள்ள எரிச்சலானது நம்மவர்களை எலும்புவரையும் உறிஞ்சி யுட்கொண்டு விட்டது. ஆதலால் ஜனங்கள் உணவே எண்ணமாக உலைவுறாமல் முதற்கண் பசிப்பிணியை அகற்ற வேண்டும். பின்னர்ப் பிரசங்கம் முதலியன பயன்படுவனவாகும்.

சிஷ் : அதற்கு நாம் செய்ய வேண்டுவது என்ன?

சுவா : தங்களுடைய சுகத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், பிறருடைய நன்மைக்காகத் தங்களுயிரையும் கொடுக்க முன்னிற்பவர்களாய்த் துறவு என்னும் பூரணத்தினால் நிறைந்தவர்களாயுள்ள வாலிபர்கள் சிலர் முன்வர வேண்டும். அவர்களை வாலிப சந்நியாசிகளாகப் பயிற்றுவதற்காக நான் ஒரு மடம் ஏற்படுத்த எண்ணியிருக்கிறேன். பயிற்றப்பட்ட பின்னர், இவர்கள் வீடு வீடாகப் போய் ஏழை ஜனங்களோடு ஊடாடி ஜனங்கள் மேனிலைக்கு வரவேண்டியதற்காகச் செய்து முடித்தற்குரிய முயற்சிகள் இவை யிவை, செல்ல வேண்டிய வழியிது வென்று தெரியப் படுத்துவதோடு, மெல்லெலன்ற மொழிகளாலே தெளி

வாக, நம் சமய உண்மைகளை உணர்த்திவைக்க வேண்டும். ஜனங்களுட் பெரும்பாலார் செயலிழந்து தூங்குகிற நிலையிலிருக்கிறார்கள். சர்வகலாசாலை மூல மாகக் கொடுக்கப்படுகிற கல்வியானது மொத்த ஜனங் களில் நூற்றில் ஒன்று இரண்டு வீதத்தினருக்காவது சென்று சேர்வதில்லை; அப்படிக் கல்வி பெற்ற ஒருவர் இருவர் கூடத் தமது தேசத்துக்கு நன்மை செய்ய முற்படும் முயற்சிகளிற் சித்தி யடைவதில்லை பாவம்! என்ன செய்வார்கள்? அவர்கள் மீதுந் தவறில்லை. படிப்பு முடிந்து வந்ததும் தாம் எத்தனையோ குழந்தை களுக்குத் தந்தையராக விருக்கிறதைக் கண்டு எப் படியோ கெஞ்சி ஒரு குமாஸ்தா வேலை, ஆக மிஞ்சினால் ஒரு உதவி நீதிபதி வேலை ஏதாவது ஒன்று பெற்றுக் கொண்டு அமர்ந்து விடுகிறார்கள். இதுவே இவர்கள் கல்வியாற் பெற்ற பெரும்பேறு. குடும்பப் பாரஞ் சுமத்தப்பட்ட இவர்கள் அரும் பெருங் காரியங்களைச் செய்து முடிக்கவாவது, உயர்ந்த எண்ணங்களை எண்ணவாவது இயலாதவர்களா யலைகிறார்கள். தங் ளுடைய தேவைக்கே பணமில்லாத இவர்கள் பிறர்க் குபகாரஞ் செய்ய முன்வருவதெப்படி?

சிஷ்: பின்னர் நம்மவர் உயர்வதற்கு வழி யில்லையா?

சுவா: ஏனில்லை. இது சநாதன தர்மத்துக்கு உறைவிடமாகிய நாடு. தற்காலம் தாழ்வடைந்திருக்கிற தென்பது உண்மையே யெனினும், உலகத்தார் அதிச யிக்கத்தக்க உன்னத நிலையை யடையுமென்பதற் கையமில்லை. கடல் அலையானது எவ்வளவுக்குத் தாழ் கிறதோ அவ்வளவுக்கு உயரவும் வேண்டுமல்லவா?

சிஷ்: இந்நாடு எவ்வாறு உயர்ச்சியை யடையும்?

சுவா: நினது கண்களுக்குத் தோற்றவில்லையா? கீழ்வானம் வெளுத்துவிட்டது; இன்னுஞ் சிறிது நேரத் தினுட் கதிரவன் உதயமாய் விடுவான். நீங்களெல்லாரும் ஒருங்கு சேர்ந்து தோள் கொடுக்க வேண்டும்; உலக

சுகமே யனைத்துமென்று நினைத்து "எனது குடும்பம்", "எனது குடும்பம்" என்று எண்ணிக் கொண்டிருப்பதில் உள்ள சுகமென்ன? தேசத்தில் எவ்விடத்துக்கும் கிராமங் கிராமமாகப் போய் ஜனங்களைப் பார்த்துச் சோம்பலொழிந்து எழுந்திருங்கள் என்று சொல்ல வேண்டும். அவர்களுடைய நிலைமை யவர்களுக்கு உணர்த்திச் "சகோதரர்களே! விழியுங்கள்; எழுந்திருங்கள், இன்னும் எத்தனை காலம் தூக்கத்திலிருக்கப் போகிறீர்கள்?" என்று சொல்லுதல் வேண்டும். அவர்கள் தங்களுடைய நிலைமையைத் தாங்களே யெவ்வாறு சீர்ப்படுத்திக் கொள்ளலாமென்று அவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டும். சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிற மேலான உண்மைகளை எவரும் எளிதினுணரத் தக்க இலகுவான நடையில் எடுத்து உபதேசிக்க வேண்டும். இதுகாறும் பிராம்மணர்கள் சமய உண்மைகளைத் தங்களுக்கே சொந்தமான பொருளாக வைத்திருந்து விட்டார்கள்; காலாந்தரத்தில் வருகிற கிளர்ச்சியைத் தடைப்படுத்த அவர்களால் முடியாது. ஆதலாற் பிராம்மணரைப் போலவே ஏனையோருக்கும் சமயானுஷ்டானமும் சமய உண்மைகளும் உரியனவென்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டும். சண்டாளர் முதல் அனைவருக்குந் தீக்ஷை செய்து எல்லா அசுத்தங்களையுஞ் சுட்டெரிக்கும் வலிமை வாய்ந்த மந்திரங்களை அனைவருக்கும் உபதேசிக்க வேண்டும். இன்னும் சீவனுபிவிருத்திக்கு வேண்டிய வர்த்தகம், கைத்தொழில் முதலிய தொழிற்றுறைகளைப் பற்றி எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடிய நடையில் அறிவுறுத்த வேண்டும். இவ்வளவுஞ் செய்யமாட்டீர்களாயின் உங்களுடைய கல்வி கேள்விகளும், வேத வேதாந்த உணர்வும் குப்பையில் எறியத் தக்கனவேயாம்.

சிஷ்: இவையெல்லாஞ் செய்ய எங்களிடம் வலியில்லையே? சுவாமி! தங்களிடத்துள்ள சக்தியில் நூற்றிலொரு பாகமாவது எனக்கு உளதாயின் எனது ஜன்மம் சாபல்ய மடைந்ததெனக் கருதுவேன்.

சுவா : என்ன பேதைமை ; சக்தியும் பிறவும் தாமே வந்தடையும் ; வேலையிற் கைவிடுவாயாயின் தாங்கொணு அபார சக்தி யுன்னிடம் வந்தடைவதைக் காண்பாய். பிறர்க்காகத் தினைத்துணை யுழைப்பினும், பிறரது நன்மையைக் கருதினுலுங் கூடச் சிங்க பலத்துக்கு ஒப்பான பலம் இதயத்தி லுண்டாகுமன்றே ? நான் உங்கள் எல்லார் மேலும் அன்பு பாராட்டுகிறேன். ஆயினும் பிறர்க்கு உழைப்பதினுல் உங்களுக்கு மரணம் நேரிடினும் நான் அதை உவகையோடு பார்ப்பேனே யன்றி அவலப்படேன்.

சிஷ் : அப்படியாயின் எங்களுடைய ஆதரணையின் கீழிருக்கிறவர்கள் பாடு என்னவாகும் ?

சுவா : நீங்கள் பிறர்க்காக உயிரைவிட ஆயத்தமாயிருப்பீர்களாயின் உங்களுடைய ஆதரணையின் கீழிருப்பவர்களைக் கடவுள் கைவிட மாட்டார். "நன்மை புரிவோன் இன்னலடையான்" என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்திருப்பதை வாசித்ததில்லையா ?

சிஷ் : துறவு இன்றியமையாதது. துறவு இல்லாமல் ஒருவன் தன்னுடைய முழு இருதயத்தோடும் பிறர்க்காகப் பாடுபட மாட்டான். துறவி, எவரையும் ஒப்ப நோக்கி எல்லாரையுஞ் சேவிப்பதே தன் கடமையென்று கொள்ளும் இயல்பினை யுடையவன். எவரையும் ஒப்ப நோக்க வேண்டுமென்று நமது வேதாந்த சாஸ்திரம் உணர்த்தவில்லையா ? அப்படியாயின் ஏனையரினும் பார்க்க மனைவி மக்கள் உரியவர்கள் என்னும் எண்ணம் உன் உள்ளத்திலிருக்க வேண்டிய காரணமென்ன ? உன்னுடைய வாயிற் கடைப்புறத்திலே நாராயணன்றுனே ஓர் ஏழைப் பிச்சைக்காரன் உருவத்தோடு பசியினுல் வருந்திச் சாகுந்தறுவாயிலிருக்க அவனுக்கு ஒரு பிடி யன்னமுங் கொடுக்காது உனது மனைவி மக்களுக்கு ருசிகரமாகிய தின்பண்டங்களைக் கொடுத்தல் தகுதியாகுமா ? ஏன் இது மிருக சுபாவமாயிற்றே ?

சிஷ் : பிறர்க்கு உதவிபுரிய ஏராளமான பொருள் வேண்டுமே, அதற்கு நான் எங்குப் போவேன் ?

சுவா : ஏன், இயன்ற அளவிற் செய்யலாகாதா? வறியவர்க்கு வழங்கப் பொருளில்லாவிடின் அவர்களுடைய செவியில் ஓர் இனிய மொழியுரைத்தல் கூடாதா? அறிவாகிய பொருளில் ஒரு சிறிது கொடுத்தல் கூடாதா? இதற்கும் பணம் வேண்டுமா ?

சிஷ் : ஆம், சுவாமி, அப்படிச் செய்தல் கூடும்.

சுவா : "கூடும்" என்று வெறும் வார்த்தை சொல்வது போதாது. நீ செய்யக்கூடியது இதுவென்று செய்கையினாலே செய்து காட்டுவாயாயின் என்னிடம் வந்ததினாலே சிறிது நன்மை விளைந்ததென்பதை நான் உணர்ந்து கொள்ளுவேன். எழுந்திரு, கருமம் நிறைவேறுவதற்கு உதவியாகத் தோள்கொடுத்து நில். சீவியம் எத்தனை நாளைக்கு நிலைபெறப் போகிறது? உலகிற் பிறவி யெடுத்ததற்கு ஏற்ப ஓர் அறிகுறி விட்டுச் செல்ல வேண்டாமா? அல்லாவிடில் மரம் கல் முதலியவற்றுக்கும் உனக்குமுள்ள பேதந்தான் என்ன? அவையும் பிறந்து, அழிந்து நாசமாகின்றன. அவற்றைப்போலப் பிறப்பது மிறப்பதுந் தொழிலாயிருக்க விரும்பினால் அப்படிச் செய்துகொண் டிருக்கலாம். வேதாந்த உணர்வினால் வந்த மேலான பயனைச் செய்கையினாலன்றோ காட்டவேண்டும். "எல்லாரிடத்தும் அநாதியான சக்தியிருக்கிறதென்பதை எவர்க்கும் உணர்த்தி அதனை எழுப்பிவிட்டப் பார்ப்போம்; நீ மாத்திரம் முத்தியடைந்து என்ன செய்வாய்? அது சுயநலங் கருதலாகுமன்றோ? தியானத்தையும் முத்தியையும் வீசியெறி. நான் எந்த முயற்சியைச் செய்துமுடிக்க உன்னை யொப்புக்கொடுத்திருக்கிறேனோ, அந்த முயற்சியில் உன் உள்ளத்தையும் உயிரையும் முற்றிலுஞ் செலுத்து. (என்று இவ்வாறு சுவாமி மொழிந்த உயிர்குறுதி பயக்கும் மொழிகளைச் சிஷ்யனவன் மூச்சுவிடாது கேட்டுக் கொண்டிருக்க, சுவாமிஜி வாக்கு வன்மையோடும் உள்

ளத்தைப் பற்றிப்பிடிக்கும் உறுதிமொழிகளைப் பின்னும் பகரலாயினர்) முதற்கண் நிலத்தைப் பண்படுத்து; அதன்பின் அறநெறியைப்பற்றி உபந்நியாசஞ் செய்ய ஆயிரக்கணக்கான விவேகாநந்தர்கள் பிறப்பார்கள். அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டுவதில்லை நான் அநாதைப் பிள்ளைகள் விடுதி, பஞ்ச நீக்க முயற்சி முதலிய கைங்கர்யங்களில் தலையிடுவதைப் பார்க்கவில்லையா? ஆங்கில கன்னிகையாகிய நிவேதித சகோதரி இந்தியர்களுக்கு அளவிறந்த அன்பினோடும் எவ்வளவு சேவை புரிந்து வருகிறாள்! இந்தியர்களாகிய நீங்கள் உங்கள் தேசத்தினர்க்காகப் பாடுபடுதல் கூடாதா? எங்கேயாகிலும் கொள்ளை நோயாவது பஞ்சமாவது சம்பவிக்குமாயின் அங்குச் சென்று ஜனங்களுடைய துன்பத்தை நீக்க முயலவேண்டும். மிஞ்சிப் போனால் நன் முயற்சி செய்வதில் உயிரிழக்கவேண்டி வரும். அதனாலென்ன? உன்னைப்போல எத்தனை பேர் தினந்தோறும் கிருமி கீடங்களையொப்ப இறப்பதும் பிறப்பதுமா யிருக்கிறார்கள்! அதனால் உலகத்துக்கு வந்த ஏற்றத்தாழ் வென்ன? சாவே நிச்சயம், ஆதலால் மேலான நோக்கம் ஒன்றுக்காகச் சாவதன்றோ பெருமை? இந்த உண்மையை வீடு வீடாகச் சென்று உணர்த்துவாயாயின் உனக்கும் நன்மையுண்டு, தேசத்துக்கும் நன்மை புரிபவனாவாய். இனிமேல் வருங்காலத்தில், தேசம் முன்னேற்றமடைவது உங்கள்மேல் தங்கியிருக்கின்றது. நீங்கள் எல்லாரும் முயற்சியின்றிச் சும்மாவிருப்பதைப் பார்க்க என் மனம் வருந்துகின்றது. முழு மூச்சாக வேலை செய்யுங்கள். தரித்திராதீர்கள்—தினந்தோறும் மரணம் நெருங்கி வருகின்றது. எல்லாம் தானாக நடந்தேறிவிடும் என்று நினைத்துக்கொண்டு சும்மாவிருந்து விடாதீர்கள். சும்மா விருப்பதனால் ஒன்றும் நடந்தேறா தென்பதை மறந்து விடாதீர்கள்.

(24)

[இடம் . பேலூர்த் திருமடம். காலம் : 1896-ம் ஆண்டு.]

சிஷ் : கிருபாநிதியாகிய சுவாமி! ஞான மார்க்கத்துக்கும் பக்தி மார்க்கத்துக்கும் எவ்வாறு ஒற்றுமை காணுதல் கூடும்? பக்தி மார்க்கத்திற் செல்வோர் சங்கராச்சாரியார் என்னும் பெயரைக் கேட்டமாத்திரத்தே காதைப் பொத்திக்கொள்வதையும், ஞான மார்க்கத்திற் செல்வோர் பக்தர்கள் கண்ணீர் சொரிந்து இறைவனுடைய நாமத்தைச் சொல்லி யாடுவதும் பாடுவதுங் கண்டு அவர்கள் மூடரும் முரடரும் என்று சொல்வதையும் நாம் காண்கிறோ மல்லவா?

சுவா : ஞான மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய இரண்டுக்கும் இவ்வாறு வேற்றுமை தோன்றுவது ஆரம்பத்தில் மாத்திரமே. சிவபிரானுடைய பூத கணங்களுக்கும் ராமபிரானுடைய வானர கணங்களுக்கும் இடையில் நடந்த ஒரு சச்சரவைப்பற்றிய * ஒரு கதையை ஸ்ரீ ராமகிருஷ்ண பகவான் சொல்லக் கேட்டதில்லையா?

சிஷ் : ஆம், கேட்டிருக்கிறேன், சுவாமி!

சுவா : மேலான பக்திக்கும் மேலான ஞானத்துக்கும் வேற்றுமை கிடையாது. கடவுளை அன்புருவமாகக் காண்டலே மேலான பக்தியாகும்

---

* சிவபிரானுக்கும் ராமபிரானுக்கு மிடையில் ஒரு சிறு சண்டை ஏற்பட்டது. சிவபிரான் ராமபிரானுக்குக் குருவோ அன்றேல் ராமபிரான் சிவபிரானுக்குக் குருவோ என்ற வாக்குவாதமே சண்டைக்குக் காரணம். அவர்கள் சண்டையொழிந்து சீக்கிரத்திற் சிநேகிதராய் விட்டார்கள். சிவபிரானுடைய பூத கணங்களும் ராமபிரானுடைய வானரகணங்களுமோ வென்றுஞ் சண்டையை விட்டுவிடாமற் றொடர்பாகச் சச்சரவுப்பட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

இறைவனுடைய அன்பாகிய உருவத்தை எல்லா விடத்தும் எல்லாப் பொருளிலும் காண்பவன் பிறர்க்குத் தீங்கிழைத்தல் எங்ஙனமாகும்? இந்த நிலையை அடைவதற்குக் காம காஞ்சனத்தின் (பொன் பெண்ணின்) மேலுள்ள பற்று முற்றிலும் அகன்றுவிட வேண்டுமென்பதாகப் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார். மேலான பக்தி நிலையில் ஒருவன் தனது உடலையுங்கூட மறந்து போகிறான். பரஞான நிலையில் ஒருவன் எப்பொருளையுந் தானாகக் காண்கிறான். நான் என்ற அகங்காரம் முற்றிலும் ஒழிந்தாலன்றி இந்த நிலை கைகூடாது.

சிஷ் : அப்படியாயின் அன்பு நிலையே அறிவு நிலையாகின்றதன்றோ?

சுவா : ஆம், உண்மை ஞான மடைந்தவனுக்கன்றி ஏனையோருக்கு அன்பு நிலை கைகூடாது.

பிரம்ம சொரூபம் சச்சிதானந்தம் என்பதாக வேதாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றனவன்றோ?

சிஷ் : ஆம், சுவாமி.

சுவா : சச்சிதானந்தம் என்னும் மொழிக்கு உண்மையறிவின்பமென்பது பொருள்—சத் என்பது உண்மை உளதாந் தன்மை; சித் என்பது அறிவு; ஆனந்தம் என்பது இன்பம். பிரம்மம் "சத்" என்பதைப்பற்றி பக்தர், ஞானிகள் ஆகிய இரு பாலாருக்கும் கொள்கை வேற்றுமை யில்லை. பின்னர் எஞ்சிய இரண்டினுள் ஞானிகள், "சித்" உருவத்தைப் பாராட்டிக் கொள்ளுகிறார்கள். பக்தர் "ஆனந்த" உருவத்தைப் பாராட்டிக்கொள்கிறார்கள். சித்தைக் கண்ட மாத்திரத்தே ஆனந்தமும் காணப்பட்டதாகின்றது. ஏனெனிற் சித்தாவது ஆனந்த ரூபமாகிய அதுவே.

சிஷ் : அப்படியாயின் நம்முடைய பரதகண்டத்தில் மாறுபடு கொள்கையினரிருப்பதும் பக்தி மார்க்க நூல்களுக்கும் ஞான மார்க்க நூல்களுக்கு மிடையில்

வேறுபாடு கண்டு சண்டையிட்டுக்கொள்வதும் எதனுலே ?

சுவா : உண்மையான ஞானத்தையும் உண்மையான பக்தியையும் அடைவதற்கு ஆரம்பத்திலே அனுஷ்டிக்கவேண்டிய முறைகளிருக்கின்றனவே, அவற்றுள்ளே வேற்றுமையுண்டு ; அதனுற்ருன் சண்டை நிகழ்கின்றது. ஆனல் நன்ருக ஆலோசித்துப் பார், கருவி பெரிதா ? அன்றேற் காரியம் பெரிதா ? கருவியினும் பார்க்க முடிபாகிய காரியமே பெரிதென்பதிற் சந்தேகமில்லை. குணத்தாலும் மனவலிமையாலும் மனிதருக்கிடையே வேற்றுமை யிருக்கின்றபடியால் ஒரே காரியத்தைச் செய்துமுடிக்கக் கருவியாகிய முறைகள் பல இருத்தல் கூடும். செபமாலை கைக்கொள்ளுதல், தியானித்தல், ஆலயந்தொழுதல், யாகம் புரிதல் இன்னும் இவைபோன்றன வெல்லாம் முடிபல்ல ; கருவிகளே. மேலான முடிபோ பரபக்தியாகிய பிரம்ம ஞானத்தை யடைவது. ஆழ்ந்து யோசித்துப் பார்ப்பாயாகில் இவர்கள் எதைப்பற்றிச் சண்டை போட்டுக் கொள்ளுகிருர்கள் என்பது புலப்படும். ஒரு சாரார் "கிழக்குத் திசையை நோக்கியிருந்து கடவுளைத் தியானிப்பின் அவரைக் கண்டடைவாய்" என்ன, மற்ருெரு சாரார் "மேற்குத் திசையை நோக்கியிருந்து தியானித்தாலன்றி அவரைக் காணுதல் கூடா" தென மறுப்பர். இவர்களுட் கிழக்குத் திசைக் கொள்கையாளரின் முன்னேரொருவர் பல வருஷங்களுக்குமுன்பு அத்திசை நோக்கியிருந்து தியானித்துக்கொண்டிருத்தல் கூடும். அவர் வழி வந்த மாணக்கர்கள் இதனைப் பரவச் செய்வாராய் மற்ருெரு வழியானுங் காரியம் நடந்தேருதென்று சொல்வாராயினர். மேற்குத் திசைக் கொள்கையாளர் முற்பட்டு "அஃதெங்ஙனமாகும், இன்னர் மேற்குத் திசை நோக்கியிருந்து தியானித்துக் கடவுளைக் கண்டார், நாங்கள் கண்ணுற் கண்ட விஷயம் இது" என்பர். இவ்வாறு மாறுபடு கட்சியினர் பலர் உற்பத்தி

யாவார். ஹரி என்னும் நாமத்தை யுச்சரித்துப் பரபக்தியை யடைந்தவரொருவர் உளர். அவர் வாய்ச் சொல்லாக எழுந்த மேலைச்சுலோகம் சாஸ்திரங்களிற் காணப்படுகிறது.

ஹரேர் நாம ஹரேர் நாம ஹரேர் நாமைவ கேவலம்
கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிரன்யதா

அரியினுமம் அரியினுமம் அரியினுமம் அன்றியே
வருகதிக்குக் கலியில்வேறு வழிகளில்லை யில்லையே.

பின்னர் அல்லா என்னும் நாமத்தை யுச்சரித்து மேனிலையை யடைந்தாரொருவர் என்று வைத்துக் கொள்ளுவோம்; அவரது கொள்கையாகிய மதம் பரவத் தொடங்கும், பிறவு மிவ்வாறே. இவ்வித வணக்கங்களாலும் சமயானுஷ்டானங்களாலும் பெறப்படும் பயன் எதுவெது வென்பதை நாம் ஆராய வேண்டும். இவ்வாற்றலாவது சிரத்தைபெறுவதே நசிகேதனுடைய உள்ளத்திற் சிரத்தை யுண்டாயிற்றென்று உபநிஷதங் கூறும். சிரத்தை யென்னும் மொழியின் பொருளை ஆராயுங்கால் ஏகாக்கிரகம் என்னும் பதம் சிரத்தை என்பதை முற்றிலுங் குறிக்காது; ஏகாக்கிர நிஷ்டை யென்பது ஓரளவுக்குக் குறிக்கும். மனத்தை யொரு வழிப்படுத்தி நிலை குலையாது அன்பினோடு ஏதாவதொரு உண்மையைப் பற்றித் தியானம் செய்வாயாயின் அந்தத் தியானமானது ஏகமாம் சச்சிதானந்தமாய் நின்ற நிலையை நோக்கிப் படிப்படியாக ஈர்த்துச் செல்வதைக் காண்பாய். ஆதலின் இவ்வாறாகிய நிஷ்டைகளுள் ஒன்றைக் கைக்கொள்ள வேண்டுமென்று, ஞானமார்க்க பக்திமார்க்க நூல்கள் அறிவுறுத்துகின்றன. காலாந்தரத்தில் இவ்வுண்மைகள் உருவம் மாறுபட்டுத் தேசாசாரங்களாகின்றன. இது பாரத கண்டத்தில் மாத்திரமல்ல, உலகிலுள்ள ஜன சமூகங்கள் அனைத்திலும் நேரிட்டிருக்கின்றது. சாதாரண ஜனங்கள் விவேகமின்மையினால் இவ்வேறுபாடுகளை மேற்கொண்டு சண்டை போடுவாராயினர்கள். முடிவை

யறியார்கள்; இதனால் மதபேத முண்டாயிற்று. சண்டையுஞ் சச்சரவும் நடந்துகொண்டேயிருக்கின்றன.

சிஷ்: அப்படியாயின் உய்யும் வழிதான் எதுவோ, சுவாமி?

சுவா: முன்னுளிருந்த உண்மைச் சிரத்தையைத் திரும்பக் கொண்டுவருதல் வேண்டும். களைகளை வேரோடு பிடுங்க வேண்டும். பலவாகிய சமயங்களிலும் பலவாகிய மார்க்கங்களிலும் காலதேச வெல்லை கடந்த உண்மைகள் சிலவுள; அவற்றை மூடிச் சத்தில்லாத சரக்குகளாகிய கொள்கைகள் பல நிறைவு பெற்றிருக்கின்றன; இக் கொள்கைகளை யொழித்து நித்தியமான உண்மைகளைச் சனங்களுக்குக் காட்டுதல் வேண்டும். அங்ஙனம் செய்யின் நமது சமயமும் நமது தேயமும் மிகுந்த நன்மையை யடையும்.

சிஷ்: இதனை யெவ்வாறு செய்து முடிக்கலாம்?

சுவா: ஏன்? எல்லாவற்றுக்கும் முதலிலே பெரியோர் வழிபாட்டைக் கொண்டுவருதல் வேண்டும். நித்தியமாகிய உண்மைகளை அனுபவத்திற் கண்டுணர்ந்த மகா புருஷர்களுடைய சீவியத்தைச் சனங்களுக்குத் தெரிவித்து அவர்களைப் பின்பற்றி யொழுகல் வேண்டுமென்பதை யுணர்த்த வேண்டும். ஸ்ரீ ராமச்சந்திரர், ஸ்ரீ கிருஷ்ணர், மகா வீரர், ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்னோரன்னோரே இத் தேயத்திற்குரிய மகா புருஷராவார். இந்நாட்டில் ஸ்ரீ ராமச்சந்திரர் மகா வீரர் இவர்களுடைய வழிபாட்டைக் கொண்டுவர முயல்வாயா? ஸ்ரீ கிருஷ்ணனை வழிபடுமிடத்து பிருந்தாவன லீலா நிலையைப் புறக்கணித்துவிட்டுச் சிங்க கர்ச்சிதத்தோடு கீதையை யுபதேசித்த நிலையைக் கைக்கொண்டு வழிபடுதல் வேண்டும். இனி, எல்லா வல்லமைக்கும் முதலாக விருக்கும் ஜகன்மாதாவாகிய சத்தியைத் தினந்தோறும் வழிபடுகிற வழக்கத்தைக் கொண்டுவருதல் வேண்டும்.

சிஷ் : அப்படியாயின், ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனத்திற் கோபிகளோடு புரிந்த தெய்வ லீலை நல்லதில்லையா ?

சுவா : தற்காலத்திலிருக்கிற நிலையில் அந்த வழிபாடு உனக்கு ஒரு பயனையுந் தராது ; வேய்ங்குழலிசை முதலியன தேசத்தை மேலோங்கச் செய்யமாட்டா. பாதாதி கேசம் வரையும் ராஜசகுணம் நிறைந்த வீரவான்—சத்தியத்தை நிலை நிறுத்துவதற்காகத் தன்னுயிரையும் விடவல்ல வீரவான்—துறவாகிய கவசத்தோடு ஞானமாகிய வாளை யேந்திய வீரவான்—இத்தகைய வீரவானுடைய நிலையே இப்பொழுது வேண்டப்படுவது. சீவியமாகிய போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நின்று போர் புரிகிற வீரர்களாவோம் ; சீவியத்தை இன்பம் துய்க்கிற பூஞ்சோலை யென்றெண்ணிக் காதல் மேற்கொண்டுருகுங் காதலன் நிலையை விரும்போம்.

சிஷ் : அப்படியாயின், கோபிகள் கைக்கொண்ட மதுர நிலை குற்ற முடையதா ?

சுவா : நான் அப்படிச் சொல்லவில்லை. அது மிகவும் மேலான சாதனையே. ஆயினும், புலனுகர்ச்சியிலும் பொருள் குவிப்பதிலும் ஈடுபட்டுத் திரிகிற இக்காலத்தில் அம்மேலான நிலையை யுணர வல்லவர்கள் ஒரு சிலரேயாவார்.

சிஷ் : அப்படியாயின் இறைவனை நாயகனைக் கொள்ளும் மதுர பாவனைக் கொள்கையினர் செல்லும் மார்க்கம் சரியானதன்று ?

சுவா : "அன்று" என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அவர்களுட் சிலர் தக்கவர்களாயிருத்தல் கூடும். ஆனால் பெரும்பாலார் தாமச குணத்தினர் ; சோம்பல் நி றை ந் து பலமற்றிருப்பவர்கள். இத்தேசத்தை யெழுப்புதல் வேண்டும். மகா வீரனுடைய வழிபாட்டைக் கொண்டாடி வருதல் வேண்டும் ; சக்தி பூஜை நித்தியானுஷ்டானத்துக்கு வரவேண்டும் ;

ஸ்ரீ ராமச்சந்திரனை ஒவ்வொரு வீட்டிலும் வழிபட வேண்டும். இதுவே நன்மையடையும் மார்க்கம்; தேச நன்மைக்குகந்த வழியிதுவே, பிறிதொன்றுமில்லை.

சிஷ்: பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இறைவனுடைய நாமத்தைப் பலமுறையும் பாடிக்கொண்டிருப்பார் என்பதாகக் கேள்விப்பட்டேனே.

சுவா: ஆம், அவருடைய விஷயம் வேறு; அவருக்குஞ் சாதாரண மனிதருக்கும் ஒப்புவமை யுண்டா? எல்லாம் ஒரே முடிபுக்கு வருவன என்பதைக் காட்டுவதற்காக அவர் பலவாகிய கொள்கைகளைச் சாதனை பண்ணிக் காட்டியிருக்கிறார். நீ அல்லது நான், அவர் செய்த விஷயங்க ளெல்லாவற்றையுஞ் செய்தல் கூடுமா? நாங்களொருவரும் முற்றிலும் உணர்ந்து கொள்ள வில்லை. ஆதலினாற்றான் நான் அவருடைய மகிமைகளை யெடுத்துரைக்க முன்வருவதில்லை. அவர் உண்மையில் என்னவாக விருந்தார் என்பதை அவரே யறிவார்? அவரது சரீரம் மனுஷ சரீரந்தான்; ஆனால் ஏனைய குணங்களெல்லாம் வேறுபாடாகவே தோன்றின.

சிஷ்: சுவாமி தாங்கள் அவரை ஓர் அவதார புருஷராக நம்புகிறீர்களா?

சுவா: முதற்கண், அவதார புருஷர் என்பதனால் நீ விளங்கிக்கொள்வ தென்னவென்று சொல்.

சிஷ்: ஸ்ரீ ராமச்சந்திரர், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ கௌரங்கர், புத்தர், யேசுநாதர் இன்னோரன்னோரே அவதார புருஷர் என்று எண்ணுகிறேன்.

சுவா: நீ குறிப்பிட்டுச் சொன்ன இவர்கள் அனைவரினும் பார்க்க ஸ்ரீ ராமகிருஷ்ணர் உயர்ந்தவர் என்பதை நான் அறிவேன். வாளா நம்புவது பெரிதல்ல— நிச்சயமாக அறிவேன்.

[சற்றுத் தாமதித்துப் பின்பு சுவாமி சொல்லுவராயினார்:] தர்மத்தினை நிலை நிறுத்தும் பொருட்டுக் காலத்துக்குஞ் சனசமூக நிலைக்குந் தக்கபடி மகா புருஷர்

கள் தோன்றுவார்கள். இவர்களை மகா புருஷர்களென்றுவது அவதார புருஷர்களென்றுவது சொல்லலாம். இவர்கள் தங்கள் சீவியத்திலுல் உயர்வான நிலையை யுணர்த்துவார்கள் இவர்களைப் பின்பற்றிப் பலவகையான உயர் குணங்களையுடைய ஆண் மக்கள் தோன்றுவார்கள். மத பேதங்களுண்டாகிப் பரவும் காலாந்தரத்தில் இவை இழுக்குற, வேறு மகா புருஷர்கள் தோன்றுவர். இப்படி ஆற்றோட்டம் போலக் காலந்தோறும் நடந்துகொண்டிருப்ப தியல்பு.

சிஷ்: ஏன் தாங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் அவதார புருஷர் என்பதாக உலகுக்கு வெளியிட்டுப் பிரசங்கிப்பதில்லை. அதற்கு வேண்டிய சக்தியும் வாக்கு வல்லமையும் தங்களிட மிருக்கிறதே.

சுவா: மெய்தான், ஆயினும் உண்மை யுரைக்குமிடத்து நான் அவருடைய பெருமையில் ஒரு சிறிதுமாத்திர முணர்வேன். அவரைப்பற்றிப் பேசப் புகுமிடத்து நான் அறிந்த அளவில் அவரைப் புகழ்ந்து, எல்லையில்லாத அவருடைய பெருமைக்குக் குறைவுபாடு செய்து விடுவேனே என்று அஞ்சுகிறேன்.

சிஷ்: அவர் அவதார புருஷர் என்பதாகப் பலர் பிரசங்கிக்கிறார்களே.

சுவா: அப்படிச் செய்பவர்கள் தாங்களுணர்ந்த வரையிற் செய்யட்டும். நீயும் அவரை யுணர்ந்திருந்தா லப்படிச் செய்யலாம்.

சிஷ்: நான் தங்கள் பெருமையை யறியவல்லேனல்லேன். ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி என் பேசுவேன்? தங்கள் கிருபையைச் சிறிது பெற்றால் நான் எடுத்த இந்த ஜன்மம் சாபல்யமாயிற்றென்று எண்ணுவேன்.

(25)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1898-ம் ஆண்டு.]

சிஷ்: சுவாமிஜி, ஏகமாகிய பிரம்மமே உண்மைப் பொருள் ஆமாயின் பிரபஞ்சத்தில் இத்தனை பேதங்களிருப்பது ஏனோ?

சுவா: தோற்றப் பொருளாகிய பிரபஞ்சத்தினை நிலைக்களமாகக்கொண்டு நீ வினாவை வினவுகிறாயன்றோ? மாயா சொரூப பிரபஞ்சத் தோற்றத்திலிருந்து, விவேகத்தினாலும் விசாரணையினாலும் அத்வைத நிலையை அடைதல் கூடும். இப்பொழுதே அத்வைத நிலையில் நிலை பெற்றிருப்பாயானால் பேதக்காட்சி உனக்கு எங்ஙனம் தோற்றும்?

சிஷ்: உண்மையே; நான் அத்வைதத்தில் நிலை பெற்றிருந்தால், 'ஏன்' என்னும் வினா என்னிடத்தில் யாங்ஙனம் உண்டாகும்? நான் இவ்வினாவை வினவுகிறபடியால் பேதக்காட்சி உடையேன் என்பது பெறப்படுகின்றது.

சுவா: மிக நன்று; பேதக் காட்சியோடுகூடிய பிரபஞ்சத் தோற்றத்தின் வழியாக ஒன்றாந் தன்மையை விசாரிப்பது சாஸ்திரங்களிலே வியதிரேகி முறையாகிய நியாயம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இல்லாத தொன்றினை உள்ளதெனக்கொண்டு தருக்கமுறையினாலே அப்பொருள் இல்லாததேயென நிரூபிப்பது இம்முறையாகும். உண்மை யில்லாததை உண்மையெனக் கொண்டு பின்பு உண்மையைப் பெறும் முறையைப் பற்றி நீ பேசுகின்றா யல்லவா?

சிஷ்: என்னுடைய மனத்துக்குக் காணப்படுகின்ற இப்பிரபஞ்சமே உண்மையெனப் புலப்படுகின்றது. இதற்கு வேறானது இல்பொருளேயென எண்ணுகிறேன்.

சுவா: 'ஒன்றே உள்ளது; இரண்டாவது இல்லை' என சுருதி கூறுகின்றதே. என்றுமுள்ள ஒரு பொரு,

ளாகிய பிரம்மம் மாத்திரமே உண்மைப் பொருளாக விருந்தால் உன்னுடைய பேதக்காட்சி பொய்யாகு மல்லவா? சுருதி வாக்கியத்தில் உனக்கு நம்பிக்கை உண்டென்று எண்ணுகிறேன்.

சிஷ்: ஆம், என்னளவில் வேதத்தை மிக மேலான பிரமாணமாகக் கொள்ளுகிறேன். அங்ஙனமா யினும் வாதிக்குமிடத்து ஒருவன் வேதப்பிரமாணத் தைக் கொள்ளானாயின் வேறு வழியால் அவனுக்கு அறிவுறுத்த வேண்டியது அவசியமாகின்றதே.

சுவா: ஆம், அங்ஙனமும் செய்தல் கூடும். நீ இப்பொழுது சொல்லுகின்ற பேதக் காட்சி முற்றிலும் மறைந்துவிடுகின்ற ஒரு நிலை யுண்டு. அந்த நிலைமையை நான் என்னுடைய சீவியத்தில் அனுபவித்து அறிந் திருக்கிறேன்.

சிஷ்: எப்பொழுது அது நிகழ்ந்தது?

சுவா: தக்ஷிணேசுவரத்திலே கோவில் நந்தவனத் திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருநாள் என்னுடைய ஹிரு தயத்தைத் தொட்டார். உடனே மனைகளும், கதவு களும், பலகணிகளும், மாடங்களும், மரங்களும் சூரிய சந்திரரும் துகளாகப்போய் அணுஅணுவாகப் பிரிந்து போவதையும், அவை யெல்லாம் ஆகாசத்திலே ஈற்றில் அமிழ்ந்து விடுவதையும் கண்டேன். அதன்பின் ஆகாச மும் மறைந்துவிட்டது. அதனோடு நானென்னு மெண்ணமும் மறைந்துவிட்டது; அதன்மேல் யாது நடந்ததென்பது எனக்கு நினைவில்லை. முதலில் நான் அச்சமுற்றேன். அந்த நிலையிலிருந்து மீளுதலும், மனை கதவம் பலகணிமாடம் முதலிய பொருள்களெல்லாம் ஒவ்வொன்றாகத் தோற்றத் தொடங்கின. மற்றொரு முறை அமெரிக்காவில் ஒரு தடாகக் கரையிலே இவ் வகை யனுபவம் பின்னு மொருமுறை நிகழ்ந்தது.

இதனைக் கேட்ட சிஷ்யர் அதிசயமடைந்து மேலும் விசாரிப்பார்:—

இத்தகைய நிலை மூளையின் நரம்புகள் கலக்கமுற்றிருப்பதனால் வந்தெய்த மாட்டாதா? மேலும் இந் நிலையை அடைவதனால் எய்துதற்குரிய ஆனந்தம் எது வென்று எனக்கு விளங்கவில்லை.

சுவா: மூளையின் கலக்கமா? நோயிலிருந்து எழுகின்ற பிதற்றல் நிலையல்ல; குடிவெறியினா லெய்திய மாறாட்ட நிலையுமல்ல; பல்வேறு வகையான சுவாஸப் பிரயாசங்களால் வருகின்ற மயக்கத் தோற்றமுமல்ல. சுகமும், அறிவும் பூரணமாக நிறையப் பெற்றிருக்கின்ற மனிதனாலே அந்நிலை அடையப்படுகின்றது. முன்னாளி லிருந்த ஆசார்யர்களும், ரிஷிகளும் அநுபூதியாற் கண்டறிந்த முடிபுகளோடு அது ஒத்திருக்கின்றது.

"இனிப் பிற காரணங்க ளொருபக்க மிருக்க என்னை மூளை பிசகிய மனிதனென்று எண்ணுகிறாயோ?" எனச் சுவாமி புன்னகையோடு மொழிந்தார்.

சிஷ்: இல்லை, இல்லை. நான் அவ்வெண்ணம் கருதவில்லை. சாஸ்திரங்களிலே அத்துவித அனுபவத்தைப் பற்றிய உதாரணங்கள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. அதுமாத்திரமன்றித் தேவரீருடைய சொந்த அனுபவமும் சுருதி மொழியோடும் சாஸ்திரங்களோடும் ஒத்திருக்கிறது. அப்படியிருக்க அது பொய்யென்று நானெப்படித் துணிந்து கூறுதல் கூடும்? ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளும் அந்த நிலையை அனுபவத்திலடைந்து 'பிரபஞ்சம் எங்கோ மறைந்துவிட்டது?' என்று இத் தகைய வாக்கியங்களைக் கூறினார்.

சுவா: சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருப்பதும் அச்சத்தை நீக்கிப் பிறப்பிறப்பென்னும் கட்டினை முற்றிலும் உடைத்துவிடுவதுமாகிய பிரம்ம சாக்ஷாத்காரம், இந்த ஒருமை அனுபவ அறிவேயென அறிந்துகொள்வாயாக இந்தப் பேரானந்தத்தை ஒருமுறையாவது உணர்ந்தவர் இவ்வுலகத்தின் இன்ப துன்பங்களினாலே ஒருபொழுதும் அல்லலுறுவதில்லை. கீழான காம காஞ்

சனங் (பெண்ணாசை பொன்னாசை)களிலே பந்தமுற்ற மனிதர் இந்தப் பிரம்மானந்தத்தை அனுபவிக்க மாட்டார்கள்.

சிஷ் : நாங்கள் பரப்பிரம்ம வஸ்துவோடு ஒன்றுந் தன்மையராயின் அந்த அனுபவத்தை யடையாது வீணே பயனற்ற காம காஞ்சனமென்னும் வலையிற் சிக்குண்டு மீட்டுமீட்டும் மரணத்தின் வாயிற் படுவதேனே?

சுவா : மனிதனானவன் அத்தகைய ஆனந்தத்தை இச்சிக்கவில்லை என்பதுபோலப் பேசுகிறாய். ஊன்றி யாலோசித்துப் பார்ப்பாயாயின் யாவர் எதனைச் செய்கின்றார்களோ அதுவெல்லாம் அப்பரமானந்தத்தை அடையும் நோக்கமாகவே அவர்களால் செய்யப்படுகின்றது. ஆனால் அவர்களெல்லாம் அதனை உள்ளவாறு உணர்வதில்லை. ஆதலினால் உண்மையைத் தெரிந்து கொள்வதில்லை. பிரம்மா முதலாக ஸ்தம்ப மிறுதியாக எல்லாரிடத்திலும் அந்தப் பரம சுகமானது பூரணமாக நிலை பெற்றிருக்கிறது. நீயும் வேறுபாடற்ற அந்தப் பிரம்மமேயாம். உண்மையிலே நீ அதுவே யென்பதாக நினைப்பாயாகில் இந்த க்ஷணமே நீ அந்தப் பேரானந்த நிலையை அடைவாய். பிரத்யக்ஷக் காட்சியில்லாமையினாலே குறைவு வந்து எய்துகிறது. நீ உத்தியோகம் பார்ப்பதும் உன்னுடைய மனைவி பொருட்டாகக் கஷ்டப்பட்டு உழைப்பதும் அந்தப் பரம சுகமாகிய பிரம்மானந்தத்தை அடைவது உன்னோக்கமெனக் காட்டுகிறது. மீட்டும் மீட்டும் மாயையின் வலையினுட் சிக்கியும், துன்பத்தினாலும் மிடியினாலும் இடர்ப் பட்டும் அலைவுற்றவன் ஒருவன் அந்தர்முகமாக நோக்கித் தன்னுடைய உண்மை நிலையை அறிய முயற்சிப்பான். இருதயத்திலே இந்தப் பரம சுகானந்தம் அமைந்திருக்கிறபடியினாற்றான் மனிதன் ஒன்றின்பின் ஒன்றாக இடருற்றனன்றா உண்ணிறைந்த தனது ஆத்மாவை நோக்குகிறான். ஒவ்வொருவருக்கும் இவ்வண்ணம் நோக்குகிற காலம் வரும். சிலருக்கு இப்

பிறவியில் வரும். வேறு சிலருக்கு ஆயிரம் பிறவிகளுக்குப் பின் வரும்.

சிஷ் : குருவினுடைய ஆசீர்வாதத்திலும் ஆண்டவனுடைய அனுக்கிரகத்திலும் அது தங்கியிருக்கிறது.

சுவா : ஆண்டவனுடைய பேரருளாகிய காற்றானது இடைவிடாமல் வீசிக்கொண்டிருக்கிறது. நீ உன்னுடைய பாயை விரிப்பாயாக. (பாய் விரிக்கப்பட்ட கப்பலே, அடிக்கும் காற்றினுற் பயன்பெறும் என்பது பற்றி.) எத்தொழிலைச் செய்யும்போதும் சிந்தை முழுவதையும் ஒருவழிப்படுத்தி அத்தொழிலின்மீது கவனம் செலுத்துவாயாக. "நான் சச்சிதானந்த ரூபமாகிய பரம்பொருளோடு ஒன்றுபட்டவன். எனக்கு அச்சமெங்கே, கவலை யெங்கே? இந்த உடலும் மனமும் புத்தியும் அழிந்துபோகும் தன்மையன. இவற்றுக்கெல்லாம் அப்பாலாகி இருக்கின்றவன் நான்" என்று இரவு பகல் சிந்திப்பாயாக.

சிஷ் : இப்படிப்பட்ட எண்ணங்கள் எப்போதாவது ஒருமுறை தோற்றுகின்றன. ஆனால் அவை விரைவில் மறைந்துவிடுகின்றன. அதன்பின் மனமானது பலவகைப்பட்ட பயனற்ற காரியங்களைச் சிந்திக்கின்றது.

சுவா : ஆம், ஆரம்பத்தில் அப்படித்தானிருக்கும். ஆனால் வரவர உயர் நிலைமை அடையலாம். ஆயினும் முதலிலிருந்து மனத்திலே நிறைந்த ஆர்வமிருக்கவேண்டும். "நான் என்றும் பரிசுத்தன், எல்லாம் அறிபவன், என்றும் பந்தங்களிலிருந்து விடுபட்டவன்; தீங்கான காரியங்களை நான் எப்படிச் செய்தல் கூடும்? சாதாரண மனிதர்களைப்போல அற்பமான காம காஞ்சனங்களினுல் நான் மயக்கப்படுவேனே?" என்று இத்தகைய எண்ணங்களினுலே மனதை வலிமைப்படுத்துவாயாக. இதனுல் உண்மையாகிய நன்மை வந்தெய்தும்.

சிஷ் : ஒரே ஒரு வேளையில் மனவலிமை வருகிறது. என்றாலும் அதன் பின்னர் நீதிபதி உத்தியோகத்துக்குரிய பரீக்ஷைக்குச் செல்லுவேனென்றும் அதன் பின்னர் ஐசுவரியத்தோடும் பேரோடும் புகழோடும் சந்தோஷமாய் வாழ்வேன் என்றும் எண்ணுகிறேன்.

சுவா : இத்தகைய எண்ணங்கள் மனத்தில் வந்தால் விவேகத்தினாலே நித்தியப் பொருளிதுவென்றும் அநித்தியப் பொருளிதுவென்றும் உன்னுள்ளே ஆராய்ந்து பார். நீ வேதாந்த சாஸ்திரத்தை அப்பிய சிக்கவில்லையா? நீ நித்திரை செய்யும்பொழுதும் விவேகம் என்னும் வாளை உனது தலையணைக்குச் சமீபமாக வைத்துக்கொள்; கனவிற்றானும் இச்சை வந்தெய்திவிடக்கூடாது. அத்தகைய வல்லமையான எண்ணங்களை அப்பியசித்தால் படிப்படியாகத் துறவு வந்தெய்தும். அப்பொழுது மோக்ஷ வீட்டின் வாயில்கள் உனக்குத் திறக்கப்படுவனவாகும்.

சிஷ் : அப்படியாயின், சுவாமிஜி, பக்தியைப் பற்றிக் கூறும் வாக்கியங்கள், அளவு கடந்த துறவினாலே இரக்கத்தோடு கூடிய உணர்ச்சிகள் அழிந்துவிடுகின்றன வென்று கூறுகின்றனவே.

சுவா : இப்படிப்பட்ட எண்ணங்களை வெளிப்படுத்துகிற வாக்கியங்களைத் தூர எறிந்து விடுவாயாக. புலனுகர்ச்சிப் பொருள்களின்மேல் அருவருப் புண்டாகி வெறுக்கப்படவேண்டிய காம காஞ்சனங்களை அறவே விட்டொழித்துத் துறவு நிலையில் நின்றாலன்றி நூறு பிரம்ம கற்பங்களிலும் மோக்ஷ வீட்டை அடைதல் கூடாது என்பதை அறிந்துகொள்வாயாக. ஆண்டவனுடைய திருநாமத்தை ஸ்மரணை செய்வதும் தியானத்திலிருப்பதும் பூசை செய்வதும் ஓமாக்கினியிலே ஆகுதி செய்வதும் அரிய தவங்களைச் செய்வதும் உண்மையாகிய தியாக நிலையை அடையும் பொருட்டேயாம். தியாக நிலையை அடையாதவன் மோக்ஷத்தைப் பெற முயற்சிப்பதும் நங்கூரம் விட்டிருக்கிற ஓடத்தின்

மீதிருந்து தண்டுகளை வலிப்பவனுடைய செயலுக்கு நிகராகும். புத்திர சந்தானத்தாலல்ல, ஐசுவர்யத்தினுலல்ல; தியாகத்தினுல் மாத்திரமே ஒரு சிலர் அழியா இன்பத்தை யடைந்தார்கள்.

சிஷ்: தேவரீர் அப்படிக் கூறுவதாயின் எங்கள் கதி அதோகதிதான்.

சுவா: எதற்கு அஞ்சுகிருய்? அச்சமற்றிரு! அச்சமற்றிரு! அச்சமற்றிரு! நாகமஹாசயரைக் கண்டதில்லையா? இல்லற வாழ்க்கையி லிருக்கும்பொழுது தானே அவர் சந்நியாசியினும் மேற்பட்டிருக்கவில்லையா? இது மிக அபூர்வம். அவரைப் போன்றவர்களைக் காண்பதரிது. யாரேனும் ஒருவன் இல்லறவாழ்க்கையில் இருக்க விரும்பினுனுயின் நாகமஹாசயரைப் போல இருப்பானுக. கிழக்கு வங்காளத்தின் ஆத்மிக ஆகாயத்திலே அவர் ஒளி வீரிக்கும் சூரியனைப்போல விளங்குகிருர். அந்தப் பாகங்களிலுள்ளவர்கள் அவரைப் போய்த் தரிசிக்கும்படி சொல்லுவாயாக. அதனுல் அவர்களுக்குப் பெருநன்மை உண்டாகும்.

சிஷ்: ஸ்ரீ ராமகிருஷ்ண பகவானுடைய பூலோக தெய்வ நாடகத்தில் நாகமஹாசயர் தாழ்மையே உருவாக விளங்குகிருரென்று எனக்குத் தோற்றுகிறது.

சுவா: ஆம்; சந்தேகமின்றி அப்படியே! அவரை ஒரு முறை போய்ப் பார்க்கவேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன். நீ என்னேடு வருகின்ருயா? மழைக்காலததிலே வயல்களிலே நீர் நிறைந்து வெள்ளம் பரவி யிருப்பதைப் பார்க்க நான் விரும்புகிறேன். நீ அவருக்குக் கடிதம் எழுதுகிருயா?

சிஷ்: நிச்சயமாகவே நான் எழுதுகிறேன். தேவரீரைப்பற்றிக் கேள்விப்படும் பொழுது அவர் எல்லையற்ற ஆனந்தத்தினுலே உன்மத்தராகின்ருர்; தேவரீ

ருடைய திருப்பாதத்தில் படிந்த துகள் படிவதினாலே கிழக்கு வங்காளம் பரிசுத்த ஸ்தலமாகும் என்று அவர் கூறுகிறார்.

சுவா: ஸ்ரீ ராமகிருஷ்ணதேவர் 'நாகமஹாசயர் ஜ்வலிக்கின்ற அக்னி' என்று கூறியதை நீ அறிவாயா?

சிஷ்: ஆம்; கேள்விப்பட்டிருக்கிறேன்.

பின்பு சுவாமிஜியினுடைய கட்டளைப்படி சிஷ்யர் பிரசாதம் உண்டு மாலைக்காலத்தில் கல்கத்தாவுக்குத் திரும்பிச் சென்றார். போகும்பொழுது அருட்குரவருடைய திருவாயினின்றும் தமது செவியில் விழுந்த "நான் பந்தமற்றவன்", "நான் பந்தமற்றவன்" என்னும் அஞ்சாமை வாக்கியத்தை அவதானித்துக் கொண்டு வழிச் சென்றார்.

(26)

[இடம்: பேலூர்த் திருமடம் காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: சுவாமி, காமகாஞ்சனம் ஆகிய பெண்ணைப் பொன்னைப் யிரண்டையும் அகற்றினாலன்றிச் சாதகன் உண்மை யனுபவத்தையடையு மார்க்கத்திற் சிறிதும் முன்னேற்ற மடையான் என்பதாக ஸ்ரீ ராமகிருஷ்ண பகவான் சொல்லியிருக்கின்றாரே, அங்ஙனமாயின் இல்லறத்தானுடைய கதி யெவ்வாறாகும்? அவனுடைய முழு மனமும் இவ்விரண்டையும் பற்றியிருக்கின்றதன்றோ?

சுவா: ஒருவன், இல்லறத்தானாயினுஞ்சரி, சன்னியாசியாயினுஞ் சரி, பொன்னைப் பெண்ணையாகிய இரண்டினையுங் களைந்திலனேல், அவனுடைய உள்ளம் கடவுள்பாற் செல்லாதென்பது உண்மையே. மனம் இவற்றிற் சிக்குண்டிருப்பின் உண்மைப் பக்தியும், மனத்திடமும், சிரத்தையும் ஒருபோதும் வரமாட்டாதென்பதை யுண்மையாக அறிந்துகொள்வாயாக.

சிஷ் : அப்படியாயின், இல்லறத்தார் என்னுவார்கள் ? அவர்கள் போக வேண்டிய வழியென்ன ?

சுவா : அற்ப ஆசைகளை யனுபவித்துத் தீர்த்தலும், சற்றுப் பெரிதா யிருப்பனவற்றை விவேகத்தினுற் களைதலுமே வழியாகும். துறவின்றிக் கடவுளை யடைய முடியாது. **யதி ப்ரஹ்மா ஸ்வயம் வதேத்** பிரம்ம தேவன் ருனே வேறு விதமாக ஆக்ஞாபிப்பாறுயினும்.

சிஷ் : ஆனுல், ஒருவன் சந்நியாசியான மாத்திரத்தே எப்பொருளையுந் துறக்கின்ற துறவு வந்துவிடுகிறதா ?

சுவா : சந்நியாசிகள் உண்மைத் துறவை யடையப் பிரயத்தனப் படுகிருர்கள். இல்லறத்தாரோ வென்ருல் நங்கூரம் போட்டிருக்கிற தோணியை வலித்துக் கொண்டிருக்கும் ஓடக்காரரை யொத்திருக்கிருர்கள். விஷயானுபவத்திலிச்சை யெப்போதாவது குறைகிறதா, அது வரவரக் கூடுகிறதன்ருே ? **பூய ஏவாபி வர்த்ததே**——

சிஷ் : நெடுங்காலம் புலனுகர்ச்சி செய்தபின்னர் உலக இன்பத்தில் வெறுப்புத் தோன்ருதா ?

சுவா : எத்தனை பேருக்கு அப்படி யுண்டாகின்றது? புலனுகர்ச்சியில் பொருள்களோடு இடைவிடாது சம்பந்தப்பட்டிருப்பதனுல் மனம் அழுக்கடைந்து அவற்றில் நிலைபெற்ற தன்மையதாய் வந்து விடுகிறது. துறவே பிரதானம், துறவே பரம ரகசியம், துறவே உண்மை யனுபவத்தை யடைவதற்கு மூலமந்திரம்.

சிஷ் : ஆயினும் **க்ருஹேஷு பஞ்சேந்த்ரிய நிக்ரஹஸ் தப :** "மனைவி மக்களோடு இருக்கும்பொழுது பஞ்சேந்திரியங்களை யடக்குவதே தபசு" என்றும், **நிவ்ருத்த ராகஸ்ய க்ருஹம் தபோவனம்** "இச்சையை யடக்கினவனுக்கு இல்லமே தபோவனம்" என்றும் அறிஞர்கள் சொல்லியிருக்கிருர்களே.

சுவா : தங்களுடைய வீட்டிற் குடும்ப சமேதரா யிருந்துகொண்டு காமகாஞ்சனத்தைத் துறக்கிறவர்கள்

மகான்கள்தான். ஆனால், அப்படிச் செய்யத்தக்கவர்கள் எத்தனை பேரிருக்கிறார்கள் ?

சிஷ் : ஆனால் சந்நியாசி ஆவாரெல்லாம் காமகாஞ்சனத்தை முற்றிலுந் துறக்கத் தக்கவர்களா ?

சுவா : நான் சற்று முன்பாகச் சொன்னது போலச் சந்நியாசியாவார் தாம் அடைய வேண்டிய இலக்கு இதுவெனவறிந்து அதைத் தேடும் மார்க்கத்திற் பிரவேசித்திருக்கிறார்கள். இல்லற நிலையாரோ வென்றால் இவ்விரண்டு ஆசையினாலும் வருகிற தீமையை யுணராதாராய் ஆத்ம ஞானத்தை யடைய முயற்சி செய்யாதவராய், ஞானத்தை யடையப் பொன்னாசையையும் பெண்ணாசையையும் களைய வேண்டும் என்னும் எண்ணந்தானும் இல்லாதவரா யிருக்கிறார்கள்.

சிஷ் : ஏன், சுவாமி, எத்தனையோ இல்லறத்தார் ஞானத்தை யடைய முயற்சிக்கிறார்கள்.

சுவா : ஆம் அப்படிச் செய்பவர்கள் காலாந்தரத்தில் துறவு நிலையைக் கைக்கொள்ளுவார்கள். காமகாஞ்சனத்திலுள்ள பற்று அவர்களுக்கு வரவரக் குறைந்துபோம். "அவசரமென்ன ? உரிய காலத்தில் வருந்தானே" யென்று பின்போடுபவர்களுக்கும் ஆத்ம ஞானத்துக்கும் வெகு தூரம். "இந்தச் சீவியத்தில், இந்த நிமிஷமே யுண்மையை யுணர்வேன்" என்பவனே தீரன். அப்படிப்பட்ட வீரர்கள் அடுத்த நிமிஷமே துறவு கைக்கொள்ள ஆயத்தமா யிருக்கிறார்கள். இவர்களைப் பற்றியே **யதஹரேவ விரஜேத் தகஹரேவ ப்ரவ்ரஜேத்** "எப்பொழுது உலகத்துப் பொருள்களில் வெறுப்புத் தோன்றுகிறதோ அந்த க்ஷணமே அவற்றைத் துறந்து சந்நியாசியாகுக" என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

சிஷ் : ஒருவன் இறைவனை நோக்கிப் பிரார்த்திப்பானாயின் அவருடைய கருணையினால் இந்தப் பற்றுகளெல்லாம் அகன்றுபோம் என்பதாகப் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லவில்லையா ?

சுவா : ஆம் சந்தேகமின்றி, அவருடைய கருணையி னால் அப்படியாகும். ஆயினும் அந்தக் கருணையைப் பெறுவதற்கு ஒருவன் திரிகரண சுத்தனாகவிருக்கவேண் டும்.

சிஷ் : மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றையும் சுத்தி செய்தவனுக்கு இறைவனுடைய கருணை தானெ தற்கு? அவன் தனது ஆற்றலினாலே ஞானமார்க்கத் திற் செல்வானன்றோ?

சுவா : ஆத்ம ஞானத்தையடைய உளமொத்து முயற்சிப்பவனுக்கு இறைவனுடைய கருணை உண்டு. சோம்பற்றனமாக முயற்சியின்றி யிருப்பவனுக்கு அவரு டைய கருணை யொருபோதும் வராது.

சிஷ் : எல்லாரும் நன்மார்க்கத்தை விரும்புகிறார்க ளெனினும் மனமானது ஏதோ காரணத்தினாலே தீமை யையே விரும்புகின்றது. எல்லோரும் பூரணத்துவத்தை யடையவும், கடவுளைக் காணவும், நன்மார்க்கத்தினடக்க வும் விரும்புகிறார்களல்லவா?

சுவா : அவ்வித விருப்பமுள்ளவர்கள் மேனிலையை யடைய முயலுகிறார்கள். ஆதலினால், இறைவனுடைய கருணையைப் பெறுகிறார்கள்.

சிஷ் : பெரியோரைப்பற்றிய புராணக் கதைகளில் தம் வாழ்நாளெல்லாம் சிற்றின்ப போகாநுபவங்களிற் கழித்தார் என்றும் பலர் பக்தியோ பிற சாதனையோ இன்றிக் கஷ்டப்படாது கடவுளை யடைந்தார்களென் றும் சொல்லியிருக்கிறதே, இஃதெங்ஙனமாகும்?

சுவா : இவர்கள் நீண்ட காலஞ் சிற்றின்ப போகங் களி லாழ்ந்திருந்தமையின், அவற்றின்மேற் கடுவெறுப் புண்டாகி மனமலைவுற்றுத் திருவருளாகிய சாந்தமின்றி யொருகணப்பொழுதும் ஆற்றற்கரியராய்ப் பேரின்பத்தை விழைந்து நின்றமையின் இறைவனும் இவர்களுக்கு அருள் வழங்கினார். இத்தகையினர் தாமசத்திலிருந்து உடனே சத்துவத்தை யடைந்தனர்.

சிஷ் : ஆதலின் அவர்கள் சென்ற பாதை யெதுவாயிருப்பினும் அவர்களும் கடவுளை யடைந்தவர்கள் தானே!

சுவா : ஆம், அதற்குஞ் சந்தேகமா? ஆயினும் மாளிகைக்குட் செல்லுவோர் பிரதானவாயிலூற் புகுவதன்றிப் பின் புறத்திலூற் போகவேண்டுமோ?

சிஷ் : சந்தேகமின்றி யுண்மைதான்; ஆயினும் இறைவனுடைய கருணையால் மாத்திரமே யவரையடைதல் கூடுமென்னும் உண்மை இதனால் ஸ்தாபிக்கப்படுகின்றதன்றோ?

சுவா : கூடுமென்பது மெய்; ஆனால் அடைபவர் தொகை யெவ்வளவு அற்பம்!

சிஷ் : புலன்களை யடக்கிக் காமகாஞ்சன ஆசையைத் துறந்து கடவுளையடையக் கருதுபவர் தம்முயற்சியை மேற்கொண்ட ஒரு சாராரெனவும், இறைவனுடைய திருநாமத்தை மனனம் பண்ணி அவருடைய அருளினாலே பற்றற்று மேனிலையை யடைவார் மற்றொரு சாராரெனவும் எனக்குத் தோன்றுகின்றது.

சுவா : ஆம், இப்படி யிரண்டுவிதமாக நோக்கலாம். முன்னையது ஞானமார்க்கம்; பின்னையது பக்திமார்க்கம். இரண்டினும் துறவேவேண்டிய பொருளாகவிருக்கிறது.

சிஷ் : ஆம், சந்தேகமில்லை. ஆயினும் இறைவனுடைய கருணைக்கு ஒரு எல்லையிருத்தல் கூடாதெனவும் அதற்கு நியதியின்றெனவும், நியதியுண்டாயின் அது கருணையாகாதெனவும், அருள்நிலை நியதிகடந்ததெனவும் ஸ்ரீ கிரீஷ் சந்திரகோஷ் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

சுவா : கிரீஷ் சொன்ன அந்த நிலையில் நாம் உணர்ந்து கொள்ளாத உயர்வான பிரமாணம் இருத்தல் கூடும். கால, தேச, நியதி கடந்த நிலையை யுரைப்பன அம்மொழிகள். அந்த நிலையை யடைந்த பின்னர்க் கருணை புரிபவர் யார்? கருணை புரியப்படுபவர் யார்?

நியதி யாது? பத்தி செய்வோனும் பத்தி செய்யப்படும் பொருளும், தியானிப்போனும் தியானிக்கப்படும் பொருளும், அறிவோனும் அறியப்படும் பொருளும் அந்த நிலையில் ஒன்றுகின்றன. அதை அருளென்றாலுஞ் சரியே; பிரம்மமென்றாலுஞ் சரியே. அது ஏகமாய் வேறுபாடில்லாத பொருள்.

சிஷ்: கிருபா நிதியாகிய சுவாமி, தங்களுடைய திருவாயிலிருந்து இந்த மொழிகளைக் கேட்டு வேத வேதாந்தத்தின் சாரத்தை நன்குணர்ந்து கொண்டேன்; இந்நாள் வரையுங் கேட்டதெல்லாம் பயனற்ற வெறுஞ் சொற்களேயாயின.

(27)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1898-ம் ஆண்டு.]

சிஷ்: மனிதனிடத்திலே ஆத்மீக வளர்ச்சி யுண்டாவதற்கும் அவனுண்ணுகிற உணவிற்கும் ஏதாவது சம்பந்தமிருந்தால் தெரிவித்தருள வேண்டுமென்று தேவரீரை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சுவா: ஆம்; அத்தகைய சந்தர்ப்பம் ஏறக்குறைய உண்டு.

சிஷ்: மச்ச மாமிச முண்ணுவது அவசியமா, தகுதியா?

சுவா: ஆம், என் மைந்தனே! அவற்றை உண்பாயாக. அதனாலேதும் தீங்கு விளைவதாயின் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நமது தேசத்திலுள்ள சாதாரண ஜனங்களைப் பார். அவர்களுடைய முகமானது எவ்வளவு சோர்வடைந்திருக்கிறது பார். இருதயத்தில் தைரியமில்லை; ஆர்வமில்லை. வயிறு பருத்திருக்கிறது; கைகால்களில் வலிமையில்லை. அற்ப விஷயத்திற்கும் அஞ்சுகிற கோழை மக்களாகி விட்டார்கள்.

சிஷ் : மச்ச மாம்ச முண்பதனுல் வலிமை யேற்படுமா? அஹிம்சையே மேலான தருமமென்று புத்த மதமும் வைஷ்ணவ மதமும் போதிக்கின்றனவே.

சுவா : புத்த சமயமும் வைஷ்ணவ சமயமும் இரண்டல்ல. இந்தியாவிலே புத்த மதம் தளர்வடைந்த காலத்திலே அதனுடைய ஒழுக்க நெறிகள் சிலவற்றை ஹிந்து சமயம் தன்னதாக்கிக் கொண்டது. இதுவே பின்னுளில் வைஷ்ணவமென வழங்கப்பட்டது. 'அஹிம்சையே மேலான தர்மம்' என்று கூறும் புத்த மதக் கொள்கை மிக நல்லது. ஆயினும் ஜனங்களினுடைய தகுதியை ஆராயாது எல்லாருக்கும் இந்த விதியைச் சுமத்திய காரணத்தினுல் புத்த மதம் இந்தியாவுக்கு அழிவை யுண்டாக்கி விட்டது. இந்தியாவிலே கொக்குப்போலக் கூம்பி யிருக்கின்ற உள்ளத்தையுடைய வஞ்சகர் பலரை நான் சந்தித்திருக்கிறேன். இவர்கள் எறும்புகளுக்குச் சர்க்கரை உணவிடுவார்கள். ஆனுல் கேட்டுக்கெல்லாம் காரணமாகிய பணத்தின் பொருட்டாக, தம்முடன்பிறந்தார்க்குத் தானும் நஞ்சு வைக்கப் பின்னிற்க மாட்டார்கள்.

சிஷ் : வேதங்களிலும் மனுஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களிலும் மச்ச மாம்சம் உண்ணுவதற்கு விதிகளேற்பட்டிருக்கின்றன வல்லவா?

சுவா : ஆம், அவற்றோடுகூட கொலை மறுத்தலுக்குரிய விதிகளும் கூறப்பட்டிருக்கின்றன. வேதங்களிலே 'ஒருயிருக்கும் துன்பம் விளைக்காதே' யென்றும், மனுதர்ம சாஸ்திரத்திலே 'நிவிர்த்தியினுல் பெரும் பேறு உண்டாகும்' என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருடைய தகுதிக்கும் பான்மைக்கும் தக்கவாறு கொல்லுவதோ கொல்லாமையோ சொல்லப்பட்டிருக்கிறது.

சிஷ் : இந்நாட்களிலே சமயானுஷ்டானம் செய்யத் தொடங்குவோர் மச்ச மாமிசத்தை ஒழித்து விடுவது வழக்கமாயிருக்கிறது. வியபசாரம் முதலிய அதி

பாதகங்களிலும் பார்க்க மச்ச மாமிச முண்ணுவது பெரும்பாதகமென்று பலர் எண்ணுகிருர்கள். இத் தகைய எண்ணங்கள் எப்படி உண்டாயின?

சுவா: இவை எப்படி உண்டாயினவென்று ஆராய்வதனுல் எய்தும் பயனென்ன? இவை நமது நாட்டுக்கும் ஜன சங்கத்துக்கும் பெருங் கெடுதியை விளை விக்கின்றன என்று உனக்குத் தெளிவாகத் தோற்றுகிற தல்லவா? கிழக்கு வங்காளத்திலுள்ளோர் நிறைய மீனுண்பார்கள். ஆமை முதலியவற்றின் இறைச்சியை உண்பார்கள். இந்தப் பாகங்களில் உள்ளவர்களிலும் பார்க்க அவர்கள் நல்ல சுக தேகிகளாய் இருக்கிருர்க ளல்லவா? கிழக்கு வங்காளத்திலுள்ள செல்வர்கள் தாமும் இரவிலே 'பூரி சப்பாத்தி' உண்ணும் வழக்கத்தை வைத்துக் கொள்வதில்லை. அவர்கள் அஜீரணம் குன் மம் முதலிய வியாதிகளால் வருந்துவதுமில்லை. கிழக்கு வங்காளத்துக் கிராமங்களிலுள்ள ஜனங்கள் குன்ம வியாதியே இன்னதென்று அறியாமல் இருக்கிருர்க ளென்று நான் கேள்விப்பட்டேன்.

சிஷ்: ஆம் சுவாமிஜி, எங்கள் தேசப்பக்கங்களிலே நாங்கள் குன்மம் முதலியவற்ருல் வருந்துவதில்லை. இந்தப் பாகங்களுக்கு வந்த பின்புதான் நான் அந்த நோயைப்பற்றிக் கேள்விப்பட்டேன். நாங்கள் காலை யிலும் மாலையிலும் சோற்ருேடு மீன்கறி உண்ணு வோம்.

சுவா: பிறர் வசை கூறுவார் என்று எண்ணுமல் இயன்ற அளவு நீ உண்பாயாக. தாவர உணவு மாத் திரம் உண்ணுகின்ற குன்ம நோய் பிடித்த பாபுஜிகள் பலர் நாட்டில் நிறைந்து விட்டார்கள். அவர்களிடம் சத்துவ அடையாளங் காணப்படுவதில்லை. மரணத்தின் சாயையான ஆழ்ந்த தமோ குணமே காணப்படுகிறது. முகத்திலே காந்தியும் மனத்திலே எல்லையற்ற ஆர்வமும் அபாரமாகிய வல்லமையும் சத்துவ குணத்தால் ஆகின் றன. சோம்பலும், மந்தமும், அளவுகடந்த இச்சையும், நித்திரையும் தமோ குணத்தின் அடையாளங்கள்.

சிஷ்: ஆனால் மச்சமும் மாமிசமும் மனிதனிடத்தில் ரஜோ குணத்தையும் விருத்தி செய்கின்றன வல்லவா?

சுவா: ஆம்; ரஜோ குணந்தான் இப்பொழுது மிகுதியும் வேண்டப்படுவது. இந்நாட்களில் சத்துவ குணத்தர் என்று நீ எண்ணுபவரில் நூற்றுக்குத் தொண்ணூறுவீதமானோர் ஆழ்ந்த தமோ குணத்தில் அழுந்தி யிருப்பவரே. அப்படிப் பட்டோரில் பதினாறி லொருவராவது உண்மைச் சாத்வீகராயிருந்தால் பெருங் காரியம். தேசம் முழுவதும் தமோ குணத்தினால் மூடப் பட்டிருக்கிறது. இப்பொழுது இராஜசிக வல்லமையைப் பெருவாரியாக எழுப்புதல் வேண்டும். இந்நாட்டி லுள்ள ஜனங்கள் அன்ன வஸ்திரங்கள் முதலியன வற்றை நிறையப் பெற்று விழித்தெழுந்து உற்சாகத் தோடு முயற்சிப்பவர்களாகுதல் வேண்டும். இல்லா விடில் அவர்கள் கற்களையும் மரங்களையும்போல உணர்ச்சியற்றுப் போவார்கள். ஆதலினாற்றான், என் மகனே! நிறைய மச்ச மாம்சங்களை உண்ணென்பதாக உனக்குச் சொல்லுகிறேன்.

சிஷ்: சத்துவகுணம் நிரம்ப விருத்தியாயின பின்னர் ஒருவனுடைய உள்ளத்திலே மச்ச மாம்சத்தின் மேல் விருப்பம் இருக்குமா?

சுவா: இருக்க மாட்டாது. உண்மைச் சத்துவ குணம் பெருக விருத்தியாகுமிடத்து மச்ச மாம்சத்தின் மேலுள்ள இச்சை போய்விடும்; எல்லாவற்றையும் பிறர் நலத்துக்காகத் தத்தம் செய்தல், பொன்னின் மேலும் பெண்ணின்மேலும் முற்றிலும் ஆசையற்றிருத்தல், பெருமிதம் அற்றிருத்தல், அகங்காரமற்றிருத்தல் ஆகிய இவையே ஒருவனுடைய ஆத்மாவில் சத்துவகுண மேற்பட்டிருப்பதற்கு உரிய அடையாளங்கள். இத் தகைய அடையாளங்கள் ஒருவரிடத்துக் காணப் பட்டால் மச்ச மாமிசம் புசிக்குமிச்சை அறவே ஒழிந்துவிடும். இவ் வடையாளங்கள் இல்லாதா

ஒருவன் அஹிம்சை பேசும் கட்சியாரோடு சேர்ந்திருப்பானேல் அவன் கபட நாடக வஞ்சக னென்றும், சமயானுஷ்டான விஷயத்தில் போலி வேஷதாரி யென்றும் அறிந்துகொள். உன்னிடத்தி லும் உண்மைச் சத்துவகுணம் ஏற்படும் நிலை வந்தெய் திய பொழுது மச்ச மாமிச உணவை முற்றாக ஒழித்து விடுவாயாக.

சிஷ்: சாந்தோக்யோபநிடதத்தில் 'ஆஹார சுத் தெள சத்வ சுத்தி:' சுத்தமாகிய ஆஹாரத்தினாலே, சத்துவ குணம் சுத்தமாகின்றது என்று கூறப்பட் டிருக்கின்றதே?

சுவா: ஆம், நான் அறிவேன். சங்கரா சாரிய சுவாமிகள் ஆஹார மென்பதற்கு ஐம்புலன் களுக்கு நிலைக்களமாகவுள்ள பொருளென்று கருத்துக் கொண்டார். ஸ்ரீ ராமானுஜாசாரியர் ஆஹாரமென் பதற்கு உணவு என்று கருத்துக்கொண்டார். இந்த இரண்டு கருத்தையும் ஒன்றித்து நோக்கும் தன்மை யது எனது சொந்த அபிப்பிராயம். சீவிய காலம் முழுதும், உண்ணுகின்ற உணவினுடைய சுத்தத்தை யும் அசுத்தத்தையும் விசாரித்துக்கொண்டிருப்போமா? அன்றேல், புலன்களை அடக்கும் வழிகளை அப்பியசிப் போமா? புலன்களை அடக்குவதே பிரதானமான நோக்கமாக இருக்கவேண்டும். அந்நோக்கத்தை அடை வதற்கு நன்மை தீமையின் பாகுபாடும் சுத்தா சுத்த உணவுகளை வேறுபடுத்தி உணர்வதும் ஒருவனுக்கு ஓரெல்லைவரையும் துணைபுரிகின்றன நம்முடைய சமய சாஸ்திரங்களின்படி உணவை அசுத்தமாக்கும் தோஷங் கள் மூன்று இருக்கின்றன. முதலாவது சாதி தோஷம்: வெங்காயம் வெள்ளுள்ளி முதலிய ஒருவகை உணவுப் பொருள்கள் இயற்கையிலேயே குற்றமுடையன. இரண்டாவது நிமித்த தோஷம்: இறந்த கொசு முதலியனவும் புழுதி முதலிய அழுக்குகளும் படிந் திருப்பதனால் ஏற்படுகிற குற்றம் இது. கடைகளில்

வாங்குகிற இனிப்புத் தின்பண்டங்களுக்கு இத்தோஷமுண்டு. மூன்றாவது ஆஸ்ரயதோஷம்; தீங்குள்ள இடங்களிலிருந்து வருவதினாலும் கீழ்மக்களாற் றீண்டப்பட்டமையினாலும் உணவுக்கு உண்டாகிற தோஷம் இதுவாகும். முதலிரண்டுவகைத் தோஷங்களையும் நீக்குவதற்கு விசேஷ கவனம் செலுத்தவேண்டும். ஆனால் இந்நாட்டிலே ஜனங்கள் முதலிரண்டையும் பற்றிச் சிந்திப்பதில்லை; மூன்றாவதற்கே சண்டை போடுகிறார்கள். இதுயோகியன்றி பிறரால் அறிந்து கொள்வதற்கு அரியது. தேசம் முற்றிலும் 'தீண்டாதே தீண்டாதே' என்னும் தீண்டாமைக் கட்சியாருடைய ஆரவாரமே கேட்கின்றது. அவர்களுடைய ஒடுங்கிய வட்டாரத்துக்குள்ளே நன்மக்கள் தீயமக்கள் என்னும் பேதத்தை ஆராய்வதில்லை. கழுத்திலே ஒரு நூலை மாட்டிக்கொண்டு தன்னைப் பிராம்மணனென்று பெயரிட்டுக் கொள்பவனெவனோ அவனுடைய கையிலிருந்து வாங்கி யுண்ணலாம் என்பதே இவர்கள் கண்டறிந்த கொள்கை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் மாசுற்றோரது கரத்திலிருந்து வருகின்ற உணவை உண்ண மாட்டாதவராய் இருந்தார். சிற்சிலர் தீண்டிய உணவை அவர் உண்ணாமை கண்டு பின்பு ஆராய்ந்து பார்த்தபொழுது அங்ஙனந் தீண்டினோர் வெளிக்குக் குற்றமற்றவர்போலத் தோற்றினும் உள்ளே குற்றமுள்ளவர்களாக இருந்தார்களென்று காணப்பெற்றது. இந்நாட்களில் உங்களுடைய சமய ஒழுக்கம் சமையற் பாத்திரத்திற்குள்ளே அடங்கியிருக்கும் நீர்மையதாய் விட்டது. பழத்தை மறந்துவிட்டுத் தோலுக்குச் சண்டையிடுவார் போல உயர்ந்த தர்மநெறிகளை ஒருபுறத்தி லெறிந்துவிட்டு அற்ப காரியங்களைப்பற்றி வீண் விவாதமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

சிஷ்: அப்படியாயின் எத்தகையினராலும் தீண்டப்பட்ட உணவை நாம் உட்கொள்ள வேண்டுமென்பது தேவரீருடைய கருத்தா?

சுவா: ஏன் அப்படிக் கூறுகிறாய்? இதோ பார். நீ பட்டாசார்ய வகுப்பைச் சேர்ந்த ஒரு பிராம்மணன் என்று வைத்துக்கொள்வோம். மற்றைய வகுப்பைச் சேர்ந்த பிராம்மணன் சமைத்தசாதத்தை ஏன் உண்ணக் கூடாது? ராரீி வகுப்பைச்சேர்ந்த நீ பாரேந்திர வகுப் பைச் சேர்ந்த பிராம்மணன் சமைத்த சாதத்தை வேண்டாமென்று தள்ளுவானேன்? பாரேந்திர வகுப் பைச் சேர்ந்தவனும் அவ்வண்ணம் நடந்து கொள்வ தெதற்கு? தென்னிந்தியாவிலும் மேற்கிந்தியாவிலு முள்ள சாதி உட் பிரிவுகள் உதாரணமாக மராட்டி, தெலுங்கு, கனோஜி முதலியோர் ஏன் சமபந்தியாக உண்ணக்கூடாது? வங்காளத்திலுள்ள பிராம்மண ரிலும் காயஸ்தரிலும் நூற்றுக்கணக்கானோர் ரகசிய மாக போஜனசாலைகளுக்குப்போய்த் தின்பண்டங்களை வாங்கி உண்டுவிட்டுப் பின்பு வந்து ஜனசங்கத் தலைவர் களாகித் தீண்டாமையை ஆதரிக்கும் விதிகளை உண் டாக்குகிறார்களே! இத்தகைய கபட நாடகர்கள் ஏற் படுத்திய விதிகளிற்றான் நம்முடைய ஜனசங்கம் நடை பெற வேண்டுமா? இல்லை. இவர்களையெல்லாம் வெளியே துரத்திவிட்டு நம்முடைய மகரிஷிகளினாலே முற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட விதிகளை நாம் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டும். அப் பொழுதுதான் நமது தேசம் நலமடையும்.

சிஷ்: அங்ஙனமாயின் தற்காலத்தில் நமது ஜன சங்கமானது ரிஷிகளாலேற்படுத்தப்பட்ட விதிகளைப் பின்பற்றி நடக்கவில்லையா?

சுவா: வீணெண்ணம் எதற்கு? நான் இந்தியா வில் பல பாகங்களிலும் யாத்திரை செய்யும்பொழுது எவ்விடத்தும் ஆராய்வாக உற்று நோக்கினேன். ரிஷி களால் ஏற்படுத்தப்பட்ட விதிகள் வழங்குமிடங்களை யாண்டும் கண்டிலேன். குருட்டு நம்பிக்கைகளும், ஜனங்களால் கொள்ளப்பட்ட பயனில்லாத வழக்கங் களும், பெண்களிடையே வழங்குகின்ற முறைகளும்

சடங்குகளும், குறுகிய தேசாசாரங்களும் எல்லா விடத்திலும் காணப்படுகின்றன! சாஸ்திரங்களை ஆராய்வாகப் படிக்க நினைப்போர் யாவர்?

சிஷ்: அப்படியாயின் நாங்கள் செய்ய வேண்டியதென்ன?

சுவா: ரிஷிகளினு லேற்படுத்தப்பட்ட பூர்வீக விதிகளை நாம் திரும்பவும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும். மனுவும் யாக்ஞவல்கியரும் அமைத்த பிரமாணங்களைக் காலத்துக்கேற்ற வேறுபாட்டோடு எல்லாச் சனங்களும் அனுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். சாதுர் வருணியமாகிய பூர்வ வகுப்பு இப்பொழுது இந்தியாவில் ஒரு பாகத்திலும் காணப்படுவதில்லை. ஹிந்து ஜனசமூகம் முழுவதையும் முன்னுளிற்போல இந்நாளிலும் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர வகுப்புகளாகப் பிரித்தமைக்க வேண்டும். பிராம்மணருக்குள்ளேயுள்ள எண்ணிறந்த உட்பிரிவுகளை யெல்லாம் அகற்றி எல்லாரையும் ஒன்று சேர்த்துப் பிராம்மண சாதியென்று ஓரே சாதியை உண்டாக்க வேண்டும் வேதகாலத்திலிருந்த முறையை அனுசரித்து மற்றைய வருணங்களையும் மூன்றாக அமைக்க வேண்டும். இப்படி யெல்லாம் செய்யாவிட்டால் நம்முடைய தாய்நாடு எங்ஙனம் உண்மையான நன்மையை அடையும்? 'உங்களைத் தீண்டமாட்டோம்; ஜாதிக்குள் உங்களைச் சேர்த்துக்கொள்ள மாட்டோம்' என்று இந்நாட்களிற் செய்கிற கூக்குரலினுல் ஆவதென்ன? என் மைந்தனே, இவற்றை அறிந்துகொள்வாயாக.

(28)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: நமது நாடும் மக்களும் இவ்வளவு இழிவான நிலைமைக்கு வந்த காரணம் யாதோ?

சுவா: இதற்கு நீங்களே பொறுப்பாளிகள்.

சிஷ். ஐய. அஃதெப்படியாகும்? தேவரீருடைய வார்த்தை எனக்கு வியப்பைத் தருகின்றதே.

சுவா: இந்நாட்டிலுள்ள தாழ்ந்த வகுப்பினரை நீங்கள் நீண்ட காலமாக மிகவும் இழிவாக நடத்தினீர்கள். அதன் பயனாக உலகத்திலுள்ள மக்களுடைய கண்ணுக்கு நீங்கள் இழிந்த பொருளாய் விட்டீர்கள்.

சிஷ்: நாங்கள் தாழ்ந்த வகுப்பினரை இழித்து நடத்தியதைத் தேவரீர் கண்டதெப்பொழுது?

சுவா: ஏன், புரோகிதராகிய நீங்கள் வேத வேதாந்தங்களையும், அத்தகைய உயர்வுடைத்தாகிய சாஸ்திரங்களையும் பிராம்மணரல்லாதார் படித்தல் கூடாதென்றும் தொடுதல்தானுங் கூடாதென்றும் கட்டளையிட்டு விட்டீர்கள். நீங்கள் அவர்களை எப்பொழுதும் தாழ்த்தி வைத்தீர்கள். சுயநலத்தைக் கருதி இவ்வண்ணம் செய்தீர்கள். சமய சாஸ்திரங்கள் உங்களுக்கே தனி உரிமை என்றீர்கள். விதிவிலக்குகள் உங்களுடைய கையில் உள்ளது எனச் சொல்லி விட்டீர்கள். இந்தியாவிலுள்ள ஏனைய ஜாதியார்களைக் கீழானவர்களென்றும் தீயரென்றும் பலமுறையுஞ் சொல்லி அவர்கள் தாங்கள் உண்மையில் அத்தன்மையினரென்று நம்பும்படி செய்து விட்டீர்கள். ஒரு மனிதனைப் பார்த்து "நீ தாழ்ந்தவன், இழிவுடையவன்" எனக்கண்ட நேரமெல்லாம் சொல்லி வருவாயாயின், காலகதியிலே அவன் அதை நம்பி உண்மையிலே தான் தாழ்ந்தவன் என்று நினைப்பது இயல்பு. இதனை வசிய நித்திரை என்பர். பிராம்மணரல்லாத வகுப்பார் படிப்படியாகத் துயில் நீங்கி எழுகின்றார்கள். பிராம்மணர்களுடைய சாஸ்திரங்களிலும் மந்திரங்களிலும் அவர்களுக்குள்ள நம்பிக்கை அகலுகின்றது. மேலைத் தேசக் கல்வி பரவியதனால் பிராம்மணருடைய தந்திரங்களெல்லாம் மழைக்காலத்திலே பதுமா நதியினுடைய கரைகள் இடிந்து விழுவதுபோல அகன்று போகின்றன. இதை நீ காணவில்லையா?

சிஷ் : ஆம், ஐய, வைதிகர்களுடைய ஆதிக்கம் இந்நாட்களிற் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

சுவா : நடக்க வேண்டிய முறையே நடக்கிறது. பிராம்மணர் படிப்படியாகச் சிற்றின்ப போகங்களில் ஈடுபட்டு, பிறரை நெருக்குவதைக் கைக்கொண்டார்கள். தங்களுடைய சொந்த நிலைமையை உயர்வாக வைத்துக் கொள்ளும் பொருட்டுச் சுயநல விருப்பினாலே நூதனமான அவைதிக, ஒழுங்கற்ற, நியாயமில்லாத கொள்கைகளைப் புகுத்திவிட்டார்கள். அதனால் எய்திய பயனை இப்பொழுது அனுபவிக்கிறார்கள்.

சிஷ் : ஐய! அப்பயன்கள் தான் யாவையோ?

சுவா : நீ கண்டு கொள்ளவில்லையா? இந்தியாவிலுள்ள சாதாரண மக்களை அவமதித்த காரணத்தினாலன்றோ ஓராயிர வருஷமாக நீங்கள், அடிமை வாழ்க்கை வாழ்கின்றீர்கள்; இதனாலன்றோ அன்னியருடைய கண்களுக்கு நீங்கள் வெறுக்கத்தக்க பொருள்களாகி விட்டீர்கள். உங்களுடைய சொந்த நாட்டு ஜனங்களும் உங்களைப் புறக்கணித்து நடத்துகிறார்கள்.

சிஷ் : ஆனால் ஐய, இப்பொழுதும்கூட எல்லா வகையாகிய சமயக் கிரியைகளையும் பிராம்மணர்கள் தானே நடத்துவிக்கின்றார்கள். ஜனங்கள் அவற்றைப் பிராம்மணருடைய கருத்துப்படித் தானே செய்துவைக்கின்றார்கள். தேவரீர் இப்படிச் சொல்வது ஏனோ?

சுவா : நீ சொல்வனவற்றை நான் காணவில்லை. சாஸ்திரங்கள் விதிக்கின்ற பத்து வகைச் சம்ஸ்காரங்கள் இப்பொழுது எங்கிருக்கின்றன? நான் இந்தியா முற்றிலும் யாத்திரை செய்திருக்கிறேன். சுருதிகளாலும் ஸ்மிருதிகளாலும் தள்ளி ஒதுக்கப்பட்ட சில தேசாசாரங்களையே மக்கட் கூட்டத்தார் கைக்கொண்டு ஒழுகுவதை எல்லாரிடத்திலுங் கண்டேன். பொது ஜனங்கள் கைக்கொள்ளுகிற வழக்கங்களும், தேசாசாரங்களும், பெண்களிடையே மாத்திரம் காணப்படுகிற சில கொள்கைகளும் என்னுமிவை எல்லாவிடத்தும் ஸ்மிருதிகளுக்குப் பதிலா

கக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன அல்லவா? யார் யாருக்கு அமைந்து நடக்கின்றார்கள்? போதிய பணம் செலவழிப்பதாயிருந்தால் நீ விரும்புகிற வண்ணமாக விதிவிலக்குகளை எழுதி வைத்தற்குப் புரோகித வகுப்பார் தயாராயிருக்கிறார்கள். அவர்களுள் எத்தனைபேர் கல்பகிருகிய சிரௌத சூத்திரங்களைப் படிக்கின்றனர்? வங்காளத்திலே ரகுநந்தருடைய முறை கைக்கொள்ளப்படுகிறது: சிறிது தூரத்திற்கு அப்பால் மீதாக்ஷரருடைய முறை வழங்கக் காண்பாய்; பிறிதோரிடத்தில் மனுவினுடைய நூல் ஆதிக்கத்திலிருக்கிறது. ஒரே சட்டங்கள் எல்லா விடத்திலும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன என நீ நினைக்கிறாய் போலும்! மக்களுடைய மனத்திலே வேதங்களைப் பற்றிய உயர்வாகிய அபிப்பிராயத்தை யுண்டுபண்ணி வேதங்களை ஆராய்ந்து கற்பதை எல்லாவிடத்தும் பரப்பி, வேதம் சொல்லிய விதிவிலக்குகளை யாவரும் அறிந்து நடக்கும்படி செய்ய யான் விரும்புகிறேன்.

சிஷ்: ஐய, இந்நாட்களிலே அவ்வண்ணம் செய்தல் கூடுமா?

சுவா: பழமையாகிய வேதப் பிரமாணங்கள் யாவும் ஒருங்கே கைக்கொள்ளப்படமாட்டா என்பதும் உண்மையே. ஆனால் காலத்துக்கேற்ற வண்ணம் சேர்க்கவேண்டுவனவற்றைச் சேர்த்து மாற்ற வேண்டுவனவற்றை மாற்றி, நிறைவுபடுத்தி, ஜன சங்கத்துக்கு முன்னே அவற்றை வைத்தால், அவை ஏன் வழக்காற்றுக்கு வரமாட்டா?

சிஷ்: ஐய, இந்தியா தேச முற்றிலும் இக்காலத்திற்றானும் மனுஸ்மிருதி ஒன்றுவது எவ்விதத்துக்கும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது என்னும் எண்ணம் எனக்கு இருந்தது.

சுவா: அப்படியில்லை, உன்னுடைய சொந்த நாட்டையே பார். தந்திரங்களிலே சொல்லப்பட்ட வாமாசாரங்கள் (ஒழுக்கமற்ற அனுஷ்டானங்கள்) மக்களு

டைய வாழ்க்கையினுள்ளே எவ்வளவாகப் புகுந்து விட்டன. கழிந்துபோன புத்த மதத்தினுடைய எலும்புக் கோவைபோல யிருக்கின்ற இக்காலத்து வைஷ்ணவத் திற்றும் வாமாசாரம் எவ்வளவு கலந்துவிட்டது! வைதீக முறைக்கு எதிராகிய இந்த வாமாசாரப் பிரவாகத்தைப் பெருக்கவொட்டாது தடுக்க வேண்டும்.

சிஷ் : ஐய, அழுக்கு நிறைந்த இம்மலக் கூடத்தை இப்பொழுது சுத்தப்படுத்துவது இயலுமோ?

சுவா : ஏழை நெஞ்சு படைத்த மனிதனே! என்ன வீண் வார்த்தைப் பேசுகிறாய்? "முடியாது" "முடியாது" என்று அழுது நாட்டை நாசமாக்கி விட்டீர்கள். மனிதனுடைய முயற்சியினாலே முடியாத காரியம் என்ன?

சிஷ் : ஆனால் ஐய, மனுவைப் போன்றும் யாக்ஞ வல்கியரைப் போன்றும் உள்ள மஹரிஷிகள் மறுபடியும் இந்த நாட்டிற் பிறந்தாலன்றி இது முடியாத காரியம் போல் காணப்படுகிறது.

சுவா : ஐயோ தெய்வமே! மனுவையும் யாக்ஞ வல்கியரையும் ஆக்கிவைத்தது பரிசுத்தமும் தன்னலங் கருதாத முயற்சியுமா, அன்றேல் வேறேதுமா? முயன்றால் நாமும் மனுவையும் யாக்ஞ வல்கியரையும் பார்க்க மிகப் பெரியவர்களாக வரலாம். அப்பொழுது நமது கொள்கைகள் ஏன் பரவமாட்டா?

சிஷ் : ஐய, சற்று முன்பாக முற்காலத்துள்ள பழக்க வழக்கங்களை நமது நாட்டிலே உயிர்ப்பிக்க வேண்டுமெனத் தேவரீரே உரைத்தீர். அப்படியாயின் மனு முதலாகிய மகரிஷிகளைப்பற்றி எங்ஙனம் குறைவாக மதிக்கலாம்?

சுவா : என்ன மூடத்தனமான முடிவு! நான் சொன்ன குறிப்பை நீ சிறிதேனும் கிரகித்துக் கொள்ளவில்லை. பழைய வைதீக ஒழுக்கங்கள் காலத்துக்கும் மக்கட் கூட்டத்துக்கும் தக்கபடி திருத்தி அமைக்கப்பட்டு

இந்நாட்டிலே வழக்கிற்குக் கொண்டுவரப்பட வேண்டு மென்று நான் சொன்னேனல்லவா?

சிஷ்: ஆம், ஐயா.

சுவா: அப்படியானால் நீ என்ன பேசுகிறாய்? நீ சாஸ்திரங்களைப் படித்திருக்கிறாய். உன்னைப்போன்ற மனிதரிடத்திலே எனக்கு நம்பிக்கை மிக உண்டு. என்னு டைய வார்த்தைகளின் உண்மைக் கருத்தை உணர்ந்து அவற்றைச் செய்கைப் படுத்துவதற்கு முயலுவாயாக.

சிஷ்: ஆனால், ஐயா எனது சொல்லுக்குச் செவி சாய்ப்பார் யாவர்? நமது நாட்டினர் அவற்றை ஏன் கைக்கொள்ளப் போகின்றனர்?

சுவா. நீ உண்மையில் அவர்கள் மனத்தை உன் வழிப்படுத்தி, போதனை செய்வதைச் சாதனையிலும் காட்டுவாயானால் அவர்கள் கட்டாயமாக உன் சொல் லுக்கு அமைவார்கள், அஃதன்றிக் கோழை நெஞ்சத் தோடு கிளிபோல வெறும் சுலோகங்களைச் சொல்லிக் காரியத்திலே காட்டாமல் பேச்சளவிலே பிரமாணங் காட்டினால் யார் உன் வார்த்தைக்குச் செவிசாய்க்கப் போகின்றனர்

சிஷ்: ஜன சங்கத்தைச் சீர்திருத்தும் முறைகளைப் பற்றித் தேவரீர் எனக்குச் சில புத்திமதிகளைக் கற்பித் தருளல் வேண்டும்.

சுவா: ஏன், நான் இதுவரை சொன்ன புத்திமதி போதாதா? இப்பொழுது அவற்றில் ஒன்றையாவது அனுஷ்டானத்திற்குக் கொண்டுவா. சமய சாஸ்திரங் களைக் கற்றதனாலும், என்னுடைய மொழிகளைக் கேட்ட தனாலும் நற்பயனைப் பெற்றாய் என உலகம் அறிந்து கொள்ளும்படி செய். மனு ஸ்மிருதியையும் இன்னும் பல புத்தகங்களையும் படித்தாயே,—அவற்றிற்கு அடிப் படையாக ஆதார நியாயத்தை வேறுபடாது வைத்துக் கொண்டு பழைய ரிஷிகளுடைய முறைப்படி இக்காலத் துக் கேற்ற கருத்துக்களையும் உண்மைக்கு வேறுபடா வண்ணம் சேர்த்து ஒருநூல் செய்வாயாக. அதனைக்கைக்

கொண்டு நடப்பதனால் பரதகண்டம் முற்றிலுமுள்ள எல்லா ஜாதிகளும் எல்லா வகுப்பினரும் பயனடைய வேண்டுமென்பதை மறந்துவிடாதே. அத்தன்மையாகிய ஸ்மிருதி ஒன்றினை எழுதிக் கொண்டுவா. நான் அதனைப் பிழைதிருத்தித் தருகிறேன்.

சிஷ்: ஐய, அது எளிதான கருமமன்று; அத்தகைய ஒரு ஸ்மிருதியை எழுதினாலும் யார் அதனை ஏற்றுக்கொள்ளப் போகிறார்?

சுவா: ஏன் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்? நீ முயலு. **காலோஹ்யயம் நிரவதிர் விபுலாச ப்ருத்வீ** "காலமோ எல்லையற்றது. பூவுலகம் இடம் பரந்தது." அதைத் தக்க முறையாக எழுதுவாயாயில் அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய நாள் வந்தே தீரும். உன்னிடத்தே நம்பிக்கையுள்ளவனாய் இரு. ஒரு காலத்தில் நீங்கள் வேதரிஷிகளாய் இருந்தீர்கள். இப்பொழுது வேற்று வடிவமாக வந்துவிட்டீர்கள். அவ்வளவுதான். உங்களிடத்தில் எல்லையற்ற சக்தி யிருக்கிறதென்பதைச் சூரியனுடைய பிரகாசம்போல அவ்வளவு தெளிவாக நான் காண்கிறேன். அந்தச் சக்தியை எழுப்புங்கள். எழுந்திருங்கள். செய்யவேண்டியவற்றைச் செய்ய ஆயத்தப் படுத்துங்கள். நிலையற்ற பொருளையும் புகழையும் கொண்டு என்ன செய்யப்போகின்றீர்கள்? நான் என்ன நினைக்கின்றேன் என்று அறிந்துகொண்டாயா? நான் முத்தி முதலியவற்றை ஒரு பொருளாகக் கருதவில்லை. உங்கள் எல்லோருடைய உள்ளத்திலும் அத்தகைய எண்ணங்களை எழுப்பிவிடுவதே எனது கடமை. ஒரு மனிதனை நல்வழியில் பயிற்றுவதற்காக நூறாயிரம் முறை பிறப்பதற்கும் நான் ஆயத்தமா யிருக்கிறேன்.

சிஷ்: ஆனால், ஐய, அத்தகைய முயற்சிகளை ஆரம்பித்துப் பயனென்ன? மரணமென்பது நம்மைத் தொடர்ந்து வருகின்றதல்லவா?

சுவா: சீசீ! என்ன பேச்சு. சாவென்றால் ஒரு நாளைக்குத்தானே வரும். கோழை நெஞ்சனைப் போல்

சாவைப்பற்றி எண்ணி எண்ணி சீவியத்தின் ஒவ்வொரு கணத்திலும் சாக வேண்டிய அவசியமென்ன?

சிஷ்: சரி, ஐய, நான் மரணத்தைப்பற்றி நினைக்காமலிருக்கலாம். ஆனால் நீரில் குமிழிபோல நிலையற்ற இவ்வுலகத்திலே எவ்வகை முயற்சியினாலும் எய்தப் போகின்ற பயனென்ன?

சுவா: என் மகனே, சாவு வருவது திண்ணமாயின் கற்போலும் கட்டைகள் போலும் செத்துப் போவதை ஒழித்து வீரர்களைப் போலச் சாவது நன்றல்லவா? நிலையற்ற இவ்வுலகத்திலே இரண்டொருநாள் கூட வாழ்வதினால் எய்தப் போகின்ற பயனென்ன? துருப்பிடித்து அழிந்து போவதிலும் பார்க்கத் தேய்ந்து அழிந்து போவது, பிறருக்குச் சிறிதளவாயினும் உபகாரம் தருகின்ற வாழ்க்கையாதலின், எவ்வாற்றானும் சிறந்ததே யாகும்.

சிஷ்: ஐய, அஃது உண்மையே. தேவரீருக்கு இவ்வளவு சிரமம் கொடுத்ததற்கு அடியேனை மன்னிக்க வேண்டும்.

சுவா: ஆர்வத்தோடு வினவுகின்றவர்களுடனே அடுத்தடுத்து இரண்டிரவு முழுவதும் பேசுவதாயினும் எனக்கு இளைப்புத் தோன்றுவதில்லை; ஊண், உறக்கத்தையும் விடுத்து உரையாடிக்கொண்டே யிருப்பேன், நான் விரும்பினால் இமயக் குகை ஒன்றிலே சமாதி நிலையிலே இருந்துவிட என்னால் முடியும். உலக மாதாவினுடைய திருவருளினாலே இந்நாட்களில் நான் உணவைப் பற்றி நினைக்க வேண்டியதில்லை. அஃதெப்படியாயினும் வந்து விடுகிறது. பின்னர் நான் ஏன் மலைக் குகையில் இருந்து விடவில்லை? இங்கே ஏன் இருக்கிறேன்? நாட்டை நலிவு செய்கின்ற துன்பத்தைக் காணுதலும் நாட்டின் எதிர்கால வாழ்வைப் பற்றிய எண்ணமும் என்னைச் சும்மா இருக்க விடவில்லை! சமாதிதானும் பயனற்றதாகக் காணப்படுகிறது. ஆனா்

த்துக்குரிய பிரம்ம லோகமும் சுவையற்றதாகக் காணப்படுகிறது. உங்களுடைய நலத்தைப் பற்றி நினைப்பதே எனது வாழ்க்கையில் யான் கொண்ட விரதம். அது நிறைவு பெறுகின்ற தினத்திலே நான் இவ்வுடலை வீசிவிட்டுப் போகவேண்டிய இடத்திற்கு நேரே போய் விடுவேன்.

சுவாமிஜியினுடைய மொழிகளைக் கேட்டுச் சிஷ்யர் மனத்திலே ஆச்சரியமுற்று அவரைப் பார்த்த வண்ணமாகச் சிறிது நேரம் பேச்சற்று இருந்தார். பின்பு விடை பெற்றுக்கொள்ளும் நேரமாகச் சுவாமிஜியை நமஸ்கரித்து உத்தரவு கேட்டார்.

சுவா: நீ ஏன் போகவேண்டும்? இந்தத் திருமடத்திலே ஏன் இருக்கப்படாது? லௌகிக சிந்தை யுடைய மக்களிடையே போனால் மீட்டும் உன் உள்ளம் அழுக்கடைந்து விடுமே; இதோ பார் காற்று எவ்வளவு சுகமாக வீசுகின்றது. அதோ கங்கா நதி ஓடுகின்றது; சாதுக்கள் தியானத்திலும் உயர்ந்த விஷயங்களைப் பேசுவதிலும் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். நீ கல்கத்தாவுக்குப் போன மாத்திரத்திலே துர் எண்ணங்கள் வந்து நிறைந்துவிடும்.

சிஷ்: சந்தோஷமுற்றவராய், "ஐய, தேவரீருடைய திருவுள்ளப்படி இன்று நான் இத்திருமடத்தில் இருந்து விட்டுப் போகின்றேன்."

(29)

[இடம்: பேலூர்த் திருமடம் காலம்: 1899-ஆம் ஆண்டு ஆரம்பம்.]

இன்று சாயங்காலம் சிஷ்யரோடுகூட சுவாமிஜி புதிய திருமடம் அமைக்கப்படுகிற இடத்தைச் சுற்றி உலாவிக் கொண்டிருக்கிறார். அங்குள்ள ஒரு வில்வமரத்திற்குச் சிறிது தூரத்துக்கப்பால் நின்றுகொண்டு "ஓ, ஹிமால

யமே, கணேசர் எனக்கு நன்மையை அருளுகின்றார்" என்பது முதலாக ஆரம்பித்து, " அநேக தண்டி சந்நியாசிகளும் சடாபாரத்தை உடைய யோகிகளும் இங்கே வருகின்றார்கள்" என முடிகின்ற வங்காளிப் பாட்டைப் பாடினார். இந்தப் பாட்டைப் பாடும்பொழுது சுவாமிஜி ஈற்றிலே சொன்ன வரியை மீட்டும் ஒரு முறை சொல்லி, "இது உனக்குத் தெளிவாகிறதா? காலகதியிலே அநேக சாதுக்களும் சந்நியாசிகளும் இவ்விடத்திற்கு வருவார்கள்" எனச் சொல்லி வில்வமரத்தின் கீழ் உட்கார்ந்துகொண்டு, "வில்வமரத்தின் கீழுள்ள மண் மிக பரிசுத்தமானது; இவ்விடத்தில் தியானம் செய்வோர் மிக விரைவிலே நல்லுணர்வு எய்தப் பெறுவார் என ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னதுண்டு" என்று கூறினார்.

சிஷ்: ஐய, ஆத்மா அநாத்மா என்பவற்றிடையே உள்ள வேறுபாட்டினைக் காணுவதற்கு விவேகத்தைக் கொண்டு முயலுகின்றவர்களுக்குக் காலம் இடம் என்பவற்றினது பொருத்தத்தை ஆராய்ச்சி செய்வது அவசியமா?

சுவா: ஆத்ம ஞானத்திலே நிலைபெற்றிருப்பவர்களுக்குப் பொருந்துதல் பொருந்தாமையைப்பற்றி விசாரிப்பது அவசியமில்லை. ஆனால், அந்த நிலை உடனே அடைவதற்குரிய நிலை இல்லை; நெடுங்கால அப்பியாசத்தின் பயனாக எய்தப் பெறுவது. ஆதலினாலே தொடக்கத்தில் ஒருவன் புறத்தேயுள்ள உதவிகளைப் பயன்படுத்தி அதன்பின் தனித்து நிற்கப் பயின்று கொள்ளலாம். ஆத்ம ஞானத்திலே நிலைபெற்ற பின்பு புறத்தேயுள்ள உதவி வேண்டியதில்லை.

சமய சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு வகைப்பட்ட அநுஷ்டான முறைகளெல்லாம் ஆத்ம ஞானத்தை அடைவதற்கே வகுக்கப்பட்டிருக்கின்றன. வேறு வேறு வகைப்பட்ட சாதகர்களுடைய ஆற்றலுக்குத் தகவுடைத்தாக அநுஷ்டான முறை

களும் வேறு வேறு வகைப்படுவன. ஆனால் அவையும் ஒருவகைக் கருமந்தான். கருமம் இருக்கும்வரையும் ஆத்மனைக் காண்பதில்லை. சமய சாஸ்திரங்களில் விதித்திருக்கின்ற அநுஷ்டானங்களினாலே ஆத்ம தரிசனத்திற்குரிய தடைகளை மேற்கொள்ளலாம். ஆனால் ஆத்மனை நேரே வெளிப்படுத்துகின்ற ஆற்றல் கருமத்துக்கு இல்லை; ஞானத்தை மறைத்திருக்கின்ற சில திரைகளை அகற்றுவதற்கே அது பயன்படுகிறது. 'அதன் பின்பு ஆத்மன் தன் சுயம்பிரகாசத்தோடு வெளிப்பட்டுத் தோற்றும்.' அறிந்துகொண்டனையா? ஆதலினால் அன்றோ பாஷியக்காரராகிய சங்கரர், 'பிரம்ம ஞானத்திலே சிறிதேனும் கருமமில்லை' எனக் கூறுகின்றார்?

சிஷ்: ஆனால், ஐய, ஏதோ ஒருவகைக் கருமத்தினாலே ஆத்ம விளக்கத்துக்குத் தடையாயிருப்பனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும் என்றால் கருமமும் ஒரு சார்பாக ஞானத்துக்குக் கருவியாகின்றது.

சுவா: காரண காரியத் தொடர்ச்சியைப் பற்றி நோக்குமிடத்து அங்ஙனம் காணப்படுகின்றது. இதனைக் குறித்தே பூர்வ மீமாம்சையிலும் யாதொரு பயனைக் குறித்துக் கருமம் செய்யப்படுகின்றதோ அது அப்பயனை நிச்சயமாகத் தரும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் பாரமார்த்திகமாக உள்ள ஆத்ம தரிசனமானது கருமமாகிய கருவினாலே எல்லைப்படுத்தப் படுவதில்லை. ஆதலினாலே, ஆத்ம ஞானத்தைத் தேடுவோன் சமய அநுஷ்டானங்களைச் செய்தல் வேண்டும்; ஆனால், பயனைக் குறிக்கொள்ளுதல் கூடாது எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனதுபற்றி இந்த அநுஷ்டானங்கள் சாதகனுடைய மனத்தைச் சுத்தி செய்கின்ற காரணங்களாக இருக்கின்றன என்பது பெறப்படுகின்றது. கருமங்களின் பயனாக ஆத்ம ஞானத்தை நேரிலே பெறுதல் கூடுமெனின், கருமத்தின் பயனைத் துறந்து விடுதல் வேண்டுமென சமய சாஸ்திரங்

கள் சாதகனுக்கு விதிக்கமாட்டா. பூர்வ மீமாம்சையிலே சொல்லியபடி கருமமானது பயனை நோக்கிச் செய்யப்படவேண்டும் என்னும் கொள்கையை மறுத்துப் பயன் கருதாது கருமத்தைச் செய்யவேண்டுமென்னும் கொள்கை கீதையிலே கூறப்பட்டது. இதனை அறிந்துகொண்டாயா?

சிஷ்: ஆனால்; ஐய, கருமத்தின் பயனை ஒருவன் துறந்துவிட வேண்டுமென்றால், என்றும் அல்லலே தருகின்ற கருமத்தைக் கைக்கொள்ளுவதற்கு விரும்புவது எங்ஙனமாகும்?

சுவா: இந்த மனித வாழ்க்கையிலே ஒருவர் ஏதாவது ஒருவகைக் கருமத்தைச் செய்யாமல் இருத்தல் முடியாது ஆதலினாலே, கருமத்தைச் செய்கின்ற மனிதன் அதன் வழியாக முத்தி நிலையைப் பெறுகின்ற ஆத்ம தரிசனத்தைப் பெறுவதற்கு முயலவேண்டுமென்று கருமயோகம் விதிக்கின்றது. கருமம் செய்வதற்கு மக்கள் ஆவல் கொள்ளமாட்டார்களே என நீ சொன்ன கேள்விக்கு மறுமொழி இதுவாகும்; செய்யும் எந்த வேலையும் ஏதாவது ஒரு பயனை நோக்கியதே; கருமத்தை நீடித்துச் செய்வதனால் ஒரு கருமம் மற்றொரு கருமத்தை வருவிக்கிறதென்றும் இதனால் மாறி மாறிப் பிறவி ஏற்படுகிறதென்றும் அறிந்த மனிதன் விவேகமுடையவனாகிச் சங்கிலித் தொடர்போன்ற கருமபந்தத்துக்கு முடிபு எதுவென விசாரிக்கத் தொடங்குவான். அப்பொழுதுதான் கருமத்தின் போக்கை அறிதல் இயலாது என்று பகவானால் கீதையிலே உபதேசிக்கப்பட்ட மேலான உண்மையை அறிந்துகொள்ளுவான். அப்பொழுது சாதகன் பயன் கருதிய செயலினாலே ஆனந்தம் எய்தப் பெறாது என அறிந்து கருமத்தைத் துறந்து விடுகிறான். மனிதன் அமைக்கப்பட்டிருக்கிற நிலையில் கருமம் செய்வது இன்றியமையாதது. அப்படியாயின் அவன் எவ்வகைக் கருமத்தைக் கைக்கொள்ளுதல் வேண்டும்? அவன்

தன்னலமற்ற கருமத்தைக் கைக்கொண்டு பயன் கருதிய விழைவு முற்றையும் விட்டு விடுகிறான். கருமத்தின் பயனிலே 'எதிர்காலத்துள்ள பிறப்புக்கும் இறப்புக்கும் உரிய வித்துக்கள் பல இருக்கின்றன வென்பதை அவன் அறிந்துகொள்ளுகிறான். ஆதலால் பிரம்மஞானியானவன் புறத்தே பார்த்தால் ஏதாவது ஒரு கருமத்தைச் செய்ய முயன்றுகொண்டிருப்பானாயினும் அதனிடத்துப் பற்றில்லாதவனாய்க் கருமம் அனைத்தையும் துறந்தவனாய் இருப்பான். இத்தகைய மனிதரையே சாஸ்திரங்கள் கருமயோகிகள் எனச் சொல்லுகின்றன.

சிஷ்: தன்னலமற்ற பிரம்ம ஞானி செய்கின்ற பயன் கருதாத முயற்சி பைத்தியக்காரனுடைய முயற்சிக்கு ஒப்பானதா?

சுவா: ஏன் அப்படி இருக்கவேண்டும்? கருமத்தின் பயனை விடுவதென்பது தன்னுடைய உடல் மனம் என்னும் இவற்றின் நலத்தைக் கருதித் தொழில் செய்யாமையைக் குறிக்கும். பிரம்மஞானி தன்னுடைய சுகத்தை ஒருபொழுதும் நாடுவதில்லை. பிறருடைய நன்மையைக் கருதி அவன் முயற்சிப்பதைத் தடுப்பது யாது? பயன் கருதலின்றி அவன் செய்கின்ற வேலை அனைத்தும் உலகத்தினுக்கு நன்மையையே தருகின்றன. அவை யாவும் பலருடைய நன்மைக்கும் பலருடைய சுகத்துக்கும் ஏற்பட்டனவே. அத்தன்மையோன் ஒருபொழுதும் பிழை செய்வதில்லையென ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார். உத்தரராம சரிதையிலே "ரிஷீணாம் புனராத்யானாம் வாசமர்த்தோ அநுதாவதி, "பூர்வத்திலிருந்த ரிஷிகளின் வாக்கியங்கள் எப்பொழுதும் பொருளுடையன. அவை பொய்யாவதில்லை" எனக் கூறி இருப்பதை நீ வாசித்ததில்லையா? எல்லா வகையாகிய சித்த விருத்திகளையும் ஒடுக்கி ஆத்மனிடையே மனத்தைப் பொருந்த வைக்கும் இடத்து இம்மையிலும் மறுமையிலும் கருமப் பயனை அனுபவிப்பதற்குள்ள விருப்பம் முற்றாக

அகன்றுவிடுகிறது. அதாவது மனம் இம்மைச்சுகத்தை நாடுவதில்லை; மரணத்தின் பின்னர்ச் சுவர்க்காதி போகங்களை நாடுவதும் இல்லை. மனத்திலே இச்சையானது தோன்றுவதும் காரியப்படுவதும் இல்லை. ஆனாலும், மனமானது உணர்வுகடந்த அந்த உயர்நிலையினின்று 'நான், எனது' என்னும் லௌகிக நிலைக்கு இறங்கும் பொழுது, பூர்வ கர்மத்தின் இயக்கத்தினாலே, அன்றேல் சம்ஸ்காரங்களாகிய பழக்கத்தினாலே உடற்கிரியைகள் முன்போல் நடக்கின்றன. மனம் அநேகமாக உணர்வு கடந்த நிலையிலிருக்கிறது. தேக புத்தி ஏறக்குறைய முற்றிலும் அழிந்து போகிறது. உண்ணுதல் முதலிய உடலின் செயல்கள் தாமாகவே நடைபெறுகின்றன. இத்தகைய துரியாதீத நிலையை அடைந்தபின் செய்கின்ற தொழிலனைத்தும் சரியாகவே செய்யப்படுகின்றன; உலகமும் மக்களும் அத்தகைய செயல்களால் உண்மையாகிய நன்மையை அடைகின்றனர். ஏனெனில் செய்வோனுடைய மனமானது தனக்கு வருகிற லாப நஷ்டங்களைக் கருதுகிற சுயநல விருப்பினாலே அழுக்குப் படுத்தப் படுவதில்லை. துரியாதீத நிலையிலே என்றுமிருந்து ஆண்டவன் இந்த அற்புதமாகிய பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தான்; ஆதலினாலே இவ்வுலகத்தில் பூரணம் அற்றவை எவையும் இல்லை. ஆதலினால் பயன் கருதாத பிரம்மஞானி செய்கின்ற தொழில் அனைத்தும் மக்களுக்கும் உலகத்துக்கும் உண்மையாகிய நன்மையைத் தருவனவேயாம்.

சிஷ்: ஐயா, கருமமும் ஞானமும் ஒன்றினுக்கொன்று மறுதலையாயின எனவும், பிரமஞானம் உள்ள இடத்தில் கருமத்துக்கு இடமில்லையெனவும் கருமங்கருவியாகப் பிரம்மஞானத்தை அடைதல் முடியாதெனவும் இப்பொழுது உரைத்தீர்கள். இராஜஸ குணத்தை எழுப்பத்தக்க வார்த்தைகளை இடையிடையே எதற்காகச் சொல்லுகிறீர்கள்?

'கருமஞ்செய் 'கருமஞ்செய், கருமஞ்செய்—இதை விட வேறு வழியில்லை' என சில நாட்களுக்கு முன்பு எனக்குச் சொன்னீர்கள்.

சுவா: உலகத்தைச் சுற்றிப் பார்த்தேன். பிற நாட்டு மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்தத் தேசத்து மக்கள் நிறைந்த தாமஸ குணத்திலே அழுந்திக் கிடக்கக் கண்டேன். புறத்தே சாத்வீக நிலையின் வெளித் தோற்றம் இருக்கிறது; உள்ளே பார்த்தாலோ கட்டைகள் போலவும் கற்கள்போலவும் உள்ள சடத்தன்மை நிறைந்திருக்கிறது. இப்படிப்பட்ட மக்கள் உலகத்தில் என்ன தொழில் செய்யப்போகின்றார்கள்? செயலற்ற சோம்பேறிகளாய்ச் சிற்றின்பப் பிரியர்களாய் இருக்கின்ற இவர்கள் எவ்வளவு காலத்துக்குப் பூமண்டலத்தில் வாழப்போகின்றார்கள்? மேலைத் தேசங்களில் யாத்திரை செல், அதன்பின் கூடுமாயின் எனது வார்த்தைகளுக்கு எதிர் உரை கூறு. முயற்சியும், செய்யும் தொழிலைச் சீர்பெறச் செய்யும் சிரத்தையும், ஆர்வமும், ராஜஸகுண விருத்தியும் மேலைத் தேசத்து மக்களுடைய வாழ்க்கையிலே எவ்வளவாக நிறைந்திருக்கிறது என்பதைக் காண்பாய். நம்முடைய தேசத்திலோ வென்றால், உதிரம் நாடி நரம்புகளிலே சுற்றியோடாது இருதயத்திலே உறைந்து கட்டியாய்விட்டது போலவும், உடலம் திமிர் ஏறி விட்டது போலவும், மக்கள் சோம்பிக் கிடக்கின்றார்கள். ஆதலால், முதலிலே ரஜோ குணத்தை விருத்தி செய்து நமது ஜனங்களை 'வாழ்க்கைப் போராட்டத்துக்குத் தகுதி யுள்ளவர்களாக்குவது எனது கருத்து. உடலிலே வலியற்றுச் சிந்தையிலே ஆர்வமற்றுத் தலையிலே புதிய எண்ணங்களற்று உயிர் நீங்கிய சடப்பொருட் கட்டிகளைப்போலக் கிடக்கின்ற இவர்களால் ஆகக் கூடியது என்ன? இவர்களை ஊக்கப்படுத்தி உயிர் உண்டாக்குவது எனது நோக்கம். இதற்காக நான் என் னுயிரை அர்ப்பணம் செய்திருக்கிறேன். வேதமந்திரங்

களின் குற்றமற்ற வலிமையினாலே நான் அவர்களை எழுப்புவேன். 'எழுமின், விழிமின்' என்னும் அச்சமற்ற நற்செய்தியை அறைகூவிச் சொல்வதற்காகவே நான் பிறந்திருக்கிறேன். நீவிர் எனக்கு இம்முயற்சியில் உதவியாளராக இருத்தல்வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும்போய்த் தேசத்தின் ஒவ்வொரு பாகத்திலும் பிராம்மணர் முதல் சண்டாளர் இறுதியாகிய அனைவருக்கும் அச்சமின்மை எனும் இந்நற்செய்தியைப் போதிப்பீராக. எல்லையற்ற சக்தி அவரிடத்தே இருக்கின்றதென்றும் அவர்கள் அனைவரும் அழிவற்ற ஆனந்தத்திற்கு உரிமை பூண்டவர்கள் என்றும் சொல்லுவீராக. இங்ஙனம் செய்து அவர்களுடைய உள்ளத்திலுள்ள ராஜச குணத்தை யெழுப்பி, வாழ்க்கைப் போராட்டத்துக்கு அவர்களைத் தகுதியுடையவர்களாக்கி அதன்பின் முத்தியைப்பற்றி அவர்களுக்குச் சொல்லுவீராக. முதலிலே நாட்டிலுள்ள ஜனங்களுடைய உள்ளத்தில் நிறைந்திருக்கின்ற சக்தியை எழுப்பிச் சுதந்திரராய் நிற்கும் ஆற்றலை அவர்களுக்குத் தருதல் வேண்டும். முதலிலே, அவர்கள் நல்ல உணவையும் ஆடையாபரணங்களையும் சுகாநுபவங்களையும் பெறுதற்குரிய மார்க்கங்களைப் பயின்றுகொள்ளுதல் வேண்டும். அதன்பின் கரும பந்தத்தினின்று விடுபடுவதற்குரிய மார்க்கங்களை அவர்களுக்குப் போதிக்கலாம். சோம்பலும் கயமையும், வஞ்சகமும் நாடுமுற்றிலும் பரந்திருக்கின்றன. விவேகியானவன் இதனைப்பார்த்துவிட்டு ஒன்றும் செய்யாதிருக்கலாமா? கண்களில் நீர் பெருகவில்லையா? சென்னை, பம்பாய், பஞ்சாப், வங்காளம் என்னும் எந்த திசையை நோக்கினாலும் உயிருள்ள மக்களது வாழ்க்கையின் அடையாளத்தைக் காண்பதற்கில்லை. உயர்ந்த கல்வி கற்றுவிட்டதாக நினைக்கிறீர்கள். நீங்கள் படித்தது என்ன? பிறருடைய எண்ணங்களைப் பிறமொழியிலே மனனம் பண்ணித் தலையை நிறைத்துக்கொண்டு சர்வகலாசாலைப் பட்டம் வாங்கி விட்டால் கல்வி கற்றவர்களென்று

உங்களை மதித்துக்கொள்ளுகிறீர்கள்! உங்கள் பேதமை இருந்தவாறென்னே! இது என்ன படிப்பு? உங்கள் படிப்பின் முடிந்த நோக்கம் என்ன? எழுத்தாளர் வேலை, அன்றேல் வஞ்சனை புரியும் வக்கீல் வேலை; அன்றேல் மற்றொரு வகை எழுத்தாளராகிய உதவி நீதிபதி வேலை என்னும் இவற்றிலொன்றைப் பெறுவது - இவ்வளவு தானே! இதனால் நாட்டுக்கு உண்டாகக்கூடிய நன்மை என்ன? ஐஸ்வரியத்துக்குப் பேர்போன இந்தப் பாரதநாட்டிலே இக்காலத்தில் வசிக்கின்ற மக்கள் உணவுக்காக அழுது பிரலாபிப்பதை உங்கள் கண்களைத் திறந்து பாருங்கள். உங்களுடைய கல்வி இந்தக் குறையை நிறைவாக்குமா? இல்லை, இல்லை. மேலைத்தேசத்து விஞ்ஞான சாஸ்திரங்களின் உதவியைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தி உணவுப் பொருள்களை விளையச் செய்யுங்கள். அத்தகைய விஞ்ஞான சாஸ்திர அறிவோடு உங்கள் சொந்த முயற்சியையும் உடன்வைத்து வருவாய்க்குரிய புது வழிகளைக் கண்டுபிடியுங்கள். பிறருக்கு அடிமை வேலை செய்து பொருளீட்ட முயலாதீர்கள். தங்களுக்கு வேண்டிய உணவையும் உடையையும் தாங்களே செய்துகொள்ளும்படித் தொழில் செய்யுமாறு இந்த நாட்டு மக்களுக்கு நான் போதிக்கிறேன். உணவும் உடையும் இல்லாமையாலும், அவற்றைக் குறித்துக் கவலையிலாழ்ந்திருப்பதனாலும் நாடு நாசமாய் விட்டது; இதை மாற்றுவதற்கு என்ன செய்யப்போகின்றீர்கள்? உங்கள் சமய சாஸ்திரங்களை எல்லாம் கங்கா நதியில் எறிந்துவிட்டு உணவையும் உடையையும் தேடிக் கொள்ளும் மார்க்கங்களை ஜனங்களுக்குப் போதிப்பீர்களாக. அதன் பின்பு சமய சாஸ்திரங்களை வாசிப்பதற்கு உங்களுக்கு நேரமுண்டாகும். தொழில் செய்வதில் நிறைந்த ஊக்கத்தை உண்டாக்கி உடல் நலத்துக்கு வேண்டியவற்றைச் செய்யாவிடில் ஆன்ம லாபத்துக்கு உரியனவென நீங்கள் சொல்லும் வாக்கியங்களை யார் கேட்கப்போகின்றார்கள். ஆதலினாலே முதலில் உங்களு

டைய உள்ளத்திலே அமைந்த ஆன்ம சக்தியை எழுப்பி, அதன்பின் உங்களால் இயன்றவரை பொது ஜனங்களிடையே இத்தகைய ஆன்ம சக்தியிலுள்ள நம்பிக்கையை எழுப்பி, உணவு தேடும் மார்க்கங்களைப் பயிற்றி, அதன் பின் சமய சாஸ்திரங்களைப் பயிற்றுவீர்களாக. செயலற்றிருப்பதற்கு நேரமில்லை—மரணம் என்று வருமென்று யாரறிவர்?

இந்த வாசகங்களைச் சொல்லும்பொழுது சுவாமிஜியினுடைய திருமுக மண்டலத்திலே துயரோடு கூடிய இரக்கமும் வலிமையும் ஒன்றுசேர்ந்து காணப்பட்டன. இத்தகைய கம்பீரத் தோற்றத்தைக் கண்டு சிஷ்யர் அஞ்சி மௌனமாயினர். சுவாமிஜி சிறிது நேரம் கழித்து மீண்டும் சொல்லுவார்: "தொழில் செய்யும் ஆற்றலும் சுயநம்பிக்கையும் இந்த நாட்டிலுள்ள மக்களுக்குக் காலகதியிலே வரவேண்டும் என்பதை நான் தெளிவாகக் காணுகின்றேன். இது பிழைபடாது, விவேகியானவன் அடுத்து வருகின்ற மூன்று யுகங்களிலும் நடக்கப் போவனவற்றைத் தெளிவாகக் காணுவான். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வருகை முதலாக, கிழக்குத் திசையிலே விடியற் காலத்துச் சூரியனுடைய கிரணங்கள் தோன்றிவிட்டன, காலகதியிலே உச்சிக்காலத்துச் சூரியனுடைய ஒளியாக அந்த ஞான ஒளியானது தேசமுற்றையும் விளக்கமுறச் செய்யும்."

(30)

[இடம். பேலூர்த் திருமடம். காலம். 1899-ம் ஆண்டு.]

இப்பொழுதுள்ள திருமடத்துக் கட்டிடங்கள் ஏறக்குறைய நிறைவுபெற்ற நிலையில் இருக்கின்றன. சுவாமிஜிக்குத் தேக சௌக்கியம் நன்றாயில்லை; ஆதலினால், காலையிலும் மாலையிலும் தோணியிலேறிக் கங்கையிலே சென்று வரும்படியாக வைத்தியர்கள் சொல்லியிருந்தார்கள்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. சிஷ்யர் சுவாமிஜியி னுடைய அறையிலிருந்து அவரோடு உரையாடிக் கொண்டிருக்கிறார். திருமடத்திலுள்ள சந்நியாசிகளும் பிரம்மச்சாரிகளும் கைக்கொண்டு ஒழுகுதற்குரிய சில விதிகளைச் சுவாமிஜி இந்நாட்களில் ஏற்படுத்தியிருந் தார். இவற்றின் நோக்கம் துறவொழுக்கத்தின் வழி நிற்போர் லெளகிக வாழ்க்கை நடத்தும் மக்களோடு வரம்பற்று ஒன்று கூடுவதைத் தடுப்பதேயாம். இந்த விஷயத்தைப் பற்றிச் சம்பாஷணை நடந்தது.

சுவா: லெளகிக மக்களுடைய உடை முதலியவற் றிலே கட்டுக்கடங்காத் தன்மையைக் காட்டுகிற ஒரு வகை நாற்றம் வீசுவதாக நான் கண்டேன். ஆதலினால் சாதுக்கள் உபயோகப்படுத்துகிற படுக்கை முதலியவற் றிலே இல்வாழ்வோர் படுத்தலும் இருத்தலும் கூடா தெனத் திருமடத்திலே ஒரு விதி ஏற்படுத்தியிருக்கி றேன். இத்தகைய நாற்றம் உண்டு என்பதாகவும், இல் வாழ்வாரில் இருந்து வரும் அந்த நாற்றத்தைச் சந்நியாசி கள் தாங்க மாட்டார்கள் என்றும் முன்னாளிலே நான் சாஸ்திரங்களிற் படித்ததுண்டு. அது உண்மை என்பதை இப்பொழுது கண்டுகொண்டேன். ஏற்படுத்தப்பட்ட விதிகளைச் செவ்வனே கைக்கொண்டு ஒழுகுவதனால் பிரம்மசாரிகள் காலகதியிலே தகுதியுள்ள சந்நியாசிகள் ஆவார்கள். சந்நியாசத்திலே நன்றாக நிலைபெற்ற பின்பு லெளகிக மாந்தரோடு சமத்துவமாகக் கலந்துறவாடுதல் கூடும். அதனால் ஒரு தீங்கும் நேரிடாது. இப்பொழுது கடினமான விதிகளுக்குள்ளே எல்லைப்படுத்தப் பட்டிருந் தாலன்றி அவர்கள் பிழைபட்டுப் போவார்கள். உயர் வாகிய பிரம்மசரியத்தினுடைய சிறந்த கொள்கையை யடையும்பொருட்டு ஆரம்பத்திலேயே ஐம்புலனடக்கத் தைப் பற்றிய கடினமான விதிகளை வழுவாது கைக் கொண்டொழுகவேண்டும். பெண்களுடைய தொடர்பு சிறிதேனுமில்லாது விலகி இருப்பது மாத்திரமன்றி விவாகம் முடித்தவர்களுடைய கூட்டுறவையும் முற்றி லும் விலக்குதல் வேண்டும்.

சுவாமிஜி சொல்லிய இந்த வாசகங்களைக் கேட்டு இல்வாழ்வாராகிய சிஷ்யர் உள்ளம் பதறித் தான் முன்பு போலத் திருமடத்துச் சாதுக்களோடு கலந்துறவாடுவது கூடாதோ என்னும் எண்ணத்திறைற் பீடிக்கப்பட்டுச் சுவாமிஜியை நோக்கிச் சொக்கிச் சொல்லுவார்: "ஐய, என்னுடைய குடும்பத்திலுள்ளவர்களைக் காட்டிலும் இந்தத திருமடத்திலுள்ளவர்கள் எனக்குச் சொந்தமானவர்கள் என்னும் உணர்ச்சி எனக்கிருக்கிறது. நீண்ட காலமாக அவர்களை நான் அறிந்து பழகியதுபோல என் மனம் உணருகிறது. இந்தத்திருமடத்தில் நானனுபவிக்கின்ற எல்லையற்ற சுதந்திரத்தைப்போல நான் உலகில் பிறிதெவ்விடத்தும் அநுபவித்ததில்லை."

சுவா: பரிசுத்த சிந்தையுடையவர்களெல்லாம் இவ்விடத்திற்கு வந்தால் அவ்விதமாகிய உணர்ச்சியே பெறுவார்கள். அத்தகைய உணர்ச்சியை யடையாதவர்கள் இந்த மடத்திற்கும் அதனுடைய உயர்ந்த நோக்கங்களுக்கும் உரியவரல்லர். பலர் நவீனத்தைக் கருதி இவ்விடம் வந்து திரும்பி ஓடிப்போய் விடுவதற்குக் காரணம் இதுவே. ஒழுக்க மில்லாதவர்களும், இரவு பகல் பணத்தைத் தேடி யலைபவர்களும் இந்தத் திருமடத்தினுடைய கொள்கைகளை உணர்ந்துகொள்ள மாட்டார்கள். இங்குள்ள சாதுக்களைத் தமக்குச் சொந்தமாகக் கொள்ள மாட்டார்கள். இங்குள்ள சாதுக்கள் முன்னுளில் இருந்தவர்களைப்போல உடல் முழுதும் விபூதியைப் பூசித் தலையிற் சடைவைத்துக் கையிலே இரும்புக் குறடாவை ஏந்தி நோய்களுக்கு மருந்து சொல்லிக்கொண்டு திரிபவர்கள் போலிருக்கமாட்டார்கள். அவர்களிடத்தில் தோற்றுகின்ற புது முறைகளை நோக்கி ஜனங்கள் அவர்களை உள்ளவாறுணர்ந்து கொள்ளமாட்டார்கள். நம்முடைய குருமூர்த்திகளுடைய கொள்கைகளும் செயல்களும் மார்க்கங்களும் சிறப்பியல்பாக விளங்கின; ஆதலினுலே நாங்களும் ஒரு புதிய முறையானவர்களாகக் காணப்படுகிறோம். சிலபோது துரை மக்களைப் போல

ஆடை அணிந்துகொண்டு பிரசங்கம் பண்ணுவோம்: மற்றும் சில வேளைகளில் யாவற்றையும் எறிந்துவிட்டு "ஹரஹர வியோம் வியோம்" என்று சொல்லிக் கொண்டு உடல் முற்றிலும் விபூதி யணிந்து காடுகளி லும் மலைகளிலும் திரிந்து தவத்திலும் தியானத்திலும் மூழ்கியிருப்போம்

பழைய நூல்களினுடைய பிரமாணத்தை எடுத் துச் சொல்லுவது காணாது. தேச முற்றிலும் மேலைத் தேசத்தின் நாகரீகப் பிரவாகம் பரந்து செல்லுகின்றது. தியானத்தினுடைய நன்மையை உணர்ந்து கொள்ளா மல் மலையுச்சியின்மேலே வெறுமனே தியானத்திருப்பது போதாது. பகவான் கீதையிலே சொல்லியவண்ணம் எல்லையற்ற தைரியத்தோடும் வெல்லமுடியாத மன வலிமையோடும் ஆழ்ந்த கருமயோகத்தைச் செய்வதே இப்பொழுது வேண்டப்படுவது. அப்படிச் செய்தாற் றான் இந்த நாட்டு மக்கள் விழித்தெழுவார்கள். இல்லாவி டின் உன்னைப்போல இருளிலேயே வாழ்ந்துவருவார்கள்

பகற்பொழுது ஏறக்குறையக் கழிந்துவிட்டது. கங்கையிலே தோணியிற் செல்வதற்காகச் சுவாமிஜீ உடையணிந்து மேல்மாடியிலிருந்து கீழே வந்தார். சுவாமிஜீயும் சிஷ்யரும் இன்னுமிருவரும் தோணியி லேறித் தக்ஷிணேஸ்வர ஆலயத்தைக் கடந்து பாணி ஹாட்டிக்குச் சமீபமாக பாபு கோவிந்த குமார் சௌத்துராயின் பூஞ்சோலை வீட்டண்டை வந்தார்கள். இந்த வீட்டினைத் திருமடத்தின் உபயோகத்துக்காக வாடகைக்கு எடுக்க வேண்டு மென்னும் எண்ணம் முன்னொரு பொழுது இருந்தது. சுவாமிஜீ தோணியி லிருந்து இறங்கி வீட்டையும் பூஞ்சோலையையும் நுணுக்கமாக நோக்கி, "நந்தவனம் அழகாக இருக் கின்றது, ஆனாலும் கல்கத்தாவிலிருந்து இவ்விடம் வெகு தூரத்திலுள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்கள் கல்கத்தாவிலிருந்து நெடுந்தூரம் நடக்க வேண்டிய கஷ்டத்துக்குள்ளாவார்கள். ஆதலினால் திரு

மடத்தை இவ்விடத்தில் வைக்காதது நல்லதிருஷ்டமே" என்றார். எவ்விடத்திலும் கவிந்த இருளினூடே தோணியானது பேலூர்த் திருமடத்திற்குத் திரும்பி வந்தது.

(31)

[இடம். பேலூர் திருமடம். காலம் 1899-ம் ஆண்டு ஆரம்பம்]

சிஷ்யர் இன்று நாகமஹாசயரையும் அழைத்துக் கொண்டு திருமடத்துக்கு வந்தார்.

சுவாமிஜி நாகமஹாசயரை நோக்கி வந்தனை செய்துகொண்டு 'சௌக்கியந்தானே?' என்றார்.

நாகமஹாசயர்: இன்று நான் தங்களைத் தரிசிக்க வந்தேன். சங்கரருக்கு மகிமை யுண்டாகுக! சங்கரருக்கு மகிமை யுண்டாகுக! இன்று நான் சிவபெருமானை நேரிலே காணும் பாக்கியத்தைப் பெற்றேன்.

இவ் வார்த்தைகளைக் கூறி நாகமஹாசயர் பணிவினோடு கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றார்.

சுவா: தங்களுடைய சௌக்கியம் எப்படி?

நாகமஹாசயர்: எலும்பும் இறைச்சியும் பொதிந்த கூடாகிய இந்த அற்ப சரீரத்தைப்பற்றித் தேவரீர் வினவவேண்டியது எதற்கு? இன்று நான் தேவரீரைக் காணும் பாக்கியத்தைப் பெற்றேன்.

இவ்வார்த்தைகளைச் சொல்லி நாகமஹாசயர் சுவாமிஜியினுடைய திரு முன்னிலையிலே விழுந்து நமஸ்கரித்தார்.

சுவா: (அவரை வாரித் தழுவி எடுத்து) என் முன்னிலையில் ஏன் இப்படிச் செய்கிறீர்?

நாகமஹாசயர்: இன்று நான் சிவபெருமானுடைய தரிசனத்தைப்பெற்றுப் பாக்கியமுற்றேனென என்னுடைய அகக் கண்ணினால் காணுகின்றேன். இராமகிருஷ்ணருக்கு மகிமை யுண்டாகுக!

சுவா: (சிஷ்யரை நோக்கி) பார்த்தாயா? உண்மைப் பக்தி மனித இயற்கையை எவ்வளவு வேறுபடுத்

துகின்றது! நாகமஹாஷயர் தெய்வ வயப்பட்டுத் தம்மை முற்றிலும் இழந்துபோனார். உடலைப்பற்றிய உணர்வு அவருக்குச் சிறிதேனுமில்லை. (சுவாமிஜி பிரேமாநந்தரை நோக்கி) நாகமஹாஷயருக்குச் சிறிது பிரசாதம் எடுத்துக்கொண்டு வா.

நாகமஹாஷயர்: பிரசாதமா! (சுவாமி முன்னிலையில் கைகளைக் கூப்பிக்கொண்டு) தேவரீரைக் கண்டு எனது வயிற்றுப் பசி முழுதும் பறந்து போய்விட்டது.

திருமடத்துச் சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் உபநிடதம் வாசித்துக்கொண்டிருந்தார்கள். சுவாமிஜி அவர்களை நோக்கி "இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அடியாராகிய இப்பெரியார் நம்மிடையே வந்திருக்கிறார்; நாகமஹாஷயர் இத்திருமடத்துக்கு வந்த காரணத்தினால் அவரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு இன்று விடுமுறையாயிருக்கட்டும்" எனக் கூறினார். எல்லோரும் புத்தகங்களை மூடிவிட்டு நாகமஹாஷயரைச் சுற்றி வட்டமாயிருந்தார்கள்; சுவாமிஜியும் அவர் முன்னிலையில் உட்கார்ந்தார்

சுவா. (எல்லோரையும் நோக்கி) பார்த்தீர்களா? நாகமஹாஷயரைப் பாருங்கள்; அவர் இல்வாழ்வார்; அங்ஙனமாயினும் அவருக்குத் தேகமிருக்கிறதே என்ற எண்ணமே கிடையாது; எப்பொழுதும் தெய்வவயப்பட்டுத் தம்மை மறந்து வாழுகின்றார். (நாகமஹாஷயரை நோக்கி) எங்களுக்கும் இங்கிருக்கும் பிரம்மசாரிகளுக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுவீராக.

நாகமஹாஷயர்: (வணக்கத்தோடு) என்ன சொன்னீர்கள் ஐயா? நான் என்ன சொல்லுவேன்? ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தெய்வ லீலையிலே உதவி புரியும் தனிப் பெருந் தலைவராகிய தேவரீரைப் பார்ப்பதற்கு நான் வந்திருக்கிறேன். அவருடைய போதனைகளையும் வாக்கியங்களையும் ஜனங்கள் இப்பொழுதுதான்

செவ்வனே அறிந்து கொள்வார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண ருக்கு ஜயம் உண்டாகுக!

சுவா: ஸ்ரீ ராமகிருஷ்ணரை உள்ளபடி அறிந்து கொண்டவர் நீரே. நாங்கள் பயனற்ற அலைச்சல்களில் வாழ்க்கையைக் கழித்துவிட்டோம்.

நாகமஹாசயர்: ஐய, யாது சொல்லுகிறீர்? தேவ ரீரே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவுருவம். நீங்கள் இருவரும் ஒரு நாணயத்தின் இருபுறத்தையும் போன்ற வர்கள். கண்ணுள்ளவர்கள் காண்பார்களாக

சுவா: இந்தத் திருமடங்கள் ஆசிரமங்கள் முதலிய வற்றை ஆரம்பித்தது செய்யவேண்டிய கருமமா, அல் லவா?

நாகமஹாசயர்: நான் ஓர் அற்பப் பிராணி; எனக் கென்ன தெரியும்? தேவரீர் செய்வது எதுவோ அது நிச்சயமாகவே உலகத்துக்கு நன்மை பயப்பதென நான் அறிவேன்—ஆம் உலகத்துக்கு நன்மை பயப்பது.

அநேகர் வணக்கத்தோடு நாகமஹாசயருடைய பாதங்களிற் பணியத் தொடங்கினார்கள். அவர் இதைக் கண்டு மிகவும் பதறினார். சுவாமிஜி எல்லோரையும் நோக்கி, 'நாகமஹாசயருக்குத் துன்பம் வரும்படி நடந்துகொள்ளாதீர்கள்' என்றார். இதைக் கேட்டபின் எல்லோரும் சுவாமிஜியின் சொல்வழி நின்றார்கள்.

சுவா: தயை செய்து வந்து இந்தத் திருமடத் திலே வாசம் செய்வீர்களாக; இங்குள்ள சிறுவர்களுக் குத் தாங்கள் பெரியதொரு முன்மாதிரியாயிருப்பீர்கள்.

நாகமஹாசயர்: நான் ஒரு முறை இதைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்டேன். அதற்கு அவர் 'இப் பொழுது இருக்கிறமாதிரி இல்வாழ்க்கையிலே இரு' என்றார். ஆதலால் நான் அப்படியே வாழ்க்கை நடத்தி வருகிறேன். இடையிடையே வந்து தங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

சுவாமி: நான் உங்களுடைய வீட்டுக்கு ஒருமுறை வரலாம் என்று எண்ணியிருக்கிறேன்.

நாகமஹாசயர் ஆனந்த பரவசராய், "அத்தினம் என்று வந்தெய்தப்பெறும்! நான் வசிக்குமிடம் காசி க்ஷேத்திரத்தைப்போலத் தேவரீர் திருவடி படுவதனால் பரிசுத்தமடையும்; எனக்கு இந்தப் பாக்கியம் வருமா!" என்றார்.

சுவா: எனக்கு விருப்பமுண்டு. என்னை அங்கு கொண்டு செல்வது அன்னையினுடைய கட்டளைப்படி ஆகிறது.

நாகமஹாசயர்: தேவரீரை யார் அறிந்து கொள்ளவல்லார். அகக்கண் திறந்தாலன்றித் தேவரீரை அறிந்துகொள்ளக்கூடியவர் யாருமில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மாத்திரம் தேவரீரை அறிந்திருந்தார். வேறு யாரும் அறிந்துகொள்ளவில்லை; எல்லோரும் அவருடைய வார்த்தையிலே சிரத்தையோடு நம்பிக்கை வைத்தார்கள்.

சுவா. தம்முடைய சக்தியிலே நம்பிக்கையற்று அழைப்போருக்கு மறுமொழி பகராது சோகையனைப் போலத் தூங்கிக் கிடக்கின்ற நமது நாட்டினரை எழுப்பவேண்டுமென்னும் விருப்பம் எனக்குண்டு. அவர்களை விழிப்புறச் செய்து சனாதன தருமத்தினது உண்மையை உணரவைத்தால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வருகையும் எங்களுடைய பிறப்பும் பயனுள்ளவை என யான் அறிந்துகொள்ளுவேன். இது என்னுள்ளத்து விருப்பம். முக்தி முதலியவற்றை யான் பெரிதாக மதிக்கவில்லை. யான் இக்காரியத்தில் சித்தியடையும் பொருட்டுத் தங்களுடைய ஆசிர்வாதத்தைத் தந்தருளவேண்டும்.

நாகமஹாசயர்: ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆசிர்வதிப்பர். தேவரீருடைய திருவுள்ளத்தின் போக்கை யார் தான் மாற்ற வல்லவர். தேவரீர் எதனை எவ்வண்ணம்

வேண்டுமென்கிறீரோ அது அவ்வண்ணம் நிறைவேறும்.

சுவா: அவருடைய அநுக்கிரகமின்றி ஒன்றும் நடப்பதில்லை.

நாகமஹாசயர்: தேவரீருடைய சித்தமும் அவருடைய சித்தமும் ஒன்றாய் விட்டன. எதனிடத்துத் தேவரீருடைய சித்தம் படிந்திருக்கிறதோ அதனிடத்து அவருடைய சித்தமும் உண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மங்களமுண்டாகுக!

சுவா: வேலை செய்வதற்கு வலிமையான சரீரம் வேண்டும். இந்த நாட்டுக்கு வந்த பிறகு என்னுடைய உடல் நலம் நன்றாயில்லை; மேலைத் தேசத்தில் நான் நல்ல சுகத்தோடு இருந்தேன்.

நாகமஹாசயர்: உடலாகிய வீட்டினுள் வசிப்பதற்கு வரிப்பணம் கொடுக்க வேண்டும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுவதுண்டு. நோயும் கவலையுமே வரிப் பணம் ஆவன. தேவரீர் உடலம் தங்க மொஹராக்கள் நிறைந்த பெட்டி. அதனை மிகவும் சாவதானமாகக் காப்பாற்ற வேண்டும். ஆனால் யார் அங்ஙனம் செய்வர்? யாருக்குத் தெரியும்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் மாத்திரம் அறிந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஜயம் உண்டாகுக.

சுவா: இந்த மடத்திலுள்ளார் அனைவரும் என்னைக் கவனமாகப் பார்த்து வருகிறார்கள்.

நாகமஹாசயர்: அவர்கள் அப்படிச் செய்வார்களாயின் அது அவர்களது நன்மைக்கேயாகும். அவர்கள் அதை அறிந்தாலும் அறியாவிட்டாலும் சரி. தேவரீருடைய உடல் நலத்தைப்பற்றிக் கவனஞ் செலுத்தாவிடின் அது விழுந்து போதல் கூடும்.

சுவா: நாகமஹாசயரே, நான் செய்கின்றது சரியா பிழையா என நான் முற்றிலும் உணர்ந்து கொள்ளுவதில்லை. சில வேளைகளிலே ஒரு குறித்த நெறியிலே

நின்று முயற்சிக்க எனக்குப் பெரு விருப்பம் உண்டா கிறது. நான் அவ்வழி நின்று முயற்சிக்கிறேன். அதனால் நன்மை விளையுமோ தீமை விளையுமோ என்று எனக்குத் தெரியவில்லை.

நாகமஹாஷயர் : "பொக்கிஷ சாலை இப்பொழுது பூட்டப்பட்டிருக்கிற" தென ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல் வதுண்டு. ஆதலினால் அவர் தேவரீரை எல்லாவற்றை யும் அறிந்துகொள்ள விடுவதில்லை. அறிந்த மாத் திரத்தே தேவரீருடைய மானிட வாழ்க்கை லீலையானது முடிந்து போய்விடும்.

சுவாமிஜி எதனையோபற்றிச் சிந்தித்து அசையாத நோக்கத்தோடு இருந்தார். சுவாமி பிரேமாநந்தர் நாக மஹாஷயருக்குச் சிறிது பிரசாதம் கொண்டுவந்தார்; அவர் அதனால் ஆனந்த பரவசரானார். சிறிது நேரம் கழித்து சுவாமிஜி ஒரு குளத்துக்கு அருகாமையில் ஒரு மண் வெட்டியினால் குழி தோண்டிக்கொண்டிருப்பதை நாகமஹாஷயர் கண்டு விரைந்து சென்று சுவாமிஜியி னுடைய கையைப் பிடித்துக்கொண்டு "நாங்கள் இருக் கும்பொழுது தேவரீர் இந்த வேலைகளை எல்லாம் ஏன் செய்யவேண்டும்!" என்றார். சுவாமிஜி மண் வெட் டியைப் போட்டுவிட்டுச் சோலையிலே நடந்து கொண்டு இருக்கும் பொழுது ஒரு சிஷ்யனை நோக்கிப் பின்வரு மாறு சொல்லுவாராயினர்: "ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்க்கையை நீத்து அகன்ற பின்பு ஒருநாள் நாகமஹாஷயர் கல்கத்தாவிலுள்ள தமது சிறிய வீட்டிலே பட்டினியாகப் படுத்துக்கிடக்கிறாரென்று நாங்கள் கேள்விப்பட்டோம் நானும் சுவாமி துரியா நந்தரும் மற்றொருவரும் போய் நாகமஹாஷயருடைய குடிசையை அடைந்தோம். நாங்கள் அவரை நோக்கி 'இன்று நாங்கள் உம்முடைய வீட்டிற் பிக்ஷை பண்ணு வோம்' எனக் கூறினோம். அவர் உடனே அரிசி, பானை, விறகு முதலியவற்றைக் கடையிலிருந்து

கொண்டு வந்து சமைக்கத் தொடங்கினார். நாங்கள் சாப்பிட்ட பின்பு நாகமஹாஷயரைச் சாப்பிடப் பண்ணலாம் என்று நினைத்தோம். சமையல் முடிந்ததும் அவர் எங்களுக்கு உணவளித்தார். நாங்கள் ஒரு பாகத்தை எடுத்து அவருக்காக வைத்துவிட்டு உண்ணுதற்கு உட்கார்ந்தோம். அதன் பின் அவரை உண்ணும்படி வேண்டினோம். அவர் உடனே சோறிருந்த பானையை உடைத்துவிட்டு நெற்றியிலே கையினால் அறைந்து, 'கடவுளைக் கண்டறியாத இந்த உடலத்துக்கு உணவளிப்பேனோ?' என்றார். இதனைக் கண்டு நாங்கள் பேராச்சரியப்பட்டோம். அதன் பின்பு அவரை மிகவும் மன்றாடிச் சிறிது உணவு அருந்தும்படிச் செய்து விட்டு நாங்கள் திரும்பினோம்.

சுவா: நாகமஹாஷயர் இன்றிரவைக்கு இவ்விடம் தங்குவாரா?

சிஷ்: இல்லை, அவருக்குச் சிறிது வேலையுண்டு; இவர் இன்றைக்கே திரும்பிப் போக வேண்டும்.

சுவா: நல்லது, ஒரு தோணி பார்த்துப் பிடி; இருளாகின்றது. (தோணி வந்ததும் சிஷ்யரும் நாகமஹாஷயரும் சுவாமிஜியை நமஸ்காரம் செய்துவிட்டுக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்கள்.)

(32)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம் 1899-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி இப்பொழுது நல்ல தேக சுகமுள்ளவராய் இருக்கிறார். சிஷ்யர் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருமடத்திற்கு வந்திருந்தார். சுவாமிஜியைத் தரிசித்த பிறகு மேல் மாடியிலிருந்து கீழே வந்து சுவாமி நிர்மலானந்தரோடு வேதாந்த சாஸ்திரங்களைப்பற்றி விசாரணை செய்துகொண்டிருந்தார். இந்தத் தருணத்தில் சுவாமிஜி

கீழே இறங்கிவந்து சிஷ்யரை நோக்கி. "நிர்மலாநந்த ரோடு என்ன பேசிக்கொண்டிருந்தாய்?" என்றார்.

சிஷ் : ஐய, அவர் என்னை நோக்கி, "வேதாந் தத்தில் சொல்லப்பட்ட பிரம்மம் உனக்கும் உன்னுடைய சுவாமிஜிக்குந்தான் தெரியும். நாங்கள் கிருஷ்ணஸ்து பகவான ஸ்வயம் "கிருஷ்ணன், பகவானுடைய அவ தாரம் என்பதையே அறிவோம்" என்றார்.

சுவா . நீ அதற்கு என்ன சொன்னாய்?

சிஷ் : ஆத்மனே ஏகமாகிய உண்மைப் பொரு ளென்றும், கிருஷ்ணன் ஆத்ம தரிசனம் பெற்ற ஒரு மனிதனே என்றும் நான் சொன்னேன். சுவாமி நிர்மலா நந்தர், உள்ளத்திலே வேதாந்தத்தில் நம்பிக்கை உடைய வர். வெளிக்குத் துவைத வாதிகளுடைய கொள்கையை எடுத்து வாதிக்கிறார். முதலிலே ஈஸ்வரனுடைய உரு வத் தன்மையை நிறுவி அதன்பின்னர் படிப்படியாக நியாய முறையால் வேதாந்தத்துக்கு அடிகோலி வலுப் படுத்துகின்றார். ஆனால் அவர் என்னை வைஷ்ணவ னென்று சொன்னவுடனே நான் அவருடைய உண்மைக் கருத்தை மறைத்து ஆர்வத்தோடு வாதிக்கத் தலைப் பட்டு விடுகிறேன்.

சுவா : அவர் உன்மேல் அன்புடையவராய் இருக் கிறார். ஆதலினால் உன்னோடு சேட்டையாகப் பேசுவது அவருக்கு விருப்பம். ஆனால் அவருடைய வார்த்தை களைக் கேட்டு நீ ஏன் நிலைகலங்கவேண்டும்? 'ஐய, நீர் நிரீச்சுரவாதி, இன்மையிலே நம்பிக்கை உடையவர்' என்று நீ ஏன் அவருக்குச் சொல்லப்படாது?

சிஷ்: ஐய, ஈஸ்வரன் சர்வ வல்லமையுள்ள புரு ஷர் என்னும் வாக்கியம் உபநிடதங்களில் எங்கேயாவது உண்டா? ஆனால் பொதுவாக ஜனங்கள் அத்தகைய ஈஸ்வரன்மீது நம்பிக்கை உடையவர்களாயிருக்கிறார்கள்.

சுவா: எல்லாருக்கும் தலைமையாக இருக்கிற அதி உயர்ந்த பொருள் ஒரு புருஷனாக இருத்தல் கூடாது. ஜீவன், பலருள்ளே ஒருவன்; எல்லா ஜீவர்களுடைய கூட்டுத்தொகை ஈஸ்வரன். ஜீவனிடத்து அவித்தையும் அஞ்ஞானமும் மேற்கொண்டிருக்கின்றன. ஈஸ்வரனோவென்றால் அவித்தையும் வித்தையும் ஒன்று கூடிய மாயையைத் தன் வயப்படுத்தி யாளுகிறான். இயங்கு திணை நிலைத்திணையாகிய இந்தப் பிரபஞ்ச முழுமையும் தானாகவே தன்னிடத்திலிருந்து வெளிப்படுத்துகிறான். முறையே தனித்தும் கூடியுமிருக்கிற ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் அப்பாலுள்ளது பிரம்மம். பிரம்மத்திலே பகுதிகளில்லை. அதனை எளிதில் உணர்ந்துகொள்ளும் பொருட்டாகவே பகுதிகளிருப்பதாக பாவித்துக் கொள்ளுகிறோம். படைத்தல் காத்தல் அழித்தல் களாகிய தொழில்களைச் செய்கின்ற அம்சத்தைச் சமய சாஸ்திரங்கள் ஈஸ்வரனென வழங்குகின்றன. துவிதத்தினுள்ளே படாததாய் வேறுபாடற்று இருக்கின்ற பாகத்தையே பிரம்மம் எனக் குறியீடு செய்து வழங்குகிறோம். ஆனால் ஜீவன், உலகம் என்ற இவற்றில் நின்றும் பிரம்மம், முற்றும் வேறுபட்ட பொருளொன்று நினைத்து விடாதே. பிரம்மந்தானே ஜீவர்களும் பிரபஞ்சமுமாக உருத்திரிந்ததெனா விசிஷ்டாத்வைத வாதிகள் சொல்லுவார்கள். அத்வைதிகளோவென்றால் பிரம்மம் ஒன்றே உண்மைப் பொருளென்றும் ஜீவர்களும் உலகமும் அதன்மேல் ஆரோபிக்கப் பட்டதெனவும் கூறுவார்கள். உண்மையிலே பிரம்மத்தில் ஒருவகை வேறுபாடும் நிகழ்ந்ததில்லை. பிரபஞ்சம் நாமரூபத்திலே தங்கியிருக்கிறதென அத்வைதி சொல்லுகிறான். நாமமும் ரூபமும் எவ்வளவுக்கு நிலை பெற்றிருக்கின்றனவோ அவ்வளவுக்குப் பிரபஞ்சமும் நிலைபெறும். தியானத்தினாலும் மற்றைய அனுஷ்டானங்களினாலும் நாமரூபம் அகன்றுவிடும்பொழுது உரையுணர்வு கடந்த பிரம்மம் மாத்திரமே எஞ்சியிருக்கிறது. பிரபஞ்சமும் ஜீவர்களும் அதனின்றும் வேறாகிய

பொருள்கள் என்னும் உணர்ச்சியிருப்பதில்லை. அப்பொழுது நித்தியமாகிய சுத்த அறிவின் வடிவம் அல்லது பிரம்மம் நான் என்னும் உணர்ச்சி உண்டாகிறது. ஜீவனுடைய உண்மை நிலை பிரம்மம். தியான முதலியவற்றினாலே நாமரூபத்தின் திரையானது அகன்றுபோக அவ்வுண்மை தானே வெளிப்படும். இதுவே சுத்த அத்வைத முறையின் உட்கிடக்கை. இந்தக் கருத்தினையே வேறுவேறு விதமாக வேத வேதாந்த முதலான சமய சாஸ்திரங்களனைத்தும் தெளிவுபடுத்துகின்றன.

சிஷ்: அப்படியாயின், ஈசுவரன் சர்வ வல்லமையுள்ள புருஷன் என்று சொல்லுவது எங்ஙனம் உண்மையாகும்?

சுவா: எல்லைப் படுத்துகின்ற குணத்தினையுடைய மனத்தினைச் சார்ந்து நிற்கும் வரையும் மனிதன் மனிதனாயிருக்கிறான்; யாவற்றையும் மனத்தின் மூலமாக அறிந்து பற்ற வேண்டியவனாயிருக்கின்றான்; ஆதலினாலே அவன் எண்ணுகிற யாவும் மனத்தினால் எல்லைப்படுத்தப்படுகின்றன. தனக்கு உருவுடைமையை நோக்கி அவ்வண்ணமே ஈசுவரனுக்கும் உருவுண்டு என்று வாதிப்பது மனிதனுக்கு இயல்பே. தான் மிகவும் உயர்ந்ததென்று கொள்வதனை மனிதன் மனிதவடிவாகவே கொள்வான். நோய் மரணமாகிய துன்பங்களினாலே அல்லலுற்றுத் துணையின்றிப் பரிதவித்து நிற்கின்ற நிலையில் மனிதன் தனக்கு ஆதரவாக ஒரு பொருளைத் தேடுவது இயல்பே. அப்பொருளினிடத்து அடைக்கலம் புகுந்தால் தனக்கு ஒருவகைத் தீங்கும் நேரிடாது என்று நினைக்கின்றான். ஆனால் அத்தகைய புகலிடத்தை எங்குக் காண்பது? எவ்விடத்திலும் வியாபகமாகித் தனக்கு யாதொரு வகை ஆதாரமும் வேண்டாது நிலைத்திருக்கின்ற ஆத்மனே உண்மையான புகலிடம். முதலிலே மனிதன் அதனைக் கண்டு கொள்வதில்லை. தியான முதலிய சமயானுஷ்டானங்

களினாலே விவேக வைராக்கியமேற்பட, அவன் அதனை அறிகின்றான். ஒருவன் எந்த மார்க்கத்தின் சமயானுஷ்டானங்களைக் கைக்கொண்டு முன்னேறிய போதினும் அவன் அறிந்தோ அறியாமலோ தன்னுள்ளே இருக்கின்ற பிரம்மத்தை எழுப்புகின்றவனாகின்றான். வேறு வேறு வழிகளில் வேறு வேறு வகைப்பட்ட சாதனங்கள் இருக்கலாம். ஈசுவரனிலே நம்பிக்கையுடையவன் அந்தக் கொள்கையைப்பற்றி அதற்குரிய சமய சாதனையைச் செய்யவேண்டும். மனத்திலே உண்மை நிலை பெற்றிருக்குமாயின், தான் செய்கின்ற சாதனையின் மூலமாக உள்ளேயிருக்கும் பிரம்மமாகிய சிங்கத்தை விழித்தெழச் செய்வான். எல்லாப் பிராணிகளுக்கும் ஒரேபடித்தாக இருக்கின்ற நோக்கம் பிரம்ம ஞானமேயாகும். வேறு வேறு வகைப்பட்ட கொள்கைகள் அதனை அடைதற்குரிய வெவ்வேறு மார்க்கங்களேயாம். ஜீவனுடைய உண்மைத் தன்மை பிரம்மமேயாயினும் ஜீவன் குணங்களோடு கூடிய மனத்தினைத் தானென்று நினைத்த தன்மையினால், பலவகைப்பட்ட ஐயத்தினாலும் இடையூற்றினாலும் சுக துக்கங்களினாலும் துன்புறுகிறான். பிரம்மா முதலாகப் புல்லீறாகவுள்ள ஜீவராசிகளனைத்தும் தத்தமது சொந்த நீர்மையை அடைவதற்கு உரிய மார்க்கத்தை மேற்கொண்டிருக்கின்றன. பிரம்மத்தினோடு தான் ஒன்றாந் தன்மையை உணர்ந்து கொள்ளும் வரையும் பிறப்பிறப்பாகிய சக்கரத்தில் நின்று தப்பிக்கொள்ள முடியாது. மனிதப் பிறவியை அடைந்த மகன், முத்தியடைய வேண்டுமென்னும் விருப்பமானது அதி தீவிரப்பட்டு நிற்க, அதனோடு, உண்மை நிலையை அடைந்த சற்குருவினுடைய அனுக்கிரகத்தைப் பெறுகின்றான். அப்பொழுது ஆத்ம ஞானத்தைப் பெற வேண்டுமென்னும் விருப்பமானது மிகுதிப்படுகின்றது. அங்ஙனம் நிகழாவிடின், பொன்னாசை, பெண்ணாசையிலேயே பட்டுழலுகின்ற மனமானது அவ்வழித் திரும்புகிறதில்லை. குடும்ப வாழ்க்கையினால் வருகின்றனவாகிய இன்பத்தை

யும் பொருளையும் கீர்த்தியையும் நினைந்து அவற்றிடையே சிக்குண்டு கிடக்கின்ற உள்ளத்திலே பிரம்மத்தை அடைய வேண்டுமென்னும் ஆசை எங்ஙனம் உண்டாகும்? யாவற்றினையும் துறந்து, நன்மை தீமை, இன்ப துன்பம் என இருபாற்பட்ட வாழ்க்கை என்னும் ஆற்றினிடையே அடக்கத்தோடும் நிலையாகிய புத்தியோடும் தனது உயர்தனிக் கொள்கையை அடைய வேண்டுமென்று முயற்சிப்பவனே ஆத்ம ஞானத்தையும் அடைகின்றவனாகின்றான். தன்னுடைய சித்த சக்தியின் வலிமையினால் உலகமென்னும் மாயவலையைக் கிழித்தெறிந்து வீரம் பொருந்திய ஆண் சிங்கத்தைப் போல மாயையினுடைய கட்டிலிருந்து அவன் வெளிப்படுகின்றான்.

சிஷ்: சந்நியாசம் பெறாது பிரம்ம ஞானத்தை அடைதல் கூடாது என்பது உண்மைதானா?

சுவா: ஆம், ஆயிரம் முறை உண்மையே. புறத்துறவு உள்ளத்துறவு ஆகிய இரண்டும் வேண்டும். மனத்திலே வரித்துக்கொண்ட சந்நியாசமும் புறத்தே கிரியைகளோடு பெற்றுக்கொண்ட சந்நியாசமும் ஆகிய இரண்டும் வேண்டும். "இன்றியமையாது வேண்டப்படுகிற சாதனங்களின்றிச் செய்கிற தபஸினால்" என்னும் உபநிடத வாக்கியத்துக்கு உரையெழுதும்போது சங்கராசாரிய சுவாமிகள் (காஷாயம், தண்டு, கமண்டலம் என்கின்ற) சந்நியாசத்துக்குரிய வெளியடையாளங்களில்லாது செய்கிற சாதனையினால் பெறற்கரிய பிரம்மம் பெறப்படுவதில்லை என்று கூறுகின்றார். பிரபஞ்சத்தில் வெறுப்பும் போகானுபவத்துக்குரிய பொருள்களை நீக்கி விடுதலாகிய துறவுமின்றி ஆத்மீக வாழ்க்கையிலே யாதொன்றினையும் அடைதல் கூடாது. "தந்திரத்தினால் பறித்துக்கொள்ளக் கூடிய சிறு குழந்தையினுடைய கைத் தின்பண்டம் போன்றதன்று அது!"

சிஷ்: ஆனால் ஐய, சமய சாதனைகளைச் செய்து கொண்டு போம்பொழுது துறவு வருதல் கூடுமே.

சுவா: அவ்வண்ணம் படிப்படியாக வருமென்று நினைத்திருப்போர் அவ்வகை அதனைப் பெறுவாராக. ஆனால், நீயேன் காத்துக்கொண்டு சும்மா யிருக்கவேண்டும்? உண்மை ஞானப் பெருக்காகிய நீரூற்றினை உன்னுடைய வாழ்க்கை யென்னும் நிலத்தில் பரவச் செய்வதற்கு வேண்டிய வாய்க்காலை நீ உடனே வெட்டத் தொடங்குவாயாக. அவசரமில்லை, ஆன்மலாபம் படிப்படியாக வரட்டும் என்று சொல்லிச் சமய சாதனைகளிற் கருத்தற்றிருப்போரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் இழித்துரைப்பதுண்டு. ஒருவனுக்கு நீர்வேட்கை இருந்தால் சும்மாயிருப்பானா? தண்ணீரை நாடி உடனே ஓடுவானன்றோ? ஞான நீருக்கு உரிய தாகம் உனக்கு இன்னும் வரவில்லை. ஆதலினாலே நீ சோம்பிப்போய் சும்மாவிருக்கின்றாய். ஞானத்தை யறியவேண்டு மென்னும் ஆவலானது முற்றவில்லை. ஆதலினால் குடும்ப வாழ்க்கையில் அடைகின்ற சிற்றின்பங்களிலே சந்தோஷமுற்று வாழ்கின்றாய்.

சிஷ்: யாவற்றையும் துறந்துவிட வேண்டு மென்னும் எண்ணம் எனக்கு ஏன் உண்டாகவில்லை யென்பதை யான் உள்ளவாறு உணர்ந்துகொள்ளா திருக்கின்றேன். தயை செய்து அதற்கு ஒரு வழிகாட்டி யருள வேண்டும்.

சுவா: கருவியும் முடிவும் உன் கையிலே யிருக்கின்றன; நான் அவற்றைச் சிறிது விரைவுபடுத்தலாம். நீ எத்தனையோ சாஸ்திரங்களைப் படித்திருக்கின்றாய். பிரம்ம ஞானிகளாகிய சாதுக்களோடு கலந்துறவாடித் தொண்டு செய்கின்றாய்—இதுதானும் உனக்குத் துறவுக்குரிய எண்ணங்களைத் தராவிடின் உன்னுடைய வாழ்க்கை வீண் போவதே. ஆயினும் முற்றிலும் வீண் போகாது.—யாதாயினும் ஒரு காலத்தில் இந்தப் பயன் வெளிப்பட்டுத் தோன்றும்.

மனச் சோர்வடைந்த சிஷ்யன் மறுபடியும் சுவாமிஜியை நோக்கி, "ஐய, தேவரீருடைய திருவடியைப்

புகலிடமாகக் கொண்டேன். இந்த தேகம் விழுமுன் நான் உண்மையை உணர்ந்துகொள்ளும் பொருட்டு முத்திக்குரிய வழியினைத் திறந்து விடுதல் வேண்டும்" என்றார்.

சுவா: அஞ்ச வேண்டியது எதற்கு? எப்பொழுதும் விவேகமுள்ளவனாயிரு. உன்னுடைய உடலம், உன்னுடைய வீடு, இங்கே காணப்படுகிற உயிர்க் கூட்டங்கள் ஆகிய இவையனைத்தும் கனவைப்போல பொய்ந் நீர்மையவே. இந்த உடலமானது சடத்தன்மை படைத்த ஒரு கருவியே என்பதனை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள் இதனுள்ளே இருக்கின்ற புருஷன்றானே உனது உண்மைத் தன்மையென்பதை அறிந்துகொள். மனம் என்பது சூக்கும வடிவமாக அப்புருஷனை மறைத்திருக்கின்ற அங்கி; இந்த உடலம் அவனுக்குப் புறத்தே உள்ள பருப்பொருளாகிய அங்கி மயக்கத்தைத் தருகிற இந்தத் திரைகளிலே வேறுபாடற்றவனும் அகண்டிதனும் சுயம்பிரகாசனுமாகிய புருஷன் மறைந்து கிடக்கின்றான். ஆதலால் உனது உண்மைத் தன்மையை நீ அறிந்துகொள்ளவில்லை. புலன்களை நாடிப் புறத்தே செல்லுகின்ற மனத்தின் கதியினை மாற்றி அகத்தே நோக்கும்படி செய்தல் வேண்டும். மனத்தை வதைத்துவிட வேண்டும். உடல் சடப்பொருளாலானது. அது அழிந்து பஞ்ச பூதங்களிலே கலந்து விடுகின்றது. எண்ணங்களின் கூட்டமாகிய மனமானது விரைவில் அழிந்து போகிறதில்லை. அது சிறிது காலத்துக்கு வித்து வடிவமாகக் கிடந்து பின்பு முளைத்து மரமாகின்றது. அதாவது மற்றொரு தேகத்தையெடுத்துப் பிறப்பிறப்பாகிய சக்கரத்தினுள்ளே இயங்குகின்றது. ஆத்ம ஞானம் உதிக்கும் வரையும் இப்படி நிகழும். ஆதலினாலே தியானத்தினாலும் மனத்தை ஒரு வழிப்படுத்துவதினாலும், ஞானத்திலிருந்து எழுகின்ற விவேகத்தின் வலிமையினாலும் சச்சிதானந்த சாகரத்தினுள்ளே இந்த மனத்தை அமிழ்த்துவாயாக.

மனம் அழியும் பொழுது அதனைச் சார்ந்தன யாவும் மறைந்துபோய் விடுகின்றன; அப்போது நீ பிரம்மத்திலே நிலை பெற்றிருப்பாய்.

சிஷ்: அடக்குதற்கரிய இவ்வுள்ளத்தை பிரம்மத்தின்பாற் செலுத்துவது மிகவும் கடினமாயிருக்கின்றது.

சுவா: வீரனுக்கு முடியாத காரியமென்ன? வலியிழந்த சிந்தையை உடையவர்களே இவ்வண்ணம் பேசுவார்கள். **வீராணாமேவ கரதலகதா முக்தி: நபுன: காபுருஷாணாம்** "முக்தியை யடைவது வீரவானுக்கு எளிது. கோழைநெஞ்சுடையவர்களுக்கு இயலாதது." **அப்யாசேநது கௌந்தேய வைராக்யேனச க்ருஹ்யதே** "துறவினாலும் அப்பியாசத்தினாலும் மனத்தைக் கட்டுப்படுத்துவாயாக, ஓ அர்ச்சுனனே!" எனக் கீதை சொல்லுகிறது. சித்தமானது தெளிந்த நீர் நிறைந்த குளத்தைப் போன்றது. புலன்களிலே பட்ட பொருள்களின் சேர்க்கையினாலே அதனிடத்திருந்து எழுகின்ற அலைகளே மனது எனப்படுவது. ஆதலினால் ஒன்றின் பின் ஒன்றாகத் தொடர்ந்து வருகின்ற எண்ணங்களின் அலைகளே மனம். இந்த மன அலைகளிலிருந்து வேட்கை யுண்டாகிறது. இவ்வேட்கை இச்சையாகப் பரிணமித்துச் செயலாகி, தூலக்கருவியாகிய உடலின் வழியாகத் தொழில் புரிகின்றது. கருமத்துக்கு முடிவில்லை. ஆதலால் கருமத்தின் பயனுக்கும் முடிவில்லை. கருமப் பயனாகிய எண்ணற்ற அலைகளினாலே மனமானது எப்பொழுதும் உந்தப்படுகிறது. மனத்திலுள்ள எல்லா விருத்திகளையும் நீக்கி அதனை மீட்டும் தெளிந்த குளமாக்குதல் வேண்டும். வேறுபாட்டோடு கூடிய ஒன்றுதானும் அதனிடத்து எஞ்சியிருத்தல் கூடாது. அப்பொழுது பிரம்மம் வெளிப்பட்டுத் தோன்றும். "உள்ளத்திலுள்ள முடிச்சுகளெல்லாம் அப்பொழுது அறுந்து போகின்றன" என்பது முதலாகிய வேத வாக்கியங்கள் இந்த நிலைமை

யைச் சிறிது காட்டுகின்றன. உனக்குத் தெளிவா யிற்ரு?

சிஷ்: ஆம் ஐய, ஆனல் தியானமானது தியானிக்கப்படுகிற யாதானும் ஒரு பொருளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டாமா?

சுவா: உனது தியானத்தின் பொருள் நீயாகவே இருப்பாய். எவ்விடத்தும் வியாபித்திருக்கின்ற ஆத்மன் நீயே என நினைத்துத் தியானிப்பாயாக; "தேகம் நானில்லை மனம் நானில்லை, புத்தி நானில்லை, தூல சூக்கும சரீரமும் நானில்லை" என்று இவ்வாறு ஒவ்வொன்றினையும் அகற்றிவிடுகின்ற முறையினலே உரையுணர்வு கடந்த ஞானத்திலே உன்னுடைய உள்ளத்தை அமிழ்த்துவாயாக; அதுவே உனது உண்மை நிலை; மீட்டும் மீட்டும் மனத்தை அங்ஙனம் அமிழ்த்தி அதனைக் கொன்று விடு. அப்பொழுதுதான் நீ அறிவு வடிவத்தை அடைந்து உன்னுடைய சொந்த நீர்மையிலே நிலைபெற்றிருப்பாய். அறிவானும் அறியப்படும் பொருளும், தியானிப்பானும் தியானிக்கப்படும் பொருளும், ஒன்ருக, தோற்ற வடிவாகிய ஆரோப மனைத்தும் அகன்றுபோய் விடுவன. இதனையே திரிபுடி பேத ஞானத்தைக் கடந்து நின்ற நிலையென சாஸ்திரங்கள் கூறுகின்றன. அறிவான் ஆத்மனுய் இருக்கும்பொழுது என்ன கருவியினல் அவனை யறிதல் கூடும்? ஆத்மனே ஞானம், ஆத்மனே விவேகம், ஆத்மனே சச்சிதாநந்தம். உள்ளதோ, இல்லதோ எனக் கூறமுடியாத அநிர்வசனீயமாகிய மாயையினுடைய காணமுடியாத வல்லமையினல் பிரம்மமாயுள்ள ஜீவனிடத்து பேதபுத்தி ஏற்பட்டு விட்டது. இதனைப் பொதுவாக ஜாக்ர (விழிப்பு) நிலை யென்பர். இரு வேறுவகைப்பட்ட பேத நிலையிலிருந்து நீங்கி சுத்தப் பிரம்மத்தோடு ஒன்ருய் நிற்கும் நிலையினைச் சாஸ்திரங்கள் துரியாதீத நிலையெனக் கூறுகின்றன. இது **ஸ்திமித ஸலிலராசி ப்ரக்யமாக்யாவிஹீனம்.** பேரில்லாததாய்ச் சிறிதேனும் இயக்கமில்லாத சமுத்திரத்தைப் போன்றுள்ளது.

பிரம்ம நிலையின் மிகுந்த ஆழத்திலிருந்து வெளிப்படுத்திய மொழிகள்போல சுவாமிஜி இந்த வாசகங்களைப் பேசினார்.

சுவா: ஞான சாஸ்திரங்களும் சமய சாஸ்திரங்களும் கருத்தா கருமம் என்னும் வேறுபாடு உளதாகிய வியவகார ஞான நிலையிலே தோற்றியன. இதற்கு அப்பாலாயிருக்கின்ற உண்மைப் பொருளை மனித மொழியினாலோ எண்ணத்தினாலோ முற்றிலும் வரையறை செய்தல் இயலாது. விஞ்ஞான சாஸ்திரம் தத்துவ சாஸ்திரம் முதலியன வெல்லாம் ஒவ்வொரு பாகமாகிய உண்மைகளே. உரை யுணர்வு கடந்த உண்மைப் பொருளை எடுத்துக் கூறுவதற்கு அவை தகுந்த வழிகளாகமாட்டா. பாரமார்த்திக நிலையிலிருந்து பார்க்கும்பொழுது, சமயக் கொள்கைகளும் கருமங்களும் நீயும் நானும், பிரபஞ்சமும் அனைத்தும் பொய்யாகவே காணப்படுகின்றன. அப்பொழுது தான் நான் மாத்திரமே உண்மைப் பொருள் என்னும் பேருண்மை புலப்படுகின்றது; எவ்விடத்திலும் வியாபித்திருக்கின்ற ஆத்மன் நானே; நான் உளன் என்பதற்கு நானே சாக்ஷி. அங்ஙனமிருக்கும் பொழுது நான் உளன் என்னும் உண்மையை ஸ்தாபிப்பதற்கு வேறு சான்று எங்கிருத்தல் கூடும்? சமய சாஸ்திரங்கள் சொல்லுவதுபோல, "என்றும் நித்திய சாக்ஷியாக இருக்கிற நான் என என்னை அறிந்துகொண்டிருக்கிறேன்" **நித்யமஸ்மத் பிரஸித்வயம்.** நான் அந்த நிலையை உள்ளபடி கண்டு அடைந்தனுபவித்திருக்கிறேன். நீயும் அதனைக் கண்டறிந்து இந்தப் பிரம்மத்தைப் பற்றிய உண்மையை யாவருக்கும் போதிப்பாயாக. அப்பொழுது தான் நீ சாந்தியை அடைவாய்.

இந்த வார்த்தைகளைப் பேசும்பொழுது ஆழ்ந்த எண்ணத்திலே அழுந்தியதுபோல சுவாமிஜியினுடைய திருமுக மண்டலத்திலே ஒரு தோற்றம் காணப்பட்டது. சிறிது நேரம் கழித்து அவர் பின்னும் சொல்லுவார்,

"உன்னுடைய வாழ்க்கையிலே எல்லா உண்மைகளுக்கும் மேலான உண்மையாயும் எல்லா ஞானங்களையும் தன்னுள் அடக்கியதாயும் இருக்கின்ற இந்தப் பிரம்ம ஞானத்தை சாக்ஷாத்காரமாக உணர்ந்து அதனை உலகத்துக்குப் போதிப்பாயாக. இதனால் உனக்கு நன்மையுண்டாகும்; மற்றவர்களுக்கும் நன்மை யுண்டாகும். எல்லா உண்மைகளின் சாரமாக விளங்குகிற இவ்வுண்மையை நான் உனக்கு இன்று தெரிவித்திருக்கிறேன். இதனினும் பார்க்க உயர்ந்த தொன்றில்லை."

சிஷ்: ஐய, தேவரீர் இப்பொழுது ஞானத்தைப் பற்றிப் பேசுகின்றீர். சில வேளைகளில் பக்தியினுடைய உயர்வையும் சிலவேளைகளில் கருமத்தினுடைய உயர்வையும் சிலவேளைகளில் யோகத்தினுடைய உயர்வையும் பெருகக் கூறுகின்றீர். இதனால் எங்கள் உள்ளத்துக்குத் தெளிவின்மை உண்டாகிறது.

சுவா: நல்லது, மனிதன் அடையவேண்டிய உயர்ந்த பேறு பிரம்ம ஞானமேயாகும். இதுவே உண்மை. ஆனால் முழுநேரமும் மனிதன் பிரம்ம ஞானத்திலே அழுந்திக்கிடத்தல் கூடாது. அதனின்று வெளிப்பட்டு வரும்பொழுது அவனுக்கு ஏதாவது முயற்சியிருத்தல் வேண்டும் மக்களுக்கு நன்மையைத் தருகின்ற முயற்சியை அவன் செய்தல் வேண்டும். ஆதலினாலே அத்துவிதமாகிய கொள்கையோடு ஜீவர்களுக்குத் தொண்டுபுரி என்பதாக நான் உனக்கு வற்புறுத்திக் கூறுகிறேன். ஆனால் என் மைந்தனே, கருமத்தினால் ஏற்படுகின்ற சிக்கலோ பெரிது. பெரிய மகானுபாவர்களும் அதனிடையே அகப்பட்டு பந்தமுற்றவராகின்றார்கள். ஆதலால் எத்தொழிலைச் செய்யினும் அதனால் விளைகின்ற பயனை விரும்பாது செய்தல் வேண்டும். இதுவே கீதையின் போதனை. பிரம்ம ஞானத்திலே கருமத் தொடர்பு சிறிதேனும் இல்லை என்பதை அறிந்து கொள்வாயாக. நற்கருமங்கள் சித்தத்தைச் சுத்தப் படுத்துகின்றன. இது ஒன்றே அவற்றினால் எய்தப்படும்

பேறு. ஆதலினாலன்றோ பாஷ்யகாரராகிய சங்கரர் ஞானத்தையும் கருமத்தையும் ஒன்றுகூட்டிப் பேசுகின்ற கொள்கைகளை மிகவும் கண்டித்து எழுதியிருக்கின்றார்? சுயநலமற்ற கருமத்தைக் கருவியாகக்கொண்டு ஒரு சிலர் பிரம்ம ஞானத்தை அடைகின்றனர். இது கருவியாகுமேயன்றிப் பிரம்மத்தை அடைகின்ற முடிபு ஆகாது. விவேகமாகிய மார்க்கத்திலே செல்லுவதும் ஏனைய சாதனைகளைச் செய்வதும் பிரம்ம ஞானத்தை அடையும் பொருட்டாகவே என்பதை முற்றிலும் அறிந்துகொள்வாயாக.

சிஷ்: ஐய, தயை செய்து இராஜயோக பக்தி யோகங்களினால் விளைகின்ற நலத்தைப்பற்றிச் சொல்லியருளுதல் வேண்டும்?

சுவா: இந்த மார்க்கங்களைப்பற்றி அனுஷ்டிப்பவர்களிற் சிலர் பிரம்ம ஞானத்தை அடைகின்றனர். ஆண்டவனிடத்து அன்பு செலுத்துகின்ற பக்தியென்னும் மார்க்கம் மிகவும் பழமையாகச் சொல்லுதற்குரியது. ஆனால் அனுஷ்டிப்பதற்கு எளிதானது. யோக மார்க்கத்திலோ பல தடைகள் இருக்கின்றன. மனமானது சித்திகளை விரும்பி நீ உன்னுடைய உண்மை நிலையை அடைவதற்கு முன்னேறிச் செல்லுகின்ற மார்க்கத்திலிருந்து உன்னை விலக்கிவிடுதல் கூடும். ஞான மார்க்கமே அதி தீவிரத்திற் பயனைத் தருவது; எல்லாக் கொள்கைகளுக்கும் காரணம் இதுவெனக் காட்டி நிற்பது. ஆதலினால் எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் அது எல்லாராலும் பெரிதும் மதிக்கப்பட்டது. ஞான மார்க்கத்திலும் மனமானது வீண்வாத மென்னும் முதலீறு இல்லாத வலையிலே சிக்கிவிடுதல் கூடும். ஆதலினாலே அதனோடுகூட தியானத்தையும் அனுஷ்டித்தல் வேண்டும். விவேகமும் தியானமும் கருவியாகக் கொண்டு பிரம்மத்தை அடைதல் வேண்டும். இந்த மார்க்கத்திலே தளர்வின்றி முயன்று நிற்போன் நிச்சயமாகவே பிரம்ம ஞானத்தை

அடைவான். ஆதலினலே விரைவாக அனுகூலத்தைத் தரத்தக்க இலகுவாகிய மார்க்கம் இதுவென்பது எனது கருத்து.

சிஷ்: பகவானுடைய அவதாரங்களைப் பற்றிய கொள்கைகளைக் குறித்துச் சில விஷயங்களைத் தயவு செய்து தெரிவித்தருளல் வேண்டும்.

சுவா: யாவற்றையும் ஒரு நாளையிலேயே பூரணமாக அறிந்துவிட வேண்டுமென்று நீ நினைக்கின்ருய் போற் காணப்படுகின்றது.

சிஷ்: ஐய, என் மனத்திலுள்ள ஐயப்பாடுகளையும் விளக்கக் குறைகளையும் ஒரு தினத்திலே தெளிவு படுத்திவிட்டால் இடையிடையே தேவரீருக்குத் தொல்லை கொடுக்கவேண்டி நேரிடாது.

சுவா: சமய சாஸ்திரங்களிலே மிக உயர்ந்ததாகக் கூறப்பட்டிருக்கின்ற இந்த ஆத்ம ஞானமானது எவருடைய திருவருளினலே ஒரு கணப்பொழுதிலே கைகூடுகின்றதோ, அவரே சஞ்சரிக்கின்ற தேவாலயம். அவரே அவதார புருஷர். பிறந்த நாள் தொடக்கமாகவே அத்தன்மையோர் பிரம்ம ஞானிகளாயிருக்கின்றனர். பிரம்மத்துக்கும் பிரம்ம ஞானிக்கும் சிறிதேனும் வேறுபாடில்லை. **பிரம்ம வேத பிரம்மைவ பவதி** "பிரம்மத்தையறிந்தவன் பிரம்மமாகின்ருன்." மனத்தினலே ஆத்மனை அறிதல் கூடாது. ஏனெனின், ஆத்மனே அறிபவனுய் இருக்கின்ருன். இதனை நான் முன்னர் உனக்குத் தெரிவித்திருக்கின்றேன். ஆதலினல் மனிதனுடைய வியவகார புத்தியினலே அறிந்துகொள்ளக்கூடிய பேறெல்லை அவதார புருஷரேயாவர். ஆத்ம ஞானத்தினலே எப்பொழுதும் நிலைபெற்றிருக்கின்ற அவதார புருஷரையே மனிதனுடைய உள்ளமானது உயர்ந்த ஈசுவர சொரூபமாகக் காணுதல் கூடும். இதற்கப்பால் வியவகார ஞானம் செல்லமாட்டாது. பிரம்ம ஞானிகள் மிக அருமையாக இவ்வுலகத்திலே அவதரிக்கின்றனர். மிகச் சிலரே அவர்களை அறிந்துகொள்ளுதல் கூடும். பிரபஞ்ச

மாகிய சமுத்திரத்திலே, சுடரொளி விளக்கமாகத் தோன்றுபவர்கள் அவர்களே, சமய சாஸ்திரங்களின் உண்மைக்குச் சான்றாக இருப்பவர் அவர்களே. அத்தகைய அவதார புருஷர்களுடைய கூட்டுறவினாலும் அருளினாலும் மனத்தைச் சூழ்ந்திருக்கின்ற மயக்க இருளானது ஒரு கணப்பொழுதிலே அகன்று போய்விடும். உண்மையனுபவம் உள்ளத்திலே உதயமாகும். அது எதனாலாகின்றது, எவ்வழி நிகழ்கின்றது என்பதை வரையறுத்துச் சொல்லுதல் கூடாது. ஆனால் அப்படி நிகழ்கின்றது; நிகழ்வதை நான் கண்டிக்கின்றேன். தம்மை ஆத்மனிலே நிலைபெறச்செய்து அந்நிலையிலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் கீதையை உபதேசித்தார். கீதா சாஸ்திரத்திலே எவ்வெவ்விடங்களில் 'நான்' என்னும் மொழி வருகின்றதோ அது ஆத்மனைக் குறிப்பது என்று கொள்ளல் வேண்டும். "என்னை மாத்திரமே புகலிடமாகக் கொள்" என்பதன் கருத்து "ஆத்மனிலே நிலைபெற்றிரு" என்பதாம். இந்த ஆத்ம ஞானமே கீதா சாஸ்திரத்தினுடைய மிக உயர்ந்த நோக்கம். இந்த ஆத்ம ஞானத்தை அடைவதற்குக் கருவியாகவே ஏனைய யோகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஆத்ம ஞானம் இல்லாதவர்கள் உண்மையிலே 'தற்கொலை புரிந்தவர்கள்' ஆவார்கள். "பொய்ப் பொருளைப்பற்றிக் கிடந்து தம்மைத் தாமே கொன்று விடுகிறார்கள்." புல நுகர்ச்சியாகிய வலையிலே அகப்பட்டு உயிரை இழந்து விடுகின்றார்கள். நீங்களும் மனிதர்களல்லவா? இரண்டு நாட்களுக்கு நிலைத்திராத சிற்றின்ப அனுபவங்களென்னும் இந்தக் குப்பையை விட்டுவிடுதல் கூடாதா? பூரண அஞ்ஞானத்திலே பிறந்து அஞ்ஞானத்திலே இறந்து போகின்ற மக்களுடைய எண்ணிக்கையிலே நீங்களும் சேரவேண்டுமா? 'இனியன' என்பவற்றைத் துறந்து 'நல்லன' என்பவற்றைக் கைக்கொள்வாயாக. இந்த ஆத்மனைப் பற்றி எல்லாருக்கும் சொல்லுவாயாக. மிக மிகத் தாழ்ந்தோருக்கும் சொல்லுவாயாக. தொடர்ச்சியாக இதனைப்பற்றி வசனிப்பதில் உன்னுடைய புத்தியும்

தெளிவடையும். எப்பொழுதும் **தத்வமஸி** "அது நீயாகுய்" **ஸோஹமஸ்மி** "நான் அவனுக விருக்கின் றேன்" **ஸர்வம் கல்விதம் பிரம்ம** "இவை யாவும் பிரம் மம்" என்னும் இந்த மகா மந்திரங்களை யெப்பொழு தும் உச்சரித்து இருதயத்திலே ஆண் சிங்கம் போன்ற தைரியத்தை உடையவனுக இருப்பாயாக. எதற்குப் பயப்படவேண்டும்? அச்சமே மரணம்; அச்சமே பாவங்களுக்குள் பெரிய பாவம். மானிடனுகிய அருச் சுனன் அச்சத்தினுல் தீண்டப்பட்டான். ஆத்மனிடமே நிலைபெற்றிருந்த பகவானுகிய ஸ்ரீ கிருஷ்ணன், ஆனது பற்றி, அவனுக்குக் கீதையை உபதேசித்தார். அப்படி யிருந்தும் அச்சம் அவனை விடவில்லை. அதன்பின் அர்ச்சுனன் பகவானுடைய விசுவரூபத்தைக் கண்டு ஆத்மனிலே நிலைபேறடைந்தான்; ஞானமாகிய அக்னி யினுலே அவனுடைய கர்மபந்தங்கள் தகிக்கப்பட்டன. அவன் முனைந்து நின்று போர் செய்தான்.

சிஷ்: ஐய, ஆத்ம தரிசன நிலையை அடைந்த பின் னும் மனிதன் கருமம் செய்தல் கூடுமா?

சுவா: ஆத்ம தரிசனத்தின் பின்பு பொதுவாக நாம் கருமம் என்று சொல்வது நிலைபெற்றிருப்பதில்லை. அதனுடைய நீர்மை மாறிப்போகின்றது. ஞானி செய் கின்ற கருமங்கள் உலகுக்கு உபகாரத்தையே தருகின் றன. உண்மையையுணர்ந்த மனிதன் செய்வது அனைத் தும், சொல்வது அனைத்தும் எல்லாருடைய நன்மையை யும் கருதியனவேயாம். நாங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்டிருக்கின்றோம். அவர் **தேஹஸ்தோ அபி நதேஹஸ்த**: "தேகத்தோடிருந்தும் தேகத்தோடு ஒன்றுகாதிருந்தார்." அத்தகைய பெரியோர்களுடைய கருமத்தின் நோக்கத்தை விசாரிக்குமிடத்து **லோகவத்து லீலா கைவல்யம்**: "மனிதர்கள் போன்று அவர்கள் செய்கிற கருமங்களெல்லாம், லீலை மாத்திரையாக நிகழ்வன" என்று சொல்லலாம்.

(33)

[இடம் : பேலூர் திருமடம். காலம் : 1901-ஆம் ஆண்டு].

கல்கத்தா நகரிலுள்ள ஜூபிலிச் சித்திர கலாசாலையை நிறுவியவரும் அதன் ஆசிரியரும் ஆகிய ஸ்ரீயுத ரநாதப் பிரசாத தாச குப்தரோடு சிஷ்யர் இன்று மடத்திற்கு வந்தார். ரநாத பாபு சித்திரக்கலையில் மிகத்தேர்ந்தவர். சிறந்த கல்விமான், சுவாமிஜியின்மீது மிகுந்த மதிப்புடையவர். சுகம் விசாரித்த பின்பு ரநாத பாபுவோடு சுவாமிஜி சித்திரக்கலையைப் பற்றிப் பல்வேறு விஷயங்களைப் பேச ஆரம்பித்தார்.

சுவா : உலகத்திலே நாகரிகம் படைத்த நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள சித்திரங்களின் வனப்பைப் பார்வையிடும் வசதி எனக்கு ஏற்பட்டது ; ஆனால் நமது நாட்டிலே பௌத்த காலத்திலே சித்திரக்கலையானது எய்திய வளர்ச்சியைப் போன்ற விருத்தியை நான் பிறிதெவ்விடத்திலும் காணவில்லை. மொகலாய சக்கரவர்த்திகள் அரசுபுரிந்த காலத்திலும் சித்திரக்கலை சிறப்புற விருத்தி எய்தியது. தாஜிமஹாலும், ஜும்மா மஸ்ஜிதும் அந்த வளர்ச்சிக்கு அறிகுறியாக இன்றும் நிலைபெற்றிருக்கின்றன.

மனிதன் யாதொன்றைச் செய்கின்றானோ அதனிடத்து ஒரு கருத்து வெளிப்படும்படியாகச் செய்தலே சித்திரக்கலைக்கு உற்பத்தியாகும். நிறம் முதலியன எவ்வளவாகக் காணப்படினும் ஒரு கருத்தை வெளிப்படுத்தாத ஓவியமானது உண்மைச் சித்திரமெனக் கொள்ளப்படமாட்டாது. நாள் தோறும் உபயோகிப்பதற்குரிய நீர்க்கரகம், கிண்ணம், தட்டம் முதலியனவும் ஒரு கருத்தை வெளிப்படுத்தும் தன்மையவாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பாரிஸ் நகரத்துச் சர்வ கலாசாலையிலே வெள்ளிய சலவைக் கல்லினுற் செய்த அற்புதமான உருவம் ஒன்றினை நான் கண்டேன். அதன் கீழே, "ஓவியக்கலை, இயற்கையினது திரையை நீக்குதல்" என எழுதப்பட்டிருந்தது ; அஃதாவது

இயற்கையிலே அமைந்திருக்கின்ற வனப்பினை நோக்கும் பொருட்டு ஓவியக்கலையானது தன் கைகளாலே இயற்கையை மறைத்திருக்கின்ற திரைகளை அகற்றி விடுவது என்பது. இயற்கை வனப்பானது முற்றிலும் வெளிப்படுத்தப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்தப்பட்ட அழகினைக் கண்டு ஓவியம் வல்லோன் ஆச்சரிய பரவசப்பட்டு விட்டான் என்றுங் காட்டுந் தன்மையதாக அவ்வுருவம் அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய அழகிய எண்ணத்தை வெளிப்படுத்த முயன்ற சிற்பியைப் புகழாது இருத்தல் கூடாது. இத்தகைய புதிய கருத்தமைந்த ஓவியத்தைச் செய்வதற்கு நீர் முயலுதல் வேண்டும்.

ரநாத பாபு: ஆம், காலம் வாய்க்கும் பொழுது புதிய சிலை அமைப்பு சிலவற்றைச் செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் இந்த நாட்டிலே என்னை ஊக்கப்படுத்துவார் யாரும் இலர். இது வறுமையுற்ற நாடு, ஆற்றலை மதிக்கும் தன்மை இங்கு இல்லை.

சுவா: முழுமனதோடு நீர் செவ்வையாகிய நல்ல வேலை ஒன்றினைச் செய்வீராயின், யாதாயினும் ஒரு எண்ணத்தையாவது சித்திர மூலமாக வெளிப்படுத்திக் காட்டுவீராயின், காலகதியிலே அது மதிப்பினைப்பெறும். உண்மையாகிய ஒரு பொருள் இவ்வுலகத்திலே மதிப்புப்பெறாது போவதில்லை. ஓவியம் வல்லார் சிலர் இறந்து ஆயிரமாண்டுக்குப் பின்பு மதிப்பை யடைந்தார் என்று யான் கேள்விப்பட்டது உண்டு.

ரநாத பாபு: அஃது உண்மையே. ஆனால் காரணமின்றி நேரத்தையும் வல்லமையையும் செலவிடுதற்கு வேண்டிய தைரியம் எங்களிடத்தில்லை. நாங்கள் ஒன்றுக்கும் பற்றுதவர்களாய்ப் போய்விட்டோம். ஐந்து வருடம் முயன்று நான் ஓரளவுக்கு அநுகூல மடைந்திருக்கின்றேன். எனது முயற்சி வீண் போகாவண்ணம் தேவரீர் என்னை ஆசீர்வதித்தருள வேண்டும்.

சுவா: நீர் சரியான ஊக்கத்தோடு முயல்வீராகில் நிச்சயமாகவே அநுகூலமடைவீர். உயிரும் மனமும் ஒருமித்து நிற்பவனொருவன் எந்தக் காரியத்தைச் செய்கின்றானோ அதில் அவன் அநுகூலமடைகின்றான். அதனிடத்து உள்ளமானது பதிந்து ஒரு வழிப்பட்டு நிற்பதினால் பிரம்மமாகிய அதியுயர்ந்த உண்மைப்பொருளை அடைகின்றான். முழு மனதோடு கருமத்திலே முயன்று நிற்பவன் ஆண்டவனுடைய உதவியையும் பெறுகின்றான்.

ரநாத பாபு: மேலைத் தேசத்துச் சித்திரக் கலைக்கும் இந்தியநாட்டுச் சித்திரக் கலைக்கும் தேவரீர் என்ன வேறுபாட்டினைக் கண்டீர்கள்!

சுவா: எங்கும் ஒரே படித்தாகவே இருக்கிறது. புதிய எண்ணங்களைக் காணுவது அபூர்வம். பல்வேறு வகைப் பொருள்களையும் புகைப்படம் பிடித்து அங்ஙனம் பெற்ற படங்களின் உதவியைக் கொண்டு அத்தேசத்தார் ஓவியங்களை வரைகின்றார்கள். ஆனால் இயந்திரங்களின் உதவியை எப்பொழுது ஒருவன் நாடுகின்றானோ அப்பொழுது புதுக் கருத்துக்கள் மறைந்து விடுகின்றன: உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களை வெளிப்படுத்திக் காட்டுதல் இயலாததாகின்றது. பூர்வ காலத்திலிருந்த சித்திரக்காரர்கள் புது எண்ணங்களை உண்டுபடுத்தி அவற்றைத் தமது ஓவியங்களிலே வெளிப்படுத்திக்காட்ட முயன்றார்கள். இப்பொழுதுள்ள படங்கள் புகைப்படங்களை ஒத்தனவாதலின் புதுக் கருத்துக்களும் அவற்றை விருத்தி செய்ய முயலுகின்ற முயற்சியும் குறைந்து போகின்றன. ஒவ்வொரு ஜாதியாருக்கும் தத்தமக்குரிய சிறப்பிலக்கணம் ஒன்று உண்டு. பழக்க வழக்கங்களிலும் வாழ்க்கையிலும் சித்திரத்திலும் ஓவியத்திலும் அந்தச் சிறப்பிலக்கணமானது வெளிப்பட்டுத் தோன்றக் காணலாம். உதாரணமாக மேலை நாட்டிலே இசையும் பரதமும் ஒரு வகைக் கூர்மையோடு வெளிப்பட்டுத் தோன்றக் காணலாம். பரத நாட்டியத்திலே அங்குள்ளோர் தமது

அவயவங்களை வீசி எறியும் தன்மைபோலக் காணப்படு வார். கருவியாற் பாடுகின்ற இசையிலே சுரங்கள் வாள்போல காதில் வந்து தைப்பன; குரலினாற் பாடும் இசையிலும் அவ்வாறே. இந்நாட்டிலோ என்றால், பரதநாட்டியம் அலைகள் போன்ற சுருண்ட பாவனை யுடையது, குரலினால் பாடும் இசையின் பல்வேறு நிலைகளிலும் அத்தகைய பாவனையுளது. கருவியோடு பாடும் இசையும் அது போன்றது. எனவே கலையிலும் கூட வேறு வேறு இலட்சணங்கள் அமைந்திருக்கக் காணலாம். லௌகிக சிந்தையுடைய மக்கள் இயற் கையை உயர்தனிக் கொள்கையாகக் கொண்டு ஓவியக் கலையிலும் அதனைச் சார்ந்த எண்ணங்களை வெளிப் படுத்த முயல்வார்கள். இயற்கைக்கு அப்பாலாகி இருக்கின்ற உரையுணர்வு கடந்த உண்மைப் பொருளைத் தனிப் பெருங் கொள்கையாகக் கொண்டார் சித்திரங் களிலே இயற்கைச் சக்திகளின் மூலமாக அந்த உயர் தனிக் கொள்கையை வெளிப்படுத்த முயல்வார்கள் முதல் கூறப்பட்ட வகுப்பினர்க்கு இயற்கை (பிர கிருதி)யே ஓவியக் கலையின் மூலாதாரமாக அமைந்துள் ளது. இரண்டாவது வகுப்பினர்க்கு இயற்கைக்கு அப்பாலாகிய உயர்தனிக் கொள்கைகளே பிரதான நோக்கமாக அமைவன. இங்ஙனம் சித்திரக்கலையின் மூல உற்பத்தி இரு வேறு வகைப்பட்டிருப்பினும் இரண்டும் தத்தம் மார்க்கத்திலே முன்னேற்றம் அடைந்தன. மேலை நாட்டிலே உள்ள நல்ல சில ஓவி யங்களைப் பார்த்தால் அவற்றுக்கும் உண்மையாகிய இயற்கைப் பொருள்களுக்கும் வேறுபாடு காணவொண் ணாது திகைப்பீர். இந்த நாட்டிலும் ஓவியக்கலை பரி பூரண நிலையை அடைந்திருந்த முன்னாளிலே, ஒருரு வத்தை நோக்குவீராயின் அது இப்பூவுலகத்தை மறக் கும்படி செய்து புதியதாகிய ஞான உலகத்துக்கு உம் முடைய உள்ளத்தைச் செலுத்தும். மேலைத் தேசங் களிலே பூர்வீகத்தில் எழுதப்பட்ட சித்திரங்களை ஒத்த திறமைவாய்ந்த சித்திரங்கள் இப்பொழுது எழுதப்படு

வதில்லை. இந்த நாட்டிலும் புதுக் கருத்தினை வெளியிடுகிற சித்திரங்களைச் செய்ய முயல்வாரைக் காண்பது அரிது. உதாரணமாக உங்களுடைய சித்திரக் கலா சாலையில் இருந்து வருகின்ற படங்களிலே உள்ளக் கருத்தை வெளியிடுந் தன்மை அமையவில்லை. இந்துக்கள் தினந்தோறும் தியானிக்கின்ற திருவுருவங்களைப் பழமையாக அவற்றுக்கு ஏற்பட்ட இலக்ஷணங்களோடு எழுத முயல்வீர்களாயின் அது மிக நன்றாகும்.

ரநாத பாபு: தேவரீருடைய திருமொழிகள் எனக்கு உற்சாகத்தைத் தருகின்றன. தேவரீர் சொல்லிய குறிக்கோள்களை ஆதாரமாகக் கொண்டு நடப்பதற்கு முயலுவேன்.

சுவா: உதாரணமாக காளி மாதாவினுடைய திருவுருவத்தை எடுத்துக் கொள்ளுவோம். அதனிடத்தே ஆனந்தகரமாகிய தோற்றமும் அச்சத்தைத் தரும் தோற்றமும் ஒன்றுகூடி அமைந்திருக்கின்றன. இங்ஙனம் இருவகைப்பட்ட தோற்றத்தைப் படங்களொன்றிலும் காண்பதற்கில்லை இரு வேறுவகைத் தோற்றத்தில் ஒன்றினையாகுதல் முற்றிலும் வெளிப்படுத்திக்காட்ட முயல்வார்தாமும் இல்லை. "காளி மாதா" என்னும் பெயரோடு யான் எழுதிய ஆங்கில மொழிச் செய்யுளிலே காளியினுடைய அச்சத்தைத் தருகிற தோற்றத்தைக் குறிப்பிடும் எண்ணங்கள் சிலவற்றை எழுத முயன்றிருக்கின்றேன்; அவ்வெண்ணங்களை ஒரு படத்திலே அமைத்துத் தர முடியுமா?

ரநாத பாபு: அவற்றைத் தயைசெய்து தெரிவிப்பீர்களாக.

சுவாமிஜி புத்தகச்சாலையிலே இருந்த அச்செய்யுளை எடுப்பித்து ரநாத பாபுவுக்கு உள்ளத்திற் பதியும் நீர்மையாக அச்செய்யுளை வாசித்துக் காட்டினார். ரநாத பாபு மௌனமாக இருந்து அச்செய்யுளுக்குச் செவிசாய்த்துச் சிறிது பொழுது கழித்து அகக்கண்ணினாலே அத்திருவுருவத்தைக் காண்பவர்போல அச்சமுற்ற தோற்றத்தோடு சுவாமிஜியை நோக்கினார்.

சுவா: இந்தக் கருத்தினை ஒரு படத்திலே அமைத்து எழுதுவீரா?

ரநாத பாபு: ஆம், அங்ஙனம் செய்ய முயலுவேன்; *ஆனால் அதை நினைக்கும் பொழுதே தலை சுழலுகின்றது.

சுவா: படத்தை எழுதிய பின்பு தயைசெய்து எனக்குக் காட்டுவீராக; அதனைப் பூரணப்படுத்துவதற்கு வேண்டிய குறிப்புகளைப் பின்பு யான் சொல்லுவேன்.

அதன்பின் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்து முத்திரைக்காக எழுதிவைத்திருந்த உருவத்தைக் கொணர்வித்துச் சுவாமிஜி அதனை ரநாத பாபுவுக்குக் காட்டினார். அதனிடத்தே அலர்ந்த தாமரை மலர் பொருந்திய தடாகமும் அன்னப் பறவையும் காணப்பட்டன. யாவற்றையும் மண்டலித்த வண்ணமாக ஒரு பாம்பு காணப்பட்டது. முதலிலே ரநாத பாபு படத்தினுடைய கருத்தை உணர்ந்து கொள்ளாது அதனைத் தெளிவுபடுத்தும்படி சுவாமிஜியைக் கேட்டார். சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினார்: "படத்திலே காணப்படுகிற அலை பொருந்திய நீர் கருமத்தைக் குறிப்பது, தாமரை மலர் பக்தியைக் குறிப்பது, எழுகின்ற சூரியன் ஞானத்தைக் குறிப்பது, சூழ இருக்கின்ற பாம்பு யோகத்தையும் விழித்தெழுந்த குண்டலினி சக்தியையும் குறிப்பது, படத்திலுள்ள அன்னம் பரமாத்மனைக் குறிப்பது. கருமம், ஞானம், பக்தி, யோகம் என்னும் இவற்றை ஒன்று கூட்டுவதினாலே பரமாத்மனுடைய தரிசனம் கிடைக்கப் பெறுகின்றதென்பது படத்தினாற் காட்டப்படுகின்ற உயர்ந்த கருத்து."

ரநாத பாபு மௌனமாக இருந்து படத்தினுடைய கருத்தினைக்கேட்டு மகிழ்ச்சியடைந்தவராய், "ஐய,

* ரநாத பாபு அடுத்த நாளே படத்தை ஆரம்பித்தார். அது முற்றுப் பெறவில்லை. சுவாமிஜிக்குக் காட்டப்படவுமில்லை.

தேவரீரிடமிருந்து சித்திரக் கலையைப்பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்" என்று கூறினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆலயத்தையும் மடத்தையும் அமைக்கப் போகின்ற விதத்தினைக் காட்டும் ஒரு படத்தைக் கொண்டுவந்து ரநாத பாபு சுவாமிஜிக்குக் காட்டினார். "இந்த ஆலயத்தையும் மடத்தையும் அமைக்கின்ற அமைப்பிலே கீழ்த்தேசத்துச் சித்திரக் கலையிலும் மேலைத் தேசத்துச் சித்திரக் கலையிலும் சிறந்து நின்ற வனப்புகள் யாவையும் ஒன்று கூட்டிக் காட்ட வேண்டுமென்று யான் விரும்பி இருக்கின்றேன். உலக முற்றிலும் யான் யாத்திரை செய்யும்போது கட்டிடங்களின் உருவ அமைப்பைப்பற்றி யான் கண்டறிந்த எண்ணங்கள் யாவற்றையும் இந்த அமைப்பிலே காட்டுவதற்கு முயலுவேன். பலவாகிய தூண்களை ஆதாரமாகக் கொண்டெழுந்த ஒரு பெரிய தியான மண்டபம் அமைக்கப்படும். அம்மண்டபத்தின் சுவர்களிலே நூற்றுக்கணக்கான தாமரை மலர்கள் முற்றிலும் விரிந்து தோன்றுவன. அம்மண்டபம் தியானத்தில் அமர்ந்திருக்கின்ற ஆயிரம் மக்களுக்கு இடங் கொடுக்கத்தக்க விசாலமுள்ளதா யிருக்கவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆலயமும் தியான மண்டபமும் தூரத்தினின்று பார்ப்போருக்கு ஓங்கார வடிவமாகத் தோற்றும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும். ஆலயத்தினுள்ளே அன்னப் பறவையில் ஆரோகணித்த தோற்றமாக ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவுருவம் அமைக்கப்பட வேண்டும். கபாடத்தின் இருபுறத்திலும் உயர்ந்த வலிமையும் சாந்தி நிலைமையும் அன்பினால் ஒன்றுகூடி யிருக்கின்ற தன்மையைக் காட்டுவதாக ஒன்றினை ஒன்று தழுவி இருக்கின்ற சிங்க உருவமும் ஆட்டுக்குட்டி உருவமும் அமைக்கப்பட வேண்டும். இந்த எண்ணங்கள் என் மனத்திலிருக்கின்றன; நான் வாழ்நாளோடிருப்பேனாயின் இவற்றைச் செய்து முடிப்பேன். அல்லாவிடின் மேல்வரும் சந்ததியார் படிப்படியாக இவற்றைச் செய்து முடிக்க முயலுவார்கள். எல்

லாவகைக் கலைகளையும் நாகரீகக் கொள்கைகளையும் உயிர்ப்பிக்கும் பொருட்டே ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த நாட்டிலே திருவவதாரம் செய்தார் என்பது எனது கருத்து. சமய உணர்ச்சியும் கருமமும் கல்வியும் ஞானமும் பக்தியும் இவ்விடத்திலிருந்து உலகனைத்திலுக்கும் பரப்பும் வண்ணம் இந்தத் திருமடமானது அமைக்கப் பட வேண்டும். இந்த முயற்சியில் நீவிர் உதவிபுரிவீராக."

ஆங்கு கூடியிருந்த சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் ரநாத பாபுவும் சுவாமிஜியினுடைய வாசகங்களைக் கேட்டு அதிசயமுற்றனர். சிறிது பொழுது கழித்து சுவாமிஜி ரநாத பாபுவை நோக்கி "இந்தத் தொழிலிலே நீர் வல்லவராக இருக்கின்றபடியால் உம்மோடு நெடுநேரம் இதைப் பற்றி வார்த்தையாடினேன்; நீண்ட காலத்துப் பயிற்சியினுலே நீர் ஆராய்ந்தறிந்த சித்திரக் கலையின் உத்தமக் கொள்கைகளை எனக்குத் தயை செய்து சொல்லுதல் வேண்டும்" என்றார்.

ரநாத பாபு: புதுவதாகத் தேவரீருக்கு யான் என்ன சொல்ல முடியும்? தேவரீரே இந்த விஷயத்தில் என்னுடைய கண்களைத் திறந்திருக்கின்றீர். என்னுடைய வாழ் நாளிலே ஒரு பொழுதும் சித்திரக் கலையைப் பற்றிய இத்தனை சிறந்த வாசகங்களை யான்கேட்டதில்லை. யான் பெற்ற எண்ணங்களைத் தொழிற்படுத்தும் வண்ணம் தேவரீர் என்னை ஆசீர்வதித்தருள வேண்டும்.

சுவாமிஜி ஆசனத்திலிருந்து எழுந்து பசும்புற்றரையிலே உலாவிக் கொண்டிருக்கும் பொழுது சிஷ்யரை நோக்கி "அவர் மிக ஆர்வமுள்ள இளைஞர்" என்றார்.

சிஷ்: ஐய, தேவரீருடைய வார்த்தைகளைக் கேட்டு அவர் ஆச்சரியமடைந்தார்.

சுவாமி சிஷ்யருக்கு மறுமொழி கூருது, "அடங்கிய சிந்தை, அரிய திரவியம், விரும்பியதைத் தருகின்ற பரிசமணி" என ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாடுகின்ற ஒரு பாட்டினைத் தமக்குள்ளே சொன்னார்.

சிறிது நேரம் உலாவிய பின்பு சுவாமிஜி முகத்தைக் கழுவிக்கொண்டு சிஷ்யரோடு தம்முடைய அறை

யினுள்ளே புகுந்து பிரித்தானிய விஸ்வகோசம் என்னும் நூலிலே சித்திரக் கலையைப்பற்றிய வியாசத்தைச் சிறிது நேரம் வாசித்தார். அது முடிந்த பின்னர் கிழக்கு வங்காளத்தார் உரையாடுகிற தன்மையை இழித்துக் கூறிச் சிஷ்யரைப் பரிகசிப்பாராயினார்.

(34)

[இடம் : பேலூர்த் திருமடம் காலம் : 1899-ம் ஆண்டு ஆரம்பம்.]

சுவாமிஜி சில தினங்களுக்கு முன்பே கிழக்கு வங்காளம், அஸ்ஸாம் முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்து திரும்பி வந்திருக்கிறார் ; கால்கள் வீங்கி யிருக்கின்றன. சிஷ்யர் திருமடத்திற்கு வந்து மேன்மாடிக்குப் போய் சுவாமிஜியினுடைய திருவடிகளிலே தண்டனிட்டார். நோயுற்றிருந்தும் சுவாமிஜியினுடைய திருமுக மண்டலத்திலே வழக்கமான புன்னகையும் அன்பான பார்வையும் மாறாதிருந்தன.

சிஷ் : சுவாமிஜி, தேவரீருடைய சௌக்கியம் எப்படி ?

சுவா : மகனே ! என்னுடைய சுகத்தைப்பற்றி என்ன சொல்லுவேன் ? இந்த உடலானது நாளுக்கு நாள் வேலை செய்தற்குத் தகுதியற்றதாகின்றது. வங்காள பூமியில் பிறந்த காரணத்தினாலே, எப்பொழுதும் ஏதாவது ஒரு நோய் அதனைப் பற்றுகிறது. ஏதாவது கடினமான வேலையைச் செய்வதென்றால், அது பொறுக்க மட்டாததாய் இருக்கிறது. ஆனால் இந்த உடல் எவ்வளவு நாளைக் கிருக்கிறதோ அவ்வளவு நாளும் உங்களுக்காக வேலை செய்வேன். வேலை செய்துகொண்டிருக்கும்போதே தேகத்தை விடுவேன்.

சிஷ் : சிறிது காலத்திற்கு வேலையின்றி ஓய்வாக இருந்தால் தேவரீருடைய சுகம் நன்னிலைக்கு வரும். தேவரீருடைய சீவியம் உலகத்துக்கு மிகுந்த நன்மையைத் தருவது.

சுவா : மைந்தனே ! என்றும் சும்மாவிருக்க முடியுமா ! ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்க்கையை நீக்குவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பே, அவர் 'காளி' என்று அழைக்கின்ற அவள் இந்த உடலி னுள்ளே பிரவேசித்தாள். அவள் என்னை சும்மா இருக்க விடாமலும் என்னுடைய சுகத்தைப் பற்றிக் கருத விடாமலும் என்னை அங்கும் இங்கும் கொண்டு திரிந்து வேலை செய்யும்படி செய்கிறாள்.

சிஷ் : தேவரீர் உருவகமாகப் பேசுகின்றீரா ?

சுவா : இல்லை, இல்லை. அவர் தேகத்தை விடுவ தற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு ஒருநாள் என்னைத் தமது பக்கலில் அமைத்துத் தமது முன்னிலை யிலே என்னை இருக்குமாறு செய்து என்னை உற்றுப் பார்த்தவண்ணம் சமாதியிலே ஆழ்ந்தார். அப்போது மின்சார சக்தியைப் போன்ற ஒரு நுண்ணிய சக்தி என்னுள்ளே புகுவதுபோல் நான் உணர்ந்தேன். சிறிது நேரத்தில் மெய்ம்மறந்து அசைவற்றிருந்தேன். எவ்வ ளவு நேரம் அந்த நிலையில் இருந்தேனென்று எனக்கு ஞாபகமில்லை. மீட்டும் நான் ஜாக்கிரதை நிலையில் வரும் போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்ணீர் விடுவதைக் கண் டேன். அவரை நான் வினவியபொழுது, அவர் என்னை அன்பினோடு நோக்கி, "இன்று நான் எனக்கு உரியன யாவையும் உனக்குக் கொடுத்துவிட்டேன். நான் ஓட் டாண்டியாய் விட்டேன். நீ திரும்பிப் போவதற்கு முன்னர் இந்த வல்லமையைக்கொண்டு உலகத்தின் நன் மைக்காகப் பல நன்முயற்சிகளைச் செய்வாய்" என்றார். அந்தச் சக்தியானது என்னை இடைவிடாது வழி நடத் திப் பல வேறு வகைப்பட்ட தொழில்களையும் செய் கின்றது. இந்த உடலம் சும்மா விருப்பதற்காக ஆக்கப் பட்டதல்ல.

இந்த வார்த்தைகளைக் கேட்டு சிஷ்யர் பேச்சற்று ஆச்சரிய மடைந்தார். பொது ஜனங்கள் இவ்வார்த்தை களை எவ்வாறு அறிந்துகொள்வார்கள் என நினைத்தார். அதன் பின்பு விஷயத்தை மாற்றி, "ஐய, கிழக்கு

வங்காளத்தைத் தேவரீர் எவ்வாறு விரும்புகிறீர்?" என்றார்.

சுவா: பொதுவாக நான் அதனை விரும்புகிறேன். வயல் நிலங்களிலே விளைவு நன்றாக இருந்தது. தேச சுவாத்தியமும் நல்லது; மலையோரங்களின் காட்சி மிக மாட்சிமையானது. பிரம்மபுத்திரா நதிக்கரை சொல்லுதற்கரிய அழகு வாய்ந்தது. கிழக்கு வங்காள தேசத்து மக்கள் இங்குள்ளாரினும் பார்க்கச் சிறிது உடல் வலி படைத்துக் கூடிய சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள். அதிகமாக மீன் இறைச்சி உண்பது இதற்குக் காரணமா யிருக்கலாம். செய்வது எதுவோ அதனை இடைவிடாது ஊக்கத்தோடு செய்கிறார்கள். உணவோடு அதிகமான எண்ணெய், கொழுப்பு முதலியவற்றைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அது அவ்வளவு நல்லதல்ல; நெய்ப் பதார்த்தங்கள் உடலை வீணாகக் கொழுக்கச் செய்யும்.

சிஷ்: சமய உணர்விலே அவர்கள் எவ்வாறு இருக்கின்றார்கள்?

சுவா: சமய விஷயங்களிலே அவர்கள் பழைய வழக்கங்களை அனுசரிப்பவர்கள் போலக் காணப்பட்டார்கள். சமய விஷயங்களிலே விரிந்த நோக்கமுற நினைத்துப் பலர் குறுகிய உன்மத்தரானார்கள். டாக்காவிலே மோகினி பாபுவினுடைய வீட்டிலே நான் இருக்கும்பொழுது ஒரு வாலிபன் ஒரு புகைப்படத்தைக் கொண்டு வந்து, "ஐய, இவர் ஓர் அவதார புருஷரா, தயைசெய்து இவர் யாரென எனக்குச் சொல்லி யருள வேண்டும்" என்றான். எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று நான் பதமையாக அவனுக்குச் சொன்னேன். மூன்று நான்கு முறை சொல்லியும் அவன் கேளாது என்னை மீட்டும் மீட்டும் வினவினான். ஈற்றிலே அவனை நான் நோக்கி, "என தன்புள்ள சிறுவனே, இனிமேல் நீ சிறிது சத்துள்ள ஆகாரம் புசித்தல் வேண்டும். அப்பொழுதுதான் உன்னுடைய மூளை விருத்தியாகும். ஆகாரக் குறைவினாலே உனது மூளை

வறண்டு போயிற்று" என்றேன். இம்மொழிகளைக் கேட்டு அந்த இளைஞன் அதிக வெறுப்புற்றிருத்தல் கூடும். நான் என்ன செய்யலாம்? இந்தச் சிறுவர்களுக்கு இப்படிப் பேசினாலன்றிக் காலகதியிலே அவர்கள் பைத்தியக்காரர்களாய் விடுதல் கூடும்.

சிஷ்: எங்களுடைய கிழக்கு வங்காளத்திலே சமீபத்திலே அநேக அவதாரங்கள் தோன்றியிருக்கின்றன.

சுவா: மனிதர் தத்தமது குருவை அவதாரம் என்று சொல்லிக் கொள்ளலாம்; எவ்வண்ணம் வேண்டுமாயினும் எண்ணிக் கொள்ளலாம். ஆனால் கடவுளுடைய அவதாரங்களோ எல்லா விடத்திலும் எல்லாக் காலங்களிலும் தோற்றுவதில்லை. டாக்காவில் மாத்திரமே மூன்று நான்கு அவதாரங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்

சிஷ்: அப்பக்கங்களிலுள்ள பெண்கள் எப்படிப் பட்டவர்கள்?

சுவா: பெண்கள் ஏறக்குறைய எல்லா விடங்களிலும் ஒரே படித்தாக இருக்கின்றார்கள். டாக்காவிலே வைஷ்ணவ சமயம் பலமாக இருக்கக் கண்டேன். ஹரா—வினுடைய மனைவி நல்ல புத்திசாலி. அவள் மிகவும் கருத்தாக உணவு சமைத்து அனுப்பி வைப்பாள்.

சிஷ்: தேவரீர் நாகமஹாஷருடைய வீட்டிற்குப் போனதாகக் கேள்விப்பட்டேன்.

சுவா: அவ்வளவு தூரம் போன நான் அத்தகைய பெரியார் பிறந்த இடத்தைப் பாராது வருவேனோ? அவருடைய மனைவி தம்முடைய சொந்தக் கையினாலே பலவகையாக, இனிய தின்பண்டங்களைச் செய்து எனக்குத் தந்தனர். அந்த வீடு சாந்த நிலையத்தைப் போல விளங்குகின்றது சமீபத்திலே உள்ள கிராமத் தடாகத்திலே நான் நீந்தினேன். நாகமஹாஷயருடைய மனைவி எனக்கு ஒரு வஸ்திரத்தைத் தானமாகக் கொடுத்தார். நான் அதைத் தலையிலே தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு டாக்காவை நோக்கித்

திரும்பினேன். அங்கு நாகமஹாஷயருடைய திருவுருவத்தை வழிபடுவதைக் கண்டேன். அவரை அடக்கஞ் செய்த விடத்தைச் செம்மையாக வைத்திருக்க வேண்டும். இப்பொழுது தானும் அது நல்ல நிலைமையிலில்லை.

சிஷ்: அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் நாகமஹாஷயருடைய உண்மை மதிப்பினை அறிய மாட்டார்கள்.

சுவா: அத்தகைய பெரியாரைச் சாதாரண மக்கள் எப்படி அறிந்து கொள்ளக்கூடும்? அவருடைய கூட்டுறவு கிடைக்கப்பெற்றவர்கள் உணமையில் பாக்கியவான்களே.

சிஷ்: காமக்ய க்ஷேத்திரத்திலே என்ன கண்டீர்கள்?

சுவா: ஷில்லாங் மலைத் தொடர்கள் மிகவும் அழகு வாய்ந்தவை. அஸ்ஸாம் தேசத்துப் பிரதான அரசியற்றலைவராகிய ஸர் ஹென்றி காட்டன் துரை அவர்களை அங்குச் சந்தித்தேன். அவர் என்னை நோக்கி, "சுவாமிஜி, ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளிலே யாத்திரை செய்த நீங்கள் தூரத்திலுள்ள இந்த மலையடிவாரத்திலே என்ன விசேஷத்தைப் பார்க்க வந்தீர்கள்?" என்றார். அவரைப் போன்ற நற்குணமமைந்த அன்பான மனிதர்களைக் காண்பது அரிது. நான் நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கேள்வியுற்றுத் தமது சொந்த வைத்தியரை என்னிடத்து அனுப்பிக் காலையிலும் மாலையிலும் எனது சுகத்தைப்பற்றி விசாரிப்பார். எனது தேக சுகம் கெட்டுப் போயிருந்தமையால் நானங்கு அதிகமாகப் பிரசங்கம் பண்ண முடியவில்லை. வழியிலே நிதாய் எனக்குச் சேவை புரிந்து என்னை நன்கு கவனித்தான்.

சிஷ்: அந்தப் பாகங்களிலுள்ள ஜனங்களுடைய சமயக் கொள்கைகள் எவ்வாறு இருக்கக் கண்டீர்கள்?

சுவா: அது தந்திர மார்க்கம் பரவிய நாடு. அங்கே "ஹங்கார்" எனப் பெயரிய தெய்வம் ஒன்றே

அவதாரமாகக் கருதி வழிபடப்படுகிற தென்றும், அந்த வழிபாடு பெருகப் பரவியிருக்கிற தென்றும் கேள்வி யுற்றேன். "ஹுங்கார்" தேவதை சங்கராசாரியாருடைய நாம வேறுபாடோ என்பதை நான் நிச்சயமாக அறிந்து கொள்ளவில்லை. இங்ஙனம் வழிபடுவோர் துறவிகள். ஒரு வேளை தாந்திரீக சந்நியாசிகளாக இருக்கலாம் ஒரு வேளை சங்கர மதத்தவரா யிருக்கலாம்.

சிஷ்: கிழக்கு வங்காளத்து மக்கள் நாகமஹா ஷயரைப் போலவே தங்களை ஏன் மதிக்கவில்லை?

சுவா: அவர்கள் என்னை மதித்தாலும் சரி; மதிக்காவிட்டாலும் சரி; அந்தப் பாகங்களிலுள்ள ஜனங்கள் சுறுசுறுப்பானவர்களாகவும் வல்லமைசாலி களாகவும் இருக்கிறார்கள். காலகதியிலே இன்னும் விருத்தியடைவார்கள், இந்நாட்களிலே நாகரீகமெனக் கொள்ளுகிற பழக்க வழக்கங்கள் அந்தப் பாகங்களிலே பூரணமாகச் செறியவில்லை. காலகதியிலே அப்படி யாகும். எல்லாக் காலங்களிலும் பழக்க வழக்கங்கள் பட்டணத்திலிருந்து நாட்டுப் புறத்துக்குப் பரவுகின் றன. இது கிழக்கு வங்காளத்தில் நிகழ்கிறது. நாக மஹாஷயரைப் போன்ற பெரியாருக்குப் பிறப்பிட மாகிய இந்நாடு எதிர்காலத்திலே சிறப்பினையடையும், அவருடைய பிரகாசத்தினாலே கிழக்கு வங்காளம் ஒளியு டையதாகும்.

சிஷ்: ஆனால், ஐய, சாதாரண மக்கள் அவரை ஒரு மஹாத்மாவென அறிந்து கொள்ளவில்லை. அவர் தம்மை மிகுதியும் மறைத்திருந்தார்.

சுவா: அந்தப் பாகங்களிலே என்னுடைய உண வைக் குறித்துச் சிலர் பெருக விசாரிப்பதும் உண்டு. "இன்னாருடைய கையினின்று ஏன் உணவு பெற்றுக் கொண்டேன் என்பது முதலாகப் பல கேள்விகளைக் கேட்டார்கள். நான் இரந்து உண்ணுகிற சந்நியாசி யாதலாலே உணவு முதலிய விஷயங்களில் வெளியனுஷ் டானங்களை அவ்வளவாகக் கைக்கொள்வது எதற்கு?" என்று மறுமொழி கூறினேன். நமது சமய சாஸ்திரங்

களிலே, சரேன்மதுகரீம் வ்ருத்திமபி ம்லேச்சகுலாதபி "வீடு வீடாகப்போய் அன்னத்தை இரக்க வேண்டும்; தீண்டப் படாத சாதியாரின் இல்லத்திலுங்கூட" என்று சொல்ல வில்லையா? சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் சமய உண்மைகளை வாழ்க்கையிலே ஒன்றுபடுத்திச்சமயத்தின் உட்கருத்தை உணர்ந்து கொள்ளும் பொருட்டு, ஆரம் பத்திலே வெளியனுஷ்டானங்கள் வேண்டப்படுவனவே. "பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் தண்ணீர் வருமா?" என ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுகிற கதையை நீ கேட்டதில் லையா? வெளியனுஷ்டானங்களும் கிரியைகளும் மனித னுடைய உள்ளத்திலே இருக்கின்ற பெரிய சக்தியை வெளிப்படுத்தும் பொருட்டாகவே ஏற்பட்டிருக்கின் றன. உள்ளே இருக்கின்ற ஆற்றல்களை எழுப்பி மனிதன் தன்னுடைய சொந்த நிலைமையை அறியும் படிச் செய்வதே சமய சாஸ்திரங்களின் நோக்கம். விதி விலக்குகள் இதற்குக் கருவியாக இருக்கின்றன. காரி யத்தை மறந்து கருவிகளைக் குறித்துச் சண்டையிடுவதா லெய்துகின்ற பயன் யாது? நான் சென்ற ஒவ்வொரு நாட்டிலும் வழி வகைகளைக் குறித்து நடைபெறுகிற சண்டையைக் கண்டேன். காரியத்தில் கண்ணில்லாத மக்கள் மிகப்பலர். இவ்வுண்மையை நிலை நிறுத்துவதற் காக ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதரித்தார்.

மெய்ப்பொருளை யடைவதே இன்றியமையாது வேண்டப்படுவது. நீ கங்கையிலே ஆயிரம் வருஷம் ஸ்நானம் செய்தாலும் அத்தனை ஆண்டுகளுக்குக் காய் கறிகளையே உண்டு கொண்டிருந்தாலும், உள்ளே இருக் கின்ற ஆத்மசக்தி வெளிப்பட்டு விளங்கினாலன்றி அவற் றால் எய்திய பயன் யாதுமில்லை என்பதை அறிந்து கொள்வாயாக. ஒருவன் ஒருவகையாகிய வெளிக் கிரியைகளுமின்றி ஆத்ம ஞானத்தை அடைவானாயின் வெளிக்கிரியை அற்று இருப்பதே கருவிகளுள் சிறந்த கருவி எனப்படும். ஆத்ம ஞான மடைந்த பின்பும், மற்றவர்களுக்கு ஒரு முன் மாதிரியாக, ஆத்ம ஞானி

யானவன் ஓரளவுக்குப் புறக் கிரியைகளை அனுஷ்டிக்க வேண்டியவனாகிறான். உண்மை எதுவெனில் மனத்தை யாதாயினும் ஒன்றின் மீது நிலைத்து நிற்கும்படிச் செய்ய வேண்டுவதே. யாதாயினும் ஒரு பொருளிலே அது நிலை பெற்று இருக்குமாயின் அதனால் ஏகாக்ர நிலை வந்தெய்தும். ஏனைய விருத்திகளெல்லாம் ஒடுங்கிப்போக மனமானது ஒரே வழியிலே இடையறாது ஓடும். அநேகர் வெளிக்கருமங்களிலே முற்றிலும் சிந்தையைச் செலுத்தியவர்களாய் ஆத்ம ஞானத்திலே கருத்துவைக்க மறந்து போகின்றனர். இரவும் பகலும் விதிவிலக்கு என்னும் ஒடுங்கிய வழியிலே நிற்பாராயின் ஆத்மனை வெளிப்படுத்துவது எவ்வாறு கைக்கூடும்? எவ்வளவுக்கு ஒருவன் ஆத்ம ஞானத்தை அடைந்திருக்கிறானோ அவ்வளவுக்கு வெளிக்கிரியைகளிலே பற்றில்லாதவனாகிறான். **நிஸ்த்ரைகுண்யே பதி விசரதாம் கோ விதி: கோ நிஷேத:** "குணங்களைக் கடந்து அப்பாலாகி நிற்கின்ற சிந்தையையுடையவனுக்கு விதி யேது? விலக்கேது?" எனச் சங்கராசாரியார் சொல்லுகிறார். ஆத்ம ஞானத்தை அடைவதே பிரதானம். அதுவே எய்துவதற்குரிய பேறு என்பதை அறிவாயாக. ஒவ்வொரு சமயமும் இந்த உண்மையை அடைவதற்கு வழியாயிருக்கின்றது. ஒருவன் அடைந்திருக்கின்ற தியாக சிந்தையினளவே அவனுடைய முன்னேற்றத்திற்கு அறிகுறி. காமகாஞ்சனத்திலுள்ள பற்றானது மிகுதியும் குறைந்திருக்கின்ற ஒருவனைக் கண்டால் அவன் எந்த சமயத்தவனாயினும் அவனுடைய அகத்திலுள்ள ஜீவன் விழித்து விட்டது என அறிந்துகொள்வாயாக. ஆத்ம ஞானத்தை அடைதற்குரிய கபாடம் அவனுக்குத் திறக்கப்பட்டு விட்டது. ஆயிரம் அனுஷ்டானங்களைச் செய்தாலும், ஆயிரம் சமய சாஸ்திரங்களைக் கற்றாலும் உண்மையாகிய தியாக புத்தி உன்னுடைய உள்ளத்திலே உதிக்காவிட்டால் உனது வாழ்க்கை வீணாகி விட்டதென அறிந்துகொள்வாயாக. ஆத்ம ஞானத்தை யடைகின்ற கருமத்திலே சிரத்தையோடும் முழுமனதோடும் முயல்

வாயாக. நீ எத்தனையோ சமய சாஸ்திரங்களைப் படித்திருக்கிறாய், அவற்றாலெய்திய பயன் என்னவென்று எனக்குச் சொல்லுவாயாக. சிலர் பணத்திலே சிந்தை செலுத்தி இலக்ஷாதிபதி ஆனார்கள். நீ சமய சாஸ்திரங்களில் சிந்தை செலுத்திப் பண்டிதனானாய். இரண்டும் பந்தத்திற்கே ஏதுவாயின. வித்தை அவித்தை இரண்டிற்கும் அப்பால், விவஹார ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்குமப்பால் மேலாக நிலை பெற்றிருக்கின்ற உண்மை ஞானத்தை யடைவாயாக.

சிஷ் : ஐயா, தேவரீருடைய அனுக்கிரஹத்தினாலே எனக்கு அனைத்தும் தெளிவாகிறது. ஆனால் இந்தப் போதனைகளை மனதிலடைத்துக்கொள்ளும்படி என்னுடைய பூர்வ கர்மம் என்னைவிடவில்லையே.

சுவா : கர்மம் முதலிய பசப்பு வார்த்தைகளை விட்டெறிவாயாக. உன்னுடைய பூர்வ கருமத்தினாலே இந்த உடலைப் பெற்றிருக்கிறாய் என்பது உண்மையாயின் தீய கருமப் பலனை நற்கருமங்களாலே அழித்து இந்த உடலிலே தானே ஜீவன் முக்தி நிலையை நீ ஏன் அடையக்கூடாது? தன்னை யறிதலால் எய்தும் விடுதலை உன்னுடைய கைகளிலே இருக்கிறதென்று அறிவாயாக. உண்மை ஞானத்திலே சமயப்பற்றில்லை. ஆனால் ஜீவன் முக்தரானோர், கருமஞ் செய்யும்பொழுது பிறருடைய நலத்துக்காகச் செய்கின்றார்கள். அவர்கள் தங்கள் கருமப்பயனை நாடுவதில்லை. இச்சையின் வித்து அவர்களுடைய உள்ளத்தில் இருப்பதில்லை. இல்வாழ்வானுடைய நிலையிலிருந்து இத்தன்மையாக உலகுக்கு உபகாரமாகிய நற்கருமங்கள் செய்தல் இயலாததென்றே சொல்லலாம். இல்வாழ்வாருள் இத்தகையோன் ஜனக ராஜனொருவனே, இந்துக்களுடைய சமய சாஸ்திரங்களனைத்தும் இந்த ஒரு உதாரணத்தையே எடுத்துக் காட்டுகின்றன; வேறொருவரையும் உதாரணமாகக் காட்டவில்லை; இந்நாட்களில் ஒவ்வொருவரும் தாம் தாம் ஜனகரென நினைத்து நீவிர் நடிக்கிறீர்கள்; வருஷம் ஒரு குழந்தை பெற்றுவிடுகிறீர்கள்! ஜனக மன்னனோ

வென்றால் தேகத்தைப் பற்றிய உணர்வு இல்லாதவரா யிருந்தார்.

சிஷ் : நான் இந்த ஜீவியத்திலேயே ஆத்ம ஞானத்தை யடையும்படி தேவரீரென்னை ஆசீர்வதித் தருளவேண்டும்.

சுவா : எதற்கு அஞ்சுகிறாய்? உண்மையான சிரத்தை யிருக்குமாயின் இந்த ஜீவியத்திலேயே நிச்சய மாக நீ ஆத்ம ஞானத்தை அடைவாய். ஆனால் ஆண்மை யோடு முயலுதல் வேண்டும். எப்படி முயலவேண்டு மென்று அறிவாயா? "நான் நிச்சயமாக ஆத்ம ஞானத்தை அடைவேன் : என்ன தடைவரினும் அதனை மேற்கொள்ளுவேன்."—இத்தகைய துணிவே புருஷா காரமெனப்படும். "என்னுடைய தாய் தந்தை நண்பர் சகோதரர் மனைவி குழந்தை ஆகியோர் இறந்தாலும் சரி இருந்தாலும் சரி, இந்த உடலம் நின்றாலும் சரி, கழிந்தா லும் சரி, ஆத்ம தரிசனம் பெற்றன்றி நான் திரும்ப மாட்டேன்"—இத்தகைய தீர்மானத்தோடு தன் னுடைய இலக்கினை நோக்கி முன்னேறிச் செல்லுதலும் பிற எண்ணங்களைப் பொருட்படுத்தாது விடுதலும் ஆண்மையோடு கூடிய முயற்சியாகும். சுகானுபவங் களுக்காக முயலுகின்ற முயற்சி விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் உளது. மனிதன் ஆத்ம ஞானத்தை அடைவதற்காகவே இந்த உடலத்தைப் பெற்றிருக் கிறான். உலகத்திலுள்ள சாதாரண மக்களைப்போல அவர்கள் செல்லும் வழியே நீயும் போவதாக இருந் தால் உன்னுடைய ஆண்மை யெங்கே? சாதாரண மக்கள் மரணத்தின் வாயினுள்ளே புகுவதற்கு முற் பட்டுச் செல்லுகின்றார்கள். நீ மரணத்தை வெல்லுவ தற்காக வந்திருக்கிறாய். வீரனைப்போல் முன்னேறிச் செல். எது சம்பவித்தாலும் நிலையிற்றிரியாதே. இந்த உடலம் எத்தனை நாளைக்கு இருக்கப் போகின்றது? இதனோடு கூடிய இன்பதுன்பங்கள் எத்தனை நாளைக்கு இருக்கப்போகின்றன. மானிட சரீரம் இருக்கும் பொழுதுதானே உள்ளிருக்கும் ஆத்மனை எழுப்பி

அச்சமில்லாத நிலையை அடைந்துவிட்டேன் என்று சொல்லு. கிழாகிய நானென்பது எதனுள் அமிழ்ந்து விட்டதோ அந்த ஆத்மனே நானென்று சொல்லு. இந்தக் கருத்திலே பூரணப்பட்டிரு; உடல் நிலைத் திருக்கும் வரையும் "அது நீ ஆனாய்" என்னும் அச்சமற்ற நற்செய்தியை யாவருக்கும் தெரிவிப்பாயாக; விழித்தெழுந்து கருதிய கருமம் கைகூடும் வரை ஓய்வின்றி உழை. இந்த நிலையை நீ அடைவாயானால் உண்மையிலே நீ பிடிவாதமுள்ள கிழக்கு வங்காளத்து ஆண் மகன் என்று அறிந்துகொள்வேன்.

(35)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ம் ஆண்டு.]

ஷிலாங் மலையடிவாரத்திலிருந்து திருமடத்துக்குத் திரும்பிவந்த பின்பு சுவாமிஜியினுடைய தேக சௌக்கிய நிலை நன்றாயில்லை. அவர் கால்கள் வீங்கிவிட்டன. இதனால் அவருடைய சகோதர சந்நியாசிகள் அவருடைய தேக நிலையைக் குறித்து மிகவும் ஆலோசனை உள்ளவர்களா யிருந்தார்கள். நிரஞ்சனாநந்த சுவாமியினுடைய கேள்விப்படி சுவாமிஜி நாட்டு வைத்திய மருந்து உட்கொள்ளுவதற்குச் சம்மதித்திருந்தார். வருகிற செவ்வாய்க்கிழமைத் துவக்கம் மருந்துண்ணப் போகிறார். அதன் பொருட்டுப் பத்தியமாக உப்பும் நீரும் உட்கொள்ளாது விடப்போகிறார். இன்று ஞாயிற்றுக்கிழமை. சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, "ஐய இப்பொழுது மிகவும் வெப்பமாக இருக்கின்றதே, இடை இடையே தண்ணீர் குடிக்கின்ற வழக்கம் தேவரீருக்கு உண்டு. இந்த வைத்தியத்தைக் கருதி நீர் பருகாது எங்ஙனம் சகித்திருக்கப் போகின்றீர்?" என்று வினவினார்.

சுவா: என்ன சொல்லுகிறாய்! மருந்துண்ண ஆரம்பிக்கிற தினத்திலே தண்ணீர் குடிப்பதில்லை என்று மனத்திலே திடமாகத் துணிவு கொள்ளுவேன். அதன் பின்பு மூன்று வாரத்துக்கு ஒரு துளித் தண்ணீர் தானும்

மிடற்று வழியாகச் செல்லமாட்டாது. உடலம் மனத்துக்கு வெளியே உள்ள சட்டை. மனம் என்ன தீர்மானத்தைச் சொல்லுகிறதோ அங்ஙனம் செய்து முடிக்க வேண்டியது உடல் செய்ய வேண்டிய பணி. ஆதலால் நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை. நிரஞ்சனனுடைய வேண்டலின்படி நான் மருந்துண்ணப் போகின்றேன். எனது சகோதர சந்நியாசிகளுடைய வேண்டுகோளை நான் அலக்ஷியம் செய்தல் கூடாது.

இப்பொழுது பத்து மணியாய்விட்டது. சுவாமிஜி சந்தோஷத்தோடு பெண்களுக்காக அமைக்கப்போகின்ற திருமடத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். கங்கையின் கிழக்குக் கரையிலே மடம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், பரிசுத்த மாதாவாகிய ஸ்ரீ சாரதா தேவியார் அந்தத் திருமடத்துக்கு அருள் நிலையமாக இருப்பார் என்றும், இந்தத் திருமடத்திலே பிரம்மச்சாரிகளும் சாதுக்களும் பயிற்றப்படுவது போலவே அந்தத் திருமடத்திலும் பிரம்மச்சாரிணிகளும் சாத்துவிகளும் பயிற்றப்படுவார்கள் என்றும் சுவாமிஜி சொன்னார்.

சிஷ் : ஐய, நமது பரதகண்டத்திலே பழைய காலத்திலே பெண்களுக்கு மடாலயங்கள் ஏற்பட்டிருந்ததாகச் சரித்திரத்தில் சொல்லப்படவில்லையே! பௌத்த காலத்தில் பெண்களுக்கென மடங்கள் ஏற்பட்டிருந்ததாக அறிகிறோம்; ஆனால் காலகதியிலே அவைற்றிலிருந்து அநேக தீமைகள் விளைந்தன. தேசம் முற்றிலும் துர்ப்பழக்கங்கள் பல பரவின.

சுவா : வேதாந்த மார்க்கமானது, ஒரே ஆத்மன் எல்லா ஜீவர்களிடத்தும் வியாபித்திருக்கிறான் என்று முறையிடுகிறது. அப்படி இருந்தும் இந்த நாட்டிலே ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையில் மிகுந்த வேறுபாடு பாராட்டுவது எதனாலோ வென்று என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் பெண்கள்பால் எப்பொழுதும் குற்றம் சுமத்துகிறீர்கள். ஆனால் அவர்களுடைய உயர்ச்சிக்காக என்ன செய்திருக்கிறீர்கள்?

கடினமான விதிகளினால் அவர்களைக் கட்டுப்படுத்து வதற்கு ஸ்மிருதி முதலியவற்றை எழுதி ஆடவர் பெண் களை இயந்திரங்கள் ஆக்கிவிட்டார்கள். உலக மாதாவின் தோற்றமாக விளங்குகின்ற பெண்களை உயர்வடையச் செய்தாலன்றி நீங்கள் உயர்வதற்கு வேறு வழி இருக்கிற தென்று எண்ண வேண்டாம்.

சிஷ்: பெண்கள் பந்தத்துக்கு ஏதுவா யிருக்கிறார் கள். மனிதரைச் சிக்கச் செய்யும் வலையாயிருக்கிறார்கள். தங்களுடைய மாயையினால் ஆடவர்களுடைய ஞான வைராக்கியத்தை மறைத்துவிடுகிறார்கள். இதனாலன்றோ ஞானத்தையும் பக்தியையும் அடைவது அவர்களுக்கு மிக அரியது என்று சாஸ்திரத்தை எழுதிய பெரியோர் கள் சொல்லி இருக்கிறாகள்.

சுவா: பெண்கள் ஞானத்தையும் பக்தியையும் அடைவதற்குத் தகுதியற்றவர்கள் என்று எந்த சாஸ்தி ரத்திலே கண்டாய்? புரோகிதர்கள் வேதங்களை அத்தி யயனம் பண்ணுவதற்கு ஏனைய ஜாதி மக்கள் தகுதி யற்றவர்களென்று ஒதுக்கித் தள்ளிய இந்த இழிவான காலத்தில் பெண்களுடைய உரிமைகளையும் நீக்கிவிட் டார்கள். ஆனால் வேதோபநிடத காலங்களிலே மைத் திரேயி, கார்க்கி முதலிய மகத்துவமிக்க பெண்மணி கள், பிரம்மத்தைப் பற்றி வாதிக்கின்ற சாமர்த்தியத் திலே மஹரிஷிகளுக்கு ஒப்பானவர்களாய் இருந்தார்கள். வேதத்திலே வல்லவர்களாகிய ஆயிரம் பிராம்மணர்கள் கூடியிருந்த மஹா சபையிலே கார்க்கி பிரம்ம வாதஞ் செய்யும்படி யாக்ஞவல்கியரைத் துணிவோடு அறைகூவி அழைத்தாள். அத்தகைய பெருந்தகைமை வாய்ந்த பெண்மணிகள் ஆத்ம ஞானத்துக்கு உரிமைபூண்டு விளங்கினார்கள். ஆதலினால் இக்காலத்தும் அந்த உரிமை ஏன் பெண்களுக்கு இருக்கக்கூடாது? ஒருமுறை நிகழ்ந்தது நிச்சயமாகவே மறுபடியும் நிகழும். சரித்திர நிகழ்ச்சி மீட்டும் நடக்கும் தகைமையது. பெண்களுக் குத் தக்க மரியாதை கொடுக்கின்ற காரணத்தினால்

எல்லா தேசத்து மக்களும் உயர்நிலை அடைந்தார்கள். பெண்களுக்கு மதிப்புக் கொடாத தேசமும் மக்களும் ஒருபொழுதும் உயர்வை அடைந்ததில்லை. இனிமேல் அடையப் போவதுமில்லை. சக்தியின் உயிருள்ள வடிவங்களாகிய பெண்களுக்கு மதிப்புக் கொடுக்காத பிரதான காரணத்தினலே உங்களது ஜாதியார் மிகவும் இழிவடைந்தார்கள். "எவ்விடத்தில் பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ அவ்விடத்தில் தேவர்கள் உவகையடைகிறார்கள்; எவ்விடத்தில் மதிக்கப்படவில்லையோ அவ்விடத்தில் எல்லாக் கருமங்களும் முயற்சிகளும் வீண் போகின்றன" என்று மநு சொல்லுகிறார். எந்தக் குடும்பத்தில் அல்லது நாட்டில் பெணகளுக்கு மதிப்பில்லையோ, எங்கே அவர்கள் மனத்துயரத்தோடு வாழ்கின்றார்களோ அங்கு உயர்வெய்துவதற்கு வழியில்லையாகும். ஆதலினலே முன்னம் அவர்களை உயர்த்த வேண்டும். அவர்களுக்கென உயர்ந்த சாதனங்களோடு கூடிய திருமடத்தை ஏற்படுத்த வேண்டும்.

சிஷ்: ஐய, தேவரீர் மேலை நாட்டிலிருந்து திரும்பி வந்த நாட்களில் தாரகை மண்டபத்தில் செய்த பிரசங்கத்திலே தந்திரசாஸ்திரங்களை மிகவும் குற்றமாகப் பேசினீர்கள். இப்பொழுது தந்திரங்களில் சொல்லியிருக்கிற முறைப்படி பெண்களுக்கு வழிபாடு செய்வதை ஆதரித்துப் பேசுகிறீர்கள்; அதனல் முன்ளுெடு பின் முரணுகிறீர்கள்.

சுவா: தந்திரங்களிலுள்ள இழிந்த வாமாசார முறைகளை இழித்துப் பேசினேன். ஆனல் தந்திரங்கள் கூறுகிற உலக மாதாவினுடைய வழிபாட்டு முறைகளையாவது உண்மையான வாமாசார முறைகளையாவது நான் குற்றமாகக் கூறவில்லை. தெய்வீக முறையாகப் பெண்களுக்கு வழிபாடு இயற்ற வேண்டுமென்பதே தந்திரங்களின் கருத்து. புத்த சமயம் பாழடைந்த காலத்து வாமாசாரம் மிகவும் இழிந்து போயிற்று. அத்தகைய இழிவே இன்றும் நிலைபெற்றிருக்கிறது. இப்பொழுதும் இந்தியாவி

லுள்ள தந்திர சாஸ்திரங்கள் அத்தகைய எண்ணங்களை உடையனவாக இருக்கின்றன. இழிவான அஞ்சத்தக்க சாதனைகளை நான் வெறுத்துக் கூறினேன். இப்பொழுதும் அப்படியே உலகமாதாவின் உயிர்தாங்கிய வடிவங்களான பெண்களை வழிபடுவதை நான் ஒருபொழுதும் தடுத்துக் கூறவில்லை. அவர்களுடைய புறத்தோற்றமானது ஆடவர்களுடைய புலன்களைக் கவர்ந்து அவர்களை வெறிபிடித்தவர்களாக்கி விடுகின்றது. அகத்தோற்றங்களாகிய ஞானம், பக்தி, விவேகம், வைராக்கியம் என்னுமிவை மானிடனை முற்றறிவுடையவனுக்கித் தப்பின்றி வேண்டிய இஷ்ட சித்திகளையும் தந்து, பிரம்மத்தையும் அறியப் பண்ணுகின்றன. **ஸைஷா ப்ரஸன்னா வரதா ந்ருணாம் பவதி முக்தயே** "அவள் உவந்தும் செய்யும் அனுக்கிரகமே மானிடன் மோக்ஷத்தை யடைவதற்குக் காரணமாகின்றது." வழிபாட்டினுலும் பணிவினுலும் உலக மாதாவினுடைய அநுக்கிரகத்தைப் பெற்ருலன்றி அவளுடைய கட்டைக் கடந்து மோக்ஷத்தை யடைவது பிரம்மவிஷ்ணுகளுக்கும் இயலாததொன்ருகும். இந்தத் தேவதைகள் தம்முள்ளே இருக்கின்ற பிரம்மத்தை வெளிப்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு வழிபாடியற்றுவதற்காகப் பெண்களுக்கென ஒரு மடாலயத்தை நான் அமைப்பேன்.

இது நல்லெண்ணந்தான். ஆனுல் அந்த மடத்தில் இருக்கத்தக்க பெண்கள் எங்கிருந்து வரப்போகின்ருர்கள்? குடும்ப வாழ்க்கையிலே இப்பொழுது கட்டுப்பாடுகள் இருக்கின்றன; யார் தமது வீட்டுப் பெண்களை மடத்திலே சேரும்படி அனுப்பப் போகின்றனர்?

சுவா: ஏன் அப்படி? இப்பொழுது தானும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யைகள் பலர் இருக்கின்றனர். அவர்களோடு திருமடத்தை ஆரம்பிக்கலாம். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்களது புத்திரிகளும் மனைவிகளும் முதலிலே சேருவார்கள். பரிசுத்த அன்னையார் அதற்கு நடுநாயகமாக எழுந்தருளி இருப்பர். அத்தகைய திரு

மடத்தின் பயனைப் பக்தர்கள் எளிதாக அறிந்து கொள்ளுவார்கள். அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி எத்தனையோ இல்லறத்தார் இந்த நன்முயற்சிக்கு உதவி புரிவார்.

சிஷ்: ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்கள் நிச்சயமாகவே உதவி புரிவார்கள். ஆனால் பொது ஜனங்கள் இந்த முயற்சிக்கு உதவுவார்களென்று நான் எண்ணவில்லை.

சுவா: இவ்வுலகத்திலே தன்னல மறுப்பின்றி ஒரு பெரிய காரியமும் செய்து நிறைவேற்றப் படுவதில்லை. ஆலம் விதையினுடைய மெல்லிய முளையைக் கண்டோர் அது காலகதியிலே பெரிய மரமாக வளர்ந்து விடுமென்பதை அறிவார்களா? இப்பொழுது இவ்வழியாக மடத்தை ஆரம்பிப்பேன். பின்பு இரண்டொரு சந்ததி கழிந்த பிறகு இந்த நாட்டு மக்கள் மடத்தினுடைய பயனை உள்ளவாறு உணர்வார்கள். எனது சிஷ்யைகள் அதற்காகத் தங்களது உயிரையும் கொடுப்பார்கள். அச்சத்தையும் கோழைத்தனத்தையும் விட்டெறிந்துவிட்டு இந்த உயர்ந்த கொள்கையை எல்லார் முன்னிலையிலும் வைத்து நீவிரனைவரும் இந்த நன்முயற்சிக்கு உதவி புரிவீர்களாக. காலகதியிலே நாடு முற்றிலும் அது ஞான ஒளியைத் தந்து விளங்குவதை நீங்கள் காண்பீர்கள்.

சிஷ்: ஐய, பெண்களுக்கு ஏற்படுத்தப் போகிற இந்தத் திருமடத்தின் அமைப்பைப் பற்றிய எல்லா விஷயங்களையும் தேவரீர் எனக்குச் சொல்லி அருளுவீராக.

சுவா: கங்கையின் மற்றக் கரையிலே ஒரு பெரிய காணி வாங்க வேண்டும். அங்கு கட்டப்படுகிற திருமடத்திலே விவாகமாகாத சிறுமிகளும் பிரம்மச்சாரிணிகளாகிய விதவைகளும் வசிக்கலாம். இவ்வாழ்க்கையிலுள்ள பெண்களிலும் பக்தி நிறைந்தவர்கள் ஒரோர் காலத்தில் இங்கு வந்து வசிக்க அநுமதி அளிக்கப்படலாம். ஆடவர்களுக்கும் இந்த மடத்துக்கும் ஒரு

தொடர்பும் இருக்கமாட்டாது. ஆடவர் திருமடத்தி லுள்ள சாதுக்களில் முதியோர் தூரத்திலிருந்து இந்த மடத்துக் கருமங்களை நடத்துவார்கள். பெண்களுக் குரிய இந்த மடத்திேனாடு ஒரு பெண் பாடசாலை அமைக் கப்பட்டிருக்கும். அங்கே சமய சாஸ்திரங்களும், இலக் கண இலக்கியங்களும், சமஸ்கிருதமும் ஓரளவுக்கு ஆங்கில மொழியும் படிப்பிக்கப்படும். தையல், சமை யல், வீட்டுப் பணிக்கு வேண்டிய விதிமுறைகள், குழந் தைகளைப் பரிபாலிக்கும் முறை, இவை முதலிய பிற படிப்புகளும் படிப்பிக்கப்படும். ஜபம், தெய்வ வழிபாடு, தியானம் என்றிவை எல்லாம் இங்குப் பயிற்றப்படுகிற கல்வியில் இன்றியமையாத பாகங்களாயிருப்பன. இல் வாழ்க்கையையும் குடும்பத் தொடர்பையும் துறந்து விட்டு இங்கே நிலையாகவிருப்பவர்களுக்கு இந்த மடத்தி லிருந்து உணவும் உடையும் கொடுக்கப்படும். அங்ஙனம் செய்ய முடியாதவர்கள் தினந்தோறும் வந்துபோகிற மாணவிகளாக இங்கே கல்வி கற்க அநுமதி பெறுவார் கள். அவர்கள் தானும் ஓரோர் காலங்களிலே மடத்துக் குத் தலைமையா யிருப்போரது உத்தரவோடு மடத்திலே வசிக்கலாம். அங்ஙனம் வசிக்கும்போது அவர்களையும் மடத்திலிருந்தே பராமரிக்கலாம். வயது முதிர்ந்த பிரம்மச் சாரிணிகள் மாணவிகளைப் பிரம்மசரியத்திலே பயிற்று கின்ற கடமையை ஏற்றுக்கொள்ளுவார்கள். இந்த மடத் திலே ஐந்தாறு வருஷம் பயிற்சி அடைந்த பின்பு சிறுமி களுடைய பாதுகாப்பாளர் அவர்களுக்கு மணமுடித்து வைக்கலாம். யோகத்துக்கும் சமய சாதனைக்கும் அவர் கள் தகுதியுள்ளவர்களாகக் காணப்பட்டால், அவர் களது பாதுகாப்பாளருடைய உத்தரவோடு அவர்க ளுக்கு உரிய முறையிலே தீக்ஷை செய்து மடத்தில் வசிக் கும்படி செய்யலாம். இத்தகைய பிரம்மச்சாரிணிகள் காலத்திலே இத்திருமடத்தின் போதகாசிரியைகளாகவும் பிரசங்கிகளாகவும் வருவார்கள். கிராமங்களிலும் நகரங் களிலும் நிலையங்களை ஸ்தாபித்துப் பெண் கல்வியைப் பரப்புதற்கு முயலுவார்கள். அத்தகைய நல்லொழுக்கம்

வாய்ந்த பிரசாரகர்களாலே உண்மைப் பெண் கல்வி தேசமெங்கும் பரவும். மாணவிகள் இந்தத் திருமடத்தோடு சேர்ந்திருக்கும் காலத்தில் திருமடத்து ஆதாரக் கொள்கையாகிய பிரம்மசரியத்தைத் தவருது அநுஷ்டிக்க வேண்டும். தெய்வீக வாழ்க்கையும் தியாகமும் ஐம்புலன் அடக்கமும் இந்தத் திருமடத்திலுள்ள மாணவிகள் கைக்கொண்டு ஒழுகவேண்டிய கொள்கைகளாகும். சேவை அவர்களுடைய சீவியத்தின் விரதமாகும். அத்தகைய உயர்ந்த கொள்கையோடு அவர்கள் வாழும்பொழுது யாவர்தான் அவர்களிடத்து மதிப்பும் நம்பிக்கையும் இல்லாதிருக்கப் போகின்ருர்கள்? இந்த நாட்டுப் பெண்களுடைய சீவியம் அந்த மாதிரியாக உருவப்படுத்தப்பட்டால்தான் சீதா, சாவித்திரி, கார்க்கி போன்ற பெருந்தகைமையுடையோர் மீண்டும் இங்கு அவதரிப்பார்கள். தேசாசாரங்களும் அவற்ருல் ஏற்பட்ட கட்டுப்பாடுகளும் இந்த நாட்டுப் பெண்மக்களை எவ்வளவு உயிரற்ற வலியிழந்த பிராணிகள் ஆக்கிவிட்டன என்பதை மேலே நாடுகளில் யாத்திரை புரிந்தாயாஞல் நீ உணர்ந்து கொள்வாய். பெண்களினுடைய பரிதவிக்கத்தக்க நிலைக்கு நீங்களே பாத்திரவாதிகள். அவர்களை மீண்டும் உயர்த்துகின்ற கடமை உங்களைப் பொறுத்திருக்கிறது. ஆதலிஞல் முயன்று வேலை செய்யுங்கள் என்று நான் சொல்லுகிறேன். வேதத்தைப் போன்ற சில சமய சாஸ்திர நூல்களை மனப்பாடம் பண்ணுவதஞல் இயலுகின்ற பயனென்ன?

சிஷ்: ஐய, இந்தத் திருமடத்திலே பயிற்றப்பட்ட சிறுமிகள் பின்பு விவாகம் செய்துகொள்ளலாம் என்ருல், அவர்களுக்குள்ளே உயர்ந்த கொள்கையோடு வாழ்பவர்களைக் கண்டுபிடித்தல் எப்படியாகும்? இந்தத் திருமடத்திலே கல்வி பயிலப்பட்டவர்கள் விவாகம் செய்யாமலே இருந்துவிட வேண்டுமென்று ஒரு விதியை ஏற்படுத்திஞல் அது நன்ருகாதா?

சுவா: எடுத்த உடனே அப்படிச் செய்யலாமா? அவர்களுக்குக் கல்வி அறிவுறுத்திப் பின்பு அவர்கள்

இச்சைப்படி விட்டுவிடவேண்டும். அவர்கள் எந்த வழி நல்லதென்று காணுகிறார்களோ அந்த வழியிலே நிற்கட்டும். விவாகம் செய்து உலக வாழ்க்கையிலே புகுந்த பின்பு தங்களுடைய நாயகர்களுக்கு உயர்ந்த கொள்கைகளை உண்டாக்குவார்கள். வீரப் புதல்வருக்குத் தாய்மார்கள் ஆவார்கள். சிறுமியருக்குப் பதினைந்து வயது நிரம்புவதற்குமுன் அவர்களை மணமுடித்துக் கொடுப்பதைப்பற்றி நினைத்தல் தானும் கூடாதென மாணவிகளுடைய பாதுகாப்பாளர்களுக்கு ஒரு விதி ஏற்படுத்த வேண்டும்.

சிஷ் : ஐய, அப்படியாயின் இந்தச் சிறுமியர்களுக்கு ஜனசமூகத்திலே மதிப்பிருக்கமாட்டாது. அவர்களை மண முடிக்க யாவரும் விரும்பமாட்டார்கள்.

சுவா : ஏன் அவர்களை விவாக முடிக்காதிருக்கப் போகின்றார்கள் ? ஜனசமூகத்தினுடைய போக்கை நீ இன்னும் முற்றாக உணர்ந்துகொள்ளவில்லை. கல்வியில் வல்ல ஆற்றல் வாய்ந்த பெண்களுக்கு மணமகன் இல்லை என்னும் குறைவு ஒருபொழுதும் ஏற்படமாட்டாது. குழந்தை விவாகத்தைப்பற்றிச் சொல்லுகிற வாக்கியங்களை ஜனசமூகம் இப்பொழுதும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. இனிமேல் ஏற்றுக்கொள்ளப்போவதும் இல்லை. இப்பொழுதுதானும் உனக்குத் தெரியவில்லையா ?

சிஷ் : ஆனால் ஐய, ஆரம்பத்திலே இதற்கு மிகுந்த எதிர்ப்பாடு நிச்சயமாகவே உண்டாகும்.

சுவா : ஆகட்டும். அதில் அஞ்சவேண்டுவது என்ன இருக்கின்றது? உண்மை ஆற்றலோடு ஆரம்பிக்கப்பட்ட நன்முயற்சிக்குத் தடை ஏற்படுமாயின் அது ஆரம்பித்தவர்களுடைய மனவலியை இன்னும் அதிகப்படுத்தும். தடையில்லாது ஏற்படுகிற பாதை, மக்களை உயிரற்ற வழிகளிலே செலுத்திவிடும். முயன்று கருமம் புரிவதே உயிர் வாழ்க்கைக்கு அறிகுறி.

சிஷ் : ஆம் ஐய.

சுவா: பரப்பிரம்மத்தின் மேலாகிய உண்மையிலே ஆண் பெண் என்ற பால் வேறுபாடு இல்லை. விவகார நிலையிலேதான் இந்த வேறுபாடுகளைக் காணுகின்றோம். மனம் எவ்வளவுக்கு உண்ணோக்குகிறதோ அவ்வளவுக்கு வேறுபாட்டு எண்ணமானது மறைந்துவிடும். ஈற்றிலே எவ்விடத்தும் ஒரேபடித்தாய் வேறுபாடற்று விளங்குகின்ற பிரம்மத்திலே மனமானது முற்றிலும் அமிழ்ந்திவிட்டால், இவன் ஆடவன் இவள் பெண் என்னும் வேறு பாட்டெண்ணங்களே இருக்கமாட்டா. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சீவியத்திலே நாங்கள் இதை நேரிலே கண்டோம். ஆகையால் ஆண் பெண்களுக்கிடையே வெளித் தோற்றத்தில் வேறுபாடிருந்தாலும் உண்மையிலே ஒரு வகை வேறுபாடும் இல்லை. ஆதலினால் ஓர் ஆண்மகன் பிரம்மஞானியாயிருந்தால் ஒரு பெண்ணும் ஏன் அத்தகைய ஞானத்தை அடையக் கூடாது? ஆதலினாலே பெண்களுக்குள்ளே ஒருவராவது பிரம்மஞானத்தை அடைவார்களானால் அங்ஙனம் அடைந்தவர்களுடைய விளக்கத்தினாலே ஆயிரம் பெண்கள் உண்மையை நாடுவதில் ஊக்கமுடையவர்களாவார்கள். அதனால் நாட்டுக்கும் ஜனசமூகத்துக்கும் பெரிய நன்மை உண்டாகும். அது உனக்குப் புலப்படுகிறதா?

சிஷ்: ஐய, தேவரீருடைய போதனை இன்று என் கண்களைத் திறந்து விட்டது.

சுவா: இன்னும் முற்றாகத் திறக்கப்படவில்லை. ஆத்மனைப்பற்றிய அனைத்தினையும் பிரகாசிக்கச் செய்யும் உண்மையை நீ உணர்வாயாயின், ஆண் பெண் என்னும் வேறுபாட்டு எண்ணம் உள்ளத்தில் நின்று அகன்று போக, பெண்மக்கள் அனைத்தினையும் பிரம்மத் தோற்றமாக நீ காண்பாய். எந்த ஜாதியிற் பிறந்தாராயினும் சரி, எந்த மதிப்பினை உடையவராயினும் சரி, பெண்களாயினோர் அனைவரையும் உலக மாதாவின் அம்சமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொண்டதை நாங்கள் கண்டிருக்கின்றோம். இதனை நான் கண்டபடியினாற்றான் அவ்வண்

ணம் நீங்களும் செய்ய வேண்டுமென்றும் கிராமந் தோறும் பெண்பாடசாலைகளை ஆரம்பித்து அவர்களை உயர்த்த முயலவேண்டுமென்றும் நான் உங்களைக் கேட்கின்றேன். பெண்கள் உயர்த்தப்பட்டால் அவர்களுடைய மக்கள் உயர்ந்த செயல்களைச் செய்து தேசத்தினுடைய பெயரை மகிமைப்படுத்துவார்கள். அப்பொழுதுதான் நல்லொழுக்கமும், ஞானமும், ஆற்றலும், பக்தியும் நாட்டிலே உண்டாவன.

சிஷ் : ஆனால் ஐயா, இக்காலத்துப் பெண் கல்வியினாலே இதற்கு நேர் விரோதமான பெறு பேறுகள் உண்டாகக் காண்கின்றோமே? அற்பக் கல்வியைக் கற்றுவிட்டு மேலைத் தேசத்து வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகிறார்கள். தியாக புத்தி, ஐம்புலன் அடக்கம், தவம், பிரம்மசரிய முதலாக பிரம்ம ஞானத்துக்கு ஏதுவாகிய நற்குணங்களில் அவர்கள் எவ்வளவுக்கு முன்னேறுகிறார்கள் என்பது தெளிவாகவில்லை.

சுவா : ஆரம்பத்திலே சில பிழைகள் நிகழுவதை மாற்ற முடியாது. தேசத்திலே ஒரு புது எண்ணத்தைப் போதிக்கும் பொழுது பலர் அதன் உண்மையைக் கிரகித்துக் கொள்ள முடியாமல் பிழைபட நடப்பதுண்டு. ஜன சமூகத்தினுடைய நன்மையைக் கடைப்பிடிப்பதே செய்ய வேண்டிய கருமமாகும். இப்பொழுது தேசத்திலே உள்ள சிற்றளவாகிய பெண் கல்வியை வளர்ப்பதற்கு முன் வந்தவர்கள் சந்தேகமில்லாமல் அகன்ற சிந்தை உடையவர்களென்றே சொல்லவேண்டும். சமயானுஷ்டானத்தை ஆதாரமாகக் கொள்கிற கல்வி முறையிலே குறைகள் நேரிடுமென்பது உண்மையே. சமயத்தையே நடுவாகிய இலக்காகக் கொண்டு பெண் கல்வியைப் பரப்ப வேண்டும். மற்றப் பயிற்சிகளெல்லாம் சமயப் பயிற்சிக்குச் சார்பாகவே அமையவேண்டும். சமயப் பயிற்சி, நல்லொழுக்கப் பயிற்சி, பிரம்மசரிய விரதங் காத்தல் என்னும் இவற்றைச் செவ்வனே கவனிக்க வேண்டும். இதுவரையும் இந்தியாவிலே

நடந்து வருகிற பெண் கல்வி முறைகள் சமய நெறியைத் தலையாகக் கொண்டனவல்ல. ஆதலினாலே நீ சொன்ன குறைகள் ஏற்பட்டு விட்டன. ஆனால் பெண்கள்மேல் குற்றமில்லை. பெண் கல்வியை ஆரம்பித்த சீர்த்திருத்தக் காரர்கள் பிரம்மச்சரிய மில்லாதவர்கள். ஆதலினால் தவறான முறைகளைக் கையாண்டு விட்டார்கள். எந்த நற் கருமத்தையும் செய்பவர்கள், தாங்கள் விரும்பிய கருமத்தைத் தொடங்குவதற்கு முன் அடக்கத்தோடு கூடிய சாதனைகளினாலே ஆதம ஞானத்தை அடைய வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் செய்யும் தொழி லிலே பிழைகள் ஏற்பட்டுவிடும்.

சிஷ்: ஆம் ஐய, எத்தனையோ கல்வி கற்ற பெண் கள் நவீன கதைப் புத்தகங்களை வாசிக்கின்ற தொழி லிலே தங்கள் நேரத்தைச் செலவிடுகின்றார்கள். கிழக்கு வங்காளத்திலோ வென்றால் கல்வி கற்ற பெண்களும் தங்களது சமய அனுஷ்டானத்தைக் கைவிடுவதில்லை. இந்தப் பக்கங்களில் அப்படி உண்டா?

சுவா. ஒவ்வொரு நாட்டிலும் மக்களிடையே நன் மையான பக்கமும் உண்டு, தீமையான பக்கமும் உண்டு. நாம் நம்முடைய சீவியத்திலே நன்முயற்சிகளைச் செய்து பிறருக்கு முன் நன் மாதிரியா யிருக்கவேண்டும். குறை கூறுவதினால் ஒரு முயற்சியும் அநுகூலப்படுவதில்லை. அது மனிதர் மனத்தில் வெறுப்பை உண்டாக்கும். எவ னும் விரும்பினதைச் சொல்லட்டும். நீ அவனுக்கு மறுத் துரை கூறிக்கொண்டு நில்லாதே. மாயா ரூபமாகிய இந்த உலகத்திலே நீ எந்த முயற்சியை எடுத்தாலும் அதில் சில குறைகளிருப்பது இயல்பு, **ஸர்வாரம்பாஹி தோஷேண தூமேனாக்னி ரிவாவ்ருதா:** "நெருப்பிலே புகை மூடி இருப்பதுபோல எல்லா முயற்சிகளையும் குறைகள் மூடி இருக்கின்றன." எந்த நெருப்பிலும் சிறிது புகை சேர்ந் திருக்கும். ஆனால் அதற்காக நீ சும்மா இருப்பதா? உன்னால் இயன்றவரை நன் முயற்சிகளைச் செய்.

சிஷ்: நன் முயற்சி என்றால் என்ன?

சுவா: எது பிரம்மத்தினுடைய விளக்கத்துக்கு உதவுகின்றதோ அது நன் முயற்சி. நேராக வில்லா விட்டால் ஒரு சாராகவாவது, ஆத்ம விளக்கத்துக்கு உதவும்படி எந்த முயற்சியையும் செய்யலாம். ஆனால் ரிஷிகளினால் ஏற்படுத்தப்பட்ட வழியைப் பின்பற்றி நடந்தால் ஆத்ம விளக்கம் விரைவிலே வந்து எய்தும். ஆனால் சாஸ்திரங்களை எழுதினோர் பிழையெனக் காட்டிய கருமங்களைச் செய்வதினால் பந்தமேற்படும். அத்தகைய மயக்கத்துக்கு ஏதுவாகிய பந்தம் பல சீவியங்களிலும் அகலுவதில்லை. எக்காலத்திலும் எத்தேசத்திலும் ஈற்றிலே ஜீவர்கள் விடுதலை அடைவார்கள் என்பது திண்ணம். ஏனெனில் ஆத்ம விளக்கமே ஜீவனுடைய உண்மையாகிய தன்மை. தன்னுடைய சொந்தத் தன்மையை விடுவது யாருக்காவது இயலுவதொன்று? நீ ஆயிர வருட காலத்துக்கு உன்னுடைய நிழலோடு சண்டை இட்டாலும் அது உன்னை விட்டு ஓடிப்போகாது. உன்னுடன் கூடவே இருக்கும்.

சிஷ்: ஆனால் ஐய, சங்கரர் கூறுகிறபடி கருமமானது ஞானத்துக்கு எதிரிடையாயிற்றே? கருமத்தையும் ஞானத்தையும் ஒன்று கூட்டுவதை அவர் பலவாறுகக் கண்டிக்கின்றாரே. அப்படியானால் கருமம் ஞானத்துக்கு எப்படி உதவியாகும்?

சுவா: சங்கரர் அப்படிச் சொல்லிய பின்னர் கருமமானது சித்த சுத்திக்குக் கருவியாகுமென்றும், ஆதலினால் ஞானத்துக்கு ஒரு சாராக உதவுகிறதென்றும் கூறி இருக்கிறார். ஆனால் பாரமார்த்திக ஞானத்திலே ஒருவனைக் கருமத் தொடர்பும் இருத்தல் கூடாது என்னும் முடிபை நான் கண்டிக்கவில்லை. மனிதன் வியவகார நிலையிலே இருந்து கருமம், கருத்தா, கரும பலன் என்னும் இவற்றை அறிந்திருக்கும் பொழுது ஏதாவது ஒரு தொழிலைச் செய்யாது சும்மாவிருக்க அவனால் முடியாது. கருமமானது மனிதனுடைய இயற்கையோடு ஒன்றுபட்டிருக்கும்பொழுது ஆத்ம

ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு உதவியாகிய கருமங்களை நீ ஏன் செய்யக்கூடாது? பாரமார்த்திக நிலையிலே எல்லாக் கருமங்களும் அஞ்ஞானத்தின் காரியம் என்று கூறுவது உண்மையே யாயினும், வியவகார நிலையிலே கருமம் மிகவும் பயனைத் தருவது. நீ ஆத்ம ஞானத்தை அடைந்து விட்டால், நீ கருமம் செய்வதும் செய்யா திருப்பதும் உன்னுடைய இஷ்டப்படி நடப்பனவாம். அந்த நிலையிலே உலகத்து ஜீவர்களுக்கு நன்மையைத் தரத்தக்க நற்கருமங்களையே நீ செய்வாய். பிரம்ம ஞானம் பெற்ற பின்பு நீ சுவாசிப்பதும் கூட ஜீவர்களுடைய நன்மைக்கேயாகும். அதன் பின்பு நீ நினைத்துச் சூழ்ந்து கருமம் செய்ய வேண்டியதில்லை. அறிந்து கொண்டாயா?

சிஷ்: வேதாந்த நிலையிலிருந்து கருமத்தையும் ஞானத்தையும் சமரசப்படுத்திக் கூறும் இந்த முடிபு மிகவும் அழகியது.

இத்தருணத்திலே இராப் போசனத்துக்கு மணி அடித்தது. உண்ணுதற்குப் போகுமுன்னர் சிஷ்யர் கைகளைக் கூப்பி வணக்கத்தோடு நின்று, "ஐய, இந்த ஜீவியத்திலேயே அடியேன் பிரம்ம ஞானத்தை அடையும்படி தேவரீர் கடாக்ஷித்தருள வேண்டும்" என்றார்.

சுவாமிஜி சிஷ்யருடைய சிரத்திலே கையை வைத்து "மகனே அஞ்ச வேண்டாம்; நீ உலகத்திலுள்ள சாதாரண மனிதரைப் போன்றவனல்ல—இல்வாழ்வானுமல்ல, முற்றிலும் சந்நியாசியுமல்ல—ஒரு புது மாதிரியாயிருக்கிறாய்" என்றார்.

(36)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ம் ஆண்டு]

சுவாமிஜி சுகமில்லாத நிலையில் இருக்கிறார். சுவாமி நிரஞ்சனாநந்தர் வருந்திக் கேட்டபடியால் ஆறேழு நாட்களாக நாட்டு வைத்திய மருந்து உட்கொண்டு வரு

கிறார். மருந்துக்குரிய பத்தியத்தின்படித் தண்ணீர் குடிப்பது விலக்கப்பட்டிருந்தது. தாகசாந்திக்காகப் பால் மாத்திரம் குடிக்க வேண்டி இருந்தது.

சிஷ்யர் அதிகாலையில் திருமடத்துக்கு வந்தார். சுவாமிஜி அவரை அன்பினோடு நோக்கி, "நீ வந்து விட்டாயா, மிக நல்லது, உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்" என்றார்.

சிஷ்ய: தேவரீர் ஆறேழு நாட்களாகப் பால் மாத்திரம் உண்டு கொண்டு வருகின்றீர் என்று கேள்விப்பட்டேன்.

சுவா: ஆம், நிரஞ்சனருடைய வேண்டுகோளின் படி நான் இந்த மருந்தை உண்ணுகிறேன். நான் அவருடைய வேண்டுகோளை மறுக்கக்கூடாது.

சிஷ்ய: தேவரீர் அடிக்கடி தண்ணீர் குடிப்பது வழக்கம். அதை முற்றிலும் விட்டொழித்தது எப்படி?

சுவா: இந்த வைத்திய முறைப்படி, தண்ணீர் குடித்தல் கூடாதென்று நான் கேள்விப்பட்ட உடனே, தண்ணீர் குடிக்க மாட்டேன் என்று ஒரு திடமான கோரிக்கையை மனத்தில் நிறுவிக் கொண்டேன். இப்பொழுது தண்ணீர் குடிக்க வேண்டுமென்னும் எண்ணமே என் மனத்திற் படிவதில்லை.

சிஷ்ய: இந்த வைத்தியத்தினாலே தேவரீருக்கு நலம் உண்டாகிறதென்று நம்புகிறேன்.

சுவா: அது எனக்குத் தெரியாது. எனது சகோதர சந்நியாசிகளுடைய கட்டளைக்கு அமைந்து நடக்கின்றேன்.

சிஷ்ய: வைத்தியர்கள் உபயோகிக்கிற உள்நாட்டில் விளைந்த மூலிகைகள் நமது சரீர நிலைக்கு மிகுதியும் பொருத்தமுடையனவென்று நான் நினைக்கின்றேன்.

சுவா: சில வியாதிகளைத் தீர்த்தவர்களாயினும், விஷயத்தைத் தீரத் தெளிய அறிந்து கொள்ளாதவர்

களாய், இக்காலத்து சாஸ்திரீய முறைகளை ஒரு சிறிதும் அறியாது பழைய ஏட்டுச் சுவடிகளைக் கண்மூடித்தனமாகக் கைக்கொண்டு ஒழுகுகிற அறிவிலிகளுடைய வைத்தியத்திறுற் பிழைப்பதினும் பார்க்க, நல்ல சாஸ்திரீக முறைகளை அறிந்த மருத்துவனுடைய வைத்தியத்திலே இறந்து போவதெனினும் நல்லதென்பது எனது எண்ணம்.

சுவாமிஜி சில பதார்த்தங்களைச் சமைத்தார் அவற்றிலொன்று சேமியா சேர்த்துச் செய்யப்பட்டிருந்தது. அதனை உண்ட சிஷ்யர் அஃதென்னவென வினவ, சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "நான் லண்டன் பட்டணத்திலிருந்து வரும்பொழுது காயவைத்துக் கொண்டுவந்த சில இங்கிலீஷ் நிலப் புழுக்கள் அவை" என்றுர். சமுகமாயிருந்தோர் அனைவரும் சிஷ்யரை நோக்கி நகைத்தார்கள். ஊண் உறக்கம் குறைந்திருந்தும் சுவாமிஜி வேலையில் மிகுந்த ஊக்கமாயிருந்தார். சில தினங்களுக்கு முன்பு திருமடத்துக்குப் பிரித்தானிய விசுவகோசப் புதுப் புத்தகங்கள் ஒரு தொகுதி வந்திருந்தன. அழகு விளங்குகின்ற அந்தப் புத்தகங்களைக் கண்ட சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, "இந்தப் புத்தகங்கள் எல்லாவற்றையும் ஒரு சீவியத்திலே தானும் வாசித்து முடிப்பது இயலாத காரியம்" என்றுர். சுவாமிஜி பத்துப் புத்தகங்களை முடித்துவிட்டுப் பதிேனுராவது புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறுர் என்பதை சிஷ்யர் அறியவில்லை.

சுவா: என்ன சொல்லுகிறுய்? முதல் பத்துப் புத்தகங்களிலே என்ன கேள்வியாகிலும் கேள். நான் விடை சொல்லுகிறேன்.

சிஷ்யர் ஆச்சரியமடைந்தராய், "இந்தப் புத்தகங்களை எல்லாம் வாசித்துவிட்டீர்களா?" என்றுர்.

சுவா: வாசியாமல் கேள்வி கேட்கச் சொல்லுவேனு?

சுவாமிஜியைப் பரிசோதித்துப் பார்த்த பொழுது, வினவப்பட்ட அரிய பெரிய விஷயங்களின் கருத்தை உள்ளவாறு சொன்னதோடு அமையாது, புத்தகங்களிலுள்ள நேர்மொழிகளையுமே ஆங்காங்கு சொன்னார். சிஷ்யர் அதிசயப்பட்டுப் புத்தகங்களை வைத்துவிட்டு 'இது மனித ஆற்றலினாலே முடியாத காரியம்' என்றார்.

சுவா: மாறுபாடில்லாத பிரம்மச்சரியத்தைக் கைக்கொண்டு ஒழுகுவதனாலே எல்லாக் கலைகளையும் மிக விரைவிலே கற்றுவிடலாம். ஒருவன் ஒருமுறை கேட்பவற்றைத் தானும் பிழையின்றி நிலைத்திருக்கக் கூடிய ஞாபக சக்தி ஏற்படுகின்றது. இத்தகைய பிரம்மச்சரியம் இல்லாமையினாலே நமது நாட்டிலே எல்லாம் அழிவடைந்து விட்டன.

சிஷ்: ஐய, மானிடரால் செய்து முடிக்கவொண்ணாத இத்தகைய பேராற்றல் தனித்துப் பிரம்மச்சரியத்தினால் மாத்திரம் வந்ததென்று தேவரீர் எப்படிச் சொல்லுதல் கூடும்? வேறேதோ இருக்கவேண்டும்.

சுவாமிஜி மறுமொழியாக ஒன்றும் சொல்லவில்லை.

அதன் பின்பு சுவாமிஜி எல்லாத் தத்துவ சாஸ்திரங்களிலும் உள்ள பலவேறு வகைப்பட்ட கடினமான விஷயங்களைப் பற்றிய வாதங்களையும் முடிபுகளையும் சிஷ்யருக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தார். இங்ஙனம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுது சுவாமி பிரம்மாநந்தர் அறையினுள்ளே புகுந்து சிஷ்யரை நோக்கி, "நீ நல்ல மனிதன், சுவாமிஜிக்குச் சுகமில்லை, எளிதான விஷயங்களைப் பேசி சுவாமிஜியினுடைய சிந்தையைச் சந்தோஷமாக வைத்திருப்பதற்குப் பதிலாகக் கடினமான விஷயங்களைப்பற்றி இடைவிடாது பேசுகிறாய்" என்றார். சிஷ்யர் நாணினார். சுவாமிஜி, சுவாமி பிரம்மாநந்தரை நோக்கி, "உங்களது நாட்டு வைத்தியத்துப் பத்திய முறைகளை ஒருபுறம் வைத்து விடுங்கள்: இவர்கள் என் மக்கள், இவர்களுக்குப் போதிப்பதில் என்னுடல் விழுந்தாலும் நான்

அதைப் பொருட்படுத்த மாட்டேன்" என்றார். அதன் பின்பு இலகுவான சம்பாஷணை நடந்தது. வங்காளி இலக்கியத்திலே பரத்சந்திரருடைய தகுதி எவ்வளவி னது என்பதைப்பற்றி விஞ நிகழ்ந்தது. ஆரம்பத்தில் தொட்டு சுவாமி பரத்சந்திரரைப்பற்றியும் அவர் காலத்திலே இருந்த ஜனசங்க வாழ்க்கை, பழக்க வழக்கம், விவாக முறைகள் என்னும் இவற்றைப் பற்றியும் பலவாறாக நகைத்து உரையாடினார். பரத் சந்திரர் குழந்தை விவாகத்தை ஆதரித்தவர். அவ ருடைய கவிகள் அசத்தியம் மலிந்து தீயசுவை பொருந்தி இருந்தமையினால் வங்காளத்துக்கு வெளியே நாகரீக முள்ள வகுப்பார் அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. "அத்தகைய புத்தகங்கள் சிறுவர்களுடைய கையிலே சேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று சுவாமிஜி சொன்னார். பின்பு மைக்கேல் மதுசூதன தத்தரைப்பற்றிப் பேச ஆரம்பித்து, உங்கள் மாகாணத் தில் பிறந்தவர்களுள் அவர் அற்புதமான கவித்துவப் பொருந்தியவர். மேகநாத வதம் என்னும் காவியத் தைப் போல மற்றொரு வீரகாவியம் பிறிதொரு பாஷை யிலே இல்லை; தற்காலத்து ஐரோப்பிய காவியத்துள் பலவற்றினைத் தேடினாலும் அத்தகைய பனுவலைக் காண்பது அரிது" என்றார்.

சிஷ்: ஆனால் ஐய, மைக்கேல் ஆடம்பரமான நடை எழுதுவதில் அதிகப் பிரியமாயிருந்தார் என்று எண்ணுகிறேன்.

சுவா. உங்கள் நாட்டிலே யாராவது ஒருவர் புதியதாக ஒரு கருமத்தைச் செய்தால் நீங்கள் அதை உடனே நிந்திக்கிறீர்கள். ஒருவன் சொல்வதை முதலிலே விசாரித்து நன்மை தீமை காணாமல் பழைய வழக்கங்களுக்குச் சிறிதாவது வேறுபட்டிருப்பதைத் துரத்திவிட முயலுவது இந்த நாட்டு மக்களுடைய வழக்கமாகி விட்டது. வங்காளி இலக்கியத்தில் சிறந்த இரத்தினம்போலக் காணப்படுகிற மேகநாதவத காவி

யத்தைப் பரிகசிக்கும் பொருட்டுச் சூச்சுந்தரிவத காவியம் என்பதொன்றை யாரோ எழுதினார்கள். நீங்கள் இயன்ற மட்டும் பரிகசிக்கலாம். அதனால் எய்துவ தொன்றுமில்லை. ஆனால் மேகநாதவத காவியமோ புகழிலே இமயத்தைப்போல அசைவற்று நிலைபெறும். அதனிடத்தே பிழை காண முயலுகின்ற, குற்றமே காணுவாருடைய எண்ணங்களும், எழுத்துக்களும் காலப்பிரவாகத்திலே கழுவுண்டு மறைந்து போவன. வீர மொழிகளினால் புதியதாகிய யாப்பிலே அமைத்து மைக்கேல் செய்த வீர காவியத்தைப் பற்றிச் சாதாரண மக்கள் என்ன அறிந்துகொள்ளக்கூடும்? கிரீஷ்பாபு புதிய யாப்பிலே அற்புதமான புத்தகங்களை இப்பொழுது எழுதிக்கொண்டிருக்கிறார். அதி புத்திசாலியான உங்கள் பண்டிதர்கள் அவற்றிலே வழுக்காட்டிக் குறை கூறுகின்றார்கள். ஆனால் கிரீஷ் பாபு அதைப்பற்றிச் சிந்திக்கிறாரா? மேல் வரும் காலங்களில் ஜனங்கள் அந் நூல்களை மதிப்பார்கள்.

மைக்கேல் விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கிக் கீழேயுள்ள புத்தகசாலைக்குப் போய் மேகநாதவத காவியத்தை எடுத்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். சிஷ்யர் கொண்டு வருதலும், "இப்பொழுது வாசி, நீ எப்படி வாசிக்கிறாய் என்று பார்ப்போம்" என்றார்.

சிஷ்யர் புத்தகத்தின் ஒரு பகுதியை வாசித்தார். வாசித்தது சுவாமிஜியினுடைய விருப்பத்துக்கு இயைந் திருக்காதபடியால் அவர் புஸ்தகத்தைக் கையில் எடுத் துத் தாமே வாசித்துப் பின்பு சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "காவியத்திலே எந்தப் பகுதி மிகவும் நயம் பொருந்தியது எனச் சொல்வாயாக" என்றார். சிஷ்யர் மறுமொழி சொல்லாதொழியச் சுவாமிஜி அவரை நோக்கிப் பின் வருமாறு சொல்லுவாராயினார்: "இந் திரசித்தன் போர்க்களத்திலே இறந்து விட்டான்; மண்டோதரி துன்பத்தினால் தன்வயமிழந்து இராவ

ணனை யுத்தத்திற்குப் போக வேண்டாமெனத் தடுக்கின்றாள். இராவணன் மகனை நினைத்து ஏற்பட்ட துன்பத்தை மனத்திலிருந்து வலிந்து அகற்றிவிட்டு, பெரிய வீரவானைப்போல் போர்க்களத்துக்குப் போக முற்படுகிறான். வெகுளியினாலும் பழிக்குப் பழி வாங்கவேண்டு மென்னும் வீர எண்ணத்தினாலும் உந்தப்பட்டு, மனைவி மக்களை மறந்து போர்க்குச் செல்லுவதற்கு ஆயத்தமாய் நிற்கின்றான். இதுவே அந்தக் காவியத்தில் மிக அழகாக அமைக்கப்பட்ட பாகம். எது வரினும் வருக, உலகம் நிலைபெறினும் சரி, அழிந்துவிடினும் சரி, நான் என் கடமையை மறக்க மாட்டேன். இவை சுத்த வீரனுடைய வார்த்தைகள். அத்தகைய உணர்ச்சியுடையவராய் மைக்கேல் அந்தப் பாகத்தை எழுதினார்.

இதனைச் சொன்னபின்பு சுவாமிஜி குறிப்பிட்ட பாகத்தை எடுத்து மிகவும் மனத்திற் பதியத்தக்க வண்ணமாக வாசித்தார்.

(37)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ஆம் ஆண்டு.]

நாட்டு வைத்தியத்தினாலே சுவாமிஜி மிகவும் குணம் அடைந்திருக்கிறார். சிஷ்யர் திருமடத்திற்கு வந்திருக்கிறார். சுவாமிஜிக்குச் சேவை செய்யும்பொழுது சிஷ்யர் அவரை நோக்கி, "ஆத்மன் சர்வ வியாபகன், எல்லா உயிர்களுக்கும் உயிர், மிகவும் அணித்தானவன், அப்படி இருந்தும் ஆத்மன் ஏன் காணப்படுவதில்லை?" என்றார்.

சுவா: உனக்குக் கண்கள் உண்டென்பதை நீ காண்கின்றாயா? பிறர் உனக்குக் கண்கள் உண்டென்று சொல்லும்பொழுது உனக்குக் கண்கள் உண்டென்ற நினைப்பு வருகின்றது. புழுதியோ மணலோ கண்ணினுட் பட்டு எரிப்புண்டாகும்பொழுது உனக்குக் கண்கள் உண்

டென்பதை நீ நிச்சயமாய் உணர்ந்துகொள்ளுகிறாய். உள்ளானவற்றுக்கு உள்ளாக விளங்குகிற சர்வவியாபியாகிய ஆத்மனுடைய தரிசனமும் எளிதாகக் கிடைப்பதில்லை. சமய சாஸ்திரங்களைப் படிப்பதினாலும் குரவனுடைய வாய்மொழியைக் கேட்பதனாலும் அதைப் பற்றிச் சில எண்ணங்கள் உண்டாகின்றன; உலகத்திலே வருகிற கடுந் துன்பங்களும் கொடுந் தாக்கல்களும் இருதயத்தைப் புண்ணாக்கும்பொழுது, ஒருவன் தனது அரிய உரிய உறவினர்களை இழக்கும்பொழுதும், தனக்கு யாரும் உதவியில்லையென்று எண்ணும்பொழுது, மறுமையைப்பற்றிய நோக்கமுடியாத இருளடைந்த எண்ணங்களிலே மனமானது சிக்குண்டு அல்லல் உறும்பொழுதும் ஜீவனானவன் ஆத்ம தரிசனத்தை நாடித் தவிக்கின்றான். ஆதலினாலே துன்பமென்பது ஆத்ம ஞானத்துக்குத் துணைபுரிவதாகும். ஆனால் அநுபவத்திலே வருகின்ற வேதனையால் எய்தும் போதனைகளை மனிதன் ஞாபகத்திலே வைத்திருக்க வேண்டும். சீவியத்தில் வரும் துன்பங்களை அநுபவித்த நாய்கள் பூனைகளைப் போல, வாளா மரித்துப்போகின்ற மனிதரும் மனிதரா? இன்பத்தினாலும் துன்பத்தினாலும் வருகின்ற அசைவினாலே அல்லல் உறும்பொழுதும் விவேகத்தோடு கூடி, இன்ப துன்பங்கள் அழிந்துபோகும் நீர்மைய என அறிந்து ஆத்மனை ஆர்வத்தோடு பற்றி நிற்பவனே மனிதன் எனப்படுவான். மனிதருக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு இதுவே. எந்தப் பொருள் அணித்தாக இருக்கின்றதோ அது அவ்வளவாகக் காணப்படுவதில்லை. ஆத்மன் அணித்தான பொருள்களிலே மிகவும் அணித்தாகியது. ஆதலினாலே நிலையற்ற மனிதனுடைய மனமானது அதனைக் கண்டுபிடிப்பதில்லை. ஆனால் விழிப்போடும் சாந்தத்தோடும் புலன் அடக்கத்தோடும் விவேகத்தோடும் கூடிய மனிதன் புற உலகத்தைப் புறக்கணித்து அக உலகத்தினுள்ளே ஆழ்ந்து சென்று ஆத்மனுடைய மகிமையை அறிந்து பெரியோனாகின்றான். அப்பொழுதுதான் அவன் ஆத்மஞானத்தை அடைந்து,

"நானே ஆத்மன்", "ஓ சுவேதகேது, அது நீ ஆகின்ருய்" என்று இத்தகைய வாக்கியப் பொருள்களை உணருகின்ருன். அறிந்து கொண்டாயா?

சிஷ்: ஆம் ஐய, துன்பம் துயரத்தின் மூலமாக ஆத்மஞானத்தை அடையவேண்டுமென்று ஏற்பட்டிருப்பதேன்? இதற்குப் பதிலாக சிருஷ்டியே இல்லாதிருந்தால் நன்ருயிருக்குமல்லவா? ஒரு காலத்து நாமெல்லோரும் பிரம்மத்தினேடு ஒன்றுபட்டிருந்தோம். பிரம்மம் சிருஷ்டி செய்வதற்கு இச்சித்ததேன்? பிரம்மத்தினின்று வேறுபடாத ஜீவர்கள் வெளிப்பட்டுப் பிறப்பிறப்பாகிய மார்க்கங்களிலே உழன்று வாழ்க்கையின் இரு வேறுவகைப்பட்ட அல்லல்களிடையே ஊசலாடுவதேன்?

சுவா: ஒரு மனிதன் கள்வெறி யுற்றிருக்கும் பொழுது பலவேறு காட்சிகளைக் காணுகிறன். வெறி முறிந்த பின்பு, அவை மதுவினுல் வெறியுற்ற தனது மூளையினின்றெழுந்த தோற்றங்கள் என்று அறிந்து கொள்ளுகிருன். ஆதியற்றதாய் முடிவுள்ளதாய் அமைந்திருக்கின்ற இந்தச் சிருஷ்டியிலே அமைந்திருப்பனவெல்லாம் வெறியினுல் ஏற்பட்ட மயக்க நிலையின் காரியமாக அமைந்தன; மயக்கம் கழிந்த பின்பு இதைப் பற்றிய கேள்விகள் ஒன்றும் எழமாட்டா.

சிஷ்: பிரபஞ்சத்தின் சிருஷ்டி திதி என்னும் இவற்றில் உண்மை இல்லையா?

சுவா: ஏன் இல்லை. நீ உடலோடு ஒன்றுபட்டு, நான் என்னும் எண்ணத்தோடு இருக்கும் பொழுது இவையெல்லாம் நிலைபெற்றிருப்பன. தேகபுத்தி இழந்து ஆத்மனேடு ஒன்றுபட்டு ஆத்மீகமாகிய வாழ்க்கையை வாழும்பொழுது இவை ஒன்றும் இருக்கமாட்டா. சிருஷ்டி பிறப்பு இறப்பு என்னும் இவற்றைப்பற்றிய வினுக்களுக்கும் இடமில்லை.

க்க கதம் கேன வா நீதம் குத்ர லீனமிதம் ஜகத்
அதுனைநவ மயா த்ருஷ்டம் நாஸ்தி கிம் மஹாதத்புதம்

"எங்குப் போய்விட்டது? யார் இதனை எடுத்தார்? உலகம் எங்கே அழிந்து விட்டது! சற்று முன்பாக என்னுற் காணப்பட்டது இப்பொழுது காணப்படவில்லையே! என்ன அற்புதம்!" என விவேக சூடாமணியிலே சொல்லியவண்ணம் நீயும் சொல்லுவாய்.

சிஷ் : பிரபஞ்சத்தினுடைய இருக்கையைப்பற்றிய அறிவு இல்லாமற் போமாயின், "உலகம் எங்கே அழிந்து விட்டது?" என்று எப்படிச் சொல்லலாம்?

சுவா : அந்தக் கருத்தை மொழியினாலே சொல்ல வேண்டி இருப்பதால் அவ்வண்ணம் சொல்ல வேண்டியதாயிற்று. உரை உணர்வு கடந்த பெரிய நிலையை எண்ணத்தினாலும் மொழியினாலும் ஆசிரியர் விவரிக்க வேண்டி இருந்தபடியால் முற்றிலும் பொய்யிருளாகிய உலகத்தைப்பற்றி மேலே காட்டியபடி சொல்லவேண்டியிருந்தது. வாக்குமனாதீத கோசரமாகிய பிரம்மம் ஒன்றே பாரமார்த்திகமான உண்மைப் பொருள். உலகம் அத்தகைய உண்மைப் பொருளன்று. இன்னும் கேட்க வேண்டியதைக் கேள். இன்றோடே உன்னுடைய வாதங்களுக்கெல்லாம் முடிவுகட்டி விடுகின்றேன்.

பூஜை அறையிலே மாலைக்கால ஆராதனைக்கு மணி அடித்தது. எல்லோரும் அங்குச் சென்றார்கள். சிஷ்யர் மாத்திரம் சுவாமிஜியினுடைய அறையில் இருந்துவிட்டார். இதனைச் சுவாமிஜி கண்டு, "நீ பூஜை அறைக்குப் போகமாட்டாயா?" என்றார்.

சிஷ் : நான் இங்கே இருக்க விரும்புகிறேன்.

சுவா : சரி நல்லது.

சிறிது நேரம் கழித்துச் சிஷ்யர் அறைக்கு வெளியே நோக்கி, " இன்று அமாவாசை இரவு; எல்லாத் திசைகளிலும் இருள் பரந்திருக்கிறது; இது காளித்தாயை வழிபடுவதற்குரிய இரவு" என்றார்.

சுவாமிஜி ஒன்றும் பேசாது கீழ்த்திசை வானத்தைச் சிறிது நேரம் நோக்கி, "பார்த்தாயா இந்த இருளி

னுடைய அதிரகசியமான அற்புத அழகினை ?" என்று கூறி, நெருங்கிய இருளின் திரளினைப் பார்த்தவண்ணமாகவே பரவசப்பட்டு நின்றார். சில நிமிஷங் கழிந்ததும் சுவாமிஜி, "அன்னையே, ஆழ்ந்த இருளிலே நின் உருவில்லாத வனப்பு ஒளி வீசுகின்றதே" எனத் தொடங்குகிற வங்காளிப் பாட்டை மெதுவாகப் படித்தார். அதன் பின்பு சுவாமிஜி தம்முடைய அறையின் உள்ளே புகுந்து, "அம்மா", "அம்மா" "காளி", "காளி" என்று இடையிடையே சொல்லிக்கொண்டு ஆசனத்தில் அமைவுற்றிருந்தார். சுவாமிஜி தம்மை மறந்திருக்கின்ற நிலையினைக் கண்ட சிஷ்யர் பரபரப்புற்று "ஐய, இப்பொழுது என்னோடு பேசுவீராக" என்றார்.

சுவாமிஜி புன்னகையோடு, "எந்த ஆத்மனுடைய வெளித் தோற்றமானது இவ்வளவு அழகும் இனிமையும் தருகின்றதோ அந்த ஆத்மனுடைய அழகினையும் ஆழத்தையும் உன்னால் அளக்க முடியுமா ?" என்றார். சிஷ்யர் விஷயத்தை வேறுக்குவதற்கு விரும்புவதைக் கண்ட சுவாமிஜி, "ஓ அன்னாய், அமுததாரையே, எத்தனை உருவமாகவும் வடிவமாகவும் நீ விளையாடுகின்றாய்!" எனத் தொடங்குகிற மற்றொரு காளிப் பாட்டைப் பாட ஆரம்பித்தார். பாட்டு முடிந்தபின்னர் சிஷ்யனை நோக்கி, "இந்தக் காளி பிரம்மத்தினுடைய தோற்றம்; அசைகின்ற பாம்பு அசைவற்ற பாம்பு, ஒரே பொருளின் இயக்க நிலையையும் ஸ்திர நிலையையும் குறிப்பனவென ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லியதை நீ கேள்விப்பட்டதில்லையா" என்றார்.

சிஷ் : ஆம், ஐய.

சுவா : இம்முறை நான் சுகம் அடைந்த பின்பு என்னுடைய இருதயத்தின் இரத்தத்தைக் கொண்டு அன்னையை வழிபடுவேன். அப்பொழுதுதான் அவள் சந்தோஷமடைவாள். உங்களுடைய ரகுநந்தனரும் அப்படியே சொல்லுகிறார். அன்னையினுடைய பிள்ளை வீரனாய் இருக்க வேண்டும்; மஹா வீரனாயிருக்க

வேண்டும். துன்பத்திலும் துயரத்திலும், மரணத்தி லும் வழி தெரியாது அல்லல் உறும்போது அன்னையி னுடைய பிள்ளை எப்பொழுதும் அச்சமின்றி இருக்க வேண்டும்.

(38)

சுவாமிஜி இந்நாட்களில் திருமடத்திலே இருந்து வரு கின்றார். அவருடைய சுகம் நன்றாயில்லை—ஆனால் காலை யிலும் மாலையிலும் வெளியே உலாவப் போவார். சிஷ்யர் சுவாமிஜியினுடைய பாதங்களை நமஸ்கரித்து, சுகத்தைப் பற்றி வினவினார்.

சுவா: நல்லது. இந்த உடல் மிகவும் கேவல மான நிலையிலிருக்கிறது. ஆனால் நீங்கள் ஒருவரும் என்னுடைய முயற்சியிலே எனக்கு உதவி செய்வதற்கு முன் வருகிறீர்களில்லை. நான் தனித்து என்ன செய்யக் கூடும்? இம்முறை இவ்வுடலம் வங்காளத்து நிலத்தி லிருந்து தோன்றியது. அதிக வேலைப் பொறுப்பை அதனால் தாங்க முடியுமா? இங்கு வருகின்ற நீங்கள் பரிசுத்த ஆத்மாககளாய் இருக்கின்றீர்கள். இந்த வேளையில் நீங்கள் உதவியாளர்களாய் இராவிட்டால் நான் தனித்து என்ன செய்யலாம்?

சிஷ்: ஐய, தியானமௌன்களாகிய இந்தப் பிரம்மச் சாரிகளும் சந்நியாசிகளும் தேவரீருக்குப் பின்னாக நின்று உதவி புரிந்து வருகிறார்கள் அவர்கள் ஒவ்வொருவரும் தேவரீரின் வேலைக்காகச் சீவனைக் கொடுக்கத் தயாராக நிற்கிறார்களென்று எண்ணுகிறேன்—அப்படி இருக் கத் தேவரீர் இப்படிக் கூறுவதேனோ?

சுவா: சரி, இளம்வாலிபர்கள் ஒரு கூட்டம் எனக்கு வேண்டும். இந்த நாட்டினுடைய நலத்தைப் பற்றிய நம்பிக்கை அவர்களிடத்தேதான் தங்கியிருக்கி றது. நல்லொழுக்கம் உடையவர்களாய், புத்திமான் களாய், பிறருடைய சேவைக்காக எல்லாவற்றையும்

தியாகம் பண்ணுபவர்களாய், எனது எண்ணங்களைத் தொழிற்படுத்துவதற்குத் தங்களது உயிரையும் அர்ப்பணம் பண்ணுபவர்களாய், அதனால் தங்களுக்கும் தேசத்துக்கும் நலத்தைப் புரிபவர்களாய் உள்ள இளைஞர்களிடத்தே எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கை தங்கியிருக்கின்றது. சாதாரண சிறுவர்கள் கூட்டங் கூட்டமாய் வருகிறார்கள், வருவார்கள். அவர்களுடைய முகத்திலே பேதைமை காணப்படுகிறது. இருதயத்திலே வலிமை இல்லை. உடல் வலியிழந்து கருமம் செய்யத் தகுதியற்றதா யிருக்கிறது. மனத்திலே தைரியமில்லை. இவர்களால் என்ன செய்ய முடியும்? நசிகேதனைப்போன்ற சிரத்தையுள்ள இளைஞர் பத்துப் பன்னிரண்டுபேர் எனக்குக் கிடைப்பார்களாயின், இந்த நாட்டினுடைய எண்ணங்களையும் செயல்களையும் ஒரு புதிய வழியிலே திருப்பிவிடுவேன்.

சிஷ்: ஐய, எத்தனையோ பல வாலிபர்கள் தேவரீரிடத்துக்கு வருகிறார்கள். அவர்களுக்குள்ளே அத்தன்மையோர் ஒருவராவது காணப்படவில்லையா?

சுவா: நல்லவர்களாகக் காணப்படுவர்களுள் சிலர் மணவாழ்க்கை என்னும் கட்டுக்குட்பட்டவர்களாயிருக்கிறார்கள். வேறு சிலர் பணம் கீர்த்தி என்னும் லௌகிகப் பொருள்களைத் தேடுவதற்குத் தம்மை விலைப்படுத்தியவர்களாய் இருக்கிறார்கள். பெருந்தகைமையான மற்றையோர் உயர்ந்த எண்ணங்களைப் பெற்றுக் கொள்ளமாட்டாதவர்களாயிருக்கிறார்கள். நீ உயர்ந்த நோக்கங்களைப் பெறுதற்குத் தகுதி உடையன். ஆனால் அவற்றை அனுஷ்டான வழியிலே காரியப்படுத்துவதற்கு உன்னால் முடியாது. இந்த எண்ணங்களினாலே சில பொழுது என்னுடைய உள்ளத்துக்குப் பெரிய கவலை ஏற்படுகிறது. இந்த மானிட சரீரத்தை எடுத்தும், அதிருஷ்டமின்மையினாலே செய்யவேண்டிய அளவு வேலை செய்யக்கூடாமல் இருக்கிறது. ஆனால், நான் முற்றிலும் நம்பிக்கை

இழந்தவனாகப் போய்விடவில்லை. ஆண்டவனுக்குச் சித்தமிருந்தால் ஆத்மீக ஞானத்திலும் கருமத்திலும் சிறந்து எதிர்காலத்திலே என்னுடைய கொள்கைகளைத் தொழிற்படுத்தக்கூடிய பெரிய வீரர்கள் இந்த இளைஞர்களிடையே இருந்துவருதல் கூடும்.

சிஷ் : தேவரீருடைய விரிந்த சமரசக் கொள்கைகள் எப்பொழுதோ ஒரு காலத்தில் எல்லாராலும் அங்கீகரிக்கப்படுவன என்பது எனது திடமான நம்பிக்கை. அவை எத்திசையும் நோக்கினவாய் எண்ணம் செயல் ஆகியவற்றின் எல்லாத் துறைகளுக்கும் புதிய வலிமையைத் தரத்தக்கனவாய் இருக்கின்றன. இந்த நாட்டு மக்கள் தேவரீருடைய எண்ணங்களை வெளியாகவோ மறைவாகவோ ஏற்றி ஜனங்களுக்குப் போதிக்கிறார்கள்.

சுவா : எனது பேரை அவர்கள் சொன்னாலென்ன, சொல்லாவிட்டால் என்ன? எனது கொள்கைகளை ஏற்றுக்கொள்வார்களாயின் அதுவே போதுமானது. சாதுக்களுக்குள்ளே நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பாகத்தார் காம காஞ்சனங்களை வெறுத்துவிட்டார்களாயினும், பெயர் புகழ் என்னும் இவற்றின்மேலுள்ள இச்சையினாலே கட்டுப்பட்டிருக்கிறார்கள். "உயரிய சிந்தைக்கு முடிவுவரையும் நிலைத்திருக்கும் நோயாகிய கீர்த்தி" என்பதை நீ வாசிக்கவில்லையா? நாங்கள் அனைவரும் வேலை செய்தல் வேண்டும். பயன்குறித்த இச்சையை முற்றிலும் விட்டுவிட வேண்டும். ஜனங்கள் எங்களைக் குறித்து நன்மையாயும் தீமையாயும் பேசுவார்கள். நாங்களோவென்றால் சிங்கங்களைப்போல அடைய வேண்டிய இலக்கைக் கண்முன்னே வைத்து, "புத்திமான்கள் நம்மைப் புகழினும் சரியே இகழினும் சரியே" என்னுங் கருத்தினோடு முயற்சிக்க வேண்டும்.

சிஷ் : இப்பொழுது நாங்கள் கைப்பற்றி ஒழுக வேண்டிய பேரிலக்கு எதுவாகும்?

சுவா: மஹா வீரருடைய பெருங் குணங்களை உங்கள் வாழ்க்கையில் இலக்காக நீங்கள் இப்பொழுது கொள்ளவேண்டும் இராமச்சந்திரருடைய கட்டளைக் கமைந்து கருங்கடலைத் தாண்டிவிட்டார் பார்த்தாயா? அவர் வாழ்வையோ மரிப்பதையோ பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. புலன்களை முற்றிலும் அடக்கி யாள்பவராய் இருந்தார். அற்புதமான புத்தி சாதுரி யம் படைத்தவரா யிருந்தார். சேவைக்கு உயர்ந்த இலக்காகக் காணப்படுகிற இந்த வீரருடைய வாழ்க்கை யைப் பற்றுக்கோடாகக் கொண்டு நீங்கள் உங்கள் வாழ்க்கையை இன்று அமைத்தல் வேண்டும். அவ் வாயிலாக ஏனைய இலக்ஷியங்களெல்லாம் உங்கள் வாழ்க்கையிலேயே படிப்படியாக வெளியாகும். விரு வின்றிக் குருவுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும், தவறாது பிரம்மசரியங் காத்தலும், காரியசித்தி எய்துவதற்கு வழியாயிருக்கின்றன. ஹனுமானை ஒருபுறமாக நோக் கினுல் சேவை என்னும் உயர்ந்த கொள்கையே உருவா னுற்போல் காணப்படுகிருர் மற்ருெரு பக்கத்திலே உலகனைத்தினையும் அஞ்சுமாறு செய்கின்ற சிங்கத்தை யொத்த பேராற்றல் அவரிடத்துக் காணப்படுகிறது இராமச்சந்திரருடைய நன்மைக்காகத் தன்னுடைய உயிரை அர்ப்பணம்பண்ணச் சிறிதேனும் தடையில்லா தவரா யிருக்கிருர். இராம சேவையொழிந்த பிற யாவற்றையும் பெரிய புறக்கணிப்போடு பார்க்கின் ருர். உலோக பாலகராகிய பிரம்மதேவன் சிவ பெருமான் என்றின்னோருடைய நிலையை அடைவதை யும் அவர் பொருட்படுத்தவில்லை. ஸ்ரீ ராமனுடைய கட் டளையைச் செய்து நிறைவேற்றுவதே அவரது வாழ்க் கையில் ஏற்பட்ட ஒரே விரதம் அத்தகைய முழுமன தோடு கூடிய பக்தி இன்றியமையாதது. *கோல், †கர்த் தால் என்னும் வாத்தியங்களை முழக்கி, கீர்த்தனை

---

*மிருதங்கம் போன்ற வங்காள வாத்தியம்.

†ஜாலர் போன்ற தாளம்.

பாடிக் குதித்துக் கூத்தாடி மக்கள் எல்லாம் நிலையில் இழிந்துவிட்டார்கள். முதலிலே இவர்களோ குன்ம வியாதிபிடித்த மனிதர்கள். அதனோடு இப்படிக் குதித் துக் கூத்தாடுவதென்றால், அதனால் வரும் தாக்கத்தை எப்படிச் சகிப்பது? முற்றான பரிசுத்தத்தை முதற் படி யாகக்கொண்ட, யாவற்றிலும் உயர்ந்த சாதனையை வெளித்தோற்றமட்டிலே கைக்கொள்ளத் தொடங்கி மிகுந்த தாமசத்திலே மூழ்கிவிட்டார்கள். எந்தப் பக்கம் போனாலும் எந்தக் கிராமத்திலும் கோல் கர்த்தால் இவற்றினுடைய ஓசைதான். இந்த நாட்டிலே பேரி கைப் பறைகள் செய்வதில்லையா? துடி பறைகள் இந்தி யாவில் அகப்படமாட்டாவா? இத்தகைய வாத்தியங் களினுடைய ஆழ்ந்த ஓசையை நமது சிறுவர்கள் கேட் கும்படிச் செய்வாயாக. பெண்தன்மை படைத்த கீத வாத்தியங்களைப் பாலியமுதல் கேட்டுவந்த காரணத்தி னால் இந்த நாடு முற்றிலும் பெண்கள் வசிக்கின்ற நாடாகிவிட்டது. இதனினும் பார்க்க எய்தக்கூடிய இழிவென்ன? இந்தப் படத்தை எழுதிக் காட்டக் கவிஞ ருடைய கற்பனா சக்தியாலும் முடியாது கொம்பும் தமருகமும் ஒலிக்கட்டும். பேரிகைப் பறைகள் ஆழ்ந்த போர்க்கள ஓசையோடு முழங்கட்டும். "மஹா வீர", "மஹா வீர" என்று நம்முடைய நா சொல்லட்டும், "ஹர, ஹர, வியோம், வியோம்" என்னும் ஓசையினால் நாற்றிசையும் அதிரட்டும். மனிதனுடைய மென்னீர் மையை அருட்டி எழுப்புகின்ற வாத்தியங்களைச் சில காலத்திற்கு நிறுத்தி வைக்கவேண்டும். கேயால், டப்பா இவைபோன்ற மென்னீர்மையான மெட்டுக் களைச் சில காலத்துக்கு நிறுத்திவிட்டு, ஜனங்களுக்குத் துருபத இசையைப் பயிற்றவேண்டும். வேத கீதங்களி னுடைய உன்னதமான ஒளி முழக்கத்தினாலே இந்த நாட்டுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டும்; எல்லாவற்றி லும் தவத்தின்பாற்பட்ட ஆண்மையோடு கூடிய வீர வாழ்க்கையை உயிர்ப்பிக்கவேண்டும். அத்தகைய உயர்ந்த கொள்கையை பின்பற்றி ஒழுகுவதினால் மக்க

ளுக்கு நலம் உண்டு. உன்னுடைய நீர்மையை அவ்வாறு கிய உயர்ந்த கொள்கைகளின் வழியாக உருப்படுத்துவா யாயின், ஆயிரம்பேர் உன்னைப் பின்பற்றுவார்கள். ஆனால் உயர் தனிக் கொள்கையிலிருந்து ஓர் அங்குலமாவது பிசகக்கூடாத நிலைமை உள்ளத்தில் வைத்துக் கொள்ளுவாயாக. ஒருபொழுதும் மனத்தளர்ச்சியடைய வேண்டாம். உண்ணும் போதும், உடுக்கும் போதும், கிடக்கும் போதும், பாடும் போதும், ஆடும் போதும், சுகத்தை அனுபவிக்கும் போதும், நோயுற்றிருக்கும் போதும், எப்போதும் அதி உயர்ந்த ஒழுக்கத்தோடும் கூடிய தைரியத்தை வெளிப்படுத்துவாயாக. அப் பொழுதுதான் உலக மாதாவாகிய மஹா சக்தியி னுடைய அனுக்கிரகத்தை நீ பெறுவாய்.

சிஷ் : ஐய, சில வேளைகளில் என்னுடைய மனமானது மிகவும் நலிவடைகின்றது. ஏனோ தெரியவில்லை

சுவா : அப்படியானால் இவ்வண்ணம் நினைப்பா யாக: "யான் யாருடைய பிள்ளை? அவரோடு கலந்து உறவாடுகின்ற யான் வலியற்ற மனத்தோடும் கீழ்மையுற்ற சிந்தையோடும் இருப்பேனோ?" மனத்திலும் இதயத்திலும் உள்ள வலியின்மை அனைத்தினையும் உதறி மிதித்துவிட்டு எழுந்து நின்று, "நான் வீரத்தோடு கூடியிருக்கின்றேன், என்னுடைய புத்தி ஸ்திரப்பட்டிருக்கின்றது, நான் பிரம்மத்தை அறிந்தவன், என்னுடைய சிந்தை தெளிவானது" என்று சொல்லுவாயாக. காம காஞ்சனத்தை வெற்றிகொண்ட வீரராகிய ஸ்ரீ ராம கிருஷ்ணருக்குத் துணைவராக இருந்த இன்னாருடைய சிஷ்யன் நான் என்று சொல்லு. இதனால் நல்ல பயன் உண்டாகும். இத்தகைய பெருமையில்லாதவன் பிரம்ம ஞானம் உதயமாகப் பெறாதவனே. ராமப் பிரசாதருடைய பாட்டை நீ கேள்விப் பட்டதில்லையா? உலக மாதாவைத் தனி யரசியாகக்கொண்ட யான் உலகத்தில் யாருக்குப் பயப்படவேண்டும்? அத்தகைய பெருமை எப்பொழுதும் மனத்தில் பொருந்தியிருக்குமாயின் இத

யம் மனம் என்னுமிவற்றின் வலியின்மை உன்னை அணுகமாட்டாது. பலவீனமானது உன் மனத்தை எப்பொழுதும் மேற்கொள்ளாதிருப்பதாக. மஹா வீரரை நினைந்திரு. உலக மாதாவை நினைந்திரு. அப்பொழுது எல்லாவகைப் பலவீனங்களும் கோழைத்தனங்களும் உன்னை விட்டு அகன்றுவிடும்.

இவ்வார்த்தைகளைச் சொல்லிவிட்டுச் சுவாமிஜீ மேல் மாடியிலிருந்து இறங்கி முற்றத்திலே அவர் வழக்கமாக இருக்கிற ஆசனத்திலே வந்திருந்தார். ஆங்குக் குழுமியிருந்த சந்நியாசிகளையும் பிரம்மச்சாரிகளையும் நோக்கி, "பிரம்மத்தினுடைய மறைவில்லாத விளக்கம் இங்கே இருக்கிறது, அதனைக் கருதாது வேறு பொருள்களில் உள்ளத்தைச் செலுத்துகிறீர்களே, சீச்சீ, உள்ளங்கை நெல்லிக் கனியைப் போலப் பிரம்மம் இங்கே இருக்கிறது, நீங்கள் காணவில்லையா இங்கே?" என்றார்.

இந்த வார்த்தைகளைச் சொன்ன மாத்திரத்தே எல்லோரும் திரையிலெழுதிய சித்திரத்தைப்போல, ஆழ்ந்த தியானத்தில் சடுதியாக இழுக்கப்பட்டவர்களைப்போல, ஒருவகை உணர்ச்சியை அடைந்தார்கள். * * * சிறிது நேரம் கழித்து இந்த உணர்ச்சி போய்விட எல்லோரும் சாதாரண நிலைக்கு வந்தார்கள்.

அதன் பின்பு உலாவிக் கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜீ சிஷ்யரை நோக்கி "இன்று எல்லோரும் ஏகாக்கிர நிலையில் நின்றதை நீ கண்டாயா? இவர்கள் எல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பிள்ளைகள்; வார்த்தைகளைச் சொன்ன மாத்திரத்தே உண்மையை உணர்ந்தார்கள்" என்றார்.

சிஷ்: ஐய, அவர்களைப் பற்றிப் பேசுவானேன்? என்னுடைய சிந்தைதானும் தெய்வீகமாகிய ஆனந்தத்தினால் நிறைந்து பிரவாகித்தது. இப்பொழுது கனவைப் போல் அஃது எல்லாம் மறைந்து போய்விட்டது.

சுவா: எல்லாம் காலத்திலே வரும். இப்பொழுது முயற்சிப்பாயாக. அஞ்ஞானத்திலும் மயக்கத்திலும்

அமிழ்ந்திக் கிடக்கின்ற ஜனங்களின் நன்மைக்காகச் சில நன்முயற்சிகளைச் செய்து வருவாய். அப்பொழுது இத்தகைய அனுபவங்கள் எல்லாம் தாமே வரக் காண்பாய்.

சிஷ்: ஐய, இத்தகைய வழிகளிற் பிரவேசிக்க நான் அஞ்சுகிறேன்—எனக்கு வலிமையுமில்லை. "கரும மார்க்கம் உட்புகுதற்கரியது" என்று சமய சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

சுவா: பின் நீ என்ன செய்ய விரும்புகிறாய்?

சிஷ்: தேவரீரைப் போலக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலினாலே சாஸ்திரங்களிற் கூறப்பட்ட உண்மையை உணர்ந்த பெரியாரோடு வாதித்துக் காலங் கழித்து இந்தச் சீவியத்திற்றானே பிரம்மத்தை அடைந்து விட விரும்புகிறேன். வேறொன்றுக்கும் எனக்கு வலிமையில்லை, ஊக்கமுமில்லை

சுவா: நீ அவ்வண்ணம் விரும்பினால் அப்படியே செய்யலாம். நீ சாஸ்திரங்களைப் பற்றிக் கொண்டிருக்கிற எண்ணங்களையும் முடிபுகளையும் பிறருக்குச் சொல்வாயாக. அதனால் அவர்கள் நன்மை அடைவார்கள். உடலிருக்கும்வரையும் ஏதாவது ஒரு கருமத்தைச் செய்யாமலிருக்க முடியாது; ஆதலினால் பிறருக்கு உபகாரமாகிய கருமத்தைச் செய்தல் வேண்டும். சமய சாஸ்திரங்களைப் பற்றி நீ கேட்ட முடிபுகளும் அனுபவங்களும் உண்மை நாடுவோர் பலருக்குப் பயனைத் தருவன. ஆதலினால் பிறருக்கு உதவி செய்யும் பொருட்டு அவற்றை எழுதி வைப்பாயாக.

சிஷ்: முதலிலே நான் உண்மையை உணர்ந்து கொள்வேனாக. "அதிகாரத்துக்குரிய பட்டயம் இல்லாமல் ஒருவரும் உன் சொல்லுக்குச் செவிசாய்க்கமாட்டார்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுவதுண்டு.

சுவா: நீ இப்பொழுது இருக்கின்ற நிலையிலே, தங்களது சமய சாதனையும் ஆராய்ச்சியும் எய்தப் பெற்று, அதற்கப்பால் போகமாட்டாது திகைத்து நிற்

கின்ற மக்கள் பலர் இவ்வுலகத்தில் இருத்தல் கூடும். உன்னுடைய அனுபவங்களையும் எண்ணங்களையும் எழுதிவைத்தால் அது அவர்களுக்காவது பயன்படும். இந்தத் திருமடத்திலுள்ள சாதுக்களோடு நீ புரிகின்ற வாதங்களின் சாரத்தை எழுதி வைப்பாயாயின் அது பலருக்குப் பயன்படும்.

சிஷ் : தேவரீர் அதை விரும்புகிறபடியால் நான் அங்ஙனம் செய்ய முயலுவேன்.

சுவா : பெண்ணுசை மண்ணுசையிலே அமிழ்ந்திக் கிடக்கின்ற மக்களுக்குக் கைதந்து உதவாததும், மயக்கத்திலும் அஞ்ஞானத்திலும் ஆழ்ந்தோருக்கு நலத்தைத் தராததும், பிறர்க்கு எவ்வாற்ருனும் உதவாதது மாகிய சமய சாதனையினுலும், சாக்ஷாத்காரத்தினுலும் ஆகின்ற பிரயோஜனமென்ன? ஜீவர்களுள் ஒருவன் தானும் பந்தமுற்று நையும்போது நீ மோக்ஷத்தை அடைந்து விடலாம் என்று நினைக்கிருயா? மற்றவன் மோக்ஷத்தை அடையாதவரை அவனுக்கு உதவி செய்யும் பொருட்டும், பிரம்மஞானத்தை அடைவிக்கும் பொருட்டும், நீ எத்தனையோ பலமுறை பிறக்க வேண்டியவன். ஒவ்வொரு ஜீவனும் உன்னில் ஒரு பாகமாக இருக்கிருன். பிறர் பொருட்டு நாம் முயல வேண்டுமென்பதற்குக் காரணம் இதுவே. உன்னுடைய மனைவி மக்களை உனக்குச் சொந்தமானவர்கள் என அறிந்து முழுமனதோடு அவர்களுடைய நலத்தை நீ எவ்வளவாக விரும்புகின்ருயோ, அவ்வளவு அன்பும் கவர்ச்சியும் உனக்கு ஒவ்வொரு ஜீவனிடத்திலும் உண்டாகுமாயின், உன்னுடைய உள்ளத்திலே பிரம்ம ஞானம் உதிக்கின்றதென்று நான் அறிந்துகொள்ளுவேன். அதற்கு முன்பு அங்ஙனம் கொள்ளமாட்டேன். சாதி சமய வேறுபாடின்றி எல்லோருடைய நலத்தையும் கருதுகிற எண்ணங்கள் உன்னுடைய உள்ளத்தில் உதிப்பனவாகில் நீ நிச்சயமாகவே உயர்

நிலையை நோக்கி முன்னேற்றம் அடைகின்றாய் என்பதை நான் அறிந்து கொள்வேன்.

சிஷ் : ஐய, அனைவரும் மோக்ஷமடைந்தாலன்றி தனித்தொருவன் மோக்ஷமடைதல் முடியாதென்று சொல்வது மிகவும் அபாரமான தீர்ப்பு! இத்தகைய அற்புதமான கொள்கையை நான் முன்பு கேட்டதில்லை.

சுவா : அத்தகைய கொள்கையை உடைய வேதாந்திகள் ஒரு வகுப்பார் இருக்கின்றனர். தனித்து அடைகின்ற முத்தி உண்மையான, பூரணமான முத்தியல்லவென்றும், அனைவரும் ஒன்றுகூடி அடைகின்ற முத்தியே உண்மையான முத்தியெனவும் அன்னோர் கூறுகின்றனர். அக்கொள்கையிலே பல நிறைவுகளையும் குறைவுகளையும் எடுத்துக் காட்டலாம்

சிஷ் : வேதாந்தத்தின்படி தனித்திருக்கின்ற இருக்கைநிலையே பந்தத்துக்கு மூலமாகும். ஆனந்த ஞானவடிவானது இச்சைகளினாலும் கருமப் பயன்களினாலும் எல்லையுட்பட்டுக் கட்டுண்ட நிலையாகக் காணப்படுகிறது. விவேகத்தினாலே, அங்ஙனம் ஏற்பட்ட எல்லையானது மறைந்துபோக, ஜீவன் எல்லாவகைக் குணங்களில் நின்றும் விடுபடுவான். அப்பொழுது உரை உணர்வு கடந்த ஞானவடிவாகிய ஆத்மனுக்குப் பந்தமேது? ஜீவன், உலகம் என்னும் எண்ணங்கள் யாருக்கு மாறா உண்மைகளாக நிலைபெற்றிருக்கின்றனவோ அன்னோர் அனைவர்க்கும் மோக்ஷம் சித்தித்தாலன்றி, தான் மோக்ஷத்தை அடைய முடியாதென எண்ணுதல் கூடும். ஆனால் மனமானது தன்னை எல்லையினுட்படுத்துகின்ற குணங்களில் நின்று விடுபட்டுப் பிரம்மத்திலே அமிழ்த்துமாயின் அங்ஙனம் அமிழ்ந்தப் பெற்றோருக்கு என்ன வேறுபாடு தோன்றும்? அவருடைய முத்திக்கு எதுவும் தடையாகாது.

சுவா : ஆம், நீ சொன்னது சரி; அநேக வேதாந்திகள் அந்தக் கொள்கையை உடையவர்கள், அதிலும்

குற்றமில்லை. அந்தக் கொள்கையின்படி தனித்து முத்தியடைவதற்குத் தடையில்லை. அனைத்துப் பிரபஞ்சத்தையும் தன்னுடன் கொண்டு முத்திக்கு எய்துவேன் என்று நினைக்கிறவனுடைய உள்ளம் எவ்வளவு பெரியது, எண்ணிப் பார்.

சிஷ்: ஐய, அது இருதயத்தினுடைய தைரியத்திற்கு அடையாளமாய் இருக்கலாம். ஆனால் சாஸ்திரங்கள் அதனை ஆதரிக்கவில்லை.

சுவாமிஜி தம்மை மறந்த நிலையிலிருந்தாராதலின், இந்தச் சொற்களுக்குச் செவிசாய்க்கவில்லை. சிறிது பொழுது கழித்துப் பின்வருமாறு சொல்லுவாராயினர்: "பகலும் இரவும் பிரம்மத்தை நினைத்துத் தியானிப்பாயாக; நிறைந்த ஏகாக்கிர சித்தத்தோடு தியானிப்பாயாக. விழித்திருக்கும் வேளையில் பிறருக்கு நன்மை வரக்கூடிய கைங்கரியம் ஏதாவது ஒன்றினைச் செய்; இயலாதாயின் 'ஜீவர்களுக்கும் உலகத்துக்கும் நலமுண்டாகுக; எல்லோருடைய சிந்தையும் பிரம்மத்தின் வழி செல்லுக' என்று நினைப்பாயாக; அத்தகைய இடைவிடாத எண்ணத்தினாலே உலகம் நன்மையை அடையும். செயலாயிருப்பினும், எண்ணமாயிருப்பினும் நலமாயிருப்பது இவ்வுலகிற் பயனற்றுப் போவதில்லை. உன்னுடைய எண்ணங்கள் அமெரிக்கா கண்டத்திலுள்ள ஒருவருடைய ஆத்மீக உணர்ச்சியை எழுப்பி விடுதல் கூடும்."

சிஷ்: ஐய, என்னுடைய உள்ளமானது உண்மையிலே ஒன்றுபட்டிருக்கும் வண்ணம் என்னை ஆசிர்வதித்தருளுதல் வேண்டும்.

சுவா: அப்படியே ஆகுக. உனக்குச் சிரத்தையிருக்குமாயின் அது நிச்சயமாகவே கைகூடும்.

(39)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ம் ஆண்டு.]

பேலூர்த் திருமடம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே, வைதீகர்கள் பலர் திருமடத்து நடவடிக்கைகளைப் பற்றி மிகவும் குறை கூறுவதுண்டு. இந்த விஷயத்தைச் சிஷ்யர் தெரிவித்த பொழுது சுவாமிஜி, "யானையானது கடைவீதி வழியாக நடந்து செல்லுகிறது. ஆயிரம் நாய்கள் அதன் பின்னர் குரைக்கின்றன. அவ்வண்ணமே லௌகிகர்கள் பழிவார்த்தை கூறும்பொழுதும் சாதுக்கள் அவர்கள்மேல் கோபம் வைப்பதில்லை" எனத் துளசிதாசர் கூறிய வாசகத்தை எடுத்துச் சொல்லுவார். "நெருக்கம் இன்றி நல் எண்ணம் ஒன்றுவது ஜனசமூகத்தினுடைய இருதயத்தினுள்ளே புகுந்ததில்லை" என்பார். "கருமப் பலனிலே நாட்டம் வைக்காது வேலையைச் செய்வீர்களாக. ஒரு நாளைக்கு நிச்சயமாகவே பலனைப் பெறுவீர்கள்" என்று சொல்லி யாவரையும் உற்சாகப்படுத்துவார். "என் மைந்தனே, நன்மை புரிபவன் ஒருநாளும் சோகம் அடைய மாட்டான்" என்னும் கீதாவாக்கியத்தைச் சுவாமிஜி இடை இடையே சொல்லுவார்.

1901-ஆம் ஆண்டு, மே மாசத்திலோ, ஜூன் மாசத்திலோ, சுவாமிஜி சிஷ்யரைத் திருமடத்தில் கண்டு, "ரகுநந்தனருடைய அஷ்டவிம்ஸதி தத்வம் என்னும் நூலின் ஒரு பிரதியை விரைவாகக் கொண்டு வந்து கொடு" என்று பணித்தருளினர்.

சிஷ்: ஆம் ஐய, இக்காலத்துக் கல்வியாளர் குருட்டு நம்பிக்கைக் குப்பை என்று நினைக்கின்ற ரகுநந்தன ஸ்மிருதியை என்ன செய்யப் போகின்றீர்கள்?

சுவா: ஏன்? ரகுநந்தனர் தம்முடைய காலத்திலே மிகவும் அற்புதமான கல்விமானாய் இருந்தார். பழைய ஸ்மிருதிகளில் உள்ள இந்துக்களின் பழக்க வழக்கங்

களைத் தொகுத்து அக்காலத்துக்கு வேண்டிய வண்ணம் அமைத்து ஒரு நூலைச் செய்தார். வங்காளம் முழுவதும் அவருடைய விதிகளைப் பின்பற்றி நடக்கிறது. பிறந்த நாட்டொடக்கம் இறக்கும் வரையும் இந்துவினுடைய வாழ்க்கையை வகுத்துக் கூறுகிற அவருடைய சட்டங்களின் நெருக்கடியால் மக்கள் கூட்டம் மிகவும் நலிவடைந்து விட்டது. ஊணுறக்கம் முதலாக வாழ்க்கையிலுள்ள சாதாரண விஷயங்களையும் காத்திரமான விஷயங்களையும் சட்டங்களினுலே ஒழுங்குபடுத்த முயன்ருர். இக்காலத்தின் நிலை வேறுபட்டிருப்பதால் அத்தகைய சட்டங்கள் நிலைபெறவில்லை. எல்லாவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும்ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும் தன்னகத்தடக்கிய கரும காண்டமானது உருவத்தில் வேறுபடும். உபநிடதமாகிய ஞான காண்டமாத்திரமே வேறுபாடற்று நிலைத்திருப்பது, இன்றுவரை நிலைபெற்றுள்ளது. பாஷியக்காரர் மாத்திரம் அநேகர் இருந்திருக்கிருர்கள், அவ்வளவுதான்.

சிஷ் : ரகுநந்தனருடைய ஸ்மிருதியைக் கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் ?

சுவா : இம்முறை துர்க்கா பூஜை செய்ய வேண்டும் என்று எனக்குப் பெரிய விருப்பமிருக்கிறது. செலவுக்கு வேண்டிய பணம் வருமாயின் நான் மஹாமாயாவை வழிபடுவேன். ஆதலினுலே வழிபாட்டிற்குரிய கருமங்களைப் பற்றிய பாகங்களை வாசிக்க விரும்புகிறேன் அடுத்த ஞாயிற்றுக்கிழமை திருமடத்துக்கு வரும்பொழுது ஒரு பிரதியை எடுத்துக் கொண்டுவா.

சிஷ் : சரி ஐய.

அடுத்த சனிக்கிழமை சிஷ்யர் புத்தகப் பிரதியொன்று கொண்டு வந்தார். சுவாமிஜி அதனைச் சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டார். சிஷ்யரை ஒரு வாரங் கழித்துக் கண்டபொழுது அவரை நோக்கி, "நீ தந்த ரகுநந்தன ஸ்மிருதி நூலை நான் படித்து முடித்து

விட்டேன். கூடுமானால் உலக மாதாவின் பூஜையை நடைபெறச் செய்வேன்'' என்றார்.

துர்க்கா பூஜை உரிய காலத்திலே மிகுந்த சிறப்பாக நடைபெற்றது.

* * * *

இது நிகழ்ந்ததற்குப் பின்பு சுவாமிஜி காளி கட்டத்திலே காளித்தாயின் முன்னிலையிலே ஒரு ஹோமத்தை நடத்தினார். இதைக் குறித்துச் சிஷ்யருக்குச் சொல்லும் பொழுது பின்வருமாறு கூறுவாராயினார்: "காளி கட்டத்திலே விசாலமான கொள்கைகள் இருப்பதைக் கண்டு சந்தோஷமடைந்தேன். நான் மேலை நாட்டுக்குப் போய்த் திரும்பிய மனிதன் என்பதை அறிந்திருந்தும் கோயில் அதிகாரிகள் நான் கோவிலினுட் புகுவதனைச் சிறிதேனும் தடுத்துக் கூறவில்லை. என்னை மிகுந்த அன்பினோடு பரிசுத்த ஆலயத்தினுள்ளே அழைத்துச் சென்று மனப்பூர்வமாக நான் அன்னையை வழிபடும் வண்ணம் எனக்கு உதவி புரிந்தார்கள்."

(40)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம் 1902 ஆம் ஆண்டு]

இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆண்டு விழாக் கொண்டாட்டம். இதுவே சுவாமிஜி கடைசியாகக் கண்ட ஆண்டு விழா. சிஷ்யர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிய தோத்திர கீதம் ஒன்றை சுவாமிஜியினிடம் கொடுத்துவிட்டு, சுவாமிஜியினுடைய பாதங்களை மெல்லெனெ வருடிக் கொண்டிருந்தார். சுவாமிஜி கீதத்தை வாசிக்குமுன் சிஷ்யரை நோக்கி, "கால்கள் மிகவும் மென்னீர்மையாய் விட்டன; ஆதலால் கால்களை வருடுவது மிகவும் லேசாக இருக்கட்டும்'' என்றார்.

கீதத்தை வாசித்த பின்பு அது நன்றாய் எழுதப் பட்டிருக்கிறதென சுவாமிஜி சொன்னார்.

சுவாமிஜியினுடைய நோய் மிகவும் அதிகரித்து விட்டது; இதனைக் கண்டு சிஷ்யர் மனம் புண்ணுற்றார். சுவாமிஜி அவருடைய உள்ளெண்ணத்தை அறிந்து, "என்ன நினைக்கிறாய்? இந்த உடல் பிறந்தது; அது இறக்க வேண்டியதே; என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை உங்கள் உள்ளத்திலே புகுத்தி இருப்பேனாயின், என்னுடைய பிறவி வீண் போகவில்லை என நான் கொள்வேன்" என்றார்.

சிஷ்: நாங்கள் தேவரீருடைய கருணைக்குப் பாத்திரவாதிகளா? என்னுடைய தகுதியை நோக்காது தேவரீர் என்னை ஆசீர்வதித்தால் நான் பாக்யவான் என்று எண்ணுவேன்.

சுவா: எல்லாவற்றுக்கும் துறவு ஆதாரம் என்பதை ஞாபகத்தில் வைப்பாயாக. இந்த எண்ணம் ஒருவருடைய உள்ளத்தில் செல்லாவிட்டால் பிரம்மதேவனும் உலோக பாலகர் தாமும் முத்தியடையும் வலிமையற்றவர்களே.

சிஷ்: தேவரீருடைய திருவாயிலிருந்து இந்த வாக்கியத்தை ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் கேட்டேனாயினும் அதன் உண்மையை உணர்ந்து கொள்ளாது இருக்கிறேன் என்பது எனக்குப் பெருங்கவலையைத் தருகின்றது.

சுவா: துறவு வருதல் வேண்டும். ஆனால் உரிய காலத்திலே தான் வரும். **காலேன ஆத்மனி விந்ததி** "உரிய காலத்திலே ஒருவன் தன்னுள்ளே ஞானத்தை அடைவான்; பூர்வ வாழ்க்கையிலே உள்ள சில சம்ஸ்காரங்கள் அழிந்த பின்பு இருதயத்திலே துறவு முளைத்தெழுகின்றது."

சிறிதுநேரம் கழித்து சுவாமிஜி பின்னும் சொல்லுவார்: நீ வெளியே போய்ப் பெரிய கூட்டமாயிருக்கிற ஜனங்களைப் பார்க்க வேண்டிய தெதற்கு? எப்போதும் என்னோடு இருப்பாயாக. இன்று என்னை ஒருவரும் தொல்லைப்படுத்தாதபடி நிரஞ்சனருக்குக் கதவை மூடும்

படி சொல்லு. அதன் பின்பு சுவாமிஜிக்கும் சிஷ்யருக்கும் இடையே சம்பாஷணை நடந்தது.

சுவா : இனிமேல் இந்த ஆண்டு விழா வேறு வகையாகக் கொண்டாடப்பட்டால் நல்லதென நான் நினைக்கிறேன். இந்தக் கொண்டாட்டம் ஒரு தினத்துக்குப் பதிலாக நான்கு ஐந்து நாட்களுக்கு நடக்கவேண்டும். முதல் நாளிலே சாஸ்திரங்களைப் படிப்பதும் ஆராய்வதும்; இரண்டாம் நாளிலே வேத வேதாங்கங்களை வாதிப்பதும்; மூன்றாம் நாளிலே வினாக்கள் வினவுவதை வைத்துக் கொள்ளலாம்; நான்காம் நாள் பிரசங்கங்களுக்கென்று விடப்படலாம். கடைசி நாளில் இப்பொழுது இருக்கின்ற தன்மையதாகிய கொண்டாட்டம். துர்க்கா பூஜை நான்கு ஐந்து நாட்களுக்கு நடப்பதுபோல இதுவும் நடக்கலாம். விழாக் கொண்டாட்டத்தை இப்படிக் கொண்டாடினால் கடைசி நாள் ஒழிந்த மற்றைய நாட்களில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தரல்லாத மற்றவர்கள் வரக்கூடாமல் இருக்கலாம். ஆனால் காரியமில்லை. பலரும் கலந்த பெருங் கூட்டத்தினால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய போதனை மிகுதியும் பரவுகிறதென்று கருத வேண்டியதில்லை.

சிஷ் : ஐய, இவ்வெண்ணம் மிக அழகியது. அடுத்த முறை தேவரீருடைய திருவுள்ளக் குறிப்பின்படியே விழாக் கொண்டாட்டம் நடைபெறலாம்.

சுவா : என் மைந்தனே, நீங்கள் எல்லோரும் இவற்றை நடத்தி வைப்பீர்கள். இந்த விஷயங்களில் எனக்குக் கவற்சி இல்லை.

சிஷ் : இவ்வாண்டில் பல கீர்த்தனைக் கூட்டங்கள் வந்திருக்கின்றன.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் சுவாமிஜி எழுந்து நின்று சாளரத்தின் இரும்புக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே கூடி இருக்கும் பக்தர் கூட்டத்தினைப் பார்த்தார். சிறிது நேரம் கழித்து மீட்டும் இருந்து கொண்டார்.

சுவா: ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தெய்வ லீலையிலே நீங்கள் யாவரும் நடிக்கின்றீர்கள். சிறிது காலத்துக்குப் பின் எங்கள் பெயரை மாத்திரமல்ல, உங்கள் பெயரையும் ஜனங்கள் சொல்லுவார்கள் நீ எழுதிய இந்தக் கீதங்களைப் பிற்காலத்தில் வருகிற ஜனங்கள் ஞானத்தையும் அன்பையும் பெறுவது கருதி வாசிப்பார்கள். ஆத்ம ஞானம் பெறுவது வாழ்க்கையின் மேலான நோக்கம் என்பதை அறிந்து கொள்வாயாக. உலக குரவராகிய அவதார புருஷர்கள்மீது அன்பிருந்தால் காலத்திலே ஞானமானது வெளிப்பட்டுத் தோன்றும்

சிஷ்: ஐய, நான் அத்தகைய ஞானத்தை அடைவேனா?

சுவா: ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அநுக்கிரகத்தினாலே நீ தெய்வீக அன்பையும் ஞானத்தையும் அடைவாய். லௌகீக வாழ்க்கையிலே நீ அதிகமான நிறைவு காணமாட்டாய்.

சிஷ்: ஐய, தேவரீர் ஏழையேனுடைய உள்ளத்திலுள்ள பலவீனங்களை அழியாதொழிந்தால் எனக்காவதோர் கதியில்லை.

சுவா: என்ன அச்சம்! நீ இங்கு வந்து விட்டாய். ஆதலால் நீ விடுதலையை அடைவாய்.

சிஷ்: (மிகுந்த வணக்கத்தோடு) தேவரீர் ஏழையேனைக் காத்து ரக்ஷித்து இந்த வாழ்க்கையிற்றானே அஞ்ஞானத்திலிருந்து தூக்கி விடுதல் வேண்டும்.

சுவா: யார் யாரைக் காப்பாற்ற முடியும்? மூடி இருக்கின்ற திரைகள் சிலவற்றைக் குரு அகற்றிவிடலாம். இவை அகன்ற பின்பு ஆத்மன் தன்னுடைய சொந்த மகத்துவத்தோடு சூரியனைப்போலப் பிரகாசிக்கும்.

சிஷ்: அப்படியாயின் சமய சாஸ்திரங்களிலே அருள் குறிக்கப்பட்டிருக்கின்றதே, அது ஏன்?

சுவா: அருள் என்பது என்னையோவெனின், ஆத்மஞானம் அடைந்து கொண்டவன் பெரிய வலிமைக்கு ஒரு களஞ்சியமாகின்றான். அவனை நடுவாகக் கொண்டு ஒரு குறித்த பரப்புடைய வட்டமொன்று உண்டாகிறது. அந்த வட்டத்தினுள்ளே வந்தவர்கள் யாவராயினும், அன்னார் அந்தப் பெரியாருடைய எண்ணங்களினாலே நிறைவுற்றுப் புத்துயிர் பெறுகின்றார்கள். ஆதலினாலே அதிக சாதனையோடு கூடிய கஷ்டம் இன்றி அற்புதமாகிய ஆத்மீக வாழ்க்கையின் பயனை அநுபவிக்கிறார்கள். வேண்டுமானால் இதனை அருள் என்று சொல்லலாம்.

சிஷ்: இதைவிட அருள் வேறு இல்லையா?

சுவா: ஆம், உண்டு. ஓர் அவதார புருஷர் தோன்றும்பொழுது, அவருடைய உலக லீலையிலே அவருக்கு உதவி புரிய நித்திய சித்தராய் உள்ளோர் வந்து பிறக்கின்றனர். பத்து லக்ஷம் ஜீவர்களுக்கு இருளை அகற்றி இந்த வாழ்க்கையிற்றானே அவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கும் ஆற்றல் அவதார புருஷர்களுக்கு உண்டு. இது அருள் எனப்படும். அறிந்து கொண்டாயா?

சிஷ்: ஆம், ஐய. அவர்களைக் காணும் பாக்கியம் பெறாதவர்களுக்கு உய்யும் வழி என்ன?

சுவா: அவருடைய திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவதே அவர்களுக்கு வழியாகும். அவரை அழைப்பதனால் அநேகர் அவருடைய தரிசனத்தைப் பெறுகிறார்கள். நம்மைப்போன்ற மானிட உருவத்திலே அவரைக் கண்டு அவருடைய அருளைப் பெறலாம்.

சிஷ்: ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்வை நீத்த பின்பு அவருடைய தரிசனம் தேவரீருக்குக் கிடைத்ததுண்டா?

சுவா: அவர் உடலை விட்டபின்பு நான் காசிப் பூரிலே பவாஹாரி பாபாவோடு சிலகாலம் சேர்ந்திருந்தேன். அவருடைய ஆசிரமத்துக்கு அணிமையாக உள்ள

ஒரு பூஞ்சோலையிலே நான் வசித்தேன். அந்தப் பூஞ் சோலையில் பிசாசுகள் உண்டென்று ஜனங்கள் சொல் வதுண்டு. நானும் ஒருவகைப் பிசாசு என்பதை நீ அறி வாய் ஆதலினால் பிசாசுகளைப்பற்றி நான் அதிகம் பயப் படுவதில்லை அந்தப் பூஞ்சோலையிலே நிறைந்த பழங் களையுடைய அநேக எலுமிச்ச மரங்கள் இருந்தன. அக் காலத்திலே நான் வயிற்றுக் கழிச்சலினால் வருந்தினேன். கோதுமை அப்பம் தவிர வேறொருவகை உணவும் கொள்ளுவதில்லை சீரண சக்தியைப் பெருக்கிக்கொள் ளும்பொருட்டு ஏராளமான எலுமிச்சம்பழங்களை உட் கொள்ளுவேன். பவாஹாரி பாபாவோடு கலந்து அவ ரிடத்து மிகுந்த அன்பு வைத்தேன். அவரும் என் னிடத்து ஆழ்ந்த அன்புவைத்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண ரோடு பல ஆண்டுகள் உறைந்தும் பலமற்ற சரீரத்தைப் பலப்படுத்திக்கொள்ளும் வழியை நான் பயின்று கொள்ளவில்லையே என்று எண்ணினேன். பவாஹாரி பாபா ஹடயோக சாஸ்திரம் அறிந்தவரெனக் கேள்வி யுற்றேன். அவரிடமிருந்து ஹடயோக அப்பியாசங்களைப் பயின்று அவற்றின் மூலமாக உடலைப் பலப்படுத்த வேண்டும் என்று எண்ணினேன். நான் பிடிவாதக்காரன் என்பது உனக்குத் தெரியும். எதனை விரும்புகிறேனோ அதனைச் செய்தே தீருவேன். நான் தீக்ஷை பெற வேண்டுமென்று குறித்த தினத்திற்கு முதலிரவு கட்டி லிற் படுத்துக்கொண்டு ஆலோசனை செய்துகொண்டிருந் தேன். அந்தப் பொழுதில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவுருவம் என்னை உற்று நோக்கிய வண்ணமாகக் கவலையுற்ற தோற்றத்தோடு எனது வலப்புறத்திலே நிற்கக் கண்டேன். நான் என்னை அவருக்கு அர்ப்பணம் செய்திருந்தேன். வேறொருவரைக் குருவாகக் கொள்ளப் போகிறேன் என்னும் எண்ணத்தினால் மிகவும் நாணுற்று அவரைப் பார்த்த வண்ணமாக இருந்தேன். இரண்டு மூன்றுமணி நேரங்கள் கழிந்தன. என்னுடைய வாக்கிலிருந்து ஒரு சொல்லும் வெளிவரவில்லை. அப் பொழுது அவர் சடுதியாக மறைந்துவிட்டார். ஸ்ரீ ராம

கிருஷ்ணரை அன்றிரவு கண்டதினால் என்னுடைய உள்ளம் கரைவுற்றது. பவாஹாரி பாபாவினிடத்திலிருந்து அன்றையதினம் தீக்ஷை பெறவேண்டும் என்னும் எண்ணத்தைத் தாழ்த்தி வைத்தேன். இரண்டொரு தினம் கழித்து மீட்டும் அவ்வெண்ணம் உதித்தது; முன்னர்ப் போலப் பின்னும் ஓரிரவு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவுருவத்தைக் கண்டேன். அவ்வண்ணமே அடுத்தடுத்து பல இரவு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தரிசனம் எனக்குக் கிடைத்தது. தீக்ஷையைப்பற்றித் தீர்மானிக்கும் பொழுதெல்லாம் அந்தத் தரிசனம் தோன்றியபடியால் அத்தகைய தீர்மானத்தினால் தீமை எய்துமேயன்றி நன்மை எய்தாது என அறிந்து தீக்ஷையைப்பற்றிய எண்ணத்தை முற்றிலும் விட்டுவிட்டேன்.

சிறிது நேரம் கழித்து அவர் சிஷ்யரை நோக்கி மீட்டும் சொல்லுவார்: "ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்டவர்கள் உண்மையிலே பாக்கியவான்கள். அதனாலே அவர்களுடைய குடும்பமும் பிறப்பும் பரிசுத்தம் அடைந்துவிட்டன. நீங்கள் எல்லோரும் அந்தத் தரிசனத்தைப் பெறுவீர்கள். நீங்கள் இங்கு வந்தமையினாலே அவருக்கு மிகவும் அணித்தா யிருக்கிறீர்கள் உலகத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணராக வந்தவர் யாரென்பதை ஒருவரும் அறிந்துகொள்ளவில்லை அவருக்கு மிக அணுகிய தொண்டர்களும் இந்த ரகசியத்தின் உண்மையை அறியவில்லை. ஒரு சிலர் மாத்திரம் கொஞ்சம் அறிந்திருக்கிறார்கள். பின்பு எல்லாரும் அறிவார்கள்."

சம்பாஷணை நடந்துகொண்டிருக்கும் பொழுது சுவாமி நிரஞ்சனாநந்தர் வந்து கதவிலே தட்டினார். யார் வந்திருக்கிறார்களென சிஷ்யர் வினவ, சகோதரி நிவேதிதாவும், சில ஆங்கிலேயப் பெண்மணிகளும் வந்திருப்பதாகச் சுவாமி நிரஞ்சனாநந்தர் சொன்னார். அவர்கள் உள்ளே வந்து தளத்திலே உட்கார்ந்து சுவாமிஜியினுடைய சுகத்தைப்பற்றி விசாரித்தார்கள். இன்னும் சில சொற்கள் உரையாடிவிட்டுப் போய்விட்டார்கள்.

சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "பார்த்தாயா, அவர்கள் எவ்வளவு செம்மை உடையவர்களாய் இருக்கிறார்கள்; வங்காளிகளோவென்றால் நான் நோயுற்றிருப்பதை நோக்காது அரைமணிநேரம் நின்று என்னைக் கதை பேசும்படி செய்திருப்பார்கள்" என்றார்.

இப்பொழுது இரண்டரை மணி இருக்கும். வெளியே ஜனக்கூட்டம் நிறைந்திருந்தது. சுவாமி சிஷ்யருடைய மனத்தை அறிந்து, "வெளியே போய்ச் சுற்றிப் பார்த்துக்கொண்டு சீக்கிரம் திரும்பிவா" என்றார்.

(41)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டு.]

கிழக்கு வங்காளத்திலிருந்து திரும்பிவந்த பிறகு சுவாமிஜி திருமடத்திலேயே இருந்து சிறு குழந்தையைப் போன்ற வாழ்க்கையை நடத்தி வந்தார். ஒவ்வோராண்டிலும் சந்தால் கூலிக்காரர்கள் சிலர் மடத்தில் வந்து வேலை செய்வது வழக்கம். சுவாமிஜி அன்பினோடு அவர்களுடைய இன்ப துன்பங்களைப்பற்றி அவர்கள் சொல்லுகிறபடி கதைகளைக் கேட்டு நகைமொழியாக வார்த்தையாடிக் கொண்டிருப்பார். ஒருநாள் கல்கத்தாவிலிருந்து பேர்போன பெருமக்கள் சிலர் சுவாமிஜியைக் காணும் பொருட்டுத் திருமடத்திற்கு வந்தார்கள். சுவாமிஜி அப்பொழுது சந்தால்களோடு ஆர்வமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தார். பெருமக்களுடைய வரவைப் பற்றி ஓரிருவர் போய்த் தெரிவித்தபொழுது சுவாமிஜி அவரை நோக்கி, "நான் இப்பொழுது வரமுடியாது, இந்த மக்களோடு சந்தோஷமாக இருக்கின்றேன்" என்றார். ஏழைகளாகிய சந்தால்களை விட்டுப்போகப் பிரியப்படாதபடியால் சுவாமிஜி அன்றுவந்த பெருமக்களைக் காணவில்லை.

சந்தால்களில் ஒருவனுக்கு "கேஷ்டா" என்று பெயர். சுவாமிஜி கேஷ்டாவின்மீது மிகுந்த அன்பு

பாராட்டுவார். சுவாமிஜி பேசவரும்பொழுது கேஷ்டா அவரை நோக்கி, "ஓ, என் சுவாமியே, நாங்கள் வேலை செய்யும்பொழுது எங்களிடம் வர வேண்டாம். தேவரீரோடு பேசிக்கொண்டிருப்பதனால் நாங்கள் வேலை செய்யாது நின்று விடுகிறோம்; மேற்பார்வை இடுகின்ற சுவாமிஜி பின்பு எங்களை ஏசுவார்" என்று சொல்லுவான். இந்த வார்த்தைகளைக் கேட்டு சுவாமிஜி மனங்கசிந்து, "இல்லை, இல்லை, அவர் ஒன்றும் சொல்லமாட்டார்; உங்களுடைய ஊரைப்பற்றி எனக்குக் கொஞ்சம் சொல்லு" என்று கூறி அவர்களுடைய லௌகிக விஷயங்களைப் பற்றி விசாரிப்பார்.

ஒருநாள் சுவாமிஜி கேஷ்டாவை நோக்கி, "நல்லது ஒரு தினம் நீ இங்குச் சாப்பிட வேண்டும்" என்றார். அதற்குக் கேஷ்டா, "நீங்கள் தொட்ட உணவை நாங்கள் சாப்பிடமாட்டோம்; நீங்கள் தருகிற உணவிலே உப்புப் போடப்பட்டிருந்தால் நாங்கள் அதனைச் சாப்பிடுவதனால் எங்களுடைய ஜாதியை இழந்துவிடுவோம்" என்றான். அதற்குச் சுவாமிஜி "நீங்கள் ஏன் உப்பு உண்ணவேண்டும், உப்பில்லாமல் கறி சமைத்து வைப்போம்; உண்ணுவீர்களா?" என்றார். கேஷ்டா சம்மதித்தான். சுவாமிஜியினுடைய கட்டளைப்படி ரொட்டி, கறி, இனிப்புத்தின்பண்டங்கள், தயிர் முதலியன வெல்லாம் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தன. சந்தால்களைத் தம்மோடு உடனிருந்து உண்ணும்படி சுவாமிஜி ஒழுங்கு செய்திருந்தார். உண்ணும்பொழுது கேஷ்டா அவரை நோக்கி, "இந்த அருமையான தின்பண்டத்தை எங்கிருந்து பெற்றீர்கள்? நாங்கள் ஒருபொழுதும் இந்த மாதிரி உண்டதில்லை" என்றான். சுவாமிஜி அவர்களுக்குத் திருப்தியாக உணவளித்து, "நீங்கள் எல்லாம் நாராயணர்கள், ஆண்டவனுடைய தோற்றம்; இன்று நான் நாராயணனுக்கு உணவளித்தேன்" என்றார். சுவாமிஜி சொல்லிய "தரித்திர நாராயண" சேவையைத் தாமே ஒரு தினம் செய்துமுடித்தார்.

உணவு முடிந்த பிறகு சந்தால்கள் இளைப்பாறச் சென்றனர். சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "உண்மையிலே அவர்களைத் தெய்வ வடிவங்களாக நான் கண்டேன். மாசற்ற நெஞ்சமும், வஞ்சகங் கலவாத அன்பும் அவர்களிடத்து இருக்கக் கண்டது போல, நான் பிறிதெவ்விடத்தும் காணவில்லை" என்றார். பின்பு மடத்துச் சந்நியாசிகளை நோக்கிப் பின்வருமாறு கூறுவராயினர்: "இந்த ஜனங்கள் எவ்வளவு மாசற்ற நெஞ்சுடையவர்களாயிருக்கிறார்கள்! அவர்களுடைய துன்பத்தைச் சிறிது குறைக்கக்கூடாதா? இல்லாவிட்டால் நீங்கள் காஷாயந் தரித்ததனால் வந்த நன்மை என்ன? பிறருடைய நன்மைக்காக எல்லாவற்றையும் தியாகம் பண்ணுவதே உண்மைச் சந்நியாசம். இவர்கள் தமது வாழ்நாளில் நல்ல உணவு முதலியவற்றை ஒருநாளும் அநுபவித்ததில்லை. இந்த மடத்தையும் நமக்கென்றிருக்கும் பிறவற்றையும் விற்று அந்தப் பொருளை ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்னும் விருப்பம் எனக்குச் சிலவேளை உண்டாகிறது. நாம் வசிப்பதற்கு மரநிழல் உண்டு. ஐயோ! இந்த நாட்டுமக்கள் உண்ணுவதற்கு ஒன்றுமில்லாதிருக்கும்பொழுது நாம் உணவை வாயிலிடுவதற்கு எவ்வாறு மனம் வருகின்றது? நான் மேலை நாடுகளில் இருந்தபொழுது, உலகமாதாவை நோக்கி, 'அன்னாய்! இங்குள்ள மக்கள் மலர் மெத்தையிலே சயனிக்கிறார்கள். எல்லா வகையான இனிய பண்டங்களையும் உண்ணுகிறார்கள். அவர்கள் அநுபவியாதது ஒன்றுமில்லை. என்னுடைய நாட்டுமக்கள் பட்டினியால் சாகிறார்கள். தாயே! இதை மாற்றுவதற்கு ஒரு வழியில்லையா!' என்று வேண்டிக்கொண்டேன். நமது நாட்டுமக்களுக்கு உணவளிப்பதற்கு ஒரு வழி காணலாம் என்னும் எண்ணம் நான் மேல்நாட்டுக்குச் சமய போதனை செய்வதற்குச் செல்லும்படி என்னை ஏவிய காரணங்களுள் ஒன்று ஆகும்.

"நமது நாட்டு ஏழைமக்கள் உணவின்றிப் பட்டினியாயிருப்பதைக் காணும்பொழுது பூஜை முதலிய கிரியை

களையும், கல்வியையும் எடுத்தெறிந்துவிட்டு, கிராமம் கிராமமாகச்சென்று சாதனையினாலும், ஐம்புலன் அடக்கத்தினால் வந்த ஆற்றலினாலும் பணக்காரருடைய மனத்தைத் திருப்பி, பணம் திரட்டி, ஏழைகளுக்குத் தொண்டுபுரிவதில் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு வருகிறது.

" ஐயோ! இந்நாட்டிலுள்ள ஏழைமக்களைப்பற்றி நினைப்பார் யாருமிலர். அவர்கள் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள். இந்த ஏழைமக்களுடைய தொழிலினாலே உணவு உண்டாகிறது. சக்கிலியரும் கூலிக்காரரும் ஆகிய இந்த ஏழை ஜனங்கள் ஒரு நாளைக்கு வேலை நிறுத்துவார்களானால் நகரத்தில் வசிப்போர் திகிலடைவார். ஆனால் இவர்களுக்கு இரங்குவோர் இல்லை. துன்பம் வந்துற்றபோது ஆறுதல் சொல்வோர் இல்லை. இந்துக்களுடைய அநுதாபம் இன்மையால் சென்னையிலுள்ள ஆயிரக் கணக்கான பறையர்கள் கிறிஸ்தவர்களாகின்றார்கள். இது பசிக் கொடுமையினால் மாத்திரம் ஏற்பட்டதல்ல; நம்முடைய உள்ளத்தில் அநுதாபமின்மையால் ஏற்பட்டது. நாம் இரவும் பகலும், 'எங்களைத் தீண்டாதீர்கள், தீண்டாதீர்கள்' என்று கூறிக் கொண்டிருக்கிறோம். இந்த நாட்டிலே இரக்கமில்லையா? மன அன்பு இல்லையா? தீண்டாமை முதலிய வழக்கங்களை உதைத்துத் தள்ளுங்கள். தீண்டாமை முதலிய கட்டுக்களை உடைத்தெறிந்துவிட்டு உடனே வெளிச் சென்று, 'வறியவர்களே, துன்புற்றவர்களே, கவலையால் நைந்தவர்களே, தாழ்த்தப்பட்டவர்களே, எல்லாரும் வாருங்கள்!' என்று கூறி ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நாமத்தினாலே அனைவரையும் ஒன்று கூட்டவேண்டும் என்னும் எண்ணம் இடை இடையே என்னுள்ளத் தெழுகின்றது இத்தகையோர் விழித்தெழுந்தாலன்றிப் பாரதமாதா நித்திரையில் நின்று எழமாட்டாள். இன்னோருடைய உணவுக்கும் உடைக்கும் ஏற்பாடு செய்

யாது இருக்கிறோம்—பின்னர் நாம் அவர்களுக்குச் செய்ததென்ன? ஐயோ! லௌகிக விஷயங்களைப்பற்றி அவர்கள் ஒன்றும் அறியார்கள்; இரவு பகலாக வேலை செய்தும், உணவு உடையைத் தேடிக்கொள்ள மாட்டாதவர்களாயிருக்கிறார்கள் அவர்களுடைய கண்களைத் திறப்போமாக—என்னிடத்தும், அவர்களிடத்தும், எல்லாப் பிராணிகளிடத்தும் ஒரே பிரம்மமே வியாபித்திருக்கிற தென்பதை நான் பட்டப் பகல் போலத் தெளிவாகக் காண்கிறேன். ஒரே மஹா சக்தி எல்லாரிடத்திலும் வசிக்கின்றாள். தோற்றத்தளவிலே தான் வேறுபாடு. உடல் முழுவதிலும் உதிரம் செறிந்து ஓட வேண்டும். அப்படி இல்லாமல் எக்காலத்திலாவது எந்தத் தேசமாவது உயர்வடைந்த துண்டா? ஓர் அவயவம் செயலற்றுப் போனால் ஏனைய அவயவங்களெல்லாம் பூரணமாயிருந்தாலும், அந்த உடலினாலே அதிகம் வேலை நடவாது—இதை நிச்சயமாக உணர்ந்துகொள்ளுங்கள்.''

சிஷ்: ஐய, இந்த நாட்டு மக்களிடையே பல்வேறு வகைப்பட்ட சமயக்கொள்கைகளும், எண்ணங்களும், பரவி இருக்கின்றன; அவர்களிடையே சமரசம் ஏற்படுத்துவது மிகவும் அரிதாகும்.

சுவா: (கோபத்தோடு) எந்த வேலையாவது நீ கடினம் என்று நினைப்பாயாயின், இங்கே வரவேண்டாம் ஆண்டவனுடைய அருளினாலே எல்லா மார்க்கங்களும் இலகுவாகின்றன. ஏழைகளுக்கும் துன்புற்றோர்க்கும், சாதி சமய வேறுபாடின்றித் தொண்டு செய்வது உன்னுடைய கடமை; பயனைப்பற்றி நீ நினைக்கவேண்டுவதில்லை. இடையீடின்றி வேலை செய்வது உனது கடமை; மற்றவை எல்லாம் தாமாக வந்தெய்துவன. கட்டுவதேயன்றி அழித்துவிடுவது எனது முறையல்ல. உலக சரித்திரத்தைப் படித்துப் பார். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கால எல்லையிலே ஒரு.பெரியவர் நடுநாயகமாக இருக்கக் காண்

பாய். அவருடைய கொள்கைகளினாலே புத்துயிர் பெற்று நூற்றுக்கணக்கான ஜனங்கள் உலகிற்கு நன்மை செய்திருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் அறிவுள்ள வாலிபர்கள்; நெடுநாளாக இவ்விடத்துக்கு வருகிறீர்கள், என்ன செய்திருக்கிறீர்கள்?—சொல்லுவாயாக. இந்த ஒரு சீவியத்தையாவது பிறருடைய தொண்டுக்காகக் கொடுத்தல் கூடாதா? இனி வருகின்ற சீவியத்திலே வேதாந்த முதலிய தத்துவ சாஸ்திரங்களை வாசிக்கலாமே. இந்தச் சீவியத்தைப் பிறருடைய சேவைக்குக் கொடுப்பாயெனின், நீ இவ்விடம் வந்தது வீண்போகவில்லையென நான் அறிவேன்.

இந்த வார்த்தைகளைச் சொல்லி சுவாமிஜி ஆழ்ந்த யோசனையிலே மௌனமாயிருந்தார். சிறிது நேரம் கழித்துப் பின்னும் சொல்லுவார்: "எவ்வளவோ தவத்தின் பின் நான் இந்த ஓர் உண்மையை உணர்ந்தேன்—கடவுள் ஒவ்வொரு ஜீவனிடத்தும் வியாபகமாயிருக்கிறார்; அதைவிட வேறு கடவுள் இல்லை: ஜீவனுக்குச் சேவை செய்தவன் கடவுளுக்குச் சேவை செய்தவனாகிறான்" சிறிது தாமதித்துச் சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "நான் இன்று சொல்லியவற்றை இருதயத்திலேயே எழுதிவை, மறந்துவிடாதே" என்றார்.

(42)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டின் தொடக்கம்.]

சனிக்கிழமை, மாலைக் காலத்துக்குச் சிறிது முன்பாக சிஷ்யர் திருமடத்துக்கு வந்தார். இப்பொழுது திருமடத்திலே சமய சாதனைகள் மிகவும் கிரமமாகச் செய்யப்பட்டு வந்தன. எல்லாப் பிரம்மசாரிகளும் சந்நியாசிகளும் அதிகாலையில் எழுந்து ஜபம் தியானம் செய்யவேண்டுமென்று சுவாமிஜி கட்டளையிட்டிருந்தார். இந்நாட்களில் சுவாமிஜிக்கு நித்திரை மிகச்

சொற்பம். காலையிலே மூன்று மணிக்கு எழுந்துவிடுவார்.

சிஷ்யர் சுவாமிஜியை நமஸ்கரித்தபொழுது சுவாமிஜி அவரை நோக்கி, "பார்த்தனையா, இந்நாட்களில் எல்லோரும் சமயசாதனைகள் செய்கின்றார்கள்; காலையிலும் மாலையிலும் ஜபத்திலும் தியானத்திலும் ஒவ்வொருவரும் நீண்டபொழுது கழிக்கின்றனர்; இதோ பார், எல்லோரையும் நித்திரையில் நின்றெழுப்ப ஒரு மணி கட்டப்பட்டிருக்கிறது; சூரிய உதயத்திற்குமுன் யாவரும் எழுந்திருக்கவேண்டும்; காலையிலும் மாலையிலும் மனத்தில் சத்துவ எண்ணங்கள் நிறைந்திருக்கின்றன என்றும், அந்த வேளைகளில் ஊக்கத்தோடு தியானம் செய்யவேண்டுமென்றும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு" எனச் சொல்லினர்.

சுவாமிஜி மேலும் சொல்லுவார்; "ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்வில் நின்று அகன்றபின்னர் பாரநாகூர் மடத்திலே நாங்கள் அநேக சமய சாதனைகளைச் செய்தோம். மூன்று மணிக்கு எழுந்து முகத்தை மாத்திரம் கழுவிக்கொண்டோ, அல்லது ஸ்நானத்தை முடித்துக்கொண்டோ, பூஜை அறையினுட் சென்று ஜபத்திலும் தியானத்திலும் அமிழ்ந்து இருப்போம். அந்நாட்களில் எவ்வளவு வைராக்கியத்தோடு கூடியிருந்தோம்! உலகம் இருந்ததா இல்லையா என்ற எண்ணந்தானும் எங்களுக்கு இருக்கவில்லை, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வழிபாட்டுக்கும் சேவைக்கும் வேண்டியவற்றைச் செய்வதில் இராமகிருஷ்ணானந்தர் இரவும் பகலும் ஓய்வின்றி முயற்சிப்பார். வீட்டு எசமாட்டி குடும்பத் தொழில் செய்வதுபோலவே, இவர் மடத்துக்கு வேண்டுவதைச் செய்வார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வழிபாட்டுக்கு வேண்டிய பொருள்களை இரந்தாவது தேடிவைப்பார். காலை தொடக்கம் மாலை நான்கு ஐந்து மணிவரையும் ஜபமும் தியானமும் நடந்த நாட்கள் உண்டு. இராமகிருஷ்ணாநந்தர்

உணவை ஆயத்தம் செய்து வைத்துக்கொண்டு எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்து, இறுதியிலே, தியானித்துக்கொண்டிருக்கிற எங்களை வலிதிற் கையைப் பற்றி இழுப்பார். எவ்வளவு அற்புதமான நிலைகலங்காத பக்தியை அவரிடத்தில் யான் கண்டேன்!"

சிஷ்: ஐய, அந்நாட்களில் மடத்துக்கு வேண்டிய செலவுகளை எவ்வாறு நடத்தினீர்கள்?

சுவா: இது என்ன கேள்வி! நாங்கள் சாதுக்கள். பிக்ஷை எடுப்பதினாலும் பிறவற்றாலும் சேருகின்ற பணத்தைக்கொண்டு மடத்துச் செலவுகளை நடத்தினோம். சுரேஷ் பாபுவும், பலராம் பாபுவும் இப்பொழுது இல்லை; உயிரோடு இருந்தால் இந்த மடத்தைக் கண்டு அளவு கடந்து சந்தோஷப்படுவார்கள். சுரேஷ் பாபுவினுடைய பெயரினைக் கேள்விப்பட்டிருப்பாய். ஒரு வழியாகப் பார்த்தால் இந்த மடத்தை நிறுவியவர் அவர் என்று சொல்லலாம். பாரநாகூர் மடத்துக்கு உரிய செலவுகளைத் தாமே பொறுத்துக்கொள்வார். அந்த நாட்களிலே சுரேஷ்மித்திரர்தான் எங்களைப்பற்றி அதிகமாக நினைத்தவர். அவருடைய அன்புக்கும் ஊக்கத்துக்கும் ஒப்பில்லை.

சிஷ்: ஐய, அவருடைய மரணப் படுக்கையிலே தேவரீர் அவரை இடையிடையே சென்று பார்க்கவில்லை என்பதாக நான் கேள்விப்பட்டேன்.

சுவா: எங்களை (அவரது சுற்றத்தார்) விட்டிருந்தால் நாங்கள் பார்த்திருப்போம். நல்லது, அது நெடுங்கதை. லௌகிகப் புத்தியுள்ள மக்களிடையே உற்றார் உறவினர் என்பவர்களுக்கு நீ வாழ்ந்தாலும் சரியே இறந்தாலும் சரியே; இதை நிச்சயமாக அறிந்துகொள். கொஞ்சம் பொருள் விட்டுப் போவதாயின், உன்னுடைய சீவிய காலத்திலேயே அதைப்பற்றி உன் வீட்டில் சண்டை நடக்கக் காண்பாய். மரணப் படுக்கையிலே உன்னுடைய மனைவி மக்கள் தாமும், வேறு யார்

தாமும், உனக்கு ஆறுதல் சொல்ல வரமாட்டார். இது தான் உலகப் போக்கு.

மடத்தினுடைய பூர்வ நிலைமையைப்பற்றி சுவாமிஜி பின்னும் சொல்லுவார் : "பொருள் இன்மையால் மடத்தையே முற்றாக விட்டுவிடலாம் என்று நான் சில பொழுது நினைத்ததுண்டு. இராமகிருஷ்ணானந்தர் இந்தப் பேச்சினை ஒருபொழுதும் ஏற்றுக்கொண்டதில்லை. இராமகிருஷ்ணாநந்தரே இந்த மடத்துக்கு நடுநாயகம் என்பதை அறிந்துகொள்ளுவாயாக மடத்திலே ஒரு அரிசிதானும் இல்லாத நாட்கள் பலவிருந்தன ; இரந்து கொஞ்சம் அரிசி கொண்டு வந்தாலும் அதனோடு உண்பதற்கு உப்பு இருப்பதில்லை. சிலபொழுது அரிசியும் உப்பும் இருந்தாலும் உண்ணவேண்டும் என்னும் எண்ணம் ஒருவருக்கும் இருப்பதில்லை. சமய சாதனையின் பிரவாகத்திலே நாங்கள் அள்ளுண்டு போய்க் கொண்டிருந்தோம் அவித்த பிம்பா இலைகளும் அரிசியும் உப்பும்—இவையே ஒரு மாசத்துக்கு உணவாக இருந்ததும் உண்டு. அவை மிக அற்புதமான நாட்கள்! அந்த நாட்களில் நாங்கள் செய்த தவம் மனிதரை மாத்திரமல்ல, வானுலக வாசிகளையும் வியப்புறச் செய்யும். உண்மையான ஊக்கமிருந்தால் தடைகள் எவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு மனத்திலே உள்ள சக்தி வெளிப்பட்டுத் தோன்றுமென்பதிற் பெரிய உண்மை இருக்கின்றது. இந்நாட்களில் வந்து சேருகிற சந்நியாசிகள் எங்களைப் போல அவ்வளவு கஷ்டத்தைச் சகிக்கமாட்டார்கள். ஆதலினால் கட்டில் முதலியவற்றையும் ஓர் அளவாகிய உணவுச் சுகத்தையும் ஏற்படுத்தி இருக்கிறேன். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்க்கை எங்கள் கண் முன்னிருந்தது. ஆதலினால், நாங்கள் கஷ்டங்கள் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. இந்தச் சந்ததியிலுள்ள இளைஞர்கள் அத்தகைய கஷ்டங்களைச் சகிக்கமாட்டார்கள். ஆதலினால் ஒருவகையாகிய இடம் உணவு வசதி முதலியவற்றைச் செய்து

வைத்திருக்கிறேன். வேண்டிய அளவு உணவும் உடையும் இருந்தால் இந்த இளைஞர்கள் சமய சாதனையிலே தங்கள் நேரத்தைக் கழித்து மக்களுடைய நலத்துக்காகத் தங்கள் உயிரைத் தானும் தியாகம் பண்ணப் பயின்று கொள்ளுவார்கள்.

சிஷ் : ஐய, வெளியிலுள்ள ஜனங்கள் இத்தகைய படுக்கைத் தளவாடம் முதலியவற்றிற்கு எதிராகப் பழிச்சொற் கூறுகிறார்கள்.

சுவா : அவர்கள் கூறட்டும். பரிகாசம் பண்ணும் பொழுதாவது இந்த மடத்தைப்பற்றி ஒருமுறை சிந்திப்பார்கள் எதிரிடையாகிய எண்ணத்தோடு இருந்து மோக்ஷத்தை அடைவது எளிதென்று கூறுகிறார்கள். "மனிதரைப் புழுக்களாக மதிக்க வேண்டும்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. பிறருடைய வீண் கருத்துக்களுக்குத் தகவாக நாங்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று நீ கருதுகிறாயா ? சீ! சீ!

சிஷ் : ஐய, சிலவேளை "எல்லாரும் நாராயணர், ஏழைகளும் வறியவர்களும் நாராயணர்" என்று கூறுகிறீர். பின்பு, "மனிதரைப் புழுக்களாக மதிக்கவேண்டும்" என்கிறீர். உண்மையில் தேவரீருடைய கருத்தென்ன ?

சுவா : நல்லது. எல்லாரும் நாராயணர் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆனால் எல்லா நாராயணர்களும் மடத்துத் தளவாடங்களைப்பற்றிக் குறை கூறவில்லை நான் மக்களுடைய நன்மைக்காக முயன்று வேலை செய்வேன் ; பிறர் கூறும் பழிச்சொல்லைப் பொருட்படுத்தமாட்டேன். அந்தக் கருத்திலேதான் மக்களைப் புழுக்களாக மதிக்கவேண்டும் என்னும் சொற்றொடர் வழங்கப்பட்டது. விடாப்பிடியுள்ள மனிதன் வேண்டியன எல்லாவற்றையும் பெறுவான். சிலருக்கு விரைவில் கிடைக்கும். வேறு சிலருக்குத் தாமதப்பட்டுக் கிடைக்கும். அவ்வளவுதான். ஒவ்வொருவனும் கருதிய நோக்கத்தை அடைய வேண்டியவனே. எங்களுக்கு அத்தகைய உறுதி இருக்கின்றபடியினால் எங்க

ளுக்குள்ள சொற்பத்தையாவது நாங்கள் பெற்றோம். நாங்கள் எவ்வளவு கஷ்டங்களைக் கடக்க வேண்டி இருந்தது! ஒருநாள் உணவின்மையால் தெரு ஓரத்திலுள்ள ஒரு வீட்டின் புறத்திண்ணையிலே மூர்ச்சையாகி விழுந்தேன். ஒரு பாட்டம் மழை பொழிந்த பிறகுதான் உணர்ச்சி பெற்றெழுந்தேன். ஒருநாள் பகல் முழுதும் உணவில்லாமல் கல்கத்தாவிலேயே பல வேலைகளும் செய்து திரிந்துவிட்டு இரவு பத்தோ பதினொரு மணிக்கோ மடத்துக்குத் திரும்பிவந்து உணவருந்தினேன். இப்படி ஒருமுறை இருமுறை அல்ல, பலமுறை நடந்திருக்கிறது.

இந்த வார்த்தைகளைச் சொல்லிய பின்னர், சுவாமிஜி சிறிதுநேரம் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தார். அவர் பின்னும் சொல்லுவார்: "உண்மைத் துறவினை அடைவது எளிதன்று; வாழ்க்கையிலே இதனைப் பார்க்கிலும் கடுமையான ஆசிரமம் பிறிது ஒன்று இல்லை, சிறிதேனும் தவறினால் மலையின் உச்சியிலிருந்து கீழே விழுந்தவன் போலத் துகளாகப் போய்விட வேண்டிவரும். ஒரு நாள் நான் ஆக்ராவிலிருந்து பிருந்தாவனத்துக்குக் கால்நடையாகப் போய்க்கொண்டிருந்தேன். என் கையில் ஒரு காசுமில்லை. பிருந்தாவனத்திலிருந்து இரண்டு மைல் தூர எல்லையில் வழியிலே புகைபிடித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மனிதனைக் கண்டேன் புகைக்க வேண்டுமென்னும் இச்சை எனக்கு உண்டாயது. நான் அம்மனிதனை நோக்கி, 'உன்னுடைய ஹுக்காவில் ஒரு முறை புகை இழுக்கவிடுவாயா?" என்றேன். அவன் பெரிதும் திகைப்புற்று, 'ஐயா, நான் ஒரு தோட்டி' என்றான். பழைய சம்ஸ்காரங்கள் வலியுற்றிருந்த காரணத்தினாலே நான் பின்வாங்கிப் புகை குடியாமலே மேலும் பிரயாணம் செய்யத் தொடங்கினேன். சிறிது தூரம் போயின் பின்னர், நான் ஜாதி குலம் உயர்வு முதலிய யாவற்றையும் துறந்த சந்நியாசியாயிருந்தும் அந்த மனிதன் தான் ஒரு தோட்டி என்று சொன்னவுடனே, அவன் தீண்டிய

ஹுக்காவைத் தொடாது பின்வாங்கியதைப் பற்றி நினைத்தேன். அந்த எண்ணம் என் இருதயத்தைக் கலக்கியது; அதுவரையில் அரைமைல் தூரம் நடந்து போய்விட்டேன். நான் திரும்பி வந்து அந்தத் தோட்டி அங்கிருக்கக் கண்டேன். நான் விரைந்து அவனை நோக்கி, 'என்னருமை நண்பனே, எனக்காக ஒருமுறை புகையிலை தயார்செய்' என்றேன். அவன் தடை கூறியும் நான் பொருட்படுத்தாது கட்டாயப் படுத்தினேன். அந்த மனிதன் அப்படியே செய்தான். நான் சந்தோஷமாக ஹுக்கா குடித்து விட்டுப் பிருந்தாவனத்துக்குப் போய்விட்டேன். துறவு பூண்ட ஒருவன் ஜாதி குல முதலிய வேறுபாட்டு எண்ணங்களை விட்டுவிடுதல் வேண்டும். தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். துறவு விரதத்தை நேராக அனுஷ்டிப்பது மிகக் கடினம். வாக்குக்கும் செயலுக்கும் சிறிதேனும் வேறுபாடிருத்தல் கூடாது?

சிஷ்: ஐய, தேவரீருடைய திருவாக்கில் நின்று இல்வாழ்க்கையைப் பற்றியும் துறவு வாழ்க்கையைப் பற்றியும் கேள்விப்பட்டேன். நாங்கள் அனுஷ்டிக்க வேண்டியது எது?

சுவா: நல்லது, எல்லாவற்றையும் செவிசாய்த்துக் கேள். உனக்கு எது நல்லதென்று காணப்படுகிறதோ அதைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொள்.

சுவாமிஜி கீழே இறங்கிவந்து சிஷ்யரோடு இந்த வாசகங்களைக் கூறி முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தார். இடையிடையே சிவ நாமத்தைச் சொல்லுவார். "அன்னையே, அமுத தாரையே, நீ எத்தனை விதமாக விளையாடுகின்றனை?" என உலக மாதாவுக்கு உரிய ஒரு பாடலை மெல்லெனப் பாடினார்.

(43)

[இடம் : பேலூர் திருமடம். காலம் : 1902-ஆம் ஆண்டு.]

சிஷ்யர் கடந்த இரவை சுவாமிஜியினுடைய அறையிலே கழித்தார். அதிகாலையிலே நான்கு மணிக்குச் சுவாமிஜி அவரை யெழுப்பி, "நீ இந்த மணியைக் கொண்டுபோய் அடித்துச் சாதுக்களையும் பிரம்மசாரிகளையும் நித்திரையிலிருந்து எழுப்புவாயாக" என்றார். கட்டளைப்படி சிஷ்யர் சாதுக்கள் நித்திரை செய்த இடத்திற்குப் போய் மணியை அடித்தார். அவர்களும் எழுந்து தியானம் செய்யும் பொருட்டுப் பூஜை அறைக்கு விரைந்து சென்றார்கள்.

சுவாமிஜியினுடைய சொற்படி சிஷ்யர் சுவாமி பிரம்மாநந்தருடைய படுக்கைக்குக் கிட்டேபோய் மணியை நன்றாக அடித்தார். அவரும், "இந்த *வங்காளி எங்களை மடத்திலிருக்க வொட்டாமல் தொல்லைப் படுத்துகிறான்" என்றார். இதைச் சிஷ்யர் வந்து சுவாமிஜிக்குச் சொல்ல, அவர் நன்றாகச் சிரித்து, "மிகவும் நல்லது" என்றார். சுவாமிஜியும் முகத்தைக் கழுவிச் சிஷ்யரையும் அழைத்துக் கொண்டு பூஜை அறைக்குச் சென்றார்.

சுவாமி பிரம்மாநந்தரும் ஏனைய சந்நியாசிகளும் தியானத்துக்காக ஆசனத்து அமர்ந்திருந்தார்கள். சுவாமிஜிக்காகத் தனியாக ஓர் ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. அவர் அதன்மேல் கிழக்கு நோக்கி இருந்து கொண்டு தம் முன்னிலையிலிருந்த மற்றோர் ஆசனத்தைக் காட்டி, சிஷ்யரைப் பார்த்து, "நீ அதன்மேலிருந்து தியானிப்பாயாக" என்றார். சுவாமிஜி ஆசனத்திலிருந்து சிறிது வேளைக்குள் பூரண சாந்தியை அடைந்து சித்திரப் பதுமையைப் போல அசைவற்

* கிழக்கு வங்காளத்திலிருந்து வந்தவராகிய சிஷ்யனைக் குறிக்கும் அன்போடு கூடிய நிந்தைமொழி.

றிருந்தார். அவருடைய மூச்சும் மிகப் பதமையாக வந்தது. எல்லோரும் தத்தமது ஆசனத்திலிருந்தனர்.

ஏறக்குறைய ஒன்றரைமணி நேரம் கழித்துச் சுவாமிஜி, 'சிவ, சிவ' என்று சொல்லிக்கொண்டு தியானத்திலிருந்து எழுந்தார். அவரது கண்கள் சிவந்திருந்தன. தோற்றம் சாந்தியோடு ஆறுதல் அடைந்திருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய முன்னிலையிலே நமஸ்கரித்து எழுந்து மேன்மாடியிலிருந்து கீழிறங்கி மடத்து முற்றத்திலே உலாவுவராயினர். சிறிது பொழுது கழித்துச் சிஷ்யரை நோக்கிப் பின்வருமாறு சொல்லுவார். "இந்நாட்களிலே சாதுக்கள் தியான முதலியவற்றை அப்பியசிப்பதைப் பார்த்தாயா? தியானம் ஆழ்ந்திருக்கும் பொழுது ஒருவன் அற்புதமாகிய பொருள்களைக் காணுகின்றான். பாரநாகூர் மடத்திலே தியானிக்கும்பொழுது ஒருநாள் இடைபிங்கலையாகிய நாடிகளைக் கண்டேன். சிறிது முயன்றால் ஒருவன் அவற்றைக் காணுதல் கூடும். சுழுமுனையின் தரிசனம் பெற்றால் ஒருவன் தான் விரும்பியதைக் காணலாம். குருவினிடத்திலே மாறாத பக்தி இருந்தால் ஜபம் தியானம் முதலிய சமயசாதனைகள் மிகவும் எளிதாகக் கைகூடுகின்றன. ஒருவன் அவற்றைப் பெறும்பொருட்டு முயலவேண்டுவதில்லை. குருவே பிரம்மம், குருவே விஷ்ணு, குருவே பரமசிவன்".

சிஷ்யர் சுவாமிஜிக்காகச் சிறிது புகையிலை ஆயத்தப் படுத்திக் கொண்டுவர, சுவாமிஜி புகையை இழுத்துக்கொண்டு பின்வருமாறு சொல்லுவார்: "உள்ளே சிங்கமிருக்கிறது—நித்திய சுத்தமாய், சுயம்பிரகாசமாய், அமலமாய் விளங்குகின்றது ஆத்மன். தியானத்தினாலும் ஏகாக்கிர சித்தத்தினாலும் ஒருவன் ஆத்மனைத் தரிசித்தால், இந்த மாயை உலகம் மறைந்துபோகிறது. அவன் எங்கும் சமுகமாயிருக்கிறான்; ஒருவன் எவ்வளவுக்கு அப்பியசிக்கிறானோ அவ்வளவு விரைவாய் (அடங்கி இருக்கிற) குண்டலினி சக்தி அவனுள்ளே

விழித்தெழும். இந்தச் சக்தி சிரத்தினை அடையக் காட்சியின் மறைவுகள் நீங்கி விடுகின்றன. அவன் ஆத்மனைக் காண்கின்றான்.

சிஷ்: ஐய, இவற்றைப்பற்றி நான் சாஸ்திரங்களில் வாசித்திருக்கிறேன். ஆனால் ஒன்றினையும் அனுபவத்தில் காணவில்லை.

சுவா. காலேனாத்மனி விந்ததி: "காலகதியிலே அது கட்டாயம் வரும்" சிலர் இதனை முந்திப் பெறுகிறார்கள்; ஆனால் வேறு சிலர் சற்றுப்பிந்திப் பெறுகிறார்கள். ஒருபொழுதும் விடுகிறதில்லை என்னும் தீர்மானத்தோடு இருக்க வேண்டும். இதுவே உண்மை ஆண்மை இடையீடில்லாத தைலதாரை போல மனத்தை ஒரு பொருளிலே பதித்து வைக்க வேண்டும். சாதாரண மனிதருடைய மனம் பல்வேறு வகைப்பட்ட பொருள்களிலே சிதறுண்டு கிடக்கின்றது. தியான காலத்திலும் ஆரம்பத்திலே மனம் அலைதல் கூடும். மனதிலே எந்த எண்ணம் எழுந்தாலும் சரி, நீ ஆறுதலாக இருந்து எவ்வகையாகிய எண்ணங்கள் வருகின்றன என்று விழிப்போடு நோக்கவேண்டும். தொடர்ந்து இம்முறையாக நோக்குவதனால் மனம் சாந்தமடைகின்றது; எண்ணமாகிய அலைகள் அதனிடத்து எழுவதில்லை. இந்த அலைகள் மனத்தின் எண்ணக் கிரியைகளுக்கு அடையாளமாவன. நீ முன்பு எந்த விஷயங்களைப் பற்றி ஊன்றி ஆலோசித்தாயோ அவை உன் மனத்தின் ஊற்றாக மாறிக் கிடக்கின்றன. தியான காலத்தில் மேல் எழுகின்றன. இவற்றின் எழுச்சி தியான காலத்திலே உன்னுடைய மனமானது மேலும் மேலும் ஏகாக்கிர நிலையை அடைகிறதென்பதற்கு அறிகுறியாகும். மனமாவது ஒரே வகையாகிய எண்ணங்களைத் தன்னகத்துக் கொண்டு ஒடுங்கி நிற்பதை ஸவிகல்ப சமாதி என்கின்றோம். ஆனால் இந்த மனமானது செயல்களினின்று விடுபட்டு அகண்ட ஞானத்தின் உருவாகிய ஆத்மனோடு ஒன்

றுகும்பொழுது தனக்குத் தானே ஆதாரமாகின்றது. இதுவே நிர்விகல்ப சமாதி எனப்படுவது. இவ்விரு வகைச் சமாதிகளையும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே நாங்கள் பல முறையும் கண்டதுண்டு இவற்றை அடைவதற்கு அவர் ஒருவகையாகவும் முயலவேண்டி இருக்கவில்லை. அவை தாமாகவே அவருக்கு வந்தன. அது அற்புதமான நிகழ்ச்சி அவரைக் கண்டமையாற் றான் இந்த விஷயங்களை நாங்கள் சரியாக அறிந்தோம். ஒவ்வொரு நாளும் தனித்திருந்து, தியானம் பண்ணு. அப்பொழுது ஒவ்வொன்றும் தானாகவே திறக்கும். ஞானத்தின் உருவமாகிய உலக மாதா உள்ளே நித்திரை செய்கிறாள். ஆதலினால் நீ இதை அறிந்து கொள்ளவில்லை. அவள் குண்டலினி சக்தி. தியானம் செய்யுமுன்பு, நரம்புகளைச் சுத்திகரிக்கும்பொழுது, மூலாதாரத்திலுள்ள குண்டலினியிலே மனத்தினால் உரக்கத் தாக்கி, 'அம்மா, எழுந்திரு, எழுந்திரு' என்று சொல்ல வேண்டும். இவற்றை எல்லாம் சாவதானமாக அப்பியசிக்க வேண்டும். தியான காலத்திலே இச்சையோடு கூடிய மனத்தின் மெய்ப்பாடுகளை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும். அவை பெருங் கெடுதிக்குக் காரணமாவன. மெய்ப்பாடுகளோடு கூடிய மனோபாவங்கள் பெருகியிருக்கும்பொழுது, குண்டலினி சக்தி விரைந்து மேல்நோக்கிச் செல்லும்; அத்தனை விரைவாகவே கீழ்நோக்கியும் வந்துவிடும் அது அப்படிக் கீழ் நோக்கி வரும்பொழுது, சாதகன் முற்றிலும் அழிவுற்ற நிலையை அடைவான். ஆதலினாலேதான் மெய்ப்பாட்டு மனோபாவங்களது விருத்திக்குத் துணையாயிருக்கிற கீர்த்தனைகள் கேட்டிற்குரியனவாகக் கருதப்படுகின்றன. குதித்துக் கூத்தாடுவதனால், ஒரு கணப்பொழுதுக்கு இந்தச் சக்தியானது மேல் நோக்கிப் போகின்றதெனினும், அது நிலைத்திருப்பதில்லை. அது மீட்டும் திரும்பும்பொழுது சாதகனுடைய மனத்திலே கொடிய காம எண்ணங்களை உண்டாக்குகின்றது. அமெரிக்க நாட்டிலே என்னு

டைய பிரசங்கங்களைக் கேட்போருள், பலர் அந்த வேளைக்கு ஒருவகையான பரவச நிலையை அடைந்த துண்டு. அவருள் சிலர் சித்திரப் பதுமையைப்போல அசைவற்றிருந்ததும் உண்டு. இதனைக் குறித்து நான் விசாரணை செய்தபொழுது அத்தகையோருள் பலர் அந்த நிலை கலைந்தவுடனே அளவு கடந்த காமவிச்சையினால் பீடிக்கப்பட்டார்களென அறிந்தேன். தியானத்திலும் ஏகாக்கிர சித்தத்திலும், நிலையான அப்பியாசமின்மை யினால் இது சம்பவிக்கின்றது.

சிஷ்: ஐய, சமய சாதனைகளைப்பற்றிய இரகசியங் களை நான் ஒரு சாஸ்திரத்திலும் படிக்கவில்லை. முற்றி லும் புது விஷயங்கள் பலவற்றை இன்று கேள்வியுற் றேன்.

சுவா: சமய சாதனையைப்பற்றிய இரகசியங்கள் எல்லாம் சாஸ்திரங்களிலே இருக்கின்றனவென்று எண் ணுகிறாயா? இவை குரு சிஷ்ய பரம்பரையிலே இரகசிய மாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. தியானத்தையும் ஏகாக்கிர சித்தத்தையும் மிகுந்த கருத்தோடு அப்பியசிப் பாயாக. நறுமணங் கமழும் மலர்களை வைத்து வாச னைத் திரவியங்களைப் புகைப்பாயாக; ஆரம்பத்திலே மனத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்கு வேண்டிய புற உதவிகளை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். குருவி னுடைய நாமத்தையும் இஷ்ட தேவதையினுடைய நாமத்தையும் செபிக்கும்பொழுது, 'பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் சாந்தமுண்டாகுக' என்று சொல்லுதல் வேண்டும். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேல், கீழ் ஆகிய எல்லாத் திசைகளிலும் நல்லெண்ணங் களை முதலிலே பரப்பி, பின்பு தியானத்தில் அமர வேண் டும். ஆரம்பத்திலே ஒருவன் இவ்வாறு செய்ய வேண் டும்; அதன்பின் அமைதியாக இருந்து (எத்திசையினை யாவது நோக்கி) நான் தீக்ஷா காலத்திலே உனக்குக் கற் பித்த முறையைத் தியானம் செய்வாயாக. ஒரு நாளை யாவது விட்டு விடாதே. நெருக்கமான வேலை இருந்

தால் கால்மணி நேரமாவது சமய சாதனைகளைச் செய். நியதியான பக்தியின்றி அடையவேண்டிய நிலையை அடைதல் கூடுமென்று எண்ணுகிறாயா, என் மகனே?

சுவாமிஜி மேன்மாடிக்குப் போகும்பொழுது, பின் வருமாறு சொல்லிக்கொண்டு சென்றார்: "நீ இங்கு வந்தபடியினாலே கஷ்டமின்றி ஆத்மீக உணர்ச்சியை எளிதில் பெறுவாய். மோக்ஷமும் பிறவும் உன் கையிலே இருக்கின்றன. தியான முதலியவற்றைச் செய்வதோடு துன்பம் நிறைந்த இவ்வுலகத்தில் கவலைகளை நீக்குவதற்காக இரவு பகல் முழு மனதோடு முயற்சிப்பாயாக. கடிய தவங்களினாலே என்னுடைய உடல் ஏறக்குறைய முற்றிலும் அழிந்து போயிற்று. எலும்பும் இறைச்சியுமாக இருக்கின்ற இக் கூட்டிலே சிறிதேனும் சக்தியில்லை. என்னைச் சிறிது நேரம் இருக்க விட்டு, வேலையைச் செய்ய முயலுங்கள். நீ வேறொன்றும் செய்யா விட்டாலும் இவ்வளவு நாளும் சமய சாஸ்திரங்களிலே படித்த உண்மைகளை உலகத்துக்கு எடுத்துச் சொல்லலாம். இதனினும் பார்க்க உயர்ந்த கொடை இல்லை. ஞான தானமே எல்லாத் தானங்களிலும் உயர்ந்தது."

(44)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி இப்பொழுது திருமடத்தில் இருந்து வருகிறார்.

சிஷ்யர் திருமடத்துக்கு வந்து, சாயங்கால வேளையில் உலாவுதற்கு வெளியே போன சுவாமிஜியோடும் சுவாமி பிரேமானந்தரோடும் உடன் சென்றார். சுவாமிஜி எண்ணத்திலே ஆழ்ந்திருக்கக் கண்டு சிஷ்யர், சுவாமி பிரேமானந்தரோடு சுவாமிஜியினுடைய பெருந்தகைமையைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன விஷயங்களைக் குறித்துக் குறித்துச் சம்பாஷிக்கத் தொடங்கினார். சிறிது தூரம் நடந்த பின்பு சுவாமிஜி திருமடத்தை நோக்கித் திரும்பினார். சிஷ்யரும் சுவாமி பிரேமானந்தரும் சமீபத்தி

விருப்பதைக் கண்டு, "நல்லது, என்ன பேசினீர்கள் ?" என்றார். அதற்குச் சிஷ்யர், "ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் அவருடைய மொழிகளையும்பற்றிப் பேசினோம்" என்றார் மறுமொழி செவியிற்படலும் சுவாமிஜி மறுபடியும் எண்ணத்தில் ஆழ்ந்து வழி நெடுக நடந்து திரு மடத்தை அடைந்தார். மாமரத்தின் கீழே சிறிய கட்டிலிலே சிறிது நேரம் இளைப்பாறி இருந்து, முகத்தைக் கழுவிக்கொண்டு மேல்மாடிக்குப் போய் வெளிப்புறத்திலே நடந்துகொண்டிருக்கும் பொழுது சிஷ்யரை நோக்கிப் பின்வருமாறு சொல்லுவார்: "நீ உன்னுடைய பிரதேசங்களிலே வேதாந்தத்தை ஏன் பரப்பத் தொடங்கவில்லை ? அங்கே தாந்திரிக மதம் மிகவும் அஞ்சத்தக்க அளவுக்குப் பரவி இருக்கிறது. அத்வைத வாதத்தின் சிங்கக் கர்ச்சனையினாலே தேசத்தை விழித்தெழும்படி செய் அப்பொழுது நீ ஒரு வேதாந்தி என்பதை நான் அறிந்துகொள்வேன். முதலிலே ஓர் அறிவுக் கழகம் ஏற்படுத்தி உபநிடதங்களையும் பிரம்ம சூத்திரத்தையும் கற்பிப்பாயாக. இளைஞர்க்குப் பிரம்மசரிய முறையைப் பற்றிப் போதிப்பாயாக நியாய முறையைப்பற்றி வீண் தர்க்கம் பேசுவது உன்னுடைய நாட்டில் அதிகம் உண்டென்று கேள்விப்பட்டேன். அதில் என்ன இருக்கிறது ? வியாப்தி, அநுமானம் என்னும் விஷயங்களைப் பற்றி நையாயிக பண்டிதர்கள் மாதக் கணக்காக வாதிப்பார்கள். ஆத்மஞானத்தைப் பெறுவதற்கு அது எங்ஙனம் வழியாகும் ? உன்னுடைய கிராமத்திலோ, நாக மஹாஷயருடைய கிராமத்திலோ, ஒரு சதுஷ்பதி பாடசாலையை ஏற்படுத்தி அங்கே சமய சாஸ்திரங்களையும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சீவியத்தையும் போதனையையும் படிப்பிப்பாயாக. இம்முறையில் உன்னுடைய நன்மையையும் மக்களுடைய நலத்தையும் முன்னேற்றம் அடையச் செய்வாய். உனது கீர்த்தியும் நிலைபெறும்."

சிஷ் : ஐய, பெயர் புகழைப்பற்றிய இச்சை எனக்கில்லை. தேவரீர் சொல்லுகிறபடி செய்ய வேண்டும்

விருப்பம் சில வேளை உண்டாகிறது. ஆனால் விவாகம் செய்துகொண்டதினால் உலகத்தில் சிக்கிக் கொண்டேன். எனது இச்சை எப்பொழுதும் மனத்திலேயே கிடந்து விடுமென்று அஞ்சுகிறேன்.

சுவா : விவாகம் செய்தால் அதனால் என்ன? உன்னுடைய பெற்றோருக்கும் சகோதரருக்கும் உண்டி உடை கொடுத்துத் தாபரிப்பதுபோல உன்னுடைய மனைவியையும் தாபரிப்பாயாக அவளுக்கும் சமய போதனை செய்து உன் வழிக்கு இழுத்துக்கொள். உன்னுடைய ஆத்மீக வாழ்க்கையிலேயே பங்காளியாகவும் உதவி செய்பவளாகவும் இருக்கிறாள் என்று எண்ணிக் கொள். மற்ற வேளைகளில் சமதிருஷ்டியாகப் பிறரைப் பார்ப்பதுபோல அவளைப் பார் அப்படி நினைத்தால் மனத்தினது நிலைகலங்கிய தன்மை அழிந்துபோய்விடும். எதற்காக அஞ்சவேண்டும்?

இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சிஷ்யர் புதிய ஊக்கம் பெற்றார். உணவு உட்கொண்ட பின்னர், சுவாமிஜி தமது சயனத்தின்மீது இருந்தார். அப்பொழுது சிஷ்யர் அவருக்குச் சில பணிகளைச் செய்துகொண்டு இருந்தார்.

சுவாமிஜி சிஷ்யரை நோக்கி மடத்திலுள்ள அங்கத்தவர்களுக்கு வணக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்று கட்டளை இட்டுப் பின்வருமாறு சொல்லுவார்: "நீ இப்பொழுது காண்கின்ற ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய புதல்வர்கள் அற்புதமான தியாகிகள். அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வதினாலே நீ சித்தசுத்தி எய்தி ஆத்ம தரிசனம் பெறும் பாக்கியத்தை அடைவாய். 'விசாரத்தினாலும் பெரியோருக்குச் சேவை செய்வதினாலும்' என்னும் கீதாவாக்கியத்தை எப்பொழுதும் நினைத்திரு. ஆதலினால் நீ அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் நீ கருதிய நிலையை யடைவாய். அவர்கள் உன்மீது எவ்வளவு அன்பு பாராட்டுகிறார்கள் என்பதை நீ அறிவாய்."

சிஷ் : அவர்களை அறிந்து கொள்வது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையினராகக் காணப்படுகின்றனர்.

சுவா : ஸ்ரீ ராமகிருஷ்ணர் அற்புதமான ஒரு தோட்டக்காரர். ஆதலினாலே அவர் தமது சங்கத்தைப் பல வேறு மலர்கள் சேர்த்துக் கட்டிய பூச்செண்டு போல அமைத்தார். பலவேறு வகைப்பட்ட கருத்துக்கள் உடையோர் இதனுட் சேர்ந்திருக்கின்றனர் இன்னும் பலர் இனிமேல் வருவார்கள். "யார் ஆண்டவனை நோக்கி உண்மை மனத்தோடு ஒரு நாளாவது பிரார்த்தித்து இருக்கின்றனரோ, அவர் இங்கே கட்டாயம் வர வேண்டும்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம் இங்கிருக்கின்ற ஒவ்வொருவரும் பெரிய ஆத்மீக சக்தியுடையவர்கள் என்று அறிந்துகொள்வாயாக. என் முன்னிலையிலே அவர்கள் ஒடுங்கி இருக்கிறபடியால் அவர்களைச் சாதாரண மக்கள் என்று நினைத்து விடாதே. அவர்கள் எவ்விடம் போனாலும் அவ்விடத்தில் மக்களிடையே ஆத்மீக சக்தியை எழுப்புவதற்குக் காரணமாயிருப்பார். அகண்டமாகிய தர்மக் கொள்கைகளின் சொரூபமாக விளங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆத்மீக வடிவத்தின் பகுதிகளாக உள்ளவர்கள் இவர்கள் என்பதை அறிந்து கொள். நான் அவர்களை எப்படி நோக்குகின்றேன். அதோ இருக்கின்ற பிரம்மாநந்தரைப் பார். அவருடைய ஆத்மீக சக்தி எனக்குத்தானுமில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைத் தமது ஆத்மீக மைந்தனைக் கருதி அவரோடு உடன் வசித்து, உலாவி, உண்டு, உறங்கினார். அவர் எங்களுடைய மடத்துக்கு ஆபரணம் போன்றவர்—எங்கள் அரசர். அவ்வண்ணமே பிரேமாநந்தர், துரியாநந்தர், திரிகுணாதீதர், அகண்டாநந்தர், சாரதாநந்தர், சுபோதாநந்தர் என்றின்னோர். நீ உலகத்தைச் சுற்றி வந்தாலும் இத்தகைய ஆத்மீக சக்தியும் தெய்வ நம்பிக்கையும் உடையோரைக் காண

மாட்டாய் என்பது திண்ணம். அவர்கள் ஒவ்வொரு வரும் சமய ஆற்றலின் நிலையம். காலகதியிலே அவர் களுடைய சக்தி வெளிப்படும்.

சிஷ்யர் ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டிருந் தார் சுவாமிஜி மேலும் சொல்லுவார்:

"உங்களுடைய பக்கத்திலிருந்து நாகமஹாசயரை விட வேறு யாரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வரவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்ட வேறு சிலர் அவரை உண்மையாக அறிந்து கொள்ளவில்லை" நாகமஹா சயருடைய எண்ணம் வந்ததும் சுவாமிஜி சிறிது வேளை மௌனமாயிருந்தார். மஹாசயர் இவ்வுலக வாழ்வில் நின்று நீங்கி நான்கு ஐந்து மாதங்கள் மாத்திரம் கழிந் திருந்தன நாக மஹாசயருடைய வீட்டிலே ஒரு சம யம் கங்கை நீர் ஊற்றெடுத்ததைப்பற்றிச் சுவாமிஜி கேள்வியுற்றிருந்தார். அது ஞாபகத்துக்கு வருதலும், "அந்த சங்கதி எப்படி நடந்தது? அதைப்பற்றி எனக் குச் சொல்" என்றார்.

சிஷ்: நான் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கி றேன். ஆனால் நேரிலே கண்டதில்லை. ஒரு **மஹாவாருணி யோகத்திலே** நாகமஹாசயர் தமது தந்தையாரோடு கல்கத்தாவுக்குப் புறப்பட்டார். புகை வண்டியிலே இடம் கிடைக்காதபடியால் மூன்று நான்குநாள் **நாராய ணன் கஞ்சு** என்னும் இடத்திலே வீணாக நின்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். அப்பொழுது நாகமஹாசயர் தந்தையை நோக்கி, "மனம் பரிசுத்தமாயிருந்தால் கங்கா மாதா இங்கே தோற்றுவாள்" என்றார். பரிசுத்த ஸ்நா னத்திற்குக் குறிக்கப்பட்ட சுப முகூர்த்தத்திலே அவ ருடைய வீட்டு முற்றத்தில் நின்று நிலத்தைக் கிழித் துக்கொண்டு ஒரு நீரருவி எழும்பிப் பாய்ந்தது. அத னைக் கண்டவர்கள் பலர் இப்பொழுதும் இருக்கின் றார்கள். நான் அவரைக் காண்பதற்குப் பல ஆண்டு களுக்கு முன்பு இது நிகழ்ந்தது.

சுவா: இதில் அதிசயம் ஒன்றுமில்லை. அவர் பிழை படாத துணிவினை உடைய பெரியார். அவரள விலே இத்தகைய செய்தி நிகழ்ந்தது நூதனமென்று நான் எண்ணவில்லை சுவாமிஜி இதனைச் சொல்லி விட்டு நித்திரையாயிருந்தமையினாலே படுத்துவிட்டார். சிஷ்யரும் இராப் போசனம் உண்ணும்பொருட்டு மேன் மாடியிலிருந்து கீழே வந்தார்.

(45)

[இடம்: கல்கத்தாவிலிருந்து திருமடத்துக்கு வருகிற ஒரு தோணியிலே. காலம்: 1902-ஆம் ஆண்டு]

ஒரு நாள் சாயங்காலம் கல்கத்தாவிலே கங்கா நதிக் கரையிலே, நடந்துகொண்டிருக்கும் பொழுது அஹீரித்தல கட்டத்தை நோக்கிச் சிறிது தூரத்திலே நடந்து வருகின்ற ஒரு சந்நியாசியைச் சிஷ்யர் கண்டார். அவர் சமீபத்தில் வருதலும் குறித்த சந்நியாசி நமது குருவாகிய சுவாமி விவேகாநந்தர் என்பதைச் சிஷ்யர் கண்டார். அவருடைய இடக் கையிலே பொரி கடலை வைக்கப்பட்ட ஓர் இலைப் பாத்திரம் இருந்தது. சிறு பையனைப்போலக் கடலை உண்டுகொண்டு சந்தோஷத் தோடு வழிநடந்து வருவாராயினார். சிஷ்யர் அவரு டைய கால்களில் விழுந்து நமஸ்கரித்து, "எதிர்பாராப் பிரகாரமாகக் கல்கத்தாவுக்கு வந்த காரணமென்ன?" வென்று வினவினார்.

சுவா: நான் ஒரு காரியத்தின் பொருட்டு வந் தேன். மடத்துக்குப் போவோம். வருகின்றாயா? கொஞ்சம் கடலை சாப்பிடு. இது நல்ல நேர்த்தியான உப்பும் காரமும் சேர்ந்த சுவையுடையதா யிருக்கிறது.

சிஷ்யர் சந்தோஷத்தோடு கடலையை உண்டு மடத் துக்குப் போவதற்குச் சம்மதித்தார்.

சுவா: அப்படியானால் ஒரு தோணி பார்.

சிஷ்யர் விரைந்து ஒரு தோணி பார்த்தார். தோணிக்காரன் எட்டணா கேட்டான். சிஷ்யர் கூலி

யைப்பற்றிப் பேசிக்கொண்டு நிற்கும்பொழுது சுவாமிஜி அவ்விடம் வந்து, "நீ எதற்காக அவனோடு வாதாடுகிறாய்?" என்று சிஷ்யருக்குச் சொல்லிவிட்டுத் தோணிக்காரனை நோக்கி, "நல்லது, உனக்கு எட்டணா தரலாம்" என்று சொல்லித் தோணியிலே ஏறினார். தோணியும் நீரோட்டத்துக்கு எதிராக மெல்லெனச் சென்றது. மடத்தைச் சேர ஒன்றரை மணி நேரம் பிடித்தது. சுவாமிஜி மாத்திரம் தோணியிலே உடன் இருந்த காரணத்தினால், பல வகைப்பட்ட விஷயங்களைப்பற்றி அவரோடு கலந்து பேசுவதற்குச் சிஷ்யருக்கு வசதி ஏற்பட்டது சிஷ்யர் சமீபத்திலே எழுதிய ஸ்ரீ ராமகிருஷ்ண பக்த மான்மியம் என்னும் பாடலைப்பற்றிப் பேசும்பொழுது சுவாமிஜி சிஷ்யனை நோக்கி, "நீ உன் பாடலிற் குறிப்பிட்டவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அந்தரங்க சிஷ்யர்களென்று உனக்கு எப்படித் தெரியும்?" என்றார்.

சிஷ் : ஐய, நான் பல வருஷங்களாக ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சந்நியாசி சிஷ்யர்களோடும், கிரகஸ்த சிஷ்யர்களோடும் பழகியிருக்கிறேன்; நான் குறிப்பிட்டவர்கள் எல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்கள் என்று அவர்களிடம் இருந்து கேள்விப்பட்டேன்.

சுவா : ஆம், அவர்களெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்கள்தான். ஆனால், எல்லாப் பக்தர்களும் அந்தரங்க சிஷ்யர்கள் என்னும் வகுப்பைச் சேர்ந்தவரல்லர். காசிப்பூர் நந்தவனத்தில் இருக்கும் பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் எங்களை நோக்கி. "இவர்கள் எல்லாம் எனது அந்தரங்க சிஷ்யர் அல்லரென்று உலக மாதா எனக்குக் காட்டினாள்" என்றார். அன்று, ஆண் பெண் பாலாராகிய இருவகைப் பக்தர்களையும் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவ்வாறு கூறினார். பின்பும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தமது பக்தர்களுக்குள்ளே ஏற்றத் தாழ்ச்சியாகப் பல படிகள் இருப்பதை எடுத்துக் காட்டினார்.

சுவாமிஜி இல்வாழ்வாருடைய வாழ்க்கைக்கும் சந்நியாசிகளுடைய வாழ்க்கைக்கும் உள்ள பெரிய வேறுபாட்டினை எடுத்து நீண்ட நேரம் தெளிவாக விளக்கினார்.

சுவா : பொன்னாசை பெண்ணாசை வழியிலே நின்று கொண்டு, அதே காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் செவ்விதாய் அறிந்து கொள்ளுவதென்றால், அது முடிந்த காரியமா? அது எப்பொழுதாவது கைகூடுமா? அத்தகைய வார்த்தைகளிலே நம்பிக்கை வைக்கவேண்டாம். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தருள்ளே பலர் தங்களை ஈஸ்வரகோடிகள் என்றும், அந்தரங்க சிஷ்யர்கள் என்றும் சொல்லுகிறார்கள். அவருடைய தியாகத்தையும் வைராக்கியத்தையும் நினைக்க முடியாதவர்கள், அவருக்கு அந்தரங்க சிஷ்யர் என்று சொல்வது நன்றாயிருக்கின்றது! இந்த வார்த்தைகளை எல்லாம் வீசிவிடு அவர் தியாகிகளுக்கு அரசராயிருந்தார். அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்றோர் யாரேனும் காமகாஞ்சன அநுபவங்களிலே வாழ்நாள் கழிக்க முடியுமா?

சிஷ் : அப்படியாயிருந்தால் தக்ஷிணேஸ்வரத்து அவரிடம் வந்தவர்கள் அவரது பக்தர் அல்லவா?

சுவா : யார் அப்படிச் சொன்னார்? ஸ்ரீ ராமகிருஷ்ணரண்டை வந்த ஒவ்வொருவரும் ஆத்மீக வாழ்க்கையிலே உயர்வடைந்தவர், உயர்வடைகின்றவர், மேலும் உயர்வடைபவர். முந்திய கல்பத்திலே பூரண நிலைமை அடைந்த ரிஷிகள், மனித உடலம் எடுத்து அவதார புருஷர்களோடு உலகத்திலே பிறக்கிறார்களென ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னதுண்டு. அவர்கள் ஆண்டவனுக்குத் தோழர்கள். ஆண்டவன் அவர்கள் மூலமாகத் தொழில் செய்து தனது கருமத்தைப் பரப்புகிறான். பிறர் பொருட்டாகத் தம்மைத் துறந்து சுகானுபவங்களை எல்லாம் அருவருப்போடு தள்ளிவிட்டு, உலகுக்கு உபகாரமாக ஜீவர்களின் நலத்தைக் கோரி, யாவர் வாழ்க்கை நடத்துகின்றனரோ, அத்தகையோர் மாத்திரமே அவதார புருஷருக்குத் தோழராக இருக்கக்கூடி

யவர் என்னும் உண்மையை அறிந்து கொள்ளுவாயாக. இயேசுநாதருடைய சிஷ்யர்கள் எல்லோரும் சந்நியாசிகள். சங்கரர், ராமாநுஜர், ஸ்ரீ சைதன்யர், புத்தர் என்றின்னோருடைய கருணையை நேரிற் பெற்றவர்கள் எல்லாம் அனைத்தையும் துறந்த சந்நியாசிகள். இத்தகைய மனிதரைக் கொண்ட சிஷ்ய பரம்பரையினாலே தான் பிரம்ம வித்தை உலகிற் பரவுகின்றது. காமகாஞ்சனங்களுக்கு அடிமையாகிய மனிதன் மற்றொருவனுக்கு விடுதலையைத் தந்தான் என்றும், கடவுளையடையும் மார்க்கத்தைக் காட்டினானென்னும் நீ எங்கேயாவது கேள்விப்பட்டதுண்டா? தான் விடுதலை அடையாதவன் பிறரை விடுதலைப்படுத்துவது எவ்வாறு? எல்லாக் காலங்களிலும், எல்லாத் தேசங்களிலும் சந்நியாசிகளே சமய போதகர்களாயிருந்தார்கள். வேதம், வேதாந்தம், இதிகாசம், புராணம் இன்னுமிவற்றில் இந்த உண்மையை எங்கும் காணலாம். முன்பு நடந்தது போலவே இப்பொழுதும் நடக்கப் போகின்றது. சர்வ சமய சமரஸத்தைக் காட்டிய ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆற்றல் வாய்ந்த சந்நியாசி சிஷ்யர்கள், மக்களுக்கு ஞானாசிரியர்களாக எவ்விடத்தும் மதிக்கப்படுவார்கள். பிறருடைய வார்த்தைகள் வெற்றொலிபோல வீணாய்ப்போம். இந்தத் திருமடத்திலிருக்கிற உண்மைத் தியாகிகளாகிய சந்நியாசிகள் தருமத்தைப் பாதுகாப்பதற்கும், பரப்புவதற்கும் உரிய நிலையங்களாவார்கள். அறிந்து கொண்டாயா?

சிஷ் : ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கிரகஸ்த மாணவர்கள் அவர்களைப்பற்றிப் பலவேறு வகையாகப் போதிக்கின்றார்களே, அவர்கள் சொல்வன உண்மை இல்லையா?

சுவா : முற்றிலும் பொய்யென்று சொல்வதற்கில்லை. ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி அவர்கள் கூறுவனவெல்லாம் ஒரு சார்பு பற்றிய உண்மைகளே. ஒவ்வொருவருடைய ஆற்றலுக்குத் தக்கபடி ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்துத் தாம் அறிந்துகொண்டதை அவர்கள் பேசுகிறார்கள். அப்படிச் செய்வது குற்றமா

காது. ஆனால் இந்த பக்தர்களுள் யாரேனும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றித் தாம் அறிந்து கொண்டதை முற்றுன உண்மை என்பதாக எண்ணினால், அது வீண் எண்ணமாகும். சிலர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை கௌண மதத்தவர், தாந்திரீகர் என்பர். வேறு சிலர் நாரதீய பக்தியைப் போதிக்கும் பொருட்டு ஸ்ரீ சைதன்யரே உலகில் அவதரித்தார் என்பர். இன்னும் சிலர் அவர் அவதார புருஷரென்று சொல்வதும், சாதனை செய்தாரென்பதும் ஒன்றினுக்கொன்று விரோதமாகுமென்பர். இன்னும் சிலர் அவர் சந்நியாசம் பெற்றது, அவருடைய போதனைகளுக்குப் பொருத்தமில்லாதன எனக் கருதுவர். பூர்வத்தில் வந்த எத்தனையோ அவதாரங்கள் ஒருங்கு திரண்டு உருவெடுத்தாலனைய அவர் இத்தகையினர் என்பதை வாழ்க்கை முழுவதையும் தவத்திலே கழித்த நாங்களும்கூட, சிறிதேனும் உணர்ந்துகொள்ளாதிருக்கிறோம். அவரைப்பற்றிப் பேசும்பொழுது ஆலோசனையோடு பேசவேண்டி இருக்கிறது. ஒவ்வொருவருடைய ஆற்றல் எவ்வளவாகவிருக்கிறதோ அவ்வளவுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய எண்ணங்களால் அன்னவரை நிறைவிப்பார். அவருடைய ஆத்மீக வாழ்க்கையாகிய நிறைந்த சமுத்திரத்திலிருந்து ஒரு திவலையைப் பெற்றாலும் அதனால் மக்கள் தேவர்கள் ஆவார்கள். எவ்விடத்திலும் பரந்த எண்ணங்களின் சமரஸத்தை உலக சரித்திரத்திலே மறுபடியும் நாம் காணப் போவதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணராக அவதரித்தவர் இன்னார் என்பதை இதிலிருந்தாவது உணர்ந்துகொள்ளுவாயாக. அவர் தமது சந்நியாசி மாணவர்களுக்குப் போதிக்கும்பொழுது தமது ஆசனத்திலிருந்து எழுந்து யாராவது இல்வாழ்வார் அவ்வழியாக வருகின்றனரோ என்று பார்ப்பார். வரவில்லை எனக் கண்டபின்பு, துறவின் மகத்துவத்தைப் பற்றியும் தபசைப் பற்றியும் ஆர்வத்தோடு பேசுவார். அத்தகைய வைராக்கியத்தின் வலிமையினாலே நாங்கள் உலகத்தைத் துறந்து லௌகீகப் பொருள்களில் அருவருப்புடையவர்களாயினோம்.

சிஷ் : இல்வாழ்வார்களுக்கும் சந்நியாசிகளுக்கும் இடையே அவர் அவ்வளவு வேறுபாடு காட்டினார்!

சுவா : இந்த விஷயத்தைப்பற்றி இல்வாழ்வாராகிய சிஷ்யரையே கேட்டுப்பார். உலக வாழ்க்கையின் சுகாநுபவங்கள் யாவற்றையும் துறந்து, மலையிலும், வனத்திலும், தீர்த்தங்களிலும், ஆசிரமங்களிலும், காலங்கழித்து, தபசு புரிந்து, கடவுளை யடைய முயலுகின்ற ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய புதல்வர்களா, அன்றேல், அவரை நினைவுகூர்ந்து அவருடைய திருநாமத்தைப் புகழுதலை மேற்கொண்டும், உலகபந்தத்தில் நின்றும், மயக்கத்தில் நின்றும், எழும்ப முடியாமல் இருக்கின்ற அவருடைய ஏனைய சிஷ்யர்களா, யார் பெரியவர் என்பதை நீயே நினைத்துப்பார். மக்கள் கூட்டத்தினரை ஆத்மசொரூபமாக நினைத்து, அவர்களுக்குச் சேவை செய்வதை மேற்கொண்டு, இளவயது தொடக்கம் பிரம்மசரியம் காத்து, தியாகம் வைராக்கியம் என்னும் இவற்றின் வடிவமாக விளங்குகின்ற துறவோர் பெரியவரா, அன்றேல் பூவின்மேல் ஒரு கணப்பொழுதும், மலக்குவியலின் மேலே மறுகணத்திலும் உட்கார்ந்திருக்கின்ற ஈயைப்போல வாழுகின்றவர்கள் பெரியவரா? நீயே ஆலோசித்து முடிவு செய்துகொள்.

சிஷ் : ஆனால், ஐய, அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்றவர்களுக்கு இவ்வுலகம் எம்மாத்திரம்? அவர்கள் இல்வாழ்க்கையில் வாழ்ந்தாலும் ஒன்றே, சந்நியாசம் பெற்றுக்கொண்டாலும் ஒன்றே, என்று எனக்குத் தோன்றுகிறது.

சுவா : உண்மையில் அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டவர்களது சிந்தனையானது லௌகிகத்தை அடுத்திருக்கமாட்டாது காமகாஞ்சனத்தினின்று விடுபட்டிருப்பதே அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்றதற்கு அறிகுறியாகும். ஒருவனுடைய வாழ்க்கையிலே அது எய்தப் பெறுவிடின், அவன் உண்மையில் அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை யென்று அறிதல் வேண்டும்.

இந்த வாக்குவாதம் முடிந்தது. சிஷ்யர் மற்றொரு விஷயத்தை ஆரம்பித்து, "ஐய, அந்நிய நாடுகளிலே தேவரீர் செய்த முயற்சிகளின் பெறுபேறு என்ன?" என்றார்.

சுவா: செய்த வேலையின் ஒரு சிறு அளவு மாத்திரம் இப்பொழுது வெளிப்பட்டுத் தோன்றும். காலகதியிலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சமரசக் கொள்கைகளை உலகம் முற்றிலும் ஏற்றுக்கொள்ளும்; இப்பொழுது ஆரம்பம் மாத்திரம் ஆகியிருக்கின்றது. இந்தப் பிரவாகத்தின் முன்னர் அனைத்தும் அள்ளுண்டுபோம்

சிஷ்: தயைசெய்து அடியேனுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி இன்னும் அநேக விஷயங்களைச் சொல்லி அருளவேண்டும். தேவரீருடைய திருவாக்கில் நின்று அதனைக் கேட்க நான் பெரிதும் விரும்புகிறேன்.

சுவா: எப்பொழுதும் அவரைப் பற்றித்தானே கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறாய். இன்னும் என்ன? அவரே அவருக்குச் சமமாயிருக்கிறார். அவருக்குச் சமம் பிறிதொருவர் உண்டா?

சிஷ்: அவரைக் காணாத எங்களுக்குப் போம் வழி என்ன?

சுவா: அவருடைய அநுக்கிரகத்தை நேரிலே பெற்ற சாதுக்களினுடைய கூட்டுறவை நீ பெற்றிருக்கின்றாய். அப்படி இருக்கும்பொழுது அவரைக் காணவில்லை என்று எப்படிச் சொல்லலாம்? அவர் தமது சந்நியாசி சிஷ்யர்களுக்குள்ளே சமூகமாயிருக்கிறார். அவர்களுக்குத் தொண்டு செய்வாயானால் காலகதியிலே அவர் உனது இருதயத்திலே வெளிப்பட்டுத் தோற்றுவார். நீ யாவற்றையும் உணர்ந்துகொள்ளுவாய்

சிஷ்: ஐய, அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்ற பிறரைக் குறித்து எவ்வளவோ சொல்லுகிறீர்; தேவரீரைக் குறித்து ஒருபொழுதும். ஒன்றும் சொல்லவில்லையே.

சுவா: என்னைக் குறித்து என்ன சொல்லுவேன்? நான் அவருடைய பூதங்களில் ஒன்றாயிருக்க வேண்டும். அவருடைய சமூகத்திலே தானும் அவரைப்பற்றிக் குறைவாகப் பேசுவேன். அதைக் கேட்டு அவர் நகைப்பார்.

இதைச் சொல்லும்பொழுது சுவாமிஜியினுடைய முகம் அசைவற்றுத் தோன்றியது; தம்மை மறந்த தன்மையாக நதியை நோக்கிச் சிறிதுநேரம் பேசாது இருந்தார். மாலைக்காலம் வந்தது. தோணியும் திருமடத்தை அடைந்தது. "வாழ்க்கையின் மாலையில் மதலையை வீட்டுக்கு வரச்செய்குவாய்" என்னும் பாட்டினை சுவாமிஜி மெல்லப் பாடினார்

பாட்டு முடிந்ததும், சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "கிழக்கு வங்காளமாகிய உங்கள் பக்கத்திலே இனிய குரல் உடையோர் பிறப்பதில்லை; கங்காநீரைக் குடித்தாலன்றி இனிய குரலைப் பெறுதல் முடியாது" என்றார்.

தோணிக் கூலியைக் கொடுத்த பின்னர் சுவாமிஜி தோணியில் நின்றும் இறங்கிப்போய் திருமடத்தின் மேற்குத் திண்ணையிலே இருந்தார். அவருடைய அழகிய மேனியும் காஷாய வஸ்திரமும் கண்ணுக்கினிய தோற்றமா யிருந்தன.

(46)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டு.]

இன்று ஆஷாட மாதம் முதல் தேதி. சிஷ்யர் மாலைக் காலத்துச் சற்று முன்பாக வல்லி என்னும் இடத்திலிருந்து திருமடத்துக்கு வந்தார். தமது உத்தியோக உடையை மாற்றுவதற்கு நேரங் கிடையாமையால், அந்த உடையோடேயே வந்தார். சுவாமிஜியினுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அவருடைய சுகத்தை வினவினார். சுவாமிஜி சுகம் நன்று என விடைபகர்ந்து சிஷ்யர் உடுத்திருக்கின்ற உடை

யைப் பார்த்து, "நீ கால் சட்டை மேல் சட்டை போட்டிருக்கிறாய். ஏன் கழுத்துப்பட்டை (காலர்) அணிந்து கொள்ளவில்லை?" என்று சொல்லிச் சுவாமி சாரதானந்தரை நோக்கி, "நாளை என் பெட்டியிலிருந்து இவருக்கு இரண்டு கழுத்துப்பட்டை எடுத்துக்கொடும்" என்றார். சுவாமி சாரதானந்தரும் அதற்கிசைந்தார்.

சிஷ்யர் உத்யோக உடையை மாற்றிவிட்டுச் சுவாமிஜியின் முன்னிலையில் வருதலும், சுவாமிஜி அவரை நோக்கி, "சுதேச உடையையும் உணவையும், வாழ்க்கை முறையையும் விடுவதனால் ஒருவன் தேசீயத்தை இழந்துவிடுகிறான். ஒருவன் எல்லாரிடமிருந்தும் கற்றுக்கொள்ளலாம். ஆனால், எந்தக் கல்வி தேசீயத்துக்கு எதிராகவிருக்கின்றதோ, எது உயர்நிலையை யடைவதற்கு உதவியாகவில்லையோ, அத்தகைய கல்வி தாழ்ச்சிக்கு ஏதுவாகும்

சிஷ் : ஐய, மேல் உத்தியோகஸ்தராகிய ஐரோப்பியர்கள் ஏற்றுக்கொள்ளாத உடையோடு உத்தியோக நிலையத்துக்கு ஒருவன் எப்படிப் போகலாம்?

சுவா : அதனை யாரும் தடுக்கவில்லை. உன்னுடைய உத்தியோகக் கடமைக்காக, அதற்கு வேண்டிய உடையோடு உத்தியோக நிலையத்துக்குப் போ. ஆனால், வீட்டிற்குத் திரும்பி வந்ததும் வேஷ்டி, அங்கவஸ்திரம் என்னும் இவற்றை அணிந்து, பூரணமான வங்காளி பாபுவாக இருக்கவேண்டும். அறிந்துகொண்டாயா?

சிஷ் : ஆம், ஐய.

சுவா : ஐரோப்பிய ஷர்ட்டைமாத்திரம் அணிந்து கொண்டு வீடுவீடாகப் போகிறீர்கள் மேல்நாட்டிலே அங்ஙனம் செய்தால், அது பொருத்தமில்லாததாகக் கருதப்படும் ஷர்ட்டின்மேலே மேலங்கியாகிய 'கோட்' ஒன்று அணிந்தாலன்றி நன்மக்களுடைய வீட்டிலே நீ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாய். உடை விஷயத்திலே நீங்கள் கற்றிருக்கிற பொருத்தமில்லாத முறையைக் கண்டு நகைக்கவேண்டி யிருக்கிறது. இக்காலத்துச்

சிறுவர்களும் வாலிபர்களும் அணிகின்ற உடை இந்திய உடையுமல்ல; மேலைத்தேச உடையுமல்ல; இரண்டும் சேர்ந்த ஒருவகைக் கலப்பு.

இவ்வண்ணம் பேசிய பின்னர், சுவாமிஜி எழுந்து கங்கைக்கரையிலே நடந்துகொண்டிருந்தார். சமய சாதனையைப்பற்றி சுவாமிஜியினிடம் ஒரு வினவைக் கேட்பதற்கு ஆலோசித்துக்கொண்டு நின்றார்

சுவா: என்ன நினைத்துக்கொண் டிருக்கிறாய்? அதை வெளியே சொல்.

சிஷ்யர் பெரிதும் நாணுற்றுச் சொல்லுவார் "ஐய, மிகச் சொற்பநேரத்திலே மனம் அமைதிநிலையடையவும், விரைந்து நான் தியானத்தில் அமிழ்ந்துவிடவும் செய்யத் தக்க ஒரு முறையைத் தேவரீர் எனக்குக் கற்பித்தால், அது எனக்கு மிகவும் நலம் பயக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். லௌகிகக் கடமைகள் படிந்திருத்தலினாலே, சமய சாதனை செய்யுங்காலத்திலே மனத்தைத் தியானத்திலே நிலைப்படுத்துதல் கஷ்டமாகக் காணப்படுகிறது."

சிஷ்யருடைய பணிவையும் சிரத்தையையும் சுவாமிஜி பார்த்து, அவரை அன்பினோடு நோக்கி, "சிறிது நேரங்கழித்து நான் தனித்திருக்கும்பொழுது மேன் மாடிக்கு வா; அதைப்பற்றி நான் உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

சிறிது நேரங்கழித்துச் சிஷ்யர் வந்து சுவாமிஜி மேற்கு நோக்கித் தியானத்திலிருப்பதைக் கண்டார். அவருடைய முகத்தில் ஓர் அற்புதமான அழகு காணப் பட்டது. உடல் முழுவதும் அசைவற்றிருந்தது. சிஷ்யர் சுவாமிஜியினுடைய திருவுருவத்தைப் பார்த்து ஆச்சர்யத்தினாலே பேச்சற்று சமீபத்தில் நின்றார். நீண்ட நேரம் நின்றும் சுவாமிஜி அசைவுக்குரிய ஒரு வகை அடையாளமும் இல்லாது இருப்பதை நோக்கிச் சமீபத்திலே அமைதியாக இருந்தார். அரைமணி நேரங் கழித்து வெளியுணர்வுக்குரிய அடையாளங்கள் சில

சுவாமிஜியினிடத்துக் காணப்பட்டன. கூப்பியிருந்த கரங்கள் மெல்லென்று அசைந்தன. சில நிமிஷங்களிலே சுவாமிஜி கண்ணை விழித்துச் சிஷ்யனை நோக்கி "எப்பொழுது வந்தனை?" என்றார்.

சிஷ்: சிறிது முன்பாக.

சுவா: நல்லது, ஒரு குவளை தண்ணீர் கொண்டு வா

சிஷ்யர் விரைந்து ஒரு குவளை தண்ணீர் கொண்டு வந்தார். சுவாமிஜி கொஞ்சத்தைக் குடித்துவிட்டுக் குவளையை உரியவிடத்தில் வைக்கும்படி சிஷ்யருக்குச் சொன்னார். சிஷ்யர் வைத்துவிட்டுச் சுவாமிஜிக்குச் சமீபமாக வந்திருந்தார்.

சுவா: இன்று நான் மிகுந்த ஆழ்ந்த தியானத்திலிருந்தேன்.

சிஷ்: ஐய, என்னுடைய மனமும் தியானத்தில் அமிழ்ந்தும்படியாகத் தயைசெய்து கற்பித்தருள வேண்டும்.

சுவா: முன்னாக எல்லா முறைகளையும் உனக்குக் கற்பித்திருக்கிறேன். முறைப்படி ஒவ்வொரு நாளும் தியானம் செய் கால நிறைவிலே எல்லாம் கைகூடும். எவ்வகையாகிய சாதனை உனது மனத்துக்குப் பொருத்தமாகத் தோற்றுகிறதெனச் சொல்லுவாயாக.

சிஷ்: ஐய, தேவரீர் சொல்லியபடி தினமும் அப்பியசிக்கிறேன்; ஆனாலும், ஆழ்ந்த தியானம் பெறுவதில்லை. தியானத்தை அப்பியசிப்பது எனக்குப் பயனற்றதென நான் சிலவேளை எண்ணுவதுண்டு. அதில் அநுகூலம் வராதென்று எண்ணுகிறேன். ஆதலால், இப்பொழுது போல, நித்தியமாக, தேவரீருடைய முன்னிலையிலே இருப்பதை விரும்புகிறேன்.

சுவா: இவையெல்லாம் மனத்தின் வலியின்மையால் நிகழுவன. நித்தியமாக உன்னுள்ளே இருக்கின்ற ஆத்மனிடத்தே அமிழ்ந்து இருக்கும்படி எப்பொழுதும்

முயல்வாயாக. ஒரு முறையாவது ஆத்ம தரிசனம் பெறுவாயாயின், எல்லாவற்றையும் பெறுவாய் - பிறப் பென்னும் தளைகள் எல்லாம் ஒடிந்துபோம்.

சிஷ் : அத்தகைய நிலையை யான் அடையும்படி தேவரீர் எனக்கு அநுக்கிரகிக்க வேண்டும். இன்று தனித்து வரும்படி சொன்னீர். அப்படியே வந்திருக் கிறேன் ஏதாவது ஒரு வழியாக என்னுடைய மனத்தை ஸ்திரப்படுத்த வேண்டும்.

சுவா : நேரம் இருக்கும்பொழுதெல்லாம் தியா னிப்பாயாக. மனம் ஒருமுறை சுழுமுனை மார்க்கத்தை அடைந்துவிடுமெனின் எல்லாம் சரியாகும். அதன் பின்பு நீ ஒன்றும் அதிகம் செய்ய வேண்டியதில்லை.

சிஷ் : தேவரீர் பலவகையாக என்னைத் தைரியப் படுத்துகின்றீர். நான் உண்மையைத் தரிசிக்கப் பெறு வேனோ? உண்மை ஞானதசை அடைந்து மோக்ஷத் தைப் பெறுவேனோ?

சுவா : ஆம், நிச்சயமாகப் புழு முதல் பிரம்ம தேவன்வரை எல்லோரும் மோக்ஷமடைய, நீ மாத்திரம் அடையாதிருக்கப் போகின்றாயா? இவை எல்லாம் உன் மனத்தின் வலிமையின்மைகள். இத்தகைய விஷயங் களை ஒருபொழுதும் நினைக்காதே.

"சிரத்தை, வீரியம் இவற்றோடு கூடியிரு. ஆத்ம ஞானத்தை அடை. பிறருடைய நலத்துக்காக உனது சீவியத்தைத் தியாகஞ் செய். இது நான் விரும்புவது; இதுவே என் ஆசீர்வாதம்."

போசன வேளையைக் குறிக்கும் மணி அடித்தது; போசனம் உண்ணப்போகும்படி சுவாமிஜி சிஷ்யருக்குக் கட்டளையிட்டார். சிஷ்யர் சுவாமிஜியினுடைய பாதத் தில் வீழ்ந்து ஆசீர்வதிக்கும்படி வேண்டினார். சுவாமிஜி தனது கரத்தை சிஷ்யரது தலையின்மேல் வைத்து ஆசீர்வதித்துப் பின்வருமாறு சொல்லுவார்: "எனது ஆசீர்வாதம் உனக்குப் பயன் தருவதாயின் பகவான்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது திருவருளை உனக்குக் கொடுப்பாராக. இதுவே என் ஆசீர்வாதம். இதனினும் பார்க்க உயர்ந்த ஆசீர்வாதத்தை நான் அறியேன்."

போசனத்துக்குப் பின்பு சிஷ்யர் மேன்மாடிக்குப் போகவில்லை அன்றிரவே சுவாமிஜி நேரத்தோடு நித்திரை செய்துவிட்டார். மறுநாட்காலை, சிஷ்யர் சில தொழின்முறையாகக் கல்கத்தாவுக்குத் திரும்பிப் போக வேண்டி இருந்தமையினால், மேன்மாடிக்குச் சுவாமிஜியினுடைய முன்னிலையிலே வந்தார்.

சுவா: நீ இப்பொழுது உடனே போகிறாயா ?

சிஷ்: ஆம், ஐய.

சுவா: மற்ற ஞாயிற்றுக்கிழமை திரும்பவும் வருகிறாயல்லவா ?

சிஷ்: ஆம், நிச்சயமாக.

சுவா: நல்லது, அதோ ஒரு தோணி வருகிறது. சிஷ்யர் சுவாமிஜியிடம் விடைபெற்றுக் கொண்டார். தமது இஷ்ட தேவதையாகிய சுவாமிஜியை மானிட உடம்பிலே காணும் கடைசி முறை இது என்பதை அவர் அறியவில்லை. சுவாமிஜி அன்போடு அவரை நோக்கி, (ஞாயிற்றுக்கிழமை வா) எனக்கூறி விடை கொடுத்தனர். சிஷ்யரும் "ஆம் வருகிறேன்" என்று சொல்லி மேன்மாடியிலிருந்து கீழிறங்கினர். தோணிக்காரன் அழைத்தமையினாலே விரைந்து வந்து தோணியிலேறும் பொழுது, சுவாமிஜி மேன்மாடியிலே உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டு நமஸ்கரித்து விட்டுத் தோணியிலேறினார்.

இதற்கு ஏழாம் நாள், சுவாமிஜி இவ்வுலக வாழ்க்கையினின்று நீங்கினார். இப்படி நிகழப்போவதைப் பற்றிச் சிஷ்யர் அறியவில்லை. சுவாமிஜி உலக வாழ்வை நீத்ததற்கு இரண்டாம் நாள், சிஷ்யர் அச்செய்தியைக் கேள்வியுற்றுத் திருமடத்துக்கு வந்தார்.

சுவாமிஜியினுடைய திருமேனியைக் காணும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கவில்லை.

(47)

ஸ்ரீ பிரியநாதசிங்கர்

சம்பாஷணையிலும், சங்கீத முதலாகப் பலர் ஒன்று கூடிச் செய்கின்ற பிற கருமங்களிலும் நாம் மிகவும் அடக்கக் குறைவு உள்ளவர்களாக இருக்கிறோம். ஒவ்வொருவனும் தன்னை முன்னணியில் நிறுத்த முயலுகிறான். புகையிரத ஸ்தானங்களிலும், கப்பற் றுறை முகங்களிலும், ஒருவரை யொருவர் இடித்துக்கொண்டு நிற்பது இதற்கு இன்னுமொரு உதாரணமுமாகும். இந்த விஷயமாக சுவாமிஜியுடைய நண்பர் ஒருவர் ஒரு நாள் திருமடத்திலே சுவாமிஜியோடு சம்பாஷித்தார். சுவாமிஜி பின்வருமாறு கூறுவாராயினர்: "'உனது மகன் படிப்பில் ஊக்கமில்லா திருப்பின் அவனை ராஜ சபைக்கு அனுப்பு' என்று நம்முள்ளே ஒரு பழைய முதுமொழி இருக்கிறது. சபை என்றால் சாதாரண மக்களுடைய வீட்டில் நடக்கும் கூட்டமல்ல. சபை என்பது இராஜசபையை வங்காளத்திலே அரசர்கள் வாழ்ந்து வந்த காலத்தில் அவர்கள் காலையிலும் மாலையிலும் சபை கூட்டுவது வழக்கம். காலைப் பொழுதிலே அரசியல் விஷயமான பல காரியங்களையும் ஆராய்வார்கள். அந்தக் காலத்தில் புதினப் பத்திரிகைகள் இல்லை. ஆதலால், அரசன் இராஜமா நகரத்திலுள்ள பெரு மக்களோடு சம்பாஷித்து ஜனங்களைப் பற்றியும், அரசியலைப் பற்றியும், அறியவேண்டிய விஷயங்களை அறிந்துகொள்வான். இந்தக் கூட்டங்களுக்குக் குறித்த பெரு மக்கள் எல்லோரும் கட்டாயம் வரவேண்டும். வராவிட்டால் ஏன் வரவில்லை என்று அரசன் விசாரிப்பான். இத்தகைய சபைகள் தான் நமது நாட்டில் மாத்திரமல்ல, ஏனைய நாடுகளிலும் நாகரீக நிலையங்க

ளாக இருந்தன. இக்காலத்திற்றானும் இந்தியாவின் மேல் பாகங்களில் சிறப்பாக ராஜபுதனத்தில் இத்த தகைய பழைய சபைகள் கூட்டப்படுகின்றன இந்த விஷயத்தில் அந்த நாடுகள் வங்காளத்திலும் பார்க்கச் சிறப்புடையன,"

விஞ: அங்ஙனமாயின், மஹராஜ், நமக்கென்று சொந்த அரசரில்லாத குறையினாலே நமது ஜனங்கள் தங்களுடைய நல்லொழுக்கத்தை இழந்து விட்டார் களா?

சுவா: தன்னல விருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட இழி நிலை இவை. ஒரு கப்பலில் ஏறும்போது "அம்மான், உன் அரியதோல் பத்திரம்" என்னும் கிராமிய பழமொழியைச் சிலர் கைக்கொள்ளுகிறார்கள். இசையிலும் வேறு ஆடல்களிலும் தங்களது சாதுரி யத்தைக் காட்ட முயலுவது அவர்கள் மன நிலையை வெளியிடும். தன்னல மறுப்பிலே சிறிது பயின்றா லன்றி இது போகமாட்டாது. தமது மக்களுக்கு நல் லொழுக்கத்தைத் தானும் பயிற்றி வைக்காத பெற் றோரை இப்பழி சாரும். தன்னல மறுப்பே நாகரீகத் துக்கு ஆதாரமானது.

"பெற்றோருடைய அளவு கடந்த நெருக்கத்தி னாலே நமது சிறுவர்களுக்கு வளர்ச்சி எய்தும் வசதி ஏற்படுவதில்லை. பெற்றோர் சங்கீதம் பாடுவதை முறை கேடான காரியம் என்று எண்ணுகிறார்கள். மகனோ வென்றால் நல்ல சங்கீதத்தைக் கேட்டவுடனே அதைக் கற்கவேண்டுமென்று நினைத்து வாலிபர் கூட்டத்தை நாடுகிறான். மேலும் புகை குடிப்பது பாபம் என்கி றார்கள். ஆனபடியால் இளைஞர்கள் வீட்டு வேலைக் காரனோடு கலந்து மறைவாக இப்பழக்கத்தைக் கைக் கொள்ளுகிறார்கள். ஒவ்வோர் இடத்தும் அனந்தமாகிய சமஸ்காரங்கள் நிறைந்திருக்கின்றன. இவற்றை நிறைவு பெறச் செய்வதற்குத் தக்க மார்க்கங்கள் வேண்டும். நமது நாட்டில் அதற்கு இடமில்லை. இப்பொழுது

உள்ள நிலையைத் திருத்தவேண்டுமாயின், பெற்றோரைப் புதிதாகப் பயிற்றவேண்டும் இதுதான் நமது நிலை. நாகரீகத்தில் நாம் உயர்வாக விருத்தி எய்தவில்லை. அப்படி இருந்தும் நமது கல்வி கற்ற பாபுக்கள் அரசியற் கருமங்களைத் தமது கையிலே கொடுத்து விடும்படி பிரித்தானியரைக் கேட்கின்றனர். இது எனக்கு அழுகையையும் நகையையும் தருகின்றது. தன்னைத் தானே அடக்கிக் கீழ்ப்படிந்து தொண்டு செய்வதாகிய வீர வாழ்க்கை எங்கே போய்விட்டது? போர்க்குச் செல்லும் வீரன் தன்னைத் தியாகம் செய்கிறானேயன்றி, தன்னலத்தைக் கருதுகின்றான் அல்லன். பிறருடைய இருதயத்தையும் சீவியத்தையும் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்யவேண்டும் எனில் முதலிலே கட்டளைக்கு அமைந்து முன்னேறிச் சென்று தனது உயிரைக் கொடுக்கத் தயாராயிருக்கவேண்டும். முதலிலே தன்னைத் தியாகம் பண்ணவேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தொண்டர் ஒருவர் தாம் எழுதிய ஒரு நூலிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரை அவதார புருஷராக மதிக்காதவர்கள்மீது சில பழிமொழிகளைச் சுமத்தி எழுதியிருந்தார். அங்ஙனம் எழுதியவரை சுவாமிஜி தம்முடைய சமுகத்துக்கு அழைத்து ஆத்திரத்தோடு பின்வருமாறு சொல்லுவாராயினர் :

“மற்றவர்களை அவ்வண்ணம் நிந்தித்து எழுதுதற்கு உனக்கு என்ன உரிமை உண்டு? உன்னுடைய ஆண்டவனிலே அவர்கள் நம்பிக்கை வைக்காவிட்டால் என்ன? நாங்கள் ஒரு சமயத்தைப் படைத்திருக்கிறோமா? இராமகிருஷ்ணரை வழிபடாதவர்களை நமது பகைவர் என்று கருதுவதற்கு நாம் என்ன இராமகிருஷ்ண மதத்தவர்களா? உன்னுடைய அபிமான புத்தியினாலே அவரைத் தாழ்த்திச் சிறுமைப்படுத்திவிட்டாய். உன்னுடைய பகவான் கடவுளாயிருந்தால் அவரை யாவர் எப்பேர் கொண்டழைத்தாலும் அவை எல்லாம் அவருக்குப் பூஜனையேயாம்—மற்றவர்களை

நிந்திப்பதற்கு நீர் யார்! மற்றவர்களை அவமதித்தாலன்றி உன் சொல்லுக்குச் செவிகள் சாயார் என்று நினைக்கின்றாயா! எவ்வளவு மடமை! உன்னைத் தியாகம் பண்ணினாலே அன்றி மற்றவர்களுடைய இருதயததை நீ வெல்ல முடியாது அவர்கள் ஏன் உன் சொல்லைக் கேட்கவேண்டும்?"

சிறிது பொழுதில் சுவாமிஜி ஆறுதலான நிலையி லிருந்து கவலையோடு பின்வருமாறு கூறுவார்:

"என் அரிய நண்பனே! வீரத்தனம் இல்லாதவன் ஆண்டவனிடத்துச் சிரத்தையும் சரணாகதியும் கொள்ளமுடியுமா? ஒருவருடைய இதயத்திலிருந்து பொறாமையும் பகையும் கழியவேண்டுமெனின், அவன் உண்மையான தீரனாக வேண்டும். இவற்றிலிருந்து நீங்கினாலன்றி உண்மை நாகரீகம் எப்படி எய்தும்? இந்த நாட்டிலே ஆண்மையோடு கூடிய வீரத்தை எவ்விடத்தும் காணக்கூடாமலிருக்கிறது. பல விடத்திலும் தேடினேன். ஒரே ஒரு உதாரணத்தைக் கண்டேன்."

விஞ: சுவாமிஜி, எங்குக் கண்டீர்கள்?

சுவா: கிரீஷ் சந்திரரிடத்தில் மாத்திரம் உண்மைச் சரணாகதியைக் கண்டேன். ஆண்டவனுடைய தொண்டனுக்குரிய உண்மை ஆர்வம் அவரிடத்தில் காணப்பட்டது. அவர் எப்பொழுதும் தம்மைத் தியாகம் பண்ண ஆயத்தமா யிருந்தபடியாலன்றோ ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருடைய பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார். அவரைப்போல் மற்றொருவரை நான் கண்டதில்லை. சரணாகதி என்னும் பாடத்தை நான் அவரிடத்தில் பயின்றுகொண்டேன். இப்படிக் கூறி சுவாமிஜி அவருடைய ஞாபகத்தைக் கனப்படுத்துவதற்காகத் தமது கரங்களைச் சிரத்தின்மேல் உயர்த்தினார்.

(48)

சுவாமிஜி இரண்டாம் முறை இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவர் தமது நண்பர் ஒருவரைப் பார்க்கும் நோக்கமாகக் கல்கத்தாவுக்குப் போய்த் திரும்பி வரும்பொழுது பாக்பஜாரிலே பலராம் பாபுவினுடைய வீட்டிலே சில நிமிஷம் தரித்து நிற்கவேண்டியிருந்தது திருமடத்துக்குத் தம்மோடு உடன் செல்வதற்கு மற்றொரு நண்பரை அழைத்து வரும்படி ஓர் ஆள் அனுப்பினார். நண்பர் வருதலும் அவருக்கும் சுவாமிஜிக்கும் இடையே பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது.

சுவா: இன்று ஒரு விசித்திரமான காரியம் சம்பவித்தது. நான் ஒரு நண்பருடைய வீட்டுக்குப்போயிருந்தேன். அவர் ஒரு ஓவியம் எழுதுவித்து வைத்திருக்கிறார். குருக்ஷேத்திரத்திலே போர்க்களத்திலே இரதத்தின்மீது ஆரோகணித்துக் கையிலே கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணன் அருச்சுனனை நோக்கிக் கீதையை உபதேசிக்கின்ற வண்ணமாக அந்தப் படம் எழுதப்பட்டிருந்தது. படத்தை எனக்குக் காட்டி நான் அதைப்பற்றி என்ன நினைக்கிறேன் என அந்த நண்பர் கேட்டார். ஓரளவுக்குக் குற்றமில்லை என்றேன். படத்திலுள்ள வழுக்களைப்பற்றி எனது கருத்தைச் சொல்ல வேண்டுமென்று அவர் வருந்திக் கேட்டபடியால், நான் மறுமொழியாக, “படத்திலே எனது மனத்துக்குப் பிடித்தது யாதொன்று மில்லை; முதலிலே ஸ்ரீ கிருஷ்ணனுடைய காலத்திலே இருந்த இரதம் இக்காலத்துக் கோயில் சிகரம்போன்ற இரதம் அன்று. மேலும் ஸ்ரீ கிருஷ்ணருடைய உருவத்திலே சரியான மெய்ப்பாடு தோன்றவில்லை” என்றேன்.

வின: கோயிற் சிகரம்போன்ற இரதம் அக்காலத்தில் வழங்கப்படவில்லையா?

சுவா : புத்தர் காலந்தொடக்கம் நமது நாட்டிலே யாவற்றிலும் பெரிய நிலைகுலைவு உண்டு என்பதை நீ அறியாயா? கோயிற் சிகரம் போன்ற இரதங்களில் அரசர்கள் ஒருபொழுதும் போர்க்களத்துக்குச் செல்ல வில்லை. பழைய இரதங்களைப் போன்ற இரதங்கள் இற்றைநாள் வரையும் இராஜபுதனத்தில் இருக்கின் றன. கிரேக்க தேசத்துப் புராணக் கதைகளிலே எழுதப் பட்டிருக்கின்ற இரதங்களை நீ பார்த்ததுண்டா? அவற் றுக்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. ஏறும்பொழுது பின்புறமாக ஏறவேண்டும். அத்தகைய இரதங்கள் நம் மிடத்திலிருந்தன. விஷயங்களைத் தவிரவிட்டு ஒரு படத்தை எழுதுவதில் உள்ள நன்மை என்ன? செவ் வனே கற்று ஆராய்ந்து குறித்த காலத்துக்கு உரிய பொருள்களை இருந்த மாதிரியே எடுத்துக் காட்டினால், சரித்திர சம்பந்தமான படம் உயர்தரத்ததாகக் கொள் ளப்படும். உண்மையைச் சித்திரிக்க வேண்டும். அல்லா விடில் படத்துக்கு மதிப்பில்லை இந்நாட்களில் சித்தி ரம் கற்கப்போகின்ற மாணவர்களுள் அநேகர் பாட சாலையில் சித்தி பெருதவர்களாய் ஒன்றுக்கும் உதவாத வர்களென வீட்டிலுள்ளவர்களால் விலக்கப்பட்டவர் கள். இவர்கள் சிறப்புற்ற ஓவியத்தைச் செய்வார்க ளென எதிர்பார்க்கலாமா? ஒரு நல்ல நாடகத்தை எழுதுவதற்கு எவ்வளவு ஆற்றல் வேண்டுமோ, ஒரு நல்ல ஓவியத்தை எழுதுவதற்கும் அவ்வளவு ஆற்றல் வேண்டும்.

விஞ : குறித்த படத்திலே ஸ்ரீ கிருஷ்ணனுடைய வடிவத்தை எவ்வாறு சித்திரிக்க வேண்டும்?

சுவா : கீதையே உருவெடுத்தாலனைய ஸ்ரீ கிருஷ்ண னுடைய படத்தைச் சித்திரிக்கும்பொழுது கீதையி னுடைய மேலாகிய கருத்து அவனுடைய வடிவத்திலே தோற்றும்படி எழுதவேண்டும். மனச்சோர்வினலும், கோழைத்தனத்தினலும் மேற்கொள்ளப்பட்ட அர்ச்

சுனனுக்கு அறநெறியைப் போதிக்கின்ற உருவும் அந்த அறநெறியின் வடிவமாகும்.

இங்ஙனம் கூறிச் சுவாமிஜி ஸ்ரீ கிருஷ்ணனுடைய நிலையைத் தம்மிடத்தே காட்டுவாராய்ப் பின்வருமாறு கூறினர் :—"இதோ பார், குதிரையின் கடிவாளங்களை இப்படிப் பிடிக்கவேண்டும் : வலிந்திழுத்துப் பிடித்திருப்பதனாலே குதிரைகள் பின்னங்காலில் மாத்திரம் நிற்கின்றன. முன்னங் கால்கள் காற்றோடு போரிடுவது போல அசைய வாய்கள திறந்தவண்ணம் இருக்கின்றன. இதனால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வடிவத்திலே வினை மாட்சியோடு கூடிய தோற்றமானது காணப்படும். திக்கனைத்தும் கீர்த்தி படைத்த நண்பன் வில்லையும் அம்பறாத்தூணியையும் எறிந்துவிட்டு இருசேனைகளுக்கும் மத்தியிலே நின்ற இரதத்தின்மீது கோழை நெஞ்சனைப் போலத் தேரிலே சாய்ந்து கிடக்கிறான். ஒரு கையிலே சாட்டையைப் பிடித்திருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணன் மற்றக் கையினாலே கடிவாளத்தை இழுத்துக்கொண்டு பேரன்பினோடும் இரக்கத்தினோடும் பிரகாசிக்கின்ற சிறு குழந்தையின் முகம்போன்ற முகத்தினை அர்ச்சுனன் பக்கமாகத் திருப்பி, ஆறுதலோடு கூடிய மாசற்ற பார்வையோடு தனது அரிய நண்பனுக்குக் கீதையின் உண்மையை எடுத்து இயம்புகின்றான். இத்தகைய படம் கீதாசிரியனைப்பற்றி என்ன எண்ணத்தைத் தருகின்றது என்று சொல்லுவாயாக."

நண்பர் : உறுதியோடும் அடக்கத்தோடும் கூடிய வினைமாட்சியைக் காட்டுகிறது.

சுவா : ஆம், அதுவே ! உடலம் முழுவதிலும் தொழில் செய்தல் நிறைந்திருக்கின்றது. முகத்திலோ வென்றால் நீல ஆகாயத்தைப்போல ஆழ்ந்த ஆறுதலும் நிலை கலங்காமையும் காணப்படுகின்றன. கீதைக்கு நடுவாகப் பொருந்தி இருக்கின்ற கொள்கையும் இதுவே. எல்லாக் கருமங்களிலும் அமைதியாகவும் உறுதியாகவும்

நிலைபெற்றிருந்து, உடலும், மனமும் ஆவியும் ஆண்டவனுடைய திருவடிகளை அடைந்து நிற்கச்செய்வது.

கர்மண் யகர்மய : பஸ்யேத் அகர்மணிச கர்மய :
ஸ புத்திமான் மனுஷ்யேஷு ஸயுக்த : க்ருத்ஸ்ன கர்மக்ருத்
—கீதை, 4—18

"செயல் செய்யும்பொழுது மனத்தை அமைதி நிலையில் வைத்திருப்பவனும், புறத்தே வெளிப்பட்டுத் தோன்றுகின்ற செயல் ஒன்றேனும் செய்யாதிருக்கும் நிலையில் பிரம்மத்தைத் தியானிக்கின்ற இடையீடில்லாத செயலினைச் செய்துகொண்டிருப்பவனும் ஆகிய பேரறிவாளனே யோகியெனப்படுவான். அவனே செயலிலும் தீரனாவான்."

'செயன் மேனின்ற வறிவிடையே செயலின்மையுமச்செயல் செய்யா, வியன்மேனின்ற புலன்களிலேயெல்லா வினையுமியல்வதுவு, மயன்மேலின்றி யறிந்தானியாரவனே யெல்லா மறிந்தோனும், உயன்மேனின்ற யோகியு நல்வினைகளெல்லா மொழிந்தோனும்.'

இந்தக் கணத்திலே தோணி ஒழுங்குபண்ணப் போயிருந்த மனிதன் திரும்பி வந்து அது ஆயத்தமாயிருக்கிறதென்று சொல்ல, சுவாமிஜி தமது நண்பரை நோக்கி, "வாராய், இப்பொழுது மடத்துக்குப் போவோம். நீ என்னோடு போவதாக வீட்டிலே சொல்லிவிட்டு வந்திருக்கிறாய் என்றெண்ணுகிறேன்" என்றார்.

தோணி ஏற நடந்து செல்லும்பொழுது இருவரும் தொடர்ந்து சம்பாஷித்துக்கொண்டு போயினர்.

சுவா : வேலை எல்லையற்ற வேலை ; பயன் கருதாத வேலை ; உள்ளமும் ஆவியும் ஆண்டவனுடைய கமல பாதங்களிலே அசைவற்றிருப்பது—இந்த எண்ணத்தை எல்லோருக்கும் போதிக்க வேண்டும்.

வினா : இது கருமயோகமல்லவா ?

சுவா : ஆம், இது கருமயோகந்தான்—ஆனால் சமய சாதனை இன்றி இத்தகைய கருமயோகத்தை

உன்றாற்செய்ய முடியாது. நால்வகை யோகத்தையும் சமரசப்படுத்த வேண்டும்—இல்லாவிட்டால் இருதயத்தை ஆண்டவனிடத்திலே மாறுது வைத்திருப்பது எங்ஙனம் கைகூடும்?

விஞ: வேதத்திற் குறிப்பிட்ட பாகங்களையும், ஏனைய சமயக்கிரியைகளையும், செய்வதுதான் நற்கருமமாகுமென்றும், ஏனைய தொழில்கள் பயனற்றவையென்றும் கீதை போதிக்கிறதென்பது பொதுவான அபிப்பிராயம்.

சுவா: நல்லது; ஆனால் எல்லாவற்றையும் உள்ளடக்கிப் பேசவேண்டும். நீ சுவாசிக்கும் ஒவ்வொரு சுவாசத்துக்கும், நினைக்கும் ஒவ்வொரு நினைவுக்கும் மற்றக் கருமங்களுக்கும் யார் பொறுப்பாளி? நீ யல்லவா?

நண்பர்: ஆம் என்றும் இல்லை என்றும் சொல்லலாம். இதனைத் தெளிவாகச் சொல்ல என்றால் முடியவில்லை மனிதன் கருவி; பகவான் கருத்தா; ஆண்டவனுடைய சித்தத்தினால் வழிநடத்தப்படும்பொழுது நான் எனது கருமங்களுக்குப் பொறுப்பாளியல்ல

சுவா: அதியுயர்ந்த நிலையிலிருந்துதான் அப்படிச் சொல்லுதல் கூடும். தொழில் செய்வதனாலே மனம் பரிசுத்தம் அடைந்து எல்லா வேலைகளையும் ஆண்டவனே செய்விக்கிறான் என அறியும்பொழுது அப்படிப் பேசும் உரிமை உனக்கு உண்டு. இல்லாவிட்டால் அனைத்தும் வீண் பேச்சே?

விஞ: எல்லாக் கருமங்களையும் ஆண்டவனே செய்கிறான் என்று நியாய வழியிலே நிச்சயித்திருந்தால் அது பொருத்தமாகாதா?

சுவா: அவ்வகையான நிச்சயம் வந்தால் அது பொருத்தமா யிருக்கலாம். ஆனால் அது ஒரு கணத்தில் அழிந்துவிடும். அதன்பின் நிலைபெற்றிராது. நீ நாள்தோறும் நடத்திவருகின்ற வாழ்க்கையிலே நீதான் கருத்தா என்னும் அகங்கார எண்ணம் செறிந்திருக்

கிறதா அன்று என்பதை நன்றாக சிந்தித்துப்பார். ஆண்டவனே உன்னைக்கொண்டு வேலை செய்விக்கிறான் என்பதை நீ எவ்வளவு நேரம் நினைத்திருக்கிறாய்? ஆனால் மீண்டும் மீண்டும் உள்ளத்தினுள்ளே இவ்வண்ணம் விசாரித்தால் 'நான்' என்னும் எண்ணம் மறைந்து போம். அதனிடத்தில் ஆண்டவன் நிலைபெற்றிருப்பான். அப்பொழுது ஆண்டவனே உள்ளிருந்து செயல்களை எல்லாம் காப்பாற்றுகிறான் என்று நீதியாக நீ சொல்லுதல் கூடும். ஆனால் என் நண்பனே, 'நான்' என்னும் எண்ணம் உன்னுடைய சிந்தை முழுவதையும் நிறைத்திருக்கும்பொழுது ஆண்டவன் வந்து உறைய இடம் எங்கே உண்டு? இத்தகைய நிலையில் ஆண்டவன் சமூகமளிக்காம லிருக்கிறான்

வினா: தீங்கான சுபாவத்தையும் எனக்குத் தந்தவன் அவன் தானே?

சுவா: இல்லை, ஒரு பொழுதும் இல்லை. அங்ஙனம் நினைப்பது பெரிய தேவநிந்தையாகும். உன்னை அவன் தீமை வழியிற் செலுத்தவில்லை. நுகர்ச்சிகளின் மேலுள்ள இச்சையினாலே நீயே தீமையைப் படைத்துக் கொள்ளுகிறாய். எல்லாவற்றையும் ஆண்டவனே செய்விக்கிறான் என்று சொல்லிக்கொண்டு பிழை புரிதலே நிலைபெற்றிருப்பவன் நாசமடைகின்றான். தன்னைத் தானே வஞ்சிப்பதற்கு உற்பத்தி நிலையம் இதுவாகும். ஒரு நற்கருமத்தைச் செய்துமுடித்த பின்னர் ஒருவனை உள்ளக் கிளர்ச்சி இருப்பதை நீ உணர்ந்ததில்லையா? நன்மை செய்ததற்கு உரிய பெருமையை நீ உனக்குச் சேர்த்துக் கொள்ளுகிறாய்—இது மனித இயற்கை நற்கிரியைகளுக்கு உரிய பெருமையைத் தான் எடுத்துக் கொண்டு தீமைக்குரிய குற்றத்தை ஆண்டவன்மேற் போடுவது எவ்வளவு பொருந்தாக் கொள்கை? இது மிகக் கெடுதியான நிலை—கீதையையும் வேதாந்தத்தையும் செவ்வையாக உணர்ந்து கொள்ளாமையினால் ஏற்படுவது. இந்த எண்ணத்தை வைத்திராதே. நன்மை

அனைத்தும் ஆண்டவனாலே ஆகிறதென்றும், தீச்செயல்களுக்கு நீயே பொறுப்பாளி என்று கொள்ளுவதும் பொருத்தமாகும். இதனால் பக்தி சிரத்தை உண்டாகும். ஆண்டவனுடைய அருள் இதனால் வெளிப்பட்டுத் தோன்றும். உன்னை யாரும் படைக்கவில்லை. நீயே உன்னைப் படைத்துக் கொண்டாய். இப்படி அறிவது விவேகம்; இது வேதாந்தம். ஆயினும் மெய்யுணர்வின் பின்பன்றி ஒருவன் இதனை உணர்ந்து கொள்ளுவதில்லை. ஆதலினாலே சாதகன் துவைத நிலையிலே ஆரம்பிக்கவேண்டும். நன்மை எல்லாம் ஆண்டவனால் செய்யப்படுகின்றன என்றும், தீமைக்குத் தானே பொறுப்பாளி என்றும் கொள்ளவேண்டும். சித்தத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்கு இதுவே எளிதான மார்க்கம். வைஷ்ணவரிடையே துவைத மார்க்கத்தைப் பலமாகக் காணலாம். அத்வைத எண்ணங்களை முதலிலே கொள்ளுவது கடினம். துவைதநிலை படிப்படியாக அத்வைத உணர்ச்சியைத் தரும்.

“வாக்கும் மனமும் வேறுபட்டிருத்தல் எப்பொழுதும் கெடுதியைத் தருவது. தன்னைத்தானே வஞ்சிக்காதிருந்தால், அஃதாவது ஒருவன் உண்மையாகவே தீய செயல்களும், ஆண்டவனுடைய ஏவுதலினால் நடக்கின்றனஎன்று எண்ணினால், அவன் இழிந்த செய்கைகளிலே நிலைபெற்றிருக்கமாட்டான் என்பதை முற்றிலும் நம்புவாயாக. மனத்தின் அழுக்கனைத்தும் விரைவிலே அழிந்து போகின்றன. சமயநூல்களை எழுதிய பழைய ஆசிரியர்கள் இதனை நன்றாக அறிந்திருந்தார்கள். பௌத்தர்களுடைய நெருக்கடியினாலே வைதிகக் கிரியைகள் இரகசியமாகச் செய்யப்பட்ட காலந்தொடக்கம் தாந்திரீக வழிபாடு உற்பத்தியாகியதென நான் நினைக்கின்றேன். ஒரே தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்குக் கிரியைகளைச் செய்யும் வசதி அக்காலத்து மக்களுக்கு இருக்கவில்லை. ஆதலினாலே களிமண்ணினால் உருவத்தைச் செய்து இரவிலே வழிபட்டு எல்லாக் கிரியைகளையும் முடித்துக்கொண்டு ஒருவகை அடையாளமும் விடாமல்

உருவத்தைத்தானும் கங்கையில் எறிந்துவிடுவார்கள். இரவில் நடக்கும் பூஜை ஒவ்வொரு வீட்டிலும் நடை பெற்றது. அக்காலத்து மக்களுடைய மனநிலை பல நுகர்ச்சிப் பொருள்களின்மீது சென்றுகொண்டிருந்தது. 'வீட்டுக்கு வருதற்குக் கொல்லைப்புறத்தாலும் வழி யுண்டு' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுபோல அக் காலத்துச் சமயாசாரியர்கள் அக்காலத்து மக்களுடைய மனநிலையை அறிந்து தீய சிந்தையினாலே ஒரு சமயக் கிரியையும் செய்யாதிருந்தோருக்கு நல்வழிப் படுத்து வதற்குரிய ஒரு மார்க்கத்தினையும் அமைத்தார்கள். இதற்காகவே நூதனமான தாந்திரீகக் கிரியைகள் புதுவ தாக அமைக்கப்பட்டன.

வினா : தீய கருமங்களை நல்லன என்று எண்ணிக் கொண்டு செய்துவந்தார்கள். இதனால் அவர்களுடைய தீமை நீங்கியதெப்படி ?

சுவா : ஆண்டவனை அடைதல் கருதி அவற்றைச் செய்தார்கள். ஆதலினாலே தங்களுடைய ஒழுக்கத் துக்கு வேறுபட்ட ஒரு மார்க்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

வினா : இது உள்ளபடி முடிவது உண்டா ?

சுவா : நோக்கம் சரியாயிருக்க வேண்டும். அப்படி இருந்தால் எது அவர்களை அநுகூலப்படாமல் தடுக்கும்?

வினா : அத்தகைய மார்க்கத்தினாலே அநேகர் மது மாம்சமாகிய வலைகளிலே சிக்கிக்கொள்ளுகிறார்கள்.

சுவா : இதற்காகவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவவ தாரம் செய்தார். அந்த வகையாகத் தந்திரத்தை அப்பி யசிக்கிற காலம் போய்விட்டது அவரும் தந்திரத்தை அப்பியசித்தார் ஆனால் அந்த முறையிலல்ல மது அருந்த வேண்டுமென்னும் விதியுள்ளவிடத்து ஒரு துளியை மாத்திரம் தொட்டு நெற்றியில் வைத்துக் கொள்ளுவார் ; தாந்திரீக முறையான வழிபாடு வழுக் கற் பூமியை நிகர்த்தது. இந்த மாகாணத்திலே தந்திரம்

போதிய அளவுக்கு இருந்துவிட்டது. இனி நாம் அதற்கு அப்பாற் செல்லவேண்டும். வேதங்களைப் படிக்க வேண்டும். நால்வகை யோகங்களுக்கும் சமரசம் காணவேண்டும். இந்திரியங்களை அடக்கவேண்டும்.

வினு : நால்வகை யோகங்களுக்கும் சமரசம் என்பதனுற் றுங்கள் கருதுவது என்ன ?

சுவா : நித்தியா நித்திய வஸ்து விவேகம், வைராக்கியம், பக்தி, கருமம், யோக சாதனைகள் என்னும் இவற்ேறாடு பெண்களிடத்து வணக்கமாக நடந்துகொள்ளுதல்.

வினு : பெண்களிடத்து வணக்கமாக நடந்து கொள்ளுதல் எப்படி ?

சுவா : அவர்கள் உலகமாதாவின் உருவங்கள் உலகமாதாவின் உண்மையான வழிபாடு தொடங்கும் பொழுதுதான் இந்தியாவுக்கு நன்மை ஏற்படும். ஒவ்வொரு மனிதனும் உலகமாதாவின் பலிபீடத்திலே தன்னைப் பலியாகச் செலுத்தவேண்டும்

வினு : பாலிய வயதாக விருக்கும்பொழுது தேவரீரை நோக்கி யாராவது விவாகம் செய்யுமபடிச் சொன்னல் அதற்கு மறுமொழியாக, "நான் செய்யமாட்டேன், நான் எத்தன்மையோனுக வருவேன் என்பதைப் பின்பு காணுங்கள்" என்று சொல்வதுண்டு. தேவரீருடைய வார்த்தைகள் இப்பொழுது நிறைவேறி இருக்கின்றன.

சுவா : ஆம், என்னருமைச் சகோதரனே ! நான் உணவின்றி இருந்தேன். கடினமாக வேலை செய்தேன். ஆ, எவ்வளவு அபாரமான வேலை ! இன்று அமெரிக்கர்கள் எனக்கு இந்த நேர்த்தியான கட்டிலை அன்பின் மேலீட்டினுலே தந்திருக்கிறுர்கள். எனக்கு உண்பதற்கும் கொஞ்சம் உண்டு. ஆனுல், ஐயோ, தேகாநுபவங்களைச் சிறிதேனும் பெறுவதற்கு எனக்கு விதியில்லை—மெத்தையிற் படுத்தால் எனக்கு நோய் அதிகரிக்கின்றது. மூச்சுவிடக்கூடாத மாதிரி இருக்கின்

றது. ஆறுதலுக்காக நிலத்திலே இறங்கிப் படுக்க வேண்டி இருக்கின்றது.

(49)

எங்கள் வீடு சுவாமிஜியினுடைய வீட்டுக்குச் சமீபமாயிருந்தது. அந்த அயலில் வசித்த ஏனைய சிறுவரும் நானும் இளம்பிராயத்தில் விளையாடுவதுண்டு. சின்னஞ் சிறு பிராயந்தொட்டு நான் அவர்மீது விசேஷ அன்புடையவனுயிருந்தேன். அவர் ஒரு பெரிய மனிதராவார் என்னும் உண்மையான நம்பிக்கை எனக்கு எப்பொழுது மிருந்தது. அவர் துறவுபூண்ட நாளில் உயர்வும், பெருமையும் அடையத்தக்க சீவியம் வீணுய்ப் போயிற்றே யென்றெண்ணினேன்.

பின்னுளில், அவர் அமெரிக்காவுக்குப் போயிருந்த காலத்தில் சிக்காகோ சர்வமத சபையிலும் பிறவிடங்களிலும் செய்த பிரசங்கங்களைப் பற்றிப் பத்திரிகைகளிற் படித்தறிந்தேன். அறிந்ததும் நெருப்பினைச் சீலையினுல் மூடி வைத்தல் கூடாது என்பதையுணர்ந்து கொண்டேன். சிறு தீ பெருஞ் சுவாலையாயிற்று; அரும்பு காலாந்தரத்தில் நறுமலராயிற்று.

அதன்பின் சுவாமிஜி இந்தியாவுக்கு வந்துவிட்டாரென்றும், சென்னையிற் சிறந்த உபந்நியாசங்கள் செய்திருரென்றும் அறிந்தேன். அவற்றைப் படித்துப் பார்த்து இந்து மதத்தில் நிறைந்திருக்கிற உயர்தனிக் கொள்கைகளைக் கண்டு ஆர்வமுற்றேன், அக்கொள்கைகளை மிகத் தெளிவாக விளக்கிய சுவாமிகளுடைய சொல்வன்மையைக் கண்டதிசயித்தேன். ஆ! என்ன ஆற்றல்! இவர் என்ன, தேவனு, அன்றேல் மனிதன்றனு, என்றெண்ணினேன்.

சுவாமிஜி கல்கத்தாவுக்கு வந்தபோது குதூகலமாயிருந்தது. காசிப்பூர் கங்கைக் கரையிற் சிலருடைய பூஞ்சோலை வீட்டுக்கு நாங்களெல்லோரும் போயிருந்

தோம். சில நாட்கள் கழிந்தபின் ராஜா ராதகாந்த தேவருடைய வீட்டிலே மங்கள வாழ்த்துப் பத்திரம் படிப்பதற்காக ஒருங்கு திரண்ட திரளான சனங்களுக்கு 'கல்கத்தாச் சிறுவர்' உள்ளத்துக்குக் கிளர்ச்சியைத் தரும் உயர்ந்த உபந்நியாசஞ் செய்தார். அவருடைய வன்மையை முதன் முதலாகக் கேட்ட கல்கத்தாச் சனங்கள் அதிசயித்து ஆனந்தசாகரத்திலாழ்ந்தனர். இவையெல்லாம் யாவருமறிந்த விஷயம்.

சுவாமிஜி கல்கத்தாவுக்கு வந்த நாட்களில் அவரை ஒரு நாளைக்குத் தனித்துக் காண வேண்டுமென்றும் பிள்ளைமைப் பருவத்திற் கலந்து பேசியதுபோலக் கலந்து பேச வேண்டுமென்றும் விரும்பினேன். ஆனால் இடைவிடாமல் வருவாரும் போவாருமாகப் பலதிறப்பட்ட சனங்கள் நிறைந்திருந்தமையாற் சௌகரிய மேற்படவில்லை. பல நாட்களாகக் காத்திருந்தபின் ஒருநாள் கங்கைக் கரையிலுள்ள தோட்டத்திற் சந்தித்துக் கொள்ளும் பேறு கிடைத்தது. சிறு பிராயத்தில் தமது விளையாட்டுத் தோழனோடு வசனித்த வண்ணமே இப்பொழுதும் வசனித்தார். சிறிது நேரத்துக்குள் ஒருதூதன் வந்து, யாரோ அழைத்துவரச் சொன்னதாகச் சொன்னான் அவனை நோக்கி, "மகனே, சற்று நேரம் என்னை இங்கிருக்கவிடு. இதோ, எனது பாலிய நண்பன்; இவரோடு சிறிது நேரம் வசனிக்கவும், சுத்தக் காற்று வீசுகிற இவ்விடத்தில் நிற்கவும் விரும்புகிறேன். வந்தவர்களை உபசரித்து, இன்சொல் கூறி, ஆசனமளித்து, தாம்பூல முதலியன கொடுத்துச் சற்றுப் பொறுத்திருக்கும்படி சொல்வாய்' என்றனர். அவன் போயின பின்னர், நான் சுவாமிஜியைப் பார்த்துச், "சுவாமிஜி, தாங்கள் சாதுவாயிற்றே, பஞ்சம் நிறைந்த இத்தேசத்திற் றங்கள் வரவேற்பு உபசாரத்துக்காகப் பொருள் சேர்க்கப்பட்டதே; உபசாரத்தை வெறுத்து அந்தப் பொருளைப் பஞ்ச நிதிக்குக் கொடுத்து விடும்படி, தாங்கள் சொல்லி யிருக்கலாகாதா? ஏன் அப்படிச் செய்யவில்லை" என்றேன்.

சுவா: ஏனெனில், என்னைச் சார்பாகக் கொண்டு ஊரில் ஒரு பெருங்கிளர்ச்சி யுண்டாக வேண்டுமென்று விரும்பினேன். இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் மூலமாகச் சனங்கள் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருப்பெயரைக் கேட்கவும் அவருடைய தொண்டினைச் செய்வதில் ஆர்வமுறவும் ஏற்படுகின்றதல்லவா? அவரைப் பற்றி யறிவதற்குச் சனங்களுடைய உள்ளத்தில் எவ்வளவு ஆவலுண்டாயிருக்கிறது பார்த்தாயா? இது முதலாகப் பகவான் உலகுக்கு வந்த நோக்கத்தைச் சனங்கள் ஆராய்ந்தறிவார்கள், அதனாற் றேசத்துக்கு மிக்க நன்மை யுண்டாகும். உலகை நன்னிலைப்படுத்துவதற்காக வந்த அவரை அறியாதிருக்கும் வரையுஞ் சனங்களுக்கு எங்ஙனம் நன்மையுண்டாகும்?

"ஸ்ரீ ராமகிருஷ்ண பகவான் உண்மையில் யார் என்பதைச் சனங்கள் அறிந்து கொள்வார்களாயின் சகல நற்குணங்களும் பொருந்திய ஆண் மக்களாவார்கள். தைரியம் பொருந்திய உண்மை யாடவர் இருக்கிற நாட்டிற் பஞ்சம், தரித்திரம் இவை ஒரு போதும் ஏற்படா இவ்வாறு சிந்தித்தமையினாற்றான் என்னைச் சார்பாகக் கொண்டு கல்கத்தாவில் ஒரு கிளர்ச்சி யுண்டாக வேண்டுமென்று விரும்பினேன்; இல்லாதிருப்பின் இத்தனை யாடம்பரங்கள் எதற்காக? முன்னாளில் உன்னுடைய வீட்டில் உன்னோடு கூடி விளையாடிய காலத்திலிருந்ததைப் போலவே இப்பொழுதும் இருக்கிறேன். ஏன் என்னிடத்தில் ஏதாவது வேறுபாடு தோன்றுகிறதா? சொல்."

"வேறுபாடு இல்லை" என்று என்னுடைய வாய் சொல்லியதெனினும், உள்ளமோ நீர் இப்பொழுது தெய்வத்துவம் பொருந்தியிருக்கிறீர் என்றது.

சுவாமிஜி மேலுஞ் சொல்லுவார்: "பஞ்சம் நமது நாட்டில் நீங்கா வியாதியாகக் குடிகொண்டிருக்கிறதே. இப்படிப் பிற நாட்டிலிருக்கிறதா? இல்லை.

ஏனெனில் பிற நாடுகளில் மனிதர் இருக்கிறார்கள்; நமது நாட்டிலோ வென்றால் மனிதர் தமது மனிதத்துவத்தை இழந்து கட்டைபோல் ஆய்விட்டார்கள். சனங்கள் முதலில் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருடைய துறவினையுந் தமக்கென வாழாத் தன்மையினையும் அறிந்து கொள்ளட்டும். அப்படி யறிந்து கொண்டபின் நாட்டிலுள்ள கேட்டினை ஒழிக்கத் தாமாகவே முயற்சிப்பார்கள். இந்த வழியிலும், நான் சில முயற்சி செய்ய எண்ணியிருக்கிறேன். அதை நீ காலாந்தரத்திற் கண்டறிவாய்."

சிஷ்: நல்லது. பகவானுடைய பெயர் விளங்கப் பல பிரசங்கங்கள் செய்யப் போகிறீர்களென்று எண்ணுகிறேன்.

சுவா: என்ன மூடத்தனம்! அப்படி ஒரு காரியமுமில்லை. பகவானுடைய பெயர் விளங்கவேண்டியமுயற்சி செய்திருக்கிறேன், செய்யாமல் விட்டதொன்றுமில்லை. பிரசங்கங்களால் இந்த நாட்டில் என்ன பயன் விளையப் போகிறது? கல்வி கற்றவர்கள் வந்து கேட்டு நன்றாயிருக்கின்றது என்று ஆர்ப்பரித்துக் கொண்டு போவார்கள்; வீடு போய்ச் சேர்ந்ததும், போசனத்தோடு பிரசங்கத்தையுஞ் சாப்பிட்டு விடுவார்கள்; அவ்வளவுதான். துருப்பிடித்திருக்கிற இரும்புத் துண்டைச் சம்மட்டிகொண்டடித்ததனு லாவதென்ன? வீணில் துண்டு துண்டாய்ச் சிதறிவிடும். முதலிற் பழுக்கக் காய்ச்சவேண்டும்; பின்பு எந்தப் பக்கத்துக்கு வளைக்க வேண்டுமோ அந்தப் பக்கத்துக்கு வளைத்துக்கொள்ளலாம். ஆர்வம் நிறைந்த முன்மாதிரியாக சீவியத்தைக் கண்டாலல்லது நமது நாடு நல்ல வழிக்கு வராது. தமக்குரிய அனைத்தையுந் துறந்து, தமதுயிரைத் தேச நன்மைக்காகக் கொடுக்கத் தயாராயுள்ள சில இளைஞர்கள் முன்வர வேண்டும். அவர்களைத் திருத்தி நல்ல வழியில் வைத்த பின்பு உண்மையான முன்னேற்றம் உண்டாகும்.

சிஷ் : அன்புள்ள சுவாமிஜி, நமது நாட்டிலுள்ளவர்கள் தங்களுடைய மத உண்மையை யறியாமற் கிறிஸ்துவ முகம்மதிய பரசமயங்களிற் புகுந்துகொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு உதவி செய்யாமல், தாங்கள் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய இடங்களுக்குப்போய் இந்து சமயப் பிரசங்கஞ் செய்ததேனோ என்னுஞ் சந்தேகம் என்னுள்ளத்திற் கிடக்கின்றது.

சுவா : ஆராய்ந்து பார். இப்பொழுது நமது நாடு நிலை பிறழ்ந்திருக்கிறது. உண்மையான சமயானுஷ்டானஞ் செய்கிறதற்கு நம்முடைய தேசத்து மனிதரிடத்தில் வலிமை யிருக்கிறதா? தாங்கள் சத்துவகுண மேலிட்டவர்கள் என்று வாயாற் சொல்லுகிற பெருமைதான் அவர்களிடங் குடிகொண்டிருக்கிறது உண்மையிற் சத்துவகுண முடையவர்களாயிருந்த காலமுமுண்டு, இப்பொழுதோவென்றால் மிகத் தாழ்ந்த நிலையிலிருக்கிறார்கள். சத்துவ நிலையிலிருந்து விழுபவர்கள் தலைகீழாகச் சென்று தாமச நிலையையே அடைவார்கள். தன் முன்னால் நடக்கிற கொடுஞ் செய்கைகளையும் ஒருவர் மற்றொருவருக்குச் செய்யுந் தீமைகளையும் பார்த்துக்கொண்டு, கதவை யடைத்துக் கண்ணை மூடி, மூலையிலிருந்து 'ஹரி ஹரி,' என்கிறவன் சத்துவ குணம் படைத்தவன் என்று சொல்லப்படுவானா? ஒருபோதும் இல்லை. அவன் பேரிருளாகிய தாமச குணத்தினால் மூடப்பட்டவன். இன்ப சுக போகங்களின் மேலுள்ள ஆசை சிறிதேனுந் தணியாத சனங்களுக்குத் துறவின்மேல் விருப்பம் எங்ஙனம் உண்டாகும்? ஆதலினால் சனங்கள் உண்ணவும், உடுக்கவும், சற்று சுக மனுபவிக்கவும் வேண்டிய பொருளைப் பெறுதற்குரிய வழி வகைகளைக் காட்டி வைப்போம். பிறகு படிப்படியாக வைராக்கிய முண்டாகி உண்மைச் சமய நெறியில் நிற்குந் திறமுண்டாகும். இங்கிலாந்து அமெரிக்கா தேசத்துச் சனங்களைப் பார். அவர்கள் எவ்வளவு இராஜச குணம் படைத்தவர்களா யிருக்கி

றூர்கள். உலக போகங்களை யனுபவித்துத் தேக் குண்டவர்களாயிருக்கிறூர்கள். அங்ஙனமன்றியும் நம்முடைய பௌராணிக மதத்தை யொருவாறெத்து நம்பிக்கையும் மூடக் கொள்கையுமுள்ள கிறிஸ்தவ மதம் இருக்கின்றது. கல்வி கலாவிருத்தியின் காரணமாக மேலைத்தேச வாசிகள் அதனிடத்துச் சாந்தியைக் காணமாட்டார். அவர்களுடைய தற்கால நிலையிலே ஒரு படியேறச் செய்வதால் சத்துவ குணத்தை அடைவார்கள். அஃதன்றியும் வெள்ளைத் தோலுள்ளவர்கள் வந்து உங்களுக்கு உங்கள் மதத்தைப் போதிக்கும்போது, நீங்கள் செவி கொடுத்துக் கேட்பீர்கள், கந்தையுடுத்திருக்கிற சந்நியாசிகளுடைய வார்த்தைகளைக் கேட்பீர்களா?

சிஷ்: ஆம், மகராஜ் ஸ்ரீ என். கோஷும் அப்படித்தான் சொல்லுகிறூர்.

சுவா; என்னுடைய மேலைத் தேசத்துச் சிஷ்யர்கள் தக்கபடி அநுஷ்டானஞ் செய்து அநுபூதிமான்களாகிக் கூட்டங் கூட்டமாக இங்கு வந்து, உங்களைப் பார்த்து, "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உங்களுடைய சிரத்தை யெங்கே போயிற்று? உங்களுடைய கர்மாநுஷ்டானங்கள், பழக்க வழக்கங்கள், நல்லொழுக்கம் முதலியவற்றையும், உங்கள் சமய நெறியையும், மிக உயர்வானவையென நாங்கள்கூடக் கருதுகிறேமே?" என்று சொல்லும்போது உங்களுட் பெரியோராயிருப்போரெல்லாம் போய் அவர்களுடைய மொழிகளைக் கேட்பார்கள்; அதனுல் பெரு நன்மை உண்டாகும். அங்ஙனமாயினும் அவர்கள் உங்களுக்குச் சமயநெறி கற்பிக்கிற குரு ஆகமாட்டார்கள். பௌதிக சாஸ்திரம், தொழிற் கல்வி முதலியவற்றுக்கு அவர்கள் குரு ஆவார்கள். உலகத்துக்குச் சமயநெறி புகட்டுகிற குருத்துவம் எப்பொழுதும் இந்தியாவுக்கே உரியதாகும்.

சிஷ் : சுவாமிஜி, அஃதெங்ஙனமாகும்? மேனாட்டார் எங்களை வெறுத்து நோக்குகிற தன்மையைப் பார்க்கும்பொழுது தமது நலங் கருதாது எமக்கு நன்மை செய்வார்களென்று எண்ணச் சிறிதுமிடமில்லை.

சுவா ; அவர்கள் நம்மை வெறுப்பதற்குப் பல நியாயங்களுண்டு. முதலிலே நாம் தோல்வியுற்ற சாதியாராயிருக்கிறோம். இனி நம்மவர்களைப்போலப் பல்லிளித்து இரக்கிற சாதியார் பிறரெவருமிலர். தாழ்ந்த சாதியார் என்று கருதப்படுகிற பெரும்பாலார், உயர்ந்த வகுப்பாரிடம் உதையும், அடியும் பட்டுத் தம் வலியிழந்து ஆண்மை குன்றி ஏழை நெஞ்சு படைத்தவர்களானார்கள். இனிச் சற்று உயர்வென்று கருதப்படுபவர்களோ சிறிது இங்கிலீஷ் வாசித்துவிட்டுக் குமாஸ்தா வேலை கேட்டு மன்றாட்டுப் பத்திரமுங் கையுமாகத் திரிகிறார்கள். இருபது முப்பது ரூபாய் மாத வரும்படியுள்ள ஒரு குமாஸ்தா வேலை ஏற்பட்டால் எத்தனை பி. ஏக்களும், எம். ஏக்களும் விண்ணப்பப் பத்திரத்தோடு வெளிவருகிறார்கள்! ஐயோ, அந்தப் பத்திரங்களிலுள்ள கட்டுரையின் இழிவோவென்றால் சொல்லவொண்ணாது. "ஐயா, எனக்கு உண்ணுகிறதற்கு ஒன்றுமில்லை; எனது மனைவியும் குழந்தைகளும் பட்டினியாய்க் கிடக்கிறார்கள்; கருணை கூர்ந்து ஒரு வேலை தந்தருள வேண்டுமென்று தாழ்மையாய் மன்றாடுகிறேன். தேவரீர் கருணை கூராவிட்டால் நாங்கள் பட்டினியா லிறந்து விடுவோம்." இப்படிப் பல்லை யிளித்துப் பிழைப்புப் பெற்று மானத்தைக் காற்றில் தூற்றி விட்டு அடிமைத் தொழில் செய்வார்கள். இனிக் கொஞ்சம் உயர் படிப்பார்களோவென்றால் சங்கங்கள் கூட்டி, "ஐயோ! இந்தியா நாளுக்கு நாள் அழிந்து போகிறது. ஆங்கிலேயப் பிரபுக்களே, எங்கள் தேசத்தவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங் கொடுங்கள்; பஞ்சத்தை நீக்குங்கள்" என்று உரத்து ஓலமிடுகிறார்கள்.

எங்கு பார்த்தாலும் "கொடுங்கள், கொடுங்கள், ஆங்கிலேயர்களே மேலும் மேலுங் கொடுங்கள்" என்ற ஓசையே கேட்கிறது ஐயோ, அவர்கள் உங்களுக்கு இன்னுங் கொடுக்கவேண்டியதென்ன? புகைவண்டி, தந்தி தபால்—இவற்றைத் தரவில்லையா? தீவட்டிக் கொள்ளைக்காரர்களை ஒழித்து நாட்டினைச் சீர்படுத்தவில்லையா? பௌதிக சாஸ்திரக் கல்வியைத் தரவில்லையா? இன்னும் அவர்கள் தரவேண்டியதென்ன? முற்றுன தன்னல மறுப்போடு யாராவது கொடுத்துக் கொண்டே யிருப்பதுண்டா? அவர்கள் இத்தனை காரியங்களைத் தந்திருக்கிறுர்களே; அவர்களுக்கு நீங்களென்ன கொடுத்திருக்கிறீர்கள்?

சிஷ்: எங்களிடம் கொடுப்பதற்கு என்ன இருக்கிறது மகராஜ்? நாங்கள் வரிப் பணம் கொடுத்து வருகிறோம்?

சுவா? நீங்களா கொடுக்கிறீர்கள்? நாட்டை ஒழுங்காக வைத்திருப்பதற்காக உங்களை நெருக்கி அவர்கள் வரிப் பணம் வாங்குகிறுர்கள். உங்களுக்கு அவர்கள் இத்தனை நன்மை செய்ததற்குப் பிரதி யுபகாரமாக நீங்கள் என்ன கொடுத்தீர்கள்? உள்ளபடி சொல்லு பார்ப்போம். உங்களிடமுங் கொடுப்பதற்கேற்றதும் அவர்களிடமில்லாததுமான பொருளிருக்கிறது உங்களிற்சிலர் இங்கிலாந்துக்குப் போகிறீர்கள், அதுவுங் கல்வி யிரப்பதற்காகவே. ஒரு சிலர் இங்கிலாந்துக்குப் போய்ப் பிரசங்கங்கள் செய்து மேனுட்டாருடைய சமய நெறி சிறந்ததென்று சொல்லிவிட்டு வருகிறுர்கள். எவ்வளவு புத்திசாலித்தனம்! அவர்களுக்குக் கொடுப்பதற்கு உங்களிடம் ஒன்றுமில்லையா? ஏன் இல்லை? இருக்கிறது. விலைமதிக்கொண்ணு அரும்பெரும் பொருளாகிய சமய நெறியும், தத்துவ ஞானமும் உங்களிடமிருக்கிறது. உலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்பாயாயின், உலகிலுள்ள உயர்தனிக் கொள்கைகளனைத்தும் இந்தியாவிலுற்பத்தியாகி வேறிடங்கட்குப் பரந்தனவென் றறி

வாய். தொன்றுதொட்டு இந்தத் தேசம் மனித வர்க்கத்தினருக்குப் பெறற்கரும் பொருளாகிய உண்மை ஞானத்தை வழங்கி வந்தது. உங்களுடைய சநாதந தர்மத்தை ஆழ்ந்து ஆராய்வதற்கும், வேதாந்த ஞானத்தையும், உயர்தனிக் கொள்கைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடம் பெறுகிற நன்மைகளுக்குப் பிரதியுபகாரமாக விலைமதிக் கொண்ணாத அந்த இரத்தினங்களை அவர்களுக்குக் கொடுங்கள். எங்கள் சாதியாருக்குள்ள இழிவான பெயரை நீக்குவதற்காகவே, இறைவன் என்னை மேற்றிசைக்கு அனுப்பினார். மன்றாட்டுப் போடுவதற்காக இங்கிலாந்துக்குப் போவது தகாது. அவர்கள் எப்பொழுதுங் கொடுத்துக்கொண் டிருக்க வேண்டிய அவசிய மென்ன? கையை நீட்டி, மாறாது "தாருங்கள் தாருங்கள்" என்று கேட்டுக்கொண்டிருப்பது எவ்வளவு வெட்கங்கெட்ட செய்கை! அது முறையாகாது. வாங்குவது போலக் கொடுப்பதுஞ் செய்ய வேண்டும். இந்த விதியைக் கைக்கொண்டு ஒழுகாதவர்கள் உய்யமாட்டார்கள். நாமுங் கொடுக்கவேண்டும். இதற்காகவே நான் அமெரிக்காவுக்குப் போனேன் சமய நெறியை யறிந்துகொள்வதற்கு மேனாட்டார் மிகவும் ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். என்னைப் போன்ற ஆயிரம் பேருக்கு அங்கு போதிய வேலையிருக்கிறது. நீண்ட காலமாக அவர்கள் உங்களுக்குக் கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். இப்பொழுது உங்களுக்குள்ள பெறற்கரும் பொருளாகிய சமய நெறியை அவர்களோடு பங்கிட்டுக் கொள்வதற்குக் காலம் வந்துவிட்டது. அங்ஙனஞ் செய்வீர்களாயின் அவர்கள் பக்தி, சிரத்தை மேலிட்டு உங்கள்மேல் அன்பு பாராட்டுவார்கள். நீங்கள் கேளாமலிருக்கவே, உங்கட்குப் பல நன்மைகளைச் செய்வார்கள். அவர்கள் ஆண்மையுள்ளவர்கள்; ஆதலால் செய்நன்றி மறவார்கள்.

சிஷ்: சுவாமிஜி, தங்களுடைய மேலைத்தேசப் பிரசங்கங்களில் நமது அறிவுக் கூர்மையினும் நற்குணங்

களிலுமுள்ள சிறப்பிலக்கணங்களை எடுத்து அடிக்கடியும் மிகவும் சாதுர்யத்துடனும் காட்டி யிருக்கின்றீர்கள்; மேலும் நமது மனப்பூர்வமான சமயப்பற்றினைப் பல புத்திபூர்வமான ஆதாரங்களுடன் தாங்கள் காட்டி யிருக்கின்றீர்கள். ஆனால் இப்போது நாம் எல்லோரும் தாமசமயமாக இருக்கின்றோம் எனக் கூறுகின்றீர்கள்; மறுகணத்தில் நம்மை ரிஷிகளால் அளிக்கப்பட்ட சநாதன தர்மத்தினை உலகுக்கு உணர்த்தும் ஆசார்யர்களாகப் புகழுகின்றீர்கள். இது எப்படிப் பொருந்தும்?

சுவா: நான் தேசம் தேசமாகச் சென்று ஜனங்கள் முன்னால் நமது குறைபாடுகளை எடுத்துப் பேச வேண்டுமென்பது உனது கருத்தா? உங்களை ஒரு தனி நாடாகக் காட்டும் சிறப்புக் குணங்களை நிலைநிறுத்துவதை நான் மேற்கொள்ள வேண்டாமா? ஒருவர் குற்றங் குறைகளை அவர் முன்னால் சிநேகபாவத்துடன் எடுத்துக் காட்டி அவற்றை அவர் ஒப்புக்கொள்ளும் வண்ணம் செய்வதனால் தம்மைத் தாமே திருத்திக் கொள்வதும்,—அவருடைய நற்குணங்களை பிறர் முன்பு புகழ்ந்து பேசுவதும் என்றும் நன்மையைப் பயக்கும். தீய ஒழுக்கமுள்ள ஒருவனை நல்லவன் என அடிக்கடி அவன்முன்பு சொல்வதனால் காலவரையில் அவன் நல்லவனாகிறான் என்றும் நல்ல நடையுடையவனைக் கெட்டவன் எனப் பன்முறை சொல்வதனால் அவன் கெட்டவனாகிறான் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு. மேலைத்தேச மக்கள் முன்னால் அவர்களது குறைவுபாடுகளைப் பலமுறை எடுத்துக் கூறி யிருக்கின்றேன். நான் மேலைத் தேசத்து விஜயம் செய்யுமுன் நமது நாட்டிலிருந்து அங்குச் சென்ற அனைவரும் அந்நாட்டாரது நற்குணங்களைப் பெரிதும் பாராட்டிப் புகழ்மாலை சூட்டுவதும், நமது நாட்டவரது இழிவினை அவர்கள்முன் இரைந்து பேசுவதுமாக இருந்தார்கள் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். எனவே, அவர்கள் நம்மைப் பகைக்கக் கற்றுக்கொண்டது விநோதமல்ல. இதனைக் கருத்துட்கொண்டு நமது நற்குணங்களையும் அவர்களது தீய

குணங்களையும், இன்று உங்கள் குறைகளையும் அவர்களுடைய நற்குணங்களையும் உனக்குக் கூறுவதுபோல, அவர்கள் முன்னிலையில் பேசியுள்ளேன். நீவிர் எவ்வளவு தாமசகுண முடையவர்களாய் இன்று காணப்பட்டாலும், நமது பூர்வீக ரிஷிகளின் குணத்தில் ஒரு சிறிதளவாயினும் - அது வெளிப்பூச்சாக இருப்பினும் - உம்மிடம் சந்தேகமின்றி யிருக்கிறதென்பது உண்மையே. ஆனால், ஒருவர் பக்குவமடைவதன் முன் தம்மை மதகுரவர் எனத் தாமே பட்டம் சூட்டிக்கொண்டு மேலைத்தேசம் சென்று பிரசாரம் செய்தலை மேற்கொள்வது இதனால் அறியக்கிடப்பதொன்றல்ல. முதன் முதலாக, ஒருவர் ஏகாந்தத்திலிருந்து தமது மதானுஷ்டானங்களைச் செவ்வனே நடத்தி உருப்படுத்தியாக வேண்டும், தியாகத்தினையும் பிரம்மசரிய விரதத்தினையும் இடையீடின்றிப் பேணிப் பூரணநிலை யெய்தவேண்டும். தாமச குணம் உம்மிடம் புகுந்துள்ளது - அதனால் என்ன? தாமசத்தினை ஓட்டக்கூடாதா? ஒரு கணப்போதில் இதனைச் செய்யலாம்! தாமசத்தினை அடியோடு களையவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதரித்தார்.

சிஷ்: சுவாமிஜி, தங்களைப்போல ஆவதற்கு எவரால்தான் கூடும்?

சுவா: நான் காலமானபின் என்னைப்போன்ற விவேகாநந்தர்கள் இல்லாமல்போவார்கள் என்று நினைக்கின்றனையா? சற்று நேரத்திற்குமுன்பு இங்குவந்து என் முன்னிலையில் இசைக்கருவிகளுடன் பாடிய அவ்விளைஞர் கூட்டத்தினை, லாகிரி வஸ்து பாவிப்பவரென்றும் மதிப்பிழந்த பையன்கள் என்றும் நீவிர் வெறுக்கினும், இறைவனது திருவுள்ளமிருப்பின், அவர்கள் ஒவ்வொருவரும் விவேகானந்தராக வரக்கூடும்! உலகு வேண்டியிருந்தால் விவேகானந்தர்களுக்குக் குறைவிராது—எண்ணிறந்த இலக்க விவேகானந்தர்கள் தோன்றக்கூடும் - எங்கிருந்து தோன்றுவர் என்பதை எவர்தான் அறியவல்லார்! என்னால் செய்யப்பெற்ற

வேலையானது விவேகானந்தனால் ஆனதல்ல—இறைவனது செயலேயாகும்! கவர்னர் ஜெனரல் வேலையிலிருந்து இளைப்பாறியதும், வேறொருவரை அவரிடத்தில் அமர்த்த ஏக சக்ரவர்த்தி முயற்சிப்பார். எவ்வளவு தாமசகுணம் சூழப்பெற்றாலும் நீ இறைவன்பால் இதயபூர்வமாக இறைஞ்சிச் சரணடைவாயானால், மூடிய இருளானது அகன்று போகும். உலக வருத்தத்தினை அகற்ற வைத்தியநாதன் தோன்றிய இக்காலமே மிகவும் உகந்த காலம். அவரது திருநாமத்தினை நாவினால் நவின்று கொண்டு, வேலையில் அமர்வாயானால், எல்லாவற்றையும் உன்னைக்கொண்டு செய்துமுடிப்பார் தாமசகுணமே மிகவும் மேலான சத்துவமாகப் பரிணமிக்கும்.

சிஷ் : தாங்கள் எதுதான் கூறினும், தங்கள் வார்த்தைக்குச் செவி சாய்ப்பது என்றால் கூடியதொன்றல்ல. நாவின் செல்வி யருளால் தாங்கள் தத்துவ சாஸ்திர உண்மைகளை உரைத்ததுபோன்று வேறு எவர்தான் செய்யவல்லார் ?

சுவா : உனக்குத் தெரியாது! அவ் வாற்றல் யாவருக்கும் அமையக்கூடும் நைட்டிக பிரம்மசாரி விரதத்தினைப் பன்னீராண்டு இறைவனை யடைவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து, காத்த ஒருவருக்கு அவ் வாற்றலுண்டாகும். அவ் விரதத்தினை யான் அனுஷ்டித்துள்ளேன், அதனால் எனது புத்தியை மறைத்திருந்த திரை நீக்கப்பெற்றது போன்றுள்ளேன். இதன் காரணமாக நுண்ணிய பொருளை யுடைத்தாய தத்துவ சாஸ்திர உண்மையினை எடுத்துப் பேசுவதற்கு நான் அதிகம் எண்ணவேண்டியதில்லை. பயில வேண்டியதுமில்லை. நாளையதினம் நான் பிரசங்கம் செய்வதாக வைத்துக்கொள்வோம் ; இன்றிரவே நான் பேசவேண்டியனவெல்லாம் என் கண் முன்பே படமெழுதியதுபோல வந்து தோன்றும்; மறுநாள், நான் கண்டனவற்றை எனது பிரசங்கத்தில் சொற்களால் விரித்து உரைப்பேன். எனவே, அது எனக்குத்தான் உரிய ஆற்றல்

அல்ல என்பதை நீ இப்போது உணரக்கூடும். பன்னிராண்டு இடைவிடாது நைட்டிக பிரம்மசரிய விரதத்தினைக் காத்த எவரும் அதனை எய்தல் கூடும். அங்ஙனம் நீதானும் செய்ய வல்லையேல், உனக்கு அது கைகூடும். இந்தத் தன்மையுள்ளவர்களே அதனை அடைவர், பிறர் அடையார், என நமது சாஸ்திரங்கள் கூறவில்லை!

சிஷ்: சுவாமிஜி, தங்களுக்கு ஞாபகமிருக்கலாம், ஒருநாள் தாங்கள் சந்நியாச ஆசிரமத்தில் புகு முன்னர்—வீட்டில் நாமிருவரும் சென்றிருந்தபோது சமாதியின் மர்மத்தை எனக்கு எடுத்துரைக்க முயன்றீர்கள். தாங்கள் கூறியதை மறுத்துக் கலியுகத்தில் சமாதியெய்துவது கைகூடுவதொன்றல்ல என யான் உரைக்க, 'நீ சமாதியினைக் காணவா அல்லது அதனை அடையவா விரும்புகின்றனை?' எனத் தாங்கள் இடித்துக் கேட்டதுண்டு. தாங்கள் இதனைக்கூறி முடிப்பதன் முன் அறிமுகமில்லாத ஒருவர் அங்கு வரவும், நாம் அப்பேச்சினை மேற்கொண்டு பேசா தொழிந்தோம்.

சுவா: ஆம், எனக்கு ஞாபகமுண்டு.

நான், பின்னொரு முறை, சமாதியெய்தலை அவர் அருளால் வேண்டி வற்புறுத்தியபோது, அவர் சொன்னதாவது: "நண்ப, பல்லாண்டுகளாக இடைவிடாது சொற்பொழிவாற்றியும் கடுமையான வேலையினைச் செய்ததன் காரணமாகவும் என்னிடத்து ரஜோ குணம் அதிகம் மேலோங்கி யிருக்கின்றது. எனவே அவ்வாற்றல் இப்போது மூடுண்டு மறைந்திருக்கின்றது எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு இமய மலைச்சாரலிற்குச் சென்று ஏகாந்தமான இடத்திலிருந்து சில காலம் தியானம் புரிவேனாயின், அவ்வாற்றல் என்னுள்ளிருந்து மறுபடியும் வரும்" என்றார்.

(50)

பழைய நினைவுகள்—பிராணாயாமம்—பிறர் எண்ணங்களை அறிந்து சொல்லல்—பழம் பிறப்புணர்ச்சி.

இரண்டொரு நாட்கழித்துச் சுவாமிஜியைத் தரிசிக்க வேண்டுமெனும் நோக்கமாக நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வரும்பொழுது சுவாமிஜியினிடமிருந்து பிராணாயாமத்தைப்பற்றிய சில சந்தேகங்களைத் தெளிந்து கொள்ளவேண்டுமென்னும் விருப்பத்தினை யுடைய நண்பர்கள் இருவர் வரக் கண்டேன். தேவாலயத்தை யாவது சன்னியாசிகளையாவது தரிசிக்கப் போகும் பொழுது வெறுங்கையோடே போதல் முறையல்ல வென்பதை உணர்ந்து சில பழங்களையும் இனிப்புத் தின்பண்டங்களையும் எடுத்துக்கொண்டுபோய் சுவாமிஜி யினுடைய திருமுன்னிலையை அடைந்து சமர்ப்பித்தோம். சுவாமிஜி அவற்றைத் தம்முடைய திருக்கரங்களில் எடுத்து சிரத்தின்மேல் உயர்த்தி நாங்கள் நமஸ்கரிக்கு முன்பு தாமே தமது சிரத்தைப் பணித்தார். என்னோடு வந்த நண்பர் இருவரில் ஒருவர் சுவாமிஜியினுடைய உடன் மாணாக்கராக விருந்தார். சுவாமிஜி உடனே அவரைத் தெரிந்துகொண்டு அவருடைய க்ஷேமாதிகளை விசாரித்தார். பின்பு எம்மனைவரையும் தமது சமீபததில் இருக்கும்படி கட்டளையிட்டார். சுவாமிஜியைத் தரிசிக்க வந்தோர் பின்னும் பலர் இருந்தனர். ஒரு கனவான் வினவிய சில வினாக்களுக்கு விடை பகர்ந்தபின்னர் சுவாமிஜி பிராணாயாமத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். முதலிலே மானத சக்திகளிலிருந்து தூலப் பொருள்கள் தோற்றும் வகையைத் தற்கால விஞ்ஞான சாஸ்திரத்துக்கேற்ப விளக்கி அதன்பின் பிராணாயாமம் என்பது இதுவென விளக்கினார். சுவாமிஜி யெழுதிய நூலாகிய இராஜ யோகத்தை நாங்கள் மூவரும் மிகுந்த கவனமாகக் கற்றிருந்தோ மெனினும் அன்று அவர் பிராணாயாமத்தைப்பற்றிக்

கூறிய விஷயங்களை நோக்கும்பொழுது புத்தகத்தில் எழுதப்பட்ட பொருளினும் பார்க்க எத்தனையோ மடங்கு அதிகமான விஷயங்கள் சுவாமிஜியினுடைய சிந்தையில் உள்ளன எனக் கண்டோம். அஃதன்றியும் அவர் உண்மையை சாக்ஷாத் கரித்தவர் என்பதையும் அறிந்துகொண்டோம். என் எனில் சாஸ்திர உணர்ச்சியினால் மாத்திரம் அத்தனை தெளிவாகவும் விரிவாகவும் மிக நுண்ணிய பொருள்களை ஆராய்ந்து விளக்குவது சாத்தியப்படுவதா ?

பிற்பகல் மூன்றரை மணி தொடக்கம் மாலை ஏழரை மணி வரையும் பிராணாயாமத்தைப்பற்றிய சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது கூட்டங் கலைந்து திரும்பி வரும்பொழுது என்னுடைய நண்பர்கள் என்னை நோக்கி, 'தங்களுடைய உள்ளத்திலிருந்த வினாக்களை சுவாமிஜி எங்ஙனம் அறிந்தார் ?' எனவும் நான் அவற்றை அவருக்குத் தெரிவித்தேனோ வெனவும் என்னைக் கேட்டார்கள்.

இது நடந்த சில நாட்களுக்குப் பின்பு பாக்பஜாரிலே காலஞ் சென்றுபோன பிரியநாதமுகர்ஜி வீட்டிலே நான் சுவாமிஜியை மறுபடியும் சந்தித்தேன். அப்பொழுது சுவாமி பிரம்மாநந்தரும், சுவாமி யோகாநந்தரும், கிரீஷ் சந்திரகோஷரும், அதுல் பாபுவும் இன்னும் இரண்டொரு நண்பரும் சமூகமாயிருந்தார்கள். நான் சுவாமிஜியை நோக்கி, "முன்னாள் நான் தேவரீரைக் காணவந்தபொழுது என்னோடு வந்த நண்பரிருவரும் தேவரீரெழுதிய ராஜயோகம் என்னும் நூலைப் படித்து அதன் வழியாகத் தங்கள் மனதில் எழுந்த சில சந்தேகங்களைத் தெளிந்துகொள்ளும் நோக்கமாக வந்தார்கள். அன்று அவர்கள் அவ்வினாக்களை வினவுவதற்கு முன்னரேயே தேவரீர் அவர்கள் கருதிய வினாக்களுக்கெல்லாம் விடை பகர்ந்ததைக் கண்டு மிகுந்த ஆச்சர்யமுற்று "யான் அவ்வினாக்களைத் தேவரீருக்கு முன்னடித் தெரிவித்தேனோவென என்னைக் கேட்டார்

கள்" என்றேன். அதற்கு சுவாமிஜி மறுமொழியாக "நான் மேலைத் தேசத்திலிருக்கும்பொழுது இப்படிப் பல முறை நிகழ்வதுண்டு. தங்களுடைய மனத்திலிருந்த கேள்விகளை நான் அறிந்துகொண்ட தெவ்வாறெனச் சனங்கள் வினவுவதுண்டு. இந்த வல்லமை ஸ்ரீ ராமகிருஷ்ண பகவானுக்கு எப்பொழுதும் உரியதாயிருந்தது. எனக்கு முன்பிருந்ததைப்போல இப்பொழுது அதிகமாயில்லை" என்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் அதுல் பாபு சுவாமிஜியை நோக்கி "இராஜயோகம் என்னும் நூலிலே ஒருவர் தமது பழம் பிறப்புகளை அறிந்துகொள்ளலாமென்று எழுதியிருக்கக் கண்டேன். தேவரீருடைய பழம் பிறப்புத் தேவரீருக்குத் தெரியுமா?" வென்றார்.

சுவா: ஆம். அறிவேன்.

அதுல் பாபு: அறிந்ததை எங்களுக்குத் தெரிவிக்க யாதேனும் தடையுண்டா?

சுவா: அறியக் கூடும்; அறிவேன். ஆயினும் அதைப்பற்றிய விவரங்களைச் சொல்ல எனக்குப் பிரியமில்லை.

(51)

கீழ்த்தேச மேலைத்தேச சங்கீத கலா சாஸ்திரம்

1898-ஆம் ஜூலை மாதத்திலே பேலூரில் நீலாம்பர முகர்ஜியின் நந்தவனக் கிரகத்திலே இருந்த திருமடத்திலே சுவாமிஜியும் சிஷ்யர்களும் தியானத்திலிருந்து அதன் முடிவில் அங்குள்ள அறைகளொன்றில் வந்தமர்ந்தார்கள். மழை பொழிந்து குளிர்காற்று வீசினமையால் அவர் கதவைத் தாழிட்டு உட்கார்ந்திருந்து தம்பூர் வாத்தியத்தோடு பாட ஆரம்பித்தார். பாட்டு முடிந்ததும் சங்கீதத்தைப்பற்றி ஒரு நீண்ட சம்பாஷணை நடந்தது. மேலைத் தேச சங்கீத முறை எப்படிப்பட்டதென்று ஸ்ரீ சிவானந்த சுவாமிகள் வினவினார்கள்.

சுவாமிஜி: ஆ! அது மிகவும் நல்லது. நம்முடைய சங்கீத முறையில் நாம் உணர்ந்து கொள்ளாத இன்னிசை யொப்புகள் பல மேலைத் தேசத்து முறையில் உண்டு. பயிற்றப்படாத செவிகளுக்கு அவை இனிமையாகத் தோற்றுவதில்லை. ஆதலினாற்றான் பாடகர்கள் நரிகள்போல ஊளையிடுகிறார்கள் என்று நாம் நினைப்பது. முதலில் நானும் அத்தகைய எண்ணமுடையேனா யிருந்தேன். ஆனாலும் மேலைத்தேச முறையைச் சாவதானமாகவும் நுணுக்கமாகவும் ஆராயத் தொடங்கிய பின்னர் நான் அதைத் தெளிவுபெற அறிந்து ஆச்சரிய பரவசனானேன். ஒவ்வொரு கலைஞானமும் இம்மாதிரியே. சிறப்புற முடிந்த ஒரு சித்திரத்தைக் கண்டு அதனுடைய அழகு எவ்விடத்து அமைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுதல் எல்லோருக்கும் சாத்தியப்படுவதில்லை. கண் பயிற்றப்பட்டிருந்தால் தான் சித்திரத்தின் நுணுக்கங்களை அறிந்துகொள்ளுதல் கூடும். நம்மிடத்திலுள்ள உண்மையான சங்கீதம் கீர்த்தனத்திலும் துருபதத்திலும் தான் அமைந்திருக்கிறது. மற்றவை இஸ்லாமிய முறைகளைப் பின்பற்றிச் சிதைந்துபோயின. நாசியிலிருந்தெழும் அநுகரண ஓசையோடு குதித்துக் குதித்து ஒரு சுரத்திலிருந்து மின்னல்போல மற்றொரு சுரத்திற்குப் பாய்கிற 'தப்பா' பாடல் வரிசைகள் சங்கீத முறையில் மிகச் சிறந்தனவென்று எண்ணுகிறாயா? அப்படியல்ல. ஒவ்வொரு சுரத்துக்கும் பூரண விளக்கம் கொடுத்தாலன்றி இசை நிறைவற்றுச் சீர்கெட்டுப் போம். சித்திரம் வரையும்பொழுது இயற்கைத் தோற்றத்திலிருந்து வேறுபடாத நிலையில் கலைஞான முடிவுகளை உபயோகிக்கலாம். அதனால் காரியப்படுவது நலனுடையதாகவே இருக்கும். அவ்வண்ணமே சங்கீதத்திலும் கலைஞானத்தோடு ஒன்றுபட்டு நிற்பதனால் காரியப்படும் இசை செவிக்கு இன்பமே பயக்கும். முகம்மதியர் இந்தியாவுக்கு வந்த பின்னர்தான் நமது ராகங்களையும் ராகினிகளையும் கற்றுக் கொண்டார்கள். ஆயினும் தங்களுடைய 'தப்பா' பாடல் முறைகளை ஒன்று

சேர்த்து அமைத்தமையால் இசை மரபு சீர்கெட்டுப் போயிற்று.

விஞ: ஏன் மகராஜ்? தப்பா பாடலை விரும்பாதவர்கள் யார்?

சுவா: சில் வணடினது இசையும் சிலருடைய காதுக்கு இனிமையாகத்தானிருக்கும். சந்தால் சாதியார் தங்களுடைய சங்கீதம் பிறவற்றினும் பார்க்கச் சிறந்ததென்று எண்ணுகிருர்கள். மிகுந்த விரைவோடு ஒரு சுரம் மற்றென்றினைத் தொடர்ந்து வரும்பொழுது இன்னிசை அழிவதோடுகூட வல்லோசை பிறக்கின்றது. சப்த சுரங்களின் வரிசையிலிருந்தன்றோ ராகங்களும் ராகினிகளும் பிறக்கின்றன? அங்ஙனமிருப்ப, 'தப்பா' முறையில் ஒரு சுரவரிசை முற்றிலும் நீக்கப்பட்ட குரலை யெழுப்பிப் பயனின்றி அசைத்து ஒரு புது ராகத்தை அநுகரணம் பண்ணுவதாயின் பாடலுக்குரிய ராகம் கலப்பின்றி எவ்வாறு தோற்றும்? மேலும் செவிக்கினிமை பயக்குமென்று எண்ணிச் சுருக்கமான சுரங்களை ஒன்றின் பின்னென்று விரைந்து தொடரப் பண்ணுவதால் சங்கீதத்தின் கவித்துவமே அழிந்து போகின்றது. பாட்டினல் கருதப்படுகிற உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்தும்படி இசையமைத்துப் பாடுகிற வழக்கம், 'தப்பா' முறை வந்த நாட்டொடக்கமாக நமது நாட்டினின்று அகன்று போயிற்று நாடக அரங்க மேடைகளில் வருகின்ற திருத்தங்களினுல் அது இந்நாட்களில் சிறிது திருத்தமுறுகிறதாயினும் இராக இராகினியை அவதானிப்பார் குறைந்துகொண்டே வருகின்ருர்கள். துருபத முறையாகப் பாடப் பயின்றவர்களுக்கு 'தப்பா' முறையைக் கேட்பது செவிக்குத் துன்பந் தருவதாகும். நமது சங்கீத சாஸ்திரத்திலுள்ள ஆரோகண அவரோகண முறைகள் மிகச் சிறந்தன. பிரான்சிக்காரர் இதை முதலிலே கண்டறிந்து தங்களுடைய சங்கீத முறையில் இதைச் சேர்த்தார்கள். இப்

பொழுது ஐரோப்பா முழுமையுமே இந்த முறைகளைப் பயின்றுகொண்டது.

விஞ : மகராஜ், ஐரோப்பியருடைய ராகங்களிலே முக்கியமாக வீரரசம் தோற்றுகிறது. நமது ராக முறைகளில் அதனைக் காண்பது அருமையாயிருக்கின்றது.

சுவா : அப்படியில்லை நம்முடைய முறையிலும் அது உண்டு. வீரரசமுள்ள ராகங்களுக்கு இன்னிசையொப்பு (Harmony) மிகுதியும் வேண்டப்படுவது. இது நமது சங்கீத முறையில் இல்லாதிருப்பதனால் வீரரசம் தோற்றுவது குறைவு. நமது சங்கீத சாஸ்திரம் காலாந்தரத்தில் திருத்தமடைந்துகொண்டே வந்தது. முகம்மதியர் வந்து நாட்டைக் கைப்பற்றிய காலத்தில் சங்கீதமென்னும் தருவின் வளர்ச்சியும் குறைந்துவிட்டது. மேலைத் தேசத்தாருடைய சங்கீத முறை மிகவும் திருத்தமடைந்து விட்டது. அவர்கள் முறையில் வீரரசமும் உண்டு, கருண ரசமுமுண்டு. சுரைக்குடுகினால் செய்யப்பட்ட நமது பழைய வாத்தியக் கருவிகள் ஏற்றமடையாமலிருக்கின்றன.

விஞ : வீரரசம் பாலிக்கும் ராகங்கள், ராகினிகள், எவையோவென அறிய விரும்புகிறேன்.

சுவா : எந்த ராகத்தையும் இன்னிசை (Harmony) யொப்போடு அமைத்துக் கருவியையும் தகுதியாகச் சுருதி கூட்டினால் வீரரசம் பிறக்கும். சில ராகினிகளையும் அவ்வாறு செய்தல் கூடும்.

இரவுப் போஜன வேளையாயினமையால் சம்பாஷணை அவ்வளவோடு நிறைவேறிற்று. உணவு உண்ட பின்னர், கல்கத்தாவிலிருந்து வந்த விருந்தினர்கள் இராப்பொழுது மடத்திலே தங்குவதற்கு ஏற்ற சௌகர்யங்கள் எவ்வண்ணம் ஆயிருக்கின்றன வென்பதை விசாரித்தபின்னர் சுவாமிஜியும் சயனிக்கச் சென்றார்.

(52)

புதிய மடம்கட்டி இரு ஆண்டுகளுக்குப்பின் சுவாமிகள் யாவரும் வதியும்போது ஒருநாட காலை குருமூர்த்தியாகிய சுவாமிஜியைத் தரிசிப்பதற்கு வந்தேன். சுவாமிஜி புன்னகை புரிந்து சுகம் முதலியவற்றை விசாரித்த பின்னர், "இன்றையப் பொழுதை இவ்விடத்திற் கழிக்கலாந்தானே" என்றார் "சந்தோஷத்தோடு" என்று மறுமொழி பகர்ந்தேன். பின்னர்ச் சில பல விஷயங்களைப் பற்றிப் பேசியபின் நான் சுவாமிஜியை நோக்கி, "மகராஜ், நம்முடைய சிறுவர்கட்குக் கல்வி பயிற்றுவதைப் பற்றித் தங்களுடைய எண்ணம் என்ன?" என்றேன்

சுவா: குருவோடு வசிப்பதுவே முறை.

சிஷ்: எவ்வாறு?

சுவா: முன்னாளிற்போல: ஆயினும் முந்திய கலைஞானங்களோடு மேலைத்தேச பௌதிக சாஸ்திரங்களையுங் கற்பிக்கவேண்டும். இரண்டும் வேண்டியன.

சிஷ்: இப்பொழுதுள்ள சர்வகலாசாலை முறையிலுள்ள பிழை என்ன?

சுவா: முற்றிலும் பிழையே. தற்காலத்துச் சர்வகலாசாலை, குமாஸ்தா உத்தியோகத்துக்கு வேண்டிய ஆட்களை இயற்றிவிடுகிற யந்திரம் போன்றிருக்கிறது. அவ்வளவோடு நின்றுவிட்டாலும் குற்றமில்லை. தற்காலத்து முறையினால் மனிதர் சிரத்தையும் விசுவாசமுமற்றவர்களாகிறார்கள். கீதை இடைச்செருகலென்றும் வேத மந்திரங்கள் இடையர் பாட்டுக்களென்றும் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். இந்தியாவுககு வெளியேயுள்ள நாடுகளைப்பற்றியும், அங்குள்ள ஜனங்களைப்பற்றியும் விரிவாக அறிய விரும்புகிறார்கள். தம்முடைய முற் பிதாக்கள் இன்னார் என்பதை ஏழு தலைமுறை பரியந்தம் ஆவது சொல்ல அறியார்கள். பதினான்கு தலைமுறையைப்பற்றிப் பேசுவானேன்?

சிஷ்: இதனால் ஏற்பட்ட குற்றமென்ன? முற்பிதாக்களுடைய பெயரை யறியாமலிருந்தால் அதனாலென்ன குறை நேரும்?

சுவா: அவ்வாறு நினைக்கவேண்டாம். பழமையில்லாத சாதிக்கு உலகில் ஒன்றுமில்லை. "நான் உயர்குடிப் பிறந்தவன்" என்று சொல்லும் நம்பிக்கையும் பெருமிதமுமுடையவன் ஒருபோதும் தீய ஒழுக்கத்திற் புகான்; அவனுடைய சுய நம்பிக்கை அவனது ஒழுக்கத்தை வழிப்படுத்தும்; பிழையாக நடப்பதினும் பார்க்க இறப்பது நலமென்னும் எண்ணம் அவனுக்கு உண்டாகும் அதுபோலவே ஒரு தேசத்தின் பூர்வீக சரித்திரம் அந்தத் தேசத்தாரை நெறி நிற்கப்பண்ணுகிறது; அவர்கள் தங்களைப்பற்றிக் கீழாக எண்ணமாட்டார்கள். நமக்கு ஒரு பூர்வீக சரித்திரம் இல்லை என்று நீ சொல்லுதல் கூடும். உன்னைப்போல் நினைக்கிறவர்களுக்கு இல்லாமலிருக்கலாம். சர்வகலாசாலை மாணவர்களும், மேனாட்டில் சஞ்சரித்தவர்களும் ஐரோப்பிய உடை நடையைக் கைக்கொண்டு, "எங்களிடம் ஒரு திருத்தமுமில்லை; நாங்கள் பட்டிக்காட்டார்" என்று சொல்லுவார்கள். நமது தேச சரித்திரம் ஐரோப்பியரது தேச சரித்திரத்தைப் போன்றதில்லை என்பது மெய்யே. அதனாலென்ன? நாங்கள் அரிசிச் சாதம் சாப்பிடுகிறோம்; ஆங்கிலேயர் சாதஞ் சாப்பிடுவதில்லை. ஆகையால் அவர்களெல்லாம் பட்டினியினால் வருந்தி இறந்துவிடப் போகிறார்களா? தங்கள் சொந்தத் தேசத்தில் உண்டாக்கிக்கொள்ளக் கூடியனவும், தங்கள் உடம்புக்குப் பொருத்த முள்ளனவுமான உணவுப்பொருட்களையுண்டு அவர்கள் உயிர் வாழ்கின்றார்கள். அதுபோலவே எங்களுடைய சரித்திரமும் எங்களுக்குப் பொருத்தமானது. கண்ணை மூடிக்கொண்டு "எங்களுக்குப் பூர்வீக சரித்திரமில்லையே" என்றழுதாற் சரித்திரம் உண்டாய் விடுமா? கண்ணுள்ளவர்கள் அழகான ஒரு பூர்வ சரித்திரத்தைக் காணுகிறார்கள்; அங்ஙனங் கண்டதனா

லுற்ற பலம் காரணமாக இந்தச் சாதி இன்னும் நிலைத்திருக்கிறது. ஆயினும் அந்தச் சரித்திரத்தை இன்னும் ஆராய்ந்தெழுத வேண்டும். மேலைத் தேசத்துக் கல்வியினாலேற்பட்ட மனப்பான்மைக் கேற்ப விஷயங்களைப் புது முறையாகக் காட்டவேண்டும்.

சிஷ்: அதை எங்ஙனஞ் செய்தல் கூடும்?

சுவா: அது இப்பொழுது எடுத்துப் பேசுவதற்கு மிகவும் விரிந்த விஷயம். பழமையான குருகுலவாசம் முதலியவற்றால் முன்னிருந்த நிலையையடைய முயலுதல் வேண்டும். மேனாட்டுப் பௌதிக சாஸ்திர உணர்ச்சி, வேதாந்த ஞானம், பிரம்மசர்யம், சிரத்தை, சுயாநம்பிக்கை ஆகிய இவையெல்லாம் வேண்டப்படுவன. கழுதைகளை யடித்துக் குதிரைகளாக்க முயலுகிற முறையையுந் தவிர்த்துவிட வேண்டும்.

சிஷ்: ஈற்றிற் சொன்ன குறிப்பினுற் றுங்கள் கருதுவதென்ன?

சுவா: ஆராய்ந்து பார்ப்பாயாயின், ஒருவர் மற்றொருவருக்குப் படிப்பித்தல் இயலாத காரியம் என்பதை யுணர்வாய். தான் படிப்பிக்கிறுன் என்ற எண்ணத்தினுல் உபாத்தியாயன் எல்லாவற்றையுங் கெடுத்துவிடுகிறுன். வேதாந்த ஞானத்தின்படி, மனிதனிடத்தில் - சிறுவனிடத்திலுங்கூட - அறிவு அனைத்தும் அமைந்திருக்கிறது. அது வெளிப்படுவதற்கு உதவி செய்தலே உபாத்தியாயனுடைய தொழில். சிறுவர்கள் தங்களுடைய கை, கால், கண், செவி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகிக்கும்படி அவர்களைப் பயிற்றிவிடுவோமாயின், அவர்கள் தங்கள் புத்தியைத் தக்கவாறு செலுத்த அனைத்தும் எளிதாய் விடும். எல்லாவற்றுக்கும் மூலகாரணமாயுள்ளது சமய அறிவு. சமய அறிவே சாதம், மற்றவை யனைத்துங் கறிகள்; கறிகளைத் தனியாக உண்போமாயின் வயிற்றில் அஜீரணம் உண்டாகும்; சாதத்தைத் தனித்து உண்டாலும் அவ்வாறே. சிறுவர்களைக் கிளிப்பிள்ளைகளாக்கிக் கண்ட பொருட்

களை யெல்லாம் அவர்களுடைய மூளைக்குட் திணித்து விடுகிறார்கள். ஒருவகையாய்ப் பார்க்குமிடத்து (லார்ட் கர்சன்) பிரதிகாவலருக்கு நாம் நன்றி கூறவேண்டியிருக்கிறது. சர்வகலாசாலைக் கல்வியைத் திருத்து மார்க்கத்தினால் அவர் அதை ஒழித்து விடுவார்போற் றோற்றுகிறது. அங்ஙனஞ் செய்துவிட்டால் நல்லது. சற்று நேரத்துக்காவது இளைப்பாறும் நேரம் உண்டாகும். பட்டம் வாங்குவதற்கு எத்தனை ஆத்திரம்! சில தினங்கட்குள் ஆத்திரம் அனைத்தும் அகன்றுவிடுகிறது. அதற்குப் பிறகு அவர்கள் படித்துக் கொள்வதென்ன? நம்முடைய சமய நெறி, பழக்க வழக்கம் இவைகள் உதவாதனவென்றும், மேலைத் தேசத்தாருடைய கொள்கைகள் நல்லன என்றும் கற்றுக்கொள்ளுகிறார்கள். இங்ஙனமெல்லாங் கற்றும் பட்டினியை அகற்ற வழியறியார்கள். இத்தகைய உயர்தரக் கல்வி இருந்தாலென்ன, இல்லாமற் போனாலென்ன? ஏதாவது தொழிற் கல்வி பயின்று சீவனத்துக்கு வழி தேடிக்கொள்வது நல்லதாகும். அலைந்து திரிந்து குமாஸ்தா வேலைக்குக் கேள்விப் பத்திரம் போடுவதனாற் பயனென்ன?

சிஷ்: ஆம், மார்வாடிகள் புத்தியுள்ளவர்கள். அவர்கள் வியாபாரம் செய்வார்களேயன்றி உத்தியோகத்தை நாடார்கள்

சுவா: அறியாமற் சொல்லுகிறாய். அவர்கள் தேசத்துக்கு நாசம் விளைக்கும் வழியில் இறங்கியிருக்கிறார்கள். தங்களுக்கு நயமான தொழில் இது என்பதை அவர்களறியார்கள். தொழிலபிவிருத்தியைக் கருதுகிற நீங்கள், அவர்களினுஞ் சிறந்தவர்கள். மார்வாடிகள் வியாபாரத்தை விட்டுச் சிற்றளவான நயத்தைப் பெறுகிற பணத்தைத் தக்கவழியிற் செலவிட்டு, சில தொழிற் சாலைகளை நடத்தினால் தேசத்துக்கும் நன்மையுண்டாகும், அவர்களுக்குப் பெருத்த லாபம் வரும். இப்பொழுது அவர்கள் செய்கிற வியாபாரத்தினால் அவர்களுக்குக் கொஞ்ச லாபமும், ஐரோப்பியருக்குப் பெருத்த

லாபமும் ஏற்படுகிறது. காபூலிகள் தான் சேவகத்தை ஒருபோதும் விரும்பாதவர்கள். சுயேச்சை விருப்பம் அவர்களுடைய எலும்பிலுங்கூட நிறைந்திருக்கிறது. சேவகம் பார்க்கும்படி யவர்கட்குச் சொல்வாயாயின் பிறகு நடப்பதின்னதென்பதை நீயே யறிந்துகொள்வாய்.

சிஷ்: நல்லது மகராஜ், உயர்தரக் கல்வியை யகற்றிவிட்டால் இத்தேசத்து மனிதர் பசுக்களைப்போல மங்கையர்களாகி விடுவார்களல்லவா ?

சுவா: என்ன மடமை! சிங்கஞ் சிறுத்து எப்போதாவது நரியாயினதுண்டா? மிகுந்த பூர்வீக காலந்தொட்டு, உலகம் அனைத்தினுக்கும் அறிவாகிய உணவினைக் கொடுத்துவந்த இந்த நாட்டிற் பிறந்த மக்கள் கர்சன் பிரபுவினுடைய உயர்தரக் கல்வி யில்லாவிடிற் பசுக்களாய்விடுதல் கூடுமா ?

சிஷ்: ஆனல் ஆங்கிலேயர் வருவதற்குமுன் இந்த நாடு இருந்த நிலைமைக்கும் இப்போதிருக்கும் நிலைமைக்கும் இடையிலுள்ள தாரதம்மியத்தை ஆராய்ந்து பாருங்கள்.

சுவா: என்ன, சடப்பொருட் சாஸ்திரக் கல்வியும் சாதாரண சீவியத்துக்கு உபயோகமான பொருட்களை இயந்திரங்களாற் செய்யப் பயிலுவதும் உயர்தரக் கல்வி யென்றெண்ணுகிறுயா ? சீவியத்தின் நோக்கம் இது என ஆராய்ந்தறிவதே உயர்தரக் கல்வியின் பயனுகும். தற்கால நாகரீகமுள்ள தேசங்களிலிருக்கும் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்வதும் இந்தப் பயனைக் கருதியே. இது நமது தேசத்து அறிஞர்களால் பல்லாயிர வருஷங்கட்கு முன்பே ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டது.

சிஷ்: வேதாந்தந் தானும் மறைந்து போகும் நிலையிலிருந்ததன்றே ?

சுவா: இருந்திருக்கலாம். ஒவ்வொரு காலத்தில் வேதாந்த ஞானம் குறைவதுண்டு; அக்காலங்களில் இறைவன் மானிட சரீரத்தோடு அவதரித்துத் தர்மத் துக்குப் புத்துயிரையும் புது வலியையுங் கொடுக்க, அது பின்னுஞ் சில காலத்துக்குத் தடுக்கொணு வலிமை யோடு பரவும். அவ்வாருகிய காலம் இப்பொழுது ஏற் பட்டிருக்கிறது.

(53)

சிஷ்: மகராஜ், ஒரு விண்ணப்பம்: இந்தியா உல கின் ஏனைய பாகங்களுக்குக் கலை ஞானத்தைப் பெருகக் கொடுத்திருக்கிறதென்று சொல்லுவதற்கு ஏதாவது ஆதாரமுண்டா?

சுவா: உலக சரித்திரமே அதற்கு அத்தாக்ஷி யாகும். ஆன்ம உணர்ச்சியைத் தரும் உண்மைகளும், உலகிலுள்ள பலவேறு கலை நூல்களின் ஆதார உண்மைகளும் முதன் முதல் இந்தியாவிலேயே தோன் றின வென்பதை ஆராய்ச்சி முறையினுற் ருபித்தல் கூடும்.

அன்பினேடும் ஆர்வத்தினேடும் சுவாமி இந்த விஷ யத்தை விரித்துப் பேசினுர். சரீர ஆரோக்கியக் குறைவி ஞலும், வேனிற்கால வெப்பத்தினுலும் தண்ணீர் விடாய் அதிகரிக்க, அடிக்கடி நீர் பருகிக்கொண்டிருந்த சுவாமி, என்னைப் பார்த்து, "அன்புள்ள சிங்கி, தயை செய்து ஆலங்கட்டியிட்டுக் குளிர்ந்திருக்கிற சுத்த ஜலம் சிறிது கொண்டுவா; நீ கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் மறுமொழி சொல்லுகிறேன்" என்ருர். நீர் பருகியபின் மீட்டுஞ் சொல்லுவார்:

"செய்யவேண்டுவ தெதுவெனில் நம்முடைய கலை ஞானங்களையும், அவற்ருேடு ஆங்கில மொழியையும் மேலைத்தேச பௌதிக சாஸ்திரங்களையும், அந்நிய ருடைய கட்டுப்பாட்டைத் தவிர்த்து, நாமாகவே நம்

முடைய சிறுவருக்குக் கற்பிக்க வேண்டும். மேலும் பலதுறையாய தொழிற் கல்விகளுங் கற்பிக்க வேண்டும். சனங்கள் உத்தியோகந் தேடுவதை யொழித்துக் கைத்தொழிலை விருத்திபண்ணித் தம்முடைய செலவுக்கு வேண்டிய பொருளையும் வருங்காலதததுக்கு உதவியாகச் சேமித்து வைக்கவேண்டிய பொருளையும் தேடிக் கொள்ளத் தக்கவர்களாகவேண்டும்.''

சிஷ் : பழைய முறையான சம்ஸ்கிருதப் பள்ளிக் கூடங்களைப்பற்றி முன்பொருநாள் குறிப்பிட்டீர்கள் ; அவ்விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும்.

சுவா : உபநிடதங்களிலுள்ள கதைகளைப் படித்ததில்லையா ? அவற்றிலொன்று சொல்லுகிறேன், கேள் : சத்தியகாமன், குருவினிடம் போய் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டு ஒழுகுவதற்கு விரும்பினன். குரு அவனிடத்து சில பசுக் கூட்டங்களைக் கொடுத்து, காட்டுக்குப்போய் அவற்றை மேய்த்துப் பாதுகாக்கும்படி அனுப்பிவிட்டனர். பல மாதங்கள் கழிந்தன ; பசுக்களின் தொகை இரட்டையாயினதைக் கண்ட சத்திய காமன் குருவினிடம் திரும்புவதற்குச் சிந்தித்தான். திரும்பி வரும் வழியிற் காளைகளுள் ஒன்றும், அக்கினியும், வேறு சில மிருகங்களும் அவனுக்குப் பிரம்ம ஞானத்தை உணர்த்தின. மாணக்கன் திரும்பி வந்ததும், குரு அவனுடைய முகத்தைப் பார்த்த மாத்திரத்தே, அவன் உயர்வான பிரம்ம ஞானததை அடைந்து கொண்டான் என அறிந்தார். இந்தக் கதையினல் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை யெதுவெனில், வனம் மலை முதலிய தனியிடங்களில் இயற்கை வனப்பினேடு ஒன்று பட்டிருப்பதனல், உண்மைக் கல்வி விருத்தியடையு மென்பது. இயற்கையிலுள்ள பொருட்களை அவதானிப்பதனல் உண்மைக் கல்வி உண்டாவது ; அப்படிச் செய்யாது பண்டிதர்களுடைய திண்ணைப் பள்ளிக்கூடங்களை மாத்திரம் நம்பியிருப்பின், சிறுவர்கள் செய்ததைப் பார்த்துச்

செய்யும் மனிதக் குரங்குகள் ஆவார்களேயன்றித் தேற்றமடையார்கள். பாலியப் பிராயந்தொட்டுச் சிறுவர்கள் ஜ்வலிக்கின்ற அக்கினிபோன்று மாசற்ற ஒழுக்கமுள்ளவர்களோடு வசிக்க வேண்டும். உயர்ந்த கல்வியின் பெறு பேருகிய முன்மாதிரி எப்பொழுதும் அவர்கள் முன்னிலையிலிருக்க வேண்டும். பொய் சொல்லுவது பாபம் என்று புத்தகங்களில் படித்தால் மாத்திரம் போதாது. சுத்த பிரம்மசரியத்தை யனுஷ்டிக்கும்படி, ஒவ்வொரு சிறுவனையும் பயிற்ற வேண்டும். அப்பொழுதுதான் நம்பிக்கை, சிரத்தை முதலிய நற்குணங்கள் உண்டாகும். இவையில்லாதவழி பொய் பேசல் முதலிய பாபங்கள் பற்றுவது இயல்பேயாகும். நமது நாட்டில் உண்மைத் துறவுடைய பெரியோர்களே, தொன்று தொட்டுக் கல்வி பயிற்றுந் தொழிலைச் செய்துவந்தார்கள். பின்னுளில் பண்டிதர்களுடைய திண்ணைப்பள்ளிக்கூடங்கள் வந்ததோடு தேசத்துக்கு நாசகாலமும் வந்தது துறவின் மிக்க தியாகிகள் கல்வி பயிற்றிய நாட்களில் இந்தியா எல்லா வளப்பங்களோடும் பொருந்தியிருந்தது.

சிஷ்: மகராஜ், தாங்கள் கருதுவது என்னவென்று விளங்கவில்லை. ஏனைய தேசங்களிற் சந்நியாசிகளில்லையே; ஆயினும் அத்தேசத்தவர்கள், அறிவு வன்மையினுல் இந்தியாவை அடக்கித் தமது காலின் கீழ் வைத்து ஆண்டு வருகிருர்களே.

சுவா: நண்பனே, வீண் கதை பேசவேண்டாம். நான் சொல்லுவதைக் கேள். பாரத மாதாவின் மக்களுக்குக் கல்வி பயிற்றுந் தொழில் முன்னுளிற் போலவே மீட்டுந் தியாகிகளுடைய கைக்குவரும் வரையும் இந்தியா ஏனைய நாட்டாரின் செருப்பைத் தலையிற் ருங்கி அடிமைத்தொழில்செய்துநிற்கவேண்டியதுதான். கல்வியறிவு இல்லாவிடினும் உண்மைத் துறவு நிறைந்திருந்த ஒரு சிறுவன், வயோதிகரான பண்டிதர்கள் பலருக்கு மேலான மறுமொழி சொன்ன விஷயத்தை, நீ

கேள்விப்படவில்லையா? தக்ஷிணேசுவர ஆலயத்தி லிருந்த விஷ்ணுமூர்த்தி சிலையினுடைய காலைக் கவனக் குறைவினால் ஒரு பரிசாரகன் உடைத்துவிட்டான். பண்டிதர்கள் பலர் ஒருங்கு திரண்டு பல பழைய நூல் களையும், ஏட்டுச் சுவடிகளையும் ஆராய்ந்து உடைந்த உருவத்தை வணங்குதல் கூடாதென்றும் ஒரு புதிய உருவம் தாபிக்க வேண்டு மென்றும் முடிவு செய்தார் கள். அதனால் ஒரு பெருஞ் சந்தடி ஏற்பட்டது. ஈற் றில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய எண்ணத்தை விசாரித் தார்கள். அவர் மறுமொழியாக, "புருஷன் காலொடிந்து நொண்டியானால் பெண்சாதி அவனைத் தள்ளிவிடு வாளா?" என்றார். பண்டிதர்கள் எல்லோரும் மௌன மானார்கள்; அவர்களுடைய சாஸ்திர வியாக்கியானங்க ளெல்லாம் பறந்து போயின. ஸ்ரீ ராமகிருஷ்ணர் உல குக்கு வந்ததும் புத்தகப் படிப்பினால் சுகமில்லை யென்று பலமுறை சொன்னதும் எதற்காக? அவர் கொண்டு வந்த சீவசக்தி கல்வியிலும், நூலாராய்ச்சியிலும் செறிய வேண்டும்; அப்பொழுது தான் உண்மையான அபிவிருத்தி யுண்டாகும்.

சிஷ்: அங்ஙனம் சொல்லுவது இலகு. செய்து முடிப்பது கடினம் என்று எண்ணுகிறேன்.

சுவா: செயலும் இலகுவாயிருந்தாற் பகவான் வருதல் வேண்டியதில்லையல்லவா? நாம் செய்யவேண் டுவ தென்னவெனில், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ் வொரு கிராமத்திலும் மடங்கள் தாபிக்கவேண்டும். இந்தக் கைங்கரியத்துக்கு உன்னாலியன்ற முயற்சி செய். கல்கத்தா நகரின் மத்தியிலே ஒரு பெரிய மடந் தாபிக்க வேண்டும். நன்றாகக் கல்வி கற்ற சாது அதற்குத் தலைவராக இருக்கவேண்டும். பௌதிக சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், கலை நூல்கள் இவற்றில் தேர்ச்சி யடைந்த சந்நியாசிகள் தாம் தாம் திறமை படைத் துள்ள விஷயம் எதுவோ அதற்கு ஆசிரியராக அமர்ந்து சிறுவர்க்குக் கல்வி பயிற்றவேண்டும்.

சிஷ் : இவ்வண்ணம் தேர்ச்சி பெற்ற சாதுக்களை எங்குத் தேடிப் பிடிப்பது ?

சுவா : அவர்களை யுண்டாக்க வேண்டியதுதான். தேசாபிமானமும் சுயநலங் கருதாத் துறவு நிறைந்த சிந்தையுமுள்ள வாலிபர்கள் சிலர் முன்வருவாராயின் யாவும் ஆகும். எந்த விஷயத்தையும் தியாகிகள் இலகுவாகக் கற்றுக்கொள்வார்கள்.

சிறிது நேரம் மௌனமாயிருந்து சுவாமி மீட்டுஞ் சொல்லுவார் : "சிங்கி, நமது நாட்டுக்குச் செய்ய வேண்டிய கைங்கரியம் அதிகமிருக்கிறது. இந்த வேலையைச் செய்துமுடிக்க உன்னையும் என்னையும்போல் ஆயிரக்கணக்கான பேர்கள் வேண்டும். ஆ ! நமது நாட்டின் பரிதாப நிலையை என்னென்று சொல்லுவது ! உன்னால் இயன்றதைச் செய்யமாட்டாயா ? நமது சிறுவர்கள் வாசிப்பதற்குத் தகுதியான பாடப் புத்தகந் தானுமில்லையே.

சிஷ் : ஏன் ஐய, ஈசுவர சந்திர வித்தியாசாகரர் எழுதிய புத்தகங்கள் இருக்கின்றனவே.

இதனைக் கேட்டதும் சுவாமி புன்னகை புரிந்து, "ஆம் இருக்கின்றன அவைகளில் 'ஈசுவர நிராகார சைதந்ய சுவரூப'—கடவுள் உருவமற்றவர், அறிவேயுருவமானவர் என்றும், 'துபால் அதிசுபோத் பாலக்'—துபால் மிகவும் நல்ல புத்தியுள்ள பையன் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதெல்லாம் உதவாது. சுதேச பாஷையிலும் இங்கிலீஷிலும் மிகவும் இலகுவான நடையில், மகாபாரதம், இராமாயணம், உபநிடதங்கள் இவற்றிலுள்ள சிறு கதைகளடங்கிய சில புத்தகங்களை எழுதி, அவற்றை நமது சிறுவர்களுக்கு வாசிக்கக் கொடுக்க வேண்டும்.

இப்பொழுது மணி பதினொன்றடித்தது. வானத்தில் மேகங்கள் திரண்டன ; மழை பெய்யும் அடை

யாளமாகக் குளிர் காற்றும் வீசிற்று. மழை வரப் போகிற அடையாளத்தைக் கண்டு, சுவாமி மனம் மகிழ்ந்து என்னைப் பார்த்து, "வாராய், சிங்கி, கங்கைக் கரையில் சிறிது நேரம் உலாவுவோம்" என்றனர். நடந்து செல்லும்போது, காளிதாச மகா கவியினுடைய மேகதூதத்திலிருந்து பல சுலோகங்களைப் பாடிக் கொண்டு சென்றார்; அவருடைய உள்ளமோ மாறாமல் இந்தியாவினுடைய நன்மையையே கருதிக்கொண்டிருந் தது.

சுவா: சிங்கி, நீயொரு காரியஞ் செய்யமாட் டாயா? சில காலத்துக்கு நம்முடைய இளைஞர்களு டைய விவாகத்தை நிறுத்திவைக்க மாட்டாயா?

சிஷ்: மகராஜ், நாம் எப்படி அந்த விஷயத்தை நினைக்கக்கூடும்! முதியோர்கள் பல வழியாலும் விவா கங்களை மலிவாக்கப் பார்க்கிறார்களல்லவா?

சுவா: வருத்தப்படவேண்டாம்; காலத்தின் வலி மையைத் தடுக்க அவர்களால் முடியாது. அவர்களு டைய முயற்சியெல்லாம் ஆரவார நீர்மைத்தாய் முடி யும். விவாகங்கள் எவ்வளவுமலிவாகாதிருக்கின்றனவோ, தேசத்துக்கு அவ்வளவு நன்மையுண்டு. பரீக்ஷை பாஸ் பண்ண எவ்வளவு ஆத்திரம்! அது முடிய, விவாகமும் முடிந்துவிடுகிறது. ஒரு வாலிபனையாவது தேசத் தொண்டு சமயத்தொண்டுக்கு எஞ்ச விடுவதாகத் தோன்றவில்லை. அடுத்த வருஷமும் அவ்வண்ணமே நடந்துவிடுகிறது.

சிறிது நேரம் மௌனமாயிருந்து பின்னுஞ் சொல் லுவார்: "பரீக்ஷை பாஸ் பண்ணினவர்களாகவும், விவாகமாகாதவர்களாகவுமுள்ள சில வாலிபர்கள் அகப் படுவார்களாயின், அவர்களை ஜப்பானுக்கு அனுப்பித் தொழிற் கல்வி பயிற்றுவிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்வேன். அவர்கள் திரும்பி வந்து, தாம் கற்ற கல் வியை இந்தியாவுக்காகப் பயன்படுத்துவார்களாயின் எவ்வளவு நன்மையுண்டாகும்!

சிஷ்: ஏன் மகராஜ், இங்கிலாந்துக்குப் போவதிலும் பார்க்க, ஜப்பானுக்குப் போவது நல்லதா?

சுவா: ஆம், மிகவும் நல்லது. நம்மவருட் பொருளுங் கல்வியறிவுமுள்ளவர்கள் ஒரு முறை ஜப்பானுக்குப் போவார்களென்றால், அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அநேக விஷயங்களை யறிந்து கொள்வார்கள்.

சிஷ்: எங்ஙனம்?

சுவா: ஜப்பானியர் பிறரறிவினைச் சீரணிக்கப் பண்ணித் தம்மதாக்கி வைத்திருக்கிறார்கள்; இங்குள்ள விதமான அஜீரண நிலை அங்கில்லை. ஐரோப்பியரிடமிருந்து பெறவேண்டியனவெல்லாம் பெற்றிருக்கிறார்கள். அங்ஙனமாயினும் ஐரோப்பியராக மாறிவிடாமல், இன்னும் ஜப்பானியராகவே யிருக்கிறார்கள். இத்தேசத்திலோ வென்றால், ஐரோப்பியரைப் பின்பற்றுகிற பைத்தியம் கொள்ளை நோய்போல் எங்கும் பரந்திருக்கிறது.

சிஷ்: மகராஜ், நான் சில ஜப்பானியச் சித்திரங்களைக் கண்டேன்; அவை மிகவும் சிறந்தனவெனக் கருதுகிறேன். பிறர் தொழிலைப் பார்த்தெழுதாமல், தமக்குரிய சொந்த ஞானத்தினால், அவ்வூர் ஓவியர்கள் சித்திரமெழுதுவதாக அச்சித்திரங்களே தெரியப்படுத்துகின்றன.

சுவா: ஆம், உண்மைதான். அவர்கள் தங்கள் ஓவிய நூல் வன்மையினாலேதான் ஒரு பெரிய சாதியராக மதிக்கப்படுகிறார்கள். அவர்களும் நம்மைப்போல் ஆசியாக் கண்டத்தவர்கள். நாம் நமது உரிமையனைத்தையும் இழந்துவிட்டோமெனினும், எஞ்சியிருக்கும் பாகந்தானும் பிறராற் பெருமதிப்பைப் பெறுதற்குரியது. ஆசியா தேசத்தவரின் மனம் சித்திரம் நிறைந்தது. அழகில்லாத பொருளை அவர்கள் உபயோகிப்பதில்லை. சமயாநுஷ்டானத்திலும் சீரும் அழகும் செறிந்துள்ளன. விசேஷ தினங்களில் மாவினாற் சிறப்புறக் கோல

மிடக்கூடிய பெண்கள் நம்மவரால் மதிக்கப்படுகின்ருர்களல்லவா ?

சிஷ் : ஆங்கிலேயருடைய ஓவிய முறையும் மதிக்கப்படத் தக்கதல்லவா ?

சுவா : நீ எத்தனை பெரிய மூடனுயிருக்கிருய் ! உன்னை மாத்திரங் குறைகூறுவதனுல் ஆவதென்ன ? சாதாரணமாக நம்மவர்கள் எல்லோரும் இந்தத் தப்பெண்ணமுடையவர்களாய்த்தானே யிருக்கிருேம் ? ஆ ! நமது நாடு கெட்ட கேட்டை என்னென்போம் ! சனங்கள் தம்மிடத்துள்ள பொன்னைப் பித்தளையாக மதிப்பதும், அந்நியர்களுடைய பித்தளையைப் பொன்னென மதிப்பதும், மேற்றிசைக் கல்வியின் பயனுக விளைந்த விந்தையென்போமா ? ஐரோப்பியர் ஆசியாவுக்கு வந்த நாள் முதல் வனப்பின் வகையையறிந்து தமது சீவியத்தில் சீரும் அழகும் செறிவுறச் செய்ய முயன்று வருகிருர்களென்பதை இனியாகிலு மறிந்துகொள்.

சிஷ் : மகராஜ், தாங்கள் இப்படிச் சொல்லுவதைக் கேள்வியுற்ருல் தாங்கள் குறையை மாத்திரமே நோக்குகிறீர்கள்.

சுவா : அப்படி நினைப்பது இயல்புதான். தம்மைச் சூழ இருப்பனவற்றை அவதானிக்காமல், ஒரே போக்காய்ப் போய்க்கொண்டிருப்பவர்கள் வேறெவ்வாறு நினைப்பார்கள்? என் கண்ணுல் நான் காணுவதுபோல, உங்களை வருக்கும் காட்ட எவ்வளவு விரும்புகிறேன். மேலைநாட்டாருடைய கட்டிடங்களை அவதானித்துப் பார். அவை எவ்வளவு மொட்டையாய்க் கருத்தில்லாதனவா யிருக்கின்றன. அதோ இருக்கிற அரசாங்கக் கட்டிடங்களைப் பார். அவற்றின் புறப்பக்கத்தைப் பார்ப்பதனுல் அவை என்ன பொருள்பற்றி யமைவுற்றிருக்கின்றன என்று சொல்லுதல் கூடுமா ? இல்லை ; இனி அவர்களுடைய உடையைப் பார். மட்டை போன்று நிமிர்ந்திருக்கிற மேற்சட்டைகளும் நிறுதிட்டமான காற்சட்டைகளும் உடம்போடு ஒட்டிகொண்

டிருப்பதைப் பார்த்தால், அவலக்ஷணமாய்த் தோன்று கிறதல்லவா? அதில் என்ன அழகு இருக்கிறது? நம் முடைய தேயத்தைச் சுற்றிப் பார். நமது வீடு வாசல் கள் எவ்வளவு அழகும் அமைவும் பொருந்தியிருக்கின் றன! அவர்கள் தண்ணீர் குடிக்கிற நிறுதிட்டமான பாத்திரத்தையும், நம்முடைய செம்பையும் ஒப்பிட்டுப் பார். இரண்டிலும் எது அழகானது? நமது நாட்டுக் கமத் தொழிலாளருடைய வீடுகளைப் பார்த்ததில்லையா?

சிஷ்: ஆம்: பார்த்திருக்கிறேன்.

சுவா; என்ன பார்த்தாய்?

இன்னது சொல்லவென்று தெரியவில்லை. ஆனல் மறுமொழியாக, "அவர்களது வீடு வாசல்கள் நன்ருய்ச் சுத்தம் செய்யப்பட்டு, சாணத்தினல் நன்ருய்த் தின மும் மெழுகப்பட்டு அழகாயிருக்கின்றன" என்றேன்.

சுவா: அவர்கள் நெல்லினைச் சேமித்து வைத் திருக்கிற களஞ்சியங்களைப் பார்த்தாயா? அவை எவ்வ ளவு அழகு செறிந்திருக்கின்றன! மண் சுவர்களிலுங் கூட எவ்வளவு சித்திர வேலைப்பாடு செய்திருப்பார்கள்! மேலைத் தேசத்திலுள்ள சாதாரண சனங்களின் சீவியத் தைக் காண்பாயாயின், வித்தியாசத்தை உணர்வாய். அவர்கள் பிரயோசனத்தைப்பற்றிக் கவனிப்பார்களே யன்றி, சீர்மையைக் கவனியார்கள். மேனட்டான் எப் பொருளிலும் பிரயோசனத்தைத் தேடுவான்; நாம் சீர்மையைத் தேடுவோம். மேற்றிசைக் கல்வி பரந்த தனல், நம்முடைய அழகிய செம்புகள் புறக்கணிக்கப் பட்டு, பூச்சுக் கோப்பைகள் நம்முடைய வீடுகளிலும் உலாவத் தொடங்கிவிட்டன. நகைக்கிடமான நாமும், அவர்களது கொள்கைகளை நமது சீவியத்திற் செறியும் படி விட்டுவிட்டோம். பயனும் அழகும் ஒருங்கு சேரு மாறு நடந்துகொள்வதே நாம் வேண்டுவது. ஜப்பான் மிகவும் சீக்கிரத்தில் இவ்வுண்மையை அறிந்து அனுட் டித்தமையினுற்றுன் விரைவாக மேனிலையை யடைந்து

விட்டது. இனிமேல் ஜப்பானியர் மேனாட்டாருக்குப் பாடஞ் சொல்லிவைப்பார்கள்.

சிஷ்: மகராஜ், உலகில் எந்தச் சாதியார் மிகவும் அழகான உடையணிந்து கொள்கிறார்கள்?

சுவா: ஆரியர்தான் மிகவும் அழகான உடையணிந்துகொள்கிறார்கள்; இது ஐரோப்பியருக்கும் சம்மதமே. நம்மவருடைய உடைகள் எவ்வளவு அழகாகக் கொய்சகங்களோடு மடிந்து தொங்கும் இயல்பினது. பிற தேசத்தாருடைய உடை, ஆரியருடைய உடையைப் பின்பற்றியதே. அதனாற்றான் அத்தேசத்தில் அரசருடைகள், மற்றையோர் உடை வகையிலுமிருந்து வேறுபட்டிருக்கின்றன. சிங்கி! நீ ஐரோப்பிய உள்ளங்கிகளை அணிவதைத் தவிர்த்துவிடு.

சிஷ்: ஏன் மகராஜ்?

சுவா: ஏனெனில் உள்ளங்கிகளை (ஷர்ட்) ஐரோப்பியர் உள்ளே யணிந்துகொள்வார்கள். அவற்றைப் புறத்தேயணிவது அவர்களுக்கு நகையை விளைக்கும். வங்க தேசத்தார் உடையைப்பற்றி ஒரு சிறிதுங் கவனியாது முனனோர் வழக்கமில்லாதவர்கள்போல எதையும் எந்தமாதிரியாவது அணிந்து கொள்ளுகிறார்கள். இஃது எவ்வளவு மதியீனம்! கீழோர் தொட்ட உணவினை உண்டால் ஜாதிப்ரஷ்டம் உண்டாகும் என்னும் விதியினைப்போல மரபு நெறி தவறிய உடையினை அணிபவர்களையும் விலக்கிவைக்க ஒரு விதி வேண்டும். நமது சொந்த உடையை நாம் ஏன் அணிந்துகொள்ளக் கூடாது? ஐரோப்பியருடைய உள்ளங்கியையும், மேற்சட்டையையும் அணியவேண்டிய அவசரமென்ன?

இத்தருணத்தில் மழை பெய்யத் தொடங்கியது. போசன வேளையைக் குறிக்கும் மணி யடிக்கப்பட, நாங்களிருவரும், மற்றவர்களும் பிரசாதம் சாப்பிடும் பொருட்டுப் போசனசாலைக்குப் போனோம். போசனம் உண்ணும்பொழுது சுவாமி என்னைப் பார்த்து,

"குறைந்த அளவாக உண்ணவேண்டும். அவ்வாறு உண்ணுகிற உணவு உடலுக்கு வேண்டிய எல்லாப் பொருட்களுஞ் செறிந்ததாகவிருக்கவேண்டும். விலாப் புடைக்க அரிசிச் சாதத்தைச் சாப்பிடுவதே சோம்பல் அனைத்துக்குங் காரணம். ஜப்பானியர் அரிசிச்சாதமும் பருப்பும் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை யுண்ணுவார்கள். திடகாத்திர தேகமுள்ளவர்கள்தானும் சிற்றளவாகவே யுண்ணுவார்கள். உண்ணுகிற வேளை டலவா யிருக்கலாம் பொருளுள்ளவர்கள் தினம் ஒரு வேளையாவது மாமிசம் உண்ணுவார்கள். நாமோவென்றால் தினம் இரண்டு முறை தொண்டைக்கு வரும்வரை அரிசிச் சாதத்தை நிறைய உண்டுவிடுகிறோம். உள்ள சக்தி முழுவதும் அவ்வளவு சாதத்தையுஞ் சீரணிப்பதிலேயே கழிந்துவிடுகிறது."

சிஷ் : வறியோராகிய வங்க தேசத்தவர்கள் மாமிசம் (போன்ற விலைமிக்க போசன பதார்த்தங்களை) உண்ணுதல் கூடுமா ?

சுவா : ஏன் கூடாது? சிற்றளவாக உண்ணலாம். வறுமைக்கெல்லாங் காரணம் சோம்பற் குணமே. குடும்ப சம்ரக்ஷணைக்காக உழைக்கிற மக்களில் ஒருவன் இறந்துவிட்டான். அல்லது அவனுடைய சம்பளங் குறைக்கப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குடும்பத்தார் என்ன செய்கிறார்கள் ? குழந்தைகளுக்குக் கொடுக்கிற பசுவின் பாலை அளவிற் குறைக்கிறார்கள்; அல்லது தங்களுடைய ஒருவேளை போசனத்தைக் குறைத்து, இரவில் அரிசிப் பொரியை உண்டு காலம் கழித்துவிடுகிறார்கள்.

சிஷ் : வேறென்ன செய்யலாம்?

சுவா : என்ன செய்யவேண்டுமெனிற் பிரயாசைப்பட்டுக் கொஞ்சங் கூட உழைத்துப் போசனத்தைச் சுருக்காமற் றக்கவாறு நடந்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்யச் சோம்பேறித்தனம் விடுவதில்லை. கடைத்

தெருவிற் போய் ஊர்க்கதை பேசி வம்பளந்து, அருமையான நேரத்தையெல்லாம் வீணிற் போக்கடிப்பதே நம்மவருடைய கொள்கையாயிற்று. ஐயோ! இவர்கள் பாழாக்குகிற நேரத்தைப் பயன்படுத்தப் பயின்று கொண்டார்களாயின் எவ்வளவு நன்மையுண்டாகும்!

(54)

கல்கத்தாவில் பலராம் பாபு வீட்டில் சுவாமிஜி வாசம் பண்ணிய நாளில் ஒருநாள் அவரைப் பார்க்கும்படி போயிருந்தேன். ஜப்பானையும் அமெரிக்காவையும்பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த பின்பு நான் அவரை நோக்கி, "சுவாமி, மேலைத் தேசங்களில் தங்களுக்கு எத்தனை சிஷ்யர்கள் இருக்கிறார்கள்?" என்று கேட்டேன்.

சுவா: பலர் இருக்கிறார்கள்.

சிஷ்: இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் இருக்குமா?

சுவா: அதிலும் பார்க்கக்கூட இருக்கும்.

சிஷ்: அவர்கள் எல்லோருக்கும் தாங்கள் மந்திரோபதேசம் செய்திருக்கிறீர்கள்தானே?

சுவா: ஆம்.

சிஷ்: பிரணவத்தோடு மந்திரம் உச்சரிக்கும்படி அவர்களுக்கு உத்திரவு கொடுத்திருக்கிறீர்களா?

சுவா: ஆம்.

சிஷ்: மகராஜ், அப்படிப்பட்ட உத்திரவைத் தாங்கள் எங்ஙனம் கொடுக்கலாம்? பிராம்மணரல்லாதாரும் முக்கியமாக சூத்திரரும் பிரணவம் உச்சரிக்கப்படாதென்று சொல்லப்பட்டிருக்கிறதே; அஃதன்றியும் மேலைத் தேசத்தார் சூத்திரர்களுமல்லர்—மிலேச்சராயிற்றே!

சுவா : என்னிடம் ஞானோபதேசம் பெற்ற மேல் நாட்டுச் சிஷ்யர்கள் பிராம்மணரல்லர் என்று நீ எப்படிச் சொல்லுதல் கூடும் ?

சிஷ் : இந்தியாவுக்குப் புறம்பே யவன நாட்டிலும் மிலேச்ச நாட்டிலும் பிராமணர் உண்டா ?

சுவா : என்னுடைய சிஷ்யர்கள் எல்லாரும் பிராமணர். பிராமணரல்லாதார் பிரணவம் உச்சரித்தல் தகாதென்பதை முற்றிலும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் பிராமணனுடைய புத்திரன் தவறாமல் பிராமணன் ஆவானோ என்றால், ஆதலுங்கூடும், ஆகாமற் போதலுங்கூடும். பாக்பஜார் தெருவில் அகோர சக்ரவர்த்தியுடைய மருமகனைப்பற்றிக் கேள்விப்படவில்லையா ? அவன் தோட்டியாக மாறி அந்தச் சாதிக்குரிய தொழில் செய்துகொண்டிருந்தானே, அவன் பிராம்மணனுடைய புத்திரன், அல்லவா ? பிராம்மணச் சாதி வேறு, பிராம்மணத் தன்மை வேறு. இந்தியாவிற் பிராம்மணச் சாதியிற் பிறந்தவனைப் பிராமணனென்று கொள்ளுகிற வழக்கமுண்டு ; மேலைத் தேசத்திற் பிராமணத் தன்மையுடையவனையே பிராமணன் என்று கருதுவார்கள். சாத்விகம், ராஜசம், தாமசம் ஆகிய முக்குணங்களிருப்பதுபோலவே பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று ஒருவனைப் பகுத்துக் காட்டுகிற குணங்களுமிருக்கின்றன. பிராம்மணத் தன்மையும் க்ஷத்திரியத் தன்மையும் இந்நாட்டில் நின்று அகன்று போகின்றன. மேலைத் தேசத்தவர்கள் இப்பொழுது க்ஷத்திரியத் தன்மையை அடைந்திருக்கின்றார்கள். இன்னும் ஒரு படியிற் பிராமணத் தன்மையை யடைவார்கள். அந்நிலைக் கேற்றவாறு தங்களைச் சீர்படுத்திக்கொண்ட பலர் அங்கு இருக்கிறார்கள்.

சிஷ் : சாத்வீக நிலையை யடைந்தவர்களைப் பிராம்மணர் என்கிறீர்கள்.

சுவா : ஆம், அப்படியே இராஜசம், தாமசம், சாத்துவீகம் என்ற குணங்கள் மூன்றும் ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏறறத் தாழ்ச்சியாக அமைந்திருப்பது போல, பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரத் தன்மையாகிய நான்கும் ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏற்றமாகவோ குறைவாகவோ இருக்கின்றன. ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொரு குணம் ஏற்பட்டுத் தோற்றும். உதாரணமாக ஒரு மனிதன் சம்பளத்துக்கு ஊழியஞ் செய்யும்போது சூத்திரத் தன்மையிலிருக்கிறான்; பொருள் கருதிச் சுயமான வியாபார முயற்சி செய்யும்போது அவன் வைசியனாகிறான். துஷ்ட நிக்ரகம் பண்ணப் போர் புரியும்போது க்ஷத்திரியத் தன்மையைக் காட்டுகிறான்; இறைவனைப் பற்றித் தியானித்து அவரைப்பற்றிச் சம்பாஷிப்பதிலே காலங்கழிக்கும்போது அவன் பிராம்மணன் ஆகிறான். இயல்பாகவே ஒருவன் ஒரு சாதியிலிருந்து இன்னுமொரு சாதிக்கு மாறிக் கொள்ளுதல் கூடும். அல்லாவிட்டால் விசுவாமித்திரர் பிராம்மணரானதும் பரசுராமர் க்ஷத்திரியரானதும் எப்படி?

சிஷ் : தாங்கள் சொல்வது நியாயமாகத் தோற்றுகிறது. ஆனால் எங்களுடைய பண்டிதர்களும் குல குருக்களும் ஏன் இவ்வாறு சொல்லுகிறார்களில்லை?

சுவா : அது தான் இந்நாட்டிலுள்ள ஒரு பெருந் தீமை. இது நிற்க.

அதன்மேற் சுவாமிஜீ மேலைத் தேசத்தார் எவ்விஷயத்தையும் விடாப்பிடியாகச் செய்கிற குணத்தை வியந்து கூறிச் சமயானுஷ்டானத்திலும் அவர்கள் இந்தக் குணத்தைக் காட்டுகிறார்கள் என்று சொன்னார்.

சிஷ் : உண்மைதான் மகராஜ்! மேலை நாட்டார் சமயானுஷ்டானம் செய்யத் துவங்கினால் அவர்களுடைய சித்த சக்தி பிராண சக்தி முதலியன அதி சீக்கிரத்தில் விருத்தியடைகின்றன என்பதாகக் கேள்வி.

பட்டிருக்கிறேன். சில நாட்களுக்கு முன்பு மேலைத் தேசத்துச் சிஷ்யனொருவன் எழுதிய காகிதத்தைச் சாரதாநந்தசுவாமி காட்டினார். நான்கு மாதங்கள் மாத்திரம் சாதனை செய்ததனால் எவ்வளவோ சக்திகள் உண்டாய் விட்டதாக அக்காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

சுவா: பார்த்தாயா! இதனால் மேலை நாட்டினிற் பிராம்மணர் உண்டோ இல்லையோ வென்பதை உணர்ந்து கொள்ளலாம். இங்கு பிராமணர் உண்டு தான். ஆனால் அவர்களுடைய கொடுங்கோன்மையினால் நாட்டைப் பாழ்படுத்துகிறார்கள். அவர்களிடமுள்ள பிராமணத் தன்மையும் சிறிது சிறிதாக அகன்று போகிறது. குரு சிஷ்யனுக்கு மந்திரோபதேசஞ் செய்வதுண்டு; ஆனால் அது இந்த நாட்டில் ஒரு வியாபாரமாய் விட்டது. இனி குருவுக்கும் சிஷ்யனுக்கும் இடையிலுள்ள சம்பந்தந்தானும் ஆச்சரியமானது. குருவினுடைய வீட்டிற் சாப்பாட்டுக்கொன்றுமில்லை யென்று வைத்துக் கொள்வோம்; அவருடைய மனைவி அவரை அணுகி, "பகல் முழுக்கச் சொக்கட்டானாடிக் கொண்டிருந்தால் பசி தீர்ந்து விடுமா? உம்முடைய சிஷ்யரிடம் ஒரு முறை போய் வாரும்" என்று சொல்ல அதற்குப் பிராம்மணர், "நாளைக் காலையிலே எனக்கு நினைப்பூட்டிவை. நமது சிஷ்யன் ஒருவனுக்கு லாபம் வந்திருக்கிறதாம்; நான் அவனிடம் பலநாளாகப் போகவுமில்லை" என்று கூறுகிறார். இதுதான் வங்காளத்தில் உங்கள் குல குருக்களுடைய நிலைமை. மேலைநாட்டில் குருத்துவம் அவ்வளவு கெட்டுப்போகவில்லை. அது உங்கள் நிலையினும் பார்க்க நல்லது.

(55)

[சனிவாரம், 1898-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் தேதி]

சுரேந்த்ர நாத் சேன்

சிஷ்: அதிகாலையில் சுவாமிஜியைப் பார்க்கப் போனேன். இந்நாளில் அவர் கல்கத்தாவில் ராமகாந்த வாசு வீதியிலுள்ள ஐம்பத்தேழாம் இலக்கமுடைய பலராம் பாபு வீட்டில் வசித்து வந்தார். உள்ளறை நிறையப் பக்தர்களிருந்து அவருடைய திருவாக்கைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுவாமிஜி அவர்களைப் பார்த்து, "சிரத்தை வேண்டும்; சுய நம்பிக்கை வேண்டும். பலமே உயிர்; பலவீனமே மரணம். 'சாவில்லாததாய்ப் பந்தங்களோடு தொடர்பில்லாததாய் இயல்பாகவே பரிசுத்தமாக இருக்கிற ஆத்மாவே நாம். ஆதலால் நாம் பாபச் செயல் புரிதல் கூடுமா? ஒரு போதுங் கூடாது' என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அத்தகைய நம்பிக்கை நம்மை ஆண் தன்மை பொருந்திய மனிதராக்கும், தேவர்களுமாக்கும். இவ்வாறாகிய சிரத்தையை மறந்தமையினால் தான் தேசம் வீணாகப் பாழ்பட்டுப் போயிற்று" என்று மொழிந்தார்.

அப்பொழுது நான், "அப்படியாயின் இந்தச் சிரத்தையை நாம் எவ்வாறு இழந்தோம்?" என்று வினவினேன்.

சுவா: பாலியப் பிராயந்தொட்டு நாம் படித்ததெல்லாம் பிழையான கல்வி. நாம் ஒன்றுக்கும் பற்றாதவர்களென்றுதான் படித்திருக்கிறோம். நம்முடைய தேசத்தில் அறிவிற் பெரியவர்களும் வீரவான்களும் பிறந்தார்களென்பதை நமக்கு ஒருவரும் சொல்லிவைக்கவில்லை. பலத்தைத் தரும் உண்மைகளொன்றும் நமக்குக் கற்பிக்கப்படவில்லை. கைகால் முதலிய அவயவங்

களைத் தானும் உபயோகித்துத் தொழில் செய்ய நம்மைப் பயிற்றிவைக்கவில்லை. ஆங்கிலேயரின் முன்னோர்களைப் பற்றிய விஷயங்களைப் பயின்றோம். நம்முடைய முன்னோர்களைப் பற்றிச் சொல்லுவாரின்றி யிருந்தோம். பலவீனத்திலேயே பயிற்றப்பட்டோம். பிற அரசுக்குள்பட்டு வாழ்தலினால் நாம் பலவீனர்களென்றும் சுயேச்சையாக ஒன்றுஞ் செய்யத் தகாதவர்களென்றும் நினைத்து விட்டோம். இப்படி யிருக்கும்பொழுது சிரத்தை எங்ஙனம் நிலைபெற்றிருக்கும்? மனத் திடமும் சுய நம்பிக்கையு முடையவர்களாக நாம் மீட்டும் சிரத்தை யுள்ளவர்களாகவேண்டும். அப்பொழுதுதான் நமது தேச நன்மைக்கு நாம் செய்யவேண்டிய கைங்கரியமெல்லாம் நாமே செய்வோம்.

சிஷ் : இஃதெங்ஙனமாகும்! ஜன சமூகத்திலுள்ள அளவிறந்த துன்பங்களுக்கெல்லாம் சிரத்தை எவ்வாறு நிவர்த்தியைத் தரும்? தேசத்தில் எவ்வளவு கஷ்டங்களிருக்கின்றன! இவற்றை யெல்லாம் அகற்றுவதற்காகவே இந்திய காங்கிரஸ் மகாசபை முதலிய தேசீய சபைகள், கூட்டங் கூடி பிரித்தானிய ராஜ்யத்தாருக்குத் தாழ்மையான விண்ணப்பம் சமர்ப்பித்திருக்கின்றனவே. நம்முடைய குறைகளைத் தெரியப்படுத்த இதைவிட நல்வழியென்ன? இந்த விஷயத்தில் சிரத்தையினால் ஆவதென்ன?

சுவா : குறைவு உங்களுடையதா அல்லது அரசினருடையதா? உங்களுடையதாயின், அவர்களேன் தலையிட்டுக் கொள்ளுகிறார்கள்? உங்கள் குறைவை நீங்களே அகற்றிக்கொள்ள வேண்டும்.

சிஷ் : குடி ஜனங்களாகிய எங்களுடைய கஷ்டங்களை நீக்குதல் அரசாளுபவர்களுடைய கடமையல்லவா? ஏதாவது வேண்டுமாயின் அரசரைவிட வேறு யாரைக் கேட்கலாம்?

சுவா : இரப்போனுக்குக் குறை என்றும் அகலாது. நீங்கள் கேட்பதை யெல்லாம் அரசினர் அளித்துவிட்ட

தாக வைத்துக்கொள்வோம். பெற்ற நன்மையைப் பேணி நடத்த மனிதர் வேண்டுமல்லவா? ஆதலால் முத லிலே ஆண் தன்மை பொருந்திய மனிதரை ஆக்கிவைப் போம். ஆண் தன்மை வேண்டும்; அதுவும் சிரத்தை யினுல் தான் ஆகும்.

சிஷ் : ஆனுல் ஐய, பெரும்பாலார் இப்படி நினைக்க வில்லையே!

சுவா : நீ பெரும்பாலாரென்று சொல்வது மூடரை யும் மந்தபுத்தி யாளரையுமே. சுயபுத்தி கொண்டு ஆலோசிப்பவர் எவ்விடத்தும் அற்பத் தொகையினர் தான். ஆயினும் எல்லா விஷயங்களிலும் இவர்களே தலைமை வகித்துக் காரியம் நடத்திவைப்பார்கள். இவர் களே பெரும்பாலராகியோரை வழி நடததிவைப்பார் கள். அது நன்று. ஏனெனில் இவர்களைப் பின்பற்றி நடப்பதனுல் எல்லாக் காரியங்களும் செவ்வனே நடந் தேறும். யாருக்கும் பணிந்து நடக்கமாட்டோம் என்று தலையை நிமிர்த்துக்கொண்டு திரிபவர்கள் மூடர். அவர் கள் தங்களது மூட யோசனைகொண்டு நடந்து தங்களைத் தாங்களே பாழாக்கிக் கொள்ளுகிருர்கள். ஜன சமூகத் திருத்தத்தைப்பற்றி வாய்ப் பேச்சு அதிகமாகப் பேசு கிறீர்கள். ஆனுல் என்ன செய்கிறீர்கள்? திருத்தமென்ப தனுல் நீங்கள் கருதுவது விதவா விவாகம், பெண்களுக் குச் சுயேச்சை முதலியன அல்லவா ? பின்னும் இந்தத் திருத்தங்களும் ஒரு சில சாதியாருக்குள்ளேயே நடத்திக் கொண்டு வருகிறீர்கள். இந்த விதமான திருத்தங்களாற் சிலருக்கு நன்மை யுண்டாகும். தேச முழுவதுக்கும் என்ன பயனுண்டாகப் போகிறது? இந்தவிதத் திருத்தங் கள் திருத்தங்களா, அல்லது சுயநலக் கொள்கைகளா? எப்படியாவது ஒரு சாரார் தமது வீட்டைச் சுத்த மாக்கி வைத்துக்கொண்டு மற்றவர்களை வர வரக் கெட் டுப்போக விடுகிறதா?

சிஷ் : அப்படியாயின் ஜனசமூகத் திருத்தம் வேண்டாம் என்பதோ சுவாமிகளுடைய கருத்து?

சுவா: யார் அப்படிச் சொன்னவர்கள்? திருத்தம் வேண்டியதுதான். நீங்கள் திருத்தம் திருத்தம் என்று சொல்லுபவை யெல்லாம் ஏழைச் சனங்களுக்குப் பயனற்றவை. நீங்கள் ஆரவாரிக்கிற விதவா விவாகம் முதலியன அவர்களுக்குள்ளே இப்பொழுதும் இருக்கின்றன. ஆதலால் நீங்கள் சொல்லுகிற திருத்தங்களை அவர்கள் திருத்தங்களாகக் கருதமாட்டார்கள். சிரத்தைக் குறைவினாலேயே நமக்குள் எல்லாவகையான தீமைகளும் விளைந்திருக்கின்றன. நோயினுடைய அடிவேரைக் களைதலன்றோ சிறந்தது! அஃதன்றி அதை அடக்கிவைப்பதனாற் பயனென்ன? பலவிதத் திருத்தங்கள் வேண்டும்; வேண்டாமென்று சொல்லுவது பேதைமை. இந்தியாவிற் கலப்பு விவாகம் வேண்டுமென்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. மிக நெருங்கிய விவாகத்தினாலே ஜன சமூகத்தில் நாடோறும் பலங் குன்றிப்போகின்றது.

அன்றைய தினம் சூரிய கிரகணமாதலால் சிஷ்யர் சுவாமியை நமஸ்கரித்துக் கங்காஸ்நானஞ் செய்யப் போவதாகவும் பின்பொரு தினம் வருவதாகவுஞ் சொல்லிப் போய்விட்டார்.

(56)

[ஞாயிற்றுக்கிழமை, 1898 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் தேதி]

இன்று சாயங்காலம் பாக் பஜாரில் பலராம் பாபு வீட்டில் ராமகிருஷ்ண சபையின் வாராந்தரக் கூட்டம் கூடுகிற தினமாயிருந்தது. துரியானந்த சுவாமியும் யோகானந்த சுவாமியும் பிரேமானந்த சுவாமியும் பிறரும் மடத்திலிருந்து வந்திருந்தார்கள். சுவாமிஜீ கிழக்குப் பக்கத்துச் சாலையிலிருந்தார். அப்பக்கமும் வடக்குத் தெற்குச் சாலைகளும் ஜனங்களால் நிறைவுற்றிருந்தன. சுவாமிஜி பட்டணத்திலிருக்கிற நாட்களெல்லாம் இவ்வண்ணமே ஜனங்கள் நிறைய வந்திருப்பார்கள்.

கூட்டத்திலிருந்த ஜனங்களுள் பலர் சுவாமிஜி இன்னிசையோடு பாடுவாரெனவறிந்து கேட்பதற்கு விரும்புற்றார்கள். அப்பொழுது மஹேந்திர மஹாசயருக்குச் சமீபமாக இருந்த சிலர் அவரைப் பார்த்துச் சுவாமிஜியைப் பாடும்படி கேட்கச் சொன்னார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதைக் குறிப்பினலறிந்த சுவாமிஜி, மஹாசயரைப் பார்த்து, "மஹாசயரே, என்ன உங்களுக்குள்ளே பேசிக்கொள்ளுகிறீர்கள்? வெளியாய்ச் சொல்லுங்கள்" என்றார். அப்பொழுது மஹாசயரவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளச் சுவாமிஜியும் உடன்பட்டுக் கேட்போருள்ளத்தைக் கவருந் தமது குரலினால், "அன்பினோடுள்ளத்தில் சாமளை யன்னையை யாதரித்தே யிருத்தி" என்னும் பாடலைப் பாடினார். யாழிசை போன்று இனிமை பயந்த பாடல் முடிந்ததும் சுவாமிஜி மஹாசயரைப் பார்த்து, "திருப்தியடைந்தீர்களா? இனிப் பாடல் வேண்டாம். பாட்டின் ஆனந்தத்தினால் பரவசப்பட்டு விடுவேன். அஃதன்றியும் மேலை நாட்டில் பலமுறை பிரசங்கஞ் செய்த காரணத்தினால் குரலுங் கெட்டுப்போயிற்று" என்றார். பின்னர் அங்கிருந்த மாணவ பிரம்மசாரியொருவரைப் பார்த்து முத்தி நிலையைப் பற்றிப் பிரசங்கஞ் செய்யச் சொன்னார். அந்த பிரம்மசாரியினுடைய பிரசங்கம் முடிந்ததும் வேறு சிலரும் பிரசங்கம் பண்ணினார்கள். பிரசங்க விஷயத்தில் வாதம் நிகழ்த்தும்படி சொல்லி ஒரு கிரகஸ்த சிஷ்யரை ஆரம்பித்துப் பேசும்படி சுவாமிஜி ஆக்ஞாபித்தார். எழுந்து பேசிய அந்தச் சிஷ்யன் அத்வைதத்தையும் ஞானத்தையும் உயர்த்திப் பேசித் துவைதத்தையும் பக்தியையும் இழித்துப் பேசினமையால் சபையிலிருந்த வேறொருவர் மறுத்துப் பேசலானார். இருவரும் நீண்ட நேரம் சொற் சண்டையிடுவதைப் பார்த்த சுவாமிஜி பின்வரும் வாக்கியங்களைச் சொல்லி இருபாலாரையும் வாயமர்த்தினார்.

சுவா: வாதம் நிகழ்த்தும்பொழுது எதற்காக ஆத்திரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறீர்

கள்? கேளுங்கள்: உண்மை ஞானமும் உண்மைப் பக்தியும் ஒன்றேயாம் என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. பக்தி மார்க்கத்தின்படி கடவுளைப் பூரண அன்பின் உருவமாகக் கொள்ளல் வேண்டும். இறைவன் அன்பின் உருவமாக இருத்தலால், "ஐய, நின்பால் அன்புடையேன்" என்று சொல்வதுகூடப் பொருந்தாத வாக்கியமாகும். அவனிலும் வேறாக அன் பென்பது ஒன்றுண்டா? உன்னுள்ளத்திலெழுகிற அன்பே அவனாயிருக்கிறான். உள்ளத்தைக் கவர்கிற அனைத்திலும் அவனைக் காணுதல் கூடும். சோரன் களவெடுப்பதும், விலைமகள் தனது உடலை விற்பதும், தாய் குழந்தையை நேசிப்பதும், யாதேனு மொருவகை அன்பு பற்றியல்லவா? இந்த அன்பினிலெல்லாம் இறைவனைக் காணுதல் கூடும். அண்டங்கள் ஒன்றையொன்று கவர்கின்றன. ஆங்கும் அவனைக் காணுதல் கூடும். இனி இறைவன் எங்கு மிருக்கிறானென்றறிவதே ஞானமார்க்கத்தின் கொள்கையாகும்; இதுவே பக்தி மார்க்க ஞானமார்க்க சமரசமாகும். பாவ சமாதியில் மெய்ப்பொருட் காட்சி கண்டபின்னர் தான் இறைவனுக்கும் அன்பனுக்குமுள்ள பேதம் நீங்குகிறது. பக்தியோக நூல்களில் இறைவனைத் தியானிப்பதற்கு ஐந்து முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. கடவுளோடு அபேதமாக இருப்பதாகச் சிந்திக்கிற ஆறாவது முறையொன்றுமுண்டு. ஆதலால் பக்திமான் பக்திமானாக விருப்பதோடு அபேதக் காட்சியுடைய அத்வைதியாகவும் இருத்தல் கூடும். மாயையினுடைய வலையினுள்ளிருக்கும் வரையும் பேதக் காட்சியும் நிலைத்திருக்கும். தேசகால நிமித்தமும் நாம ரூபமாய்த் தோற்றுவதே இங்கு மாயை யெனப்படுவது. இந்த மாயையைக் கடந்தபின்னர் ஒன்றாயிருக்கிற தன்மை புலப்படும். அந்த நிலையில் அத்வைதமுமில்லை த்வைதமுமில்லை; யாவும் ஒன்றாய்விடுகிறது. ஆரம்ப அநுஷ்டானத்திற்றான் பக்திமார்க்கமும் ஞானமார்க்கமும் வேறுபாடுடையனவாகத் தோற்றுகின்றன. ஒரு சாரார் கடவுளைப்

புறத்தே காணுகிறார்கள்: மற்ற சாரார் அகத்தே காணுகிறார்கள். பரபக்தி யென்னும் மற்றொரு படி யிருப்பதாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. அத்துவித நிலையில் ஸ்திரப்பட்டு முத்தியடைந்த பின்பும் இறைவன் பால் அன்பு செலுத்துவதே அது. முத்திநிலை யடைந்த பின்னர் எதற்காகப் பக்தி செலுத்த வேண்டும் என்று கேட்டால், ஜீவன் முத்தர்கள் விதியனைத்தையும் கடந்தவர்களாதலால் அவர்களிடம் இந்தக் கேள்வியைத் தானுங் கேட்கக் கூடாதென்போம். முக்தராயினோர் சிலர் பக்திச் சுவை அனுபவிப்பதற்காக அதனை முற்றிலும் விடாமலிருப்பதுண்டு.

சிஷ்யர் : கடவுள் குழந்தையினிடம் தாய் காட்டுகிற அன்பிலிருப்பது கூடுமாயினும், சோரர், விலைமகள் இவர்களுடைய உள்ளத்திலுள்ள அன்பிலும் இருக்கிறாரென்று சொல்லுதல் கூடுமோ? அங்ஙனமாயின் உலகத்திலுள்ள நன்மையைப் போலவே தீமைக்குங் கடவுள் உத்தரவாதியாவாரன்றோ?

சுவா : எல்லாவகை அன்பிலும் கடவுள் இயல்பாக அமைந்திருக்கிறாரென்னும் உண்மை மேலான மெய்யுணர் வெய்திய பின்னர் தோற்றும். ஒருவன் அந்த மேனிலையை யடைந்த பின்பன்றி இவ்வுண்மையை அனுபவத்தில் நிச்சயித்தல் கூடாது.

சிஷ் : அங்ஙனமாயின் கடவுள் தீமையிலு மிருக்கிறாரென்னு முண்மையை ஒத்துக்கொள்ளுதல் வேண்டுமோ?

சுவா : ஆராய்ந்து பார்ப்பாயெனில் நன்மை தீமை என்பன, வழங்குவதற்கு உபயோகமான சொற்களாயிருப்பினும் ஒருபோதில் தீமையென்று சொன்ன பொருள் மற்றொரு போதில் நன்மையாயிருத்தலுங் கூடுமென்றறிவாய். உதாரணமாக அதோ இருக்கிற விளக்கினை யெடுத்துக்கொள்வோம். அதனுடைய ஒளியினால் பொருள்களைப் பார்ப்பதற்கும் பலவகைப்பட்ட

தொழில் செய்வதற்கும் சௌகரியம் ஏற்பட்டிருக்கிற தனால் விளக்கினை நல்லதென்கிறோம்; அதே விளக்கில் விரலை வைத்தால் தீமை யுண்டாகிறது. ஆதலால் ஒரு பொருள் நன்மையாவதும் தீமையாவதும் அதனை உப யோகிக்கும் விதத்தில் தங்கியிருக்கிறது. இங்ஙனமே பிற வும். பொதுவாகச் சொல்லுமிடத்து மனத்தையும் உடலையுந் தக்கவாறு உபயோகிப்பது நன்மை யாமென் றும் கெடுத்துக் கொள்வது தீமையாமென்றுஞ் சொல்லு தல் கூடும்.

பல கேள்விகளுக்குச் சுவாமிஜி விடை சொல்லிக் கொண்டிருக்கும்போது சபையிலிருந்த ஒருவர், "அண்ட கோளகையிலுள்ள உலகங்கள் ஒன்றினை யொன்று கவர் கின்ற கவர்ச்சியில் இறைவனிருக்கிறாரென்று சொல்வது உண்மை யில்லாவிடினும் கவிநயம் நிறைந்தது" என்று சொன்னார்.

சுவா: அப்படியல்ல ஐயா, அந்த உண்மை மெய் யுணர்வடைந்தவனுக்குப் புலப்படுவது; வாளாவாக விநயம் மாத்திரமானதல்ல.

இந்தக் குறிப்பினை விரித்துச் சுவாமிஜி பேசிக் கொண்டு போகும்பொழுது, சடமும் சித்தும் வேறல்ல வென்றும், ஒரு பொருளே இரு வேறு வகையாகத் தோற்றுகிறதென்றும், புறத்தேயுள்ள பிரபஞ்சத்தி லும் அகத்தேயுள்ள பிரபஞ்சத்திலும் தோற்றுகிற வல் லமையெல்லாம் ஒரே சக்தியின் பரிணாமங்களாமென் றும், சித்துப் பொருள் சிற்றளவாகத் தோற்றுமிடத்தை நாம் சடமென்று சொல்லுகிறோமென்றும், எந்த நிலைமை யிலும் எந்தக் காலத்திலும் பூரணமான சடப்பொருள் என்று சொல்லத்தக்க பொருளைக் காண்டலரிதென் றும், புறத்தேயுள்ள பிரபஞ்சத்திற்றோன்றுகிற உல கக் கவர்ச்சி சக்திதானே உயர்நிலையில் அன்பின் கவர்ச்சி யாகத் தோற்றுகிறதென்றும் அவர் கருதினதாக அறிந்து கொண்டேன்.

சிஷ் : அங்ஙனமாயின் மனிதர்க்கிடையில் வேறுபாடிருப்பானேன்? தமக்குரிய கருவிகளை மனிதர் பிழையான வழியிற் செல்ல விடுவானேன்?

சுவா : இவ்வித வேறுபாடுகள் கர்மத்தின் பயனாக ஏற்படுகின்றன. ஒருவனுடைய கர்மத்துக்கு அவனே பாத்திரவாதியாதலால் புலன்கள் தம்வழிச் செல்லாதடக்கிச் சரியான பாதையைப் பற்றி நடப்பதற்குரிய சாதனம் ஒவ்வொரு மனிதனுடைய கையிலுமிருக்கிறது.

சிஷ் : இவை யெல்லாம் பூர்வ கன்மப் பயனென்பதை ஒத்துக்கொண்டாலும் அவற்றிற்கு ஓர் ஆரம்பம் இருக்கவேண்டுமே; ஆரம்பத்திற் கடவுள் மனிதரை நல்லவர்களாகவுந் தீயவர்களாகவும் படைப்பானேன்?

சுவா : சிருஷ்டிக்கு ஆரம்ப முண்டென்று எங்ஙனஞ் சொல்லுவாய்? சிருஷ்டி அநாதியானது என்றே வேதங்கள் சொல்லுகின்றன. இறைவன் என்று உளனோ, அன்று முதற் சிருஷ்டியுண்டு.

சிஷ் : நல்லது சுவாமி; மாயையென்பது எங்கிருந்து வந்தது? அது இங்கிருக்க வேண்டிய காரணமென்ன?

சுவா : கடவுளைப் பற்றிய நிலையில் "ஏன்" என்று கேட்பது தவறு. குறைவு, குற்றம் உள்ள இடத்திலன்றோ விசாரணையுண்டு. அகண்டமாய்ப் பரிபூரணமாய் இருக்கிற அவரைப்பற்றி என்ன கேள்வியிருக்கிறது? மாயை எங்கிருந்து வந்ததென்பது எம்மாற் கேட்கக் கூடாத கேள்வியா யிருக்கிறது. நானும் நீயும் அனைவரும் தேசகால நிமித்தமாகிய மாயைக்குள்ளிருக்கிறோம். அங்ஙனம் இருந்துகொண்டு மாயை எங்ஙனம் ஆயிற்று என்று மாயைக்கு அப்பாற்பட்டதைக் கேட்டால் எவ்வாறமையும்?

வேறு பல வினாக்களுங் கேட்கப்பட்டன. இவற்றி லிருந்து மேலைத்தேச தத்துவ சாஸ்திரிகளாகிய மில், ஹமில்டன், ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் முதலியவர்களைப் பற்றி விசாரணை யெழுந்தது. எல்லாவற்றுக்கும் சுவாமிஜி தக்க விடையளித்தார். மேலைத்தேச தத்துவ ஞானத்தில் சுவாமிஜிக்குள்ள ஆழமான ஆராய்ச்சியும், கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உடனே பதில் சொல்லு கிற தீவிர புத்தியும் யாவரையும் பிரமிக்கப்பண்ணின.

பல விஷயங்களையும் பற்றிப் பேசியாயினபின் கூட்டமுங் கலைந்தது.

(57)

ஒரு வருணத்து உட்பிரிவுகளுக்குள்ளே கலப்பு விவாகம்—பாலிய விவாகத்துக்கு மறுதலை—இந்தியா விற்கு வேண்டிய கல்விமுறை—பிரம்மசரியம்.

[1898ஆ ஜனவரிமீ 24உ திங்கட்கிழமை]

சென்ற சனிக்கிழமை சுவாமிஜியினிடத்தில் பல வினாக் களை வினவிய கனவான் இன்றும் வந்திருந்தார். அவர் கலப்பு விவாகத்தைப்பற்றிய விசாரணையை மீட்டும் தொடங்கி, "பலவேறு நாட்டாரிடையே கலப்பு விவா கத்தை ஏற்படுத்தும் மார்க்கம் எதுவாகும்?" என்று கேட்டார்.

சுவா: வேற்று மதத்தை அனுட்டிக்கும் புறம் பான நாட்டாரோடு கலப்பு விவாகம் நடத்த வேண்டு மென்பது எனது அபிப்பிராயமல்ல. தற்கால நிலையின் படி அப்படி நடந்தால் ஜனசமூகத்தின் கட்டு குலைந்து பலவகைத் தீமைகள் ஏற்படுவதற்கு ஏதுவாகும் என் பது நிச்சயம். ஒரே சமயத்தை அனுட்டிக்கின்ற ஜனங்களிடையே கலப்பு விவாகம் ஏற்படவேண்டு மென்பதே எனது கொள்கை.

வினு : அதுதானும் பலவகை அல்லலுக்குக் காரணமாகுமன்றோ? உதாரணமாக எனக்கு வங்காள நாட்டிற் பிறந்து வளர்ந்த ஒரு மகளிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அவளை மஹாராஷ்டிர தேசத்து அல்லது சென்னைப் பட்டணத்து வாலிபனொருவனுக்கு மணமுடித்துக் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தப் பெண் தனது நாயகனுடைய பாஷையை அறிந்துகொள்ள மாட்டாள். அவனும் அவளுடைய பாஷையை அறிந்துகொள்ளமாட்டான். இருவருடைய பழக்க வழக்கங்களிலும் ஒழுக்க முறையிலும் வேறுபாடுகள் எத்தனையோ இருக்கின்றன. இங்ஙனம் கலப்பு விவாகமான சதிபதிகளிடையே ஏற்படக்கூடிய கலக்கங்கள் இவைபோல்வன பலவுள. ஜனசமூகத்திலோ வென்றால் பலவித மாறுபட்டங்கள் ஏற்படக் கூடும்.

சுவா : இத்தகைய கலப்பு விவாகங்கள் நடக்கக் கூடிய காலம் மிக நெருங்கி வருகிறது. ஆயினும் சடுதியாக அவற்றை ஆரம்பிப்பது புத்தியாகாது. தடை குறைந்த வழியாகச் செல்வது காரியசித்திக்குரிய முறைகளில் ஒன்றாகும். ஆதலால் முதலிலே ஒருவருடைய ஜாதியின் உட்பிரிவுகளுள்ளே விவாகங்கள் நடந்து வரட்டும். உதாரணமாக வங்காளநாட்டுக் காயஸ்த ஜாதியாரை எடுத்துக்கொள்வோம். அவர்களுள்ளே உத்தரராரகி, தக்ஷிணராரகி, வங்கஜ என்னும் பல பிரிவுகளுண்டு. இப்பிரிவினர் தம்முள்ளே சம்பந்தஞ் செய்துகொள்வதில்லை. உத்தரராரகிக்கும் தக்ஷிணராரகிக்கும் இடையே கலப்பு விவாகம் நடக்கட்டும். அது இப்பொழுது முடியாததாயின் தக்ஷிணராரகிக்கும் வங்கஜருக்குமிடையே கலப்பு விவாகம் நடக்கட்டும். இம்மாதிரி உள்ளதை வளர்த்துக் கைக்கொள்ளக் கூடியதைக் கைக்கொள்வதே முறை. முற்றிலும் உடைத்துக் கட்டவேண்டுமென்பது ஜனசமூக சீர்திருத்தத்தின் கருத்தல்ல.

விநு: நல்லது, தேவரீர் சொல்கிறபடியே ஆகட்டும். ஆனால் இதனால் விளையக்கூடிய நன்மையென்ன?

சுவா: நம்முடைய ஜனசமூகத்தில் பல நூற்றாண்டுகளாக ஒரே ஜாதியின் ஒரே உட்பிரிவினுள்ளே மணமுடித்துக்கொள்ளுகிற வழக்கம் நடந்து வந்தமையினாலே நெருங்கிய பந்துக்களிடையே மணம் நடந்தேறுவதையும் இதனால் நம்முடைய ஜனங்கள் சரீர வலிமையிற் குறைவடைந்து பல நோய் துன்பங்களுக்கு இடமாகின்றார்களென்பதையுங் கண்கூடாகக் காணலாமே. வேற்று உதிரம் வந்து சேராது ஒரு சிறு வட்டாரத்தினுள்ளே மீட்டும் மீட்டும் மணமுடிப்பதனால் அத்தகைய மணத்தின் பயனாகப் பிறக்கிற குழந்தைகள் தந்தையருடைய நோயோடு பிறக்கிறார்கள். நோய்க் கிருமிகளை எதிர்த்து வெல்லுவதற்கு அவர்களுடைய இரத்தத்திற் சக்தியில்லை. தற்காலத்திலுள்ள நோய்களினின்றும் அவற்றின் காரியமாகிய பலவகைத் துன்பங்களினின்றும் நம்முடைய ஜனங்களைக் காப்பாற்ற வேண்டுமாயின் மண முடிக்கும் எல்லை விரிவடைய வேண்டுமென்பது வெளிப்படை.

விநு: பாலிய விவாகத்தைப்பற்றித் தேவரீருடைய அபிப்பிராயம் யாது என அறிய விரும்புகிறேன்.

சுவா: வங்காள நாட்டில் கல்வியறிவுள்ள வகுப்பார்களிடையே ஆண்மக்களுக்கு இளவயதிலேயே மண முடித்துவைக்கும் வழக்கம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. பெண்மக்களும் முன்னையிலும் பார்க்க இரண்டொரு வயது ஏறிய பின்புதான் மணமுடித்துக் கொடுக்கப்படுகிறார்கள். இது பொருளின்மையின் நெருக்கத்தினால் ஏற்பட்டது. எக்காரணத்திலாயினுமாகுக. சிறுமியர்களை மணமுடித்துக் கொடுக்கிற வயது இன்னும் உயர்த்தப்பட வேண்டும். இந்த விஷயத்தில் தந்தைதான் என்ன செய்வான்?

பாவம், சிறுமி சிறிது வளர்ந்துவிட்டால் தாய் முதற்கொண்டு இனபந்துக்கள் அயலாராகவுள்ள பெண்களெல்லோரும் சீக்கிரம் மணமுடித்து வைக்க வேண்டுமென்று நெருக்கத் தொடங்குவார்கள். மண வினையை நிறைவேற்றும் வரையும் தந்தையை ஆறுதலாயிருக்கவிடமாட்டார்கள். மேலும் இந்த விஷயத்தில் உங்களுடைய போலிச் சமயவாதிகளைப்பற்றிச் சொல்வதினும் பார்க்கச் சொல்லாமல் விடுவது நல்லது. இந்நாட்களில் இவரது சொற்களுக்குச் செவிசாய்ப்பார் யாருமில்லை. ஆயினும் இப்போலிகள் தாமே தம்மைத் தலைவராக எண்ணி வெளிப்பட்டு விடுகிறார்கள். சட்டசபையார் பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த பெண்ணை மணம் முடித்துக்கொள்பவனுக்குத் தண்டனை விதிக்கவேண்டும் என்னும் கருத்தடங்கிய உளப்பாட்டு வயது மசோதாவைக் (Age of Consent Bill) கொண்டுவர, அதைக் கண்ட உங்கள் சமயத்துப் போலித்தலைவர்கள், 'ஐயோ எங்கள் சமயம் போச்சே' என்று கூச்சலிட்டு அந்த மசோதாவைத் தடுத்து நின்றார்கள். பன்னிரண்டு பதின்மூன்று வயதுச் சிறுமியைக் கருப்பவதியாக்குதல் இவர்களுடைய சமய முடிபுபோலும். இதைக் கண்ட அரசினர்கள், 'ஐயோ பாவம், இவர்களுடைய சமயந்தான் இருந்தவாறென்னே! இத்தகைய ஜனங்கள் அரசியற் சீர்திருத்தங்கள் கேட்பதும் கலகமிடுவதும் நகைக்கிடமாமே' என்றெண்ணுகிறார்கள்.

வினா: அப்படியாயின் தேவரீருடைய கருத்துப்படி ஆடவரும் பெண் மக்களும் வயது ஏறியபின் மணம் முடித்துக்கொள்ளுதல் முறையென்பதா?

சுவா: ஆம், அப்படியே, அத்தோடு நல்ல கல்வியும் புகட்டப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒழுக்கப் பிழைகள் ஏற்படுதலுங் கூடும். கல்வியென்றால் தற்காலத்தில் நடந்துவரும் கல்விமுறை யென்பது எனது கருத்தல்ல. வீண் ஏட்டுக்கல்வியினால் எய்தும்

பயனில்லை. நல்லொழுக்கமும் மனவலிமையும் விரிந்த அறிவும் வாய்க்கப்பெற்று, கற்றவனுக்குச் சுவாதந்திரியத்தைக் கொடுக்கத்தக்க கல்வியே கல்வி.

விஞ: நம்முடைய ஸ்திரீகளைப் பலவகையாக நாம் திருத்தமடையச் செய்யவேண்டும்.

சுவா: முறையான கல்வியைக் கற்பிப்போமாயின் தங்களுக்கு வேண்டிய திருத்தங்களைப் பெண்கள் தாங்களே செய்துகொள்வார்கள். இதுவரையும் ஏழைத்தனத்திலும் அடிமைத்தனத்திலும் பெண்கள் பயிற்றப்பட்டு வந்தமையால், துன்பமோ, தீங்கோ அணுகி வரும்பொழுது கண்ணீரை ஆறாகப்பெருக்கி அழுவது மாத்திரம்தான் அவர்களறிந்த விஷயம். பிற நற்குணங்களோடு வீரத்தையும் தைரியத்தையும் பெண்கள் அடையப்பெற வேண்டும். தற்காப்புக்குரிய முறைகளையும் அவர்கள் பயின்றுகொள்ளுதல்வேண்டும். ஜான்ஸீ தேசத்து இராணியினுடைய செய்கை எவ்வளவு சிறப்புடையது!

விஞ: தேவரீர் சொல்லுகிறதெல்லாம் முற்றிலும் புதிய முறையாயிருக்கிறது. இவ்வெண்ணம் நமது பெண் மக்களைப் பயிற்றுவதாயின் அது மிகவும் நீண்ட காலத்து முயற்சியாகும் என்று அஞ்சுகிறேன்.

சுவா: அப்படியாயினும் நாம் இயன்றதைச் செய்ய வேண்டும். பெணமக்களைப் படிப்பிப்பது மாத்திரமல்ல. நமக்கே நாம் பாடஞ் சொல்லிவைக்க வேண்டும். மக்களைப் பெறுவதனால் மாத்திரம் ஒருவன் தந்தையென்றெண்ணப்பட மாட்டான். எத்தனையோ பெரிய பொறுப்புகளை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெணகளுடைய கல்விமுறையிற் சில திருத்தங்களை ஆரம்பிப்பதாயின் நம் தேசத்துப் பெண்மக்களுக்குப் பிறப்புரிமையாகவுள்ளதும் அவர்களால் எளிதில் உணர்ந்துகொள்ளப்படுவதும் ஆகிய

கற்பொழுக்கத்தை முதலிலே ஸ்திரப்படுத்தி எல்லாவற்றினும் பார்க்கக் கற்பே சிறந்தது என்னும் உன்னதமான எண்ணத்தை அவர்கள் மனத்தில் உண்மையாக நிலைபெறச் செய்ய வேண்டும். இதனால் அவர்கள் இல்வாழ்க்கையிலிருப்பினும் மணமுடியாது வாழினும் சீவியத்தின் எவ்வொரு நிலையிலும் நிறைந்த தைரியம் படைத்தவர்களாய்க் கற்பொழுக்கத்தினை இழப்பதினும் பார்க்க உயிரினை இழந்துவிடச் சித்தமுள்ளவர்களாகவேண்டும். மனத்துக்கொண்ட உன்னத நோக்கத்துக்காக உயிரைத்தானும் கொடுப்பதற்குச் சித்தமாயிருப்பது குறைந்த தைரியமாகுமா? தற்கால நிலைமையை நோக்குமிடத்துப் பெண்மக்களுட் சிலர் நைஷ்டிகப் பிரம்மசரிய ஒழுக்கத்தில் நிற்கவேண்டும்; பண்டு தொட்டுத் தமக்கு உரிமையாக உள்ள கற்பொழுக்கத்தினாலே மனவலி படைத்தவராய்ச் சீவியகாலம் முற்றும் கன்னிகழியாத தூயநோன்பினை நோற்பது அவசியமென்பது புலப்படுகின்றது. அதனோடுகூட அவர்க்கும் பிறர்க்கும் பயன்படக்கூடிய பலவகைக் கலைஞானங்களை அன்னார் கற்க வேண்டும் கல்வியின் பயனை அறிவதனால் அவர்கள் கற்கவேண்டியனவற்றை ஆர்வத்தோடும் உவகையோடும் எளிதில் கற்பார்கள். நம்முடைய தாய்நாட்டின் முன்னேற்றத்துக்காக இந்தியத்தாயின் மக்களுட் சிலராவது பரிசுத்த இருதயமுடைய பிரம்மசாரிகளாகவும் பிரம்மசாரிணிகளாகவும் வாழ்வது இன்றியமையாதது.

வினா: தாய்நாட்டினுடைய நன்மை இத்தகையோரால் யாங்ஙனம் ஆகும்?

சுவா: அவர்களுடைய நன் முன்மாதிரியாலும் முயற்சியினாலும் தேசத்தில் உயர்ந்த நோக்கங்கள் நிலைப்பட, எண்ணத்திலும் செய்கையிலும் ஒருவகை உயர்வு உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. இப்பொழுது உள்ள நிலை என்ன? ஒன்பது பத்து வயது நிறைந்த

சிறுமியை எப்படியாவது மண முடித்துத் தொலைத்து விட வேண்டும்; அவளுக்குப் பதின்மூன்றுவது வயதில் ஒரு குழந்தை பிறந்துவிடுமாயின், அக்குடும்பத்தில் உள்ளவர்களுக்கே பெரிய சந்தோஷம் ஏற்படுகிறது. இப்படியான எண்ணங்கள் மாறுபட்டாற்ருன் முன்னுளிலுள்ள சிரத்தையானது நமது சாதியார்க்கு மீண்டும் வந்து எய்துதல் இயல்வதாகும். நாம் முன்பு காட்டியபடி பிரம்மசரிய ஒழுக்கத்தில் நிற்பவர்களுக்கு ஏத்துணைப் பெரியதாகிய சுயநம்பிக்கையும் திடசித்தமும் வந்து எய்தும்! அவர்கள் பெரிய நன்மைக்கு நிலைக்களமாவார்கள்.

இப்படி சுவாமிஜி கூற, வினுக்களையெல்லாம் வினுவியவர் மனப்பூர்வமாக சுவாமிஜியை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டார். அவருக்கு சுவாமிஜி, "பின்பும் பலமுறை வரலாம்" என்று கூறினுர். அதைக் கேட்ட அந்தக் கனவான் சுவாமிஜியை நோக்கி, "தேவரீருடைய திருவாக்கினின்று முன்பொருபோதும் பிறிதோரிடத்தும் கேட்டறியாத பல புது உண்மைகளை அறிந்து மிகுந்த நன்மையை யடைந்தேன். ஆதலினுல் மீண்டும் வர விரும்புகிறேன்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு ஏகினுர். போசன வேளைக்கு நேரமாயினமையின் நானும் வீடு நோக்கிச் சென்றேன்.

(58)

மதுரபாவம்—பிரேமை—நாமகீர்த்தனம்—அதனுல் விளையும் கெடுதி—ஞானத்தினுல் எல்லைப்படுத்தப்பட்ட பக்தி—ஒரு நூதனமான சொப்பனம்.

[1898ஆு ஜனவரிமீ 24உ திங்கட்கிழமை]

அன்று பின்னேரம் மறுபடியும் நான் சுவாமிஜியுடைய திருமுன்னிலைக்கு வந்தேன்; அவரைச் சூழத் திரளான ஜனங்கள் கூடியிருக்கக் கண்டேன்

ஸ்ரீ சைதன்ய தேவருடைய பரம்பரையிலுள்ளோரிடத்தில் வழக்கமாக மதுரபாவம், அதாவது ஆண்டவனை நாயகனுகப் பாவித்து வழிபடும் முறை அப்பொழுது நடந்த சம்பாஷணையின் விஷயமாயிருந்தது. சுவாமிஜியினுடைய திருவாக்கிலிருந்து இடையிடையே வெளிவந்த நகைக்குறிப்பு மொழிகள் சூழ்ந்திருந்தோரை நகைக்கப் பண்ணின. அங்கிருந்த ஒருவர் அப்பொழுது, "மஹா பிரபுவாகிய ஸ்ரீ சைதன்யருடைய செயல்களிற் பரிகசிப்புக்கு இடமானவை எவை? அவர் பெரிய ஆத்மஞானி யென்று நீங்கள் எண்ணவில்லையா? அவருடைய செய்கை யொவ்வொன்றும் ஜனசமூகத்தினுடைய நன்மைக்காகவே செய்யப்பட்டனவன்றோ?" என்று கேட்டார்.

சுவா: யாரையா அது? உமக்குப் பரிகாசமாகத்தான் தோற்றுகிறது. ஸ்ரீ சைதன்யருடைய உயர்ந்த துறவு நிலையை அடைவதற்காக நான் ஜீவியகாலம் முழுவதும் எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்பதையும் அந்த உன்னதமான கொள்கையை ஜனங்களுடைய மத்தியிலே பரப்புவதற்கு எவ்வளவு முயற்சிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீரா? ஸ்ரீ சைதன்யர் அகோரமான தவங்களைச் செய்த மகா துறவி. ஸ்திரீகளோடும் சிற்றின்ப போகங்களோடும் அவருக்கு ஒருவகைத் தொடர்பும் இருந்ததில்லை. ஆனால் பிற்காலங்களில் அவருடைய சிஷ்யர்கள் தங்களுடைய கோஷ்டியில் ஸ்திரீகளையும் சேர்த்து அவருடைய திருநாமத்திலே வகை முறை தப்பி மாதரோடு கலந்து எல்லாவற்றையும் பெரும் பிழையாக்கிவிட்டார்கள். பகவான் ஸ்ரீ சைதன்யர் தம்முடைய ஜீவியத்திலே விளக்குணர்த்திய அன்பு மார்க்கமானது சிறிதேனும் காமத் தொடர்பு இல்லாதது; அத்தகைய உயர்ந்த நிலை சாதாரண மக்களுக்கு உரியதாவது அசாத்தியம். பிற்காலத்தில் வந்த வைஷ்ணவ குரவர்கள் பகவானுடைய ஜீவியத்திலுள்ள துறவு நிலையை வற்புறுத்திப் போதிப்பதை விடுத்து அவரு

டைய மதுரபாவக் கொள்கையைச் சாதாரண ஜனங் களுக்குள்ளே போதிப்பதில் தங்கள் மனவூக்கம் முழு வதையும் செலுத்தினார்கள். அந்த உயர்ந்த கொள் கையை, அந்தத் தெய்வீக அன்பின் மகத்துவத்தை சாதாரண ஜனங்கள் உளங்கொண்டு தமதாக்கிக் கொள்ளமாட்டாமையால் அதைக் கேவலம் ஓர் ஆடவ னுக்கும் பெண்ணுக்கும் இடையிலுள்ள தேகத் தொடர்பாக நினைத்துக் கீழ்மையடைந்தார்கள்.

வினா: ஸ்ரீ சைதன்யதேவர் ஆண்டவனாகிய ஹரியி னுடைய நாமத்தைச் சண்டாளர்களுக்கும் உபதேசிக்க வில்லையா? ஆதலால் சாதாரண ஜனங்களுக்கு அவரு டைய போதனைகள் உரிமையாகமாட்டாவா?

சுவா: நான் அவருடைய போதனையைப்பற்றி இப்பொழுது பேசவில்லை. அவர் இராப் பகலாகத் தம்மை மறந்து ஸ்ரீ ராதாபிராட்டியாருடைய நிலையில் நின்று ஆண்டவனிடத்தில் அன்பு பாராட்டிய ராதா பிரேமை என்னும் மகா உன்னதமாகிய அன்பு நிலையைப் பற்றியே இப்பொழுது பேசினேன்.

வினா: அந்த நிலையை எல்லாருக்கும் உள்ள பொதுப் பொருளாக ஆக்குதல் கூடாதா?

சுவா: அப்படிச் செய்வதனால் என்ன பயன் விளை யும் என்பது அறிந்துகொள்ள வேண்டுமாயின் நம்மு டைய சமூகத்தாரின் தற்கால நிலையை ஊன்றி ஆலோ சித்துப்பார். மதுரபாவ அன்பு மார்க்கத்தைப் பரவப் போதித்தமையினாலே நம்முடைய ஜனங்கள் ஆண் மையை இழந்து பெண் தன்மை படைத்த ஜாதியாராக ஆய்விட்டார்கள். ஒரிஸா தேச முழுமையும் வீரிய மற்ற கோழை மக்கள் வசிக்கும் நாடாகிவிட்டது; ராதா பிரேமையைச் சென்ற நானூறு வருடங்களாக எல்லா ருக்கும் போதித்த காரணத்தினால் வங்காள நாடு ஆண் தன்மையை ஏறக்குறைய முற்றிலுமிழக்கும்

நிலைமைக்கு வந்துவிட்டது. ஜனங்கள் அழுது பிரலாபிப்பதில் சாமர்த்தியம் வாய்ந்தவர்களாய் விட்டார்கள். அதுவே அவர்களது ஜனசங்க சுபாவமாய் விட்டது. தேசத்து ஜனங்களின் எண்ணங்களுக்கும் கொள்கைகளுக்கும் நிச்சயமான அடையாளமாகிய கவிதையை ஆராய்ந்து பாருங்கள். சென்ற நாலு நூற்றுண்டுகளாக வங்காள மொழிக் கவிகள் அழுது பிரலாபிப்பதையே கருத்தாகக் கொண்டிருக்கின்றனர். உண்மையான வீரரசத்தைத் தரும் பாட்டுக்கள் இந்நாட்களில் வங்காளத்தில் தோன்றவில்லை.

விகு: அப்படியாயின் மேலாகிய பிரேமைக்கு உரியவர்கள் யாவர்?

சுவா: மனத்திலே எள்ளளவாவது காமவிச்சை இருக்குமாயின் உண்மையான பிரேமைக்கு அத்தகைய ஹிருதயத்தில் இடமில்லை. தியாக புருஷர்களாயும் மகா வீரவான்களாயும் உள்ள ஆண்மக்களே அந்தத் தெய்வீக அன்பு மார்க்கத்திற்கு உரியவர்களாவார்கள். மிக உன்னதமாகிய மதுரபாவக் கொள்கையைச் சாதாரண ஜனங்கள் அனுஷ்டிக்க நினைப்பார்களாகில் அது அவர்களுடைய ஹிருதயத்திலே தனது லௌகிகச் சாயையாகிய காமவிச்சையை எழுப்பிவிடும். தன்னை ஆண்டவனுடைய நாயகியாகப் பாவனை பண்ணுகிற சாதாரண மனுஷ்யன் சுத்த ஹிருதயமில்லாதவனாயின் அங்ஙனம் தியானிக்கும்பொழுது தன்னுடைய நாயகியை நினைத்துக்கொண்டிருப்பான்—இதனாலேற்படும் பயன் எத்தன்மையதென்பது வெளிப்படை.

விகு: அப்படியாயின் ஆண்டவனை ஆன்மநாயகனாகவும் தன்னைப் பிரியநாயகியாகவும் பாவனை பண்ணி வழிபடுகிற மதுரபாவக் கொள்கை இல்லறத்திலிருப்போருக்கு ஒருபொழுதும் சாத்தியமாகாதா?

சுவா: சாதாரண இல்லறத்தவருக்கு அது சாத்தியமாகாது என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. இவ்விதிக்குப் புறநடைகளாயுள்ளவர்களும் சிலர் உளர். மற்

றைய மார்க்கங்களிலும் பார்க்க இந்த நுணுக்கமான பாதையில் நாம் ஏன் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். ஆண்டவனை வழிபடுவதற்கு இந்த மதுரபாவத்தை யொழிந்த வேறு மார்க்கங்களில்லையா? மற்றைய நான்கு மார்க்கங்களையும் பின்பற்றி ஹிருதய பூர்வமாக ஆண்டவனுடைய திருநாமத்தை மனதில் பதித்தலாகாதா? முதலில் ஹிருதயம் விசதமாகட்டும். ஏனையவெல்லாம் அதன் பின்பு வந்து எய்தற்பாலவே. உள்ளத்தில் காம விச்சை இருக்கும் வரையில் பிரேமை வந்தெய்தாது என்பதை நிச்சயமாகவே அறிந்துகொள்வாயாக. முதலிலே ஐம்புல இச்சைகளை முற்றிலும் களைந்து விடுவதற்கு ஏன் முயற்சிக்கப்படாது? இல்லறத்தானாகிய உனக்கு அது சாத்தியப்படாதென்று நீ நினைக்கிறாய் போலும். அங்ஙனம் நினைப்பது வீணெண்ணம். ஒருவன் இல்லற வாழ்க்கையில் இருப்பதென்றால் சீவிய காலம் முழுதும் காமவிச்சையிலே அழுந்திக்கிடப்பதென்பது கருத்தாகுமா? அஃதன்றியும் மதுரபாவத்தை அனுட்டிக்கும் பொருட்டு ஆடவனொருவன் தன்னை ஒரு பெண்ணாகப் பாவிப்பது எவ்வளவு தகுதியில்லாத செயல் என்று உத்தேசித்துப் பார்.

விஞ : சுவாமிஜீ, தேவரீருடைய வாக்கு முற்றிலும் உண்மையே. கூட்டமாகக் கூடி ஆண்டவனுடைய திருநாமத்தை நாமகீர்த்தனம் பண்ணுவது ஆன்மார்த்தத்திற்குச் சிறந்த துணையாயும் மனத்துக்கு இன்பம் விளைவிப்பதாயும் இருக்கிறது. நம்முடைய சாஸ்திரங்களும் அவ்வாறே கூறியிருக்கின்றன. ஸ்ரீ சைதன்யதேவரும் ஜனங்களுக்கு அப்படியே உபதேசித்தார். கோல் (மத்தளம்) ஆனது இசைக்கப்படும் பொழுது ஹிருதயம் சந்தோஷக்களியினால் பூரிக்க, மனம் குதூகலமடைய, நர்த்தனம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தானாகவே பிறக்கின்றது.

சுவா : முற்றிலும் சரி; ஆயினும் கீர்த்தனமென்றால் நர்த்தனமென்று மாத்திரம் எண்ணி

விடாதே. எவ்வகையாகவாயினும் ஆண்டவனுடைய மகிமையைப் பாடுவதே கீர்த்தனத்தின் கருத்து. வைஷ்ணவர்களுக்குள்ளே வழக்கமாகவிருக்கிற நர்த்தனமும் மெய்ப்பாடுகளை அசைத்து எழுப்பிவிடும் முறைகளும் ஒருசார் நன்மை விளைப்பன என்பதையும், பலருடைய உள்ளத்தையும் கவர்வன என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆயினும் அவற்றின் வழிச் செல்வதனால் விளையும் தீங்குகளும் பலவுள. அவற்றினின்று உன்னை நீ காத்துக்கொள்ள வேண்டும். உள்ளக் கிளர்ச்சியின் பின் வருகிற மனச்சோர்வானது தீமைக்கு இடமானது. கண்களிலிருந்து நீர் சொரிய, மதுவுண்டாரது நிலைமையைப் போன்று தலையானது சுழல, மனவுணர்ச்சிகள் எவ்வளவு உச்சத்துக்கு எழுப்பப்படுகின்றனவோ சங்கீர்த்தன முடிவில் அவ்வளவு தாழ்வாக விழுகின்றன. சமுத்திரத்திலிருந்து அலையானது எவ்வளவு உயர எழுகின்றதோ அதற்குச் சமமாகிய சக்தியோடு அவ்வளவு கீழே விழுகின்றது. மனச்சோர்வாகிய எதிர்த்தாக்கத்தினின்று தப்பிக்கொள்வது அரிது; விவேகமில்லாத விடத்து அத்தகைய எதிர்த்தாக்கமானது காமக் குரோதாதியான கீழ்மைக் குணங்களை எழுப்பிவிடும். இவ்விஷயத்தை நான் அமெரிக்காவிலும் கண்டேன். எத்தனையோ பல கோயிலுக்குப் போய் பக்தியோடு ஜபம் செய்து மனவுணர்வோடு பாடிப் பிரசங்கத்தைக் கேட்கும்பொழுது கண்ணீரும் விடுவார்கள். கோயிலிலிருந்து திரும்பி வரும்பொழுது மனத்திலுண்டாகிய எதிர்த்தாக்கத்தினாலே காமமாதிகளுக் குட்படுவார்கள்.

வினா: அப்படியாயின் நாங்கள் பிழைபடாவண்ணம் ஸ்ரீ சைதன்யர் உரைத்த வாக்கியங்களுள் எவையெவை கொள்ளத்தக்கனவென்று தேவரீர் எங்களுக்கு எடுத்துக் காட்டியருளவேண்டும்.

சுவா: ஞானத்தோடியைந்த பக்தியினாலே ஆண்டவனை வழிபடுவீர்களாக. பக்தியோடு எப்பொழுதும்

விவேகம் சேர்ந்திருக்கட்டும். இதன்றியும் ஸ்ரீ சைதன்யருடைய மாசகன்ற இருதயத்தையும், எல்லா ஜீவராசிகளின்மேலுள்ள கருணையையும், தெய்வத்திடத்து வைத்த அடங்கா அன்பினையும் உங்களுடையதாக்கிக் கொண்டு, அவருடைய துறவு நிலையை உங்கள் வாழ்க்கையின் நோக்கமாக்குவீர்களாக.

இதுவரையும் விளக்கினை விளவிய அக் கனவான் இரு கரங்களையும் கூட்டி, சுவாமிஜியைப் பணிந்து, "தேவரீருடைய மன்னிப்பை அடியேன் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது தேவரீருடைய மொழிகளினுண்மை எனக்குப் புலப்படுகின்றது; முதலிலே தேவரீருடைய மொழிகளைக் கேட்டதும் வைஷ்ணவருக்குரிய மதுரபாவ சாதனையைத் தேவரீர் பரிகசிப்பதாக நினைத்து வருத்தமுற்றேன்" என்றார்.

சுவா : (நகை முகத்தோடு) நல்லது ; பார்த்தீரா. குற்றங் காண்பதென்றால் தெய்வத்தின்மீதாவது தெய்வ நிலையை அடைந்த பெரியோர்கள்மீதாவது குற்றங் காணவேண்டும். என்னை நிந்தித்தால் நான் உம்மோடு கோபிக்கக்கூடும்; உம்மை நான் நிந்தித்தால் நீர் என்னைக் கோபிக்கக்கூடும். அப்படியல்லவா? தெய்வமும் தெய்வ நிலையை அடைந்த பெரியாரும் ஒரு பொழுதும் தீமைக்குத் தீமை செய்யமாட்டார்கள்.

குறித்த மனிதர் சுவாமிஜியின் பாதங்களை நமஸ்கரித்துவிட்டுப் போய்விட்டார். சுவாமிஜி கல்கத்தாவில் வசித்த நாட்களில் தினந்தோறும் பெரிய கூட்டம் கூடுவது வழக்கம் என்று முன்னமே கூறியிருந்தேன். அதி காலையிலிருந்து இரவு எட்டொன்பது மணிவரையில் இடைவிடாது ஜனங்கள் அவரை வந்து பார்ப்பார்கள். இதனால் சுவாமிஜியினுடைய போஜன வேளைகள் தவறிப் போவது வழக்கம். இப்படி நிகழாவண்ணம் குறித்த மணி நேரங்களில் மாத்திரம் காண வருவோரைச் சந்திக்கும்படி சுவாமிக்குப் பலர் சொன்னார்கள்.

ஆயினும் பிறர் நலத்துக்காக எதுவும் செய்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கின்ற அன்பு நிறைந்த இருதயத்தையுடைய சுவாமிஜி ஜனங்களுடைய மனத்தில் ஆத்மீக விஷயங்களில் ஏற்பட்டிருக்கும் பெரும் தாகத்தை நோக்கி, தம்முடைய அசௌகரியத்தைக் கருதாது மேற்குறித்த கேள்விக்கு இயைந்திலர். "அந்த ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தங்களுடைய வீடுகளிலிருந்து இங்கு வருகிறார்கள். நான் அவர்களோடு சில வார்த்தைகள் பேசாது என்னுடைய சரீர சுகத்தைப் பேணிக்கொண்டிருப்பது முறையாகுமா?" என்பது சுவாமிஜியினுடைய மறு உத்தரமாயிருந்தது.

ஏறக்குறைய பிற்பகல் நான்கு மணி வரையில் பொதுச் சம்பாஷணை முடிய, கூடியிருந்த பெரும்பாலார் கலைந்து போயினர். ஒரு சிலர் மாத்திரம் எஞ்சியிருக்க, இங்கிலாந்தைப் பற்றியும் அமெரிக்காவைப் பற்றியும் இன்னும் பிற விஷயங்களைப் பற்றியும் சுவாமிஜி பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சம்பாஷணை மத்தியில் அவர் சொல்லியதாவது :

"இங்கிலாந்திலிருந்து திரும்பி வரும்பொழுது நான் ஒரு நூதனமான கனவு கண்டேன். எங்கள் கப்பல் மத்தியதரைக் கடலினுள்ளே சென்றுகொண்டிருந்தது. நித்திரை போயிருந்த என் முன்னே மிகுந்த வயதேறப் பெற்ற இருஷி போன்ற தோற்றத்தையுடைய ஒரு மகான் நிற்கக் கண்டேன். அவர் என்னை நோக்கி, 'நீர் வந்து எம்மை எம் பண்டை நிலையில் வைக்கவேண்டும்; நான் இந்திய மகரிஷிகளின் வழியாக வந்த தேரபுத்தர் என்னும் பழைய சங்கத்தைச் சேர்ந்தவன்; நாங்கள் போதித்த உண்மைகளும், உயர்ந்த கொள்கைகளும் இயேசு என்பவரால் போதிக்கப்பட்டவையென கிறிஸ்தவர்கள் மாறுபாடாக வெளிப்படுத்தி விட்டார்கள் ; இயேசுவென்னும் பெயருடைய ஒருவர் பிறக்கவுமில்லை. இந்த இடத்தை வெட்டிப் பரிசோதித்தால் யான் கூறு

கின்ற உண்மைக்கு ஆதாரமகப்படும்' என்றார். 'நீர் சொல்லுகிற சாஸனங்களும் சாக்ஷியங்களும் எந்த இடத்தை வெட்டிச் சோதித்தால் அகப்படும்?' என்று நான் வினவினேன். அந்த நரைத்த தலையுடைய பெரியார் துருக்கி தேசத்துக்கு அணித்தான ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி 'அதோ பார்' என்றார். நான் உடனே விழித்தெழுந்து கப்பலின் மேற்றட்டுக்குச் சென்று மாலுமித் தலைவரை நோக்கி, 'கப்பலிப்பொழுது எவ்விடத்துக்கு அணித்தா யிருக்கிறது?" என்றேன். அதற்கவர் 'அதோ பாருங்கள் துருக்கியின் கிரீட் (Crete) தீவம் நேரே தோற்றுகிறது' என்றார்".

இது ஒரு கனவு மாத்திரமோ அல்லாது இக் காட்சியில் ஏதேனும் உண்மையுண்டோ? யார் அறிவார்!

(59)

சுரேந்திரநாததாஸ் குப்தர்

ஒரு நாள் கல்லூரி மாணவர்களாகிய இள நண்பர்கள் சிலரும் நானும் சுவாமி விவேகானந்தரைப் பார்க்கும்படி பேலூர் மடத்துக்குப் போய் ஆங்கு அவரைச் சூழ்ந்திருந்து பல விஷயங்களைப் பேசிக்கொண் டிருந்தோம். நாங்கள் என்ன கேள்வி கேட்கிறோமோ அவர் அதற்குத் தக்க விடையைத் தாமதமின்றி யளிக்கும் பேராற்றலைப் பார்த்து வியந்துகொண் டிருந்தோமாக, அவர் எங்களைச் சட்டென்று பார்த்து, "நீங்கள் எல்லாரும் ஐரோப்பிய மத தத்துவ நூலின் முடிபுகள் பலவற்றையும் நாடு, ஜன சமூகங்களைப் பற்றிய புதிய உண்மைகள் பலவற்றையுங் கற்றிருக்கிறீர்கள்; சிவியத்தில் மிக மேலான உண்மை யிதுவென்று சொல்லுவீர்களா ?" என்றார்

நாங்கள் ஆலோசிக்கலானோம் ; அவர் கருத்தென்னவென்று எங்களுக்குப் புலப்படவில்லை. ஒருவரும் மறு

மொழி சொல்லாமலிருப்பதைப் பார்த்து அவர் தம் உயிர்க்குறுதி பயக்கும் உரையிற் சொல்வாராயினர்: "இதோ பாருங்கள்; நாமெல்லோரும் மரணமடைவோம்! இந்த உண்மையை என்றும் மனதில் வைத்திருப்பீராயின், அற்பத்தனம் மனத்தினின்று அகலும்; காரியசித்தி யுண்டாகும். உள்ளத்திலும் உடலத்திலும் உற்சாகமுண்டாகும். உங்களண்டை வந்தவர்களும் அப்படி வந்ததனுல் தாங்கள் நன்மையை அடைந்ததாகக் கருதுவார்கள்." அதன்மேல் எனக்கு மவருக்கு மிடையில் பின்வரும் சம்வாதம் நிகழ்ந்தது.

சிஷ்: ஆனுல், சுவாமிஜி, மரணத்தைப்பற்றி நினைப்பதனுல் ஆத்மவலி குன்றி மனதிற் சோக முண்டாகாதா?

சுவா: ஆம், முதலிலே மனமுடைந்து சோக முண்டாகும். இப்படிச் சில நாட்கள் சென்ற பின்னர் இருதயத்தில் புதுவலிமை யுண்டாகும். மரணத்தைப் பற்றி நினைப்பதே புது சீவியத்தின் ஆரம்பமாகும். "எல்லாம் மாயையே" என்னும் பழமொழியின் உண்மை புலப்பட விசாரமுண்டாகும். சில தினங்கள், சில மாதங்கள், சில வருஷங்கள் செல்லட்டும். சிங்கத்தின் வலியை யொத்த வலியுண்டாவதை யுணர்வாய்; உனது அற்ப சக்தி அபாரசக்தியாக மாறிவிட்டதைக் காண்பாய். மரணத்தைப் பற்றி எப்பொழுதுந் தியானஞ் செய். நான் சொன்ன சொற்கள் ஒவ்வொன்றின் உண்மையையும் அனுபவத்திற் கண்டுணர்வாய். இன்னும் நான் சொல்ல வேண்டுவதென்ன?

இத்தருணத்தில் எனது நண்பனொருவன் மெதுவாகச் சுவாமிஜியைப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

சுவா: என்னை நீ ஏன் புகழ வேண்டும்? இவ்வுலகத்திற் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பயனற்றன. அவை ஊஞ்சல்போல் மனிதனை அங்குமிங்கு மலைப்

பண ; புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் வேண்டுமான அளவுக்குச் சுமந்தேன் ; இவற்றை நினைத்து என்ன பயன் ? இவ்விரண்டையும் பற்றிச் சிந்தியாது ஒவ்வொருவருந் தத்தங் கடமையைச் செய்யட்டும். அந்திய நேரத்தில் எனக்கும் உனக்கும் மற்றவருக்கும் உள்ள புகழும் இகழும் ஒன்றேயாகும். நாங்களிங்கு கருமம் முடிப்பதற்காக வந்திருக்கிறோம் ; வீட்டுக்கு வரும்படி அழைப்பு வந்தால் எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போக வேண்டியதுதான்.

சிஷ் : நாங்கள் எவ்வளவு அற்பப் பிராணிகள், சுவாமி !

சுவா : நீ சொல்லுவ துண்மையே. எத்தனையோ கோடிக்கணக்கான சூரிய மண்டலங்களைத் தன்னுள் ளடக்கிய அகண்டமான இவ்வண்டத்தின் விரிவை நினைத்துப் பார். இவை யெல்லாம் நினைக்க முடியாத ஒரு பெருஞ் சக்தியினுற் கவரப்பட்டு வாக்கு மனுதீத மாயிருக்கும் ஒரு பொருளின் கமலபாதங்களைத் தொடப்போவன போன்றிருக்கின்றனவே ? இவ்வகண் டத்தோடு ஒப்பிடும்போது நாம் எம்மாத்திரம்? தீமையிலும் அற்பத்தனத்திலும் பிரவேசிக்க இடமெங்கே ? அழுக்காற்றினுலும் பக்ஷபாதத்தினுலும் பெறுவதென்ன? நான் சொல்லுகிற புத்திமதியைக் கேளுங்கள். கல்லூரியிலிருந்து வீட்டுக்குவந்ததும் பிறர்க்குதவி செய்யும் முயற்சியிற் பிரவேசியுங்கள். களஞ்சியம் நிறையப் பொன் வைத்திருப்பதினும் பார்க்க அதுவே உங்களுக்கு மேலான இன்பத்தைத் தரும். சேவை செய்து கொண்டு போவீர்களாயின் ஞான மார்க்கத்திலும் முன்னேற்றமடைவீர்கள்.

சிஷ் : ஆனுல் சுவாமிஜீ, எங்களை வறுமை பிடித்திருக்கிறதே.

சுவா : வறுமை யென்னும் எண்ணத்தை விட்டு விடுங்கள். கோச்சுவண்டியுங் குதிரை யிரண்டுமில்லை ;

வேலைக்காரர் பலரில்லை யென்று வருந்துகிறீர்களா? அதனாலென்ன? பகலுமிரவும் பிறர்க்காக உங்களை யொப்புக் கொடுத்து உழைப்பீர்களாயின் உங்களால் எது தான் ஆகாது? உங்கள் கண்முன்பாக ஜீவநதியின் மறுகரை தோற்றும், மரணம் மறைந்துபோம்; நித்தியத்துவமாகிய இராஜ்யத்தின் உரிமையாளராவீர் கள்.

சிஷ்: அன்பே யுருவாகிய சுவாமிஜீ, தங்கள் முன்னிலையிலிருந்து இந்த உயிர்க்குதவி பயக்கும் மொழிகளைக் கேட்டது எவ்வளவு ஆனந்தகரமா யிருக்கின்றது!

சுவா: இத்தனை வருஷமாக நான் பரதகண்டத் திற் புரிந்த யாத்திரையில் எத்தனையோ பெரியவர் களைக் கண்டிருக்கிறேன். அன்பு நிறைந்த உள்ளத் தினராகிய அவர்களுடைய பாதபரிசத்தினால் என் னுள்ளே அபார சக்தி நிறையக் கண்டேன். இந்த வலிமை பற்றுக் கோடாகச் சில வார்த்தைகள் சொன் னேனே யன்றி, என்னளவில் நான் பெரியவனென் றெண்ணாதீர்கள்.

சிஷ்: ஆனால் சுவாமிஜீ, தாங்கள் கடவுளைக் கண் டடைந்தவரென்பதாக நாங்கள் கருதுகிறோம்.

அப்படிச் சொன்ன மாத்திரத்தே அவருடைய கண்களில் நீர் ததும்ப, அன்பு நிறைந்த உள்ளத்தோடு மெல்லெனப் பேசுவாராயினார்: "அந்தத் தோற்றம் இன்றும் என் கண்களுள் நிற்கின்றது." அப்பொழுது சுவாமிகள் சொன்னதாவது: "எந்தக் கமலபாத மானது ஞானிகளால் தேடப்படுகிற ஞானத்தின் முடிபாயிருககிறதோ, பின்னு மெந்தக் கமலபாத மானது அன்பர்களால் வேண்டப்படுகிற அன்பின் நிலைக்களனாக இருக்கின்றதோ, அந்தக் கமலபாதத்தை யொழியப் பிறிதெப் பொருளை நாடி நாமெல்லாம்

அடைக்கலம் புகுவோம்!" சற்றுத் தாமதித்துப் பின்பும் சொல்லுவார்: "ஓ ஐயா, உலகத்திலுள்ள மாந்தர்களின் பேதைமையிருந்தவாறென்னே! இவர்களொருவரோடொருவர் சண்டை யிட்டுக்கொண்டு வாணுளைக் கழிக்கிறுர்களே! இப்படி எத்தனை காலம் நடக்கும்? சீவியத்தின் பிற்பொழுதில் ஜகந்மாதாவை நினைத்து வீடுநோக்கிப் போகவேண்டியவர்கள் தானே."

முற்றும்

எங்களிடம் உள்ள சில புத்தகங்கள்

	ரூ.	அ.	பை
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மொழியமுதம்	6	8	0
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்	4	0	0
திருவருள் மொழி	3	8	0
விவேகானந்தர் சம்பாஷணைகள்	3	8	0
ஸ்ரீமத் பகவத் கீதை	3	8	0
இந்து மத ஸாரம்	2	4	0
இந்தியப் பிரசங்கங்கள்	3	4	0
ராஜயோகம்	2	0	0
துர்க்கா சரண நாகர்	1	8	0
ஞானோபதேசம்	1	12	0
ஸ்ரீ விவேகானந்த சரித்திரம்	1	8	0
தூய அன்னையார் சாரதாமணி தேவியார்	1	4	0
திருக்கைலாயகிரி யாத்திரை	1	2	0
கருமயோகம்	1	0	0
பக்தியோகம	0	12	0
பக்தி மார்க்கம்	0	8	0
தற்கால இந்தியா	0	10	0
(பாராயண) கீதை	1	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திரம்	0	12	0

பத்திரிகை

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் (மாதப் பத்திரிகை) வருட சந்தா	4	0	0
தூய அன்னையாரின் நூற்றாண்டு விழா மலர்	1	8	0

(தபால் செலவு வேறு)

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் :: சென்னை—4